




மதுரைத் தமிழ்ச் சங்கம்

பொன் விழா மலர்

1956

MADURAI TAMIL SANGAM GOLDEN JUBILEE SOUVENIR

வெட்டுக்காயம், சொறிசிறங்கு, வேனல்கட்டி, கரப்பான், தீப்பட்டபுண், முகப்பரு, சேத்துப் புண் முதலிய வியாதிகளைப் போக்குவதில் கைகண்ட களிம்பு

சைபால்

குழந்தைகளுக்கு ஏற்படும் சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி புஷ்டி அளிப்பது

ரமணீஸ்

பேபி கிரைப்

எல்லிஸ் பாம்

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி முதலியவைகளை போக்கவல்லது

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும், நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பாளர்கள்

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி
மதுரை

ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர்



சோடா
&
லெமனட்

தனிச் சிறப்பு
வாய்ந்தவை

மதுரை, திண்டுக்கல் & மணப்பாறை.

புதுமைப் பொலிவு

மலர்களில் மட்டுமல்ல ! பட்டாடைகளிலேயும் உண்டு !!

★ ★ ★

மதுரையில்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்ற

பட்டு ஜவுளி ஸ்தாபனம்

S. R. P.

பொன்னுசாமி செட்டியார்

No. 1-2, வெங்கலக் கடைத் தெரு, மதுரை

Phone : 629 Grams: PONNOO

*

திருமணம் மற்றும் விசேஷ காலங்களுக்கேற்ற

மிக நூதனமானதும், நவ நவமான டிசைன்களிலும், கலர்களிலும் பனாரஸ், காஞ்சீவரம், ஆரணி, பெங்களூர் பட்டுச் சேலைகளும், பெங்களூர் அசல் பட்டு, ஆர்ட் கிரேப் சேலை தினுசுகளும், பட்டுப் பாவாடை, சோளி ரகங்களும், எல்லாவிதமான நூல் ஜவுளி களும், மதுரை சேலை, 100s ஜரிகை வேஷ்டி, அங்க வஸ்திரங்களும் எப்பொழுதும் குறைவிலா ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

*

விலை மலிவுக்கும் சரக்கின் தரத்துக்கும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

Established : 1926

Phone No. 334

Raja

Name & Design Registered No. 143106

BARLEY BISCUITS

ARE BRITTLE IN EVERY BITE AND VITAL FOR THE BABY

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள்

ஸ்தாபிதம் : 1926

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

நேம் & டிசைன் ரிஜிஸ்டர்டு

போன் நிர். 334

நிர். 143106

ராஜா பிஸ்கட் கம்பெனி, 115, திண்டுக்கல் ரோடு, மதுரை

கிளை :—மெயின் ரோடு, திண்டுக்கல். டவுன் ஹால் ரோடு, மதுரை

உரிமையாளர் :—ஆ. சங்கு பிள்ளை

வெண்பா

அறிவு திடகாத்திரம் அழகு சுகம் வீரம்
செறியும் பிணிபசியும் தீர்க்கும்—நிறையாயுள்

சேர்க்கும் மண மிகுக்கும் தித்திக்கும்
ராஜா பார்லி தனக்குள்ள பண்பு.

தமிழ் மக்களின் உயர்வு நாகரீக வளர்ச்சியில்தான் இருக்கிறது!

தமிழ்ச் சங்க பொன் விழா நன்னாளில் நாகரீக ஜவுளியின்
தலைமை ஸ்தாபனமான மதுரை அம்மன் சன்னதி

"நடராஜா ஸ்டோர்ஸார்"

நண்பர்களுக்கு பொன் விழா வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறார்கள்

★

"நடராஜா ஸ்டோர்"

ஜவுளியின் நாகரீக வளர்ச்சியாளர்கள்

92, அம்மன் சன்னதி,

மதுரை

FOR SOUND ENGINEERING ADVICE ON

AGRICULTURAL TRACTORS AND IMPLEMENTS
EARTHMOVING MACHINERY
INDUSTRIAL AND ELECTRICAL PLANT AND MACHINERY
FOOD CHEMICAL AND PHARMACEUTICAL MACHINERY AND PLANTS
BOTTLING MACHINES AND APPARATUS



CONTACT:

LARSEN & TOUBRO LIMITED

ENGINEERS

Post Box No. 98, 26, Cubbon Road, BANGALORE

Post Bag No. 5247, 5, Clubhouse Road, MADRAS

Post Box No. 55, VI-79, Calvety Road, COCHIN

IN SERVICE *LIES SUCCESS*

Buy Your Cloth

where you see THIS sign



This board carries the registered trade marks of Binny's Mills. Look for it when you buy cloth — it is your assurance of *quality*, first and foremost.



THE BUCKINGHAM & CARNATIC CO. LTD., MADRAS.

and

THE BANGALORE WOOLLEN, COTTON & SILK MILLS CO. LTD.,

Managed by : BINNY & CO. (MADRAS) LTD., MADRAS.

கார்போரண்டம் யுனிவர்ஸல் லிமிடெட்



உயர் ரக சாணைக் கற்கள், உப்புத் தாள்கள் தயாரிப்பாளர்கள்

சாணைக் கற்கள்

கிரைண்டிங் சக்கரங்கள், செக்மெண்டுகள், இழைகல், ஸ்டிக்குகள், வால்வ் கிரைண்டிங் காம்பௌண்ட் முதலியவை

உப்புத் தாள்கள்

ப்ளிண்ட் (மணல்), கார்னெட், எமரி, அலாக்ஸைட், ஸிலிகன் கார்பைட், முதலியவை காகிதத்திலும், துணியிலும் ரோல்கள், பெல்ட்டுகள், ஷீட்டுகள், டிஸ்குகள் முதலிய உருவங்களில்

கார்போரண்டம் யுனிவர்ஸல் லிமிடெட்

ஆபீஸ்:

" ஸ்வஸ்திக் ஹவுஸ் ", 106, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

தொழிற்சாலை: **திருவொற்றியூர்**

டெலிபோன்: **2941** (4 லைன்கள்) தந்தி: **CUMI**

★

சாணைக் கற்களுக்கு விநியோகஸ்தர்கள்

மெஸர்ஸ்: **வில்லியம் ஜாக்ஸ் & கோ, லிமிடெட்,**

கல்கத்தா—பம்பாய்—மதராஸ்—புதுடில்லி—பெங்களூர்—கான்பூர்

★

மெஸர்ஸ்: **ஸ்காட் & பிக்ஸ்டாக் (பிரைவேட்) லிமிடெட்,**

கல்கத்தா—பம்பாய்—மதராஸ்—புதுடில்லி—பெங்களூர்—கான்பூர்
ஹைதராபாத் (Dn.)

★

மெஸர்ஸ்; **எச். எஸ். காக்ஸ் & கோ (பிரைவேட்) லிமிடெட்,**
24, ராம்பார்ட் ரோ, பம்பாய்.
(பிரத்யேக ரகங்களுக்கு மட்டும்)

★

மதராஸ்—புதுச்சேரி—ஹைதராபாத்—ஆந்திரா—திருவாங்கூர்—கொச்சி & மைசூர் ராஜ்யங்களுக்கு:

உப்புத் தாள்களுக்கு விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ்:—**R. சுப்பராமன் & கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**

" வான்கார்ட் ஹவுஸ் ", 11/12, ஸெகன்ட் லைன் பீச், மதராஸ்-1.

போன்: **3590** தந்தி: **" ABRASIVES "**

கோபம் கொண்ட மனைவி...

ஒரே ஒரு வாரத்திற்கு முன்புதான் ராஜுவும் அவளும் ஒரு ஆனந்தமயமான ஒய்வு நாளைக் கழித்துத் திரும்புகையில், வரப்போகும் மகோன்னத மகிழ்ச்சி தரும் நன் நாட்களை நினைந்து நினைந்து திட்டமிட்டவாறு இன்பக் கனவு கண்டார்கள். ஆனால் திடீரென கனவு காண என்ன இருக்கிறது எனத்தோன்றியது அவளுக்கு! அவள், சிற்ற மென்னவோ ஒய்ந்தபாடில்லை. கணவன் ராஜ், இனித் தனக்குத் தேவையே இல்லை, என அவள் உணருமாறு நடந்து கொள்ள விரும்பினாள் — ஏன்? சற்று மீறியும் நடந்துகொண்டாள். ராஜ் தன் அன்பை முதன் முதலில் அவளிடம் சொன்னதும், அன்று அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியும், ஆ! இவையாவும் எத்தனை தினங்களாகிவிட்டன! — ஓர் அற்புதமான அழகு சொட்டும் நவநாகரீக சுராஜ்மல் கங்கணம் — நவீனப் பெண்மணிகள் பேணி விரும்பும் ஒரு நல்ல பரிசு. என்று, அந்த கங்கணத்தை ராஜ் அவளுக்கு பரிசளித்தானே, அன்று முதல் அவர்கள் வாழ்க்கையே என்றுமே ஓர் இன்ப சோலையாக மாறியது.



நீதி: உங்கள் பிரேமை எவரிடமோ அவரை ஆனந்தத்தில் ஆழ்த்துவது ஒரு அற்புதப் பரிசே — அதுவும் ஓர் உயர் ரகப் பரிசு.

Surajmals

பாரதத்தின பழமையான வைர வியாபாரிகள்

சுராஜ்மல்ஸ், 313, எஸ்ப்ளனேட் — மதுரை-1.

முக்கியமாக கவனிக்க: — சுராஜ்மல்லில் வாங்கும் எந்தப்பொருளும் உங்களுக்கு திருப்தி அளிக்காவிடில் பணத்தை திரும்பிப் பெற உத்திரவாதம் உண்டு

1895 லிருந்து 1955 வரை பாரதத்தின் பணியில் 60 வருஷங்கள்

டெலிபோன் :
22

பருத்தி நூல்கள்

தந்தி :
"டெக்ஸ்டைல்ஸ்"



தேசப் பணியில் ஈடுபட்டுள்ளது


பிரமியர் மில்ஸ் (கோயமுத்தூர்) லிட்.,

பூலாங்கிணர், உடுமலைப்பேட்டை

மானேஜிங் ஏஜன்ட்ஸ் K. நாராயணசாமி நாயுடு & கோ

PSM

FOR ALL YOUR REQUIREMENTS
IN ENGINEERING NEEDS



ENGINEERING DEPT.

PARRY & CO., LTD.

MADRAS-I

★

Branches :—**BOMBAY—NEW DELHI—CALCUTTA**



இந்தியாவின்
அபிவிருத்தி மற்றும்
எதிர்கால
க்ஷேமத்தை
உத்தேசித்து

சேமியுங்கள்

இவற்றில்
முதலீடு செய்க :
12 - வருட
நேஷனல் சேவிங்ஸ்
சர்டிபிகேட்டுகள்
10 - வருட
டிரெஷரி சேவிங்ஸ் டிபாசிட்
சர்டிபிகேட்டுகள்
10 - வருட
நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகள்
15 - வருட
ஆன்னியுடி சர்டிபிகேட்டுகள்
போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்க்
டிபாசிட்டுகள்

இந்திய அரசாங்கத்தின்

சிறு சேமிப்புத் திட்டம்

மேலும் விவரங்களுக்கு/மற்றும் அல்லது இம் முதலீடுகள் சம்பந்தமான விதிகளுக்கு, ஷிம்லாவில் இருக்கும் நேஷனல் சேவிங்ஸ் கமிஷனருக்கோ அல்லது உங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த ரீஜனல் நேஷனல் சேவிங்ஸ் ஆபீஸருக்கோ தயவுசெய்து எழுதி விசாரிக்கவும்.

DAVP/158/TM9

மின்சார அமைப்பில் எங்கள் பங்கு

இந்திய இன்ஜினீயர்களைக் கொண்ட எங்களது ஸ்தாபனத்தின் கிளைகள், நமது நாட்டின் பிரதான நகரங்களில் எல்லாம் உள்ளன.

தென்னாட்டின் தலைநகரான சென்னையைப் பிரதான அலுவலக மாகக் கொண்டு, வடநாட்டு முக்கிய நகரங்களில் கிளைகள் அமைத்து, இன்ஜினீயரிங் துறையில் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஒரு இந்திய ஸ்தாபனம் எங்களுடையதுதான்.

உத்தர பிரதேசம், வங்காளம், பீஹார், சௌராஷ்டிரா, பஞ்சாப் முதலிய பிரதேசங்களிலுள்ள மின்சார சப்ளை திட்டங்களில், பங்கெடுத்துக் கொண்டு, டிரான்ஸ்மிஷன், லைன் சப் ஸ்டேஷன்கள், எலக்டிரிக் ரயில்வேக்கு உதவியான சப் ஸ்டேஷன் முதலியவைகளை நாடெங்கும் நிர்மாணித் திருக்கிறோம்.

★

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்

சன் இன்ஜினீயரிங் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் :

5-7, ஸெகண்ட் லைன் பீச், மதராஸ்-1

★

மற்றும் :

கல்கத்தா, மதுரை, பெங்களூர், பம்பாய், டெல்லி & லண்டன்

பொருளடக்கம்

★

எண்	பொருள்	பக்கம்
1.	முன்னுரை	15
2.	தமிழ்ச் சங்க வரலாறு —பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக் கோன்	17
3.	தமிழக மகளிர் —அ. காமாட்சி குமாரசாமி, எம். ஏ.	25
4.	திருக்குறளே நம் தேசீயப் பாடல் —நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை	31
5.	நாயக்கர் காலம் (1350-1750) —டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி. எச். டி.	38
6.	தமிழர் ஆடை ஆணிகள் —திருமதி ஆர். இராஜாமணி, பி. ஏ. (ஆனர்ஸ்) எல். டி.	43
7.	கிருத்தவம் —திரு. ப. ஜோதிமுத்து, M.A., B.D.	48
8.	இஸ்லாம் (சாந்திசமயம்) —அல்ஹாஜ் பா. தாவூத் ஷா, பி. ஏ.	60
9.	பிறநாட்டார் தமிழ்த் தொண்டு —யோகி சுத்தானந்த பாரதியார்	67
10.	ஆலய அமைப்பு —திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.	73
11.	புறநானூறும் பண்டைத் தமிழர் வரலாறும் —திரு கே. கே. பிள்ளை, M.A., L.T., D. Litt., D. Phil. (Oxon)	81
12.	மேடைப் பேச்சு —தமிழ்வேள் திரு. பி. டி. இராசன், எம். எல். ஏ.	89
13.	கருநாடக இசை —சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை	94
14.	அறிவியல் —திரு. பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.	97
15.	சிறு கதை —அகிலன்	105
16.	கட்டிடக் கலை —திரு. வை. மு. நரசிம்மன்	113
17.	பண்டை விளையாட்டுகள் —பேராசிரியர் வித்வான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.	121
18.	பண்டைய இந்திய நாணயங்கள் —குமாரி ஆர். வனஜா, எம். ஏ.	129

எண்	பொருள்	பக்கம்
19.	நாடகத் தமிழ் —திரு. பி. சம்பந்த முதலியார், B. A., B. L.	137
20.	தமிழ்த் திரைப் படங்கள் —கலைவாணர் N. S. கிருஷ்ணன்	144
21.	தமிழர் சமூக வாழ்க்கை —திரு. அர. சு. நாராயண சாமி நாயுடு, எம். ஏ.	145
22.	தமிழ் நாட்டின் இயற்கைவளம் —பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை, M. A., L. T.	149
23.	தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய வழிகள் —பண்டித அ. முத்துசாமி பிள்ளை	154
24.	தமிழர் காதல் வாழ்வு —சோ. பாகீரதி, எம். ஏ.	156
25.	தமிழர் வீரம் —பெருஞ்சொல் விளக்கனர், அ. மு. சரவண முதலியார்	161
26.	ஒப்பியல் இலக்கணம் —திரு. ஞா. தேவநேயப்பாவாணர், எம். ஏ.	169
27.	ஒழுக்கமே மக்கட் பண்பு —நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்	175
28.	இடைக்கால இசை —இசை அரசு எஃ். எம். தண்டபாணி தேசிகர்	177
29.	தமிழர் நாகரிகம் —வித்துவான் து. கண்ணம்மாள்	185
30.	சொல்லாட்சி —வித்துவான் திரு. நா. இராமையா பிள்ளை	191
31.	தமிழர் பண்பாடு – ஆடையும் அணியும் —பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.	194
32.	சைவம் —சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ.	202
33.	தமிழ் இசைப் புலவர்கள் வரலாறு —அ. கி. பரந்தாமனர், எம். ஏ.	209
34.	தமிழ் நாட்டில் நாடக வளர்ச்சி —திரு. டி. கே. ஷண்முகம்	225
35.	தமிழர் மருத்துவக்கலை —பண்டித எஸ். எஸ். ஆனந்தம்	235
36.	இசைக் கருவிகள் —திரு. நா. பாலுசாமி, எம். ஏ.	244
37.	தமிழ் நாட்டில் ஓவியக்கலை —கலைப்புலவர் க. நவரத்தினம், யாழ்ப்பாணம்	249
38.	சோழர் வரலாறு —டாக்டர் மா. இராசமாணிக்கனர், M.A., L.T., M.O.L. Ph. D.	257
39.	ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாடு —டாக்டர் எம். எஸ். வைரண பிள்ளை, M.A., Ph. D.	266
40.	சிறு பிரபந்தங்கள் —வித்வான் மு. அருணாசலம் பிள்ளை	271

எண்	பொருள்	பக்கம்
41.	ஓரங்க நாடகம் —திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்	281
42.	கல்வெட்டுக்கள் —ஆராய்ச்சிப் பேரறிஞர் T. V. சதாசிவப் பண்டாரத்தார்	285
43.	வைணவம் —திரு. B. R. புருஷோத்தம நாயடு	289
44.	தமிழ்க் காவியங்கள் —வித்துவான் எஸ். ஆழ்வாரையங்கார்	297
45.	பெண்பாற் புலவர் —திருமதி புஷ்பம் நடராசன்	303
46.	சிற்பக்கலை —திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.	309
47.	தமிழ் இலக்கண வளர்ச்சி —ஆசிரியர் திரு. நா. அப்பனையங்கார்	316
48.	தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி —திரு. P. R. ஸ்ரீநிவாசன், M.A.	322
49.	பௌத்த சமயம் —மயிலை திரு. சீனி. வேங்கடசாமி	331
50.	பழந் தமிழர் சமயம் —சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை	336
51.	பாண்டியர் வரலாறு —திருமதி தே. தியாகராசன், எம. ஏ.,	345
52.	தமிழர் திருமண முறைகள் —பேராசிரியர் சரவண. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.,	351
53.	மன்னர் பொறுப்பு மக்களிடம் —திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ. பி. எல்.	358
54.	தமிழ் இலக்கியத்தில் கருத்துப் புரட்சி —திரு. ப. ஜீவானந்தம்	363
55.	சங்க கால இசை —திரு. வெள்ளை வாரணன்	368
56.	மறுமலர்ச்சி உரைநடை —திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், எம். ஏ.	372

முன்னுரை

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவை 1956 மே மாதம் 30 தேதியிலிருந்து ஜூன் மாதம் 5 தேதி முடியக் கொண்டாடுகின்றோம். இச்சங்கம் நாலாவது சங்கமாகும். இதற்கு முன்பிருந்த மூன்று சங்கங்களில் முதல் இரண்டு சங்கங்கள் கடலில் மறைந்தன. மூன்றாவது சங்கம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டோடு மறைந்தது. வரலாற்றை ஒட்டிய பல காரணங்களால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழ் வளர்ச்சிக்கான உணர்ச்சியும் முயற்சியும் மக்களிடையே தோன்றாமல் போய்விட்டன. உயர்திரு பாண்டித்துரைத் தேவர் அவர்களின் முயற்சியால் நாலாவது சங்கம்--நிலையான சங்கம்—1901-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் தேதி மதுரையில் தமிழ் நாட்டிலுள்ள புலவர் பெருமக்கள் திரளாகக் கூடியிருந்த ஒரு பொதுக் கூட்டத்தில் துவக்கப் பெற்றது. அவரது இறுதிக் காலமாகிய 1911-ம் ஆண்டுவரை இச்சங்கத்தை வளர்ப்பதற்காகப் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் காணிக்கையாக்கினர். அவர் காலத்திற்குப் பின் பல அறிஞர்களுடைய சிரிய முயற்சியால், சிறப்பாகத் திருவாளர்கள், நாவலர், சோமசுந்தர பாரதி, டி. கி. சீனிவாச ஐயங்கார் முதலியவர்களது ஈடில்லா உழைப்பினால் இச்சங்கம் இனிது நடைபெற்று வந்தது. திரு. சீனிவாச அய்யங்கார் இறுதிக் காலத்தில் சங்கத்தை நடத்தும் பொறுப்பை என்மீது சுமத்தினர். இப்பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்றத் தமிழ் மக்கள் அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் நான் ஏற்றுக் கொண்டேன்.

இப்பொன் விழாவின் நினைவாக இம்மலர் வெளியிடப்படுகிறது. தமிழர்களுடைய வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளைப் பண்டைக் கால முதல் இக்காலம் வரை விளக்கும் அறிஞர் பலரின் கட்டுரைகள் இம்மலரில் இடம் பெற்றிருக்கின்றன. இம்மலர் தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற கருவூலமாக விளங்குமென்று நான் நம்புகிறேன்.

விழாவில் சொற்பொழிவு நிகழ்த்த இசைந்த அறிஞர்கள் தாங்கள் தாங்கள் ஆற்றவிருக்கும் சொற்பொழிவுகளை முன் கூட்டியே கட்டுரையாக எழுதி அனுப்பி இம்மலரில் வெளியிட உதவினர்கள்; அவர்களுக்கும், மற்றும் இம்மலரை வெளியிடப் பலவகையிலும் உதவிய என் அன்பிற்குரிய நண்பர்களுக்கும், இதை நல்ல முறையில் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சென்னை பி. எஸ். மணி நிலைய உரிமையாளருக்கும் எனது நன்றி.

வாழ்க தமிழ். வாழ்க சங்கம்.

மதுரை
20-5-'56

பி. டி. இராசன்
தலைவர்
பொன் விழாக் குழு.


தமிழ்ச் சங்கப் பொன் விழா

நன்கொடையாளர்கள்

★

(1956, மே 24 தேதிவரை)

டி. பி. ஹரிராம் சேட், முக்கூடல்	...	ரூ. 5,000
மதுரைமில்ஸ், மதுரை & எ. என். எப். ஹார்வி பிரதர்ஸ் லிமிடெட் மதுரை	...	3,500
திருப்பனந்தாள் ஆதீனம்	...	2,001
கருமுத்து. திரு. தியாகராசச் செட்டியார்	...	2,001
திருவாவடுதுறை ஆதீனம்		2,000
ராஜா சர். முத்தையாச் செட்டியார்	...	2,000
திரு. இராஜகோபாலத் தொண்டமான், புதுக்கோட்டை ராஜா	...	2,000
தருமபுர ஆதீனம்	...	1,511
திரு. வி. இராமசாமி, கதிர் மில்ஸ், கோயம்புத்தூர்	...	1,500
மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு பேங்க், மதுரை	...	1,001
திரு. பாலசுப்பிரமணியம், மதுரை	...	1,001
G. சாம், கோயம்புத்தூர்	...	1,001
எ. எஸ். சோமசுந்தரம் ரெட்டியார், திருச்சிறுப்பள்ளி	...	1,001
திரு. எஸ். எஸ். வாசன்	...	1,000
,, துரைராசன்	...	1,000
சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான பேங்க்	...	1,000
M. R. லக்ஷ்மிநாராயணன் ரெட்டியார், மதுரை பாக்கம்	...	1000
G. கிருஷ்ணன், கோயம்புத்தூர்	...	501
திரு. எம். சி. டி. முத்தையாச் செட்டியார்	...	501
,, டி. சதாசிவம், கல்கி	...	500
டி. வி. சுந்தரமய்யங்கார் அன் சன்ஸ்	...	500
திரு. டி. ஆர். சுந்தரம், மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்	...	500
,, ப. அழகுசுந்தரம் செட்டியார்	...	500
P. ரத்தினசாமி பிள்ளை, சேலம்	...	250
சௌகார் மில்ஸ், சேலம்	...	250
திரு. காளியப்பச் செட்டியார், பாகனேரி	...	250
பங்கஜா மில்ஸ், கோயம்புத்தூர்	...	250
திரு. வி. பழனிச்சாமி, கோயம்புத்தூர்	...	200
,, பி. வி. முகமது ஹவுஸ், வாஷித் மோட்டார் சர்வீஸ்	...	200
,, வி. மோகன் வெங்கடராமன்	...	200
மதுரை ஆதீனம்	...	151
திரு. எல். ஆர். ஜி. நாயுடு, திருப்பூர்	...	105
,, என். எம். சின்னசாமி உடையார்	...	101
,, எஸ். விஜயராகவன்	...	101
,, வி வி. சி. ஆர். முருகேச முதலியார், பழனி	...	101
,, தங்கவேலு முதலியார், பெங்களூர்	...	101
,, எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி	...	101
,, ஏ. எஸ். எஸ். எம். சோமசுந்தரம் செட்டியார், மதுரை	...	101
,, கான்சாகிப் கே. ஏ. ஷேக்தாவுத், ஈரோடு	...	101
,, மெய்யப்பச் செட்டியார், சென்னை	..	100
,, பி. நடேசன் அன் கோ	...	100
,, வெள்ளைச்சாமி நாடார், விருதுநகர்	...	100
,, வி. கோவிந்தராசுலு நாயுடு, மினர்வா அச்சகம், மதுரை	...	100
,, அழகர்சாமி நாயுடு, பைண்டிங் ஆபீஸ், மதுரை	...	100
,, ஏ. எச். எஸ். இராமசாமி அன் சன்ஸ், மதுரை	...	100
,, S. மதுரைமுத்து நாட்டாள்வார்	...	100
	...	35,782




பாண்டி துரைசாமித் தேவர்



பாஸ்கர சேதுபதி




திரு. முத்துராமலிங்க சேதுபதி



திரு. கனம் மந்திரி ஷண்முகராஜேஸ்வர சேதுபதி



ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா, சென்னை கவர்னர்




பாரதரத்ன டாக்டர் ஸி. ராஜகோபாலாச்சாரியார்



திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் திருப்பெருந்திரு காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமி அவர்கள்



கனம் ஓ. வி. அளகேசன்



திரு. அவ்வை டி. கே. ஷண்முகம்



காலஞ் சென்ற புதுக்கோட்டை ராஜா.




புதுக்கோட்டை ராஜா.



காலஞ்சென்ற சிவகங்கை ராஜா.



சிவகங்கை ராஜா,




செட்டி நாட்டு அரசர் அண்ணாமலை செட்டியார்




சர். ஆர். கே சண்முகம் செட்டியார்.



கப்பலோட்டிய தமிழன் வ, உ, சி.




டி. கே. சி.



நீதிபதி கனம் சோமசுந்தரம்.



இலங்கை திரு காந்தையர்யா வைத்தியனுதன்



சர் ஸி. வி. ராமன்,




இலங்கை திரு ச. நடேசன்.



டி. சி சீனிவாச அய்யங்கார்.



மகா மகோபாத்தியாய
ஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயர்.



வித்வான் திருநாராயண அய்யங்கார்




மகாவித்துவான் ரா இராகவய்யங்கார்.




டாக்டர். M. சுப்ரமணியம். மீனுட்சி தேவஸ்தானம் தர்மகர்த்தா.



மீனுக்ஷி கோயில் தர்மகர்த்தா எஸ். அழகுசுந்தரம் செட்டியார்.



மதுரை ஸ்ரீ மீனுக்ஷி தேவஸ்தான தர்மகர்த்தா குழுத்தலைவர் எம். வி நல்லமுத்துப் பிள்ளை.



அ சிதம்பர முதலியார். மீனுட்சி தேவஸ்தான தர்மகர்த்தா.



R. கிருஷ்ணசாமி பிள்ளை நிர்வாக அதிகாரி மீனுட்சி தேவஸ்தானம்.




சென்னை சர்க்கார் பிரதம காரியதரிசி டபிள்யூ. ஆர். எஸ். சத்தியநாதன்.




ஹிந்து மத பரிபாலன போர்ட்
கமிஷனர் திரு அ உத்தண்டராம பிள்ளை




சென்னை ராஜ்ய கூட்டுறவு இலாகா ரிஜிஸ்திரார்
திரு. பழனியப்ப முதலியார்



பிரபல தொழில் அதிபர்
ஜி. டி. நாயுடு.



பாளையகோட்டை, பட்டகார்
திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்.



எஸ். முத்து (நகரசபை உறுப்பினர்)
தொண்டர் படைத் தலைவர்.

சென்னை மந்திரி சபை




ஸ்ரீ ராமநாதபுரம் ராஜா




ஸ்ரீ எஸ் சுப்ரமணியம்




ஸ்ரீ எம்.பக்தவத்சலம்



முதல் மந்திரி ஸ்ரீ.கே.காமராஜ்




ஸ்ரீ.எம்.எமானிக்கவேலுநாயக்கர்



ஸ்ரீ. பி.பரமேஸ்வரன்




ஸ்ரீ.எஸ்.எஸ்.ராமசாமிபடையாச்சி



ஸ்ரீ. ஏ.பி.ஷெட்டி



திரு. ஜி. கிருஷ்ணன்
கோயமுத்தூர்



திரு. பி. டி. இராசனும், திரு. ஜி. டி. நாயுடுவும்




திரு. ஜி. என். சாம்
கோயமுத்தூர்




தர்மபுரி செல்வி சி. மணிமேகலை



மதுரை, தருமை, துறைசை ஆதினங்களின் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானங்கள்.




சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்கி நிர்வாகக் குழுவினர்.



சென்னை ராஜ்ய மத்திய கூட்டுறவு நில அடமான பாங்கி நிர்வாகத்தினர் குழு.


மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழாக் குழுவினர்



இருப்பவர்: – எஸ். பார்த்தசாரதி நாயுடு, வழக்கறிஞர்; P. இராமசாமி ராஜு, வழக்கறிஞர்; அ. சிதம்பர முதலியார், M L C., துணைத்தலைவர்; ஏ. ரெங்கசாமி ஐயங்கார்; N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார், வழக்கறிஞர், துணைத்தலைவர்; பி. டி. இராசன், M L.A., தலைவர்; P. ரெங்கசாமி நாயுடு, வழக்கறிஞர், துணைத்தலைவர்; பேராசிரியர் ஆ. கார்மேக்க் கோனார், துணைத்தலைவர்; டாக்டர் மா. இராசமாணிக்கனார், துணைத்தலைவர்; ஔவை சு. துரைசாமிப் பிள்ளை; ஏ. பி. முகமது சுல்தான், வழக்கறிஞர், துணைச்செயலாளர்.

நிற்பவர் :— மு. சுப்பிரமணிய முதலியார், துணைச்செயலாளர்; M. சிவசுப்பிரமணிய பிள்ளை, வழக்கறிஞர்; வி. அழகப்பன், பொருளாளர்; வி. சண்முகசுந்தரம், வழக்கறிஞர், செயலாளர்: கி. பழனியப்பன், செயலாளர்; நா. பாலுசாமி.

தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவினரும் அலுவலரும்




இருப்பவர்:—P. இராமசாமி ராஜா; A ரெங்கசாமி ஐயங்கார்; N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார்; பி. டி. இராசன், M L A., துணைத்தலைவர்; P. ரெங்கசாமி நாயுடு; வி. சண்முகசுந்தரம், செயலாளர்; எஸ். பார்த்தசாரதி நாயுடு.

நிற்பவர்:— சுந்தரம் பிள்ளை; வேங்கடேச ராவ்; நாராயண ராவ்; நா. அப்பனையங்கார்; எஸ். சிவசுவாமி ஐயர்; ரா. வெங்கடராம ஐயங்கார்; இராமச்சந்திர ராவ்; அங்கப்ப நாயுடு.



மதுரை நகராட்சி மன்ற உறுப்பினர்.




மதுரை நகராட்சி மன்ற அதிகாரிகள்.




மதுரை மில்ஸ் மானேஜிங் டைரக்டர்
திரு ஜே. ஏ. ஆண்ட்ரூ.



ஹார்வி ஸ்தாபன ஆலோசகர்,
ஜேம்ஸ் டோக்.



மீனாக்ஷி சுந்தரேச்வரர் கோயில்
பேஷ்கார்
திரு. எம். தங்கவேல் தேசிகர்,



முக்கூடல் டி. பி. ஹரிராம் சேட்.



திரு. பி. டி. இராசன்.
M. L. A.
பொன் விழாக்
குழுத் தலைவர்

INDEX TO ADVERTISERS

★

		Page
All India Handloom Board	...	195
Ajanta Pictures	...	211
Ambal & Co.	...	275
Amrutanjan Ltd.	...	263
A. M. Arumugam	...	375
Arunachalam Chettiar & Bros., S. S.	...	243
Ayurvedasramam	...	131
Bank of Madura Ltd.,	...	136
Bharathi Book Dept	...	61
Buckingham & Carnanic Co., Ltd.,	...	5
Carborandum Universal Ltd.,	...	6
Cauveri Spinning & Weaving Mills Ltd.,	...	377
Century Flour Mills Ltd.,	...	251
Chennimalai Weavers Coop. P. & S. Society	...	90
Coimbatore Cotton Mills Ltd.,	...	205
Coimbatore Murugan Mills Ltd.,	...	241
College House	...	128
Cooperative Central Bank Ltd., Kumbakonam	...	270
East India Industries Private Ltd.,	...	384
Eausen Engineering Co., Ltd.,	...	11
Forma Bros	...	362
G. V. K. C. & Co.	...	367
Gnanambika Mills Ltd.,	...	41
Gopalakrishna Kone, E. M.	...	112
Gramaphone Co., Ltd.,	...	93
Hameedia Stores	...	87

INDEX TO ADVERTISERS—(*Continued*)

		Page
India Cements Ltd.	...	283
Indian Bank Ltd.,	...	335
Indian Overseas Bank Ltd.,	...	319
International Talkie Equipment Co., Ltd.,	...	227
Janatha Stores	...	51
Jubilee Films Private Ltd.,	...	82
Kadri Mills (Coimbatore) Ltd.	...	337
Kalaimagal	...	315
Kaleeswarar Mills Ltd.,	...	127
Kerala Soap Institute	...	265
Kishinchand Chellaram	...	327
Kittappa Dress Mfg. Co.	...	95
Lakshmi Mills Ltd.,	...	135
Lalchand Kewalram	...	279
Larsen & Toubro Ltd.,	...	4
Littles Oriental Balm & Phar. Works	...	385
Madras Circle Pipe Dealers Assn. Ltd.	...	321
Madras Coop. Central L. M. Bank Ltd.	...	291
Madras State Coop. Bank Ltd.,	...	386
Madras State Handloom W C. S. Ltd.,	...	259
Madurai Dt. Central Coop. Bank Ltd.	...	37
Madurai Mills Co., Ltd.,	...	Last Wrapper
M. R. C. W. Stores Ltd.,	...	280
Malson Mfg. Co.	...	66
Mani's Confectionery	...	59
Mappilai Vinayagar Soda Factory	...	1
Meenakshi Mills Ltd.,	...	109
Modern Electric Co.	...	305
Mohomed Ebrahim & Co., Ltd.,	...	383
Muthuswamy Chetty & Sons, S.	...	96
Nataraja Pillai & Co., K.	...	184
Nataraja Stores	...	3

INDEX TO ADVERTISERS—(*Continued*)

		Page
Natesan (Industries) Private Ltd.,	...	381
National Match Works	...	201
National Savings	...	10
Negapatam Sweet Stall	...	55
Oriental Mercantile Agency	...	231 & 365
Pandian Insurance Co., Ltd.,	...	90
Pankaja Mills Ltd.,	...	47
Parry & Co., Ltd.,	...	9
Pathy & Co., R. S.	...	3rd Wrapper
Periaswamy Chetty & Sons., V. M.	...	387
Ponnuswamy Chetty, S. R. P.	...	2
Premier Mills (CBE) Ltd.,	....	8
Radhakrishna Jewellery	...	55
Raja Barley	...	3
Rajalakshmi Mills Ltd.,	...	215
Raju Chettiar & Bror., P. A.	...	63
Ramakrishna Industrials (Private) Ltd.,	...	187
Ramathirth Yogasramam	...	224
Ramnad Dt. Coop. Central Bank Ltd.,	...	190
Ranee & Co.,	...	357
Rathnam & Co., T. A. S.	...	207
S. I. Saiva Siddhantha Works P. Society Ltd.,	...	311
Shanmugam & Co., N. V.	...	382
Shanmugam Brand Street Trunk Works	...	385
Sivananda Mills Ltd.,	...	183
Somasundaram Chettiar, E. A. S. S. N.	...	72
Somasundaram Chettiar, A. S. S. M.	...	110
Somasundaram Mills (Private) Ltd.,	...	160
South Arcot Elec. Dis. Co., Ltd.,	...	167
South Indian Mfg. Co.,	...	2nd Wrapper
Southern Railway	...	221 & 295
Southern Roadways Private Ltd.	...	255

INDEX TO ADVERTISERS—(*Continued*)

		Page
Spinning & Weaving Coy. Ltd., Coimbatore	...	120
Sri Sarada Mills Ltd.,	...	24
Star Publications	...	166
Students Tutorial College	...	108
Subramaniam Chettiar, Al. Sp. Pl.	...	51
Sundaram Industries Private Ltd.	...	42
Sundram Iyengar & Sons., Ltd.	...	267
Surajmals	...	7
Tamil Nadu	...	176
T. I. Cycles of India Ltd.	...	199
Travancore Rayons Ltd.,	...	307
Trichy Tutorial College	...	106
Udipi Boarding & Lodge	...	143
Vadivel Nadar & Sons., S. P.	...	388
Varisai Mohomed Rowther, S. E.	...	88
Vijayalakshmi Mills Ltd.,	...	380
Vulcan Insurance Co., Ltd.,	...	229



தமிழ்ச் சங்க வரலாறு

பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோன், மதுரை

★

உலகப் படைப்பில் முதற்கண் தோன்றியது தமிழகம் என்பது அறிஞர் பலருடைய துணிபு.

இந்நாட்டை ஆண்ட அரசர்கள் சேர, சோழ, பாண்டியராவார். இவர்களது தொன்மையை விளக்குங்கால் ஆசிரியர் பரிமேலழகர்,

''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று'',

என்னும் குறள் உரையில், ''தொன்று தொட்டு வருதல், சேர, சோழ, பாண்டியர் என்றும் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்'' என்று கூறியுள்ளார். இங்ஙனம் அவர் கூறியது தொன்னூல்களின் வாயிலாக அவ்வாசிரியர் தமிழ் நாடு, தமிழ் மக்கள் இவர்களது தொன்மையை நன்கு ஆராய்ந்து கண்ட உண்மை முடிபினாலேயாம். ஆகவே தமிழ் மக்களது தொன்மை ஒரு கால வரம்பிற்கு உட்பட்டதன்று என்பது தெளிவாகும்.

பண்டைத் தமிழ் நாட்டின் தெற்கெல்லை இப்போது கடற்குமரித் துறையிலிருந்து தெற்கே பலகாத தூரம் பரவி இருந்தது. அப்பகுதி அக்காலத்தில் குமரிநாடு முதலாக நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிவுண்டிருந்தது. அப்பகுதியில் தென்மதுரை யென்னும் நகரம் பாண்டியர்களது கோநகரமாகப் பன்னூருண்டுகள் விளங்கியிருந்தது. அந்நகரத்திலேயே தலைச்சங்கத்தைப் பாண்டியர்கள் நிறுவி நாட்டு மக்களுக்குக் கல்வி வளர்ச்சி புரிந்து வந்தார்கள். முதற் சங்கத்தை நிறுவியவன் காய்சின வழுதி என்னும் பாண்டியன். இச்சங்கத்தில் அகத்தியனார், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய நாற்றுக்கணக்கான புலவர்கள் வீற்றிருந்து, தமிழ் ஆராய்ந்து எண்ணிறந்த நூல்களை இயற்றி வெளியிட்டனர். இத் தென்மதுரையில் இத்தலைச்சங்கம் பல்லாயிரம் ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்தின் இறுதியில் இருந்தவன் கடுங்கோன் என்னும் பாண்டியன். இவன், இத்தென் மதுரையைக் கடல் கொண்டமையின், பஃறுளியாறு, குமரியாறு என்னும் இரண்டாற்றிற்கும் இடையே உள்ள வளநாட்டில் கபாடபுரம் என்னும் நகரை அமைத்து அதனைத் தலைநகரமாகக் கொண்டு

அதில் மீண்டும் சங்கத்தை நிறுவித் தமிழ்மொழியைப் போற்றிப் புரந்தான். இச்சங்கம் இடைச் சங்கமெனப்பட்டது.

இடைச் சங்கத்தில் தொல்காப்பியனர் முதலாகப் பல புலவர்கள் வீற்றிருந்து தமிழாராய்ச்சி செய்தனர். இலக்கியமும், இலக்கணமும், கலிகளுமாக அச்சங்கத்தினின்றும் வெளி வந்த நூல்கள் எண்ணிறந்தன. இவற்றுள் முதன்மையானது தொல்காப்பியம். அப்போது நிகழ்ந்த ஒரு பெருங்கடல் கோளால் பஃறுளியாறும், பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் குமரியாறும் இடையிலுள்ள நாடு நகரங்களும் அழிந்தன.

கபாடபுரம் இக்கடல் கோளால் அழியவும் முடத்திரு மாறன் என்னும் பாண்டியன் தன்னுட்டுள் இப்போதுள்ள கூடல் என்னும் இம்மதுரை மாநகரை உண்டு பண்ணி மூன்றும் தமிழ்ச் சங்கமான கடைச் சங்கத்தை நிறுவினன். இவன் கடல் கொண்டதனல் உண்டான தன்னுட்டின் குறையை நிரப்புதற்குச் சேர, சோழரோடு பொருது அவர்கள் நாட்டில் ஒரு சிறு பகுதியைக் கைக்கொண்டான். அதனல் அவன் நிலந்தருதிருவிற் பாண்டியன் எனவும் கூறப்பட்டான். அது முதல் இம்மதுரை பாண்டிய நாட்டிற்கேயன்றித் தமிழ்நாடு முழுவதுக்குமே மொழி வளர்ச்சியில் தலைநகரமாகத் திகழ்ந்தது.



திரு. ஆ. கார்மேகக் கோன்

இதுவே தமிழ்ச் சங்கத்தாரின் வரலாற்றுச் சுருக்கமாக அறியப்படுவது. இங்ஙனம் கூறப்படும் சங்க வரலாற்றுள் முதல் இரண்டு சங்கங்களைப்பற்றிய விரிவும் தெளிவுமான வரலாறுகளை நாம் அறிதற்குரிய சான்றுகள் நமக்கு மிகுதியாகக் கிடைத்தில. முச்சங்கங்களைப்பற்றி, இறையனர் களவியல் பாயிர உரையிலும் தொல்காப்பிய உரையாசிரியர்களது உரைகளிலும், சில சங்க இலக்கிய உரைகளிலும், ஒரு சில குறிப்புகளே நமக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் சங்க வரலாற்றைச் சற்று விரிவாக எடுத்துரைப்பது இறையனர் களவியலுரையே. இவ்வுரை 11-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதே யெனினும் கருத்து முழுவதும் சங்கப்புலவர் நக்கீரனாரதே என்பதில் ஐயமில்லை. இக்களவியல் உரை சங்கம் இருந்த நகரங்களையும் அவற்றை நிறுவிய பாண்டியர்களையும், சங்கப் புலவர் சிலரையும், ஒவ்வொரு சங்கத்திற்குரிய புலவர்களின் தொகையையும், சங்கம் நிகழ்ந்த ஆண்டுகளின் அளவையும், முதலிடைச் சங்க நகரங்கள் கடல் கோளால் அழிந்ததையும் எடுத்துரைத்திருப்பது வரலாற்று முறைக்கு மிகவும் பொருத்தமானதாகவே இருக்கின்றது. இவ்வரலாற்றில் நம்பிக்கை கொண்டன்றே, உரையாசிரியர்கள் பலரும் இவ்வரலாற்றுக் குறிப்புகளைத் தம் உரையகத்து ஆங்காங்கு இடை மடுத்து எடுத்துக் காட்டிச் செல்லுகின்றனர்?

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் பேராசிரியர் "தலை இடை கடைச்சங்கத்தாரும், பிற சான்றோரும்", "தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் கடைச் சங்கத்தாரும், இவ்விலக் கணத்தால் செய்யுள் செய்தார்", "அவ்வழக்கு நூல் பற்றியல்லது மூன்று வகைச் சங்கத்தாரும் செய்யுள் செய்திலர்" என்று கூறும் உரைகளுள், களவியல் உரையிற்காணும் சங்க வரலாற்றுக் குறிப்புகள் பல காணப்படுகின்றன.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியப் பாயிர உரையில், "அவ்வாசிரியராவார், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், தலைச் சங்கத்தாரும் முதலியோர்". என்றும், புறத்திணையியல் உரையில் "தமிழ்ச் செய்யுட் கண்ணும், இறையனாரும் அகத்தியனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச்சங்கத்தார் செய்தன இடையும், கடைச் சங்கத்தார் செய்தன கடையுமாகக் கொள்க" என்றும் இன்னும் பிறவாலும் தம்முரையுள் களவியல் உரை குறித்த சங்கங்களையும் புலவர்கள் சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளனர்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையுள், "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தினிடைச் சங்கம்" என்றும், "கடைச்சங்க மிரீ

இய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனுர் செய்த மதிவாணனுர் நாடகத் தமிழ் நூல்,'' என்றும், ''முதலூழி இறுதிக்கண் தென் மதுரை யகத்துத் தலீச் சங்கம்,'' என்றும் கூறியுள்ளார். இவ்வுரைப் பகுதியில் முதற் சங்கம், இடைச் சங்கம் இருந்த நகரங்களும் கவியரங்கேறிய பாண்டியர்களும் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

''இவ்வகை யரசரிற் கவியரங் கேறினுர்
ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப''

என்ற பழைய அகவலிலும் கபாடபுரத்தில் சங்கம் இருந்த செய்தி சுட்டப்பட்டிருக்கின்றது. மேலும் பிற்காலத்தில் சேக்கிழார் பெருமானும், தம் பெரிய புராணத்துள், ''சாலு மேன்மையிற் றலீச்சங்கப் புலவனுர் தம்முள்,'' என்று தலீச் சங்கப் புலவரைக் குறிப்பிட்டுள்ளார்.

களவியல் உரைப்பாயிரம் கூறும் முச்சங்க வரலாறு பூனேந்துரையே என்றும், வேண்டுமானுல் அப்பாயிரம் குறிப்பிடும் கடைச்சங்க வரலாற்றையே ஒருவாறு உண்மையென உடன்படலாம் என்றும் ஒருசாரார் கூறுவர். அங்ஙனம் அவர்கள் கூறுதற்குக் காரணம் அவ்வுரைநடைகளுள் காணப்படும் 'என்ப,' 'போலும்,' என்னும் சொற்கள் கட்டுரைச் சுவைபட நின்ற இடைச் சொற்கள் எனக் கொள்ளாது ஐயப் பொருள் தரும் சொற்களாகக் கொண்ட திரிபுணர்ச்சியேயாகும். அன்றியும் அவ்விரு சங்கத்திற்கும் உடன்படாதோர், இம் முதலிடைச் சங்கங்களேப் பற்றிய குறிப்புகள் மூன்றும் சங்க நூல்களுள் யாண்டும் விளக்கமுறக் காணவில்லீயே என்றும் வினவுவர். அவ்வாறு வினவுவது பொருந்தாது.

''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றுன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந''

''தொல்லாணே நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல''

என்ற மூன்றும் சங்க நூலாகிய மதுரைக் காஞ்சிப்பாட்டின் அடிகளாகிய இவ்விரு பகுதியிலும் முறையே பாண்டியன் ஒருவன், அகத்தியரைத் தலீவராகக் கொண்டு முதற் சங்கம் நிறுவித் தானும் அச்சங்கத்தில் அகத்தியர்க்கு அடுத்து வீற்றிருந்த செய்தியும், நிலந்தரு திருவின் நெடியோனுகிய முடத்திருமாறன் இடைச் சங்கம் நிறுவிப் புலவர்களேக் கொண்டு தமிழாராய்ந்த திறனும் குறிக்கப்பெற்றுள்ளன. ''தென்னவற் பெயரிய'' என்ற அடிக்கு உரை எழுதுங்கால் நச்சினுர்க்கினியர், ''இதனுல் அகத்தியருடன் தலீச் சங்கத்துப் பாண்டியன் இருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினுர்,'' என்று விரித்துரைத்திருப்பது நன்கு கருதத் தக்கது.

அன்றியும் முதலிடைச் சங்கப் புலவர்களாகக் களவியல் உரை கூறும் சில புலவர்கள் பாடிய பாடல்களும், இடைச் சங்கத்திருந்த முடத்திருமாறன் பாடல்களும், தொல்காப்பியப்பாயிரம் பாடிய பனம்பாரனுர் பாடல்களும் கடைச் சங்கத் தொகை நூல்களுள் ஆங்காங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. பல உரையாசிரியர்கள் முதலிடைச் சங்கங்களே ஒப்புக்கொண்டு மூவகைச் சங்கத்துச் சான்ருேர் எனக் குறிப்பிட்டு அவர்களது யாப்புக்களேத் தம் உரையுகத்துப் பல்லிடத்தும் பாராட்டிச் சொல்லிச் சென்றுள்ளனர். மிகவும் சேய்மைத்தான கால நிகழ்ச்சிகளே, கிடைக்கும் ஆதாரங்கள் ஒரு சிலவாக இருப்பினும் அவற்றின் சிறப்புகளேக் கொண்டு நம்புவதே நற்பேரறிஞர்களது கடனுகும்.

இடைச் சங்கம் இருந்ததாக அறியப்படும் கபாடபுரத்தின் செய்தி, வடமொழி ஆதி காவியமாகிய வான்மீகத்திலும் வியாச பாரதத்திலும் சுட்டப்பட்டிருப்பது இடைச் சங்கம் இருந்த நகரம் இப்பெயருடன் ஒன்றிருந்த உண்மையை வலியுறுத்தும் ஒரு சிறந்த புறச் சான்ருக அமைந்துள்ளது. வான்மீகத்தில் காணப்படும் அக்குறிப்பாவது, கிஷ்கிந்தா காண்டத்தில் ''வானரர்களே! பொன் மயமானதும் அழகானதும் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டதும் பாண்டியர்க்குத் தகுதியுடையதுமான கபாடபுரத்தைப் பார்க்கக் கடவீர்'' என்று வருவதாகும்.

வியாச பாரத துரோண பருவத்துள், ஒரு பாண்டியன் தன் தந்தையைக் கொன்று கபாடபுரத்தை அழித்த கேசவனேயும் துவாரகையையும் நாசம் பண்ணுவதற்குப் படையெடுத்த செய்தி யொன்று குறிக்கப்பட்டுள்ளது. சாணக்கியர் தம் பொருள் நூலில் முத்துக்களின் வகைகளே எடுத்துக் கூறுமிடத்துக் கபாடபுரத் துறையில் குளித்த முத்தின் வகையைப் பாண்டிய கவாடகம் என்று குறித்துள்ளார்.

இவற்றுல் இடைச் சங்கம் இருந்த கபாடபுரம் இராமாயண காலத்தும் பாரத காலத்தும் சீர்த்த நிலேயில் இருந்தது என்பது நன்கு தெளியப்படுகின்றதன்ருே! இப்பாரதத்திலும் சாணக்கியரின்

பொருள் நூலிலும் குறிப்பிட்ட இச்செய்திகளால், வான்மீகத்தில் குறிக்கப்படும் கபாடம் என்பது கோட்டைக் கதவினையே குறிக்குமென்றும் பின்பு அது ஆகுபெயராகப் பாண்டியனது நகரத்தைக் குறிக்குமென்றும், கபாடபுரம் என்ற நகரமே பாண்டியருக்கு இருந்ததில்லை யென்றும் கூறுவார் கூற்றுப் பொருந்தாதே யாகும்.

கடல்கோள் : முதற் சங்கம், இடைச் சங்கம் என்பன இருந்ததில்லை என்று கூறுவார், அச்சங்கங்கள் இருந்த நகரினைக் கடல் கொண்டது என்னும் வரலாற்றினையும் ஏற்றுக்கொள்ளார் என்பது வெளிப்படை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகப் பெருநிலத்தின் கோடி ஆப்பிரிக்காக் கண்டத்துடன் இணைந்திருந்ததென்றும் பின்பு அளக்கமுடியாத அப்பேரூழியில் நிகழ்ந்த ஒரு பெருங்கடல் கோளால் அப்பெரு நிலப் பகுதி முழுவதும் பெருங்கடற் பகுதியாய் மாறி விட்டதென்றும், அக்கடற் பகுதியை ஆராய்ந்து கண்ட பௌதிக நூல் வல்லாராகிய ஹெக்கல் முதலிய மேலை நாட்டுப் பேராசிரியர்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். அப்பேரூழியில் நடந்த கடல் கோளில் அழிந்த பெருநிலப்பரப்பினை இலெமூரியாக் கண்டம் என்பர். தமிழ் நூல்களில் கூறப்படும் கடல்கோள் அதனினும் பிற்பட்டதாகும்.

இக்கடல்கோள்களும் இருமுறை நடந்ததாகக் கருதுவது பொருந்தும். முதலில் நிகழ்ந்த சிறு கடல் கோளால் தலைச் சங்கம் இருந்த தென் மதுரை மட்டும் அழிய, இரண்டாவது நிகழ்ந்த பெருங்கடல் கோளால் தமிழ் நிலப் பகுதியும் கபாடமும் குமரியாறுவரை அழிந்தன.

இக்கடல் கோள்கள் பற்றிய குறிப்புக்கள் கடைச் சங்க நூல்களுள் காணப்படுகின்றன.

தொகை நூல்களுள் கற்றறிந்தார் ஏத்தும் கலி யென்று புகழப்பட்ட கலித் தொகையில்,

‘மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்
நாடிடம்படப்
புலியோடு வின்னீக்கிப் புகழ்பொறித்த
கிளர்கெண்டை
வலியினுன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்’,
(கலித். 104—1—4)

என்னும் பாடலில் பாண்டியன் தன் நாட்டினைக் கடல் வவ்விக் கொண்டமையின், அக்குறையினை நிரப்பச் சோழனோடும் சேரனோடும் பொருது, அவர்கள் நாட்டின் சில பகுதிகளைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டனன் என்று கூறப்பட்டுள்ளது. பஃறுளி யாறும், பல மலைகளும், குமரியாறும், கடல் கொண்ட செய்தியைச் சிலப்பதிகாரமும்,

“வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள”
(சிலப். காடுகாண். 18,20)

என்று அறிவிக்கின்றது.

“நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்” என்ற சிலப்பதிகார வேனிற் காதை அடியில் அடியார்க்கு நல்லார், நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்துப் பாண்டிய நாட்டுத் தென் திசையில் நாற்பத்தொன்பது நாடுகள் கடல் கோளால் அழிந்த செய்தியை மிக விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேற்காட்டிய இச்சான்றுகளால் கடைச்சங்க காலத்துப் புலவர் பெருமக்களும், உரையாசிரியர்களும், பண்டைத் தமிழகக் கடல் கோளைப் பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பது பெறப்படும். இங்ஙனம் பண்டைய இலக்கண இலக்கியங்களாலும், உரைகளாலும் அறியப்படும் கடல் கோளைப் பற்றி ஒரு சாரார் ஐயுற்றுக் கூறுவதெல்லாம் தமிழ் நாட்டின் பழமை, தமிழ் இலக்கியத்தின் பழமை, தமிழருடைய நாகரிக முதிர்ச்சி ஆகிய இவற்றை யெல்லாம் பிற்பட வைக்க வேண்டுமென்ற அவர்களது குறுகிய நோக்கத்தினாலேயே போலும்!

மூன்றும் சங்கம் : இடைச் சங்கம் இருந்த கபாடபுரம் அழிந்த பின்னர் அச்சங்கத் திறுதிக் கண்ணிருந்த முடத் திருமாறன் என்பான் கூடல் என்னும் இம்மதுரைக்கண் மூன்றும் சங்கத்தை நிறுவினன் என்பது முன்னரே கூறப்பட்டது. பாண்டியர் நிறுவிய இக்கல்விக் கழக நிகழ்ச்சியிலும் ஒரு சில அறிஞர் ஐயமுற்றுப் பல்லாண்டுகட்கு முன்னிருந்தே எழுதி வந்துள்ளனர். இவர்களது ஐயப்பாடு தவறானது என்பதை எடுத்துக் காட்டுதற்குரிய உரமுடைய சான்றுகள் பல உள என்பதனைத் தமிழிலக்கிய ஆராய்ச்சிமிக்க அறிஞர் யாவரும் நன்கறிவர். சைவ வைணவ சமயப் பெரியோர்களின் வாக்குகளிலும் சங்கத் தொகை நூல்களிலும் ஆங்காங்கு ஐயமற இம் மூன்றும் சங்கத்தைப் பற்றிய செய்திகள் சுட்டப்பட்டுள்ளன. இவ்வுயர் மதிற் கூடலில் இயற்றமிழ்ச் சங்கமும், இசைத் தமிழ்ச் சங்கமும் இருந்த உண்மையை வாதவூர் அடிகளாம் மாணிக்கவாசகர்,

“சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தை யுள்ளும்

உறைவான் உயர்மதிற் கூடலி னுய்ந்த
வொண்டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனே யோ அன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ''

என்று திருக்கோவையாருள் குறிப்பிடுகின்றார்.

இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த திருநாவுக்கரசர் ''நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி நற்கனகக்கிழி தருமிக் கருளினேன் காண்'' என்ற தம் பாடலின் அடிகளில் சங்கமிருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றார். வைணவ சமயப் பெரியாராகிய திருமங்கையாழ்வார், ''கலியன் சொன்ன சங்கத் தமிழ் மாலே பத்தும்'' என்று தமிழைச் சங்கத் தமிழாகவே கூறுகின்றார்.

நமக்கு மிகவும் நெடுங் காலத்திற்கு முன்னர் இருந்த இப்பெரியார்களது வாக்கில் பயின்றிருக்கும் இச்சங்கச் செய்தி எத்துணை வலியுடையதாய் இருக்குமென்பது கூறுமலே விளங்கக் கூடியது.

மேலும் இம்மூன்றும் சங்கம் இக்கூடல் மாநகரின்கண் நிலவியிருந்த வரலாற்றுண்மையை இச் சங்கத் தொகை நூல்கள் பலவும் ஆங்காங்குக் குறிப்பிடுகின்றன. சிறுபாணற்றுப் படை மதுரையைப் பற்றிக் கூறுமிடத்து, ''தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை'', என்று குறிப்பிடுகின்றது. தமிழ் நிலைபெற்ற என்பதில் தமிழ் மொழி நிலை பெற்றிருந்ததென்னும் பொருள் தருவதன்றித் தமிழ் நிலையம் என்னும் சங்கத்தின் பெயரே தமிழ் நிலை என்று குறையாக நின்றதெனப் பொருள் கொள்ளவும் இடமிருத்தல் காண்க. ''தமிழ்கெழு கூடல் தண் கோல் வேந்தே'', என்று புறநானூற்றிலும், ''தமிழ் வையைத் தண்ணம் புனல்'' என்று பரிபாடலிலும், ''தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்'', என மணிமேகலையிலும், இம்மதுரையைக் கூறுமிடமெல்லாம் தமிழோடு இணைத்தே கூறுவது அதன்கண் தமிழ்ச் சங்கம் இருந்த பெருமை பற்றியேயாம். அன்றியும் சின்ன மனூர்ச் செப்பேட்டில், ''மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'', எனப் பாண்டியன் மெய்க்கீர்த்தியில் இம்மதுரைச் சங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் இம் மதுரையில் மூன்றும் சங்கம் நிறுவப்பட்டிருந்த உண்மையைப் புலப்படுத்துதற்குரிய சான்றுகள் எத்துணையோ உள. அவை யெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும்.

சங்கம் என்னும் பெயர்: இனி, சங்கம் என்னும் சொல் வடசொல் என்றும், அங்ஙனமாயின் தமிழ்ச் சங்கத்தைக் குறிக்க வழங்கிய சொற்கள் யாவை என்றும் உசாவுவர் சிலர். அங்ஙனம் உசாவுவதற்குக் காரணம், சகர ஒற்று, அ, ஐ, ஒள, என்னும் மூவுயிரோடும் கூடி மொழிக்கு முதலில் தமிழ் மொழியில் வாராது என்று உரைக்கும் தொல்காப்பிய விதி பற்றியேயாம். (எழுத்து; மொழி மரபு; சூத்; 62.) தொல்காப்பியர் காலத்து இச்சொல் வழக்கு இல்லாமையால் சங்கம் என்ற பொருளில், கடைச்சங்க நூல்களில் காணப்படும் நிலையம், புணர்ப்பு, அவை, கழகம், கூடல் முதலிய சொற்கள் வழங்கியிருக்கக் கூடும். கடைச்சங்க நூல்களுள் சகரத்தை முதலாகக் கொண்ட சவட்டுதல், சமழ்ப்பு, சந்து முதலிய சொற்களும் வழங்கப்பெற்றுள்ளமையின் அம்முறையில் பின்பு உண்டான தமிழ்ச் சொல்லே சங்கம் என்று கொள்ளினும் இழுக்காகாது. ''புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க'' என்று மணிமேகலையாசிரியர் இச் சொல்லை எடுத்தாண்டிருத்தல் காண்க.

சங்க நூல்கள்: இம்மூன்று சங்கங்களின் வாயிலாகவும் வெளிவந்த நூல்கள் இவை யென்பதை முன்பு குறிப்பட்ட இறையனர் களவியலுரைப் பாயிரத்திலும், அடியார்க்கு நல்லார் முதலியோர் உரைகளிலும் காணலாகும். இவற்றுள் முதற் சங்கத்தெழுந்த நூல்களாகக் குறிக்கப்பட்டவற்றுள் இப்பொழுது ஒன்றும் நமக்குக் கிடைத்திலது. அச்சங்க அகத்திய சூத்திரங்கள் ஒரு சில மட்டும் சில உரைகளிடையே காணப்படுகின்றன. இடைச் சங்கநூல்களுள் தொல்காப்பியம் நீங்கலாக ஏனைய கலிகள் யாவும் அலிகளுக்கு இரையாயின. இந்நூல்கள் எல்லாம் அழிந்தொழிந்தமைக்கு ஒரு புலவர்,

''ஓரணம் உருவம் யோகம் இசைகணக்கு
இரதம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்பம் நீர்நிலம்
உலோகம்
மாரணம் பொருள் என்றின்ன மானநூல்
பலவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப்
பெயரும் மாள''

என்று இரங்கிக் கூறியுள்ளார்.

இவைகளேயன்றிக் கடைச்சங்க நூல்களுள்ளும் பல கலிகள் நாளடைவில் இறந்தொழிந்தன என்று அறியப்படுகின்றது. அவற்றுள் காதலும் வீரமும் பொருளாகக் கொண்டு பாடிய அகப்பொருள் புறப்பொருள் பாட்டுக்கள் அடங்கிய தொகை நூல்களே இப்போது எஞ்சி

யுள்ளன. இத்தொகை நூல்களில் அடங்கிய பாடல்களின் எண்ணிக்கை 2426-ஆகும். இவ் வருமைப் பழம் பாடல்களேனும் நமக்கு அழிந்து போகாமல் கிடைத்திருப்பது நமது நல் ஊழேயாகும். இவைகளேயன்றிக் காப்பியங்க ளாக இச்சங்க காலத்தின் பிற்பகுதியில் எழுந் தவை சுவைமிக்க சிலப்பதிகாரமும், மணி மேகலையும் ஆகும்.

இம் மதுரையின்கண் ஆயிரம்ஆயிரம் ஆண் டுகளாகத் திகழ்ந்திருந்த தமிழ்ச் சங்கமானது இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் இருந்த உக்கிரப் பெருவழுதியின் காலத் திற்குப் பின்னர் நின்று நிலவாது மறைந் தொழிந்தது. அவனுக்குப் பின் வந்த பாண்டியர் கள் சங்கம் நிறுவித் தமிழை வளர்க்காது நெகிழ்ந்து போயினர். பின்பு ஐந்தாம் நூற் றாண்டில் புதிய சமயக் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்கு எழுந்த சமணர்களும் பௌத்தர்களும் இம்மதுரையில் சங்கங்கள் நிறுவி, அவற்றின் வாயிலாக இலக்கணமும், அவர்களது சமயச் சார்பான கலைகளும் காப்பி யங்களுமாக வெளியிட்ட நூல்கள் பலப் பல வாம். பன்னிருண்டுகள் மதுரையில் இம் முறையில் வளர்ச்சி பெற்று வந்த தமிழ்மொழி, பின்னைய நூற்றாண்டுகளில் அரசியல் குழப்பங் களும் களப்பிரர் பல்லவர் முதலிய அந்நியர் ஆட்சியும் ஏற்பட்ட காலத்தில் புறக்கணிக்கப் பட்டது. அப்போது அரசரது அவைக்களங் களிலும் தனித்தும் இருந்த சில புலவர்கள் நூல் கள் பல இயற்றித் தமிழ் மொழியை வளம் படுத்தினர்கள். அந்நூல்களுள் சிறந்தவை, கம்பஇராமாயணம், பெரியபுராணம் முதலியன. பிற்காலத்தில் வடமொழிப் பிரபந்தங்களையும், புராணங்களையும் தழுவி எழுந்த சிறு நூல்களும் புராணங்களுமே யல்லாது, மக்கட்குப் பயன் படும் சிறந்த முறையில் நூல்கள் வெளிவர வில்லை. இதனால் தமிழ் இலக்கியத்தின் போக் கும் அமைப்பும் வேறுபட்டன. இவற்றிற்குக் காரணம் இந்நூற்றாண்டிலிருந்த புலவர்கள் பண்டைத் தமிழ்நூல்களின் பயிற்சியும், ஆராய்ச் சியும் குன்றியவர்களாக இருந்ததே.

தமிழ் மக்களது தனி மாண்பை அறிதற்குக் கருவியான சங்க இலக்கியப் பயிற்சி இந்நனம் நாட்டில் குன்றியதற்குக் காரணம் சைன, பௌத்த, சைவ, வைணவப் பெரியார்கள் இயற் றிய காப்பியம், புராணம், பிரபந்தங்கள் முத லான சமயச்சார்பான நூல்களும், நிகழ்ந்த சம யப் பூசல்களும், மக்களது உள்ளத்தில் உண் டாக்கிய ஒரு புதிய பெரும் புரட்சியேயாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வெளிவந்து பல் லாயிரம் ஆண்டுகள் வழக்கிலிருந்து, பின்னைய நூற்றாண்டுகளில் 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை, சிதல் வாய்பட்டுப் பழைய தமிழ்ப் புலவர் அகங்களில் தேடுவாரற்றுக் கிடந்த ஏடு களைத் தேடி எடுத்து, ஆய்ந்து அச்சிட்டு நம் முன்னோரது கலைச் செல்வங்களை மீண்டும் ஒரு வாறு நாம் பெறுமாறு செய்த பெருமை முதற் கண் காலஞ்சென்ற பெரியார்களான சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்கும் மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்கட்கும், மதுரை நான்காம் சங்கம் நிறுவிய துங்கர் பாண்டித் துரைத்தேவர் அவர்கட்கும் உரியதாகும். இந்நூல்கள் வெளிவந்துள்ள இக் காலத்துப் பலர் இவற்றைக் கற்று, தமிழ் மொழியின் தனிநிலை, தமிழ்நூல்களின் சிறப் பியல்பு, தமிழர் நாகரிகம், அவர்களது உயரிய குறிக்கோள் முதலியவற்றை யெல்லாம் நன் கறிந்தவர்களாக விளங்குகின்றார்கள்.

நான்காம் தமிழ்ச்சங்கம்: மூன்றும் தமிழ்ச் சங்கம் மறைந்த பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னர் நான்காம் சங்கத்தை இம்மதுரையம்பதி யில் நிறுவிய வண்மையாளர் காலஞ்சென்ற பாண்டித்துரைத் தேவராவர். இவர், தமிழ் வள்ளலான பொன்னுச்சாமித் தேவரவர்களது அருமைப் புதல்வர். இவரது தோற்றம் 1867-ம் ஆண்டு மார்ச்சு 21 ம் நாள். பாஸ்கர சேதுபதி யவர்கள் தேவரவர்களது சிறிய தந்தையாரான முத்துராமலிங்க சேதுபதியின் குமாரராவர். இவ்விருவரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை யுடையவராய், ஒரு தமிழ்ச் செய்யுளின் நயத்தைப் பல மணிநேரம் பேரவை களில் இனிமையாக எடுத்துரைக்கும் சொல் லாற்றலுடையவர்களா யிருந்தனர். பாண்டித் துரைத் தேவரவர்கள் எப்பொழுதும் தமிழ்ப் பெரும் புலவர்கள் பலர் தம்மைச் சூழ அருங் கலை விநோதராய்த் திகழ்ந்து கொண்டிருந்தார். ஓரமயம் மதுரை மாநகருக்கு ஒரு சொற்பொழி வின் பொருட்டு அவர் வந்திருந்தபோது, சங்க மிருந்த துங்கம் வாய்ந்த மதுரைமா நகரில் அப் போது தமிழ்ப்புலவர்களும், தமிழ்ப் பயிற்சியும் இல்லாதிருப்பதை அறிந்து மிகவும் மனம் கவன் றார். அதனால் மதுரையில் தமிழ் தழைத்தோங்கு தற்குரிய முயற்சியை உடனே மேற்கொண்டு, அதற்குரிய உபாயத்தை நாடி நின்றார்.

1901-ம் ஆண்டு சென்னை மாநில அரசியல் மாநாடு மதுரையில் கூடிய காலத்து, அதற்கு வரவேற்புக் குழுத்தலைவராக இருந்த பாண்டித் துரைத் தேவரவர்கள் அம் மாநாட்டின் முடிவிலே மதுரையில் சங்கம் நிறுவக் கருதியிருக்கும் தம் கருத்தினை வெளியிட்டனர். தேவரவர்களது முயற்சியை மாநாட்டிற்கு வந்திருந்த அறிஞர்கள் அனைவரும் பாராட்டினர்.

தேவரவர்கள் தம் கருத்து நிறைவேறவேண்டிய முன் ஏற்பாடுகள் பலவற்றையும் செய்தார். 1901-ஆம் செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் தமிழ்நாட்டிலுள்ள தலைவர்களையும் தமிழ்ப்பெரும் புலவர்களையும் அழைத்துப் பேரவை ஒன்று கூட்டி இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர். இம்முயற்சிக்கு உறுதுணையாகப் பாஸ்கர சேதுபதியவர்களும் வந்திருந்து சிறப்பித்து. சங்கம் நீலேபெருக நடப்பதற்குத் தம் சமஸ்தானத்தின் வழியாக என்றும் கிடைக்கும்படி பெரும்பொருள் உதவியுஞ் செய்தனர். இச்சங்கத்தின் அங்கங்களாகச் செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் புத்தக சாலை, நூல் ஆராய்ச்சித்துறை, அச்சகம் முதலியவைகளும் அமைக்கப்பட்டன. கல்லூரித் தலைமை யாசிரியராக வடமொழி தென்மொழிப் புலமை நிரம்பிய திரு. நாராயண ஐயங்கார் நியமிக்கப் பெற்றார். திரு. ரா இராகவையங்கார் தமிழ்நூல் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும், சே. சுப்பிரமணியக் கவிராயர், சே. அருணாசலக் கவிராயர் சே. கந்தசாமிக் கவிராயர் இவர்கள் நூற்பரிசோதகராகவும் நூல்பதிப்பாளராகவும் இருந்தனர்.

கல்லூரியில் உடன் ஆசிரியர்களாக அரசஞ் சண்முகனார், சுந்தரேஸ்வர ஐயர், கோபாலையர் ஆகிய இவர்களும் இருந்து ஆசிரியப் பணிபுரிந்தனர். இப்போது திரு. நா. அப்பனையங்கார் ஒருவரே ஆசிரியராக இருக்கின்றார்.

கல்லூரியில் பயிலும் மாணவர்க்கு உண்டியும் உறையுளும் இலவசமாக அளிக்கப்பட்டன. கல்லூரித் தேர்வுகள், பிரவேச, பால, பண்டிதம் என்று மூன்றாக வகுக்கப்பட்டுப் பாடத் திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத் தேர்வுகளில் முதன்மையாக முதல்தரத்தில் தேர்வோர்க்குப் பொற்பதக்கம், பொற்கடகம், வெண்பொற்காசுகள் புதுக்கோட்டை மன்னர்ப் பரிசாக வழங்கப்பட்டன.

சங்கச் செலவிற்குக் குறுநில மன்னர்களும் பெரு நிலக்கிழாரும் வணிகப் பெருக்காளரும் தாம் குறிப்பிட்ட தொகைகளை ஆண்டுதோறும் அனுப்பிவந்தனர்.

1903-ம் ஆண்டு முதல் "செந்தமிழ்" என்னும் திங்கள் இதழ் இச்சங்கத்திலிருந்து வெளிவந்தது. இதற்கு ஆசிரியராக இருந்தவர்கள், முறையே ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், திரு நாராயண ஐயங்கார். இப்போது இத்திங்கள் வெளியீட்டிற்கு ஆசிரியர் குழு ஒன்று புதிதாய் அமைக்கப்பெற்றுளது.

இச்சங்கத்திற்கு ஒரு செயற்குழு உண்டு. இதற்குத் தொடக்கம்முதல் பாண்டித்துரைத் தேவரவர்களே தலைவராக இருந்துவந்தனர். அவர்கள் காலஞ்சென்ற பின்னர் முத்துராமலிங்க சேதுபதி தலைவராக இருந்தார்.

இப்போது முத்துராமலிங்க சேதுபதியவர்களின் குமாரரான சண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்கள் தலைவராகவும், தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் துணைத் தலைவராகவும் இருந்து வருகின்றனர்.

இச்சங்கம் தொடங்கிய நாள் முதலாக இச் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், பல ஆண்டுகள் அமைச்சராகவும், பிறகு துணைத் தலைவராகவும் இருந்து சங்கம் இதுகாறும் நிலைத்திருக்கும்படி அரும்பணி புரிந்தவர் அண்மையில் காலஞ்சென்ற வழக்கறிஞர், டி. சி. சீனிவாசையங்காரவர்கள். இச்சங்கத்துக்கு அமைச்சராய் இருந்த வழக்கறிஞர் திரு. என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்காரவர்களின் தமிழ்ப்பணியும், இப்போது சங்க அமைச்சராகவுள்ள திரு. சண்முக சுந்தரம் அவர்களின் தமிழ்ப்பணியும் நினைவு கூரத்தக்கன.

இச்சங்கம் தோன்றி அரை நூற்றாண்டுக்கு மேலாகின்றது. இப்பொழுது சங்கத்தின் பொன் விழா நடைபெறுகிறது. இக்காலத்தைத் தமிழின் பொற்கால மெனலாம்; தமிழருக்கோர் நற்காலமெனலாம். இப்போது அயர்ந்திருக்கும் தமிழ்ச் சங்கம், இனி உயர்ந்து பல்வகைத் திருத்தங்கள் பெற்றுத் தமிழ் நாட்டின் பல்கலைக் கழகமாகவும் தமிழ் மக்களது சமுதாய வாழ்க்கையை வகுத்து ஆணைபிறப்பிக்கும் அறங்கூறும் அவையமாகவும் விளங்கி, என்றும் பொன்போற் புகழுடன் நன்றாக இலங்குமென்று நாம் நம்புவோமாக!

இச்சங்கத்தின் பொன் விழா நடாத்தித் தமிழ் மக்கள் புத்துயிர் பெறுமாறு இவ்வரும் பெரும் செயலை ஆற்றுதற்கு முற்பட்ட தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களையும், செந்தமிழ்ப் புரவலரான சேதுபதிகளின் வழித்தோன்றல் திரு. சண்முகராஜேஸ்வர சேதுபதியவர்களையும் நாம் மனமாரப் புகழ்ந்து பாராட்டி, அவர்கள் நீடு நாள் நிலைபெற்று இனிது வாழுமாறு இறைவன் திருவருளை வழுத்துவோமாக!

ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்

பருத்தி நூற்பவர்கள் — டப்ளர்கள் — தயாரிப்பவர்கள்

ரெஜிஸ்ட்டர்ட் ஆபீஸ்: போத்தனூர், கோயமுத்தூர் ஜில்லா

★

தந்தி: 'SARADA', போத்தனூர் டெலிபோன்: 105

★

மூலதனம்

அதிகாரம்பெற்றது ரூ. 10,00,000 செலுத்தப்பட்டது ரூ. 7,34,800

ஸ்பின்டில்கள்: 20,472 டப்ளிங்: 324 லூம்கள்: 200

★

20s முதல் 80s வரை கார்ட் செய்யப்பட்ட எல்லா வகை
ரிங் நூல்களும் நூற்கப்படும்.
சிங்கிள், டபிள் & ஸ்டேபிள் பைபர்

★

மல்லுகள், ஷர்ட் துணிகள், லாங்கிளாத், துண்டுகள்,
வேஷ்டிகளும் தயாரிக்கப்படுகின்றன

★

மானேஜிங் ஏஜண்டுகள் & காரியதரிசிகள்:

V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ்

★

மானேஜிங் டைரக்டர்:

V. S. லக்ஷ்மணன்



தமிழக மகளிர்

அ. காமாட்சி குமாரசாமி, எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர், சேலம் நகரவைக் கல்லூரி

★

''மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய வெல்வேல் நெடுந்தகை',

என்பதற்கிணங்க, வீட்டின் விளக்கைப் போல் விளங்குபவர் மகளிர். போர்முனையே யன்றி நாட்டு வாழ்க்கைக்கே உரியவராய் விளங்குவோர் ஆடவர். வீடுதோறும் செம்மை விளங்கின், நாடு தானுகவே செம் மையுறும் என்பது உலகங்கண்ட உண்மை. எனவே வீட்டின் விளக்கைப்போல் விளங் கிய மகளிரின் அருமை பெருமைகளை ஆராய் வோம்:

தலைப்பிற் காணும் தமிழகம் காலங் கடந்த சொல்லாய்த் திகழினும் பிற்காலத் தமிழகப் பண்பாட்டிற்கும் தாயகமாய் விளங் கியது சங்க காலப் பண்பாடு. எனவே அக் காலத்து மகளிரின் தன்மைகளை ஆராய்வதே தகுதியுடையதாகும். மேலும் நாலாம் சங்கப் பொன் விழாவில் மூன்றும் சங்கப் பொற் காலத்துப் பெருமையை எடுத்துரைப்பது பொருத்தமானதாகும். பண்டைத் தமிழ் மக ளிரை நினைத்த மாத்திரத்தே பெரும்படை போன்ற மகளிர் தொகுதியே மனக்கண் முன் வந்து நிற்கின்றது. அக்கூட்டத்திற் சிறப்புறத் தோன்றி முன்னிற்போருள் ஔவை போன்ற பொண்பாற் புலவர் பலர்; கோப் பெருந்தேவி, பூதப் பாண்டி யன் மனைவி போன்ற அரசியர் சிலர்; கண் ணகி, மணிமேகலை போன்ற காவியத் தலைவி யரும் உளர். இவர்தம் பண்புகளையெல் லாம் எடுத்தியம்புதல் இச்சிறு கட்டுரையில் இயலாது. எனவே இங்கொன்றும் அங் கொன்றுமாக வீட்டு வாழ்க்கையிலும், நாட்டு வாழ்க்கையிலும் விளங்கிய தமிழக மகளிரின் தன்மைகளைக் காண்போம்:

வீட்டு வாழ்க்கை

மனையுறை மகளிர், உயிரென விளங்கிய தம் கணவரைப் பேணியும், பெண்ணின் பெருமையாய தம் திண்ணிய கற்பினைக் காத் தும், மயக்குறு மக்களை மாண்புற வளர்த் தும், வருந்திவரும் விருந்தினரை யோம்பியும், இடும்பை யெனக் கருதாது குடும்பச் சுற்றத் தைத் தழுவியும், கடவுளை வணங்கியும், கவின் கலை வளர்த்தும் துன்பந்துடைத்து இன்பம் பெருக்கினர்.

கணவனைப் பேணல்: கணவன் மனைவி யென்ற இருவரின் தொடர்பைப் பல் வகை உவமைகளாற் கூறுவர் புலவர்.

''உடம்பொடு உயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு''
—(குறள், 1122)

என்றுரைப்பர் வள்ளுவர். இதையே— கணவனின் இன்றியமையாமையை—மற் றோர் உவமையால் நற்றிணை குறிக்கும்.

''நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நங்கையந் தருளி''

என்று தலைவியின் கூற்றில் திகழும் கருத்து, கணவனையிழந்த மனைவியின் வாழ்க்கை வறண்டு விடுவதையும் விளக்குகிறது.

''கணவனை யிழந்தோர்க்குக்
காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி''

என்ற சிலப்பதிகார அடிகளால், செல்வங் கொழிக்கும் அரசியின் வாழ்வும், கணவனி

றக்க வறண்டு விடுவதை அறியலாம். அதே போல் அறிஞர் தடுத்தும் உடன்கட்டை யேறத் துணிந்த பூதப் பாண்டியன் மனைவி யின் செயலும் இதனை வலியுறுத்தும், அலுத்து வந்த ஆருயிர்க் கணவனுக்கு அறு சுவை உணவளித்து மகிழ்வது மனைவியின் முதற் கடமையாகும்.

"நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டு"
"குய்குரல் மலிந்த கொழுந்துவை யடிசில்"
"ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி"
"மோட்டிரு வராஅல் கோட்டுமீன்
கொழுங்குறை"

போன்ற அடிகள் அவர்களது அட்டில் தொழில் வன்மையைக் காட்டும். தாம் சமைத்ததை "இனிது! இனிது!" எனக் கணவர் சுவைத்துண்பதைக் கண்டு அம்மக ளிர் மட்டிலா மகிழ்ச்சி யடைவர் என்பதை,

"தான்றழுந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்
முகனே" —(குறு. 167)

என்ற குறுந்தொகையடிகள் எடுத்துக் காட்டும் இத்தகைய உண்மையன்பினாலே, வன்மைமிக்க ஆடவரையும் மென்மைமிக்க மகளிர் பிணித்து விட்டனர்.

"மென்மை மகளிர்க்கு வணங்கி வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை"
—(புறம். 68)

என்று சோழன் நலங்கிள்ளியைப்பற்றிப் புற நானூற்றில் கோவூர் கிழார் கூறுவர்.

"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணரும் உட்கும்என் பீடு"
—(குறள், 1088)

என்றுரைக்கும் திருக்குறளும். இவ்வாறு வீட்டு வாழ்க்கையில் அன்பின் கயிற்றால் மக ளிர் பிணித்து விடுவதை வேற்றாரும் மாற்றா ரும் காணுங்கால் அடிமைப்படுத்துவது போன்றே தோன்றும் போலும்! இக் கருத்தைக் குறுந்தொகையிலே மனைவியின் மாற்றாளான பரத்தையின் கூற்றில் வைத் துக் கூறி மகிழ்வர் ஓர் ஆண்பாற் புலவர். (கணவன் தன் மனைவியிடத்து)

"கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்....." —(குறு. 8)

எனக் குறிக்கும் அவ்வடிகள்! குறிப்பாக வீட்டு வாழ்க்கையில் எவ்வாறாயினும், சிறப் பாக நாட்டு வாழ்க்கையாம் வெளி வாழ்வில் மனையுறை மகளிரது ஏவலுக்குட்பட்டு வினையாண்மையை ஆடவர் இழத்தல் கூடாது என்று எச்சரிக்கை விடுப்பர் "பெண் வழிச் சேறல்" என்ற அதிகாரத் தில் வள்ளுவனாரும். அதனாலன்றே அவ்வதி காரமும் இல்லறவியலிலன்றி பொருட் பாலில் வைக்கப் பெற்றது! இவ்வற வுரையை ஆடவரேயன்றி மகளிரும் நன் குணர்ந்திருந்தனர். இதனைத் தலைவி மறந் தாலும் துணையாய தோழி நினைவுறுத்து வாள்.

"வினையே ஆடவர்க் குயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென
நமக்குரைத் தோருந் தாமே" (குறு.—135)

என்னும் அறவுரை ஒரு பெண்ணின் கூற் றுத்தானே!

மக்கட் பேணல்: நம் நாட்டில் இன்று போல் என்றுமே செல்வப் பெருமையும் இல்லா வறுமையும் ஒருங்கே யிருந்தன. மாடமாளிகைக் கூடகோபுரங்களிடையே கூரை குறைந்த குடிசைகளும் கிடந்தன வென்று சங்கப் பாடல்களால் அறியலாம். விதியின் சதியால் பொருட்செல்வம் குறைந்த விடத்தே மக்கட் செல்வம் நிறைந்து தோன் றும். காதல் வாழ்க்கையைக் கவின் பெறத் தொடங்கிய கண்ணகிக்கு மகப்பேறு குறிக் கப்படவில்லை. மாதவிக்கும் ஒரு தனி மகளேயாவாள் மணிமேகலையும். ஆனால் வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் மனை வியோ "மருங்கிற் கொண்ட பல் குறு மாக் களை" யுடையவளாகக் காட்டப் பெறுகின் றாள். அம்மடந்தை, உணவின்மை காரண மாகத் தன் குழந்தைக்கு இயற்கையுணவாய பால் கொடுக்க இயலாது போகவே, செயற் கையுணவாய சோற்றினை நாடிச் சென்ற

அக்குழந்தை உள்ளே வெற்றுக்கலனே யிருக்கக் கண்டு பசியால் அழ, அவ்வழு கையை நிறுத்த மறப்புலி கூறிப் பயப்படுத் திப் பார்த்தாள்; மதியங்காட்டி நயப்படுத்த வும் இயலாது, "நின் தந்தை வந்தால் எங்ங னம் முகத்தில் சினங்கொள்வாய் காட்டு!" எனக் கேட்டும் பார்த்தாள். குழந்தையின் பசித்துன்பங் கண்டு, கண்கலங்கி நிற்கும் காட்சி ஒருபுறம் (புறம் 160). இதற்கு முற்றிலும் மாறுக மற்றொரு காட்சியும் உண்டு. செல்வக் குடியானதால் பெற்ற தாய் ஒருபுறம் வீற்றிருக்க, வளர்ப்புத் தாயான செவிலித்தாய், தேன் கலந்த பாற் சோற்றினைப் பொற் கிண்ணத்தில் வைத்துக் கொண்டு சிறுகோலோச்சி அச்சுறுத்தியும், செல்வக் குழந்தையாதலின் பசியின்றி உண்ண மறுத்துக் காற்சிலம்பதிரத் தோட் டப் பந்தலின் முன்னும் பின்னுமாக ஓடி யாடும் காட்சி மற்றொருபுறம்.

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென் றேக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற் சிலம்பொலிப்ப.....
.....பந்தரோடி (நற். 110)

என்னே இவ்விரு காட்சிகளின் இருவேறு தன்மைகள்! முன்னையது குழந்தையின் பசியைப் போக்கும் முயற்சி. பின்னையது குழந்தைக்குப் பசியையுண்டாக்கும் முயற்சி. ஆயினும், வாழ்விலும் தாழ்விலும், தமிழகத் தாய்மார், தம்மக்கள் சான்றோர் எனக் கேட்ட போதுதான் ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்தனர்; தாய்மையின் தகை மைக்கும் முரணைப் பிறப்பொத்த தம்மக்க ளுள் அறிவுடையோரையே மிகவும் போற் றின ரென்பதை,

"பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்"
(புறம். 183)

என்ற புறநானூற்றடிகள் விளக்கும். அதுமட்டுமா? இதற்கு முற்றிலும் மாறு கத் தன் மகன் சான்றோர் பழிக்கும் தீயோன் என்றுல் அதைக் கேட்டு வாழ்வதைவிட— அவனைப் பெற்ற வயிறு பற்றி யெரிய அவ் வயிற்றுடன் வாழ்வதைக் காட்டிலும்— அவ்வயிற்றையே கிழித்துப் பழிவாங்கிப் பின் னர் இறப்பேன் என முழங்கினள் ஒரு தாய் என்றுல் தமிழகத் தாய்மாரின் தாய்மைக் கடமையுணர்ச்சிதான் என்னே!

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோலா அதனகத்து உன்னின்ற னனே!
• • •
எம்மில் செய்யா அரும்பழி செய்த
கல்லாக் காளை நின்னின்ற னனே!"
(தகடூர் யாத்திரை)

கல்லாக் காளை யெனுந் தொடர் அக்கா லத்திற் கேற்ப வெற்றி வீரங்கல்லாத காளை யெனப் பொருள் பெறினும் இக்காலத்திற் கேற்பப் பல வாய்ப்புக்களைப் பெற்றுங் கல்வி பயிலாக் காளை யென்றும்—கல்வி யில்லை யென்றுலும் அறிவு ஒழுக்கம் கல் லாக் காளை யென்றும் பொருள் படுமன்றே! இன்றும் தாயுள்ளத்தில் இவ்வுணர்ச்சி யெழு மேல் எப்படித் திருந்திவிடும் இளைஞ ருலகம்!

விருந்தோம்பல்: கண்ணைக் கவரும் வண்ணப்பலகையாலும், மூக்கையீர்த்து நாக்கூறச் செய்யும் நறுமணத்தாலும், காதைத்துளைக்கும் கானப்பாட்டாலும்ஊர்க் குள் நுழைவோரை வாவென்றழைக்கும் உண்டுறை உணவு விடுதிகள் இல்லாக் காலத்தே, வாணிபம்பற்றியோ வேறு வினை பற்றியோ வீடுதேடி வரும் விருந்தினர்க்கு (அக்காரணம்பற்றியே அக்காலத்தில் "விருந்து" என்ற சொல் "புதுமை" எனப் பொருள் பட்டது) வயிறார உண வளித்து, உடலார உறைவிடங் கொடுத்து, உள்ளங் குளிர, புன்முறுவல் பூத்த இன் முகங் காட்டி, இனியவை கூறி விருந்தோம் பல், வீடுதோறும் இல்லறத்தாரின் இன்றி யமையாக் கடமையாய் இலங்கிற்று. வறு மையில் வாடியோருங்கூடக் குப்பைக் கீரை கொய்து உப்பில்லாமல் அட்டேனும் விருந்

தோம்பினர் எனப் பழம் பாடல்கள் கூறும். மாதரியின் விருந்தோம்பல் மாட்சியைச் சிலப்பதிகாரத்திற் காணலாம். வீடுதோறும் கீரையும், காய்கறிச் செடி கொடிகளும் இருந்தன வென்பதை,

"..... சிற்றி லாங்கண்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்" (புறம். 116)

என்னும் அடிகளால் அறியலாம்.

"விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை" என்று கண்ணகி இழந்த பல வின்பங்களைக் குறியாது இதையே குறிப் பாளாயின் இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுள்ளே விருந்தோம்பல் எத் துணைச் சிறப்புற்றது என்பதையறியலாம். விருந்தோம்பலால் விருந்தினர்க்கேயன்றி வீட் டோராகிய தலைவன் தலைவியர்க்கும் தனிப் பட்டதோர் அரும்பயனுண்டு. இது தம் முளேதோன்றும் ஊடல் நீங்கிக் கூடுவ தற்குத் தக்க வாய்ப்பளிக்கின்றதன்றே! ஆகையால்தான் ஒல்காப்புகழ்த் தொல்காப் பியனும் இதனை ஊடல் தீர்க்கும் வாயில் களுள் ஒன்றாகக் கண்டு வைத்தார். என்னே விருந்தோம்பலின் பெருந்தன்மை!

கலையறிவு: இல்லறக் கடமைகளோடு மகளிர், கலை பல கற்றுமிருந்தனர்; கலை யுணர்ச்சி பொருந்தத் தம்மை ஒப்பனை செய்து கொள்வர்; தம் சிறுவர் சிறுமியர்க் குக் கற்பனை நிறைந்த ஒப்பனை செய்து மகிழ் வர்; ஓவியம் தீட்டல், காவியம் புனைதல், ஆடல் பாடல் ஆகிய கலைத்துறைகளிலும் சிறந்து விளங்கினர் எனச் சங்கப் பாடல் கள் சான்று பகரும். மாதவியின் ஆடல் பாடல் திறன், கலைத்திறனுக்கோர் மலைச் சிகரம். தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயக்கி யுறங்கச் செய்தாள் என்று அகநானூற்றுப் பாட்டொன்று கூறும். இவ்வருங்கலை களேயன்றி இற்றைக் காலத்தில் "குடிசைக் கைத்தொழில்கள்" எனப் பெரிதும் பேசப் படும் நூல் நூற்பு, ஓலை வேலை முதலியன நடைபெற்றன என்பதைப் "பருத்திப் பெண்டிர்", "இரும்பனங் குடை" முத லிய சொற்றொடர்கள் விளக்கும். வீட்டுப் பொருள்கள் தோட்டப் பொருள்களான பனை தென்னை முதலியவற்றின் இளங்காய் கள் முதலியவற்றுல் சிறுதேர் முதலியன சிறார்க்குச் செய்து கொடுத்தனர். மாதரி யின் விருந்தினராய்ச் சென்றவிடத்து, கண்ணகி, தன் கணவன் அமர்ந்துண்ண, ஆயர் மகளிர் அருந்திறலோடு பனங்குருத் தோலையால் செய்த அழகிய பாயினை இட் டாள் எனப் பின்வரும் சிலப்பதிகார அடி கள் சித்தரிக்கும்.

"தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசு....."

இயற்கையோடியைந்த இனிய வாழ்வு: பண்டைக்காலத்துத் தமிழக மகளிர் இயற்கையோடியைந்த இனிய வாழ்வு நடத் தினர். சிறுமியர் சிறுவரோடு ஆற்றேரங் களிலும் குளக்கரைகளிலும் நீராடியும் நிழலிலிருந்தும் ஆடிப்பாடி மகிழ்வர். சிறு மியர் கரையிலிருந்து ஆரவாரம் செய்து பாராட்டிப் புகழுமாறு சிறுவர் குளக்கரை யிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியேறி, நீரில் வீழ்ந்து குளத்தின் அடிவரை பாய்ந்து அடிமண் கொண்டு கரைசேர்ந்து வெற்றி கொண்டாடி மகிழ்வர் எனத் தொடித்தலை விழுத்தண்டினர் (புறம் 243) புறநானூற் றுப் பாட்டொன்றில் எடுத்துக் காட்டுவர். இளம் பருவத்தேயே ஆடவர் வெற்றிகாண ஊக்கமூட்டியவர்கள் மகளிர் என்பது இத னால் விளங்குகின்றதன்றே! இன்னும், ஆற் றங்கரை மணலில் பாவை விளையாட்டு, கடற்கரையில் நண்டுகளைப் பிடித்தாட்டும் அலவன் ஆட்டு, மணல் வீடு கட்டல், சிப்பி முதலியவற்றோடு விளையாடல் ஆகிய வற்றில் மகளிர் ஈடுபடுவர். பருவ மகளிரும் நல்ல காற்றோட்டமுள்ள பரண்மீதிருந்து பயிர் காத்தனர் என்றும், முழுமதி நன்னாட் களிலும், மாலை நேரத்திலும் ஆடவரும் மக

ளிருமாகக் கூடி வட்டமாய் நின்றும் கைகோத்தும் குரவைக்கூத்தாடுவர் என்றும் அறிகின்றோம். செல்வப் பெண்டிரும் மாலை நேரத்திலும், நிலவுக்காலத்தும், காற்றினையும், முழுநிலவினையும் துய்க்க நிலாமுற்றங்களிலிருந்து மகிழ்வர்.

இறை வழிபாடு : இவ்வாறு இயற்கையோடு வாழ்ந்த மகளிர் இயற்கையின் உருவாய இறைவனையும் பலவகையால் தொழுதனர்; சிவன், திருமால், குமரவேள், புத்தர், ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர். வீட்டிலும் மகளிர் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் பொழுதறிந்து விளக்கேற்றி, இருள் போக்கி ஒளிதரும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென நெடுநல்வாடை கூறும்.

நாட்டு வாழ்க்கை

இவ்வாறு வீட்டு வாழ்க்கையை விளக்கும் மகளிருட் சிலர் நாட்டின் நலத்திலும் நாட்டங்கொண்டு வெளி வாழ்க்கையிலும் வெற்றி கண்டனர்.

அறிவும் ஆற்றலும் : நாடுவிட்டு நாடு சென்று நயம்படத் தூதுரைத்தனள் ஔவை மூதாட்டி. வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனின் மாபெரும் மன்றத்திலும் தானுகவே தன் வழக்கைத் திறம்படக் கூறிய கண்ணகியின் சொல்வன்மை போற்றற்குரியது. கரிகாற் சோழனும் பெருஞ் சேரலாதனும் வெண்ணிப் போரிற் பொருதபோது வளவன் எய்த வாளி, சேரனது மார்புவழிச் சென்று, புறத்திலும் புண் செய்துவிட அம்முதுகுப்புண், இழுக்குக் குரிய புறப்புண்ணன்றி விழுப்புண்ணே யெனினும் புறப்புண்ணுகவே கொண்டு நாணி, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான் சேரன். அதே சமயத்தில் பலரும் போற்றிப்புகழ வளவன் தன் வெற்றியைக் கொண்டாடினன். வெற்றி, பகைவனின் பண்பையும் மறக்கச்செய்து வெறியாக மாறுவது உலகத்தியற்கை. அம்மாபெரும் வெற்றி முழக்கக் கூட்டத்திலே பகைவனைப் பாராட்டும் பண்பு ஒரு பெண்பாற் புலவரிடத்துக் காணப்பட்டது. வெண்ணிக்குயத்தியார் எண்ணித் துணிந்து எடுத்துரைத்தார் :

"வென்றோய்! நின்னினும் நல்லனன்றே
* * *
மிகப்புகழு லக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!"
(புறம். 66)

அவ்வம்மையினது அறிவும், ஆற்றலும், அஞ்சாமையும், நடுவு நிலைமையுந்தான் என்னே! இத்தகைய கல்வித்திறனேயன்றிப் பொது அறிவும் இயற்கையிலே பெற்று விளங்கினர் தமிழக மகளிர். பொற்கிண்ணத்துத் தேன்கலந்த பாற் சோற்றை உண்ண மறுத்துச் செவிலித்தாய்க்கு ஓட்டங்காட்டிய மேற்குறிக்கப்பெற்ற செல்வப் பெண்ணுங்கூடத் திருமணத்திற்குப் பிறகு எக்காரணத்தாலோ கணவனது பொருள் வளம் சுருங்கிவிடத் தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ் சோற்றுணவையுங் கொள்ள விரும்பாது தற்கொண்டான் வளத்திற் கேற்ப நாளில் ஒரு வேளை உணவே உண்ணும் நிலையைக் கண்ட செவிலித்தாய் அவளது அறிவை வியந்து பாடியதாகக் காட்டும் அந்நற்றிணைப் பாட்டு நயத்தற்குரியது :

"..... .....பந்தரோடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறனுற் றென்று
கொடுத்த தந்தை கொழுஞ் சோறுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே
(நற். 110)

என்பது அப்பகுதி. அவள் அறிவும் ஒழுக்கமும் எங்கே கற்றாள்? பள்ளியிலும் கல்லூரியிலுமல்ல—வாழ்க்கைப் பள்ளியில்—தமிழகப் பண்பாட்டுப் பள்ளியில்—குடும்பக் கல்லூரியில் கற்ற அறிவு—பெற்ற ஒழுக்கம். இத்தகைய பொது அறிவுடன் வாழ்க்கையை

நடத்தினால்தான் ஆடவர்க்குக் கவலையும் இராது—அக்கவலையின் அறிகுறியாகிய நரை யும் வராது. ஆடவரின் கவலைக்கு **முதற் காரணம்** அறிவற்ற மனைவியே என்று பொருள்படப் பாடினர் பிசிராந்தையார்.

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும்
நிரம்பினர் (அறிவால்)

என்பது அப்பாட்டு (புறம். 191).

துறவும் தொண்டும் : தன்னலங் கரு தாது மக்கள் நலங் கருதி மக்கள் தொண் டாற்றிய மணிமேகலை துறவுக்கும் தொண் டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. தனி வாழ்க்கை தானாகவே அமைந்துவிட்ட கன் னிப் பெண்களும் தயங்காது தொண்டாற்ற முன்வரலாம் என்பதைக் காட்டும் அவளது அரிய வாழ்வு " உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே " என உணவுக் கொடை புரிந்தும், சிறைக் கோட்டமெலாம் அறக் கோட்டமாய் மாற அருங் கனவு கண்டும் பெருந் தொண்டாற்றிய மங்கை மணி மேகலை.

வீரம் : ஆடவரைப் போன்றே முது குடிமகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி யுண்டு என்பதை,

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கு மறம்மிகுத் தன்று"

என்ற மூதில் முல்லை யிலக்கணச் செய்யுள் குறிக்கும். இவ்விலக்கணத்திற்கு இலக்கிய மாக எண்ணிறந்த பாடல்கள் புறநானூற் றில் உண்டு. கணவனும் தமையனும் களத் திலிறக்க, போர்க்கோலம் புனைவித்துப் போருக்கனுப்பிய தாயின் வீரம் (புறம். 279), நரைமூதாட்டி தன் முதுமைப் பருவத்து அருமையாய்ப் பெற்ற ஒரு தனிமகனும் போரிலிறக்க வருந்தாது ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரம் (புறம். 277) இப்பாடல்களிற் பொலிந்து தோன்றும்.

இவ்வாறு வீட்டிலும் நாட்டிலும் புகழு டன் பொலியும் மகளிர், தமக்கு மனைவிய ராய் வாய்ப்பதையே பெரும் பேறுகக் கருதி னர் ஆடவர் என்னும் கருத்து, குறுந் தொகைப் பாட்டொன்றிற் சிறந்து விளங் கும். ஒரு தலைவன் தன்னூர்ப் பெருந் தெரு வில் செல்லும் போதெல்லாம் பலரும் அவ னைச் சுட்டிக் காட்டி, "நம்மூர் நல்லாள் இன்னளின் கணவன் இதோ செல்கின் றான் !" எனக் கூறுவது, சற்று நாணத்தைத் தருவதென்றாலும் அதனையே பெரும் பேறுகக் கருதினளும் !

"..... அரிவையைப்
பெறுக தில்லம்ம யானே பெற்றாங்கு
அறிக தில்லம்ம இவ்வூரே மறுகில்
நல்லோள் கணவன் இவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே"

(குறு. 14)

என்ற அளவுக்குத் தமிழக மகளிர் தம் கண வன்மாருக்குப் பெருமை தேடித் தந்தனர்.

வாழ்ந்தோங்குக தமிழக மகளிரின் தனிப் பெரும் பண்பாடு.



திருக்குறளே நம் தேசீயப் பாடல்

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

★

'தேசீயப்பாடல்கள்' என்ற பொருள் பற்றி இந்தப் பொன்விழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதவேண்டுமென்று தலைவர் திரு. பி. டி. ராசன் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

நான் காந்தியடிகள் நடத்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு, அதற்குப் பயன்படக்கூடிய பல தேசாபிமானப் பாடல்களை இயற்றி, அதனால் 'தேசீயக் கவிஞன்' என்று பெயர் பெற்றதால், என்னைத் 'தேசீயப்பாடல்கள்' என்பதைப் பற்றிக் கட்டுரை எழுதப் பணித்துள்ளார்கள் என்பது தெரிகிறது.

'தேசீயப் பாடல்' என்பது அன்னிய ஆட்சியினின்றும் விடுதலை பெறுவதற்கென்று தேச மக்களின் நாட்டுப் பற்றைத் தூண்டிவிடுவதைமட்டும் குறியாகக் கொண்டது. போர் வீரத்தைப் புகட்டுவதே அதன் நோக்கம். அந்தப் போர், ஆயுதப் போராகவும் இருக்கலாம், சாத்விகப் போராகவும் இருக்கலாம். எப்படியும் எதிர்ப்பு மனப்பான்மையை உண்டாக்கி, அந்த எதிர்ப்பினால் வரக்கூடிய துன்பங்களை ஏற்றுக்கொள்ள மக்களைத் தயாராக்குவதே 'தேசீயப் பாடல்களின்' குறிக்கோள்.

இப்படிப்பட்ட தேசீயப் பாடல்கள் போரோ அல்லது போராட்டமோ நடக்கின்ற காலங்களில் மட்டுந்தான் பயன்படும். அவை எவ்வளவு அழகான கவிகளாக அமைந்திருந்தாலும் சமுதாயத்துக்குச் சாசுவதமான இலக்கியங்களாக முடியா.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், சிறிது காலத்துக்கே பயன்பட்டுப்பின் பயனற்றவையாகிவிடுகின்ற தேசீயப்பாடல்களை விளக்கிக்கொண்டிருப்பதைவிட, மனித வர்க்கத்துக்கே என்றென்றும் பயன்படக்கூடிய தேசீயப் பாடல்களுக்கு ஊற்றுக்கண்ணாகிய திருக்குறள் பாடல்களைப்பற்றி எழுதுவது, தமிழுக்கு மறுமலர்ச்சி நாடுகின்ற 'தமிழ்ச் சங்கப் பொன்விழா' மலருக்குப் பொருத்தமாகும்.

ஆம்; திருக்குறளே தமிழ்மக்களின் தேசீயப் பாடல். எந்த மொழி பேசும் எவருக்கும் எப்போதும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் மாற்றுச் சொல்லமுடியாத நல்லறிவைப் புகட்டும் திருக்குறள் தமிழ் மொழியில் இருப்பது தமிழின் தவமேயாகும். அப்படிப்பட்ட திருக்குறளைத் தமிழர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லையானால், மற்றவர்கள் அதன் பெருமையை எப்படி அறிவார்கள்?

நெடுங்காலமாகத் திருக்குறளிலுள்ள பல குறள்களுக்குத் திருவள்ளுவருடைய கருத்துக்கு முற்றிலும் விரோதமான உரைகளே போதிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொருவரும் தம் மனம்போனபடியெல்லாம் திரித்து உரை கூறுகின்றார். சிலர் மிகவும் குதர்க்கமாகப் பதங்களைப் பிரிக்கிறார்கள். எப்படிப் போலவென்றால், ஒரு குடிகாரன் 'ஊக்கமது கைவிடேல்' என்ற மூதுரையை 'ஊக்கம்=ஊக்கம் உண்டாகக்கூடிய, மது=மதுபானத்தை, கைவிடேல்=விட்டுவிடக்கூடாது' என்று பிரித்துப் பொருள் சொன்னதுபோல்.

திருக்குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைகளைக் கண்டறிந்து அவற்றை மக்களுக்குப் போதிப்பதே தமிழுக்கு மறுமலர்ச்சி உண்டாக்க நல்ல மார்க்கம். ஆதலால் திருக்குறளே நம் தேசியப் பாடல்களாகத் தெருவெல்லாம் முழங்கவேண்டும்.

திருக்குறளுக்குக் கிடைத்த பழைய உரைகளுள் பரிமேலழகர் உரைதான் மிகவும் சிறந்ததாகக் கொள்ளப்பட்டது. ஆனால் அவரும் பல இடங்களில் திருவள்ளுவர் கருத்துக்குச் சிறிதும் ஒவ்வாத உரைகளைத் தந்துவிட்டார்.

பரிமேலழகர் நாம் வணங்கவேண்டிய மிகவும் பெரியவர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங்களுக்குள் தலை சிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திருக்காது. மூலக் குறள்களின் வைப்பு முறைகளும் தடுமாறிச் சிதைந்து கிடந்த திருக்குறளைச் செப்பனிட்டுத் தந்த அழியாப்புகழ் அவருக்கே உரியது. ஆனாலும் என்ன? அவரும் அவருக்கு முன்னிலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைப் பின்பற்றி, உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்துவிட்டார் என்பதை எடுத்துச் சொல்லக்கூடாதா? 'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றம்தான்' என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக்கொண்டால் என்ன? பரிமேலழகர் மிகப்பெரிய உரையாசிரியர்தாம். ஆனால் திருக்குறள் அவரைவிட மிகப்பெரிய விஷயம் அல்லவா? பரிமேலழகர்மீது நமக்குள்ள பாசத்தால் திருக்குறளுக்குத் தீங்குவரச் செய்யலாமா?

திருக்குறளுக்கு உரை சொல்லும்போது, திருவள்ளுவர் எதைக் கருதியிருக்கிறார் என்பதை ஆராய்ந்தறிந்து சொல்ல வேண்டும். திருவள்ளுவர் கருத்தை அறிந்து கொள்ள முடியாமல் சொந்த யுக்தியைக் கொண்டு உரை செய்துவிட்டாலும், திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டாரோ அதைச் சொல்லிவிடாமலாவது உரை காண வேண்டும். பரிமேலழகர் உரையில் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் அவர் எண்ணுதை உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பதுமட்டுமன்றிச் சில இடங்களில் திருவள்ளுவர் எதைச் சொல்லவே மாட்டாரோ அது உரையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டார் என்பது உண்மையை நாடுகின்ற எல்லோருக்கும் எளிதிற் புலனாகும். திருக்குறள் முழுவதிலும் மிகவும் உச்சமான அறவொழுக்கம் தான் சொல்லப்படுகிறது. அற ஒழுக்கத்துக்கு மாறான எதையும் திருவள்ளுவர் சொல்லமாட்டார் என்ற ஒன்றே திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கமாட்டார் என்ற உணர்ச்சியை உண்டாக்கும்.

திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூற முடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையாகச் சொல்லியிருப்பதை நிரூபிக்க ஓர் உதாரணத்தை மட்டும் ஆராய்வோம்:

உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற முறையிலாவது அரசனுக்கு அரசன் என்ற முறையிலாவது ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால், முதலில் அந்த விவகாரத்தைச் சமாதான முறையிலே தீர்த்துக்கொள்ள முயலவேண்டும். அது முடியாமற்போனால் சிறிது விட்டுக் கொடுத்துத் 'தானம்' என்ற முறையிலாவது தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். அதுவும் முடியாவிட்டால் 'பேதம்' என்ற முறையில் 'எதிரிக்குச் சொல்லக்கூடியவர்களைக் கொண்டு அவன் மனத்தைப் பேதித்து இளகும்படி செய்ய முயல வேண்டும். அதுவும் முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்ட பிறகுதான் 'தண்டம்' என்ற போர் முறையில் இறங்க வேண்டும். இதைத்தான் சாம, தான, பேத, தண்டம் என்று சொல்லுவது. இன்றளவும் உலகத்தில் தோன்றிய எல்லா இலக்கியங்க

ளும், அறிஞர்களும் போதித்து வந்திருக்கிற செயல்முறைக்கான நல்லறிவு இதுதான். இதற்கு முற்றிலும் விரோதமாக, முடியுமானால் முதலில் உடனே போர் தொடுத்துத் தண்டோபாயத்தால் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். அப்படிப் போர் செய்ய முடியாவிட்டால் மட்டும் பேதம், தானம், சாமம் என்ற மற்ற மூன்று உபாயங்களில் ஒன்றால் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லியிருப்பாரா? சொல்லியிருக்கவே மாட்டார் என்றுதான் திருக்குறளைச் சிறிதேனும் அறிந்த யாரும் சொல்லுவார்கள். ஆனால் திருவள்ளுவர் இப்படியே சொல்லியிருப்பதாகப் பரிமேலழகர் சொல்லுகின்றார். அதுவும் மிக்க அசம்பாவிதமாகச் சொல்லத் தகாத இடத்தில் சொல்லுகின்றார்.

அது எங்கே சொல்லப்படுகிறது, எப்படிச் சொல்லப்படுகிறது என்பதைப் பாருங்கள்: காரியம் செய்யவேண்டிய முறையைப் பற்றியனவாக 'வினைத் தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல் வகை' என்று மூன்று அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 'வினைத் தூய்மை' என்ற அதிகாரம் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்யப்போகிற காரியம் குற்ற மற்றதா என்பதை முதலில் ஆராய்ந்து அறிந்து கொண்ட பின்பே அதைச் செய்ய முயலவேண்டும் என்ற அறிவைப் புகட்டுவது. எவ்வளவு இலாபமுண்டாக்கக் கூடியதானாலும் பழிபாவங்களான எதையும் செய்யக்கூடாது என்பது இவ்வதிகாரத்தின் போதனை. அப்படி ஆராய்ந்து பார்த்துத் தூயவினைதான் என்று கண்டபின் அதைச் செய்து முடிக்கவேண்டிய காரிய வைராக்கியத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் புகட்டுவது 'வினைத்திட்பம்' என்ற அடுத்த அதிகாரம். அதன் பிறகு செய்யப் புகுந்த காரியத்தை எப்பொழுது செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும், யாரைக்கொண்டு செய்யவேண்டும், எங்கே செய்யவேண்டும் என்பனபோன்ற விவரங்களைப் புகட்டுவது 'வினைசெயல் வகை' என்ற அதிகாரம். இந்த 'வினைசெயல் வகை' என்ற அதிகாரத்திலுள்ள மூன்றுவது குறளுக்கு உரை சொல்லும்போதுதான் பரிமேலழகர், எதைத் திருவள்ளுவர் சொல்லவே மாட்டாரோ அதைச் சொன்னதாகச் சொல்லுகிறார். இந்த அதிகாரத்தின் முதற்குறள்:

> சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
> தாழ்ச்சியுள் தங்குதல் தீது

என்பது. இதன் பொருள்: ஆலோசனை செய்தவன் முடிவு ஒரு காரியத்தை, அது செய்யவேண்டியதுதானு என்று தீர்மானிப்பதுதான். செய்யவேண்டியது என்று தீர்மானித்துவிட்டால் அதன் பிறகு அதைத் தாமதிக்காமல் செய்துவிடவேண்டும். தாமதிப்பது கெடுதி—என்பது.

ஆனால் செய்யவேண்டுமென்று தீர்மானித்த காரியத்தைத் தாமதிக்காமல் செய்யவேண்டும் என்பதற்காக எல்லாக் காரியத்திலும் ஒரே மாதிரியான அவசரம் காட்டிவிடக்கூடாது. ஏனென்றால், செய்யவேண்டியது என்று தீர்மானிக்கிற காரியங்களுள் பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களும் உண்டு. அதனால்:

> தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
> தூங்காது செய்யும் வினை

என்று அடுத்த குறளில் சொல்லுகின்றார். இதன் பொருள்: பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களில் அவசரம் கூடாது, உடனே செய்யவேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது—என்பது.

என்றாலும், பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டும் என்று எண்ணிய காரியத்துக்கும் வாய்ப்பு நேர்ந்துவிட்டால் அதையும் உடனே செய்து விடுவது நல்லது. வாய்ப்பு நேர்ந்தால்தான். வாய்ப்பு நேராவிட்டால் அதற்குரிய தருணம் வருகிறவரை

யிலும் பொறுத்திருந்தே செய்யவேண்டு மென்று அடுத்த குறளில் சொல்லுகின்றார் :

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

இதன் பொருள் : வாய்ப்புக் கிடைத்தபோ தெல்லாம் காரியத்தைச் செய்துவிடுவது நல் லதுதான். வாய்ப்புக் கிடைக்காவிட்டால் காத்திருந்து வாய்ப்பான தருணத்தில் செய்ய வேண்டும்—என்பதே.

மேற்சொன்ன மூன்று குறள்களுக்கும் திருவள்ளுவர் கருதிய பொருள்கள் மேலே சொல்லப்பட்டவைகளாகத்தான் இருக்க முடியும். விதண்டாவாதமாகக் குதர்க்கம் செய்தாலன்றி இந்தக் குறள்களுக்கு வேறு பொருள்சொல்ல மனம் வராது. இந்த மூன்று குறள்களுள் முதலிரண்டு குறள்க ளுக்கும் சரியாக உரை சொன்ன பரிமே லழகர் மூன்றுவது குறளில் 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்று பொருள் செய்து, முன் சொன்னபடி மிகவும் அசம்பா விதமாகத் திருவள்ளுவர் எதைச் சொல்லி யிருக்கவே மாட்டாரோ அதைச் சொல்லி யிருப்பதாகக் கூறுகின்றார்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந் துள்ள உரையைப் பாருங்கள் :

பதஉரை : ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று = வினை செய்யுங்கால் இயலுமிடத் தெல்லாம் போராற் செய்தல் நன்று; ஒல் லாக்கால் செல்லும் வாய்நோக்கிச் செயல் = அஃதியையாவிடத்து ஏனை மூன்று உபாயத் துள்ளும் அது முடிவதோர் உபாயம் நோக் கிச் செய்க—என்பது.

இதற்கு மேலும் அவர் தரும் விசேட விளக்க உரையாவது : 'இயலுமிடம்— பகையிற்றான் வலியறிய காலம். அக்கா லத்துத் தண்டமே நன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாதலின். இயலாவிடம்—ஒத்த காலமும் மெலிய காலமும். அவ்விரண்டு காலத்தும் சாம, பேத, தானங்களுள் அது முடியும் உபாயத்தாற் செய்கவென்றார். அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடைய வேனும் உடம்படுத்தல் பயத்தால் தம்முள் ஒக்குமாகலின். இதனால் வலியான், ஒப் பான், மெலியானென நிலை மூவகைத் தென் பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன'—என்பது.

இந்தப் பதவுரையும் விளக்க உரையும் சேர்ந்து என்ன சொல்லுகின்றனவென் றால் : 'உன்னால் இயலும் போதெல்லாம் முதலில் தண்டோபாயத்தைக் கொண்டே உன் காரியங்களைச் சாதித்துக்கொள்வது நல் லது. ஏனென்றால், அதற்குத்தான் யாரும் அஞ்சுவார்கள். அப்படிப் போர் புரிந்து உன் பகைவர்களை, வெல்லமுடியாதபடி நீ பலவீனனாக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்ற மூன்று உபாயங்களான சாம, பேத, தானங்களில் ஏதாவது ஒன்றன் மூலம் உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுக' என்ற உபதேசத்தைத்தான்.

இதைத் திருவள்ளுவர் சொல்லியிருப்பதா கப் பரிமேலழகர் சொல்லுகின்றார். திரு வள்ளுவர் சொல்லியிருப்பாரா? வட மொழியோ தென்மொழியோ அல்லது பிற மொழிகளோ, எந்த மொழியிலுள்ள எந்த நிலைமைக்காவது எந்த நியாயத்துக்காவது இது பொருந்துமா? எவ்வளவு பலமிருந்தா லும் மானமுடைய ஒருவன் எண்ணத் தகுந்த செயல்முறையா இது? பலம் அதி கரிக்க அதிகரிக்கப் பணிவும் அதிகரிக்க வேண்டும் என்பதல்லவா திருக்குறளின் போதனை? 'ஒழிபியல்' பகுதியில் 'மானம்' என்ற அதிகாரத்தில்,

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

என்ற குறளில் 'வல்லமை மிகுந்தவனாக இருக்கும் போதுதான் வணக்கமுள்ளவனாக அடங்கி நடத்தல் வேண்டும். வல்லமை குறைந்திருக்கும்போதுதான் அதைச் சமா ளிக்க நிமிர்ந்து நிற்கவேண்டும்' என்னும்

நல்லறிவைப் புகட்டுகின்ற திருவள்ளுவர், 'நீ வல்லமை மிகுந்தவனாக இருக்கும் போதெல்லாம் படையெடுத்துத் தண்டோ பாயத்தால் காரியத்தை முடித்துக்கொள்; நீ பலம் குறைந்தவனாக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்றத் தந்திரங்களை மேற்கொள்ளுக' என்று சொல்லுவாரா?

'வினை செயல்வகை' என்ற அதிகாரம் எந்தக் காரியத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதைப்பற்றி மட்டுந்தான் சொல்லுவது. அதுமட்டுமல்ல, 'வினைத் தூய்மை,' 'வினைத் திட்பம்,' 'வினை செயல்வகை' என்ற மூன்று அதிகாரங்களிலும் 'வினை' என்ற பதத்தைச் 'செய்யவேண்டிய காரியம்' என்ற ஒரே பொருளில், மனிதன் மேற்கொள்ளக்கூடிய எல்லாக் காரியங்களுக்கும் பொதுவாகத் தான் சொல்லியிருக்கிறார். இந்த மூன்று அதிகாரங்களிலும் உள்ள முப்பது குறள்களிலும் போரைப் புகுத்திப் பொருள் செய்வதற்கு இடமேயில்லை. போரைப் புகுத்திப் பரிமேலழகர் பொருள் செய்திருக்கிற 'வினை செயல்வகை'யில் மூன்றாவது செய்யுளாகிய,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்
செல்லும்வாய் நோக்கிச் செயல் [கால்

என்ற குறளில் உள்ள எந்தப் பதமும் போரை இழுத்துக்கொண்டு உரை செய்ய இடங் கொடுக்காது. இதற்கு முன்னுள்ள குறள்களிலாவது போரைக் கொண்டு கூட்டிப் பொருள் செய்ய இடங்கொடுக்கக் கூடிய பதமோ கருத்தோ இருக்கின்றதா என்று பாருங்கள். இந்தக் குறளுக்கு முன்னுள்ள இரண்டு குறள்களும் முறையே,

1. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது
2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

என்பன. இவற்றிலும் போரை இழுத்துக் கொண்டு உரை செய்ய இடமில்லை.

இந்த அதிகாரத்தில் போர் புரியத் தூண்டிவிடக்கூடிய இடமே இல்லை என்பது மட்டுமல்லாமல் போரை விலக்கவேண்டும் என்பதே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், போரைப் புகுத்திப் பொருள் செய்ய இடமே இல்லாத குறளுக்குப் போரையே பொருளாகச் சொல்லிவிட்ட பரிமேலழகர், போரையே விலக்க வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்ற குறளுக்குப் போரை நீக்கி எப்படிப் பொருள்கூற முடியும்? அதனால் போரை விலக்கவேண்டும் என்று சொல்லுகிற குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைக்கு முற்றிலும் விரோதமான உரை சொல்ல வேண்டியதாகிவிட்டது.

போரை விலக்கவேண்டும் என்றே சொல்லுகின்ற ஒரு குறளுக்கும் போர் புரியவேண்டும் என்ற கருத்தைப் புகுத்தியிருப்பதைப் பாருங்கள். இதே 'வினை செயல் வகை' என்ற அதிகாரத்தின் ஒன்பதாவது குறள்,

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பது. இதிலுள்ள பதங்களுக்கு நேரான பொருள் என்னவென்றால், நண்பர்களுக்கு நல்லவற்றைச் செய்வதைக் காட்டிலும் விரைவாகத் தக்கது பகைவர்களை ஒட்டிக் கொள்வது-என்பது. இங்குள்ள பதங்களுக்கு இதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் செய்ய முடியாது.

இதை விரித்துச் சொன்னால்: பகைவரை வெல்லுவதற்காகப் பலபேரை நண்பர்களாகக் கட்சி சேர்த்துக்கொண்டு, அவர்கள் முகங்கோணுதபடி அவர்களுக்கு உதவிகளைச் செய்து உபசரித்துக்கொண்டிருப்பதைவிடப் பகைவரையே நண்பராக்கிக் கொள்வது விரைவாகப் பயனளிக்கக்கூடியது என்பதாம்.

இதன் கருத்து: ஒரு பகைவனை வெல்லுவதற்காகப் பலபேரைத் துணை சேர்த்துக் கொண்டு அவர்களைத் தொங்கிக்கொண்டிருப்பதைவிட அந்த ஒரு பகைவனையே நண்பனாக்கிக் கொள்வது நல்லது—என்பது.

இதுதான் இந்தக் குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள். வெகு நல்ல அறிவைப் புகட்டும் இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரையைப் பாருங்கள் :

'வினை செய்வானுல் தன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும்; தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்' என்பது பரிமேலழகர் உரை.

இதில் 'நட்டார்க்கு' என்பதற்குத் 'தன் நட்டார்க்கு' என்று பொருளாகும் போது 'ஒட்டாரை' என்பதற்கு மட்டும் தன் பகைவரோடு ஒட்டாரை' என்று எப்படிப் பொருளாகும்? 'தன் பகைவரோடு' என்பதைச் சேர்த்துக்கொள்ள, இந்தக் குறளில் எந்தப் பதம் இடங் கொடுக்கிறது? எந்தப் பதமும் இடங் கொடுக்காத ஒரு சொல்லைச் சேர்த்துக்கொண்டு சொல்லப்பட்டுள்ள உரை முரண்பட்டுப் போகிறது?

எப்படியென்றுல், ஒருவனுக்குத் தன் பகைவரோடு ஒட்டாராக இருப்பவர்கள் தானே தனக்கு நட்டாராக இருக்கமுடியும்? ஆகையினுல் 'நட்டார்க்கு' என்ற பதத்திலுள்ள 'நட்டார்' ஏற்கெனவே 'தன் பகைவரோடு 'ஒட்டார்' ஆகிவிட்டார்கள். அப்படியானுல் இந்தக் குறளுக்குப் (பரிமேலழகர் சேர்த்துக்கொண்ட 'தன் பகைவரோடு என்ற சொற்றொடரோடு) பொருள் எப்படி விரிகிறதென்றுல், 'தன் பகைவரோடு ஒட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்வது விரைந்ததே' என்றுதான் ஆகி விடுகிறது.

இப்படிப் பொருளற்ற உரை செய்ய நேரிட்ட காரணம், பரிமேலழகர் இந்த அதிகாரத்தின் மூன்றுவது குறளாகிய,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

என்ற குறளில் 'வினை' என்ற பதத்திற்குப் 'போர்' என்ற பொருளைப் புகுத்தி விட்டதேயாகும். அத்துடன் 'ஒல்லும் வாயெல்லாம்' என்பதற்கும் மிகவும் தவருக 'வலியானுய் இருக்கும்போதெல்லாம்' என்று பொருள் கொண்டுவிட்டார். அதனுல் 'செல்லும் வாய்' என்பதற்குச் 'சாம, தான, பேதம்' என்ற மூன்றில் 'செல்லத் தகுந்த ஒன்று' என்று கற்பித்துப் பொருள் கொண்டார். அதனுல் நீதி நூல்களுக்கும் ராஜ தர்மங்களுக்கும் முற்றிலும் விரோதமாக, முதலில் தண்டோபாயத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் அது முடியாவிட்டால் மற்றச் சாம, தான, பேதமாகிய மூன்றினுள் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்.

இப்படித் தவருன உத்திகளை மனதிற் கொண்டுவிட்டதால் இந்த 'வினை செயல் வகை' என்னும் அதிகாரம் போரைப்பற்றியும் அதை நடத்தவேண்டிய முறையைப் பற்றியுமே சொல்லுவதாக எண்ணிக் கொண்டே பொருள் செய்யப் புகுந்திருக்கிறார். அப்படியும் போரை விலக்கிச் சமாதானம் செய்துகொள்வது நல்லது என்ற அறிவைச் சொல்லுகிற அந்தப் பொருளைச் சொல்லமுடியாமற் போய்விட்டது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பதற்குப் 'பகைவனை வெல்லவென்று பலபேரைத் துணை சேர்த்துக்கொண்டு அவர்களுடைய தயவுக்காகப் பரிந்துகொண்டிருப்பதைவிடப் பகைவனையே சமாதானப்படுத்தி நண்பனுக மாற்றிவிடுவது மிகவும் நல்லது' என்பதுதான் திருவள்ளுவர் கருதிய பொருள் என்பதை இந்தக் குறளுக்கு அடுத்த,

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக்
குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

என்ற கடைசிக் குறள் நிச்சயப்படுத்துகிறது. இதன் பொருள்: இடம், பொருள்,

ஏவல் முதலிய வசதிகள் குறைவாக உள்ள வர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங்குவதற் காகப் பயந்து தம்மினும் பலமுள்ளவர்களை எதிர்க்காமல் பணிந்து சமாதானம் செய்து கொள்வார்கள். அதற்காகப் பிறர் குற்றம் சொன்னாலும் பொறுத்துக்கொள்வார்கள் என்பது.

முந்திய குறளில் 'நட்டார்க்கு நல்ல செய்துகொண்டு சண்டைக்குக் கட்சி கட்டு வதைக் காட்டிலும் பகைவருடன் சமா தானம் செய்துகொண்டு அவனை நண்பனாக் கிக் கொள்ளுவது நல்லது' என்று சொன்ன தைத் தொடர்ந்து இந்தக் குறளில் 'பலம் மிகுந்த பகைவனை எதிர்த்துத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அழிவுண்டாக்குவதை விடப் பணிந்து போவதே நல்லது' என்று சொல்லுகிறார்.

ஆதலால் இந்த அதிகாரம் சண்டை செய் யத் தூண்டுவதற்காகச் சொல்லப்பட்ட தன்று. சண்டை வரக்கூடியதாக இருந் தாலும் அதை விலக்கத் தகுந்த முறையில் 'வினை செய்வகை'யை அறியச் செய்வதற் காகவே சொல்லப்பட்டுள்ளது. இந்தச் சண்டையும் ஓர் அரசன் இன்னோர் அர சன்மேல் படையெடுத்துச் சதுரங்க சேனை களைக் கொண்டு நடத்துகிற சண்டையை மட்டும் குறிப்பதன்று. சாதாரண மனிதருக் குள் வரக்கூடிய சண்டைகளையும் குறித் தது. ஏனென்றால் 'வினைத் தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல் வகை' என்ற மூன்று அதிகாரங்களும் பரிமேலழகர் கருதியபடி அமைச்சருக்கோ அரசருக்கோ மட்டும் போர் நடத்தச் சொன்னதன்று. எல்லா இல்லறத்தானுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை.

மதுரை ஜில்லா சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கு லிமிடெட், மதுரை (தென்னிந்தியா)

தந்தி: "சென்கோபாங்கு" தபால் பெட்டி நெ. 14 போன்: 134

கிளைகள்:— தேனி, திண்டுக்கல்

அதிகாரம்பெற்ற மூலதனம்	...	ரூ. 20,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 11,40,000
ரிஸர்வ் பண்டு	...	ரூ. 6,64,000
மற்ற ரிஸர்வ்கள்	...	ரூ. 4,49,000
மொத்த வரவு செலவுகள்	...	ரூ. 1,65,64,000

ஜில்லாவிலுள்ள எல்லா கோவாபரேடிவ் ஸ்தாபனங்களுக்கும் பாங்கர்கள்

மாகாணத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் குறைந்த விகிதத்தில் டிராப்டுகள் வழங்கப்படும்.

எல்லாவிதமான டிபாஸிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிக்ஸட் டிபாஸிட்டுகளின் வட்டி விகிதம் ஒரு வருஷ தவணைக்கு $2\frac{3}{4}\%$ முதல் $3\frac{1}{2}\%$ வரை

விபரங்களுக்கு எழுதவும்

V. அழகப்பன், B.A., B.L.
செக்ரடரி



நாய்க்கர் காலம்

(1350-1750)

டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம். ஏ., பி எச். டி.
வரலாற்றுச் சிறப்பு விரிவுரையாளர், பல்கலைக்கழகம், சென்னை

★

தமிழ் நாட்டின் வரலாற்றில் நாய்க்கர்கள் ஆண்ட காலம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இதன் சிறப்பும் பெருமையும் ஓரளவே மக்களுக்குத் தெரிந்திருக்கின்றன; ஏன் வரலாற்றில் மிகச் சிறந்த அறிவாளிகளும் இதில் இன்னும் அதிக கவனம் செலுத்தவில்லை யென்றே சொல்லவேண்டும். மதுரைமாநகர் கொண்டுள்ள பெருமைகளுக்கெல்லாம் அதைத் தலைநகராகக் கொண்டு நூற்றுக் கணக்கான வருஷங்கள் அரசாட்சி செய்த நாய்க்க மன்னர்களை முன்னிலையில் வைத்து நாம் போற்றவேண்டும். பாண்டி மன்னர்கள் மதுரையில் பல காலம் செங்கோல் ஓச்சினர்கள், சங்கம் நிறுவினர்கள், பல புலவர்களுக்குப் புரவலராய் விளங்கினர்கள், நக்கீரர், மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருந்தகைகளுக்கெல்லாம் ஊன்று கோலாய்த் திகழ்ந்தார்கள் என்பன யாவும் உண்மையே. ஆயினும், பாண்டியரின் பெருமை பலவிதத்தில் நம் கண்ணினின்று மறைந்தது; நாய்க்கர் பெருமையோ என்றும் நின்று நிலவியது. பாண்டியரை நாம் வழக்கமாய் மதுரையோடு இணைத்துக் கூறுவதில்லை. ஆனல் நாய்க்கர் மன்னர்களை நாம் மதுரையோடு இணைக்காமல் பேசமுடியாது. மதுரைப் பாண்டியர் என்று சொன்னலும் பொருந்தும், பாண்டிய மன்னர் என்று கூறினலும் பொருந்தும். ஆனல் மதுரை நாய்க்கர் என்று சொல்லாமல் நாய்க்கர் என்று மட்டும் கூறினல் அது பொருந்தாது. ஆகவே தென்னாட்டின் நீண்ட வரலாற்றின் காலத்திலே, அந்நாட்டின் நடுநாயகமாய் விளங்கும் மதுரைமாநகரோடு நகமும் சதையும்போல் ஒன்றி வரலாற்றின் பக்கங்களை அணிசெய்விப்போர் நம் நாய்க்க மன்னர்களேயாவர்.

'நாய்க்கர்' என்ற சொல் தெலுங்கு நாட்டிலிருந்து தமிழ்நாடு போந்தது என்றாலும், அது 'நாயகர்' என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகவே இருக்கவேண்டும். 'நாயகர்' என்பதற்குத் 'தலைவர்' என்பது பொருள். 'நாயக்கர்' என்பதற்குப் படைத் தலைவன் என்பது பொருளாகும்.

நாய்க்கர்கள் மதுரையில் தங்கள் அரசாட்சியை நிறுவிய காலத்தைப்பற்றி வரலாற்றறிஞர் மத்தியில் பல திறப்பட்ட சந்தேகங்கள் நிலவுகின்றன. ஆனல் அவையெல்லாம் ஒரு சில ஆண்டுகளைப் பற்றியவையே. கடைசியில் கி. பி. 1558-59-ல் விஸ்வநாத நாய்க்கர் தமது அரசாட்சியை மதுரையில் நிறுவினர் என்று வரலாற்று ஆசிரியர்கள் முடிவு கட்டி உள்ளனர். இது ஒருபுறமிருக்க, மதுரையில் நாய்க்கர் ஆட்சி ஏற்பட்ட காலம் இன்னும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றே கொள்ள வேண்டும். விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் ஒரு முக்கிய பாகமாக, மதுரையும் அதன் சுற்றுப்புரங்களும் குறைந்தது கி. பி. 1350-ம் ஆண்டிலேயே திகழ ஆரம்பித்தது. இந்தச் சாம்ராஜ்ஜியத்தின் பிறப்பிற்கு முன்னோடிகளான ஹோய்சாளர்கள் மதுரையில்தான் தங்கள் முழுப்படை வலியையும் வைத்திருந்தார்கள்; இங்கேதான் முகம்மதிய ஆதிக்க

மும் தனது விஷவித்தை ஊன்றியது. இதைத் தடுக்கவே பராக்கிரமசாலியான மூன்றும் பள்ளாள மன்னன் உயிரோடு தோலுரிபட்டார்; இதற்காகவே படை யெழுச்சி நிறுவப்பட்டது. முகம்மதியர் களின் மேல் அவர் வீரன் குமார கம்பணன் கண்ட வெற்றியும் மதுரையில்தான் நிகழ்ந் தது. இவ்வெற்றியின் காலம் கி. பி. 1358 என்று யாவராலும் ஒத்துக் கொள்ளப்படு கிறது. இதிலிருந்து தொடர்ச்சியாக மதுரை அரசு நாய்க்கர்களால் பரிபாலிக்கப்பட்டது. இரண்டாம் தேவராயன் காலத்தில் மதுரை அரசைப் பரிபாலித்த லக்கண்ண உடையார் என்பவரும் மதுரை நாய்க்கரேயாவார். இவர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாடு முழுவதுமே செங்கோல் ஓச்சி வந்தார். கி. பி. 1440-ம் ஆண்டில் பொறிக் கப்பட்ட விஜயநகர் சாசனம் ஒன்றில் இவர் "தென்கடல் மன்னன் லக்கண உடை யார்" என்று குறிக்கப்பட்டிருப்பது நோக் கற்பாலது.

இங்ஙலையில் யோசித்துப் பார்த்தால் நாய்க்க மன்னர்கள் ஏறக்குறைய 400 ஆண்டுகள் மதுரையினின்று ஆண்டிருக்கி ருர்கள் என்பது வெளிப்படை. நாகம நாய்க்கர் காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தி லும், அதன்பின் போந்த விஸ்வநாத நாய்க்கர் காலத்திலும் மதுரை நாய்க்கர் அரசிற்குப் பூரண சுதந்தரம் கொடுக்கப்பட்டதென்ற காரணத்தால், நாய்க்கர் அரசு 200 ஆண்டுகளே மதுரையில் நிகழ்ந்தது என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் மதுரை நாய்க்கர்மேல் விஜயநகர மன்னன் எத்தகைய உரிமை பூண்டிருந்தார் என்பது இன்னும் உறுதியோடு நாம் கூறக்கூடிய தாக இல்லை. கம்பணன், லக்கணன் போன்ற பெரும் தலைவர்களுக்கு இல்லாத உரிமை யும், பெருமையும் பிற்கால நாய்க்கர்களுக்கு இருக்கவில்லை யென்பதையும், பிற்கால நாய்க்கர்களிலும் பலர் விஜயநகர மன்னர் களைத் தங்கள் தலைவர்களாகக் கொண்டிருந் தார்கள் என்பதற்கு மதுரையில் ஆண்ட சொக்கநாத நாய்க்கர் வரை, விஜயநகர மன்னன் மூன்றும் ஸ்ரீரங்கன் வரை, நமக்குச் சான்றுகள் உண்டு என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இஃது இங்ஙனமிருக்க, நாய்க்கர் ஆட்சி யின் சில பொதுப் பெருமைகளைப்பற்றி மட் டும் ஒரு சிறிது கூற விரும்புகின்றேன்:

1. தமிழ் நாட்டில் சங்ககாலம் முடிவ டைந்தபின் ஓர் அந்நியர் ஆட்சிக்காலம் ஆரம்பமாகின்றது. அதைக் களப்பிரர் ஆட்சி என்று கூறுகின்றோம். இவ்வாட்சியினின் றும் தமிழ் நாட்டை மீட்ட பெருமை பாண் டியரைச் சாரும் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனால் பிற்காலத்தில் களப்பிர ரிலும் பெரியதோர் மாற்றலன் தோன்றி னன், முகம்மதியரும் ஐரோப்பியரும் நம் நாட்டில் கால் எடுத்துவைத்த காலம் அது. இவர்களினின்றும் கூடியவரை தென்னாட் டைக் காத்த பெருமை மறுபடியும் இந்த நாய்க்கர்கள் மூலமாக மதுரைக்கே கிடைக் கின்றது. மங்கம்மாள் ஆட்சியின் காலத் திலும், ராணி மீனாட்சியின் காலத்திலும் முகம்மதியர் துன்பம் மிக மேலோங்கி யிருந் தது. தளவாய் நரசப்பையன் உதவிகொண்டு முகம்மதியரைத் தோற்கடித்த பெருமை ராணி மங்கம்மாளைச் சேரும். கடையில் ராணி மீனாட்சி முகம்மதியரால் வஞ்சிக்கப் பட்டதாலேயே நாய்க்க வம்சம் ஒழியலா யிற்று.

2. பழங்காலப் பேரரசர்கள் என நாம் போற்றும் பாண்டியர், சோழர், பல்லவர் கள் ஆண்ட நாட்டைவிட அதிகப் பரப் புள்ளது நாய்க்கர் அரசின் கீழிருந்த நாடு. பொதுவாகப் பேசுமிடத்து, தஞ்சை, திருச் சிராப்பள்ளி மாவட்டங்களைச் சோழரும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைப் பாண்டியரும், செங்கற்பட்டு, தென் ஆர்க் காடு மாவட்டங்களைப் பல்லவரும் ஆண்டு வந்தனர். மதுரை நாய்க்கர்களோ ஏறக் குறைய இந்த மாவட்டங்கள் முழுவதை

யுமே தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர். அதுமட்டுமன்று. கொங்கு, மைசூர் முதலிய பகுதிகளையும் தங்கள் ஆளுகையின் அடியில் வைத்திருந்தார்களென்றால் இது வியப்பை விளைவிக்கக் கூடியதே. ஆயினும் சத்தியமங்கலம், தாராபுரம், ஈரோடு முதலிய மதுரைக்கு அப்பாற்பட்ட பல இடங்களிலும் நாய்க்கர் கல்வெட்டுகளை நாம் காண்கின்றோம்.

3. நாய்க்கர்கள் காலத்திய அரசு தளவாய், பிரதானி, ராயசம் என்ற முக்கிய உத்தியோகஸ்தர்களைக் கொண்டே நடந்தது. ஒரு விதத்தில் இக்காலத்திய மந்திரிசபைபோன்று அவர்கள் வேலைகளைச் செய்தார்கள். சிறந்த பிரதம மந்திரிகள் பெயரைத் இக்கால வரலாற்று ஏடுகளில் எழுதுவதுபோல் அக்காலத்திய தளவாய்களிலும் பலர் திகழ்ந்தனர். தளவாய் அரியநாதர், நரசப்பர் போன்றவர்கள் இத்திறத்தைச் சேர்ந்தவர்களே. பதினேழாம் நூற்றுண்டின் மத்திய பாகத்தில் நாய்க்கர் அரசின் வருஷாந்திர வருவாய் சுமார் 40 லக்ஷம் பொன் என்று கணக்கிடப் பட்டிருக்கின்றது. நெல்சன், ரங்காச்சாரி போன்ற அறிஞர்கள் இதை ஏறக்குறைய $1\frac{1}{4}$ கோடி ரூபாய் மதிப்புள்ளதாகும் என்று கூறுகின்றனர். இதைச் சிறந்த வருவாய் என்றே கொள்ளவேண்டும். நாட்டின் நிலைமையினின்று வருவாயைக் கணிப்பதுபோல், வருவாயினின்றும் நாட்டின் செல்வ நிலைமையை ஒருவாறு கணிக்கக்கூடும்.

4. நாய்க்கர் காலத்தில் நாடு நல்ல வளமான நிலையில் இருந்ததென்றே கொள்ள வேண்டும். அக்காலத்திய ஐரோப்பிய யாத்திரிகர்களும், மிஷனரிமார்களும் நாட்டைச் சூழ்ந்து நின்ற திருடர் பயத்தையும், காட்டு மிருகங்களின் கொடுமையையும் பெரிதும் சுட்டிக் காட்டுகிறார்கள் என்பது உண்மையே. ஆனால் நாய்க்கர்கள் அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் நாட்டின் நிலை இன்னும் அதிக மோசமாக இருந்திருக்க வேண்டும். இவ்விதக் கொடுமைகளை நீக்குவதற்காகவே பாளையப் பட்டுகள் வகுக்கப்பட்டன. நாட்டின் அரசாட்சியை ஒழுங்குடன் நடத்த நாயக்கர்கள் கண்ட இப்புது வழி நன்மையும் தீமையும் பயந்தன வென்றாலும், அக்காலத்தின் நிலைக்கும் அவர்கள் அரசாங்கத்தின் பரந்த நிலைக்கும் இவ்வித முறை அவசரமாயிருந்தது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

5. நாய்க்கர் அரசு இன்றும் நம்மோடு இருக்கின்றதென்றால் அது மிகையாகாது. தென்னாட்டில் நாம் காணும் ஜமீன்தார்கள், பட்டக்காரர்கள் என்பவரெல்லாம் நாய்க்கர் காலத்தில் ஏற்பட்டவர்களே. "ராமயப்பன் அம்மானை" என்ற நூலில் இவர்கள் கூட்டம் அழகாகப் பல இடங்களில் கூறப்படுகிறது. நாம் வாழும் ஊர்கள் பல பண்படுத்தப்பட்டதும் இவர்கள் காலத்தில்தான். தென்னாட்டின் செல்வமெனப் பல இடங்களிலும் திகழும் கோயில்கள் பல நாய்க்கர் கைபடாமலில்லை. தஞ்சைக் கோயிலை ராஜராஜன் கோயில் என்கின்றோம்; காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தைப்பல்லவர் கோயில் என்கின்றோம்; மாமல்லபுரச் சிற்பங்கள் நரசிம்ம வர்மன் எழுப்பியவை. ஆனால் இவற்றிற்கப்பால் நாம் நம்நாட்டில் காணும் எண்ணற்ற சிற்பங்களையும் கோயில்களையும் ஏற்படுத்தினவர் யார்? இந்திய சிற்பக்கலை நிபுணர் ஜேம்ஸ் பெர்கூசன் என்பார் கூறுவதுபோல் தென்னாட்டின் கலைச்செல்வங்களில் பல நாய்க்கர்களால் ஆனவையே.

நாய்க்கர் அரசு நம்மோடு இன்றும் நின்று உலவுகின்றது என்பது வெறும் பேச்சன்று. மதுரையில் நாம் இன்று காணும் திருக்கோயிலும் ஆயிரக்கால் மண்டபமும், திருமலை நாய்க்கர் காலத்தில் ஏற்பட்டவை. இந்த ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டுவதற்கு மட்டும் 1623 முதல் 1645 வரை 22-ஆண்டுகள் பிடித்தனவென்று கணக்கிடப் பட்டிருக்கின்றது. இந்தப் பெரிய மண்டபத்திற்கு எதிர்ப்புறம் ராய கோபுரம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்தார் திருமலை நாய்க்கர்.

நாய்க்கர்களின் சிற்பக்கலைச் சிறப்பு மதுரைக்கு அப்பாற்பட்ட பல ஊர்களிலும் சிறந்து விளங்கியது. திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களில் மட்டுமல்ல, கோவை, சேலம், திருச்சி முதலிய ஏனைய தமிழ் நாட்டு மாவட்டங்களிலும் இன்றும் அது நின்று நிலவக்காணலாம். வைணவர்கள் முதல் இடம் தந்து போற்றும் ஸ்ரீரங்கக் கோயில் நாய்க்கர் காலத்தில் எழுந்ததே; பேரூரில் நாம் காணும் கோயிலும் தற்போதைய நிலையை நாய்க்கர் காலத்தில் தான் அடைந்தது. இன்னும் தேவாரச் சிறப்புப்பெற்ற அவினாசியில் இருக்கும் கோயிலும் இவர்கள் காலத்தில்தான் எழுந்திருக்கவேண்டும். இராமேசுவரப் பெருங் கோயிலிலும் நாய்க்கர்களின் கைத்திறன் இன்றும் கண்டோர் வியக்கக் காட்சியளிக்கின்றது.

6. நாய்க்கர்கள் மிகுந்த மதப்பற்று உடையவர்கள் என்பது வெளிப்படை. ஆனால் நவீனம்போல் நாம் இப்பொழுது பேசும் மதப்பற்றற்ற அரசு (Secular State) நாய்க்கர்கள் காலத்தில்தான் உண்மையாகத் திகழ்ந்தது. மங்கம்மாள் காலத்திலும் முகமதியரோடு பெரும் போராட்டம் நடந்த காலத்தில் பல முகம்மதிய தர்காக்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. கிறித்துவக் குருமார்கள் தென் இந்தியாவில் தங்கள் மதத்தைப் பரந்த முறையிலே பரப்பத் தொடங்கியதும், நாய்க்கர்கள் காலத்தில் தான். தத்துவபோதகர் என்றழைக்கப்படும் ராபர்ட் டெ நொபிலி சுவாமிகள் மதுரையில் சேசுசபையைத் தொடங்கிவைத்தபோது முதல் முத்துவீரப்ப நாய்க்கர் மதுரையில் அரசு செலுத்திவந்தார். நாய்க்கர்களின் பெருந்தன்மையும், பரந்த நோக்கமும் அக் காலத்தில் கிறித்துவ குருக்களின் கடிதங்களில் பரக்கக் காணலாம். ஆயினும், இத் தகைய மனப்பான்மையால் இந்துமதம் நசித்துவிடவில்லை. நாய்க்கர்களின் காலத்தில்தான் அது முன்னிலும் அதிகமாகச் செழித்தோங்கியது. இந்த முறையிலே நாய்க்கர்கள் அரசுமுறை இன்றும் நம்மோடு இருக்கின்றது; அது நமக்கு என்றென்றும் ஓர் எடுத்துக்காட்டு.

தந்தி: ஞானம்பிகா போன்: 156

ஞானம்பிகை மில்ஸ் லிமிடெட்

ஞானம்பிகை மில்ஸ் போஸ்டு

கோயமுத்தூர்

★

மானேஜிங் ஏஜன்ட்ஸ்:

V. C. வெள்ளியங்கிரி கவுண்டர் & பிரதர்ஸ்

★

20 நம்பர் முதல் 60 நம்பர் வரை பஞ்சு நூலும்

30; 40-ம் நம்பர் ஸ்டேபிள் பைபர் நூலும் தயாரிப்பாளர்கள்.

நூற்கும் கதிர்கள்: 17248



Sundaram retreads keep your vehicle well-tyred. Here are low-cost, reliable retreading for any make of car, bus or lorry tyre. Yes, they cost much less than half the price of a new tyre!

Full circle mould retreading, after precision vulcanising with the latest machinery in our workshops with air conditioned warehouse for storing materials, ensures the highest standard of work. This is the finest factory of its kind in India.

CALL IN AT THE NEAREST SUNDARAM INDUSTRIES SERVICE STATION CONVINCE YOURSELF.

SUNDARAM INDUSTRIES (Private) LTD.,

Tyre Retreaders with full circle moulds

Head Office:
PUDUKOTTAI
'Grams. "MOTOR" Phone. 33

Madras Factory:
37, Mount Road, MADRAS-6
'Grams. SUNRETREAD Phone. 86985

TVS-67B



தமிழர் ஆடை அணிகள்

திருமதி ஆர். இராஜாமணி, பி. ஏ. (ஆனர்ஸ்) எல். டி.
மேரி அரசிக் கல்லூரி, சென்னை.

★

ஒரு நாட்டினர் அணியும் ஆடையணிகள், அந்நாட்டு மக்களது நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றன. பண்டைத் தமிழரது நாகரிகத்தை, அக்காலத்திலிருந்த புலவர்கள், என்றும் அழியாத சொல்லோவியமாகத் தீட்டியுள்ளனர். எனவே, அன்னாரது வாழ்க்கைக் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியத்தின் துணைகொண்டு, அவர்கள் அணிந்திருந்த ஆடையணிகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்:

உலகின் பல்வேறு பகுதிகளிலுமிருந்த மக்கள் நாகரிகமற்று வாழ்ந்த காலத்தில், பழந்தமிழர் சிறந்த ஆடை யணிகளை யணிந்து, சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். அவ்வாடைகள், பெரும்பாலும் பருத்தி நூலால் ஆனவை. அவை, இழை தெரியாத வாறு மிகவும் நெருக்கமாகவும், மென்மையாகவும் நெய்யப்பட்டன. அவற்றிற் குவமையாக, பாலாவி, புகை, பாம்பின் சட்டை, மூங்கிலின் மெல்லியதோல் முதலியவற்றைப் புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். இதினின்றும், நம் நாட்டில் நெசவுத்தொழில் ஒருகாலத்தில், உச்சநிலையிலிருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. ஆடை நெய்வதற்கு வேண்டிய நூலைப் பெரும்பாலும் கைம்மை நோன்பை மேற்கொண்டிருந்த பெண்கள் நூற்றனர். ஆகவே அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். ஆடைகள் தறியினின்றும் அறுக்கப்பட்டமையால் அறுவை யென்னும் பெயர் பெற்றன. நமது உடலைச் சுற்றியிருப்பது என்ற பொருள்கொண்ட 'புடைவை' என்னும் பெயரும் ஆடைக்கு உண்டு. இச்சொல்லானது ஆடவர், மகளிர் ஆகிய இருதிறத்தாரது ஆடையையும் குறிக்கும். இதனை, சமண சமயத்தைத் தழுவியிருந்த மருள் நீக்கியார் சூலநோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது, தாம் முன்பு அணிந்திருந்த பாயுடையைக் களைந்து விட்டு, வெண்புடைவை மெய்சூழ்ந்து தன் தமக்கையாரைக் காணவந்தார் என்னும் பெரியபுராணச் செய்தி விளக்காநிற்கும்.

'கலிங்கம்' என்ற சொல்லும் ஆடையைக் குறிப்பதாகும். கடையெழுவள்ளல்களில் ஒருவனை பேகன், கார் காலத்தில் மயில் ஆலுதல் கண்டு, அது குளிரால் வருந்துகிறதெனக் கருதி, தனது போர்வையையெடுத்து அதற்குப் போர்த்தினன் என்பதை,

'கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய பேகன்'

என்னும் அடியினின்றும் அறியலாகும்.

கொட்டைக்கரை போடப்பட்ட உயர்ந்த பட்டாடைகள், பரிசில் பெறச்சென்ற பாணர்கட்கு, அரசர்களால் வழங்கப்பட்டன. ஆற்றுப்படைகளில் இதற்குச் சான்று காணலாம். பூவேலையுடன் கூடிய நிற மூட்டப்பட்ட ஆடைகளும் அக்காலத்தில் நெய்யப்பட்டன என்பதை,

'நீலக்கச்சை பூவாராடை'

என்னும் அடி விளக்குகிறது.

சிறுமியர் அணியும் ஆடை, சிற்றுடை எனப்படும். மழையில் நனைந்து வந்த ஔவையாருக்குப் பாரி மகளிர் நீலச் சிற்றுடை கொடுத்து உதவினர். காலத்தினாற் செய்த அவ்வுதவிக்கு மாறாக,

"பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரி யன்றீந்த களிக்கோலும்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்
மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்"

என்னும் அழியாத பாட்டைப் பாடிப் போந் தார் ஔவை மூதாட்டி. மெல்லிய நீலநிற ஆடைக்குமேல், முத்துக்களினாலாகிய 'விரி சிகை' யென்னும் இடையணியை மாதவி அணிந்திருந்தாள். எழுகோவை, எண் கோவை, ஒன்பது கோவை, பதினாறு கோவை மணியென, இடையணி பல திறப் படும். நீலநிறமானது, வெண்மணிகளின் ஒளியை எடுத்துக் காட்டுகிறது. பழங் காலத்தில், முத்துக் கோப்பவர், நீலத்துகி லில் அவற்றை வைத்துக்கொண்டு கோத்த னர். மண மண்டபத்தின் விதானம் நீலப் பட்டினாலும், பந்தல் முத்தினாலும் அமைக் கப்பட்டன என்று மங்கல வாழ்த்துக்காதை கூறுகின்றது. நீலவானில் விண்மீன்கள் விளங்குவதும், முத்து, வயிரம் போன்ற மணிகளினால் செய்யப்பட்ட அணிகள் நீலப் பட்டினாலாகிய பேழைகளில் வைக்கப்படு வதும் நாம் காண்பனவாகும். துறவறத்தை மேற்கொண்டோர் காவியாடை யுடுத்தல் மரபு. இதனை, 'முல்லைப்பாட்டு' போன்ற நூல்களிற் காணலாம்.

இன்னும், முழந்தாள் வரையில் அணிந்து கொள்ளும் 'வட்டுடை' என்னும் உடை யும் அக்காலத்தில் இருந்தது. காமன் ஒரு காலத்தில் ஆடிய பேடியாடலையாடிய ஒரு வன், வட்டுடை தரித்திருந்ததாக மணி மேகலை மலர் வனம்புக்க காதையில் கூறப் பட்டுள்ளது.

மற்றும், தழையுடையென்னும் விசேட உடையும் பழங்காலத்தில் உண்டு. அவ் வுடை, இளந்தளிர்களினாலும், மலர்களினா லும் ஆயது. அதைப் பெண்கள் அழகுக் காக ஆடையின்மீது அணிந்து கொள்வர். தழையுடையானது, தலைமகனால், தலைமக ளுக்குத் தோழியின் மூலம் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது என்பதற்கு, அகத்துறை நூல்கள் சான்று பகரும்.

பண்டைக் காலத்தில், பட்டாடைகளும் நெய்யப்பட்டன என்பது முன்னரே கூறப் பட்டது. சரிகை கலந்து நெய்யப்பட்ட மஞ் சள் நிறப் பட்டாடை, 'பீதாம்பரம்' என் றும், 'பொன்னுடை' என்றும் பெயர் பெற்றது. இக்காலத்திலும், சிறந்த அறிஞர் கட்குப் பொன்னுடை போர்த்திப் பாராட் டும் வழக்கம் இருந்து வருகிறது. எலிமயிர், ஆட்டுரோமம் முதலியவற்றைக் கொண்டு நேர்த்தியான கம்பளங்கள் நெய்யப்பட்டன. இவ்வாறு சுமார் முப்பத்தாறு வகை ஆடை கள் அக்காலத்தில் இருந்ததாய்க் கூறப்பட் டுள்ளது. இன்னும், உடை தைக்கும் தையற்காரர், 'துன்னகாரர்' என்னும் பெயருடன் இருந்திருக்கின்றனர். நூற்று வர் பின்தொடரவந்த பாண்டி நாட்டுப் பொற்கொல்லன், சட்டை யணிந்திருந்த தாய்த் தெரிகிறது. இது, 'மெய்புகுபை' என்பதினின்றும் விளங்குகிறது. இனி, தமிழ ரின் அணிகளைப் பற்றி ஒரு சில கூறுவோம்:

பழங்காலத்தில் ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை, சாதரூபம் என்னும் நால் வகைப் பொன்னும் நவமணிகளும் மிகுதி யாக இருந்தன. அவற்றைக் கொண்டு பற் பலவிதமான அணிகலன்கள் செய்யப்பட் டன. பொன்னால் அணி செய்பவர் 'உருக் குத் தட்டார்' என்றும், பொன்னையும் மணி யையும் பிரியாதவாறு இணைத்து இழைப்ப வர் 'பணித் தட்டார்' எனவும் கூறப்பட்ட னர். பொன்னையும் மணியையும் சேர்த்து இழைப்பதால் அதற்கு 'இழை' என்னும் ஒரு பெயருமுண்டு. ஒன்பதுவகை மணி களின் இலக்கணத்தை நன்கு அறிந்த பணித் தட்டார் பலர் அக்காலத்தில் இருந்தனர். வடமலையிற் பிறந்த பொன்னும், கீழ்க்கட லில் உண்டான பவளமும், தென்கடலில் கிடைத்த முத்தும், காவிரிப்பூம்பட்டினத் துக் கடைத்தெருவில் குவிந்து கிடந்தன. அவ்வாறே, பாண்டி நாட்டுத்தலை நகராம்

மதுரை மாநகரத்து ஆவண வீதியில், குற்றங் குறைபாடற்ற நவமணிக் குவியல்கள் காணப்பட்டன.

அணிகளை, குழந்தைகள் அணி, ஆடவர் அணி, மகளிர் அணி என மூன்று வகையாகப் பிரிக்கலாம். குழந்தைகட்குப் பாதுகாவலாக, 'ஐம்படைத்தாலி' என்னும் அணி, அணிவிக்கப்பட்டது. காத்தற் கடவுளாகிய திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், கதை முதலிய ஐந்து படைகளையும் சிறு வடிவத்தில் பொன்னால் செய்து கோத்துக் கழுத்திலிடுவார்கள். முருகனுக்கு எடுக்கப்பட்ட விழாவைக் காணும் பொருட்டு, காவிரிப்பூம் பட்டினத்தில் ஆடவரும் மகளிரும் குழுமியிருந்தனர். குழந்தைகள் அணிந்திருந்த ஐம்படைத்தாலியை, அவர்கள் வாயினின்றும் சிந்திய உமிழ்நீர் நனைத்தது என்று மணிமேகலை யாசிரியர் கூறியுள்ளார். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீகுந்த இளம் பருவத்திலேயே போர்க்களஞ் சென்றான் என்பதனை,

'தாலி களைந்தன்று மிலனே'

என்னும் புறப்பாட்டின் அடி உணர்த்தும். சிறுவர், புலிப் பல் தாலியும் அணிந்திருந்தனர். இக்காலத்தில், புலி நகத்தைப் பொற் சங்கிலியில் கோத்து மகளிரும் அணிந்து கொள்ளுகின்றனர். சதங்கை போன்ற காலணிகளைச் சிறுவர் அணிந்திருந்தனர் என்பது 'பொற்கால் புதல்வர்' என்னும் பட்டினப் பாலைச் சொற்றொடரால் விளங்குகின்றது.

அரசரும், வீரரும் வீரத்துக்கு அறிகுறியாகக் காலில் கழலும் தோளில் வாகுவலயம் என்னும் வளையலும் அணிந்து போருக்குச் செல்வர். இவற்றைப்பற்றிய குறிப்பு புறநானூறு போன்ற நூல்களில் காணப்படுகிறது. பகையரசர்களை வென்ற மன்னர்கள், தோல்வியுற்ற மன்னரது முடியிலுள்ள பொன்னைக்கொண்டு கழல் செய்து, தாம் அவரை வென்று அடிப்படுத்தியதற்கு அடையாளமாக அணிந்து கொள்வர். இவையன்றி, அரசர்கள் பொன்னாலும் மணியாலும் ஆன விலையுயர்ந்த முடிக்கலன், மாலை முதலியவற்றையும் அணிந்திருந்தனர். மேலும், அவர்கள் போருக்குச் செல்கையில், பொன்னால் செய்யப்பட்ட அடையாள மாலைகளை யணிந்து சென்றனர்.

பழங்காலத்தில் பலவகை அணிகலன்கள் இருந்தபோதிலும், இக்காலத்து நாகரிக மகளிரைப் போலவே பழந் தமிழ் மகளிரும், சிறந்த ஒரு சில அணிகளையே அணிந்தனர். அதனால் அன்னர் 'ஆயிழையார்' எனப்பட்டனர். அவ்வணிகள் முற்றுப்பெற்ற வேலைப்பாடு உடையனவாக இருந்தமையால், 'முற்றிழை' என்னும் பெயர் பெற்றன. பெண்கள் சாதாரணமாக, சங்குவளையல், பொன்வளையல் போன்றவற்றை அணிந்திருந்தனர். இதனை, 'ஒண்டொடி' 'பைந்தொடி,' 'பொற்றொடி' என்னும் சொற்கள் விளக்கும். காதில் மகரக்குழை அணிந்திருப்பர். முடக்கு என்னும் நெளிமோதிரம் அக்காலத்தில் அணியப்பட்டது என்பது நெடுநல் வாடையினின்றும் விளங்குகிறது. இக்காலத்திலும், மணிகள் வைத்துப் பொன்னால் செய்யப்பட்ட நெளிமோதிரம் அணியப்படுகிறது. முடமோசியார் பாடலொன்றில் காணப்படும்,

''ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயிற் றென்ப வாஅய் கோயில்''

என்ற அடிகள், அக்காலத்தில் மணமான பெண்டிர் மங்கலநாண் அணிந்திருந்தனர் என்று கருத ஏதுவாயுள்ளன.

பெண்கள் காலில் அணியும் சிலம்பு பொன்னாலாயது. நடக்கும்போது ஓசையுண்டாவதற்காக, விலையுயர்ந்த மணிகள் அதன் உள்ளே பரலாக இடப்பட்டன. கண்ணகியினது சிலம்பின் பரல் மாணிக்கம் என்பதையும், கோப்பெருந்தேவியினது சிலம்பின்பரல் முத்து என்பதையும் வழக்குரைகாதை விளக்காநிற்கும்.

ஆடல் பாடல்களிற் சிறந்தவளாகிய மாதவி தலை முதல் கால்வரையில் பல்வகை அணிகலன்களை அணிந்திருந்தாள். அவற்றுள், பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, காற்சரி என்பன காலணிகள். சித்திரவளை, மணிவளை, பவளவளை முதலியவை வளைகளிற் சில வகைகளாகும். கழுத்தில் வீரச் சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்தாரம் முதலியன அணியப்பட்டன. தெய்வவுத்தி, வலம்புரி, பூரப்பாளை, வடபல்லி, தென் பல்லி என்பன தலைக்கோலங்களாக விளங்கின. இன்னும் ஈண்டுக் கூறு தொழிந்தவை பல.

வறுமை காரணமாக, பழுமரந்தேரும் பறவைபோல, அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்ற பாணர்கள், வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்றுமரைப் பூக்களையும், விறலியர் அணிகலனுக்கு வேண்டிய பொன்னையும் பரிசிலாகப்பெற்று வந்தனர்.

அணிகலன்கள், பெண்களது இயற்கை யழகை மிகுதிப்படுத்துகின்றன என்பர் ஒரு சாரார். இயற்கையழகினுல் அணிகலன் கட்குச் சிறப்பு ஏற்படுகிறது என்பர் மற் றொரு சாரார். அணிகளின்றியே அழகு மிகுந்து தோன்றும் என்பர் இன்னெருவகை யினர்.

'கூடல் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோல மொடு வந்தீர்'

என்னும் சிலப்பதிகார அடிகளும்

'புனையா வோவியம் போல நிற்றலும்'

என்னும் மணிமேகலையடியும் இறுதிக் கூற்றை வலியுறுத்துகின்றன.

மக்கள் அணிகலன்கள் அணிந்திருந்தது மாத்திரமன்று; யானையின் நெற்றியில் ஓடை யென்னும் பொன்முகபடாத்தையும், அதன் மறுப்பில் 'கிம்புரி' என்னும் பூணையும் அணிவித்தனர். பாண்டிநாட்டைச் சேர்ந்த பிசிராந்தையார் என்னும் புலவர், அன்னச் சேவலை நோக்கி, "நீ குமரியினின்றும் வடக்கே செல்கையில் இடையிலுள்ள உறையூரில் தங்கி, கோப்பெருஞ் சோழனைக் கண்டு, நீ என்னுடைய அடியின்கண் உறைபவன் எனக் கூறுவாயேல், அவன், உன்னல் அன்பு செய்யப்படும் பேடைக்கு வேண்டிய அணிகலன்கள் அளிப்பான்" என்றார். பறவைகள், அணிகள் அணிவதில்லை. எனவே, காணமலே நட்புக் கொண்ட தன் ஆருயிர் நண்பனும் பிசிராந்தையின் பெயரைக்கேட்ட அளவில், சோழன் மிக்க மகிழ்ச்சியடைந்து பரிசில் வழங்குவான் என்பதே அதன் பொருளாகும்.

பெரும் பஞ்ச காவியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி முதலியவற்றைத் தமிழ் அணங்கிற்குரிய அணிகலன்களாகக் கூறுவர்.

பழங்காலத்திலிருந்த அணிகலன்களிற் பல இக்காலத்தில் இல்லை. அப்படியிருப்பவற் றின் பெயரும் சரியாகத் தெரியவில்லை. நாட்டியக்கலையை ஆதரித்து வருபவர், பழைய அணிகளுள் கிடைத்தவற்றைப் பாதுகாக்கின்றனர். ஏனெனில், அவ்வக் காலத்து ஆடல் பாடல்களை நிகழ்த்துகையில். அவ்வவற்றிற் கேற்ற ஆடையணிகள் அணிதலே ஏற்புடைத்து. வாளைமீனின் அங்காந்த வாய்போன்ற நெளிமோதிரமும், அகலக்கரை போடப்பட்ட ஆடைகளும் தொன்மையைக் குறிக்கும் என்பர்.

ஒரு காலத்தில், நம்நாட்டு ஆடைகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிநாட்டு முத்தானது, உரோமாபுரி, எகிப்து போன்ற நாட்டு மன்னரது முடியை அலங்கரித்ததாக, யாத்ரீகரது குறிப்பில் காணப்படுகிறது. அத்தகைய தமிழ்நாடு பிறநாடுகளினின்றும் ஆடையை எதிர் பார்த்து ஏங்கி நிற்கவேண்டிய நிலை சமீப காலம் வரையில் ஏற்பட்டிருந்தது. அதற் குக் காரணம், தமிழர் நெசவுத்தொழிலை இடையில் செய்யாது விட்டுவிட்டதேயாகும். அத்தொழிலானது மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. பெருத்த ஆதரவும் அதற்கு அளிக்கப்பட்டுவருகிறது. எனவே, "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்னும் அமரகவி பாரதியாரின் பொன்மொழியை அனைவரும் கருத்தில் இருத்தி, தொழில்செய்ய முற்படுவாராயின், நெசவுத்தொழில் மீண்டும் பழைய உன்னத நிலையை அடையும் என்பது ஒருதலை.

———

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

❋

கலைவேறு, கைத்தொழில் வேறு ?
கைத்தொழிலும் கலையினுள் ஒரு பகுதியே !

❋

பள்ளிப் படிப்பும், நுணுக்க, பொறி இயல் கல்வியறிவும் பரிசோதிக்கப் பட்டுப் பரிபூரணம் அடைய உதவும் அராய்ச்சி நிலையங்களே தொழிற்சாலைகள் என்றால் மிகையாகாது.

❋

இந்தியக் கைத்தொழில்களில் முன்னணியில் நிற்பது
பஞ்சாலைத் தொழில்
தொழிலரங்கில் எங்கள் பணியை என்றும் ஆற்றுகிறோம்.

❋

தந்தி : பங்கஜா

டெலிபோன் : 94 அலுவலகம்
74, 601 } இல்லம்

பங்கஜா மில்ஸ், லிமிடெட்

தபால் பெட்டி நெ. 150

கோயமுத்தூர்

கிருத்தவம்

திரு. ப. ஜோதிமுத்து, M.A., B.D., அமெரிக்கன் கல்லூரி, மதுரை

★

கிருஸ்தவ சமயம் : கிருத்தவம் அல்லது கிருஸ்தவம் என்பது கிருஸ்தவ சமயம் ஆகும். கிருஸ்து என்னும் மொழி **க்ரிஸ்ரூஸ்** (Christos) என்னும் கிரேக்க மொழியைத் தழுவியது. இஃது எபிரேய மொழியிலுள்ள **மேசியா** (Messiah) என்னும் சொல்லுக்குச் சமமாக வழங்கப் பெற்றது. மேசியா என்பதற்குப் பொருள் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாம். இச்சொல் கிருஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே யூதருக்குள் வழங்கிவந்தது. பல நூற்றாண்டுகளாக இம்மக்கள் தங்களைச் சுற்றியுள்ள பிற நாட்டவரால் தாக்கப்பட்டும், சிறை செய்யப்பட்டும், ஆளப்பட்டும் வந்தமையால், தங்களைப் பிறநாட்டவர் பிடியினின்று மீட்டு, தங்கள் அரசியலை உறுதிப்படுத்துவதற்கென்று தங்களுக்கு ஒரு தலைவரைத் தந்தருளுவதாகத் தாங்கள் வழிபட்டுவந்த **யெகோவா** என்னும் கடவுளால் உறுதிமொழி கூறப்பெற்றிருந்தனர். கி. மு. ஆரும் ஆண்டினை அடுத்து **இயேசு** பெருமான் தோன்றி, தமது முப்பதாம் ஆண்டிலே யூதருக்குக் குருவாக வெளிக்கிளம்பி, பன்னிரண்டு பேரைத் தமக்குச் சீடர்களாகத் தெரிந்துகொண்டு, கடவுளுடைய ஆட்சியைப்பற்றிப் பற்பல உவமைகளால் விளக்கி ஞானோபதேசம் செய்து, ஆண்டவன் அருளால் மக்களின் நோய்களைப் போக்கி, இவ்வாறு திருத்தொண்டு செய்துகொண்டு திரிந்தார். நாளடைவில் அவர் தம்மை மேசியா என்று எண்ணியும் கூறியும் வந்தமையால், அக்காலத்து யூதத்தலைவர்கள் அவர்மேல் பொறுமை கொண்டு அவரைக் கொலை செய்வித்தனர். எனினும் அவர் தம்முடைய சீடர்களுக்குக் காட்சியளித்துச் சில காலத்துக்குப் பின்னர் அவர் களைவிட்டு மறைந்தருளினர். அவருடைய போதனைகளும், சாதனைகளும், அவர் சீடர்களுடைய போதனை சாதனைகளும், அவர் பெயராலே நிறுவப்பட்ட திருச்சபையின் அநுபவமும் ஆகிய எல்லாம் சேர்ந்தே கிருஸ்தவ சமயம் ஆகும். இச்சமயம் இப்பொழுது உலகத்திலுள்ள எல்லாக் கண்டங்களிலும் பரவி, உலக சமயமாகக் காட்சியளித்து, உலக மக்களில் பெரும்பாலாரால் தழுவப்டெற்றுள்ளது. இச்சமயம் சில கொள்கைகளையும், ஒழுக்க நெறிகளையும் கொண்டுள்ளது. இச் சமயத்தின்படி இறைவனுக்கும், படைப்புக்கும், சிறப்பாக மானிடருக்கும் உள்ள தொடர்பினை யெடுத்துக் கூறுவதே கிருஸ்தவ சித்தாந்தம் ஆகும்.

ஆதாரம் : கிருஸ்தவ சித்தாந்தத்துக்கு இருவகை ஆதாரங்கள் உள : **நேரடி** (Immediate) ஆதாரங்களானவை, விவிலியத் திருமுறை (Bible)யும், திருச் சபையின் விசுவாசப் பிரமாணங்களும் (Creeds), கிருஸ்தவ வேத சாஸ்திரிகளின் நூல்களும், ஆராய்ச்சிகளுமாம். **துணை** (Auxiliary) ஆதாரங்களாகக் கொள்ளத் தக்கவை இக்காலத்துச் சமய வாழ்க்கை, தனித்தனி மக்களின் சமய அநுபவம், படைப்பைப்பற்றிய உண்மைகள் ஆகிய இவைகளாகும்.

வெளிப்படுத்தல் : கடவுள் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்துகின்றவர். வெளிப்படுத்தும் முறைகள் **பொது** என்றும் **சிறப்பு** என்

றும் கொள்ளப்படும். இயற்கைப் படைப்பில் மானிடர் கடவுளைக் காண்பது பொது வெளிப்படுத்தலாகும். அதோடு, மானிடரில் ஒரு பகுதியினராகிய யூதருக்குத் தம்மைத் தீர்க்கதரிசிகள், நியாயாதிபதிகள், அரசர்கள் மூலமாகக் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படுத்திவந்து, இயேசு பெருமான் வாழ்க்கையில் தம்மை முற்றிலுமாக வெளிப்படுத்தியது சிறப்பு முறையாகும். யூதமார்க்கத்து வெளிப்படுத்தல் விவிலியத் திருமுறையில் **பழைய ஏற்பாட்டிலும்,** கிருஸ்து மார்க்கத்து வெளிப்படுத்தல் **புதிய ஏற்பாட்டிலும்** காணப்பெறும். யூதமார்க்கம் உலகிலுள்ள பல்வேறு மார்க்கங்களில் ஒன்று. எனினும், இதற்கும் பிறவற்றுக்கும் உள்ள வேறுபாட்டின் மிகுதிபற்றி இது ஈடற்றதாகக் கொள்ளப்படுகின்றது. கிருஸ்து மார்க்கம் இதனினின்று கிளைத்துள்ளது என்பது அறியற் பாலது.

எடுப்புக்கள்: (Postulates) கிருஸ்து சமயத்தின் எடுப்புக் கொள்கைகள் மூன்று உள.

(1) கிருஸ்து சமயம் முடிவான சமயம்.

(2) இறைவனது சிறந்த வெளிப்பாட்டை ஆதாரமாகக்கொண்டது.

(3) கிருஸ்து திருச்சபையை ஏற்படுத்தும் நோக்கம் உடையவர். திருச்சபை அவ் வெளிப்பாட்டின் சமுதாய விளக்கமாகும். கிருஸ்தவ சித்தாந்தம் இறைவனியல், படைப்பியல், மானிடவியல், பாவவியல், மீட்பியல், திருச்சபையியல், சாக்கிரமந்தியல், முடிவியல் என்னும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விளக்கப்பெறும்.

இறைவனியல்: இறைவன் ஆவி; பரம ஆன்மா. சடப்பொருள் அல்ல. அவருக்குச் சிந்தனையும் உணர்ச்சியுமுண்டு. அன்புக்கு உறைவிடம்; காலம் இடம் கடந்தவர்; சித்துப் பொருள்.

எல்லாம் இறைவன் (Pantheism) என்னும் கொள்கைக்கு மறுதலையாக இறைவன் தனித்த ஆவி; தனி உணர்ச்சியும் தன் இயக்கமும் உடைய அறிவன்; தம்மைத் தாமே உணர்ந்து இயங்குபவர். அவரது நன்மை அளவில்லாதது; ஏனெனில் அதீது எழிலும் உண்மையும் போன்று இறுதியானது.

ஏனையவற்றிற்கெல்லாம் இறைவன் சார்பிடமாவார்; எல்லாவற்றையும் படைத்து, அளித்து இயக்குகின்றார். இயற்கைவிதிகள் அவருடைய மாறுத சித்தத்தின் வெளிப்பாடுகளேயாம். இறைவனுக்கும் ஏனைய உயிர்களுக்கும் உள்ள தொடர்பு தூய அன்பேயாகும்.

தனிப்பண்புகள்: இறைவன் கடவுளாக மானிடரின் எண்ணத்தையும் சொல்லையும் கடந்து நிற்பினும், மானிடர் தமக்குத் தெரிந்த சிறந்த பண்புகளைக் கொண்டே இறைவன் பண்புகளையும் குறிப்பிடுவர். அவற்றில் தூய்மை, நீதி அல்லது நேர்மை, அன்பு முதன்மையானவை. **தூய்மை** யென்பது மானிடரின் தகுதியின்மையைச் சுட்டும்; மானிடரில் அச்சத்தையும் வியப்பையும் பிறப்பிப்பது; ஒழுக்கத்தையும் அறத்தையும்பற்றியது; முற்றிலும் புரிந்து கொள்ள முடியாதது; இறைவனின் பெருமை, வல்லமை, இறைமையைச் சுட்டுவது. **'இஸ்ரவேளன் பரிசுத்தர்'** என்று யெகோவா அழைக்கப்படுகின்றார். 'நான் பரிசுத்தனாயிருப்பது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' என்று ஆணை பிறப்பிக்கும் தூயர் யெகோவா புதிய ஏற்பாட்டில் **பரிசுத்த ஆவி** யென்று வழங்கப்படுகின்றார். இந்தத் தூய்மையே கிருஸ்துவில் காணப்பெறுவது; **நீதி அல்லது நேர்மை யென்பது** இறைவனின் மாறுத்தன்மையைச் சுட்டுவது. சத்தினியல் பேதான் நீதி யென்பது. நீதிக்கும் அன்புக்கும் முரண்பாடின்று. **கடவுள் அன்பு**—கடவுளின் அன்பு தூயது. அவர் ஒளி; அவரில் இருள் இல்லை என்பது இதனை நன்கு விளக்குகின்றது. மானிடர் அன்பு

பால் தொடர்புடையது; ஆசையை நிறை வேற்றுவது அன்பாகாது. முற்றிய அன்பில் தன்னய மின்மையும் உண்டு, தன்னய முண் மையும் உண்டு; கிழமையும் உண்டு, கொடையும் உண்டு. பிதா, குமாரன் என் னும் சொற்கள் வழங்கப் பெறுவதினின்று இவ்வுண்மை புலனாகும். தனி அன்பு பிரிவினை யற்றது. கிருஸ்துவின் மூலம் சிறப்புத் தொடர்புடையது. கிருஸ்து மானிடருக்குக் காட்டிய அன்பு போன்றது. மாறுத பண்பு தூய அன்பு, பாவத்தைப் பற்றிப் பராமுக மாக இருக்க முடியாது. எனவே இறைவன் சினமுள்ளவர் என்றும் கூறப்படுகின்றது. அச்சினம் மானிட சினத்தைப் போன்ற தன்று.

முழுமைப் பண்புகள் (Attributes of Absolute): **எங்கு மிருத்தல்** (Omni presence) வியாபகம். கடவுள் ஆவி. அவர் இல்லாத இடமில்லை. எனினும் ஒவ்வோர் இடத்திலும் சமமாக இருக்கின்றார் என்பது பொருளன்று. எல்லாம் இறைவன் (Pantheism) என்னும் கொள்கைக்கிணங்க, நன்மையிலும் தீமையிலும் இறைவன் சம மாக இருக்கின்றார் என்று கொள்ளமுடி யாது. இது ஒழுக்கவரையறைக்குக் கட்டுப் பட்டது. நினைவில் நாம் நினைத்த இடத்திற் குச் செல்லுகின்றோம். எனவே இறைவன் இருப்பும் அவ்வாறேயாம்.

எல்லாம் அறிதல்: (Omniscience) இப்பண்பினால் இறைவன் நமது இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்கால நிகழ்ச்சி களையும் அறியக்கூடியவர் என்பது பெறப் படும். இதனை மறுத்துரைக்க முடியாது. எனினும், இறைவன் நமது பிறப்புக்கு முன் னர் நமது வாழ்க்கையின் எல்லா நுட்பங்களை யும் அறிவர் என்றால், மானிடருக்குச் சித்த உரிமை (Freedom of the Will) இல்லாது போய்விடும் என்ற அளவுக்கு முரண்பாடு காணப்படுகிறது. எல்லாம் அறிதல் என்பது இறைவனது மட்டற்ற அறிவின் திறனைக் குறிக்கப் பயன்படுவதொன்றும். இது தூய அன்பின் ஆழ்ந்த நோக்கினை வெளிக்காட்டி நிற்கின்றது.

எல்லாம் செய்வல்லமை: (Omnipotence) இது எதையும் செய்து முடிக்க வல் லவர் என்று பொருள் படுவதன்று. தாம் சித்தங்கொள்வதைச் செய்து முடிக்க வல்ல வர் என்பதே இதற்குப் பொருளாம். மற்றப் படி, மானிடர் சித்த உரிமைக்கும் இறைவ னின் இப்பண்புக்கும் முரண்பாடு காணப் படும். இறைவன் சக்தியை மட்டுப்படுத் தும். எனினும் இம்மட்டுப்பாடு நிலைத்திருக் காது. ஒரு சிறிது காலத்திற்கு மட்டும் தான் மட்டுப்படுத்த இயலும். இறைவன் தமது நோக்கத்துக்கு இசைய எல்லாம் செய்ய வல்லவர். மட்டற்ற சடப் பலன் அன்று, வெற்றிதரும் ஆற்றலைக் குறிக்கும்.

மாறுமை (Immutability) யும் இறைவ னது பண்பாகும். என்றும் ஒரே படியாய், சத்தாய் விளங்குவது இப்பண்பினால் பெறப் படும் உண்மை.

திரித்துவக்கொள்கை: (Trinity) பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மும்மையின் ஒருமையே திரித்துவம் என வழங்கப்படு வது. இது கிருஸ்தவர் அநுபவத்தில் பிறந் தது. யூதக் கிருஸ்தவர்கள் ஒரே கடவுள் கொள்கையர். இயேசுவின் மூலமாகக் கடவுளோடு தொடர்பு கொண்டனர். இயேசு யார் என்ற கேள்வி எழலாயிற்று. யூதமேசியா என்று கண்டனர். இயேசு தமக்கும் இறைவனுக்குமுள்ள தொடர் பைக் குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டில் யெகோவாவுக்கு வழங்கிய பெயரையே இயேசு கிருஸ்துவுக்கும் வழங்கத் தலைப்பட் டனர் அவரது அடியார்; முரண்கண்டிலர். அவ்வாறே தூய ஆவியைப்பற்றிய கருத்தும் இவர்கள் உள்ளத்தில் எழலானது. தங்கள் வாழ்க்கையில் கடவுள்-கிருஸ்து இருப்பதாக உணர்ந்தனர். கடவுள் ஒருவரே யென்றால் கிருஸ்துவும் தூய ஆவியும் எவ்வாறு தொடர்புடையவர் என்னும் வினா எழு

★ கோயில் நகரம் எனப் பெயர் பெற்றது மதுரை
★ தலைவர்களில் சிறந்தவர் ஜவஹர்லால் நேரு
★ சித்திரங்களில் சிறந்தது அஜந்தா சித்திரங்கள்
★ அற்புத இயற்கை காட்சிகள் நிறைந்தது காஷ்மீர நாடு
★ சங்கங்களில் சிறந்தது மதுரைத் தமிழ்ச் சங்கம்

★

அத்தனை ஜவுளி ரகங்களும் நிறைந்தது

ஜனதா ஸ்டோர்ஸ்,

3, 4, தெற்கு சித்திரை வீதி, மதுரை

தந்தி : "சிபா" (CIBA) போன் : 309

"சிபா" உயர்ந்த ரக சாயங்கள்

எல்லாவிதமான துணிகளும் சாயம் போடுவதற்கும்
பிரிண்ட் செய்வதற்கும் நேர்த்தியானது.

*

ஷெட் ஆபீஸ் :

அள. சுப. பள. சுப்பிரமணியன் செட்டியார்,

"சிபா" சாய வியாபாரம்

91, கீழ மாரட் வீதி, மதுரை.

பிராஞ்சுகள் :

26, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-1.
52, கிழ ரத வீதி, திருநெல்வேலி டவுன்.
(திருவனந்தபுரம் & நாகர்கோவில் உள்பட)
அம்பலப்புளி பஜார், ராஜபாளையம்.
54-1-21, சிடி பஜார், அருப்புக்கோட்டை P. O.
35, ஸௌராஷ்ட்ர நடுத்தெரு, கும்பகோணம்.
B 36/755, சித்தூர் ரோடு, குடியாத்தம். N. A. Dt.
111. சங்கர நாயுடு வீதி, திருப்பாபுலியூர். (கடலூர் N. T.)
14/239, மெயின் பஜார், புரதட்டூர். (கடப்பை ஜில்லா) ஆந்திரா.

மானேஜிங் பார்ட்னர் : R. நாகராஜ் நாயுடு.

கின்றது. இக்கொள்கைக்குக் கிருஸ்துவ அனுபவமே ஆதாரம். இக்கொள்கை உருவாவதற்கு யூதக் கருத்துக்களும் கிரேக்கக் கருத்துக்களும் பயன்பட்டன. இயேசுவின் மானிட வாழ்க்கைக்கு முற்பட்ட நிலையினைச் சுட்டும் வாக்கியங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. அவ்வாறே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மும்மையும் இணைபிரியாது வழங்கப்படுகின்ற இடங்களும் உள.

கிருஸ்தியல் (Christology) இப்பொருளுக்குரிய ஆதாரங்கள் திருமுறை நூல்கள், சீடர் அநுபவம், திருச்சபைச் சாட்சியம், வேதசாஸ்திரங்கள், விசுவாசப் பிரமாணம், சாக்கிரமந்துகளாகும். சுவிசேஷங்கள் நான்கில், முன்னவை மூன்றும் காலத்தால் முந்தியவை; இயேசு பெருமானின் மானிடவாழ்க்கையை நன்கு சித்திரித்துக் காட்டுவன. இயேசு தம்மை மேசியா என்றும் எண்ணினர். 'மனுஷகுமாரன்' என்ற தொடரால் தம்மைக் குறிப்பிட்டார். இப்பெயர் மேசியாவுக்கு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. 'தேவகுமாரன்' என்பதும் மேசியாவுக்கு ஒரு பெயராக வழங்கப்பெற்ற போதிலும் இயேசு பெருமான் இப்பெயரைத் தமக்கு வழங்கினதில்லை. எனினும் தமக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பைப் பிதா, குமாரன் என்ற தொடரால் இவர் வழங்கியிருப்பது மேசியாக் கருத்துக்கு முற்பட்டதாகும். இந்தத் தொடர்பைப் பல உவமைகள் கொண்டு விளக்கியிருக்கின்றார். இவர் பாவமற்றவர் என்று இவர்தம் சீடர் எண்ணினர். இயேசுவும் அவ்வாறு கருதியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிறருக்குப் பாவ மன்னிப்பும் அருளினர். எனினும் இக்கொள்கை இவரது உண்மை மானிட இயல்புக்கு முரண்பட்டதாகும். கிருஸ்துவைப் பற்றிப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளாவன : அவர் உண்மை மானிடன், கடவுளிடம் தனிப்பட்ட தொடர்பு கொண்டிருந்து அவரை வெளிப்படுத்தினர். மக்கள் அவர் மூலமாய்க் கடவுளைக் கண்டு வருவது அவரது ஒருமை ஆளியல் (Personality), இருமைச் சித்தமின்மை, மானிடத்துக்கு முந்திய நிலையென் பவையாகும். அவருடைய அறிவின் வடிவம் மானிடம், அறிவின் பொருள் தெய்விகம்.

தூய (பரிசுத்த) ஆவியியல் : இயேசு பெருமானின் மானிட வாழ்க்கைக்குப் பின்னர், அவருடைய சீடரின் தனித்தனி வாழ்க்கையிலும், திருச்சபையிலும் புதிய வல்லமை காணப்பட்டது. இந்த வல்லமைக்குக் காரணம் இயேசு பெருமான் தங்களுக்கு அருளுவதாக வாக்குப் பண்ணிய பரிசுத்த ஆவிதான் என்று நம்பினர்கள். இதனைக் கிருஸ்துவின் ஆவியென்றும் கடவுள் ஆவியென்றும் அழைத்தனர். இந்த ஆவிக்கு ஆளியல் உண்டென்பது இதனைத் 'தேற்றரவாளன்' என்று இயேசு வழங்கியதிலிருந்து வெளிவரும். இந்த ஆவி மானிடருக்குள் செயல் புரியும் கடவுள் என்றும் கிருஸ்து என்றும் நம்பினர்கள். இதனால் சீடருக்குள்ளும் திருச்சபையிலும் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் நிலவி வந்தன. திரித்துவக் கொள்கைக்கு இவ்வகைய அநுபவங்களே காரணமாயின.

படைப்பியல் (Creation) விவிலியத்தில் இரண்டுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. ஒன்று மிகவும் பழமையானது. கடவுள் மனிதனைப் பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கியதாகக் கூறும். பிந்தியது பாபிலோனிய (Babylonia)க் கதைகளைத் தழுவியபோதிலும், கடவுளே படைப்புக் காரணர் என்பதை வலியுறுத்துகிறது. இவ்விரண்டிலும் இன்மையிலிருந்து (Ex-nihilo) உலகம் உண்டாக்கப்பட்டது என்னும் கொள்கைக்கு இடமில்லை. பிற்காலத்தில் கிரேக்கக் கொள்கைகள் பரவி, சடம் இயற்கையிலேயே தீயது என்ற எண்ணம் எழ, படைப்பு இன்மையிலிருந்து உண்டாகியது என்று ஏற்பட்டது. இயேசு பெருமான் தமது மானிட வாழ்க்கைக்கு முந்திய நிலையில் இப்படைப்

புத் தொழிலில் தொடர்பு கொண்டிருந்த தாகவும் சொல்லப்பட்டுள்ளது. உண்மை யியல் (Philosophy) படைப்பு ஒரு காலத் தில் ஏற்பட்டதா, இன்மையிலிருந்து உண் டாயிற்று என்று அறுதியிட்டுக் கூற இயல வில்லை. அறிவியல் (Science) தோன்று முன் னர், விவிலிய வரலாறுகளே உண்மையென மக்கள் கொண்டிருந்தனர். ஆனால் இப் போது அவை படைப்பைப் பற்றிச் சேமியர் களுக்குள் (Semites) வழங்கப்பட்ட புனை கதைகளாகக் கொள்ளப்படுகின்றன. எனி னும் அறிவியலும் படைப்பின் காரணத் தைக் காட்ட இயலவில்லை; முறையை மட் டும் விளக்கிச் செல்லும். டார்வின் (Dar-win) கருத்துப்படி, இயற்கைத் தேர்வுக்கும் (Natural Selection) பரிணமத்தின் பொது வான உயர்வுக்கும் காரணங் காட்ட முடியாது. எனவே, கடவுளே இதற் குக் காரணமாயுள்ளார் என்பது தான் கிருஸ்தவ சித்தாந்தம். ஒரு நோக் கம் பற்றிய படைப்பு ஏற்பட்டுள்ளது. உரிமையும், தன் உணர்ச்சியுமுள்ள உயிர் களைப் படைத்து, அவைகள் தம்மொடு அன் புடன் வாழ்ந்து, தமது சித்தத்தைச் செய்து மக்கள் போன்று வாழவிடுவது கடவுள் படைப்பின் நோக்கமாகும். அந்த நோக்கத் துக் கேற்பக் கடவுளும் தம்மை மட்டுப் படுத்திக் கொண்டார். கடவுள் தாம் படைத்தவற்றை அளித்தல் தொழிலும் செய்கின்றார். அத்தொழிலின் ஒருபகுதியே அற்புதங்களாகும் (Miracles) என்பது கிருஸ்தவ சித்தாந்த நம்பிக்கை.

மானிடவியல் : இப்பகுதி இறைவனுக் கும் மானிடருக்கும் உள்ள தொடர்பினை விளக்குவது. மானிடனின் இறுதிநிலை இறைவனுடன் இணைந்திருக்கும் நிலையே யாம்; மகன்மையடைவது. இந்நிலை இயேசு பெருமானில் நிறைவேறியது.

முதன் முதலில் மானிடன் **கடவுள் சாய லில்** படைக்கப்பட்டான் **என்று விவிலியத்** தில் கூறப்பட்டுள்ளது. தேவசாயல் என் பதற்குப் பொருள் அறிவுடைமையும், பிற உயிர்கள் மீதுள்ள அதிகாரமும் ஆகும். மேலும் ஆதியில் அவன் நீதியும், தூய்மை யும், சாவாமையும் பெற்றிருந்தான் என்றும் கொள்ளக் கிடக்கின்றது.

மக்கள் **ஒருவனிடமிருந்தே தோன்றினர்** என்னும் செய்தியிலிருந்து மானிட இனத் தின் ஒழுக்க ஒருமை காணப்படுகின்றது. கடவுளுக்கும் மானிடனுக்குமுள்ள தொடர்பு ஒழுக்கம் பற்றியதாகும். பர மாத்மா எனவும் ஜீவாத்மா எனவும் வழங் கும் சொற்கள் இத்தொடர்பினை மெய்ப்பிக் கின்றன. பரிணமவாதம் இலட்சிய நோக்கு உடையது. அது கடவுள் செயல் என்பதில் அதற்கும் கிருஸ்தவ சமயத்துக்கும் வேறு பாடு கிடையாது.

ஒவ்வோர் **ஆத்துமாவும்** கடவுளால் படைக்கப்படுவது என்பது கிருஸ்தவ சித் தாந்தம். உடல் பெற்றோரால் அளிக்கப்படு வது. அவ்வாறுயின், நெறிபிறழ்ந்து பிறக்கும் பிள்ளைகளுக்கும் ஆத்துமா படைக்கப்பெறு வதனால், நெறிபிறழ்வு கடவுளுக்கு உடன் பாடாகின்றது என்று கொள்ள வேண்டி யிருக்கிறது. மானிடருக்குச் சித்த உரிமை யளித்திருப்பதனாலே தம்மை மட்டுப்படுத் திக் கொண்டார் கடவுள்.

மானிட அமைப்பில் உடலும் ஆவியும் என இரு கூறுகளும் அன்றி, உடல், ஆவி, ஆன்மா என மூன்று கூறுகளும் உள.

சித்த உரிமை (Free will) மானிட ஆளிய லுக்கு இன்றியமையாதது. மற்றப்படி மானி டர் செயல்களுக்கு மதிப்பின்று; ஒழுக்கத் தைப்பற்றியோ, நன்னெறி பற்றியோ எவ் விதக் கேள்வியும் எழுவதற்கு இடமிராது. சித்த உரிமை இன்றேல் கடமை உணர்ச்சியு மின்று. பொறுப்புணர்ச்சியும் அதனைப் பொறுத்ததே. கடைசி நடுத் தீர்ப்புக் கொள் கைக்கும் இந்த உரிமைதான் ஆதாரமாகும். நம்மை எவரும் நடுத் தீர்ப்பதென்றால், நமக் குச் செயல் புரிய உரிமை வேண்டும்.

உரிமை யென்பது நாம் விரும்புவதை அடைவதென்றுல் இறைவன் மட்டுமே உரிமையுடையவராவார். எனவே நமக்கு முழு உரிமையில்லை; ஆனால் அடைந்து வருகின்றோம்.

மானிடன் சிந்திக்கின்றான், நினைக்கின்றான். இறப்பையும் எதிர்வையும் பற்றிய காரண காரியங்களை ஆராய்கின்றான். எனவே இவனது தேர்வு பிறர் வயப்பட்டதன்று. குறிக்கோளுடையது. மானிட உரிமை இயற்கை விதிகளை மாற்றுகின்றது.

இறைவனின் தனியாட்சியை வற்புறுத்தினால் அறநெறி உணர்ச்சிக்கும் சித்த உரிமைக்கும் இடமின்று. இவற்றை வற்புறுத்தினால் எல்லாம் குழப்பத்தில் வந்து விடியும். எனவே இரண்டையும் முழுவதுமாக இணைக்க இயலாது. வில்லியம் ஜேம்ஸ் என்பவர் கருத்துப்படி, கடவுள் மட்டுப் பட்டவர். நாம் கடவுளோடு ஒத்து உழைக்கின்றோம். இருவரும் கட்டுப்பாட்டுக் குள்ளாகின்றோம். ஆத்துமாவின் நிலைபேறு இறவாமையாம். இறப்பின்றி அழியாது நிலைபெறுவது. தன் உணர்ச்சி தொடர்ந்து செல்வது.

பாவ வியல்: தீமை இருவகைத்து; ஒன்று உடல் பற்றியது; மற்றது உள்ளம் பற்றியது. பாவம் என்பது உள்ளத்தின் தீமை. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள **மானிட வீழ்ச்சி** வரலாற்றில் உடல் தீமை உள்ளத்தின் தீமையை **யடுத்து** வருகின்றது. உள்ளத்தின் தீமை **மானிடனைப்** பொறுத்தது. உடல் தீமை எல்லா உயிர்களுக்கும் பொது. விலங்குகளுக்கு வருத்த உணர்ச்சி கிடையாது. அறிவு மிகுந்த இடத்தில் நோயானது மிகுந்து காணக்கிடக்கின்றது என்பது ஆராய்ச்சியால் போந்த உண்மை. துன்பமும் துயரமும் உயிர்கள் தாங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பத் தங்களை அமைத்துக் கொள்ளுவதற்கு அவசியமானவை. போராட்டமும் எதிர்ப்பும் முன்னேற்றத்திற்கு அவசியமானவை. இறப்பு ஓர் அநுபவம்.

பாவம் கடவுள் சித்தமா? அன்று. பின்னர், தீமையின் கோட்பாட்டினால் உண்டாயதா? அன்றிச் சடப் பொருள் பற்றியதா? அல்லது பிசாசினால் உண்டாயதா? இல்லை. கடவுள் தம்மை மட்டுப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவு. மானிட சித்த உரிமையினால் உண்டானது. கடவுளால் வரவில்லை. அவரது இயற்கையிலும் இல்லை. கடவுள் சித்தத்துக்குக் கீழ்ப்படியாமையால் உண்டானது.

பாவ உணர்ச்சியும் தண்டனையும்: பாவமில்லாமல் பாவ உணர்ச்சி பிறக்காது. பாவம் புற உணர்ச்சி; பழி அக உணர்ச்சி. எனது செயல் தீயதென்றுல் நானும் தீயன். பழிக்குத் தண்டனை உண்டு. நான் செய்தேன்; அது தவறு; தண்டனைக்குத் தப்ப முடியாது. தண்டனையின் நோக்கம் யாது? பழிவாங்குவதா? இனிமேல் செய்யாமல் தடுப்பதா? அல்லது செய்தானைத் திருத்துவதா? இறுதியில் உள்ளதே ஒப்புக்கொள்ளத் தக்கது.

இறப்புக்குப் பின் நிகழ்வதென்ன? நல்லவர்க்கு உடனே முக்தி, தீயவர்க்கு அழிவில்லாத் தண்டனையா? அல்லது அழிப்பா? அழிப்பாயின் ஆன்மாவின் அழிவின்மைக் கொள்கைக்கு முரண் ஆகும். எனவே, முடிவில் எல்லாருக்கும் நன்மையே கிடைக்கும். கடவுள் இறுதியில் வெற்றியே பெறுவார்.

மீட்பியல்: (இரட்சிப்பு) இயேசு பெருமான் கூறிவந்த நற்செய்தி (சுவிசேஷம்) 'கடவுள் ஆட்சி அண்மையிலிருக்கிறது, மனந்திரும்புங்கள்' என்பதாம். காணமற்போனதைத் தேட வந்தேன் என்றும் சொன்னார். கடவுளின் ஆட்சியைப் பற்றிப் பற்பல உவமைகளின் மூலமாய்ப் போதித்தார். மானிடர் கடவுள் பிள்ளைகள் எனக் கூறி, கடவுள் பிள்ளைகளாக வாழ அழைத்தார். கடவுள் சித்தத்துக்குக் கீழ்ப்படிவதே உய்வு எனத் தெருட்டினார். கடவுள் ஒவ்வொரு

மதுரை மாவட்டத்தில்
மூன்று தலைமுறையாக நடந்துவரும்

ஒரிஜினல் நாகப்பட்டணம் நெய் மிட்டாய்க்கடை,



இது ஒன்றே.

1901 முதல் கீழாவணிமூல வீதியில்
நடத்தப்பட்டு 1942-ஐ முதல்
மதுரை 20, மேலச்சித்திரை வீதியில்
(மேலக் கோபுரம் சமீபம்)
நடந்து வருகிறது.

எங்கள் கடையில் இனிப்பு சரக்குகளை சுத்த நெய்யிலும், கார சாமான்களை நல் லெண்ணெயிலும் பக்குவத்துடன் தயார் செய்து வருகிறோம்.

V. வெங்கிட்டராமய்யர் சன்; *Pro* : V. அனந்தநாராயணன்.

RADHA KRISHNA JEWELLERY

ராதா கிருஷ்ண ஜுவல்லரி, கோயமுத்தூர்.

GOLD, SILVER AND DIAMOND MERCHANTS

BIG BAZAAR STREET, :: COIMBATORE.

Phone: 1290
Prop :
S. T. Radhakrishnan

RK சீல்

உத்திரவாதமானவை

வருக்கும் தந்தை; நீதியும் நேர்மையும் மீட்புக்கு அடிப்படை. விதிகளைக் கைக் கொள்ளுவதல்ல, மானிடர் செயல்களையே மாற்றுவது.

மீட்கு முறை: இயேசு கடவுள் அருளும் மன்னிப்பை எடுத்துக் கூறினர். கடவுளின் தியாக அன்பைத் தமது போதனையினாலும் சாதனையினாலும் தாம் பட்டபாடு மரணத்தினாலும் வெளிப்படுத்தினர். தமது உயிரை அநேகரை மீட்கும் பொருள் எனவும் குறிப்பிட்டார். அவருடைய சீடர்களும் தொண்டர்களும் அவர் காட்டிய மீட்பின் வழியைப் பற்பல உவமைகளாலும் உருவகங்களாலும் எடுத்துக் காட்டினர். அவரது சாவைப் பலியாகவும், கடவுள் மானிடரைத் தம்மோடு ஒப்புரவாக்குதலாகவும், கடன் இறுப்பதாகவும், தண்டனையாகவும் கருதினர். பிற்காலத்து இயல்புக்குத் தக்கபடியும் பற்பலர் பலவிதமாக விளக்கந் தந்திருக்கின்றனர். ஒரு சிலர் புறச் செயலாகவும் வேறு சிலர் அகச் செயலாகவும் பாராட்டியிருக்கின்றனர்.

திருச்சபையியல்: (The Church) கிருஸ்தவர் திருக்கூட்டம், அடியார் குழாம், இயேசு பெருமானுடைய திருத்தொண்டைத் தொடர்ந்து செய்து வருவது, புதிய ஏற்பாட்டைப் பிறப்பித்தது. இயேசு பெருமான் திருச்சபையை ஏற்படுத்தினரா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இக்கேள்விக்கு ஆம் என்றும் இல்லை யென்றும் விடை யிறுக்கலாம். அவருடைய திருத்தொண்டை இது தொடர்ந்து செய்து வருவதுபற்றி அவரால் இது ஏற்படுத்தப்பட்டது என்று கொள்ளலாம். ஆனால் இப்பொழுது திருச்சபையில் காணப்படும் பல்வேறு கூறுகளை நோக்கும்போது, இத்திருச்சபையை அவர் உண்டாக்கவில்லையென்று கொள்ளலாம். திருச்சபையைப் பற்றி அவர் அதிகமாகக் குறிப்பிடவில்லை; அது அவர் நோக்கமுமன்று; ஆனால், கடவுள் ஆட்சியைப்பற்றித் தான் விரிவாகப் பேசிக்கொண்டு வந்தார். இயேசு பெருமான் ஒரு சமூகத்தைப் படைத்தார்; தோழமையை ஏற்படுத்தினர். அதனைப் பிரசாரப்படுத்தத் திருச்சபை உண்டாகியது.

இத்திருச்சபையில் **காணப்படும் பண்புகள்** ஒற்றுமை, தூய்மை, பொதுமை, அப்போஸ்தலத் தொடர்பு. அப்போஸ்தலர் என்ற சொல்லுக்கு அனுப்பப்பட்டவர், தூதுவர் என்பது பொருள். இச்சொல்லையே இயேசு பெருமான் தமது சீடர்களுக்கு வழங்கினர். திருச்சபை கடவுள் ஆலயமாகவும், கிருஸ்துவின் மணப்பெண்ணாகவும், அவளுடைய திருஉடலாகவும் உருவகித்துப் பேசப்பட்டுள்ளது.

பிரிவுகள் (1) கிரேக்க வைதிக சபை: (Greek Orthodox Church) இது கிரேக்கப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட, கிரீசு, சின்ன ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலுள்ள சபைகளைக் குறிக்கும். இது ஏழு சாக்கிரமந்துகளைக் கைக்கொள்ளும். கி. பி. 1054-இல் லத்தீன் (Latin) சபையினின்று பிரிந்து கொண்டது.

(2) ரோமன் கத்தோலிக்க சபை: (Roman Catholic Church) இஃது இயேசு பெருமானுடைய சீடர்களில் முதன்மையானவராகிய பேதுரு அப்போஸ்தலரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. போப்பு (Pope), கண்காணி (Bishop), கானன் (Canon) முதலிய பட்ட வரிசைகளைக் கொண்டிருக்கிறது. போப்பும் திருச்சபையும் பிழைபட முடியாது என்னும் கொள்கையுடையது. ஏழு சாக்கிரமந்துகளைக் கையாளும். திருமுறையைப் போன்று, பாரம்பரியமும் அதிகாரமுடையது எனக் கூறுவது.

(3) எதிர்த்த சபை: (Protestants Church) கிருஸ்துவைத் தலைமையாகக் கொள்வது. இறைவன் திருவருளையும் விவிலியத் திருமுறையினையுமே பாராட்டுவது. அடியார் எல்லாரும் ஆண்டவனிடம் அணுகுந் தகுதி வாய்ந்தவர் எனக் கூறுவது.

இரண்டு சாக்கிரமந்துகளை மட்டும் கைக் கொள்ளும். பதினேரும் நூற்றாண்டில், மார்ட்டின் லூதர் (Martin Luther) காலத் திலிருந்து ரோமன் கத்தோலிக்க சபையி னின்று பிரிந்து கொண்டது.

சபை ஆட்சி : மூவகை ஆட்சிகள் வழக்கிலுள்ளன. 1. **கண்காணியர்** (Epis copaly) **(அத்தியட்சர்) முறை :** இது பழைமையானது. கண்காணி, குரு, மூப்பர் என்னும் மூன்று பட்ட வரிசைகளைக் கொண்டிருப்பது. கண்காணிக்கு மிகுந்த அதிகாரம் உண்டு. 2. **மூப்பர் முறை** (Presbyterian): இதில் எல்லாக் குருக்களுக் கும் சம உரிமை உண்டு. 3. **தனிச் சபை முறை** (Congregational): ஒவ்வொரு சபை யும் தனித்தனி ஆட்சியும் உரிமையும் கொண் டது. வெளியார் அதிகாரம் கிடையாது. ஆதி சபையில் இம்மூன்று முறைகளும் காணப்பட்டன. இன்றைய விரிவான கண் காணி முறை அன்று காண்பதரிது.

சாக்கிரமந்து இயல் : சாக்கிரமந்து (Sac rement) என்பது லத்தீன் மொழியாகும். இது ரோமப் படைவீரன் ஒருவன் செய்யும் ஆணை உறுதியைக் குறித்தது. திருச்சபை யில் அச்சொல் திரு அருள்வழி, திரு அருள் சாதனம் என்னும் பொருளில் வழங்கப் பெற்று வருகின்றது. இது தோன்றுத் திரு வருளுக்குத் தோற்றமளிக்கும் குறியைச் சுட்டும். பரம்பொருள் ஒன்றின் புறம்பான குறியாகும்.

கிரேக்க, ரோமன் சபைகளில் ஏழு சாக் கிரமந்துகள் வழக்கிலிருக்கின்றன. அவை, ஞானஸ்நானம், திடம்படுத்தல், தபசு, நற் கருணை, திருமணம், எண்ணெய் பூசல், குருப்பட்டம் என்பனவாம். எதிர்த்த சபை, ஞானஸ்நானம், நற்கருணை என்ற இரண்டை மட்டும் வைத்துக்கொண்டன.

ஞானஸ்நானம் : திரு முழுக்கு அல்லது திருவருள் முழுக்கு என்று கூறப்படும். இது தூய்மைப்படுத்தும் சடங்காகும். முன்னரே யூதர்களுக்குள்ளும், புறமதத்தினருக்குள் ளும் இது கையாளப்பட்டு வந்தது. இதனை இயேசு பெருமான் ஏற்படுத்தியதாகச் சொல்ல இயலாது; திருச்சபை ஏற்பாடே யாம். அக நிகழ்ச்சிக்கு அடையாளமான புற நிகழ்ச்சியாகும்.

நற்கருணை : இது திருவிருந்து என்றும் இராப் போசனம் என்றும் வழங்கப்பெறும். இது யூதர்கள் ஆண்டுதோறும் கொண்டா டிய பஸ்கா என்னும் நினைப்பு விழாவோடு தொடர்புடையது. அக்கொண்டாட்டத்தில் அப்பமும் திராட்ச ரசமும் வழங்கப்பெறும். இயேசு பெருமான் தமது சீடரோடு கடைசி யாக இராப் போசனத்தில் அப்பத்தை யெடுத்து இது என் மாமிசம் என்றும், திராட்ச ரசத்தையெடுத்து இது என் இரத் தம் என்றும் சொல்லி, அவற்றை அருந்தும் படி கொடுத்தார். இதுவே இந்த சாக்கிரமந் தின் தொடக்கம். மாமிசத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணுவது பற்றி யேற்பட்ட கருத்து வேறுபாடுகளால்தான் திருச்சபை பல கிளைகளாகப் பிரிந்து காட்சி யளிக்கின்றது.

முடிவியல் : (Escatalogy) இது மானி டம், உலகு இவற்றின் இறுதிநிலையைப் பற்றியது. இதில், இறப்பு, இறவாமை, உயிர்த்தெழுதல், கிருஸ்துவின் இரண்டாம் வருகை, நடுத் தீர்ப்பு, பின்னைய இருப்புநிலை என்பவை அடங்கும்.

வரலாறு குறிக்கோளுடையது. அது கண்மூடித்தனமாக நடைபெறுவதில்லை. விவிலியத்தில் இவ்வரலாற்று முறை மீட்பு முறையாக அமைந்துள்ளது. கடவுளே மீட்பர்.

இறுதிநிலையைப் பற்றிக் கருத்து வேறு பாடுகள் உள. இறுதிநிலை பரிணம முறை யைத் தழுவியது அன்று; திடீரெனக் கடவு ளால் புகுத்தப்பெற்று ஏற்படுவது என்று யூதர்கள் நம்பினர்கள். தங்கள் பகைவர் அழிக்கப்பெற்று, தாங்கள் நிலைபேறு

அடைய வேண்டும் என்பது அவர்கள் கொள்கை.

இயேசு பெருமானின் கடவுள் ஆட்சிக் கொள்கை யூத இனத்தைப் பொறுத்த தன்று ; அரசியல் பற்றிய உலக ஆட்சியு மன்று. அஃது அறநெறியையும் ஆன்மீக வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண் டது.

கடவுள் ஆட்சி தோன்றும் முறைபற்றிச் சுவிசேடக் கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கிடக்கின்றன. திடீரென்று வரும் எனவும், இப்பொழுதே வந்திருக்கின் றது எனவும், எதிர்காலத்தில்தான் வரும் எனவும் சொல்லப்பட்டிருக்கக் காண்கின் றோம். ஆதித் திருச்சபையார் கடவுள் ஆட்சியைக் கிருஸ்துவின் இரண்டாம் வருகையோடு இணைத்து, அதனைத் தங்கள் காலத்திலேயே எதிர்பார்த்தனர். ஒரு சிலர் கூடிய சீக்கிரம் வரும் என்றனர். கிருஸ்து வின் வருகை அவருடைய உயிர்த்தெழுதலி லும், பரிசுத்த ஆவி அருளப்பட்ட நிகழ்ச்சி யிலும், எருசலேம் நகர் அழிவுண்டதிலும் நிறைவேறியது என்று பலபடக் கூறுவாரு முளர்.

ஆயிர ஆண்டு ஆட்சி: கிருஸ்துவின் இரண்டாம் வருகையில், இரத்தச் சாட்சி களும், பரிசுத்தவான்களும் உடலோடு உயிர்த்தெழுந்து, வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, கிருஸ்துவோடு ஆயிரம் ஆண்டு ஆள்வார்கள். அக்காலத்தில் சாத் தான் கட்டுண்டு கிடப்பான். இதுதான் முதலாம் உயிர்த்தெழுதல். அதற்குப் பின் னர், சாத்தான் விடுவிக்கப்படுவான். மீண் டும் அறத்துக்கும் மறத்துக்குமிடையே கடும்போர் நிகழும்.

பின்னர்க் கிருஸ்து உலகுக்கு மீண்டும் வரும்போது எல்லாரும் உயிர்த்தெழுவர். இஃது இரண்டாம் உயிர்த்தெழுதல். சாத் தான் தீயில் தள்ளப்படுவான். தீமையழிக்கப் பெறும்.

இயேசு பெருமான் உயிர்த்தெழுதலும் வாழ்க்கையின் தொடர்ச்சியும் வேறு எனக் கொள்ளவில்லை. கல்லறையில் உள்ளோர் எழுவார் என்றும் குறிப்பிடுகிறார். இறப்பை நித்திரை என்றும் அழைக்கின்றார். பவுல், அப்போஸ்தலர் "இறந்த உடலே மீண்டும் எழுவதில்லை. உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய சூட்சும உடல் உண்டு" எனக் குறிப்பிடுகின்றார்.

கிருஸ்தவ அடியான் ஒருவனுக்குக் கிருஸ்துவின் இரண்டாம் வருகையென்பது அவனுடைய இறப்பில் நடைபெறுவது. அவனுக்கு ஆவிக்குரிய உடல் கொடுக்கப் படுகிறது. கடைசி வரைக்கும் அவன் அதில் தங்கியிருக்க, கடைசி நாளில் முடிவான மாற்றம் ஏற்படும்.

இடைப்பட்ட நிலை: உயிர்த்தெழுதல் வரைக்கும் உயிர்கள் பாதாளத்தில் தங்கி யிருக்கும் என்று யூதர்கள் எண்ணி வந்தார் கள். பரதீசு என்று வழங்கப்படுகிற நிலை யும் உண்டு. இதில் சிறுவர், புறமதத்தார், கிருஸ்துவின் செய்தி கேள்விப்படாத மக் கள் தயங்குவர்.

நடுத் தீர்ப்பு: யூதர்கள் 'யெகோவா வின் நாள்' என்று நடுத் தீர்ப்பு நாளைக் குறிப்பிட்டனர். அந்நாளில் அவர்களில் தீயோரும் அவர்கள் பகைவர்களும் நடுத் தீர்க்கப்படுவார்கள் என்று எண்ணி வந் தனர். யெகோவாவே நடுத் தீர்ப்புச் செய் வார். கிருஸ்தவர்கள் நடுத் தீர்ப்புச் செய்ப வர் கிருஸ்துவே என்று கருதினர்கள். நடுத் தீர்ப்பு இவ்வுலகிலேயே, இம்மையிலேயே தொடங்கிவிட்டது என்று இயேசு பெரு மான் சொன்னதாகவும் தெரிகிறது. எனி னும், அவர் காலத்துக்கு முற்பட்டவர்க்கும், சுவிசேடம் கேள்விப்படாதவர்க்கும் நடுத் தீர்ப்புக்குரிய சமயமும் இடமும் இருத்தல் வேண்டும். மானிடர் கதிதான் என்ன? அடியாருக்கு நித்திய ஜீவன், அழியா வாழ்வு. அது இப்போதே இங்கே தொடங்கி

மறுமையில் முற்றுப்பெறுவது. அதன் தன்மை சொல்லுதற்கரியது. கடவுள் இருப் பின் அவரைப் போலாதல் ஆகும். தீயோரும் இறுதியில் உய்வுபெறுவர்.

ஒப்பந்த இறவாமை : (Conditional Immortality) இறவாமை மானிட இயல்பு அன்று, ஆனால், கிருஸ்துவுடன் இணைக்கப் பெற்றால் இறவாமை யடையலாம்.


அழிவுக் கொள்கை : மானிடர் இயல் பாக இறவாமையுடையவர். ஆனால், பாவத் தில் தொடர்ந்து செல்ல, இறவாமையழி வுறும்.

இவையிரண்டு கொள்கைகளும் நித்திய தண்டனைக்கு மாற்றாக எழுந்தவை.

நித்திய தண்டனை தீயோர் இறுதிநிலை யாகுமா? பொருள் என்ன? தண்டனை பழி வாங்குவதா? திருத்துவதா? நித்திய என் னும் சொல் இம்மையினின்று மறுமையைப் பிரிக்க வழங்கப்படுவது.

மறுமையிலும் வாய்ப்பு : வாழ்க்கை தொடர்ந்தே செல்வது. இம்மையில் குறை வுள்ள அடியார் திடீரென நிறைவாக்கப்பட மாட்டார். எனவே, மறுமையில் அன்னார்க் கும், கிருஸ்துவை அறியாதார்க்கும் வாய்ப்பு அளிக்கப்படும்.

தமிழனின் தலைசிறந்த தயாரிப்பு! மதுரையின் மகத்தான சிறப்புகளில் ஒன்று !!



கோவை & நீலகிரி
ஏஜெண்ட் :—

D. விஸ்வநாதன்,
பெரியகடை வீதி,
கோவை.

மணீஸ் கன்பெக்ஷனரி NO.2. கீழப்பட்டமார்தெருமதுரை



இஸ்லாம்

(சாந்திசமயம்)

அல்ஹாஜ் பா. தாவூத் ஷா, பீ. ஏ., சென்னை

★

இஸ்லாம் என்பது எம் முஸ்லீம்கள் பின் பற்றி யொழுகும் சன்மார்க்கத்தைக் குறித்துக் காட்டுவதா யிருக்கிறது. இச் சொல், "இறைவனுக்கு முற்ற முற்ற அடி முடி சாய்த்தல்" என்றும், இம்முழு முடி சாய்த்தலால் "அடியான் ஆண்டானுட னும் அவனடியார்களுடனும் சமாதானத் துடன் சாந்தி பெறுதல்" என்றும் பொருள் கொள்ளும். இச்சன்மார்க்கத்தின் பெயர் **'இஸ்லாம்'** என்றே இறைவனாலே இயம் பப் பெற்றுள்ளது: "இன்று நான் நுங்க ளுக்காக நுங்கள் சன்மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்; இன்னம் நுங்கள்மீது எனது அருட்கொடையையும் பரிபூரண மாக்கி விட்டேன்; மேலும் நுங்களுக்காக நான் இஸ்லாத்தை (நுங்களுக்குரிய) சன் மார்க்கமாகத் தேர்ந்தெடுத்துக் கொண் டேன்" (குர்ஆன், 5:3). எனவே, இதனை 'முகம்மதிய மதம்' என்று அழைப்பது தகா தென்றே அறிஞர் அறைவர். இஸ்லாம் என் பது முஹம்மது நபியால் சுயமே உற்பத்தி செய்துவிடப்பட்ட ஒரு நூதன மதமன்று. மனிதன் இத்தரணியில் தோன்றியது முதலே இஸ்லாமும் உடன் தோன்றி யிருக்கிறது. என்னெனின், இறைவன் ஏவிய வண்ணம் அடிபணிந்து முடி சாய்த்து நடக்கும் அடி யான் அவனுடனும் அவனடியார்களுடனும் சாந்தி மயமாய விசிராந்தியையடையப் பெறு கிறான் என்னும் தத்துவம் நூதனமாய்ப் பதி னான்கு நூற்றாண்டுகட்கு முன்னேதான் இக்குவலயத்தில் கண்டு பிடிக்கப்பட்ட தென்று சொல்வது சரியன்றே! மானிடன் தோன்றியது முதலே உடன் தோன்றியுள்ள இந்தச் சாந்தி சமயத்தை இம் மேதினியில் அவ்வக் காலத்தே அவ்வத் தேயத்தே அவ தரித்துள்ள, ஆண்டவனனுப்பிய தீர்க்க தரிசிகளெல்லாம் (குர். 35:24; 10:47; 40:78) உபதேசித்திருந்தும், கால அடை விலே மக்கள் தங்கள் சொந்தக் கருத்தைப் புகுத்தி, அந்தப் பரிசுத்த சமயத்தைப் பாழ் படுத்திவிட்டனர்.

இறுதியாகப் பதினான்கு நூற்றாண்டு கட்கு முன்னே அரப் நாட்டுத் தலைநகராய திரு மக்காவிலே அவதரித்த மஹான் முஹம் மத் நபியவர்கள்—(இவர்கள் மீது இறையரு ளும் அவனது ஆசீர்வாதமும் வந்திறங்கக் கடவன!)—பிற்காலத்தில் மானிடக் குறும் பால் கொண்டுவந்து நுழைக்கப்பட்ட இடைச் செருகல்களனைத்தையும் களைந்து, சுத்த சுயமாய அந்தப் பண்டைச் சாந்தி மார்க்கத்தை என்றென்றும் சிதைவுறுவாறு நிலைபெறுத்திச் சென்றார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்னுமா போன்று, பண் டைக் காலத் தேவைக்கு வேண்டுவனவா யிருந்து, பிற்காலத் தேவைக்கு வேண்டா தனவாய் விட்ட விஷயங்களெல்லாம் விலக் கப்பட்டு, இக்காலத்துக்கும் இனி எக்காலத் துக்கும் வேண்டப்படும் சகல விஷயங்களும் சாங்கோபாங்கமாய்க் குர்ஆன் மஜீதிலே— இறையருளால் முஹம்மத் நபிக்கு இறங்கிய திருமறை 'குர்ஆன்' என்று அழைக்கப்படு கிறது—விளக்கப்பெற்றுள்ளன. முஹம்மத் நபி அவதரித்த காலத்தில் தேசாதேசப்

போக்குவரவுச் சாதனம் மிக்குப் பெருகி, அங்கங்கே யிருந்த மக்களெல்லாம் ஒரு நாட்டாருடன் இனியொரு நாட்டார் நெருங்கிப் பழக நேர்ந்துவிட்டமையின், வெவ் வேறு தேயத்துக்கு வெவ்வேறு நபி தேவை யென்னும் அவசியம் இல்லாதே போய்விட்டது. எனவேதான், இந்த முஹம்மத் நபி இவ்வுலகனைத்திற்கும் பொது நபியாயே அனுப்பப்பெற்றுள்ளாரென இறைவன் தன் திருமறையில் பலபடப் புகன்றிருக்கின்றான். (21 : 107 ; 22 : 67). இஸ்லாத்திலே எல் லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் தேவைப்படும் எல்லா நல்ல விஷயங்களும் முழுமையாய் முற்றுறத் துலக்கப்பட்டிருத்தலினால் (39 : 27), இந்த நபிக்குப் பின்னே இனியொரு நபி அவதரிக்க வேண்டிய அவசியமில்லாதே போய் விட்டமையான், இவரே இறுதி நபி யென்று குர்ஆன் ஷரீப் கூறி விட்டிருக்கிறது (33 : 40).

சமயவுறுதியும் சரியை கிரியைகளும்

இஸ்லாத்தில் சித்தாந்தமென்றும், அனுஷ் டானமென்றும் இருபெரும் பிரிவுகளுள. சித்தாந்த மென்னப்படும் சமய நம்பிக்கை யில்லாது அனுஷ்டான மென்னப்படும் கிரியைகளால் மட்டும் பயன் விளைவதில்லை ; கிரியைகளில்லாது வெறு நம்பிக்கையால் மட்டுமேயும் கோரிய பலன் கிட்டுவதில்லை. ஆதலால், நம்பிக்கையென்ற **ஈமான்** என் னும் அகமும், கிரியையென்ற **இஸ்லாம்** என்னும் புறமும் ஒன்று சேர்ந்ததேதான் பரந்த இஸ்லாமாகும். இரண்டையும் தனித் தனியே பிரித்தலியலாது ; ஒன்றுடனொன்று விரவியே இவை நிற்கும். "ஈமான்" என் னும் நம்பிக்கைப் பகுதியில் ஏழு அம்சங் களும், "இஸ்லாம்" என்னும் கிரியைப் பகுதியில் ஐந்து அம்சங்களும் உண்டு. அவை :—

ஈமானின் 7 அம்சங்கள் : 1. ஒரே இறைவனிருக்கிறான். இவனுக்கு இணை யானவனேனும் துணையானவனேனும் எவ

உங்களுக்குத் தேவையான இனிய தமிழ் நூல்கள்

★

கதை	..	2	4 0
பாஞ்சாலி சபதம்	..	1	12 0
தேசிய கீதங்கள்	..	1	0 0
கண்ணன் பாட்டு	..	1	0 0
சுயசரிதையும் பிரபாடல்களும்		1	4 0
குயில்	..	0	8 0
தராசு	..	1	0 0
ஞானரதம்	..	1	4 0
மாதர்	..	1	8 0
கலைகள்	..	1	8 0
சமூகம்	..	3	0 0
தத்துவம்	..	2	0 0
கட்டுரைகள்	..	7	8 0

★

நாவலர் பாரதியாரின் நூல்கள்

மாரிவாயில்	..	1 8 0
திருவள்ளுவர்	..	அச்சில்
தொல்காப்பியம்	..	அச்சில்
தசரதன் குறையும் கைகேயி நிரையும்	..	அச்சில்

காந்திஜி

நமது மொழிப் பிரசினை	..	1 12 0

★

மற்றும்

குழந்தை இன்பம்	..	1 4 0
கட்டபொம்மு	..	0 8 0
புதுயுக மனிதன்	..	0 10 0

மற்றும் உங்களுக்குத் தேவையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் கிடைக்கும்.

●

பாரதி புத்தக நிலையம்

டவுன்ஹால் ரோட், மதுரை

னுமேயில்லை. எனவே, எவ்விதப் படிமப் பூசையும் இஸ்லாத்திலில்லை. இறைவனைப் பார்க்கினும் வேறு பொருள்களிடத்து—அவை மனைவியேயாயினும், மக்களேயாயினும், பொன்னேயாயினும், பொருளேயாயினும், பதவியேயாயினும், பட்டமேயாயினும்—மிகவாய பிரியம் வைக்கின், அதுவுங் கூட இணைத்துப் பூசித்தலென்றே கொள்ளப்படுகிறது. ஏக இறைவனுக்கு மனைவியாதல், மக்களாதல் இல்லை; என்னெனின், இவன் ஆணுமல்லன்; பெண்ணுமல்லன். சுருக்கிச் சொல்லின், "இறைவனைப் போன்றதைப் போன்றதுகூட எதுவுமே இங்கில்லை," என்பது குர்ஆனின் கூற்று (42: 11). 2. இறைவனுடைய ஏவல்களை இப்பிரபஞ்சத்தில் நிறைவேற்றிவைக்கும் தேவதூதர்கள் (மலக்குகள்) இருக்கிறார்கள். நபிமார்கட்கு இறைவனறிவிப்புக்களைக் கொணர்ந்தளிப்பவரும் ஒரு சிறந்த மலக்கேயாவர். 3. இறைவன் திருமறைகள் இவ்வுலக மக்கட்கெல்லாம் அருளப்பட்டேயிருக்கின்றன. அவையனைத்தும் கால அடைவிலே அழிந்தோ பழுதுபட்டோ பற்றுமலோ போய்விட்டமையான், இறுதியாகக் குர்ஆனே எவ்வித மாற்றமேனும் திருத்தமேனும் இல்லாது இப்பூவுலகுக்கெல்லாம் இறுதியாய பொதுமறையாயிருந்து வருகிறது. 4. எல்லாக் காலத்திலும் எல்லா நாட்டிலும் இறைவன் தூதர்கள்—நபிமார்கள்—அவதரித்துள்ளார்கள் (10: 47; 40: 78). எல்லா நபிமாருக்கும் இறுதியில் தோன்றிய முஹம்மத் நபியே இறுதி நபியாயிருக்கிறார்கள் (33: 40). 5. இறுதித் தீர்ப்பு நாள் ஒன்று வரும் (2: 4); அன்று அவரவர் செய்துள்ள நன்மை தின்மை கட்கு ஏற்றவாறு சம்மானம் அல்லது சிக்ஷையளிக்கப் பெறுவர். 6. சரியான நல்லது எது? சரியான தீயது எது? என்னும் அளவை ஆண்டவனிடத்தேதான் இருக்கிறது. 7. நியாயத் தீர்ப்புக்காக அனைவரும் அந்த நடுத்தீர்வை நாளன்று ஆண்டவன் திருமுன்பினில் கொண்டுவந்து சேர்க்கப் பெறுவார்கள்.

சுவர்க்கப் பேரானந்தம்

அதுபொழுது நன்மை மிகுந்தவர்கள் சுவர்க்கத்துக்கும், தின்மை நிறைந்தவர்கள் நரகத்துக்கும் அனுப்பப் பெறுவார்கள். சுவர்க்கவாசிகள் மேன்மேலும் அங்கேயுள்ள ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டே சென்று, முடிவாக இறைவனது முழுப்பிரீதிக்கும் ஆளாகி (39: 20) அவனது அண்மையிலே யிருந்து, அவ்வெல்லாம் வல்ல அல்லாஹ்வின் திவ்ய தரிசனத்தால் விளையும் பேரானந்தப் பெருக்கத்தைப் பெற்றுத் திளைத்திடுவார்கள். நரகவாசிகள் அவர்களிழைத்த தின்மைகளின் களிம்பு தீரும்வரை அந் நரகத் தீயிலே வெதுப்பப் பெற்று, இறுதியிலே புடமிடப்பட்ட பொன்னேபோல் அழுக்கு நீங்கிப் பரிசுத்தர்களாகி, அதற்கப்பாலே அவ்வான்மவுலகினில் முன்னேறிச் சென்று, முடிவிலே முன்னர்ச் சென்ற புண்ணிய ஆத்மாக்களுடனே சேர்ந்து, அவர்களடையும் அல்லாஹ்வின் திவ்ய தரிசனப் பேரானந்தத்தை யடைவார்கள். எனவே, இஸ்லாத்தில் கருமமென்பதும் ஜன்மமென்பதும் இல்லை யென்பது தெளியப்பெறும்.

இஸ்லாத்தின் கிரியைகள்

மீக் கூறியவாறுள்ள ஈமானுக்கு—சமயவுறுதிக்கு—உரிய ஏழு அம்சங்களுக்குப் பின்னே, இறைவன் பிரீதியையும் அவனது தரிசன மகிமையையும் அடைய ஐந்து அனுஷ்டான கிரியைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன: 1. இறைவன் ஏகனே யென்பதற்குச் சிறிதும் முரணில்லாது எல்லா முஸ்லிம்களும் நடந்து கொள்ளுதல் வேண்டும். 2. நாடோறும் ஐந்து வேளைகளில் அல்லாஹ்வை நினைத்து வணங்கித் தொழுதல் வேண்டும். 3. ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட முதலுடைய ஆண் பெண் அனைவரும் ஆண்டுதோறும் தம்பா

லுள்ள "ஆஸ்தி"யினின்று இரண்டரைச் சத விகிதம் ஏழைகட்குத் தானமாயீதல் வேண்டும். 4. ஆண்டுக்கொரு முறை ரமலான் மாத முழுதும் வயது வந்த ஆண் பெண் அத்தனை பேரும் பகல் வேளைகளில் உண்ணுநோன்பு நோற்றிடுதல் வேண்டும். 5. போதிய பொருட் பெருக்கமுள்ள செல்வர்களெல்லாம் ஆயுளில் ஒருமுறையேனும் திரு மக்கா சென்று, ஆங்குள்ள ஆதியாலயமாகிய கஃபாவைத் தரிசித்தல் வேண்டும்.— கஃபா வென்பது ஒரு நீள் சதுரக் கருங்கற் கட்டிடமேயாம்; அதனுள்ளே ஏதொரு படிமமேனும் படமேனும் வேறெதுவேனும் இல்லையேயில்லை. இதுவே ஏக இறைவனை வணங்க இத்தரணியில் நிருமிக்கப்பட்ட ஆதியாலயமென இயம்பப் பெற்று வருகிறது. இந்தக் கஃபா இப்ருஹீம் நபியால் சற்றேறக் குறைய நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னே, அதற்கு முன்னர்க் கிலமாய்க் கிடந்த அடிப்படை மீது புதிதாய் நிருமிக்கப்பட்டுள்ளது.

ஏக சகோதரத்வம்

இஸ்லாத்துக்குரிய மூலக் கோட்பாடு இறைவன் ஏகனே என்பதாயிருக்கிறது. அகத்திலும் புறத்திலும், சித்தாந்தத்திலும் அனுஷ்டானத்திலும் ஆண்டவன் ஒருவனே தான். எக்காரணத்தைக் கொண்டும் இறைவனுக்கு இணைவைத்து, அல்லது படிமம் நிறுவிப் பூசிப்பது கூடாது. இறைவன் ஏகனே என்னும் கோட்பாட்டை யொட்டி, அடுத்தபடியில் இப்பாருலக மக்களெல்லாம் ஏக சகோதரக் குழுவினரே என்னும் கொள்கை ஏற்பட்டிருக்கிறது. மனிதனுக்கு மனிதன் மேன்மை தாழ்மை யில்லை : வெள்ளையன் கறுப்பன், மாநிறத்தான் மஞ்சணிறத்தான், காக்கேசியன் மங்கோலியன் நீகிரோவன் என்ற ஜாதி அல்லது இன வேறுபாடு இஸ்லாத்தில் இல்லை. இச் சன்மார்க்கத்தில் தீண்டாமை பாராமைபோன்ற எத்தகை வருணச்சிரமமும் இல்லை. பிறவியால் எவனும் வேறெவனையுங்காட்டில்

மிகுந்த திருப்தி தரக்கூடிய

அழகிய வேலைத்திறன் மிக்க

பொன், வைர நகைகளுக்கு



P. A. R.

சீல் நம்பிக்கையானவை

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

"ஸ்வர்ணமாளிகை"

கோயமுத்தூர்

தந்தி : ராஜா :: போன் : 268

தபால் பெட்டி : 139

உயர்ந்தவனல்லன். "நிச்சயமாக, உங்களுள்ளே அல்லாஹ்வினிடத்து மிகவு மேம்பட்டவன் உங்களுள்ளே அவன் மாட்டுள்ள அச்சத்தால் தன் கடமையில் வழுவாதிருப்பவனே யாவான்," என்பது குர்ஆன் கூற்று (49 : 13).

பெண்களின் பெருமை

இஸ்லாத்தில் பெண்களின் நிலைமை ஆண்களுக்கு நிகராகவே உயர்த்தி வைக்கப்பட்டுள்ளது. அஞ்ஞான காலத்தில் ஆடுமாடுகளே போல் நடாத்தப்பட்டுவந்த பெண்ணினம் இப்பால் ஆண்களுக்குச் சமமென இஸ்லாம் ஆக்கிவைத்து விட்டது. ஆயின், குடும்பச் சுமையை ஏற்றுப் பராமரிப்பது ஆடவர் கடமையாதலினாலும், பெண்டிரின் மேனியமைப்புப் பொதுவாய் ஆடவன் உடலமைப்பைப்போல் உரம்பெற்றில்லாமையாலும், இவர்கள் வமிசப் பெருக்கத்துக்கென இறைவனால் வேறு விதமே படைக்கப்பட்டிருத்தலினாலும், ஆண்கள் பெண்களைப் பார்க்கினும் மிகச் சிறிதே மேலாக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். முஸ்லிம் மாதர்கள் இவ்வுலக காரியங்களில் மட்டுமின்றி, ஆன்மிக விஷயங்களிலும் ஆடவருக்கு நிகராகவே அமர்த்தப்பெற்றுள்ளார்கள். உலகப் பொருள்களை இப் பெண்மணிகள் சம்பாதிக்கலாம், சுவீகரிக்கலாம், வைத்துக்கொள்ளலாம், விற்கலாம், வாங்கலாம், வினியோகிக்கலாம். இன்னம் எத்தகைய கண்ணியமுள்ள தொழிலும் நடத்தலாம். மனைவியின் சொந்தச் சொத்தில் கணவருக்குக் கூடத் தலையிட உரிமையில்லை. பெண்கள் தாய்தந்தையரின் சொத்திலே பாகம் பெறுவதுடன், விதவைகளாகி விட்டால் கணவரின் சொத்திலும் பங்கு பெறுகிறார்கள்.

திருமணமும் பிரிவினையும்

பெண்மணிகள், அவர்களனுமதியின்றி எவருக்கும் மணமுடித்து வைக்கப்படுவது கூடாது. மண முடிவுக்கு முன்னே மாப்பிள்ளை அப் புதுப் பெண்ணுக்குத் திருமணக் கட்டணமென்னும் **மஹ்ர்த்** தொகையொன்று கொடுக்கவேண்டும். இஃது, அவளை மணக்கோலத்தின் பொழுதே ஒரு சொந்தச் சொத்துக்கு உரியவளாயுயர்த்தி வைப்பதாயிருக்கிறது. முஸ்லிம் மாதர்—கணவர் மனைவியரை விவாக விலக்குச் செய்வதேபோல்—கணவர்பாலிருந்து விவாக விலக்குப் பெற உரிமை பெற்றுள்ளார்கள். விதவா விவாகமென்பது பதினான்கு நூற்றாண்டுகட்கு முன்னரே முஸ்லிம் மாதருக்கு உரிமையாக்கப்பட்டிருக்கிறது.

ஒழுக்கம்

இனி, இஸ்லாத்தில் கணவர்-மனைவியர் ஒழுக்கம், குடும்பப்பொறுப்பு, சமுதாய நலன் எல்லாம் செவ்வன் செய்துவைக்கப்பட்டிருப்பதுடனே, வியபிசாரம், மதுபானம், சூது பொருதல், வட்டிவாங்கல், கொலை, களவு ஆகிய வெல்லாமும் அடியுடன் தடுக்கப்பட்டுள்ளன. மனிதன் தீயதை யகற்றி நல்லதைச் செய்து, இப் பௌதிக வுலகிலும் அவ்வான்ம வுலகிலும் முன்னேறுதற்குரிய எல்லா நல்லவழிகளும் இஸ்லாத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

கல்வி

கல்வித் துறையில் இஸ்லாம் செய்துள்ள சீர்திருத்தம் மிகவும் மெச்சற்குரியதாயிருக்கிறது. அறிவு சீவிலிருப்பினும், முஸ்லிம் ஆணும் பெண்ணும் அக்கல்வியை நாடிச் சென்று பயிலல் அத்தியாவசியமாகும். (இது நபி பெருமான் திருவாக்கு). எனவே, கல்வி கற்பதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தகை வேற்றுமையும் பாராட்டப் படுவதில்லை. கல்வியறிவே யில்லாதிருந்த அக்கால அஞ்ஞான அரபிகள் சடிதியிலே சகலகலாவல்லுநர்களாக உயர்ந்து, இருளடர்ந்து கிடந்த அக்கால ஐரோப்பாக் கண்டத்துக்குள்ளே கல்வியறிவைச் சமந்து சென்று சுடரொளியைக் கொளுத்தி விட்டார்கள். எழுதப்படிக்கத் தெரியாதிருந்த **உம்மீ**

நபிக்கு ஆதியில் ஆண்டவனறிவித்த ஏவல் கல்வி கற்கச் சொன்னதாயே யிருக்கிறது. "படைத்த உமது ரக்ஷகனது திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக; அவன் மனிதனை உதிரக்கட்டியினின்று உண்டு பண்ணினான். ஓதுவீராக, இன்னம், உம்முடைய ரக்ஷகன் மாபெருங் கண்ணியம் வாய்ந்தவனாயிருக்கிறான். அவன் எழுதுகோலைக் கொண்டு எழுதக்கற்பித்தான்; மனிதனுக்கு அவன் அறியாதிருந்ததை அறியக் கற்பித்தான்" (96 : 1—5) என்னும் இவ்வைந்து திருவாக்கியங்களே இறைவனால் முஹம்மத் நபிக்கு முதன்முதலா யறிவிக்கப்பட்ட திருமறைச் சுலோகங்களா யிருக்கின்றன. இஸ்லாத்துக்கு முன்னே குருகுலங்களிலும் மடாலயங்களுள்ளுமே புகுந்து கிடந்த கல்வி பொதுமக்கட் சொத்தாய்ப் பகிரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டு, பல்கலைக் கழகங்கள் வாயிலாய்ப் புகட்டப்படுமாறு முதன் முதலாகச் செய்தவர்கள் அக்கால அரப் முஸ்லிம்களே யாவார்கள். இன்றும் எகிப்து நாட்டுக் கெய்ரோவில் இலங்கிவரும் "அல் அஜ்(z)ஹர்" என்னும் இஸ்லாமிய பல்கலைக் கழகமே இப்பாருலகில் மிகமிகப் புராதன, ஓராயிர மாண்டுகட்கு மேற்பட்ட வயது முதிர்ந்த சர்வகலாசங்கமாயிருக்கிறது. ஸ்பெயின் தேயத்தில் அவ்வரபிகள் விதைத்த வித்தே இதுகாலை அம்மேனாடெங்கணும் விஞ்ஞானக் கலைகளாய்க் கொடி படர்ந்தோடுகின்றன. பூமி உருண்டையென்பதையும், மேற்குக் கோளத்தில் ஒரு பெரிய பூபாகம் உண்டென்பதையும் முஸ்லிம் கல்விச்சாலையிலிருந்தே கொலம்பஸ் கற்று வெளிப்பட்டாரென ஸ்பெயின் முஸ்லிம் சரிதை சான்று பகர்கின்றது.

அரசியல்

அரசியற்றுறையில் இஸ்லாம் குடியாட்சிக்குரியதாயே யமைந்துள்ளது. இதன் தலைவர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் படுவார். இவர், ஆலோசகர்களாய அமைச்சர்களின் பரியாலோசனையைக் கேட்டே ஆட்சி புரிவார். அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதரும் வகுத்துள்ள நியாயப் பிரமாண முறைப்படி ஆட்சி செலுத்தும் வரையே இவர் இஸ்லாமிய குடியரசுத் தலைவராயிருப்பார். அந்த நியதி முறையை இவர் மீறிவிடுங்கால், இவருக்குரிய தலைமைப் பதவியினின்று வீழ்த்தப்பட்டு விடுவார். இஸ்லாத்தின் தற்காப்பிற்காக இவர் போர் தொடுக்கலாம். ஆனால், இஸ்லாத்தை ஏனையவர்மீது சுமத்தவேனும், வலுச்சண்டைக்குச் செல்லவேனும் எந்த முஸ்லிமுக்கும் அனுமதியில்லை. "சமய விஷயத்தில் சற்றும் கட்டாயம் கூடாது" என்பது இறைவனாணை (2 : 256). எனவே, இஸ்லாம் வாட்படைத் துணைகொண்டே எங்கும் பரத்தப்பட்ட தென்பது வீண்பழியேயாகும். தற்காப்புப் போரிலும் எதிரியிழைக்கும் அழிவினளவுக்கே முஸ்லிம்களும் அவ்வெதிரிக்கு அழிவை விளைக்கலாம். எதிரி சமாதானத்தை விழைந்தால், அவ்விழைவு வஞ்சக நோக்குடனே பிறந்திருப்பினும், முஸ்லிம்கள் அக்கணமே அப்பகைவனது கோரிக்கைக்கு இணங்கிப் போதல் வேண்டும். ஏனென்றால், 'இஸ்லாம்' என்னும் சொல்லே 'ஸலாம்' (சாந்தி) என்னும் மூலத்திலிருந்து பிறந்த வார்த்தையாயிலங்குகிறது. ஸலாத்தை விரும்பும், ஸலாத்தை நல்கும் மார்க்கமே இஸ்லாம். அப்படிப்பட்ட ஸலாத்தைப் பிறர்க்களிப்பவனே முஸ்லிம்.



குருபரன் முத்திரையுள்ள

மால்சன் மருந்து

REGD.



தலைவலி, ஜல தோஷம், ஜுரம், கை கால் வலி, வாய்வுக் குத்து, பல் வலி, அஜீரணம் முதலிய வியாதிகளுக்கு சிறந்த மருந்து.

★

இம்மருந்து உங்கள் வீட்டில் இருந்தால், சிறந்த டாக்டர் — அருகில் — இருப்பதுபோலாகும்.

★

தயாரிப்பாளர்கள்:

மால்சன் மானுபாக்சரிங் கம்பெனி

217-218, மேலமாசி வீதி, மதுரை.



பிறநாட்டார் தமிழ்த் தொண்டு

யோகி சுத்தானந்த பாரதியார்

★

1

உலக மொழிகளில் தமிழுக்குச் சிறப்பான இடம் உண்டு; கீதையைப் போற்றும் அயலார் குறளையும் போற்றுகின்றனர். என் ஐரோப்பிய யாத்திரையில் ஒவ்வொரு நாட்டிலும், தமிழை விரும்பும் நண்பரைக் கண்டேன். நான் பேசிய கூட்டங்களில் தமிழ்ப் பாடல்களைச் சொல்லி ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மொழி பெயர்த்தேன். அப்போது ஐரோப்பியர் ஆர்வத்துடன் கேட்டனர்; "உங்கள் மொழி அருவி முழக்கம் போல் இருக்கிறது" என்றனர். பாரிஸ் பொது நூலகத்தில் சங்க இலக்கியங்கள் பல கண்டேன்; லண்டன் நூலகத்தில் அரிய தமிழ் நூல்கள் உள்ளன. ரோமில் வாடிகன் கோயிலைக் காணவந்த ஒரு பாதிரியார் 'திருக்குறளில் பைபிளைக் காண்கிறேன்' என்றார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற குறளையும் சொன்னார். ஒரு ஜெர்மன் அறிஞரை டிரெஸ்டனில் கண்டு பேசினேன்; அவர் "மூன்றும் போரைத் தடுக்க ஒரே வழி—திருக்குறள் வழியே வாழுதல்" என்றார்.

2

தமிழ் வளர்ச்சிக்குக் கிறிஸ்துவப் பாதிரிமார் செய்த தொண்டு தமிழ் வரலாற்றில் இடம்பெற்று விட்டது. டாக்டர் போப், தெ நோபிலி, கால்டுவெல், பர்தலோமியோ, ரேனியர், வீரமாமுனிவர்—முதலியோர் ஆற்றிய தமிழ்ப் பணியை உலகம் அறியும். பர்தலோமியோ ஃஜேகென்பேக்–டென்மார்க்கியர்; அவர் கல்வி கேள்விகளில் வல்லவர். டேனிஷ் மன்னன் பிரெடரிக் IV அவரைத் தரங்கம்பாடிக்கு அனுப்பினான். அங்கே அவர் 1706-ம் ஆண்டு வந்து டேனிஷ் மிஷனைத் தொடங்கினர்; ஆறு ஆண்டுகளில் தமிழ் கற்றுப் புலமை பெற்றார்; உடனே தமிழ் இலக்கியம் ஒன்று எழுதினர்; பைபிளைத் தமிழாக்கினர்; ஓர் அச்சகம் நாட்டினர்; பைபிளை வெளியிட்டார்; தமிழைக் கொண்டு சமயப் பணியில் அவர் வெற்றி பெற்றார். ரேனியர் என்னும் பாதிரியார் 1853-ஆம் ஆண்டு தமிழ் இலக்கணம் செய்தார்; தமிழின் இனிமையை உலகிற்கு விளக்கினர்.

ராபர்டு நோபிலி என்ற சாமியார் தமிழும் வடமொழியும் கற்றறிந்தார். காவியுடுத்து அந்தண ஒழுக்கம் பற்றித் 'தத்துவ போத சாமி' என்று புனைபெயர் பூண்டு, பல்லக்கேறி, ஊர் ஊராகச் சென்று ஏராளமான தமிழரைக் கிறிஸ்துவராக்கினர். இவர் சுமார் லட்சம் பேர்களை மதம் மாற்றினர். இவர் வேத முழக்கத்துடன் தேவார முழக்கமும் செய்து சென்றார்.

இவர்களைவிடப்பெரும் புலமை பெற்றவர் டாக்டர் ஜீ. யூ. போப்பையர். இவர் 1820-ஆம் ஆண்டு நோவா ஸ்காசியாவில் பிறந்து, ஹோக்ஸ்டன் கல்லூரியில் கற்றுப் பட்டம் பெற்றார். 1839-ஆம் ஆண்டு வெஸ்லியன் கோயில் பாதிரியாகத் திருநெல்வேலிக்கு வந்தார். அங்கே இங்கிலாந்து சர்ச்சில் பணி புரிந்தார். இவருக்குத் தமிழில் அடங்காக் காதல் வளர்ந்தது. தமிழ் மொழியை இவர் நன்றாகப் பயின்றார். 1849-ல் இவர் லண்டனுக்கு வந்து ஆக்ஸ்போர்டில் தமிழின் அருமையைப் பற்றிப்

பேசினர். திரும்பி வந்ததும் இவர் 1851-ல் தஞ்சையில் ஒரு கல்லூரி கண்டார். உதக மண்டலத்தில் இருந்தபோதே இவர் திருக் குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் உலகிற்குத் தந்தார்; பங்களூரில் இருந்த போது, மணிமேகலைக் கதையை ஆங்கில உரைநடையில் எழுதினர்; பிறகு நாலடி யாரை ஆங்கிலமாக்கினர். நானும் முதலில் போப்பின் மொழிபெயர்ப்பைப் படித்தே திருக்குறளின்பத்தை ஆழ்ந்தறிந்தேன்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் பெற்ற தமிழரின் கலைவளத்தைப் போப் சாமியார், ஐரோப்பியர் வியக்கும்படி விளக்கினர். ஆங்கில இலக்கிய இதழ்களில் இவர் தமிழின் பெருமையைக் கட்டுரை களாக எழுதினர். ராயல் ஆசியாட்டிக் குவார்ட்டர்லி (Royal Asiatic Quarterly), தி இண்டியன் ஆண்டிக்குவரி, (The Indian Antiquary), இண்டியன் மாகஜின் (Indian Magazine) முதலியவற்றில் இவர் எழுதிய கட்டுரைகள் இன்னும் ஆராய்ச்சி யாளருக்குப் பயனுகின்றன.

சைவத் திருத் தொண்டரைப் பற்றியும் கவிஞரைப் பற்றியும் இவர் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதினர். புறப்பொருள் வெண்பா மாலை, புற நானூறு முதலிய சங்க இலக்கியங்களின் நயத்தை இவரே உலகிற்கு விளக்கினர். இவர் எழுதிய சிற்றிலக்கணத் தையே நாங்கள் சிறு வயதிற் படித்தோம். இன்னும் அது மாணவருக்குப் பயனுகிறது. டாக்டர் வின்ஸ்லோ என்பவர் தமிழ் ஆங் கில அகராதி யாத்தார். அதையே போப் பையர் வளப்படுத்தினர். அப்போது சென்னையில் அகராதிக் குழு (லெக்ஸிகன் கமிட்டி) இருந்தது. இந்தியா மந்திரியே அந்தக் குழுவுக்கு மேற்சொன்ன அக ராதியை அனுப்பி வெளியிடச் செய்தார். இந்த அகராதியே சிறு வயதில் எங்களுக்குப் பயனது. இவ்வாறு பல துறையில் தமிழ்ப்பணி ஆற்றிய போப்பையரை, மந்திரி ஜான் மார்லி பிரபு 'பெரும் புலவர் மணி' எனப்போற்றினர். இவர் மொழி பெயர்த்த திருக்குறளை, விக்டோரியா மகாராணிகூடப் படித்தாள்.

அயராத் தமிழ்ப்பணி ஆற்றிய இப்புலவர் மணிக்கு 1906-ஆம் ஆண்டு ஆசிய அர சவைச் சங்கம் (ராயல் ஆசியாட்டிக் சொஸைட்டி) தங்கப் பதக்கம் வழங்கியது. 1880-ம் ஆண்டு இவர் தமிழகத்தை விட்டு இங்கிலாந்து சென்றபோது நமது புலவர் மணிகள் போற்றி செய்து வழியனுப்பினர். ஆக்ஸ்போர்டு கழகம் இவருக்கு எம். ஏ. பட்டம் வழங்கியது. (ஆர்ச்சிபிஷப்பு இவருக்கு டி. டி. பட்டம் வழங்கினர். இவர் இறுதிமட்டும் பாலியன் கல்லூரியில் ஐ.சி.எஸ். (இந்திய ஊழிய) மாணவருக்குத் தமிழும் தெலுங்கும் கற்பித்தார். தமிழ்ப் பணியை இவர் தவமாகக் கொண்டார். 1907-ம் ஆண்டு இவர் பரமபிதாவின் திரு வடி சேர்ந்தார். அப்போதும் இவர் அருகே திருவாசகமும் திருக்குறளும் பைபிளுடன் இருந்தன. தமிழ் மாணவனுகவே வாழ்ந்த இவர் தமது நடுகல்லிலும் தமிழ் மாணவன் என்றே குறிக்கச் செய்தார்.

3

கால்டுவெல் பாதிரியார் மதுரையிலும் திரு நெல்வேலியிலும் அரிய சமயப்பணியுடன் தமிழ்ப் பணியும் செய்தார். தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரையில் அவர் பல காப் பியங்களை ஆராய்ந்தார். தமிழ் மொழியைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். பல மொழிகளில் தமிழ்மொழி கலந்து பயில் வதை அவர் கண்டுபிடித்தார். தமிழர் வர லாற்றையும் அவர் ஆராய்ந்தார். கிராம மக்களுக்கு அவர் தமிழறிவு புகட்டினர். அவர் செய்த தமிழ்த் தொண்டுகளைத் தமிழர் என்றும் மறக்க முடியாது.

4

அனைவருக்கும் சிகரம்போலத் தோன்றி னர் வீரமாமுனிவர். பாதிரிமார் பணிகளுக் குப் பொன்முடி கவிழ்த்ததுபோல் இவரது

பணி நலம் துலங்குகிறது. தமிழ் உள்ள மட்டும் இவர் நூல்களும் புகழோங்கி விளங்கும். இவரைத் **தமிழ் வளர்த்த தந்தை** என்பது மிகையாகாது.

வீரமாமுனிவர் 1680-ம் ஆண்டு பெருங் கவி விர்ஜில் (Virgil) பிறந்த இத்தாலியில், வெனிஸ் நகரில் ஒரு செல்வக் குடும்பத்தில் தோன்றியவர். இவரது இயற் பெயர், கான்ஸ்டன்ஸியஸ் பெஸ்கி. பெஸ்கி என்பது குடும்பப் பெயர். கான்ஸ்டன்ஸியஸ் என் றுல் உறுதி, வீரம், தைரியம், வைராக்கியம் என்று பொருளாகும். ஆதலால் இவர் தமிழ் நாட்டில் வீரமாமுனிவராகவும் தைரிய நாதராகவும் விளங்கினர். இவர் ரோமில் கலையும் சமய சாத்திரங்களும் பயின்று 30-ம் ஆண்டில் குருக்களானர். இலத்தின், இதா லியம், பிரெஞ்சு, கிரேக்கம், ஆங்கிலம் ஆகிய ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற இப்புலவர் பிரான்சிஸ் முனிவர் போன்ற கிறிஸ்து பக்தியும், சாவேரியார் போல் சிவை தொண்டார்வமும் கொண்டு, போப்பாண்டவர் கட்டளையைத் தாங்கி மதுரைக்கு வந்தார்.

பாண்டிநாடு இவர் உள்ளத்தைக் கவர்ந்த துடன், தமிழ் இவர் மனத்தைக் கொள்ளை கொண்டது. சுப்ரதீபக் கவிராயர் என்னும் பெரும் பாவலரிடம் இவர் இருபத்தைந்தாண் டுகள் தமிழ் மொழியை நிறைவாகக் கற் றுணர்ந்து ஐந்திலக்கணமும் அறிந்த பாவல ரானர். 67-வயது வரையில் தமிழகத் திலிருந்து சுமார் நாற்பதாண்டுகள் பொது நலம் புரிந்தார் இப் புண்ணியர். இவர் எப் போதும் சிற்றூர்களிலேயே அடக்கமாய் இருந்து பொது மக்களுக்குத் தமிழும் அற நெறியும் பயிற்றினர். கோனன்குப்பம் என்ற சிற்றூரில் அழகான மாதாக் கோயில் கட்டி, அங்கேயே கலைத்தவம் புரிந்து இவர் தேவாம்பாணி அருளினர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தேவாம்பாணி அரங்கேறியது. அதைச் செவிமடுத்த புலவர்களே இப்பாவல ருக்கு 'வீரமா முனிவர்' என்ற காரணப் பெயரைச் சூட்டிப் பெருமை செய்தனர். இதைத் தவிர இவர் திருவாரூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை, சித்தரின் அம்மானை முதலிய பல செய்யுள் நூல்களைச் செய்தார். தமிழ் உரை நடைக்கும் வழிகாட்டியவர் இவரே. இவர் எழுதிய பரமார்த்தகுரு கதை நகைச்சுவை யில் இணையற்றது. வேத விளக்கம், வேதி யர் ஒழுக்கம் என்னும் இவருடைய இரண்டு நூல்களும் சிறந்த சன்மார்க்க விளக்குகளா கும். நிகண்டை உருத்தளி வருந்திய அக் காலப்புலவருக்குச் சதுர அகராதி வகுத்தளித் தவர் இம்முனிவரே. இவர் வகுத்த அகராதி யைத் துணைக்கொண்டே பிற்காலத்தில் பல அகராதிகள் எழுந்தன. தமிழ் இலக்கணத்தை இவர் தொன்னூல் விளக்கமாகச் செய்து அளித்தார். இத் தொன்னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் தழுவிய நன்னூலாக விளங்குகிறது. அந்நூலை மதுரைப் புலவர் வியந்து இவருக்குத் **'திருமதுரைச் செந் தமிழ்த் தேசிகர்'** என்ற பட்டமளித்தனர்.

தைரியநாதர் இலக்கிய-சமயத் தொண்டு மட்டும் செய்யவில்லை. இவர் அரிய தியாகி. தம்மையே பொதுநலத்திற்குத் தந்த தூய துறவி. சன்மார்க்கத்தை நிலைநாட்ட இவர் பட்ட இடர்கள் பல கோடி. போரும் பொறுமையும் நிறைந்த அந்தக் காலத்தில் துரோகிகளாலும், பகைவராலும், திருவிளை யாடரலும் இப்புண்ணியப் புலவர் பட்ட பாடு கொஞ்சநஞ்சமன்று. வீரமா முனிவர் கயிற்ருற்றின் அருகே குருக்கள்பாடியில் அருட்பணி செய்திருந்தார். ஒரு கயவன் அன்பன்போல நடித்து அவரிடம் பெற வேண்டியதெல்லாம் பெற்றுக் கொண்டு, பக்கிரிவேடம் போட்டுத் தப்பி, அலங்குளத் திற்குச் சென்றான். அங்கே மதுரை நாயக் கர் படை வரிவசூலுக்காக முகாம் போட் டிருந்தது. கயவன் படைத் தலைவரிடம் கண்டபடி கோளேற்றி, குருக்கள்பாடி கிறிஸ்துவச் சாமியார் தன்னை அடித்து

விரட்டிய தாகவும், ஏராளமான பணம் புதைத்து வைத்திருப்பதாகவும் பாமரர்களை ஏமாற்றுவதாகவும் பொய்கட்டிவிட்டான். முரட்டுப்படை சினந்து வந்தது. கயவன் முனிவரைக் காட்டிக் கொடுத்தான். படை வெறியர் முனிவரைப் பிடித்துக் கட்டிச் சிறையிட்டு வருத்தினர். திருமடத்தைக் கொள்ளையடித்தனர். ஆனால் அங்கே சிலுவைத் தகடுகளே இருந்தன. முனிவர் பொறுமையைக் கண்டு வெறிதணிந்த படைவீரர் மன்னிப்புக் கேட்டனர்.

ஆவூரில் அவர் சபைகூட்டி, சிலுவையடியாரைச் சேர்த்து அரிய பணிசெய்த போது, சந்தாசாகெபு படையெடுத்தான். ஊர் நடுங்கியது. பொதுமக்களுக்கு அஞ்சல ளித்து, வீரமாமுனிவர் தாமே பகைவரிடம் சிறைப்பட்டுச் சந்தாசாகெபுமுன் சென்றார். சந்தாசாகெபுடன் அவர் பாரசீக மொழியிற் பேசினர். அவர் அறிவை வியந்த சாகெபு தைரியநாதரைத் தன் மந்திரியாக்கி, விருதுகளும் பல்லக்கும் அளித்துப் பெருமைப் படுத்தினன். அந்தக்காலம் எங்கும் போர் வெறியும், படுகொள்ளையும் கொடுமை செய்தன. தாம் இருந்த ஊர்களிலெல்லாம் தைரியநாதர் பொதுமக்களுக்குப் புகலளித்து, சன்மார்க்க போதனை செய்து கடவுளை நம்பும் படி வழிகாட்டினர்.

5

கலைக்கோயில் பொதுக் கோயில். சாதிமத வேறுபாடே அதில் இல்லை. உலக ஒற்றுமைக்குக் கலைப்பண்பு பெரிய சாதனமாகும். தமிழ்க் கலைக்கோயிலில் மேற்கும் கிழக்கும் இணைந்து விளங்கும். சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிருஸ்துவர்-அனைவரும் அக்கோயிலில் அன்புத் தொண்டு செய்திருக்கிறார்கள்; அறிவு விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள்; ஆர்வமாலை சூட்டி அணிசெய்திருக்கிறார்கள். இந்த அணிமணி மாலைகளில் ஒரு வாடாக் கற்பக மாலை காண்கிறது. அதுதான் வீரமாமுனிவரின் "**தேவாம்பாணி**" என்ற பெருங் காப்பிய மாலை. 36-படலங்களும் 3615-செய்யுட்களும் கொண்ட இக்காப்பியம் புலவருக்கும், கடவுளடியாருக்கும் அரிய சிந்தனை விருந்தாகும். 'என்றுமுள தென்றமிழ் இயற்றி இசைகொண்டான்' என்று கம்பர், அகத்தியரைச் சிறப்பித்த மொழிகளே, தேவாம்பாணி அருளிய முனிவருக்கும் பொருந்தும். இம்முதுபெருங் கவிஞருக்கு அமரத்தன்மை அளித்த இம்மாபெருங் காவியம் கம்பராமாயணம், சிந்தாமணி, திருக்குறள்–போன்ற சீரிய நூல்களைக் கற்று ணர்ந்ததால் எழுந்தது. இதில் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளும் காணும்; இயற்கையழகின் விளக்கமுங் காணும். முதன்மையாகப் பேரின்பச்சுவை இக்காவியத்தில் பெருகக் காணும். ஆகிர்த மரியாள் எழுதிவைத்த சூசைமுனிவர் கதையே இந்நூலுக்கு முதல் நூலாகும். உலகந்தரும் இடர்களையெல்லாம் கடந்து கடவுளன்பர் மோட்ச வீடடைதலை இப்பாவலர், மலையருவிக்கு உவமித்து அரிய செய்யுள் ஒன்று பாடியிருக்கிறார்:

"அஞ்சிலாஎதிர் அடுக்கிய கல்லெலாங்
கடந்தே,
எஞ்சிலாஎழில் இமைத்தநீள் மருதமும்
நீக்கித்
துஞ்சிலாநதி தொடர்ந்தகல் கருங்கடல்
நோக்கல்,
விஞ்சையாரெலாம் வெறுத்துவீ டடைகுதல்
போன்றே."

ஆற்று வெள்ளத்தை, அணைபோட்டுத் தடுத்துக் கால்வாய்களாக்கி, உயிரை ஊட்டும் பயிர்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். அது போல, துறவிகளும் பொறிபுலன்களைப் புறஞ்செல்லாமல், தடுத்தடக்கிப் புண்ணிய வழியில் செலுத்துகிறார்கள். இக்கருத்தை முனிவர் அழகாக விளக்கியிருக்கிறார்:

"தெறியு லாம்புனல் சிறைசெய்து பயன்பட
ஓதுக்கி,
வெறியு லாமலர் மிடைந்தல் வயல்வழி
விடுவார்,
பொறியு லாம்வழி போக்கிலது இயல்பட
அடக்கி,
நெறியு லாவுற நேரவை நிறுத்தினர்
போன்றே."

தொட்ட இடமெல்லாம் இப்படித் தேனும் பாலும் கனிரசமும் கசிந்து பேரின்பச் சுவை தரும் தேவாம்பாணியைச் செய்த வீரமா முனிவர் வளர்த்த தமிழ் வாழ்க !

6

இவ்வாறு பிறநாட்டார் செய்த தமிழ்ப் பணியால் உந்தப்பெற்று, யானும் எந்தாயின் பெருமையை உலகிற்கு விளக்க எழுந்தேன். முதலில் இந்தியில் இராமலிங்க சுவாமிகள் வரலாறும், அருட்பா மொழிபெயர்ப்பும் எழுதினேன். பிறகு ஆழ்வாராதிகள் வரலாறும், திவ்யப் பிரபந்தமும் இந்தியில் எழுதினேன். இவை வடநாட்டிற் சிறந்து விளங்கும் 'கல்யாண்' இதழில் வெளிவந்தன. வட நாட்டு நண்பர் தமிழ்ப் பெரியார் வரலாறு களைக் கேட்டனர். தமிழ் அளித்த அருட் செல்வத்தை அறிந்தனர். ஆங்கிலத்தில் மகாத்மா ராமலிங்கம், மகரிஷி தாயுமானர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர், திருக் குறள் மொழிபெயர்ப்பு–முதலியவற்றைப் பல பத்திரிகைகளில் வெளியிட்டு நூலாக்கி னேன். இந்நூல்களைக் கண்டு எனது நண்ப ரான மோனுட் ஹெர்ட்ஸன், ரோமா ரோலான் முதலியோர் தமிழ்ப் பெரியார் வர லாறுகளை முறையாக ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் ஜெர்மெனியிலும் வெளியிட ஊக்கினர். ரோமாரோலான் எழுதிய மொழிகளை நான் மறக்கமுடியாது. அவற்றை இங்கே தமிழாக்கித் தருகிறேன்.

" தங்கள் ஆங்கில நூல்கள் என்னைத் தமி ழகத்திற்குக் கொண்டு சென்றன. தமிழில் இத்தகைய ஆத்ம ஒளிகளும், அருட்செல் வங்களும் உள்ளன என்பதை இன்றே அறிந்தோம். அவற்றை முறையாக வெளி யிட நாங்கள் விரும்புகிறோம். முதலில் திருக் குறளைப் பிரெஞ்சில் சரியானபடி மொழி பெயர்த்து வெளியிடுவோம். பிறகு அருட்பா வரட்டும். அவை ஐரோப்பாவைப் பிடித்த இரத்தக் காய்ச்சலுக்குச் சரியான மருந்தா கும். எங்கள் எண்ணத்தைப் போர்வெறிப் புயல் 'குப்' பென்று அணைத்து விட்டது. ஆனால் இன்றும் அந்த முயற்சி நடக்கிறது. தக்கார் கூட்டுறவிருந்தால் உலகெலாம் அருள் முழக்கம் செய்யலாம்."

எனது ஐப்பான் செலவின்போது பாங் காக்கில் சிலநாட்கள் தங்கினேன். அங்கே மரகதபுத்தர் கோவிலில் இராமாயண ஓவி யங்களைக் கண்டு வியந்தேன். அவை கம்ப ராமாயணத்தை ஒட்டி அமைந்தன. சையாம் மந்திரி எனக்கு விருந்தளித்தார். அவரிடம் தமிழின் இனிமையைப் பற்றிப் பேசும் போதே–" கம்ப ராமாயணம் எங்களுக்கு விருப்பம். தாங்கள் சையாம் சங்கத்தில் கம்ப ராமாயண நயங்களைப் பற்றிப் பேசுங்கள்– கம்பனைப் பற்றி ஆங்கிலத்தில் விளக்குங்கள். நாங்கள் சையாமில் மொழிபெயர்த்துச் சுவைப்போம் " என்றார். நான் அவ்வாறே சில சொற்பொழிவுகள் ஆற்றினேன். சுந்தர காண்டச் செய்யுளைக் கேட்டுக் கேட்டுச் சையாமியர் மகிழ்ந்துபோனார்கள். என் சொற்பொழிவு பத்திரிகைகளில் வந்தது. சையாம் மந்திரி கம்பராமாயண மொழி பெயர்ப்பு வேண்டினார்; வ. வே. சு. ஐயரின் 'கம்பஆராய்ச்சி(Study of Kamban)'என்ற நூலை அனுப்பினேன். சையாம் மொழியில் இராமகீர்த்தி என்ற நூலும் உள்ளது. மலாய், சையாம், இந்தோசீனா,கம்போடியா, இந்தாசியா-முதலிய தென் கிழக்கு நாடுகளி லெல்லாம் இராமாயணக்கலை பரவியுள்ளது. அதிலும் கம்பன் கலை பரவியுள்ளது என்ன லாம்.

7

சோவியத் ரஷ்யாவில் லெனின்கிராடு கலை நகரம். அங்கே ஆசியமொழிகள் பயிலும் கல்லூரியுள்ளது. அக்கல்லூரிப் புலவர் 'கல் யாண்' என்பவர் எனக்கு விருந்தளித்தார். ஓர் அம்மையார், மொழிபெயர்த்த பகவத் கீதையை எனக்குத் தந்தார். அங்கே ஆரியப் புலவர் இருந்தனர். அவர்கள் சமஸ்கிருதத் தில் என்னுடன் பேசினர். நான்,'சமஸ்கிரு தத்திற்கு முன்பே இந்திய நாட்டில் வழங்

கிய மொழி தமிழ். அது மிகச் சுவையுடை யது' என்றேன். எல்லோரும் செவி கொடுத் தனர். 'உங்கள் கம்யூனிசம் உண்டாவதற்கு முன்பே, மார்க்சும் லெனினும் தோன்று முன்பே, எங்கள் வள்ளுவர் மாசற்ற சமதர் மம் பேசினர். பொதுவுடைமைக்கு வித்திட் டார்' என்றதும் அவர்கள் வியந்தனர்:

"பாத்தூண் மரீ இயவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.
பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.
ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.
முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்ற குறள்களை விளக்க விளக்க, அவர்கள் தமிழிடம் அன்பு கொண்டனர். நான் ஐந்து நிமிடம் தமிழில் பேசிப் பிரெஞ்சில் மொழி பெயர்த்தேன். இவ்வாறே ஐரோப்பிய நாடு களில் தமிழை ஆர்வத்துடன் கேட்கிறார்கள். தக்க முயற்சி எடுத்துத் தக்காரை ஆதரித் தால் உலகில் வடமொழிக்குள்ள பெருமை தென் மொழிக்கும் எய்தும்.

ஜெனீவா, ஜூரிக், பிராகா, பெர்லின், பாரிஸ், லண்டன்-சர்வ கலா சாலைகளில் தமிழின் சுவையை அறிய ஆர்வமுள்ள புல வர் உண்டு. இங்கெல்லாம் சமஸ்கிருதமும், இந்தியும், வங்கமும், மராட்டியும் கூடப் பாடமாக உள்ளன. அவ்வாறே தமிழையும் உலகப் பல்கலைக் கழகங்களில் புகுத்தவேண் டும். அதற்குத் தகுந்த செல்வர் மானியம் அளித்துப் புலவர்களை அனுப்ப வேண்டும்.

தமிழர் விழித்தெழுந்து முயன்று முன் னேறுக:

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர்கையில்,
தாய்நாட்டுத் தொழில்களெல்லாம் தனயர் கையில்!
தமிழர் வாணிகமெல்லாந் தமிழர் கையில்,
தமிழ்த் துறையில் இயங்குவதும் தமிழர் கப்பல்!
தமிழ் சமுதாயத் தொண்டு தமிழர் கூட்டால்,
தமிழ்நாடு தமிழருக்கே தமிழர் சேமம்,
தமிழ்மக்கள் ஒற்றுமையே தமிழர் உள்ளம்;
தமிழ்உள்ளம் எனில்வாழ்வு தழைப்பதாமே!

தமிழ் நாட்டு கலை நுணுக்கமுள்ள
தங்க நகை, வெள்ளிப் பாத்திரங்களுக்கு

"ரத்னமாளிகை"

★

E. A. S. S. N.

"சோமசுந்தரம் செட்டி அன் கோ"

பவுன், நகை வெள்ளிப் பாத்திர வியாபாரிகள்

Y. M. C. A. தென்புரம், தெற்காவணி மூல வீதி,

மதுரை

*

விசேஷ கால ஆர்டர்களுக்கு குறித்த காலத்தில் செய்து தரக்கூடும்

ஆலய அமைப்பு

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்., கோவை

★

முன்னுரை : தமிழ்மக்கள் பண்டைக் காலம் முதற்கொண்டு அறிவாற்றல்களால் உண்டாக்கிப் போற்றி வந்திருக்கும் செல்வங்களில் ஆலய அமைப்பு ஒன்றாகும். அது ஒப்பற்றிருப்பதுமன்றி நமது முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், கலைச் சிறப்புகளையும், உலகெங்கும் தோற்றுவித்துப் பெருமைகொளச் செய்வதுமாகும். நமது பண்பாட்டிலும், தமது பண்பாடு சிறந்ததென்று செருக்குடன் பிதற்றித் திரியும் வெள்ளையர்களும் தென்னாட்டிற்கு வந்து நமது செல்வங்களை ஒருமுறை பார்த்தவுடன் தமது செருக்குப் பேச்சுகளை அடக்கிக்கொண்டு, "அம்மா! பெரிது" என்று அகமகிழ்வுறுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இங்ஙனம் ஒப்பற்ற பெருமை தமிழர் பண்பாட்டிற்கு அளித்து வருகிற ஆலய அமைப்பானது, உலகிலேயே சிறந்த செல்வங்களில் ஒன்று என்றால் அது மிகையாகாது. அதன் வரலாற்றையும் பெருக்கத்தையும் நூல் ஆதாரத்தையும் தத்துவ அடிப்படையினையும் வெவ்வேறாக விரித்துக் கூறி இங்கே சுருக்கமாக எழுதுவோம் :

வரலாறும் பெருக்கமும்

தென்னாட்டின் சிற்பக்கலை தொடர்ச்சி பெற்ற ஒரு வரலாற்றோடு அமைந்துள்ளது. அது சமய வளர்ச்சியைப் பின்பற்றியே தொடர்ந்து உள்ளது. பண்டைத் தமிழர் முதலில் இயற்கைப் பொருள்களை வணங்கி வந்தார்கள்; கதிரவன், நிலா, நெருப்பு, காற்று, மழை, நிலம் இவைகளைப் போற்றினர்கள். இளங்கோவடிகளும் முதலில் திங்கள், ஞாயிறு, மழை இவைகளைப் போற்றியிருத்தலை நாம் காண்கிறோம். பிறகு கண்ணில் காணமுடியா அருவங்களைப் போற்றினர்கள். அவ்வாறு போற்றினதில் அவைகளுக்காக உருவங்களைக் கற்பித்து அவைகளின் மூலமாக அருவங்களை வணங்கினர்கள். மக்கள் தங்குவதற்கு நிழலும் கூரையும் கொள்ளுதலை ஒத்துத் தாம் வழிபடும் இறைவனை, வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் காப்பதன் பொருட்டு மேடையின்மீது முதலில் மரநிழலில் அமைத்தார்கள்; எடுத்துக்காட்டாக, அரசம்பலம், வேம்படியாண்டவர், ஆலம்பொழில் முதலியவற்றைக் காண்க. பிறகு பந்தல் அமைத்தார்கள். பந்தல் கூரையாகவும் ஓரறையில்லமாகவும் பெருகிற்று. அக்காலத்தில் ஏற்பட்ட இல்லம் மண் இல்லமாக இருந்தது. பிறகு செங்கல் இல்லமாக வலுவுறுத்தப்பட்டது. இவ்விதக் கோயில்களே பல நூற்றாண்டுகள் வரை கட்டப்பட்டன. உருவங்களோ, பொதுவாக உருண்டைக் கற்களாகவே இருந்தன. அது எளிதில் ஆக்கக் கூடியது. அவைகளிலிருந்தே இலிங்கங்கள் தோன்றின எனலாம். இப்போதும் கிராமங்களில் உருண்டைக் கற்களே தெய்வங்களாக இருப்பதைக் காணலாம். கொங்கு நாட்டில் திருமால் கோயில்களிலும் உருண்டைக் கற்களே மூலத்தானங்களில் இருக்கக் காணலாம். (எடுத்துக்காட்டாகக் காரமடை அரங்கநாதர் கோயில் மூலத்தானங் காண்க.)

இனிப் பல்லவர் ஆட்சி மூன்றும் நூற்றாண்டுமுதல் தமிழ்நாட்டில் தொடங்கியது. அம்மன்னர்கள் கலை விற்பன்னர்கள். அவர்களில் சிலர் சமணர்களாகவும் இருந்தார்கள்; வடநாட்டுக் கலைகளையும் பயின்றவர்கள். மண் தளிகள் நெடுங்காலம் இருக்கக்கூடிய வையல்ல என்றறிந்து இறைவன் தளிகள் நிரந்தர நிலைபேறு உறுவதே நலம் என்று கருதிக் கருங்கல்லில் கோயில்களைச் சமைத்

தார்கள் ; மலைப் பாறைகளைக் குடைந்து மண்டபக் கோயில்களை உண்டாக்கினர்கள்; பிறகு தனிக் கற்களைத் தேர்கள்போல் அமைத்தார்கள்; பாறைகளில் உருவங்களைச் செதுக்கினர்கள்; பிறகு செதுக்கின கற்களை ஒன்றின்மேல் ஒன்று அடுக்கிக் கட்டுக் கோயில் ஆக்கினர்கள். இந்த வகையில் மகேந்திரவர்மன் காலந் தொடங்கிக் கற்றளிகள் நாட்டில் ஏற்படத் தொடங்கின. தனிக் கற்கோயில்கள் ஒரே அறை கொண்டவை. மண்டபக் கோயில்கள் தூண்களையும் பல சிற்றறைகளையும் கொண்டவை. கட்டுக் கோயில்கள் ஒன்றன்முன் ஒன்றுக் கட்டின மண்டபங்களையும் மதில்களையும் கொண்டவை. தனிக் கற்கோயில்கள் கருவனு, சிகரம், இரண்டும் அடங்கிய விமான முறையாம். மண்டபக் கோயில்கள் பல சிற்றறைகளும் ஒன்று அல்லது மூன்று முன் மண்டபமும் கொண்டவை. கட்டுக்கோயில் ஒன்று, மூன்று, ஐந்து என்ற ஒற்றைப் படையில் கொண்ட மண்டபங்களை நிலைமாகக் கொண்டவை. இம் மூவகைக் கோயில்களும் பல்லவ மன்னர்களால் உண்டாக்கப்பட்டவை. அதே காலத்தில் அவற்றைப் போன்ற அமைப்பு நடு இந்தியாவில் சாளுக்கியர் ஆட்சியில் கட்டப்பட்டது. இவை ஏற்பட்ட காலத்தில் பல மண்டபங்களில் ஓவியம் தீட்டப்பட்டது. கோயில்களின் விமானங்களும் தேர்போலவும் சைத்தியம் போலவும் சித்திரிக்கப்பட்டன. பிற்காலப் பல்லவர்கள் யானை முதுகு போன்ற சைத்தியக் கோயில்களும் கட்டினர்கள். (எடுத்துக்காட்டாக, திருத்தணி வீரட்டர் கோயில் காண்க.) இவ்விதக் கோயில்கள் தொண்டைநாட்டில் மிகுதியாகக் கட்டப்பட்டன. பல்லவர்களுக்குப்பின் ஆட்சிபுரிந்த பேரரசர்கள் சோழர்கள். இவர்கள் மூலத்தானங்களை மிகப் பெரிதாகக் கட்டினர்கள். முதலில் கருங்கல்லினாலும் பிறகு செங்கல்லினாலும் அவைகளைக் கட்டினர்கள். தஞ்சை ராஜ ராஜேச்சுரம் கங்கை கொண்ட சோழேச்சுரம் முதலியவற்றைக் காண்க. சுற்று மண்டபங்களும் கோபுரங்களும் அளவில் அவற்றிற்குச் சிறியவைகளாக இருந்தன. மூலத்தான மூர்த்திகளும் மற்றச் சுற்று உருவங்களும் பெரிதாக உண்டாக்கப் பட்டன. அப்போது கோயிலமைப்பு மிகச் சிறந்து வளர்ந்தது. மதில்களும் கோட்டை மதில்கள் போல் உயர்வாகக் கட்டப்பட்டன. செப்புத் திருமேனிகளும் வெகு அழகாகச் செய்யப்பட்டன. தேவர்களுடைய உருவங்கள் மட்டுமே யன்றி அடியார்களுடைய உருவங்களும் செய்து வைக்கப்பட்டன. அதுவரையில் மானிட உருவங்கள் வணங்கப்பட வில்லை. சோழ மன்னர் காலத்தில் தான் நாயன்மார்கள் ஆழ்வார்கள் திருவுருவங்கள் வணங்கப் பட்டன. கோயிலமைப்பே ஒரு கலையாக ஓதப்பட்டுப் போற்றப் பட்டது. சோழ நாட்டிலிருந்து இக்கலை தெற்கே பாண்டி நாடும் ஈழ நாடும் சென்றது. திரைகடல் ஓடித் தமிழர் பண்பாட்டைப் பரப்பச் சென்ற தமிழ் வீரர்களும் வணிகர்களும் ஆலயக் கலையைச் சாவகம் (ஜாவா), ஸ்ரீவிசயம் (சுமத்திரா), கிடாரம் (மலையா), கம்போடியா (இந்துசீனா) முதலிய நாடுகளுக்கும் கொண்டு சென்றார்கள். அந்நாடுகளில் குன்றமன்ன கோயில்கள் கட்டப்பட்டன. இன்றைக்கும் வெள்ளையர்களும் மயங்கி வியக்கும்படியான பெருங் கோயில்கள் தீவுகள் தோறும் காணப்படுவதை அறியலாம். இவைகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டவை.

சோழ பாண்டியர்கள் மெலிவடைய வடக்கே ஹொய்சலர்கள் சிறிது காலம் ஆலய அமைப்பைச் சிறப்படையச் செய்தார்கள். அவர்களுடைய வேலைப்பாடுகளைக் கருநாடக சாம்ராச்சியத்தில் பெரிதும் காணலாம். தென்னாட்டில் சிலவே உள்ளன. திருச்சிக்கருகில் கண்ணனூர் போசலேசுவரர் காண்க. அவர்கள் ஆலயங்களில் சித்திர வேலைப்பாடுகளை மிக நுணுக்கமாகச் செய்தார்கள். பின்னர் முகமதியர் சூறை

யாடல் வந்தது. அதற்குப்பின் விஜய நகர ஆட்சி தென்னாட்டில் சில நூற்றாண்டுகள் வரை இருந்து விளங்கியது. அவர்கள் மூலத் தானத்தைவிடச் சுற்றுப்புறக் கட்டிடங்களைப் பராமரித்தார்கள். முன் மண்டபங்கள், பெருங்கோபுரங்கள், பெரும் மதில்கள், தடாகங்கள், நந்தவனங்கள் முதலியவைகளை வைத்துக் கோயில்களைச் சிறப்பித்தார்கள். நான்கு கால் முதல் ஆயிரத்தெட்டுக்கால் வரை மண்டபங்கள் தோன்றின. மூன்று நிலை முதல் பதினெரு நிலை மாடங்கள் வரை அமைந்த கோபுரங்கள் கட்டப்பட்டன. அழகான படிகள் கொண்ட தெப்பக் குளங்கள் தோண்டப்பட்டன. தூண்களில் பல விதச் சிற்பங்களும் விட்டங்களிலும் தளங்களிலும் கற்சங்கிலிகளும் கல் மலர்களும் உத்தரங்களில் விலங்குகள் முதலியனவும் செதுக்கப்பட்டன.

விஜய நகரத்தாருக்குப் பின் நாயக்க அரசர்கள் அச்சிற்பப் பணிகளையே தொடர்ந்து செய்தார்கள். இந்த வகையில் ஒரு மதில் கொண்ட கோயிலானது மூன்று ஐந்து ஏழு மதில்கள் கொண்ட பெருங் கோயில்கள் ஆயின. இந்த முறையில் ஆலய அமைப்பு இருபது நூற்றாண்டுகளாக வளர்ச்சிபெற்று வந்திருக்கின்றது.

ஆகம அல்லது நூல் ஆதாரம்

தென்னாட்டின் ஆலய அமைப்பானது வெவ்வேறு சமயங்களைப் பொருத்து வேறு பட்டிருக்கின்றது. பண்டைக் கோயில்கள் பெரும்பான்மையாக முப்பிரிவினவாக மூன்று சமயச்சின்னங்களாக இருக்கின்றன. அவைகள் முறையே சமணம், சைவம், வைணவம் என்பவைகள். பல்லவர் கால முதற் கொண்டே மிகச் சிறப்புற்ற தலைநகரான காஞ்சியில் இம்மூவிதச் சமய நிலையங்களும் காணலாம். அவைகள் முறையே திருப்பருத்திக் குன்றம் என்ற சமணக் காஞ்சி, திருவேகம்பம் என்ற சிவகாஞ்சி, அத்திகிரி என்ற விஷ்ணு காஞ்சி என்பன வாகும். இம்மூன்று இடங்களையும் உற்று நோக்கி ஆராய்ந்தால் அவைகள் எவ்வெவ் வாறு வேறுபடுகின்றன என்று அறியலாம். இவைகளில் சமணக் கோயில்களுக்கும் சைவக்கோயில்களுக்கும் அமைப்பில் வேறுபாடு மிகுதியும் இல்லை. திருவுருவங்களில் மட்டும் வேறுபாடு இருக்கும். ஆனால் சைவக் கோயிலுக்கும் விஷ்ணு கோயிலுக்கும் வேறுபாடுகள் பல உள்ளன. மூர்த்திகளில் மட்டும் அன்று. இட அமைதிகளிலும் உண்டு. ஆனால் அடிப்படையான சிற்பமுறைகள் இவைகளிலும் ஒன்றே யென அறிய வேண்டும். கருவறைகள், மண்டபங்கள், விமானக் கூட்டு, பிராகாரங்கள், மதில்கள், கொடி மரம் முதலிய பெருத்த பகுதிகள் எல்லாம் ஒரே அடிப்படை கொண்டிருக்கும். இவைகளுக்குக் காரணம் இவை இரண்டும் பண்டைப் பெருமக்களால் வகுக்கப்பட்ட ஆகம முறைப்படி அமைந்திருப்பதேயாகும்.

ஆகமங்கள் இரு பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. அவை சைவம் வைணவம் என்பன. சைவாகமங்கள் இருபத்தெட்டு என்பர். வைணவாகமங்கள் பாஞ்சராத்திரம் வைகானசம் என இரண்டு என்பர். இவை அவ்வச் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறுகின்றன. சமயக் கோட்பாடுகளையே அன்றிச் சமய நிலையங்களின் கூறுகளையும் பொருள்களையும் கூறுகின்றன. அந்நிலையங்களில் சிறப்பானவை ஆலயங்கள். ஆகவே ஆலய அமைப்பு, அவைகளைக் கட்டும்விதம் அவற்றில் வைக்கும் பொருள்கள், அவைகளை ஆராதிக்கும் முறைகள், நடத்தும் சடங்குகள் முதலிய பல பகுதிகளையும் இவ்வாகமங்கள்—போதிக்கின்றன. இப்போது கிடைத்துள்ளனவும் பாராட்டப்படுவனவுமான ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இவைகளைப் படித்துப் பொருளுரைப்பவர்கள் ஆலய ஊழியர்களான குருக்களும் பட்டர்களுமே யாவர். இவர்களில் பல பேர் படிப்புக் குறைவினால்

அந்நூற்களை அறிந்து கொள்ளாமல் பழைய வழக்கங்களை முன்னிட்டே நடவடிக்கைகளைச் செய்து கொண்டு வருகின்றார்கள். இப்பராமுகத்தினால் ஆகமங்களின் சிறப்பே இக்காலத்தில் மறைக்கப்பட்டுவிட்டது. சைவாகமங்கள் இருபத்தெட்டில் காமிகம், காரணம், சுப்பிரபேதம், மிருகேந்திரம் என் பவைகளே சிறந்தவைகள் ஆகும். இவை களே அச்சில் வெளிவந்துள்ளன. இவை களும் இப்போது கிடைப்பது அரிதாகிவிட் டன. இவற்றுள் ஒவ்வொன்றை ஒவ் வொரு கோயிலும் பின்பற்றுவதாகக் கூறு கிறார்கள். நூலைப் பார்க்காவிடினும் வழக் கப்படி சடங்குகள் வழங்கப்படுகின்றன.

ஆகமங்கள் முழுவதையும் சேகரித்துப் படித்து அறிந்து கொள்ளச் சோம்பற்படும் ஆலய ஊழியர்களின் பொருட்டுச் சில சிவா சாரியப் பெரியோர்கள் முக்கியமான விதி களை மட்டும் சேகரித்துத் திரட்டுகளாக வெளியிட்டிருக்கின்றார்கள். இத்திரட்டை வைத்துக்கொண்டே இக்கால ஆலய வழி பாட்டுப் பரிபாலனம் செய்யப்பட்டு வரு கின்றது. இந்தத் திரட்டுகளும் வடமொழி யிலேயே உள்ளன. இவைகளையும், படித்த அர்ச்சகர்கள் அல்லாத மற்ற மக்கள் அறிவதற்கில்லை. ஆகவே ஆலய அமைப்பை ஆராயவேண்டின், காரணம், காமிகம் போன்ற சிற்சில அச்சு நூல்களே நமக்குக் கிடைக்கும் அடிப்படை ஆதார நூல்கள் ஆகின்றன.

இனி, தமிழ் நாட்டுச் சிற்பச் செல்வங்களை அறிய வடமொழிக்குத்தானை போகவேண் டும்? தமிழ் மொழியில் இல்லையா என்ற கேள்வி எழும் அல்லவா? இது ஒரு சிக்க லான கேள்வி. சிறந்த ஆலயங்கள் தமிழ் நாட்டிலேதான் உள்ளன. அவற்றைக் கட்டினவர்களும் தமிழர்களே. அவற்றைப் போற்றுகின்றவர்களும் தமிழர்களே. அப் படியிருக்க வடமொழியில் மட்டும் நூல் ஏற்பட்டுத் தமிழில் ஏன் ஏற்படவில்லை யென்று எவரும் கேட்கலாம். குறிப்பிடத் தக்க சிற்பப்பெருமை வாய்ந்த ஆலயங்கள் பல்லவர் காலத்திலும் அவர்களுக்குப் பின்ன ரும் ஏற்பட்டன. பல்லவர்களில் முதல் வம்சமும் இடை வம்சமும் (4 முதல் 7 நூற் றாண்டுவரை) வடமொழியையே போற்றி வந்தன. தமிழைப் போற்றி வந்தனவாகச் சான்றுகளே இல்லை. பின் வம்சம்தான் தமிழைப் போற்றிற்று. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்ற இடைவம்சத்துச் சக்கரவர்த்திகளே கோயில் அமைப்பில் அக் கரை எடுத்துக்கொண்டதனாலும் அவர்கள் வடமொழியினையே ஆதரித்து வந்ததனாலும் சிற்பிகள் தங்கள் நூல்களை வடமொழியி லேயே அமைத்திருக்க வேண்டும். ஆகவே ஆகம நூல்களும் அவற்றைப் பின்பற்றிய சிற்ப நூல்களும் வடமொழியில் ஏற்பட் டன போலும்.

இப்போதும் ஆகமங்களைத் தவிர மற்றச் சிற்ப நூல்களும் வடமொழியிலேயே இருக் கின்றன. மயமதம், மானசாரம், சிற்பரத் தினம் போன்ற நூல்களும் வடமொழிகளே. இவைகளில் சிறந்த பிரதிகள் தமிழ்நாட்டில் அகப்படாமல் திருவிதாங்கூரில் அகப்பட் டன என்றால் அதுவும் வியப்பே. மலை யாள முறைக்கும் தமிழ் முறைக்கும் ஆலய அமைப்பில் வேறுபாடுகள் இருக்க, நமது சிற்ப நூல்கள் அங்கே எப்படிச் சென்று சிக்கிக்கொண்டனவோ அறியோம். நமது தமிழ் நாட்டுத் தபதிகள் விஸ்வ குலத்தார் கள். இவர்கள் வடமொழிச் சிற்ப நூலையே படித்துப் பின்பற்றுகின்றார்கள். திருவிதாங் கூரில் வெளியிட்ட சிற்ப நூலிலும் செய்யுள் நடை மிகத் தாழ்ந்ததாக உள்ளது. படிப் பில் சிறந்தவர்கள் இதை எழுதினதாகத் தெரியவில்லை யென்பர்.

இனித் தமிழில் ஆலய அமைப்புப் பற்றிய நூல்கள் இல்லையோ? இருக்கவே இல் லையோ என்று கேட்டால் அறிஞர்கள் அவ் வகைத் தமிழ் நூல்கள் இருந்தனவென்றும் நாளாவட்டத்தில் மறைந்தன வென்றும்

கூறுவார்கள். இக்கருத்து இவ்வாறு இருக்கத் தமிழிலும் கோயில் அமைப்பைக் குறித்துக் கூறும் ஒரு சிறந்த நூல் உண்டு. அதுவே பண்டைத் திருமுறையாகிய திருமந்திரம் ஆகும்.

ஆகமப்படி ஆலய அமைப்பு

ஆலயங்கள் இயற்கை செயற்கையென்ற இருவிதத் திருவுருவங்களைக் கொண்டவை. இயற்கையாக இருந்த உருவங்களைச் சுற்றிக் கோயில் எழுப்புவதற்காகக் கருவறை முதலில் கட்டிய பிறகு மற்ற மண்டபங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டிப் பெருங் கோயில் ஆக்குவார்கள். அதற்காக நிலத்தை விதிகளின்படி தெரிந்தெடுக்க வேண்டியதில்லை. செயற்கைத் திருவுருவங்களுக்கு ஏற்படும் ஆலயங்களுக்கு மட்டும் நிலத்தையும் தெரிந்தெடுக்க வேண்டும். இதற்கு ஆகமங்கள் விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. நிலம் இருவகைப்படும். புலி முதலிய கெட்ட விலங்குகள் வசிக்கும் காடுகள் இராக்கத, பைசாச நிலங்கள் எனப்படும். அவைகள் கோயில் கட்டப் பயன்படா. நெல் முதலிய நன்செய்ப் பயிர் விளையும் நிலங்கள், ஈசுவர நிலங்கள்-பசு நிலங்கள் எனப்படும். அவைகளே கோயில் கட்டத் தகுதியான நிலங்களாம். இவ்வித நிலங்கள் பத்து வகைப்படும். அவைகளில் ஈசுவர-பசு நிலங்களைத் தெரிந்தெடுத்து உழுது, நீர் பாய்ச்சிப் பயிரிட்டுப் பசுக்களை மேய்த்துச் சுத்தப்படுத்திப் பின்னர்க் கோயில் எழுப்ப வேண்டும். முதலில் அரக்கர்கள் முதலிய தீமைகளைப் போக்குதற்கு வேள்வி செய்து பிரவேச பலிகளைக் கொடுத்து வாஸ்த்து சாந்தியென்ற தூய்மை யொழுங்கைச் செய்ய வேண்டும். பின்னர்க் கட்டிடத்திற்காகக் குறிப்பிட்ட கற்களை யெழுப்பிக்கொண்டுவர வேண்டும். தூய்மையான செங்கற்களைச் சுட்டு நல்ல மணலைப் பரப்பிவைக்க வேண்டும். பிறகு நவதான்யம் முதலான நூற்றெட்டுச் சாமான்களைச் சேகரித்து அஸ்திவாரம் எடுத்து அதில் அவைகளை இட்டுப் பூசித்துக் கட்டிடம் தொடங்க வேண்டும். அவைகளின்மீது கர்ப்பக்கிருகம் முதலியவை கட்ட வேண்டும். இந்த முறையில் கோயில் கட்டிடத் தொடக்கம் செய்ய வேண்டும்.

இனி, கோயிலின் படம் ஒன்றை அகல நீளத்திலும் பிறகு உயரத்திலும் கவனித்து வரைய வேண்டும். ஒவ்வொரு பகுதிக்கும் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறைப்படி அஸ்திவாரம், பீடிகை மதில், கால்கள், உத்தரம், மேல் முகடு, கோபுரம் முதலியவை அமைய வேண்டும். பொதுவாக ஒன்று முதல் ஏழு சுற்றுகள் அல்லது ஆவரணங்கள் வரை கட்டலாம். நடுவில் உள்ளது கருவறை; அதன் முன்னர் அர்த்த மண்டபம். பிறகு மணி மண்டபம். பிறகு மகாமண்டபம். பிறகு முன் மண்டபம். இவைகளேயன்றிப் பெரிய கோயில்களில் பதினாறு கால், முப்பத்திரண்டு கால், அறுபத்தினான்கு கால், நூற்றெட்டுக் கால், ஆயிரத்தெட்டுக்கால் மண்டபங்களும் கட்டப்படுகின்றன. இனிக் கொடிமரம், பலி பீடம், தெப்பக் குளம், தீர்த்தக் கிணறு முதலியவைகள் ஒவ்வொரு கோயிலுக்கும் உண்டு. பிராகாரங்களில் நந்தவனமும், வாகன அறைகளும், சமையலறை, களஞ்சியம், தேர்மேடு முதலியவைகளும் உண்டு.

சிவாலயங்களில் சுவாமி கோவில் மட்டுமன்றி அம்மன், பிள்ளையார், முருகன், பைரவர், நடராசர், நவக்கிரகங்கள், அறுபத்து மூன்று அடியார்கள், நந்தி முதலியவர்களுக்கும் தனி ஆலயங்களும் மண்டபங்களும் உண்டு. திருமால் ஆலயங்களில் கருடன், அனுமான், ஆழ்வாராதியர் முதலியவர்களுக்கு மண்டபங்கள் உண்டு. திருவிழா மண்டபம், அலங்கார மண்டபம், கொலு மண்டபம் ஆகியவைகளும் உண்டு.

கல்யாண மண்டபத்தில் ஐம்பொன் விக்கிரகங்கள் வைக்கப்படும். அர்த்த மண்டபத்தில் பூசைச் சாமான்கள், திரிவிட்டக்கால், பழக்கால் முதலியவைகள் வைக்கப்படும். விழாக்களில் ஒன்பதுவகை எடுபிடி சாமான்கள் உண்டு. ஐந்துவகை வாத்தியங்களும், வாகனங்களும் வைத்திருப்பார்கள். யாக சாலை தனியாக உண்டு. இவைகளுக்கெல்லாம் விதிகள் நிரம்ப உண்டு. இவைகளுக்கெல்லாம் ஆகம நூல்களிலும், புராண நூல்களிலும் கோயில்களுக் கேற்ற படி விவரங்கள் சொல்லப்படுகின்றன.

தத்துவப்பொருள்: எந்த ஓர் இயக்கத்தை மனிதன் தொடங்கினாலும், அதனை வளர்த்துவைத்துப் பயன் பெற்றாலும் அந்த இயக்கத்துக்கு ஒரு தத்துவப் பொருளைக் காண்பது அவனுடைய நுட்ப அறிவின் ஆற்றல் என அறிய வேண்டும். அப்படிப்பட்ட நுண்ணிய அறிவுடைய மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தான் வளர்த்த சமய நிலையங்களுக்கு ஒரு தத்துவப் பொருளைக் காணமாட்டானா? ஒப்புவமைகளை வைத்துக்கொண்டு அரிய தத்துவப் பொருள்களை அவன் அங்கேயும் காண்பான் அல்லவா? ஆகவே சமய நிலையங்களில் மிகச் சிறந்ததாகும் கோயில் அமைப்பின் தத்துவப் பொருளை அவன் கண்டு கொண்டது ஒரு வியப்பன்று. கோயில் இறைவன் எழுந்தருளும் இல்லம் ஆகும். (கோ + இல்). மனிதன் வசிக்கும் இருப்பிடம் அவனுடைய வீடு ஆகும். மனிதனுடைய செல்வ நிலைக்குத் தக்கவாறு அவன் வசிக்கும் வீடும் இருக்கும். அது குடிசையாகவும் மாளிகையாகவும் இருக்கலாம். அது போலவே இறைவனுடைய கோவிலும் அதன் சூழ் நிலையைப் பொருத்துச் சாதாரணமாக ஒரு நிலை முதல் ஏழு நிலை மாடம் வரை உயர்ந்திருக்கும். இது சாதாரண உவமையாகும். இதனினும் உயர்ந்த ஓர் உவமை உண்டு. கோயில் இறைவன் உறைவிடம் ஆகின், மனிதனுடைய உடல் அவனுடைய உயிர் அல்லது ஆன்மா வசிக்கும் அரிய இருப்பிடம் ஆகும் அல்லவா? இதனை உயர்ந்த ஞானிகளும் உணர்ந்திருக்கின்றார்கள். ஒப்புயர்வற்ற சித்தர் திருமூல நாயனார் இவ்வுவமையைக் கூறுகின்றார்:

> "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
> வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"

இப்பாசுரத்தில் உடம்பு ஆலயத்துக்கு உவமையாக்கப்பட்டது. கருவறை, ஆலயம், கோபுரம், சிவலிங்கம், ஒளி விளக்கு இவைகள் கோயிலுக்கு இன்றியமையாத பகுதிகள். அவை போலவே உடலுக்கும் உள்ளம், ஊனுடம்பு, வாய், சீவன், புலனறிவு இவைகள் இருக்கின்றன. மனிதனுடைய உடலில் அவன் உயிர் வசிப்பதுபோல ஆலயத்தில் இறைவன் வசிக்கின்றான். ஆகவே ஆலய அமைப்புக்கு ஓர் உவமை மனித உடலிலே காணப்பட்டது. மனித உடம்பின் அமைப்பை முன்னிட்டு அவன் தான் வழிபடு கடவுளுக்கும் ஓர் இருப்பிடம் உண்டாக்கினனை என்று சிலர் எண்ணக்கூடும். இத் தத்துவ அறிவைத் திருமந்திரம் சிவ பூசை என்ற பகுதியில் விவரிக்கின்றது. ஆண்டுக் கண்டுகொள்க. இதனையே பெருக்கி உரைக்கும் மற்றொரு பாசுரமும் உண்டு. அது:

> "படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
> நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றாகா
> நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றாகில்
> படமாடக் கோயில் பகவற் கதாமே"

என்பதாகும்.

இனி ஆலயத்தின் மற்ற வெளிப்படை யமைப்புகளும் மானிட உடல் நிலையில் காணலாம். ஆலயங்களில் ஒன்றுமுதல் ஏழுவரை சுற்றுநிலைகள் உண்டு. ஒரே ஒரு சுற்று உள்ள கோயில் பிள்ளையார் கோயில் போன்ற குக்கிராமக் கோயில், மனிதனுடைய பருவுடம்பைப் போன்றது.

பருவுடற்குள் உயிர் உள்ளது போல ஒரு சுற்றுக்கொண்ட ஆலயத்துள் மூலப் பொருள் இருக்கும். இனி மூன்று சுற்றுக் கொண்டவை பேரூர்த்தலக் கோயில் போன்ற புனிதக் கோயில்கள். அதனைப் போன்றது மனிதனுடைய பருவுடல் (ஸ்துல உடல்), நுண்ணுடல் (சூக்கும உடல்) நுண்ணுண்ணுடல் (காரண உடல்) என்பன. தவிர ஐந்து மதில் உள்ளது திரு வானைக்கா போன்ற பெருந்தலங்கள். இது மனிதனுடைய ஐந்து கோசங்களுக்குச் சம மானது. (1) அன்னமய கோசம் (2) பிராணமயகோசம் (3) மனோமயகோசம் (4) விஞ்ஞான மயகோசம் (5) ஆனந்தமய கோசம் என்ற நுண்ணிய அடுக்கடுக்கான உடல்கள். இறுதியாக ஏழுமதில்கொண்ட மாபெருங்கோயில். சீரங்கக் கோயில் இதற்கு உதாரணம். இது மனிதனுடைய ஏழு உடல்களுக்குச் சமமானது. பூ, புவ, சுவ, மகா, ஜன, தப, சத்திய முதலிய ஏழு லோகங்களுக்கு அமைந்த நுண்மையில் மனிதனுக்கு ஏழு நுண்ணுடல்கள் உண்டு என்பர் பெரியோர். அந்த உவமையைப் பொருத்து உள்ளது மாபெருங் கோயில்கள் என்க. ஆகவே கோயிலமைப்பு உடம்பின் அமைப்போடு ஒத்திருக்கும் தத்துவத்தை மனிதன் கண்டான்.

"இனி அண்டத்தில் உள்ளது பிண்டத் தில் உண்டு" என்பது பழமொழி. அதன் எதிரிடையும் அதைப்போலவே. பிண்டத் தில் உட்கிடை போலவே அண்டத்திலும் உண்டு என்க. மானிட உடம்பைச் சுற்றி நுண்ணுடல்கள் இருப்பதைப் போலவே அண்டங்களைச் சுற்றிப் பெரும் அண்டங்கள் உண்டு. அவைகளைச் சூரிய மண்டலங்க ளாகவும் நட்சத்திர மண்டலங்களாகவும் வகுக்கின்றனர். இவைகளுக்கு நடுநாயக மாக ஒரு மாபெரும் எரி குழம்பு அண்டம் இருக்கும். அவ்வெரி அண்டமே எல்லாச் சுற்று அண்டங்களையும் ஆட்டிவைக்கும் ஆற்றல் கொண்டது. அது போலவே கருவறையில் இறைவன் நடுநாயகமாக வீற்றிருப்பான். சுற்றிலும் மூன்று, ஐந்து, ஏழு மதில்கள் ஆவரணங்களாக அமைந் திருக்கும். இந்த வகையில் ஆலய அமைப்பு ஏற்பட்டுள்ளது.

இனி ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூலையிலும் சுற்றுத் தேவதைகளின் உரு வங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தத் தேவதைகளுக்கும் சின்னஞ்சிறு தனியறை கள் உண்டு. அவைகளுக்குத் தனித்தனிச் செயல்களும் பயன்களும் ஏற்பட்டிருக் கின்றன. இவைகளை ஒத்தாற்போலப் பிண்டமாகிய உடலிலும், அண்டத்திலும் உண்டு. உடலில் ஆறு ஆதாரங்கள் இருக் கின்றன. அவைகளைப் போலவே ஆலயங் களிலும் உண்டு. அவைகளை விரிக்கிற் பெருகும்.

அரசனுக்குத் திருவுலா, திருவோலக்கம், விருந்து, சயனம், பள்ளியெழுச்சி முதலிய வைகள் இருப்பது போலவே கோவிலில் உள்ள இறைவனுக்கும் திருவிழா, கொலு, பூசை, அர்த்த சாமம், அனந்தல், பள்ளி யெழுச்சி முதலிய சடங்குகள் உண்டு. இவைகளையெல்லாம் உற்று நோக்கின் மனிதன் தன் சூழ்நிலையை ஒத்தே ஆலய அமைப்பு, விழா அமைப்பு முதலியவைகளை ஏற்படுத்தியுள்ளான் என்று கூறினால் அது மிகையன்று.

பின்னுரை : இதுவரை ஆலய அமைப் புப்பற்றி வளர்ச்சி வரலாறு, ஆகம ஆதா ரங்கள், தத்துவப் பொருள் என்ற பகுதி களில் கூறினேம். இவைகளையன்றிச் சிற்பம், ஓவியம், இன்னிசை, பண்டைக்கலை முதலிய அருங்கலைகளில் ஆலயம் எவ் விதச் செல்வக் களஞ்சியமாக இருக்கிறது என்பதை ஆராய்வது மற்றொரு முறை யாகும். தென்னாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பச் செல்வம் வேறெங்கும் இல்லை என்றே சொல்லலாம். 'கல்லும் கவி சொல்லும்' என்று இந்த ஆலயங் களைத்தான் கூற வேண்டும். "கல்

லும் சொல்லாதோ கவி'' என்று புலவன் கூறினால் இந்தச் செல்வத்தை நன்கு அறிந்தே சொன்னன் என்க. மாமல்லை, காஞ்சி, மதுரை, வேலூர், பேரூர், நெல்லை, திருட்டினபுரம் முதலிய கோயில்களைப் பார்த்தவன் வேறு எதனைப் பார்க்கவேண்டும். இளாபுரி, சிற்றன்னவாசல், சீயகிரி ஓவியங்களைக் கண்டு துய்த்தவன் ரோமாபுரிக்குச் செல்லவேண்டுமா? தென்னாட்டுக் கோயில்களில் பண்டாரங்களில் உள்ள இன்னிசைகளைக் கண்டவன் காட்சிச் சாலைகளுக்குப் போக வேண்டுமோ? திருத்தேர்களில் காணும் மரத் திருவுருவங்களைக் கண்டவன் தச்சரின் உயர்ந்த மூளையைச் சோதிக்கச் செல்லவேண்டுமோ? பேரூர் போன்ற பண்டைப் புதையற் பொருள்கள் கலையாராய்ச்சிக்கு ஒப்பற்ற திரவியங்களாகப் பரிணமிக்கிறதைக் கூறவும் வேண்டுமோ? உரோமானிய நாணயங்கள், மாண்டவர் குழிகளில் கண்ட பண்டையெலும்புகள், மட்பாத்திரங்கள், நகைநட்டுக்கள் தமிழர் பண்பாட்டிற்கு ஒப்பற்ற சான்றுகளாக இருக்கின்றன அல்லவா? இவைகள் எல்லாம் ஆராய்ச்சிக்குரிய அரிய செல்வங்களென நாம் அறியவேண்டும். இவைகள் ஆலய அமைப்பின் சின்னங்களாக நமக்குக் கிடைக்கின்றன.

இனிக் கோயில்களைக் கட்டிவைத்து அவைகளைத் தக்கபடி பராமரிப்புச் செய்யாவிடில் அவைகள் அழிந்து போவதன்றி மக்களுக்குப் பயனும் தராவன்றே? அவைகளைக் கட்டின முன்னோர்கள் பராமரிப்பு முதலிய வகைகளில் தக்க ஏற்பாடுகள் செய்துவந்தார்கள்; ஆலயங்களைச் சமய நிலயங்களாகவும் செய்து வைத்தார்கள்; அர்ச்சகர்முதல் திருவலகுவரையுள்ள ஊழியர்களை ஏற்படுத்தி அவர்களுக்கு ஊதியங்கள் தந்து மானியங்களையும் வைத்தார்கள். அவைகளைத் தக்கபடி பரிபாலிப்பதற்கு அதிகாரிகளையும் வைத்தார்கள்; குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு மன்றங்களும் வைத்தார்கள்; திருவிழாக்கள், சமயப் பிரசாரங்கள், சமய நூல் ஓதுதல் முதலியவைகளுக்கும் ஆட்களும் வருவாய்களும் ஏற்படுத்தினர்கள். இச்செயல்கள் பல்லவர் காலம் முதற்கொண்டே நடைபெற்று வருகின்றன. சோழர், பாண்டியர் காலங்களில் விவரமாகவே சாசனங்கள் ஏற்படுத்தினர்கள். அக்காலங்களில் இருந்த ஆலய பரிபாலனங்களில் ஒருகூறுகூட இப்போது இல்லையென்றே கூறவேண்டும். தாங்கள் ஏற்படுத்திய அமைப்பு அழியாமல் இருக்கும் பொருட்டுக் கணக்கற்ற விதிகளையும் தண்டனைகளையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த முறையில் ஆலய பரிபாலன அமைப்பு இருந்தது.

உலகிய செய்திகளிலும் ஆலயம் ஒரு நடு நாயகமாக அமைப்புப் பெற்றிருந்தது. ஓர் ஊரை எடுத்துக்கொண்டால் அவ்வூர்ப் பரிபாலனம் பெரும்பாலும் கோயிலை வைத்துக் கொண்டே செய்யப்பட்டது. கோயில் அமைப்பானது ஊர்ச்சபையாகவே அமைவு பெற்றிருந்தது. வீடு அமைத்தல், புது வீடு கட்ட இடந்தரல், நெசவு முதலிய தொழிலாளர்களுக்குச் சலுகை தரல், கல்விக்கும் மருத்துவத்துக்கும் வசதி செய்தல், நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல், அதனைப் பிரிவினை செய்து பரிபாலித்தல், விளைபொருள்களைப் பங்கிட்டுக் கொடுத்தல், வரி முதலியவைகளை வாங்குதல் அவைகளை இறைவனுக்கு அளித்தல், பஞ்சநாட்களில் வரி தள்ளிக் கொடுத்தல், குற்றங்களை விசாரித்துத் தண்டித்தல் முதலான பல உலகிய விவகாரங்களில் கோவில் சபையார்களை ஈடுபட்டு வந்தனர். இவற்றால் கோவில் அமைப்புத் திட்டத்தின் பெருமையினை நன்கு உணரலாம். இத்தனை விரிவான நோக்கங்களைக் கொண்டு கோயில் அமைக்கப்பட்டது என்றால் அதன் பெருமையையும் உட்கிடை நோக்கத்தையும் அளக்கமுடியுமா?

———

புறநானூறும் பண்டைத் தமிழர் வரலாறும்

திரு. கே. கே. பிள்ளை, M.A., L.T., D. Litt., D. Phil. (Oxon), சென்னை.

★

பண்டைத் தமிழர் பற்பல துறைகளில் முன்னேற்றமடைந்திருந்தபோதிலும், அவர்களிடத்தில் வரலாற்றுணர்ச்சி வேரூன்றவில்லையென்றே கூறவேண்டும். இது தமிழர்களுக்கு மட்டுமன்று, இந்தியர்களுக்கே ஏற்பட்ட ஒரு குறை என்பது மிகையாகாது. ஹெரிடோட்டஸ், தியூசிடிடிஸ், லிவி, பாளிபியஸ் போன்ற வரலாற்று வல்லுனர்கள் பண்டைய இந்தியர்களிடம் தோன்றவில்லை. தம் முன்னோர்களின் வரலாற்றை ஆராய்ந்து உருவாக்குவதில் அவர்கள் மனத்தைச் செலுத்தவில்லை.

ஆனால் பண்டைத் தமிழரைப் பொறுத்த வரையில் இந்தக் குறையைச் சங்க நூல்கள் ஒருவாறு அகற்றுவதாகக் கருதலாம். சங்க இலக்கியங்கள், வரலாற்று முறையில் இயற்றப்பட்டவையல்ல. ஆயினும் அவற்றுள் தென்படும் கருத்துக்கள் பல, தமிழரின் அரசியல், சமூகநிலை முதலியவை பற்றிய வரலாற்றிற்குப் பயன்படுகின்றன. சிறப்பாக, புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு இவை மூன்றும் தமிழர் வரலாற்றிற்கு இன்றியமையாதவையெனக் கூறலாம்.

ஆயினும், இடைக்கால உரையாசிரியர்களும், தற்காலப் புலவர்கள் பலரும், உள்ளனவற்றையும் இல்லனவற்றையும் ஒன்றுய்த் திரட்டி வரலாற்றை அமைக்கத் துணிந்திருப்பது போற்றத் தக்கதன்று. இல்லாததை உண்மையுடன் கலப்பதால், உண்மைகூடக் குன்றிவிடும். இந்தக் கருத்தை உணராதலால் வந்த தீமை சிறிதன்று. மேல்நாட்டு அறிஞர்களும் மற்றும் பலரும் பண்டைத் தமிழரின் மாண்பை ஒன்று மதியாததற்கு இது ஒரு காரணமென்பது மிகையாகாது.

புறநானூற்றை எடுத்துக் கொண்டால் அரசியல் பற்றிய பல கருத்துக்கள் இந் நூலில் உள என்பது உண்மைதான். ஆனால், பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றை அவற்றின் மூலம் உருவாக்க முடியுமா? சங்க காலச் சேர சோழ பாண்டிய குலத்தாரின் வரலாற்றையாவது தொடர்பாகக் காலவரையறுத்துக் கூறமுடியுமா? முடியாதெனவே ஒப்புக் கொள்ளவேண்டும். பதிற்றுப்பத்துப் பாடல்கள் வழியாகச் சேரர்கள் வரலாற்றை ஒருவாறு தோற்றுவிக்கலாம். ஆனால் அதற்கும் எண்ணிறந்த இடையூறுகளும் ஐயப்பாடுகளும் தென்படுகின்றன. மற்றைய பேரரசுக் குலத்தினரைப் பற்றித் தொடர்பான வரலாற்றை உருவாக்குவது இன்னும் இடர்ப்பாடானதே.

வரலாற்றுக்குக் காலவரையறுப்பு கண்ணெனத் தகும். சங்க இலக்கியங்கள் தோன்றியது ஏறத்தாழக் கிருஸ்துவுக்குப் பின் மூன்று நூற்றாண்டுகளடங்கிய காலமெனக் கருதினால், அதில் புறநானூற்றின் காலம் யாது? மூன்று சங்கப் புலவர்களும் பாடின செய்யுட்கள் தொகுக்கப்பட்டதாகக் கூறப்படும் புறநானூற்றுப் பாக்கள் எந்த எந்தக் காலத்தில் தோன்றினவையெனத் திட்டப்படுத்துவது எளிதன்று. முதல் இருநூறு பாடல்கள் மன்னர்களின் போர் வெற்றிகளை அவர்கள் காலத்திலிருந்த புலவர்கள் பாடினவை என்றும், அடுத்த நூறு பாடல்கள் முன்னிலிருந்து மாண்டு



ஜுபிலி பிலிம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மதரஸ்-17.

போன மன்னர்களையும் வீரர்களையும்பற்றி யவை என்றும், இறுதி நூறு இருதரத்தை யும் சார்ந்தவை என்றும் திரு பி. டி. எஸ். ஐயங்கார் அவர்கள் கருதினர்கள். ஆனால், அவ்வரையறுப்பை ஒப்புக்கொள்ளுவதற் கில்லை. முதல் காணப்படும் சில செய்யுட் கள், பாடின புலவர்களது காலத்து வாழ்ந்த மன்னர்களைக் குறிப்பதெனக் கருத முடி யாது. எடுத்துக்காட்டாக, புறம் இரண் டாம் பாட்டில் முரஞ்சியூர் முடிநாகராயர், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேர லாதன், பாரதப் போரில் இருபடைக்கும் உணவளித்ததாகக் கூறுவது நம்புதற்குரி யதா? அப்புலவரும், மன்னரும் பாரதப் போர்க் காலத்தைச் சார்ந்தவர்களா? முன் னால் ஆண்டிருந்த கொடைவள்ளலாகிய மன்னனைப் பாடியதாகக் கருதுவதன்றே இயல்பு? அன்றியும் ஒரே மன்னனைப்பற்றி ஒரு புலவன் பாடியுள்ள பாடல்கள் புற நானூற்றில் வெவ்வேறு பகுதிகளில் காணப் படுவது இவரது கூற்றுக்கு முற்றிலும் முர ணாகப்படுகிறது.[1]

நிற்க, பாடல்களின் அடிக் குறிப்புகள் பாட்டுக்களுடன் தோன்றினவையா? திரு. கே. எ. என். சாஸ்திரி அவர்கள் அவ்விதம் கருதுகிறார்கள். ஆனால் திரு. வெங்கய்யா, பி. டி. எஸ். ஐயங்கார் ஆகிய இருவரும், அவை பிற்காலத்தவையென வற்புறுத்துகின் றனர். பல்லவ மன்னன் நந்திவர்மனது காலத்தைச் சார்ந்த பாரதம் பாடிய பெருந் தேவனார் புறநானூற்றைத் தொகுத்தவரென் றும் இவ்விரு அறிஞர்களும் முதலில் கருதி னர்கள். ஆனால் இது தவறான கொள்கை யென்று திரு. வெங்கய்யா அவர்கள், சின்ன மனூர்ப் பட்டயம் பிரசுரம் செய்யப்பட்ட பின் ஒப்புக்கொண்டார்கள். உண்மையில், தொகை நூல்களில் பலவற்றிற்கும் பாயிரம் பாடினவர் சங்க காலத்தைச் சார்ந்த ஒரு பெருந்தேவனரென்பது சின்னமனூர்ப் பட்ட யத்திலிருந்து வெளியாயிற்று.

அன்றியும், திரு. ஐயங்கார் அவர்கள், புற நானூற்றில் வரும் அடிக் குறிப்புக்கள் நூல் தொகுக்கப்பட்டதற்குப்பின் எவரோ இயற் றியிருக்கக் கூடுமெனக் கருதினர்கள். செய் யுட்களில் காணப்பட்ட துணுக்குக்களைக் கொண்டோ அல்லது அக்காலத்தில் கர்ண பரம்பரையாக வந்த செய்தியைக் கொண்டோதான் இக்குறிப்புக்கள் வகுக்கப் பட்டிருக்கவேண்டுமென்பது அவர் துணிபு. இதைத் தீவிரமாகக் கண்டிக்க முன்வந்த திரு கே. எ. என். சாஸ்திரி அவர்கள் திரு. ஐயங்கார் அவர்களின் கோட்பாட்டின் குற் றங் குறைகளை நன்கு விளக்கினபோதிலும், இவ்வடிக் குறிப்புக்கள் யாவும் பாக்கள் பாடினவர்கள் காலத்திலே அமைந்தவை என்று தெளிவித்துவிட்டதாகக் கூற முடி யாது[2] உண்மையில் இதுபற்றி இப்பொ ழுது ஒரு முடிவுக்கு வர இயலாது. சில பாக்கள் பாடினோர் காலத்தில் தோன்றி யிருக்கலாம்; மற்றும் சில பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையா யிருக்கலாம். புற நானூற்றிலும் மற்ற இலக்கியங்களிலும் காணப்படும் செய்யுட்களைப் பாடிய அதே புலவர்களைப் பற்றிய அடிக் குறிப்புக்கள் சங்க காலத்திலே இயற்றப்பெற்றனவாகக் கருதலாம். இவை மேலும் ஆராயத் தக்கன.

ஆகவே, காலவரையறை செய்வதற்கு இடைஞ்சல்கள் பல; தொடர்பான வர லாற்றைத் தொகுக்க இன்னல்கள் எண்ணற் றவை. ஆயினும் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் சில கருத்துக்கள் பயன்படுகின் றன. ஒவ்வொரு குலத்தையும் சார்ந்த சில அரசர்களைக் குறிக்கும் பாடல்கள், அந்த

---

[1]சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப்பற்றிக் கழாத்தலையார் பாடியுள்ளவை புற நானூற்றுப் பாடல்கள் 62-ம் 368-ம் ஆவன. [2]P. T. Srinivasa Iyengar: History of the Tamils p. 158. & K. A. Nilakanta Sastri: Studies in Cola History and Administration pp 7—18.

மன்னர்களைப் பற்றியும் அவர்களது செயல்கள், மாண்பு முதலியவை பற்றியும் விளக்குகின்றன. இவைகள் பெரும்பாலும் நம்புதற்குரியவை. பிற்கால நூல்களில் தென்படும் இலக்கிய மரபைப்போல அமைக்கப்பட்டவையல்ல. புலவர்கள், கண்டோ கேட்டோ அறிந்தபடி பாடினதாகத் தோன்றுகிறது. பெரும்பாலும் தாம் நேரில் தெரிந்துகொண்ட கருத்துக்களைத்தான் புலவர்கள் சித்திரிக்கின்றனர். ஆகையால் இவை நம்பிக்கைக்குரியவை. மேலும், அக்காலப் புலவர்கள், குற்றம் குறைகள் மன்னர்களிடத்துக் கண்டால் அவற்றைக் கண்டித்தனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் பண்பாடு சங்கப் புலவர்களிடம் தென்படவில்லை. ஆகையால் பாடப்பெற்ற அரசர்களையும், சிற்றரசர்களையும் பற்றிக் கிடைக்கும் விவரங்கள் நம்புதற்குரியவையெனப் படுகிறது.

இத்துடன், அரசியல் நெறி, அரசர்களது பண்பாடு முதலியவைபற்றிப் புறநானூற்றிலிருந்து சில கருத்துக்கள் உணரலாம். மக்களுக்கு நேரிடும் இன்னல்களை அகற்றி அவர்களைப் பேணும் கடமை மன்னர்களைச் சார்ந்தது.[3] மக்களுடைய செழிப்புக்காக அரும்பாடுபடவேண்டியது அரசர்களின் பொறுப்பு.[4] பகைவர்கள்கூட விளைவித்த தீங்குகளையும் பொறுத்தாள வேண்டியது மன்னன் கடமை.[5] குற்றத்திற்கேற்பத் தண்டித்து நீதி நிலவச் செய்வதும் அவர் பொறுப்பு. படையின் வலிமையைவிட அறத்தின் மாண்புதான் சிறந்ததெனவும் புலவர் வற்புறுத்தினர். 'அறநெறி முதற்றே யரசின் கொற்றம்'.

மன்னனின் அமைச்சர்களும், மன்னனைச் சூழ்ந்திருக்கும் புலவர்களும் அறிஞர்களும் அலுவலாளர்களும் அறம் பிறழாத செங்கோலோச்சும் பொருட்டு வழிகாட்டினர். அத்துடன், 'அறவோர் அவை' ஒன்றும் நிலவியதாகத் தெரிகிறது. இவ்வறவோர் அவையிலிருந்து அரசனுல் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர், மக்களிடையே அவ்வப்போது தோன்றிய சச்சரவுகளை ஒழித்து நல்லறிவு புகட்டினர்போலும்.

கொடை, மன்னன் மரபிற்கு இயற்கைக் குணமாகக் கருதப்பட்டது. புலவர்களுக்கும் பாணர்களுக்கும் கைம்மாறு கருதாது அரசர் நன்கொடை அளித்தனர்.

'தன்பெருமையின் தகவுநோக்கிக்
குன்றழிந்த களிறென்கோ
கொய்யுளைய மாவென்கோ
மன்றநிறையும் நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
நல்கி யோனே நகைசால் தோன்றல்'

—புறம். 387

எனும் குண்டுகட் பாலியாதனரின் பாட்டிலிருந்து மன்னர் எவ்விதம் தகுதி நோக்கி ஈந்தனரென உணரலாம். போர்க்களத்தில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் புண்பட்டு வீழ்ந்து கிடந்தபோது அவன் உடல் நிலையை அறியச் சென்ற கழாத்தலையார் எனும் புலவரைக் கண்டவுடன், மன்னன் தன் கழுத்திலணிந்திருந்த முத்தாரத்தைக் கொடுத்தானென்பது, கொடைநெறி அவன் மனதில் எவ்விதம் வேரூன்றி இருந்த தென்பதனைப் புலப்படுத்துகின்றது.

மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் போற்றினதோடு, அவர்களது நட்பு பூண்டு அவர்களைத் தூதர்களாகவும் அமைச்சர்களாகவும் அமைத்தனர். சங்க காலத்தில் பல மன்னர்களும் புலவர்களாய் விளங்கியது அவர்களது மாண்பைக் காண்பிக்கின்றது. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஓல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நல்லுருத்திரன், சோழன் நலங்கிள்ளி, சேரமான்

[3] புறம். 42; 75. [4] புறம். 8; 68. [5] புறம். 43. [6] புறம். 55.

கணைக்காலிரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை முதலியோர் கவித்திறன் பெற்ற மன்னர்களுள் சிலர்.

கல்வியறிவில் அழுந்தி வாழ்ந்திருந்த போதிலும் சங்க கால மன்னர்கள் போரில் ஈடுபடுவதும் வெற்றி பெறுவதும் மன்னனின் இன்றியமையாத கடமையெனக் கருதினர்கள். போரில் இறுதிவரை பொருது இறப்பதே மன்னனுக்குச் சிறந்த சாவு என எண்ணப்பட்டது. அரச குடியில் பிறக்கும் குழந்தை, தாய் வயிற்றிலே இறந்து பிறப்பினும் அதைத் தருப்பையில் கிடத்தி வாளால் துண்டித்த பின் அடக்கம் செய்தனராம்[7]. போரில் புறம் காட்டுவது மன்னனுக்கு அழகன்று. முதுகில் புண்பட்டால் தீரா இழிவு ஏற்பட்டது. அவ்விதம் புண்பட்டவர் வடக்கிருந்து உயிர் துறந்தனரென்பதற்குச் சான்றுளது[8].

மன்னரது வீரம் மக்களிடையில் பரவியது. தாய்மார் தம் அருமைப் புதல்வர்கள் போரில் வெற்றி பெற்றுப் புகழுடைய விரும்பினர். பொன்முடியார் தம் அருமை மைந்தனைப் போருக்கு அனுப்பிய பின்னரே அவருக்கு மனக்களிப்பு வந்ததெனக் கூறப்படுகிறது. தாயின் உண்மைக் கடமை அவரது பாட்டிலிருந்து நன்கு துலங்குகின்றது.

'ஈன்று புறந் தருதலென் றலைக் கடனே
சான்றோனாக்குதற் றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே[9].

இன்னும் பல பாடல்கள் தாய்மார்கள் வீர உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் காண்பிக்கின்றன.[10]

அரசியல் நெறி, மன்னனின் பண்பு முதலியவற்றைப் புறநானூற்றுச் செய்யுட்கள் பல எடுத்து விளக்குகின்றன. இது வரலாற்றின் ஒரு பகுதி. ஆலை பொதுமக்களின் வாழ்க்கையை இந்நூல் ஒரு திரைப் படத்தைப் போலத் துலக்கிக் காட்டுவதுதான் வரலாற்றிற்கு மிகப் பயனளிப்பது. ஒரு நாட்டின் வரலாறு சிறப்பாகப் பொது மக்களின் வரலாறென்பது இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சங்க இலக்கியங்களில், அதிலும் சிறப்பாகப் புறநானூற்றில் மக்களின் பழக்க வழக்கங்களைப்பற்றிக் கிட்டும் அறிவு மிகுதியானது. ஈண்டு ஒரு சிலவற்றை மட்டிலும் எடுத்துக்காட்டாகக் கூறுவோம்:

குடியிருந்த வீடுகள் ஒவ்வொரு வகுப்பினருக்கும் எவ்விதம் அமைந்திருந்ததெனத் தெரிகிறது. அரசர் வாழ்ந்த அரண்மனைகள் நெடுமாடங்கள்[11] முதல், குறவர் வாழ்ந்த புல்வேய் குரம்பைகள்[12] வரையில் எல்லா வகுப்பினர்களுடைய மனைகளின் விவரங்களும் காணப்படுகின்றன.

உண்டி பற்றிய பல குறிப்புக்கள் உள. நெல் அரிசி இப்பொழுது போல் அப்பொழுதும் முக்கிய உணவாயிருந்தபோதிலும், நெல் விளையாதபோது வரகும் தினையும் பயன்படுத்தப்பட்டன. வரகு அரிசியால் புளிச்சோறு சமைத்து ஆயர் உண்டனர். ஏழை மக்கள், கூழையும் கீரையையும் உண்டு வாழ்ந்தனர்.[13] குறிஞ்சி நிலத்திலும் மருத நிலத்திலும் உழவர், சோறு, பலாப்பழம், வள்ளிக் கிழங்கு, தேன் முதலியவற்றைப் பயன்படுத்தினர். புலால் உண்ணலும் மது அருந்தலும் பெருவழக்கம்.[14] பரதவரன்றி மற்றோரும் மீன் உண்டதும் கூறப்பட்டுள்ளது.[15]

விருந்தோம்பல் தமிழரின் தனிப் பண்பு. செல்வவந்தர்கள் மட்டுமல்ல, எளிய மக்கள்

[7] புறம். 74. [8] புறம். 66 [9] புறம். 312. [10] புறம். 277—79. [11] புறம். 177, 198. [12] புறம். 120. [13] புறம். 40, 318. [14] புறம். 14 34, 168. [15] புறம். 13, 42.

கூட அவரை நாடி வருவோருக்கு இயன்ற வாறு, உண்டி, உடை முதலியவை அளித்து மகிழ்வித்தனர்.[16]

உடையைப் பற்றிய குறிப்புக்கள் பல. ஒரு சிலர் மரவுரி உடுத்திய போதும், பெரும் பாலும் மக்கள் பருத்தி நூலால் இழைக்கப் பட்ட ஆடைகளை அணிந்தனர். பருத்தி ஆடைகள் மிக நேர்மையாக இழைக்கப்பட் டிருந்தன.[17] ஆனால் இதுபற்றிச் சங்கநூல் களில் காணப்படும் குறிப்புக்கள் சில மிகைபடக் கூறப்பட்டிருப்பனவாகவே தோன்றுகின்றன. எடுத்துக் காட்டாக, 'புகை விரிந்தன்ன பொங்குதுகில்'[18], 'திரு மலரன்ன புது மடி'[19] —இவைகளில், பாடினோரின் கற்பனையும் கலந்திருப்பது காணலாம். ஆயினும் பெருமைக் குரிய தாயில்லாவிடில் பலர் அதைக் குறித்துப் பாடியிருக்கமாட்டார்கள்.

இனி, சங்ககாலத் தமிழரிடம் இன வேற் றுமை எவ்வாறு அமைந்திருந்தது என்பதற் குக் குறிப்புக்கள் பல செய்யுட்களில் காணப் படுகின்றன. முதலில் தொழிலைப் பின்பற் றிய இன வேற்றுமைதான் தோன்றியிருக்க வேண்டும். வேட்டுவர், ஆயர், உழவர், வணிகர், தச்சர் முதலிய இனப்பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் சில செய்யுட் களில், வடநாட்டில் பரவியிருந்த நால்வகை இனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேற் றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்[20] எனும் அடி அதை நன்கு புலப்படுத்துகின்றது. அன் றியும் பார்ப்பனர்களைப் பற்றிய குறிப்புகள் பல. சமூக அமைப்பில் அவர்களுக்கு மேம் பட்ட நிலை அளித்திருந்ததாகக் காணப்படு கிறது. வேத வேள்விகளைச் செய்வது பார்ப் பனரின் உரிமையென விளக்கப்பட்டிருக் கின்றது.[21] அவர்கள் கல்வி கற்பதிலும் வேத முறைகளைப் போற்றுவதிலும் ஈடுபட்டிருந் தனர்.[22] மன்னர்கள் அவர்களுக்கு நன் கொடையாக நிலம் அளித்துப் போற்றினர்.[23] நான்மறையோரை அரசர்கள் தூதர்களாக அனுப்பினர்.[24] இவ்வழக்கத்தைப் பற்றி,த் தொல்காப்பியம், அகநானூறு, பின்தோன் றிய திருமுருகாற்றுப்படை முதலியவற்றில் பல சான்றுகள் உள.

எப்பொழுது எவ்விதம் வடநாட்டு வழக் கம் இங்குப் புகுந்தது என்று புறநானூற்றி லிருந்து கூறமுடியாது. புறநானூற்றுக் காலத்தில் இரு முறைகளும் ஒருங்கே நில வியதாகத் தெரிகிறது. நாளடைவில் இரண்டு முறையான இன வேற்றுமைகளும் ஒன்று சேர்ந்து வளர்ந்து வந்திருக்கவேண்டும்.

ஆனால், ஆரியர்கள் கூட்டங் கூட்டமாகத் தமிழகத்திற்கு வந்து குடியேறினரென்று எண்ண இடமில்லை. ஒரு சிலர் வந்து அவர் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களை யும் பரவச் செய்வதில் ஈடுபட்டிருக் கலாம். அதற்கு வசதி தென்னாட்டு மன் னர்களின் ஆதரவுதான். அரசர்களுக்குப் புதிய சமூக அமைப்பில் க்ஷத்திரியரென்ற நிலை கிடைத்ததுபற்றி, வந்தவர்களுக்கு அன் பும் ஆதரவும் அளிக்கப்பட்டனபோலும்.

இதனுடன் தமிழ்நாட்டிலிருந்த அறிவோர் பலரும் புது சமூக அமைப்பில் பார்ப்பன ராகச் சமைந்திருக்க இயல்புண்டு. இதற் கிடையே பல பௌத்தர்களும் சமணர்களும் தென்னாட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது. அவர்களோடு நிகழ்ந்த போட்டியின் விளை வாகப் பார்ப்பனர் தமது எண்ணிக்கையை யும் ஊக்கத்தையும் வலுப்படுத்த முயற்சி செய்திருக்கலாம்.

எவ்விதமாயினும் புறநானூற்றுக் காலத்தி லேயே ஆரிய சமயக் கருத்துக்கள் தமிழ ரிடையே காணப்படுகின்றன. பண்டைய தமிழர் வழிபட்ட தெய்வங்களும், அன்றியும் புதிய தெய்வங்கள், சமயக் கோட்பாடு கள், வழக்கங்கள், இவை யாவும் தென்படு கின்றன. முக்கட் செல்வனை சிவமெருமா

[16] புறம். 317. [17] புறம். 383, 392. [18] புறம். 398 [19] புறம். 390. [20] புறம். 183. [21] புறம். 224. [22] புறம். 166. [23] புறம். 122. [24] புறம். 305.

சூர்யா : அடி ஜோதி, நீ வாங்கிவந்திருக்கும் புடவைகளையும் சாரீஸ்களையும், ஜாக்கெட்களையும் மற்ற ரகங்களையும் பார்த்தால் உன் பெயருக்குத் தகுந்தாப் போல் ஜோதிமயமாகவே விளங்குகிறதே. எந்தக் கடையில் வாங்கினது.

ஜோதி : உனக்குத் தெரியாதா. அந்தக் கடையை நீ இன்னம் பார்க்கவில்லையா. ஊர் ஜனங்களெல்லாம் கூட்டம் கூட்டமாகப் போய் ஜவுளி வாங்குகிறார்களே. அந்தக்கடையைப் போய்ப்பார். கடைதான் என்ன அலங்காரம்! என்ன பார்வை!! என்னென்ன தினுசுகள்!!!

சூர்யா : அது சரி. இப்படி வளர்த்திக்கொண்டே போகிறயே, கடை எங்கேயிருக்கிறது. சொல்லு.

ஜோதி : அதுவா : மதுரையில் மிக அருமையாகவும் மிக அழகாகவும் உள்ள கட்டிடத்தில்

விதேச ஜவுளி ரகங்களும்
சுதேச மில் ஜவுளி தினுசுகளும்
பலவூர் கைத்தரி ஜவுளிகளும்
பல பல வர்ண ஜாலங்களில்

பார்க்கப் பார்க்க இனிமையைக் கொடுக்கும் ஜவுளிக்கடை.

சூர்யா : கடையின் பெயர் என்ன ?

ஜோதி : ஓ...பெயரா...அதுதான்

கீழச்சித்திரை வீதியிலிருக்கும்

ஹமீதியா

சூர்யா : ஓஹோ. ஹமீதியாவா. என் பிரதர்கூட நேற்றைய தினம் **லிபர்ட்டி ரெடிமேட் ஷர்ட்டிங்** வாங்கிவந்தாரே. அந்தக் கடையா.

ஜோதி : ஆமாம். **லிபர்ட்டி ரெடிமேட் ஷர்ட்டிங்** அந்தக் கடையில்தான் கிடைக்கும்.

அதே

ஹமீதியா ஸ்டோர்ஸ்

னுக்கு முதன்மையான இடம் கொடுத்து வந்தது, காரிகிழார் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிப் பாடியுள்ள செய்யுளில் காணப்படுகின்றது.[25] அதுபோலவே தமிழர் முருகனைத் தொன்று தொட்டே வழிபட்டு வந்ததாக அறி கிறோம்.[26] செந்தில் (திருச்செந்தூர்) மலை யில் முருகன் கோட்டம் தழைத்து வளர்ந் தது.[27] அன்றியும், திருமால், பலராமன் இரு வரையும் வணங்கினர். இவரை வணங்கு வது வடநாட்டு வழக்கத்திலிருந்து வந்த தென்பதற்கு ஐயமில்லை. ஆங்காங்குப் பழைய பெயர்கள் மாறுதலடைந்து வந்தன. கொற்றவை, துர்க்கையாக மாறினதும், லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி என்ற தெய்வங் கள் அமைந்ததும் சிலப்பதிகாரத்தில் நன்கு தெரிகின்றது.

ஆகவே, இதுகாறும் எடுத்துக்காட்டாகக் கூறியவற்றிலிருந்து பண்டைய தமிழரின் சமூகநிலை பற்றிப் புறநானூற்றில் பல கருத்துக்கள் திகழ்கின்றனவென்று தெரி கிறது. அவைகளை ஆராய்ந்து, நாளடைவில் எவ்விதம் மாறுதலடைந்தன என்று அறிவது மிகத் தேவை. அரசியலைப் பற்றியும் தொடர்பான வரலாற்றிற்குப் போதிய ஆதா ரங்களில்லை. ஆயினும் அரசியல் முறை, அரசர்களது பண்பு, நெறி, நாட்டின் நிலை இவை பற்றிக் காணப்படும் கருத்துக்கள் மிகப் பயனுள்ளவை.

[25] புறம். 6. [26] புறம். 299. [27] புறம். 55.

தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் எங்கள்

நல்வாழ்த்துக்கள்

* கொல்லம், கள்ளிக்கோட்டை ஓடு வகையறாக்கள்
* சானிட்டரி சாமான்கள்
* ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமிண்டுக் குழாய்கள், தகடுகள்
* G. I. பைப்புகளும், பிட்டிங்குகளும்
* பளிங்குக் கல்

மற்றும் பல கட்டிடச் சாமான்களும்
குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

*

தந்தி: டைல்ஸ். போன் நிர். 585 & 3139 தபால் பெட்டி நிர். 15

ச. இ. வருசை முகம்மது ரூவுத்தர்,

1, வடக்குப் பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை.

மேடைப் பேச்சு

தமிழ்வேள் திரு. பி. டி. இராசன், எம். எல். ஏ.

★

மனிதனின் பேச்சு குழந்தையின் மழலைச் சொல்லிலிருந்து உதித்தது. குழந்தைப் பேச்சையேதான் வள்ளுவர் பெருமையாகப் பேசுகிறார்:

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

மழலைச் சொல்லின் இனிமை மனிதன் சொல்லில் இருக்குமா? சாதாரணமாக இராது. ஆனால் ஆனந்தப் பெருக்கெடுத்த நிலையில், மனிதன் ஆடவும், பாடவும், பேசவும் செய்கிறான். பேச்சு இனிமையுள்ளதாயின் அதுவே பாட்டுப்போல் ஒலிப்பதை நாம் உணர்கிறோம்.

நடனம், ஓவியம், பாடல், சமையல், உடுத்துதல் முதலியவைகளைப் போல் பேச்சும் ஒரு கலைதான். மற்றவைகளுக்கு எத்தகைய பயிற்சி தேவையோ, அத்தகைய பயிற்சி பேச்சுக்கும் வேண்டும். ஆதலால் ஒருவரின் பேச்சின் திறமையும், பெருமையும் அவரது பயிற்சியின் தன்மையைப் பொருத்ததாகிறது.

பேச்சு இருவகைப்படும்:—

1. மக்கள் தமக்குள் இயல்பாகப் பேசும் பேச்சு.
2. மேடைப் பேச்சு.

1. பேசவேண்டிய பொருள் பற்றி நன்குணர்ந்து எடுத்துச் சொல்லுவதில் பிறரைக் கவரும் முறையிலும் அவர்கள் அறியும் வகையிலும் எளிய விதத்தில் வேடிக்கையும் உல்லாசமும் கலந்து எழுச்சியும் இன்பமும் உண்டாகுமாறு பேசும் சீரிய பேச்சாளனே உரையாடலில் முதல் வரிசையில் கருதத்தக்கவனுவான். அத்தகைய பேச்சையே உரையாடல் (Conversation) என்றும், பேச்சாளனை உரையாடலில் வல்லான் (Conversationalist) என்றும் ஆங்கிலத்தில் வழங்குவார்கள். உரையாடலின் போது, ஆண்கள் மிதமிஞ்சிய உற்சாகத்தில் மனம் போன போக்கில் அளவுக்கு மீறிப் பேசாதிருப்பதற்கு, மேல் நாட்டில், குறிப்பாகப் பிரான்சு தேசத்தைச் சேர்ந்த கல்வித் திறமையுள்ள பெருங் குடும்பத் தாய்மார்கள், அடிக்கடி படித்தவர்களை விருந்திற்கழைத்து, அவ்விருந்தில் அவர்களை உயர்வான பேச்சையே பேசும்படியான சூழ்நிலையை ஏற்படுத்திவந்தார்கள். அத்தகைய கூட்டத்திற்குத்தான் சலாங் (Salon) என்பது பெயர்.

இம்மாதிரிக் கூட்டங்களில் அடிக்கடி கலந்து கொண்ட வழக்கத்தால், கலை (Art) யளவில் நின்ற உரையாடலானது, நுண்கலை (Fine Arts) யாக உயர்ந்து விட்டது. உயர் குடும்பப் பெண்களின் முன் மாதிரியைக் கண்ட, பிற குடும்பப் பெண்களும் படித்தவர்களை விருந்திற் கழைத்து, ஆண்களும் பெண்களும் சரிநிகரான நிலை எய்தினர். இதனால் ஆடவர்கள் பெண்களுக்கு உயர் மதிப்பையளிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது; பேச்சில் செம்மையும் செழிப்பும் மிளிர்ந்தன.

மேற் சொன்ன விருந்தரங்கங்களின் மூலம் உரையாடல், நுண் கலை (Fine Art) ஆக உயர்ந்ததுடன் ஆடவர்களின் பேச்சில் செம்மையும், செழுமையும், (Refinement) வளர்ந்தன.

2. **மேடைப்பேச்சு**: கிரேக்கர்களுடைய அரசியல் மக்கள் ஆட்சியை ஒட்டியது.

— ஓர் —
பரிபூரண



சேவைத்
திட்டம்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : **ரூ. 1 கோடிக்கு மேல்**

தலைமைக் காரியாலயம் : பாண்டியன் பில்டிங், மதுரை

கிளைகள் :—பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர், கொச்சி

சென்னிமலை நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்

No. K. 885

(ஈரோடு R. S.) **சென்னிமலை P. O.** (கோயமுத்தூர் ஜில்லா)

எங்கள் சங்கத்தில்

அனைவரும் புகழும் அழகிய அருமையான ஆடைகள்

★ படுக்கை விரிப்புகள்
★ மேஜை விரிப்புகள்
★ திரைக்கான துணிகள்
★ துண்டுகள்
★ சேலைகள்
★ அலங்கார துணி வகைகள்

தயார் செய்யப்படுகின்றன

எங்கள் படுக்கை விரிப்புகளுக்கும், மேஜை விரிப்புகளுக்கும் சென்னை அரசாங்கத்தாரால் 1955, 1956, ஆண்டுகளில் முதல் பரிசும், அநேக பொருட் காட்சிகளில் தங்க மெடல், சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

M. P. நாச்சிமுத்து, B.A., B.L.
தலைவர்

ஒவ்வொரு நகரத்திலும், தனி ஜன நாயக ஆட்சி நிலவி வந்தது. நகர மக்களின் ஆதர வால்தான் காரியங்கள் முடிவெய்தின. அவ் வாதரவுபெற மேடைப் பேச்சு இன்றியமை யாத கருவியாக விளங்கியது. இது மேடைப் பேச்சு (Oratory) என்றும், அத்தகைய பேச்சாளரைப்பெரும் பேச்சாளர் (Orator) என்றும் சொல்லப்பட்டது. இக் கலைக்குப் பிதாவென்று சொல்லப்படுபவரும், வழி காட்டியவரும் டிமாஸ்தனிஸ் (Demosthenes) என்பவர் ஆவர்.

கிரேக்கர் காலத்துக்குப் பின் னல் உரோமாபுரியிலும் சீசர்கள் காலத்துக்கு முன் கிரேக்கர் பழக்கத்தை ஒட்டியே அவர்களுடைய அரசாங்கம் நடைபெற்று வந்தது. உரோமாபுரியில் பேசுவதில் புகழ் பெற்றவர் சிசரோ (Cicero). இவருக்கு அடுத்தபடியாகப் பேச்சு வன்மையில் பிர சித்தி பெற்றவர், மார்க் அந்தோனி (Mark Antony) என்று சொல்லலாம்.

தளபதியான சீசர் (Caesar) வெற்றிமேல் வெற்றி பெற்று உரோமாபுரிக்குள் நுழைந்த போது, ஜன ஆட்சிக்கு எதிராகத் தம்மு டைய ஆட்சியை நிலை நாட்டி விடுவாரெனப் பயந்த மக்களுடைய பிரதிநிதிகளில் சிலர் அவரைக் கொலை செய்தார்கள். அது சமயம் மார்க் அந்தோனி, சீசரின் சவத்தை மக்கள் முன் வைத்துத் தம்முடைய பேச்சு வன் மையினல், கொலை புரிந்தவர்களைக் கொலை காரர்கள் என்று எடுத்துக்காட்டி இறந்து போன சீசருக்குப் பெரும் புகழையும் கீர்த்தியையும் ஏற்படுத்தினர். அதன் பய னுகத்தான் உரோமாபுரியில் குடியாட்சி மறைந்து (முடியாட்சி) சீசர்களுடைய ஆட்சி ஆரம்பமாயிற்று. உரோமின் முதல் மன்னர் அகஸ்டஸ் சீசர்.

கிறிஸ்து காலத்துக்குப் பின் பேச்சில் வல்லவர்கள் மதபோதகர்களாகக் கிருஸ்து வக் கோவில்களில் பேசுபவர்களானர்கள். கிறிஸ்து காலத்திலிருந்து முக்கியமாகப் படித்தவர்களே மதபோதகர்கள். கிறிஸ்து வின் போதனைகளை எடுத்துப் பேசுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களிற் சிலர் பேச்சுத் திறனில் பெயர் பெற்றவர்களானர்கள். அதற்குப் பின்னல் பேச்சாளர்களுக்கு அவசியம் ஏற்பட்டது இங்கிலாந்தில்தான்.

முதலாவது சார்லஸ் அரசர் கொலையுண்ட பின் ஆங்கிலேயப் பாராளுமன்றத்துக்குத் தளபதி கிராம்வெல் மூலம் ஜனநாயக முறையில் அதிக அதிகாரம் ஏற்பட்டது. அவர் காலத்துக்குப் பின் முடியரசு திரும்பி வந்த போதிலும் பாராளுமன்ற அதிகாரம் குறையவில்லை. பல காரணங்களைக் கொண்டே அதன் அதிகாரம் நாளடைவில் மேலோங்கி வந்தது. அந்தச் சமயங்களில் தான் அரும் பெரும் பேச்சாளர்கள் தோன் றினர்கள். அவர்களில் ஒருவரான எட் மண்டு பர்க்கை எந்நாளும் நாம் மறக்க முடி யாது. ஏனென்றல், அவர் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் கவர்னர் ஜெனரலா யிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது, இந்தியர் களைக் கொடுமைப் படுத்தி ஆங்கில மக்க ளுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தினு ரென்று குற்றஞ் சாட்டி ஓர் இரவு முழுவ தும் தீவிரமாகப் பேசினர்.

முதல் உலக மகா யுத்தத்தில் ஆங்கிலப் பிரதமர் லாயிட் ஜியார்ஜ் பெரும் பேச்சாளி என்று பெயர் பெற்றார். இரண்டாது உலக மகா யுத்த காலத்தில் ஆங்கிலப் பிரதமர் வின் ஸ்டன் சர்ச்சில் தம் பேச்சு வன்மையினல் தம் நாட்டைக் காப்பாற்றியதும் அல்லாமல் மேல்நாட்டு நாகரிகத்தைக் காப்பாற்றியதன் மூலம் ஜனநாயக ஆட்சியையும் மக்கள் உரிமையையும் காப்பாற்றினர்.

நம் நாட்டைக் கவனிக்கும்பொழுது திற மையான பேச்சாளர்கள் பலர் இருந்திருக்கி றார்கள். அவர்களில் முக்கியமானவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறேன். தாதாபாய் நௌரோஜி, பிரோஸ்ஷா மேத்தா, பிபின்

சந்திரபால், சுரேந்திரநாத் பானர்ஜி, சுவாமி விவேகானந்தா, விநாயக தாமோதர சவர்க்கார், வலங்கைமான் சீனிவாச சாஸ்திரிகள், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சி. ஆர். தாஸ், புலாபாய் தேசாய், போஸ் சகோதரர்கள், சி. ஆர். ரெட்டி, ஆர். கே. சண்முகம் செட்டி முதலியவர்கள்.

ஒரு நாட்டிற்குக் கஷ்டம் ஏற்படும் காலத்தில்தான் இத்தகைய திறமைமிக்க பேச்சாளர்கள் தோன்றினர்கள் என்று சொல்லலாம். சாதாரண காலங்களில் தீவிர மாகப் பேசவேண்டிய அவசியம் ஏற்படு வது இல்லை. சென்ற ஐம்பது அறுபது வருட காலங்களில் ஆங்கிலப் பாராளு மன்றத்தில் அலங்கார, ஆரவாரமில்லாத, விஷயத்தை ஒட்டிய பேச்சுக்களே (Matter of fact Speeches) நிகழ்த்தப்பட்டிருந்தன. ஏனென் ரால் காலத்தை வீணுக்காமல் கருத்தை ஒட் டிய பேச்சினால்தான் காரியம் நடைபெறும்; முக்கியமான அதிக சட்டங்கள் நிறைவேற்ற முடியும் என்பதனால்தான் காரியார்த்தமான பேச்சுக்களே பேசப்பட்டு வந்தன.

மேடைப் பேச்சுக்குச் சில விதிகள் உண்டு. பேச்சாளர் விஷயத்தைத் தெளி வாகவும், சுருக்கமாகவும், விளக்கமாகவும் (clear, concise and to the point) பேச வேண்டும். சிலர் பேசும்பொழுது தங்கள் மனத்தில் உள்ளதை மறைத்தே பேசுகிறார் கள். அவர்கள் தங்கள் கருத்துக்களைக் கொலைசெய்பவர்களென்றே கூறலாம். தங்க ளைக் கெட்டிக்காரர்களென்று பிறர் நினைக்க வேண்டுமென்று சிலர் பேசுகிறார்கள். அத் தகையோர் பேசும்பொழுது அவர்கள் என்ன பேசுகிறார்களென்பதை ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியாமற் போகிறது. நன்றாகப் பேசினர்கள் என்பதைத் தவிர என்ன பேசினர்களென்பதைச் சொல்ல முடிவதில்லை. பேசியவர்களைக் கேட் டாலோ, அவர்கள் கதியும் அதே கதிதான். என்ன பேசினர்களென்பதைக் அவர்களா லும் குறிப்பிட முடியாமற் போகிறது. சிலர் நீண்ட நேரம் பேசினால்தான் அது பேச்சாகுமென்று நினைக்கிறார்கள். சில வரு டங்களுக்குமுன் ஏதாவது ஒரு கூட்டத் திற்கு நான் தலைமை வகிக்கும்படி நேர்ந் தால் உள்ளூராவது என்னைத் திட்டாம லிருந்த தமிழ்ப் பேச்சாளர்களே இருந்திருக்க மாட்டார்களென்றே நினைக்கிறேன். கார ணம், நான் பேச்சின் நேரத்தை நிர்ணயிப் பதுதான். அரை மணி நேரம்தான் பேச வேண்டுமென்று சொன்னால் அவர்களைக் கொலை செய்பவனைவே அவர்கள் என்னைக் கருதியதுண்டு. தூக்கு மேடையில் ஏறு என்று சொன்னால்கூட அவர்கள் மகிழ்ச்சி யுடன் ஏறச் சம்மதிப்பார்கள்; சுருங்கப் பேசவேண்டுமென்றால் பேச இயலாது என்ற பயம் காரணமாக வருத்தப்படுவார் கள். பேச்சின் இரகசியத்தை அறியாதவர்க ளென்றுதான் அவர்களைச் சொல்லவேண் டும். ஒருவன் பேச வேண்டுமானால் முக்கிய மாக எதைப் பேச வேண்டும் என்ப தைத் தீர்மானித்துவிட்டால் குறித்த காலத் தில் பேச முடியும். அதிர்ஷ்ட வசமாக வானொலி (Radio) நிலையங்களுடைய நடை முறை நான் சொல்வதை உறுதிப்படுத்தும். எத்தகைய சிறந்த பேச்சாளராயிருந்தாலும் வானொலியில் 15 நிமிடத்துக்கு மேல் பேச அனுமதிப்பது இல்லை. முக்கியமாக, பேசு பவர் ஒருவர் கேட்பவர்கள் மனதில் புரியும் படியும் பதியும்படியும் இரண்டொரு சங்க திகள் சொன்னாலே போதும். அவைகளைக் கேட்போர் சீக்கிரம் மறந்துவிடவும் முடி யாது; நினைத்துப் பார்ப்பதற்கும் வசதி அளிக்கும். மேடையில் பேச முன்வரும் ஒருவருக்குப் பேசப்படும் பொருளின் தெளி வில் பூரண நம்பிக்கை வேண்டும். அவ் விதம் பொருள் தெரிந்து பேசும் பேச்சில் மரியாதைக் குறைவான பேச்சுக்கே இடம் ஏற்படாது. கேட்பவர்களுக்கு ஒன்றும்தெரி யாது என்று நினைத்துப்பேசுவது பேசுவோர் களின் அறியாமையை வெளிப்படுத்தும்.

சாதாரணமாகப் பொதுக்கூட்டம் கூட்ட வேண்டுமானால் கூட்டத்தை இரண்டு மணி நேரத்துக்கு மேல் நடத்தக்கூடாது. நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கவேண்டும். அக்குறிப்பிட்ட நேரத்திற்குள் இரண்டு அல்லது மூன்று பேர்களுக்குமேல் பேச்சாளர்களைப் பேச அழைக்கக்கூடாது. ஒருவர் கூறியதையே மற்றவர் கூறும் நிலை ஏற்படக் கூடாது. நிகழ்ச்சிகள் வெகு துரிதமாக (Fast moving world) நடைபெறும் இக் காலத்தில் ஒரு மனிதனை இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருக்கச் செய்து, கவனத்தை ஒருமுகப்படுத்தச் சொல்லி, அவனுக்குத் தெரியாததைப் பற்றியும் எடுத்துச் சொல்லி அவன் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் இழக்கச் செய்வது உடலையும் மனத்தையும் வருத்துவதாகும். கூட்டத்தில் உள்ள அனைவரும் எவ்விதத் தடையுமின்றிக் கேட்பதற்கு வசதியாக ஒலிபெருக்கி அமைக்கவேண்டும். கூட்ட ஆரம்பத்தில் மக்கள் மனத்தை ஒருமுகப்படுத்த இறை வணக்கம் சுருக்கமாகச் சொல்லவேண்டும். கூட்ட இறுதியில் கூட்டத்தினர் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் அமைதியுடனும் கலைவதற்கு ஏதுவாகத் தேசிய கீதம் பாட வேண்டும். அதுசமயம் யாவரும் எழுந்து நின்று கீதம் முடிந்தபின் கலைந்துபோதல் சிறந்த பண்பாகும்.



கருநாடக இசை

சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

★

கருநாடகம் என்பது ஒருவிதக் கட்டுப் பாட்டுக் கடங்கியதாகத் தோன்றுகிறது. நடை, உடை, பாவனைகளைப் பார்த்து, ''இது என்ன சுத்தக் கருநாடகமாக இருக்கிறது'' என்று கூறுவது நம்மிடையே வழக்கமாக இருந்து வருகிறது. மற்றவரைப் பார்த்து வேடம் போடாமலும், மாண்பு தவறுமலும் ஒழுங்கான முறையில் உயர்வைக் காண்பதும் கருநாடகமாகும். முற்காலத்தில் தென்பிராந்தியத்தில் ஆட்சி செய்த அரசர்களைக் கருநாடக மன்னர்கள் என்று அழைத்ததும் உண்டு. இதைப்போலவே நம் தென்னாட்டில் விளங்கிவரும் இசைக்குக் கருநாடக இசை என்னும் பெயரும் வழங்கி வருகிறது. கருநாடகம் என்ற சொல்லுக்கு வடமொழியில் வல்லவர்கள், காதினால் இசையைப் பருகி அதன் இன்பத்தை அனுபவித்தல் என்று பொருள் கூறுகிறார்கள். விசயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் தம் காலத்தில் சங்கீத வித்வான்களை ஆதரித்துச் சங்கீதக் கலைக்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் அளித்த காரணத்தால் கருநாடக சங்கீதம் என்ற பெயர் ஏற்படலாயிற்று என்றும் கூறுவார் சிலர்.

எது எப்படியிருந்த போதிலும் இந்நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் சங்கீதக் கலைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்பத்தை அனுபவிப்பதற்குரிய சாதனமாகச் சங்கீதம் கையாளப்பட்டு வந்திருக்கிறது. அதனால்தான் பெரியோர்கள் இசைக் கலையை மிகவும் சிறப்புடன் ஆராதித்து வந்திருக்கிறார்கள். தென்னாட்டில் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இராக தாள பாவ நயத்துடன் பதிகங்களும், பாசுரங்களும் பாடி ஆண்டவன் திருவடியை அடைந்திருக்கிறார்கள். இவர்கள் பாடிய பாடல்களில் காணப்படும் இசையைக் கருநாடக இசை என்றே கருதலாம். அருணகிரிநாதர் முருகன்பேரில் அருளிச் செய்துள்ள திருப்புகழ்ப் பாடல்கள் அனைத்திலும் இசையும் லயமும் இணைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

ஆகியில் இசையானது சாம வேதத்தினால் உண்டாகிப் பிரம்மாவினால் அனுசரிக்கப் பட்டு, உலக நன்மைக்காகப் பரதாதி முனிகளால் கையாளப்பட்டுப் பின்னர் வாக்கேயக்காரர்களால் பரவிப் பெருமை பெற்றிருக்கிறது. பக்தியால் பாடும் இசையானது யோகம் என்று ஆன்றோர் கூறுகின்றனர். இறைவன் நாரதரிடத்தில், ''நான் வைகுண்டத்தில் இல்லை; யோகியரின் உள்ளத்தில் இல்லை; சூரிய சந்திர மண்டலங்களில் இல்லை; எனது பக்தர்கள் எங்குக் கானம் செய்கிறார்களோ அங்குத்தான் இருப்பேன்'' என்று கூறியிருக்கிறார். பரமசிவன் பார்வதியிடம், ''புண்ணியங்களுக்கு ஓர் எல்லை உண்டு; என்னெதிரில் இசை பாடும் பக்தர்களின் புண்ணியங்களுக்கு அளவே இல்லை; எனக்குச் சங்கீதத்தில் இருக்கும்படியான விருப்பமானது எனக்குப் படைக்கப்படும் பால், பழம், நெய், அமுது முதலிய ஆகாராதிகளில் இல்லை. சுத்தமான சங்கீதத்தைப் பாடும் பக்தர்களுக்குச் சதுர்வித புருஷார்த்தங்களும் கிட்டும்; சுத்தமான இதயத்துடன் சுஸ்வரத்துடன் அரிஹராதி தேவர்களைத் துதிசெய்தால் தருமங்களும், தனசம்பத்துக்களும், சங்கீத ஆராதனையால் மோட்சமும்

கிடைக்கும்'' என்று சொல்லியிருக்கிறார். சர்வக்ஞனை சர்வேஸ்வரன் சங்கீதத்திற்குக் கட்டுப்படுகிறான். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வேணுகானத்தினாலேயே புவனத்தை மயங்கச் செய்தார். அதுபோலவே சாமகானத்தினால் பிரம்மாவும், வீணாகானத்தினால் சரஸ்வதியும் பரவசமடைகிறார்கள் என்றால் மற்ற யக்ஷ, கந்தர்வ, தேவ, தானவ, மானவர்கள் இந்த இசைக்குக் கட்டுப்படாமல் இருக்கமுடியுமா?

ஊஞ்சலில் படுத்துக்கொண்டிருக்கும் குழந்தை சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தம் அடைகிறது. காட்டில் வசிக்கும் மானினம் வேடனுடைய பாட்டுக்கு மயங்கி அவனிடம் அகப்பட்டுக் கொள்ளுகிறது. கொடிய நச்சு அரவமும் மகுடி இசையில் மயங்கி விடுகிறது. இப்போது பண்டிதர் முதல் பாமரர் வரை சங்கீதத்தைப் பெரிதும் விரும்புகிறார்கள். சங்கீத வித்வான்கள் அவரவர்கள் திறமைக் கேற்றபடி மக்களால் கௌரவிக்கப்படுகிறார்கள். கருநாடக இசைக்கு நமது தென்னாட்டில் பெரும் ஆதரவு இருந்து வருகிறது. கருநாடக இசையைப் பற்றி எழுதுவதென்றால் மேலும் மேலும் அது விரிந்துகொண்டே போகும் என்றஞ்சிக் கருநாடக இசை ஒப்பற்ற ஒரு தெய்வீக இசை என்று சொல்லி இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். தவிரவும், பெரியோர்களின் பக்திப் பாடல்களையே பாடிக் கருநாடக இசையின் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறபடியால், அந்த அனுபவத்தை அவர்களே கண்டு இன்புற வேண்டுமேயல்லாது வரிவடிவில் விவரிப்பது இயலாத காரியமேயாகும்.

———

நற்செய்தி

Tel: "EMBROIDERY"

KITTAPPA
DRESSES
MADURAI.

★ கண்ணைக்கவரும் ஜரிகை வேலைகள்!
★ அழகே உருவான எம்ப்ராய்டரி சேலைகள்!!
★ அற்புத வேலைப்பாடுகளடங்கிய சோளி பீஸ்கள்!!!
★ நவ நாகரீக பேன்ஸி ரேடிமேடுகள்!!!!

முதலியவைகளுக்கு முதன்மைபெற்றது

கிட்டப்பா

டிரஸ் மேனுபாக்சரிங் & எம்ப்ராய்டரி ஓர்க்ஸ்

ஜடாமுனி கோவில் 1-வது சந்து, மதுரை

கலையழகு நிறைந்த மதுரையில் நீங்கள் காணவேண்டிய இடங்கள்...

ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில்
திருமலை நாய்க்கர் மஹால்
மாரியம்மன் தெப்பக்குளம்



அழகுக் கலை நிறைந்த

ஆபரணங்கள்

வாங்கவேண்டிய இடம்.....



ச. முத்துச்சாமி செட்டியார் & சன்ஸ்

பவுன் நகை, வெள்ளி பாத்திர வியாபாரிகள்

125-A, தெற்காவணி மூல வீதி, மதுரை.

தந்தி: TRUTH. போன்: 15.

அ றி வி ய ல்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்., சென்னை

★

'அறிவியல்' என்பதை ஆங்கிலத்தில் 'ஸயன்ஸ்' (Science) என்று சொல்லுகிறார்கள். பாரதியார் இதை 'ஸயன்ஸ்' என்றும், 'ஸயின்ஸ்' என்றும், 'சயின்ஸ்' 'சையின்ஸ்' என்றும் பல இடங்களில் பல வகையாக எழுதியிருக்கிறார். 'விஞ்ஞானம்' என்று சொல்லப்படுவது இதுவே.

விஞ்ஞானம் என்றால் என்ன? அதன் வரலாறு யாது? அதன் பாகுபாடுகள் யாவை? அதற்கு உரிய முறைகள் யாவை? வாழ்க்கையில் தத்துவத்தோடும், மதத்தோடும், இலக்கியம் முதலிய கலைகளோடும், சமூகத்தோடும், அரசியலோடும் அதற்கு உள்ள தொடர்புகள் எத்தன்மையானவை? அதன் குறிக்கோள்கள் என்ன? அதனால் விளையும் பயன்கள் யாவை? என்றெல்லாம் சுருக்கமாகப் பார்ப்போம்:

விஞ்ஞானம் என்றால் என்ன?

சாதாரண மக்கள் விஞ்ஞானம் என்றால் என்ன என்று நினைக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். சோதனைச்சாலை (Laboratory)களில் தங்களை அடைத்துக்கொண்டு வேலை செய்பவர்களாயும், நவீனக் கைத்தொழில் (Industry)களுக்கும்வைத்தியத்துக்கும் விவசாயத்துக்கும் போருக்கும் ஆதாரமான புதிய விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களாயும் உள்ள சிலர் செய்துவரும் காரியங்களே விஞ்ஞானம் என்பது அவர்களுடைய நினைப்பு.

விஞ்ஞானத்தைப் பற்றி அறிஞர்கள் கூறியிருக்கும் இலக்கணங்களை எடுத்துக் காட்டுவதாக இருந்தால், பக்கம் பக்கமாக நிரப்பிவிடலாம். 'நமது உலகத்தைப்பற்றியும் நம்முடைய பிரபஞ்சத்தைப் பற்றியும் சமூகம் முழுதுமாக ஒன்று சேர்ந்து திரட்டிய அறிவுத் தொகுதியே விஞ்ஞானம். இந்த அறிவை எண்ணிப் பெருகச் செய்யும் முறைகளும், இதை வாழ்க்கையில் தெரிந்து பயன்படுத்தும் முறைகளும் விஞ்ஞானம் என்பதில் அடங்கும்' என்பது ஒரு வரையறை. விஞ்ஞானம் என்பதற்குச் சிறந்த வரையறை ஒன்றைப் பேராசிரியர் கோனன்டு (Professor Conant) வகுத்திருக்கிறார். இவர் தலைசிறந்த விஞ்ஞானி. அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டுப் பல்கலைக் கழகத்தின் தலைவராக (President of the Harvard University) இருந்தவர்; சிறந்த போதகாசிரியர். விஞ்ஞானம் என்பது தொடராக ஒன்றோடொன்று நன்கு இணைந்து பொருந்தக் கூடிய பல மனக்கோள்கள் மனக்கோட்திட்டங்கள் ஆகியவற்றின் தொகுதி. அம் மனக்கோள்கள் முதலிய யாவும் சீராக நடத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்தும், அவற்றை நிகழ்த்தியதால் கண்டறிந்த கவனக் குறிப்புக்களிலிருந்தும் தோன்றியவை; அவற்றால் மேன்மேலும் வளர்ந்தவை; இனியும், மேலும் மேலும் பரிசோதனைகளையும் கவனக் குறிப்புக்களையும் பயனாக விளைவிப்பவை. விஞ்ஞானம் என்பது சிந்தனையிலிருந்து பிறந்த ஓர் அரிய முயற்சி. இது பெரும்பான்மையும் ஓர் ஐயப்பாட்டு நிலை (Skeptical Attitude). இது மேலும் மேலும் சிந்தனையைத் தூண்டும் இயல்புள்ளது. இதற்கு முடிவு இல்லை. எப்பொழுதும் வளர்ந்து, இயங்கிக்கொண்டே இருப்பதே இதன் பண்பு. இதைக் கேவலம் ஓர் அறிவுத் திரள் (Accumulative Knowledge) என்றே,

ஞானத் தொகுதி என்றே நினைப்பது சரி யன்று என்பது அவர் கூறிய கருத்து.

விஞ்ஞானத்தின் பிறப்பும் வரலாறும்

விஞ்ஞானம் சரித்திரத்துக்கு முற்பட்ட பண்டைப் பழங் காலத்திலே பிறந்தது. அது முதன் முதலில் எந்நாட்டிலே பிறந்தது என்பது தெரிய வில்லை; தெரிய வழியும் இல்லை என்றே தோன்றுகிறது. மிகப் பழங் காலத்திலே நாகரிகம் பெற்றிருந்த நாடுகளாகிய எகிப்து (Egypt), பாபிலோனியா (Babylonia), மெஸொபொடேமியா (Mesopotamia) இந்தியா என்பவைகளில் எல்லாம் விஞ்ஞானத்தின் மூலைகளைக் காண முடிகிறது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்னரேயே மனிதன் விஞ்ஞானத் துறையிலே சில படிகளை ஏறியிருந்தான். நெருப்பை இயற்றுதல், பயன்படுத்துதல், கற்கருவிகளை (Flint instruments) உபயோகித்தல், சக்கரம் என்பதன் தத்துவத்தைப் பயன்படுத்துதல், கூடை முடைதல், பானை வனைதல், படகு ஓட்டுதல், ஆயுதங்களைப் பிரயோகித்தல், ஆடைகளை இயற்றுதலும் அணிதலும், வீடு கட்டுதல் என்பவை இந்தப் படிகளில் சில. இவையாவும் சுமார் ஆறுயிரம் வருஷங்களுக்கு முன்னரேயே நிகழ்த்தப்பட்டவை.

இவைகளுக்கு எல்லாம் காரணங்களாக உள்ளவை இரண்டு. மனிதன் வர வர இயற்கையை வசப்படுத்தித் தெரிந்து கொண்ட அறிவும், அவன் வெளி உலகத்தைப் பற்றித் தன்னுடைய மனத்தால் சிந்தித்த சிந்தனைகளும். இவ்விரண்டு துறைகளிலும் அவன் முன்னேற முன்னேற, விஞ்ஞானம் உதயமாகி வளர்ந்து வரத் தொடங்கிற்று.

ஆதி காலத்திலே விஞ்ஞானம் மந்திரத் (Magic) தோடு சம்பந்தப்பட்டிருந்தது. பின்பு மந்திரம் மதமாகப் பரிணமித்தது. அப்போது விஞ்ஞானம் ஓரளவு இவற்றோடு இணைந்தும், ஓரளவு இவற்றோடு முரண்பட்டும், தனிவழியே செல்லத் தொடங்கிற்று. விவசாயத்துக்கும் இதற்கும் ஆதியிலேயே ஒரு தொடர்பு ஏற்பட்டது. நிலப்பகுதிகளை அளக்கும் பொருட்டுக் கணிதம் தோன்றிற்று. விவசாயத்துக்கு உரிய பருவங்களைத் தெரிந்து கொள்ளும் நிமித்தம் வானசாஸ்திரம் தோன்றிற்று. இவ்விரண்டு விஞ்ஞானத் துறைகளும் மதத்தின் பொருட்டும் வளர்க்கப்பட்டன. எகிப்து நாட்டுப் பிரமிடுகள் (Pyramids) நம் நாட்டு யாக-வேதிகள் முதலியவை இவற்றுக்குச் சில உதாரணங்கள். பின்பு வைத்தியத்தோடும் இது தொடர்பு கொண்டது. தாவர நூலும் (Botany), உயிரியலும் (Biology), விலங்கு-நூலும் (Zoology) பௌதிக இரசாயன விஞ்ஞானங்களும் (Physical and Chemical Sciences) இவ்வாறு தொடங்கியவை.

ஆதி காலத்தில் சிற்சில நாடுகளில் விஞ்ஞானம் முளைத்துத் தோன்றிற்று என்று பார்த்தோம். நாளடைவில் அது கிரேக்க நாட்டிலும், பின்பு உரோமர்களிடையேயும், பின்னர் அரேபியாவிலும் படிப்படியாக வளர்ந்து, பின்பு ஐரோப்பாவை அடைந்து, அங்கே மறுமலர்ச்சி பெற்றது. ஆயினும், அங்கும் தொடக்க காலத்தில் அதற்கு அதிக ஆதரவு இல்லை; எதிர்ப்புக்களே இருந்தன. மதத்தின் பொருட்டும், நாட்டின் பொருட்டும், பலர் தம் உயிரைத் தியாகம் செய்திருப்பதுபோல், விஞ்ஞானத்தின் பொருட்டும் பலர் தம் உயிரைத் தியாகம் செய்தார்கள். மேன் மேலும் விஞ்ஞான அறிவு வளர்ந்து வந்தது.

பின்பு சுமார் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னல் விஞ்ஞான யுகத்தின் அருணோதயம் உண்டாயிற்று. பேரறிஞர்கள் சொல்லியவைகளை வேதவாக்கு என நம்பி, அவற்றை ஆராய்ச்சிகளுக்கு ஆதாரங்களாகக் காட்டுவதற்குப் பதிலாக, பரிசோதனைகளையும் (Experiment), அவற்றின் கவனக் குறிப்புக்களையும், அவற்றி

லிருந்து செய்யப்படும் ஊகங்களையுமே ஆதாரங்களாகக் காட்டத்தொடங்கினர்கள். இந்தக் காலத்தில்தான் உண்மையான விஞ்ஞான-மனநிலை (Scientific Mood; Scientific Attitude) ஏற்படத் தொடங்கிற்று. இதன் பின்பு விஞ்ஞானம் நல்ல நெறியில் மிக விரைவாக வளர்ந்துவிட்டபடியால், அதைப் பல விஞ்ஞானங்களாகப் பாகுபாடு செய்யவேண்டியதாயிற்று. ஆயினும் இப் பகுதிகள் யாவும், ஒரே நாட்டின் பல பகுதிகளைப்போல, ஒன்றோடொன்று தொடர்புள்ளவை; ஒன்றின் வளர்ச்சியால் மற்றவை யாவும் பாதிக்கப்படுபவை. இன்னும் ஒன்று. ஒளியின் நிறமாலையில் (Spectrum of light) ஒரு நிறம் எங்கே முடிவடைகிறது, மற்றொன்று எங்கே தொடங்குகிறது என்று கோடிட்டுப் பிரிக்க முடியாதது போலவே, விஞ்ஞானங்களின் நிறமாலையில் அடங்கிய விஞ்ஞானங்களும் பிரிக்கமுடியாமல் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன.

விஞ்ஞானத்தின் பாகுபாடுகள்

விஞ்ஞானங்களின் எல்லைகளைத் தெளிவாக வரையறுத்துக் கூற முடியாவிட்டாலும் அவற்றை ஓரளவு பாகுபாடு செய்வது அவசியம். ஆதலால், இக்காலத்தில் பௌதிக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானம், மானத விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள் என்றெல்லாம் பலவாறு பாகுபாடு செய்கிறார்கள். இவை யாவும் நமது சௌகரியத்தின் நிமித்தம் நாம் ஏற்படுத்திக் கொண்ட தெளிவற்ற வரம்புகளை உடைய அறிவுப் பகுதிகளே யாகும். அறிவு நம் உலகத்தைப் போன்றது. உலகத்திலே நிலமும் கடலும் இருக்கின்றன. நம்முடைய சௌகரியத்தின் நிமித்தம் அவற்றைப் பற்பல பெயர்களால் வழங்கி, அவை இருக்குமிடத்தையும், அவற்றின் பரப்பு முதலியவற்றையும், அவற்றின் தன்மைகளையும், பிறவற்றையும் தெரிந்து கொள்ளுகிறோம். நிலத்திலே எத்தனையோ காரணங்களால் பலவகைப்பட்ட பகுதிகள் காணப்படுகின்றன. ஐந்து வகை நிலங்கள் எனப்படுபவை இவ்வாறு வகுக்கப்பட்டவை. வேறு சில காரணங்களால், நிலப் பகுதியிலே வேறு வரம்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறோம். இவற்றை நாடுகள் என்று சொல்லுகிறோம். ஆயினும், உலகம் முழுவதையும் நாம் ஒருங்கே ஒரே படத்தில் காணுவது பல காரியங்களுக்கு அவசியமாக இருப்பது போல, விஞ்ஞானத்தையும் ஒருமித்துப் பார்ப்பது பல வேளைகளில் அவசியமாக இருக்கிறது. உலகத்திலே நிலம் கடல் என்ற இரு பெரும் பிளவுகள் இருப்பது போலவே விஞ்ஞானத்திலே தத்துவம் போன்ற 'கேவல ஞான' விஞ்ஞானங்களும் (Abstract Sciences), இரசாயனம், உயிரியல், பௌதிகம், உளநூல், சமூகநூல் போன்ற 'அகேவல ஞான' விஞ்ஞானங்களும் (Concrete Sciences) இருக்கின்றன. இவற்றுள்ளும் பல உட்பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் ஒவ்வொன்றும் இக்காலத்திலே தனிப்பட்ட மிகப்பெரும் பகுதியாகப் பிரிந்து விட்டது. ஆயினும் இவை ஒவ்வொன்றுக்கும் இடையே உள்ள தொடர்பையும் நாம் தெரிந்து கொண்டாலன்றி, விஞ்ஞானத்தைப் பற்றிய சீரிய அறிவை நாம் பெறமுடியாது.

விஞ்ஞான–மனநிலை

விஞ்ஞான மனநிலை என்று மனத்தின் தனிப்பட்ட பண்பு ஒன்று விஞ்ஞானப் பயிற்சியால் ஏற்படுகிறது என்றும், விஞ்ஞான வளர்ச்சிக்கு அத்தகைய மனநிலை அவசியமானது என்றும் சொல்லுகிறார்கள். உண்மைகளை மிகத் தீவிரமாகவும் ஆவலோடும் பற்றுவதும், வழங்கும் சொற்களை மிக எச்சரிக்கையோடும் நிதானமாகவும் கூறுவதும், காண்பவைகளை நன்றாகவும் தெளிவாகவும் காண்பதும், பொருள்களில் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பை உணர்வதும் இதன் முக்கியமான அம்சங்

கள். கற்பனை-மனநிலை (Imaginative mood) எனப்படும் கவிதை-மனநிலையும், காரியக் குறி மனநிலையும் (Practical mood) விஞ்ஞான மனநிலையிலிருந்து வேறு பட்ட மனநிலைகள். விஞ்ஞான-மனநிலை அறிவைச் சார்ந்தது. கற்பனை-மனநிலை உணர்ச்சியைச் சார்ந்தது. காரியக்குறி மனநிலை செயலைச் சார்ந்தது. ஆதலால், நம்முடைய சாதாரண வாழ்க்கையில் இவை மூன்றும் சீராக ஒன்றுபட்டுக் காண வேண்டும்.

நாம் உலகில் எத்தனையோ விஷயங்களைக் காண்கிறோம். அவைகளை எல்லாம் கேவலம் விஞ்ஞானம் முறையில் மட்டும் அதாவது, விஞ்ஞானக் கண்களோடு மட்டும் காணலாகாது. உதாரணமாக, ஓர் அழகிய இயற்கைக் காட்சியைக் காணும்போது, அதைப் பற்றிய விஷயங்களை எல்லாம் நாம் அறிகிறோம். அப்போது நாம் அறிவது அதிலுள்ள செடிகொடி மரங்களைப் பற்றிய தாவர-நூல் அறிவாகவோ, அங்குள்ள மண், கல், நீர் முதலியவற்றைப் பற்றிய பூதத் தத்துவ-நூல் (Minerology) அறிவாகவோ, அல்லது இவற்றைப் பற்றிய இரசாயன பௌதிக பூதத்துவ (Geology) அறிவாகவோ மட்டும் இருக்கலாகாது. இவைகள் எல்லாவற்றின் அழகையும் நாம் அறியவேண்டும்; நிச்சயமாக அறியவும் செய்கிறோம்.

இன்னும் ஒன்று. விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கு நுட்பமான கவனம் வேண்டும்; பலவகையான சோதனை நடத்த வேண்டும்; அவற்றின் விளைவுகளைப் பற்றிய பரந்த சிந்தனைகளைச் செய்யவேண்டும்; உண்மைதான். ஆனால், இவ்வகையாக மட்டுமே நம்மால் அறிவைப் பெறமுடியும் என்று சொல்லுவது பொருந்தாது; துணிச்சலேயாகும். ஏனென்றால், பற்பல நாடுகளிலும் முற்காலங்களிலே தலைசிறந்த ரிஷிகளும், மேதாவிகளும், தீர்க்கதரிசிகளும், தத்துவ-ஞானிகளும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உலகத்தையும், பிரபஞ்சத்தையுமே, ஆராய்ச்சிக்கு உரிய பொருளாகக் கருதினார்கள். மனம் என்பதே அவர்களுடைய சோதனைச்சாலை; சிந்தனையே அவர்களுடைய சோதனைக் கருவி (Experimental Apparatus). இத்தகைய ஞானிகள் சிந்தித்துப் பெற்ற அரிய முடிவுகளை நாம் அறிவு என்று கூறலாகாது என்று சொல்லுவது தவறாகும். அவர்களுடைய முடிவுகளில் எத்தனையோ பிழைகள் காணப்படுகின்றன என்பது பிற்காலத்தில் தெரியவந்திருக்கிறது, உண்மைதான். ஆயினும், அவர்களுடைய முடிவுகள் எத்தனையோ விஷயங்களில், நமக்கு வியப்பை உண்டுபண்ணும் அளவில், உண்மையாக இருந்து வருகின்றன.

விஞ்ஞான முறை

கார்ல் பியர்ஸன் (Karl Pearson) என்னும் அறிஞர் தனியாக விஞ்ஞான முறை என்று ஒன்று இருப்பதாகக் கூறினர். அப்படித் தனியாக ஒன்றும் கிடையாது. மற்றெல்லா விஷயங்களையும் கூரிய அறிவோடும் நுட்பமான கவனத்தோடும் நோக்கி, சோதித்துப் பார்த்து, பலரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தன்மையை உடைய முடிவுகளைக் கொள்ளுவதே விஞ்ஞான முறை. இதில் அறிவோடு கற்பனையும் கலந்துள்ளது. ஆனால் இந்தக் கற்பனை அறிவு வரைந்துள்ள கோட்டைக் கடந்து செல்லாமல், அதற்குள்ளேயே அடங்கியிருப்பது. நவீன விஞ்ஞானத்தின் மூன்று அடிப்படை உறுப்புக்கள் பொதுப்படையான கற்பனைக் கருத்துக்கள், ஊகமுறை அனுமானம், பரிசோதனைச் செயல் என்பவை. ஊகங்களைப் பரிசோதனைகளால் சோதித்து, உண்மையை அறிவதே விஞ்ஞானத்தின் முக்கிய சிறப்பு.

விஞ்ஞானத்தின் குறிக்கோள்

மனத்தில் எழும் உணர்ச்சியால் அன்றிப் புலன் அறிவால் யார் வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளக்கூடிய உண்மைகளை, அவர்கள் மீண்டும் சோதித்து அறியக் கூடிய படி இயன்றவரையில் திருத்தமாகவும்

எளிமையாகவும் முழுமையாகவும் வர்ணித்துக் கூறுவதே விஞ்ஞானத்தின் குறிக்கோள். அது உலகத்திலுள்ள பல பொருள்களையும் சிந்தித்து ஒவ்வொன்றையும் பற்றித் தெளிவாகக் காண முயலுகிறது. பொறிகளால் உணரக்கூடியவையாயும், அவற்றிலிருந்து ஊகத்தால் பெறக் கூடியவையாயும் உள்ள விஷயங்களுக்கு அப்பால் அது செல்வதில்லை. மனிதனுடைய இச்சையைப் பொறுத்தவை அல்லாதவையாயும், பிறருக்கு எடுத்துச் சொல்லக் கூடியவையாயும், அவர்களால் நேரிலேயே தங்கள் புலன்களின் மூலம் உணரக் கூடியவையாயும் உள்ள உண்மைகளையே அது கருதுகிறது. ஆதலால், விஞ்ஞானம் என்பது விவரமாக முறைபடக் கூறுதல் ஆகுமேயன்றி, அடிப்படைத் தத்துவ விளக்கம் ஆகாது. விஞ்ஞானம் தேடும் காரணங்கள் அடிப்படைக் காரணங்கள் அல்ல; இரண்டாம் படிக் காரணங்களே யாகும். விஞ்ஞானம் காரண-காரியத் தொடர்பை நாடுகிறது; மூல காரணத்தை நாடுவதில்லை. ஆகவே, காரணம், விளைவு என்று விஞ்ஞானத்தில் கூறப்படுபவை எல்லாம் முன்னும் பின்னுமாக நிகழும் நிகழ்ச்சிகளின் தொடர்பே தவிர, அவற்றின் ஆதிகாரணங்கள் அல்ல. பலவகையாக வேறுபட்டதுபோல் தோன்றும் பிரபஞ்சத்தில் ஓர் ஒழுங்கை அது காண முயலுகிறது. பொருள்களை வர்க்கம் வர்க்கமாகப் பிரித்து வகைப்படுத்த, வரிசைப்படுத்த முயலுகிறது. அதன் பொருட்டு வேண்டிய கோட்பாடு (Concepts) களையும் விதிகளையும் (Rules, Laws) அமைத்துக் கொடுக்கிறது. நாம் பெறும் பற்பல பொறி உணர்ச்சிகளையும் ஊகங்களையும் ஒழுங்கு படுத்தி, சுருக்கமாகவும் சிற்சில தலைப்புக்களின் கீழும், அமைத்துக் காட்டும் சூத்திரங்களையே இயற்கை விதிகள் (Natural Laws) என்று நாம் கூறுகிறோம்.

விஞ்ஞானமும் கலையும்

இனிமையற்றது விஞ்ஞானம்; அது சுவையற்றது; வரட்சி யுடையது; மனத்தை வரளச்செய்வது. இனிமை நிறைந்து ததும்புவது கலை; அது ரசம் செறிந்தது; மனோபாவம் நிரம்பியது; மனத்தைக் குளிர்வித்துத் தளிர்க்கச் செய்வது. ஆதலால் கலைக்கும் விஞ்ஞானத்துக்கும் பிறவிப்பகை என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறு.

விஞ்ஞானத்துக்கும் கலைக்கும் மூன்று விதமான தொடர்புகள் இருக்கின்றன; முதலாவது, கலையைக் குறித்த விஷயங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டால் அன்றி அவை ஞானம் ஆகா. கலையின் தத்துவத்தை உணர்வதற்கு அறிவும் பயிற்சியும் சீரான—அதாவது விஞ்ஞான மனநிலையும் வேண்டும். இம் மனநிலை கலைவளர்ச்சிக்கு இன்றியமையாதது. இரண்டாவதாக, விஞ்ஞான விஷயங்களில் பல கலைக்கு உரிய விஷயங்களாக இருக்கின்றன; கலைகளை வளர்க்கின்றன; கலைகளாற் பாராட்டப்படுகின்றன.

விஞ்ஞானமும் மதமும்

விஞ்ஞானமும் மதமும் ஒன்றுக்கொன்று பகை என்று சிலர் நினைக்கிறார்கள். இதுவும் தவறு. இரண்டுக்கும் சில வேற்றுமைகள் உண்டு. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரிய பொது அளவுகோல் ஒன்றும் கிடையாது. விளக்கின் ஒளியையும், பூவின் மணத்தையும், உணவின் சுவையையும், இசையின் இனிமையையும் பொதுப்படச் சீர்தூக்க இயலாததுபோலவே, இவ் விரண்டுக்கும் உள்ள தாரதம்மியத்தையும் ஒரே அளவுகருவியால் சீர்தூக்க இயலாது.

விஞ்ஞானம் பகிரங்கமானது; மதம் அந்தரங்கமானது. ஆயினும் விஞ்ஞானமும் மத உணர்ச்சி எழுவதற்குக் காரணமாக இருக்கக்கூடும். இயற்கையானது மனிதனை நோக்கி, 'முயல், அனுபவி, சிந்தி' என்று ஓயாது தூண்டிக்கொண்டேயிருக்கிறது. இயற்கை என்பது ஒரு விடுகவிக் களஞ்சி

யம்; விஞ்ஞானங்கள் என்பன யாவும் விடைகள். ஆயினுப், இத்தணை வளர்ச்சி பெற்ற விஞ்ஞானங்களாலும் அறியமுடியா விஷயங்களும், விள்ளமுடியாப் புதிர்களும் எண்ணிறந்தன இன்னும் இருக்கின்றன. விஞ்ஞானத் துறையில் முயன்று, அடியும் முடியும் தெரிய முடியாது தத்தளிக்கும் நிலையில், மனிதனுடைய மனத்தில் மத உணர்ச்சி வேரூன்றுகிறது. மதம் ஒன்றே அவனுக்கு ஆறுதல் அளிக்கிறது. முதன் முதலில் அறியாமையினுல் ஒரு வியப்புத் தோன்றுகிறது. பிறகு அறிவு உதயமாகி வளர்கிறது. அறிவின் எல்லையை எட்டிய தும், இறுதியில் வியப்பினுல் வணக்கமும், தெய்வ பக்தியும் தோன்றுகின்றன. ஆகவே, விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் பகை இல்லை. மூடபக்திக்கும் அறிவாகிய விஞ்ஞானத்துக்கும் பகை; மெய்தான். ஆனுல் அறிவோடொத்த மதவுணர்ச்சி இருக்கக்கூடும்; இருக்கவும் செய்கிறது — அறிவோடொத்த கவி கற்பனை இருப்பதுபோல். அறிவிலியின் தெய்வம் பூச்சாண்டி; அறிவாளியின் தெய்வமோவெனில் "உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும்" செய்யும் பரம் பொருள்.

விஞ்ஞானமும் தத்துவமும்

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளது தத்துவம்; அதற்குத் துணையாக உள்ளது விஞ்ஞானம். "விஞ்ஞான அறிவும் தத்துவ ஞானமும் தம்மிடையே இல்லாத காரணத்தால் பழங்கால நாகரிகங்கள் பல குன்றி நசித்துப்போயின. அந் நாகரிகங்களுக்கு உண்டாக்கிய ஆபத்து நிலை இப் பொழுது நமது நாகரிகத்துக்கும் ஏற்படும் போலிருக்கிறது. அவை அழிந்து போனதைக் காட்டிலும் மிகத் துரிதமாக நமது நாகரிகம் அழிந்துவிடக் கூடும். இதற்குக் காரணம் நாம் விஞ்ஞான அறிவைப் பெற்றிராததன்று; சமூக சாஸ்திரங்கள் என்பவை இன்னும் நம்மிடையே போதிய வளர்ச்சியடையாமல் பின் னடைந்து நிற்பதே காரணம் ஆகும். இப் பொழுது எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்று மேன்மேலும் ஓங்கி வளர்ந்துவரும் பௌதிக சாஸ்திரங்கள் சமுதாய வாழ்க்கையிலே காணப்படும் நிலைகளோ நாளுக்கு நாள், நிமிஷத்துக்கு நிமிஷம், மிக மிகத் துரிதமாக மாற்றிய வண்ணமாக இருக்கின்றன. இவ் வாறு மிகவும் வேகமாய் மாறுபடும் வாழ்க்கை நிலைகளோடு நமது சமுதாய வாழ்க்கையை ஒன்றுபட்டு அமையச் செய்ய வல்லவை தத்துவ சாஸ்திரத்தால் நெறிப்படுத்தப்பட்ட சமூக சாஸ்திரங்களே யன்றி வேறன்று."

விஞ்ஞானமும் அரசியலும்

ஒவ்வொரு நாட்டிலும் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் வேறு, அதிகாரம் செலுத்தும் அரசியல்வாதிகள் வேறு. ஆராய்ச்சியும்அதிகாரமும் சாதாரணமாக ஒன்று படுவதில்லை. இருவரும் ஒன்றுபட்டு உழைத்தால் சமூகம் முன்னேறும். அரசியல்-ஞானி போதிய அளவு விஞ்ஞான அறிவையும் விஞ்ஞான மனநிலையையும் பெற்றவனுயிருக்க வேண்டும். விஞ்ஞானியும் ஓரளவு சமூக வாழ்க்கையில் ஈடுபட்டவனுய், அதன் சுகதுக்கங்களைப் பற்றிச் சிந்திப்பவனுய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் ஒத்துழைத்தால் வறுமையும் நோயும் பஞ்சமும் போருமே ஒழிந்துவிடும்.

விஞ்ஞானமும் பொதுமக்களும்

நம்முடைய நாட்டிலே விஞ்ஞானத்தைப் பொது மக்கள் ஆதரிப்பது போதாது. அது இன்னும் ஓர் ஹரிஜனமாகவே தமிழ் உலகத்தில் ஒதுக்கப்பட்டு வாழ்ந்து வருகிறது. ஆனுல், இப்போது அதற்குச் சற்றே நல்ல காலம் பிறந்து வருகிறதோ என்று நினைக்க இடம் உண்டு. பள்ளிக்கூடங்களிலே உயர் தரப்பள்ளிப் படிப்பு முடிய விஞ்ஞானம் தமிழில் கற்பிக்கப்பட்டுவருகிறது. கலா சாலைகளிலும் அதை நம்முடைய தாய்

மொழியில் கற்பிக்க முயற்சிகள் நடக்கின்றன.

ஆனல், அஸ்திவாரம் அகலமாகவும் ஆழமாகவும் போட்டால் அன்றிக் கோபுரம் கட்ட முடியாது. தமிழ் மக்கள் பலருங் கூடி விஞ்ஞான விஷயங்களில் ஊக்கம் கொள்ளவேண்டும்; விஞ்ஞான விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும். கதையைப் படிப்பதுபோல விஞ்ஞான விஷயங்கள் எல்லாவற்றையும் கற்க முடியாது; கூறவும் முடியாது. சில விஷயங்கள் கடினமாகவே இருக்கும். ஒரு முறைக்கு இருமுறையோ, பல முறையோ படித்தாலன்றிப் பொருள் தெளிவாகாது. 'கதைகளையும் எளிய கவிதைகளையும் மட்டுமே படிப்போம், மற்றவை வேண்டாம்' என்று நாட்டு மக்கள் எல்லாரும் முடிவு செய்துவிட்டால், நாட்டில் அறிவு மழுங்கி விடும். உலக நாடுகளின் முன்னணியில் நாம் தலைநிமிர்ந்து நிற்கமுடியாது; சுக வாழ்வு வாழ முடியாது.

இந்தக் காரியத்தில் பத்திரிகாசிரியர்களின் பொறுப்பும், கடமையும் அதிகம். வாசகர்கள் விரும்பிப்படிக்கும் விஷயங்களுக்கு மட்டுமே இடம் கொடுத்து, மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியவையான விஷயங்களை வெளியிடாமல் இருந்தால், அவர்கள் தங்களுடைய சுயநலத்தை மட்டுமே கருதுபவர்கள் ஆவார்களே தவிர, நாட்டின் நலத்தையோ, மக்களின் உயர்வையோ கருதுபவர்கள் ஆகமாட்டார்கள். ஆதலால், அவர்கள் தங்களுடைய கடமையில் தவறியவர்கள் ஆவார்கள்.

இப்பொழுது உலகத்திலே பல்லாயிரக் கணக்கான விஞ்ஞானப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. எத்தனையோ சாதாரணப் பத்திரிகைகளிலும் விஞ்ஞான விஷயங்கள் முறையாக எழுதப்பட்டு வருகின்றன. முன்னல் இங்கிலாந்திலும்கூட விஞ்ஞான விஷயங்களுக்குப் பத்திரிகைகளில் இடம் அளிக்கப்படாமல் இருந்தது. உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானியாகிய ஜே. பி. எஸ். ஹால்டேன் (J. B. S. Haldane) என்பவர் தம்முடைய அனுபவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னல் "டெய்லி ஹெரல்டு" (Daily Herald) என்னும் பத்திரிகை ஆசிரியரிடம் அவரும் அவருடைய தோழர் ஒருவருமாக விஞ்ஞான விஷயங்களைப் பற்றிய விவரங்களை அப்பத்திரிகையில் ஊதியம் யாதும் இன்றி, வெளியிடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்கள். 'அது எங்களுடைய வாசகர்கள் விரும்பாத விஷயம்' என்று சொல்லி, அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அதை வேண்டாம் என்று மறுத்துவிட்டார். 'தொழிலாளர்—இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் எல்லோரும் அந்தப் பத்திரிகாசிரியர் நினைப்பதுபோல் அத்தனை முழு முட்டாள்கள் என்று எனக்குத் தோன்றவில்லை' என்கிறார் ஹால்டேன்.

இக்காலத்திலே பிற நாடுகள் பலவற்றில் இந்த மனநிலை மாறிவிட்டது. ஆகையால், 'தங்கள் கருத்தை நன்றாக வெளியிடும் திறமையுள்ள விஞ்ஞானிகள் அனைவரும் ஆணும் பெண்ணுமாகிய பொது மக்கள் புரிந்துகொள்ளும்படி விஞ்ஞான விஷயங்களைத் தெளிவாக எழுதவேண்டும். இது அவர்களுடைய கடமை என்று நான் உறுதியாக நம்புகிறேன். இக்காலத்திலே நம்முடைய வாழ்க்கையை விஞ்ஞானம் இடைவிடாமல் பாதித்துக்கொண்டே யிருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில், விஞ்ஞான அறிவு இப்போது இருப்பதைவிட மிக அதிகமாக மக்களிடையே பரவவேண்டும். இல்லாவிட்டால், ஜனநாயகம் பயனுள்ளதாக இருக்க முடியாது' என்று அவர் **விஞ்ஞானமும் தினசரி வாழ்க்கையும்** (Science and Daily Life) என்னும் தம்முடைய நூலின் முகவுரையிலே வற்புறுத்திச் சொல்லுகிறார்.

நம் நாட்டுப் பத்திரிகை ஆசிரியர்களும் பொது மக்களும் இப்பேரறிஞர் கூறியதைக்

கருத்தோடு கவனித்து, வேண்டியவற்றைச் செய்வது நன்று.

விஞ்ஞானச் சொற்கள்

விஞ்ஞானச் சொற்களைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் வழங்கி வருகின்றன. தெளிவு, விஞ்ஞானத்தின் ஒரு முக்கிய அம்சம். ஆகையால், பொருளைப் பற்றிய குழப்பம் ஏற்படாதபடி பிற மொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டால், அது மொழித் துரோகமோ, தேசத் துரோகமோ ஆகாது. உதாரணமாக, ஆங்கில மொழியைக் காட்டலாம். ஆங்கிலேயர்கள் தேசபக்தியில்லாதவர்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? அவர்கள் விஞ்ஞான பரிபாஷையை அமைக்கும்போது ஆங்கில மொழியிலிருந்தோ, அவர்களுக்குச் சற்றே தெரிந்த லத்தின் (Latin) மொழியிலிருந்தோ சொற்களை அமைக்கவில்லை; தங்களுக்கு அதிகப் பழக்கம் இல்லாத கிரேக்க மொழியிலிருந்தே சொற்களை அமைத்தார்கள். உலகமெங்கும் பொதுவாக வழங்கும் சொற்களை அதிகம் மாற்றாமல் நாமும் வழங்குவது நன்று.

கடவுட்பொது நோக்கு

'உண்மை விஞ்ஞானியானவன் புழுவையும் மனிதனையும் பிரபஞ்சத்தையும் ஒரே வகையான மனநிலையோடு, ஒரே கண்ணோடு, விருப்பு வெறுப்பின்றிச் சீர்தூக்குவான். அற்பப் புழுவை அருவருத்து ஒதுக்கமாட்டான்; அளவில் அடங்காப் பிரபஞ்சத்தைக் கண்டு அஞ்சமாட்டான்; மனிதனைத் தன் இனமே என்று பட்சபாதமாய் நடத்தமாட்டான். இவ்வாறு நிகழ்ச்சிகள் பொருள்கள் யாவற்றையும் ஒரே வகையான உணர்ச்சியோடு சமமாய்ச் சீர்தூக்கி நோக்கும் மன நிலையை 'கடவுட் பொது நோக்கு' என்று சொல்லுவது வழக்கம்.

விஞ்ஞானத்தின் பயன்

விஞ்ஞானத்தினால் விளையும் பயன்கள் யாவற்றினும் இதையே மேன்மையான தாகக் கருதுவது தகும். மக்களிற் பெரும்பாலார் இந்த மனநிலையை அடைவார்களானால், இப்போது காணப்படும் விவாதங்கள் யாவும் ஒழிந்துபோகும். அரசியல் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், மொழி, இலக்கியம், இசை, மதம், சட்டம் முதலிய துறைகளிலும் இப்பொழுது தோன்றி, முன்னரே பிளவுபட்ட சமூகத்தை எண்ணிறந்த சின்னஞ்சிறு கூறுகளாகத் தகர்த்தெறியும் விவாதங்களுள் ஒன்றுக்கும் இடம் இராது. மனிதன் தெய்வத்தன்மை பெற்றுயர்ந்து, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கொள்கையை உண்மையாகவே பின்பற்றி, உலகம் அனைத்தையும் ஒரு குலமாகக் கருதி, இன்புற்று வாழ்வதற்கு இம்மன நிலையானது இன்றியமையாததாகும். செம்மையான இம் மனநிலையை அளிக்கவல்லது விஞ்ஞானம். வேறெந்தப் பயனும் அதற்கு இருப்பினும், இல்லாவிடினும், இந்த ஒரு பயனின் பொருட்டேனும் விஞ்ஞானம் பாராட்டற் குரியது; போற்றி வளர்க்கத்தக்கது.

முடிவுரை

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பொருளும் மனமும் பின்னியே காணப்படுகின்றன. பௌதிக விஞ்ஞானங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை வேண்டியவாறு இயற்றி உதவுகின்றன. மானுஷீக விஞ்ஞானங்கள் மக்களின் மனத்தைப் பண்படுத்தி, மக்களின் சமூக வாழ்க்கையையும் தனி வாழ்க்கையையும் சீர்பெற நடத்த உதவுகின்றன. விஞ்ஞானம் கேவலம் குற்றேவல் புரியும் பணியாள் மட்டும் அன்று; நமது மனத்தைப் பண்படுத்தி அதனுள்ளே உள்ளொளி திகழவும், அடக்கமும் சாந்தியும் நிலவவும் துணைசெய்யும் ஆசிரியனுகவும் உள்ளது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி இயற்றப்படும் எண்ணிறந்த நற்பொருள்களைக் காட்டிலும் விஞ்ஞான ஆராய்ச்சியால் உண்டாகும் சீரிய மனநிலை மேலானது. கோபதாபங்களாலும் ஆபாசங்களாலும் கற்பனைக் கோட்பாடுகளாலும் உண்மையை நழுவவிடாமல் உள்ளவற்றை உள்ளவாறே தெரிந்து சிந்திக்கச் செய்வது விஞ்ஞான மனநிலை. சமூகத்தார் அனைவரிடையேயும் இம் மனநிலையைப் பரவச் செய்வது மிகமிக இன்றியமையாதது. பட்சபாதங்களால் பாதிக்கப்படும் மனித விவகாரங்களினிடையே பட்சபாதம் என்பதையே அறியாத விஞ்ஞானத்தை நாம் பயன்படுத்துவோமானால் நமது வாழ்க்கை நலம்பெற்று மேன்மையுறும்.

சிறுகதை

அகிலன்

★

நல்ல வெயில். தெரு வழியே செல்லும் இளைஞன் ஒருவன் ஒரு வீட்டின் முன்பு நின்று தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறான். வீட்டிற்குள்ளே தாயும் பெண்ணும் இருக்கிறார்கள். தாயாருக்கு ஏதோ கைவேலை. தன் பெண்ணிடம் சொல்லி வெளியில் நிற்பவனுக்குத் தண்ணீர் கொடுத்துவரச் செய்கிறாள்.

தாகத்தால் துடிக்கும் இளைஞன், அவனுக்கு வெறும் தாகம் மட்டுமிருந்தால், அந்தப் பெண் கொடுக்கும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டல்லவோ செல்ல வேண்டும்? அவன் அப்படிச் செய்யவில்லை.

தனக்குத் தண்ணீர் கொடுக்கும் அந்த இளம் பெண்ணின் முகத்தைக் கண்களால் பருகுகிறான்; குறும்புச் சிரிப்புச் சிரிக்கிறான். மெல்லத் தன் கரம் நீட்டி அந்த மெல்லியலாளின் வளைக்கரத்தையே பற்றிவிடுகிறான்.

'ஆ!' என்று சத்தமிட்டுப் பதறுகிறாள் பெண்.

தாயார் விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடி வருகிறாள். எதற்காக இந்தப் பெண் இப்படிச் சத்தமிடுகிறாள்? தாயாருக்குத் தெரியவில்லை.

"என்னடியம்மா சத்தம்?"

அந்தப் பெண், 'இந்த முரடன் என் கரம் பற்றி இழுத்துவிட்டானம்மா!' என்றல்லவோ சொல்ல வேண்டும்?

அவள் அப்படிச் சொல்லவில்லை.

"அம்மா, இவனுக்கு விக்கிக்கொண்டதம்மா! நான் பயந்தே போய்விட்டேன்!"—பச்சைப் பொய்யைப் பொருத்தமாகச் சொல்கிறாள்.

அந்தப் பொல்லாத இளைஞனும் வேண்டுமென்றே விக்கலை வரவழைத்துக் கொள்கிறான். வெறும் தாகமா அவனுடையது? காதல் தாகம்!

பழந்தமிழ் இலக்கியத்தின் சுவையான காட்சிகளில் இஃது ஒன்று. ஆம், சிறந்த சிறுகதைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

எது சிறுகதை என்ற கேள்விக்கு இப்படிப் பதிலளித்து விடலாம்: முதலும் முடிவும் தெரிந்துகொள்ள முடியாத இந்த வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூரு வளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ, இப்படி ஏதாயினும் ஓர் அணுவின் சலனமே சிறுகதை.

தினந்தோறும் நமது வாழ்வில் எத்தனை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பொதுவாக மற்றவர்கள் காணத் தவறும் ஒன்றை, கண்டாலும் உணர முடியாத ஒன்றை, உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத ஒன்றைச் சிறுகதைக் கலைஞன், அநுபவித்து, உணர்ந்து வெளிப்படுத்துகிறான்.

அளவில் மிகச் சிறிய கதையாக இருக்கலாம்; பெரியதாகவும் இருக்கலாம். கதாபாத்திரங்கள் ஒன்றோ பலவோ இருக்கலாம். கதை நடக்கும் காலம்கூட ஐந்து நிமிடமோ, ஒருநாளோ, ஒன்பதாண்டுகளோ இருக்கலாம். ஆனால், கதையைப் படித்து முடித்த

பின்பு ஒரே ஓர் உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில் நிறைய வேண்டும். எழுதி முடித்த கதைக்குப் பின்னேயும் முன்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போர் உள்ளத்தில் விரிய வேண்டும். இதில் வெற்றி பெற்றுவிட்டால் அஃது அருமையான சிறு கதைச் சித்திரம் என்பதில் ஐயமில்லை.

முழுமையான வாழ்வையோ, வாழ்வின் பல கோணங்களையோ எதிர்பார்ப்பதற்கில்லை. பல்வேறு மனப்பண்புள்ள பாத்திரங்களின் உணர்ச்சி அறிவுப் போராட்டமன்று அதன் நிலைக்களம். வாழ்க்கையின் ஒரே ஒரு கோணம், வாழ்க்கை வெள்ளத்தின் ஒரே ஒரு சுழிப்பு, உணர்ச்சிப் பெருக்கின் ஒரே ஒரு திருப்பம், இவற்றுள் ஒன்று போதும் சிறு கதைக்கு. வீட்டுக்குள்ளே இருந்து கொண்டே நாம் சன்னல் வழியே வெளி உலகைப் பார்ப்பதில்லையா? அந்தச் சன்னல் வழிக் காட்சியே கதையின் வித்து. அந்தக் காட்சியில் அற்புதமான கற்பனை வர்ணங்களைத் தீட்டிக் கொடுக்கிறான் கலைஞன். அவ்வளவுதான்.

கதைகள் எப்போது, எங்கே பிறந்தன? கதை கேட்கும் ஆசை எப்போது எங்கெல்லாம் தோன்றியதோ அதையடுத்தே அவை பிறந்திருக்க வேண்டும். "பாட்டி, ஒரு கதை சொல்லு!" என்று பச்சிளம் குழந்தைகள் கேட்பதும், பாட்டி தன் கால்களை நீட்டிவிட்டுக்கொண்டு, "ஒரே ஓர் ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தானும்" என்று தொடங்குவதும் நீண்ட நாட்களாக உலகத்தின் பல பாகங்களில் இருந்துவரும் பழக்கம்.

வாழ்க்கை கதைகளால் உயர்ந்திருக்கிறது. மதங்கள் கதைகளால் வளர்ந்திருக்கின்றன. மனிதப் பண்புகள் கதைகளால் மெருகேறியிருக்கின்றன.

ஏசுநாதர் நீதிக் கதைகள், ஈசாப் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், வேதாளக் கதை

T. T. C.

திருச்சி டியூடோரியல் காலேஜ்,

(திருச்சி — மதுரை — கோவை)

அனுபவமும், திறமையும் வாய்ந்த முழு நேர ஆசிரியர்களைக்கொண்டு திறம்பட நடத்தப்படும் தனிப் போதனைமுறைக் கல்லூரி இது ஒன்றே என்பது மாணவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் நன்கு தெரியும்.

S. S. L. C., (Oct. '56 & Mar. '57)
Matric:—Inter, B.A., Bsc.,

ஆகிய வகுப்புகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

Office :
HAMEEDIA BUILDINGS,
59, Town Hall Road,
MADURAI

P. N. RAMAN,
B.A., (Hons.) L.T.,
Principal

கள், புத்தர் நீதிக் கதைகள் இப்படிப் பலப் பல சதைகள் படிப்பினையை அடிப்படை யாகக் கொண்டு தோன்றியிருக்கின்றன. ஆனால் இவை உயர்ந்த குறிக்கோளை அடிப் படையாகக் கொண்டிருந்தாலும், சிறந்த சிறுகதைகள் என்று சொல்ல முடியாதவை. படிப்பினைகளைத் தவிர உணர்ச்சி அழகும், கற்பனை மெருகும், சொல் நயமும், கவிதைப் பூச்சும் சிறுகதைகளுக்கு முற்றிலும் தேவை.

மறுமலர்ச்சிக் காலம் என்று தமிழில் சொல்லப்படுகிற காலத்தில் தோன்றிய சிறு கதைகளுக்கும், பழந்தமிழ் அகத்துறைக் காட்சிகளுக்கும் தொடர்பில்லை. அது போலவே பழங்காலத்து நீதிக் கதைகளுக் கும் நம்முடைய இன்றைய சிறுகதைக்கும் தொடர்பில்லை. பொங்கியெழுந்த வெள்ளம் போல் கரைபுரண்டு வந்த ஆங்கிலத்தின் மோதுதலால் நமக்கேற்பட்ட புதுவிழிப்பின் திவலைகள் நம்முடைய சிறுகதைகள்.

ஆங்கிலம் தன்னோடு உலகத்தில் உள்ள புதுமைச் செல்வங்கள் அனைத்தையும் வாரிக் கொண்டு வந்தது. நம்முடைய பழம் பெரும் மொழியின் கட்டுக் கோப்பை அத னால் அசைக்கக்கூட முடியவில்லை. நம் மிடமிருந்துகூட அது கடன் வாங்கிக் கொண்டது. நாமும் ஆங்கிலத்தால் புதுமை பெற்றோம்; மறுமலர்ச்சி பெற் றோம்; வீடு பெற்றோம். இதைச் சொல் லிக்கொள்ள வெட்கப்பட வேண்டிய அவ சியம் ஏதும் நமக்கில்லை. அருமையான புதுமை இலக்கிய நயம் நிறைந்த மொழி களில் ஒன்று ஆங்கிலம்.

மேனாடுகள் பலவற்றில் நாவல்களும் நாட கங்களும் எழுதப்பெற்ற பின்னரே சிறு கதைகள் தோன்றத் தொடங்கின. நாமோ நேருக்கு மாறான முறையில் எடுத்த எடுப் பில் சிறு கதைகள் எழுத முன் வந்தோம். சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டு களுக்கு முன்னரே புதுமைத் தமிழில் முதல் சிறுகதை பிறந்திருக்க வேண்டும்.

உரைநடை இலக்கண வரம்புக்கு உட் பட்டசிறுகதைகளைக் 'கலைமகள்', 'விகடன்' போன்ற பத்திரிகைகளும், உட்படாத கற் பனைகளை 'மணிக்கொடி' போன்ற பத்தி ரிகைகளும் வெளியிட்டு வந்தன.

'மணிக் கொடி'ச் சிறு கதை ஆசிரியர் களிடம் நெளிவுகளும், மேனாட்டுக் கதை அமைப்பு முறைகளும் மிகுந்து காணப்பட் டன. மற்றவர்களிடம் நேரான கதைப் போக்கு, அழகு, அமைதி, முழு உருவம் தென்பட்டன.

ஆரம்பச் சிறு கதைகளை மூன்று வகை களாகப் பிரிக்கலாம். சிறிதும் பிறமொழிக் கலப்பற்ற சொந்தக் கற்பனைகள்; பிறநாட் டுக் கதைகளைச் சிதைத்தும் உருமாற்றியும் எழுதப்பெற்ற கலப்புக் கதைகள்; முற்றி லும் மொழி பெயர்ப்புக்கள்.

சொந்தமாகச் சிறுகதை எழுதியவர்களில் சிலர் இன்றுவரை நிலைத்து நிற்கிறார்கள். 'புதுமைப் பித்தன்', கு. ப. ராஜகோபாலன் போன்றவர்கள் இன்று நம்மிடையே உயிரு டன் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் எழுதிய எழுத்துக்கள் உயிர்ச் சித்திரங்களாக, ஆழ்ந்த வலிமை உள்ள கற்பனைகளாக நிலைத்துவிட்டன. தமிழ் நாட்டில் புதுமை இலக்கியம் வளர வேண்டும் என்ற ஆவலில் அவர்களே அனேக பிறமொழிக் கதைகளையும் தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்கள். அவர் களுடைய சொந்தக் கற்பனைகளும், மொழி பெயர்ப்புக்களும் சிறு கதைத் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கின் றன. 'கல்கி'யின் ஆரம்ப காலத்துச் சிறு கதைகளும் எண்ணற்ற வாசகர்களிடம் சிறு கதை படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி விட்டன.

வேறு சில எழுத்தாளர்கள் ஆரம்ப சூரத் தனத்திற்குப் பிறகு, தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஆதரவு வாசகர்களிடம் கிடைக் காததாலோ, தங்களுடைய வாழ்வுக்கு வேறு வசதிகள் கிடைத்துவிட்டதாலோ புதுப் புதுக் கற்பனைகள் உருவாக்கும் திறனற்ற கற்பனை வரட்சியாலோ சிறு கதைத் துறையிலிருந்து ஒதுங்கிப் போனார் கள். 'முன்னாள் எழுத்தாளர்கள்' என்ற பழம் பெருமை பாடுவதுடன் நிறுத்திக் கொண்டு, புதிதாகச் சிறுகதைத் துறைக்கு வந்த இளைஞர்களைப் பழிப்பதுடன் இவர் களுடைய திருப்பணி நின்று விட்டது. இவர்களிலிருந்து வேறுபட்ட பி. எஸ். ராமையாவைப் போன்ற சிலர் மீண்டும் புதிதாகச் சிறு கதைகள் எழுத முன் வந்திருக்கிறார்கள்; அழகான கதைகள் எழுதியும் வருகிறார்கள்.

இடையில்தான் சுமார் பதினைந்து ஆண்டு கட்கு முன்பு இளைஞர்களாகிய என் போன் றோர் சிறுகதைத் துறையில் உழைக்க முன் வந்தோம். எழுதப் புகுந்த சமயத் தில் என் போன்றவர்களுக்கு வழிகாட்டிய வர்கள் பெரும்பாலும் எங்களுக்கு முன்பு எழுதிய தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களே. எங்களது வயதுக்கும், அநுபவத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற சிறுகதைகள் எழுதி னோம்; காதற் கதைகளை எழுதுவது தவ றென்று நாங்கள் அன்றைக்கும் நினைக்க வில்லை; இன்றைக்கும் நினைக்கவில்லை; இனி யும் நினைக்கப் போவதில்லை. காதற் கதை கள் மட்டுமே எழுதிக் கொண்டிருக்கக் கூடாது. வேறு பல்வகையான கற்பனை களும் வேண்டும். காதலைத் தவிர மற்றும் பல உணர்ச்சிகளைக் கதைகளில் வெளியிட வேண்டியது அவசியந்தான். நாங்கள் எழு திய கதைகளைத் தொடர்ந்து படித்து வரும வர்கள் எங்களிடம் ஏற்பட்டு வரும் இந்த மாறுதல்களையும் வளர்ச்சியையும் கவ னிக்காமல் இருக்க முடியாது.



ஸ்டூடன்ட்ஸ் ஸ்டோரியல்
காலேஜ் & ஹைஸ்கூல்
மேல வெளி வீதி
(ரீகல் டாக்கீஸ் எதிரில்)
மதுரை

★

திறமையான பயிற்சி
S. S. L. C. (அக்டோபர் & மார்ச்)
Matric (மதருஸ் & பனரஸ்)
& E. S. L. C.
Inter, B. A., B. Sc., B. Com.
(நேரிடையாகவும் தபால் மூலமும்)
பெண்களுக்கு தனி வகுப்பு உண்டு
லாபரடரி உண்டு

ஹாஸ்டல்:
மாதம் ரூம் வாடகை ரூ. 8/-
சாப்பாடு ரூ. 30/-

ஜூன் முதல் வாரத்திலிருந்து வகுப்புகள் துவங்குகின்றன.

Prof. A. சங்கர நாராயணன் M. A.,
பிரின்ஸிபால்

Rev. G. P. ஜேம்ஸ், B.A., L.T., B.D.,
தலைமை ஆசிரியர்

Prof. A. ரஞ்சிதம், M.A., L.T.
(முன்னாள் பிரின்சிபால், அமெரிக்கன் கல்லூரி, மதுரை)
கௌரவ ஆலோசகர்

"எங்கள் பழைய மாணவர்களைக் கேளுங்கள்., நீங்கள் எங்களையே நாடுவீர்கள்"

காதலைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒழுக்கத்தைப் பற்றியும் கூற வேண்டியிருக்கிறது. ஒழுக்கத்திற்கு மாறான உணர்ச்சியன்று காதல். ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய தூய அன்பு அது.

எழுத்தாளன் ஒழுக்கத்தை வலியுறுத்தும் உபதேசியல்லன். எனினும் அவன் ஒழுக்கக் கேட்டை வர்ணனை செய்யும் ஊதாரியுமல்லன். இன்றைக்குச் சில பத்திரிகைகள் தங்களுடைய கீழ்த்தரமான வியாபார தந்திரத்திற்காக வெளியிடும் கதைகளுக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் தொடர்பே இல்லை.

சிறு கதைகளின் இன்றைய நிலைக்கு வருவோம். புதுமைத் தமிழ் இலக்கியம் வளர வேண்டுமானால் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. பிறமொழியாளர்களிடம் உள்ள அந்த ஒற்றுமை தமிழ் நாட்டில் குறைவு. சிறு கதைகளைப் பொறுத்த மட்டில் பத்திரிகைகளின் துணையின்றிப் புத்தகங்களாக மட்டும் வெளியிட்டுப் பலன் பெற முடியாது. பத்திரிகை படிக்கும் வழக்கமுள்ளவர்களின் சிந்தனை புத்தகம் படிக்கும் அளவுக்கு இந்த நாட்டில் இன்னும் வளர்க்கப்பட வில்லை. வெறும் பொழுது போக்கை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் பத்திரிகைகள் வாயிலாக எப்படி இலக்கிய வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும்?

ஆகவே ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் சிறு கதைகள் வெளிவந்தும் நூற்றுக்கு ஐந்து கூட இலக்கிய மதிப்புப் பெற வில்லை. என்றாலும் அந்த ஐந்து கதைகளையும் நாம் புறக்கணிக்கலாமா? இத்தகைய சாதக மற்ற சூழ்நிலையில்கூடத் தன்மை வாய்ந்த கதைகள் எழுதுவோர் சிலர் இருக்கிறார்கள். இவர்களின் கதைகளைத் திரட்டிப்பிற இந்திய மொழிக் கதைகளுடனே, பிற நாட்டாரின் இக்காலக் கதைகளுடனே ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் சிறிதும் சோர்வடைய

ஸ்ரீ மீனாக்ஷி
மில்ஸ் லிமிடெட்

மதுரை, மணப்பாரை அண்டு பரவை

★

மூலதனம்

அதிகாரம் பெற்றது ரூ. 60,00,000
கையொப்பமாகி
வசூலானது ரூ. 48,81,240

★

மொத்தம் கதிர்கள் 70,768
விசைத்தறிகள் 144

★

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை கைத்தறிகளுக்கும், இயந்திரத் தறிகளுக்கும், பனியன் பாக்டரிகளுக்கும் தேவையான நூல்களும், மற்றும் மல், லாங்கிளாத்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

●

நிருவாக கர்த்தர்கள் :

தியாகராஜ செட்டி அன் கோ.

திருப்பரன்குன்றம் ரோடு, மதுரை

தந்திவிலாசம்: "கருமுத்து" மதுரை
டெலிபோன் கெ. 1 மதுரை
தபால்பெட்டி கெ. 1 மதுரை

வேண்டியதில்லை. உலகத்துச் சிறு கதை களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் தகுதியை நம்முடைய சிறு கதைகளும் வென்று விட்டன.

ஆனால் எண்ணிக்கையில் இவை போதவே போதா. அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சிறந்த சிறு கதைகளைத் தேடி எடுக்கும் நிலையில்தான் நாம் இன்னும் இருக்கிறோம். இரண்டு வகையில் நமக்கு வளர்ச்சி தேவை. ஒன்று, பொதுப்படை யாகவே எல்லாக் கதைகளின் தரமும் உயர வேண்டும். இரண்டு, கவிதை நயம், கற்ப னைச் செறிவு, கருத்தாழம், எழுத்து வலிமை இவை யனைத்தும் நிறைந்த இலக்கியப் படைப்புக்கள் எண்ணிக்கையில் பன்மடங் காகவேண்டும்.

இதற்குரிய அறிகுறிகள் திடீரென்று இந்த ஆண்டில் தோன்றத் தொடங்கியிருக் கின்றன.

தமிழ்ப் பத்திரிகைக்காரர்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள். நாடு விடுதலை பெற்றபின்பு பிறமொழியாளரின் வளர்ச்சி யைக் காண அவர்களுக்கு வாய்ப்பு அதிக ரித்திருக்கின்றது. படிப்போரின் பண்பும் உயர்வதை உணர்ந்து கொண்டார்கள். எங்குப் பார்த்தாலும் இப்போது சிறுகதைப் போட்டிகள்! இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டி நல்ல கதைகளை எழுதச் செய்வதற்கு இதுவும் உள்ளவழி. ஆனால் இத்துடன் நின்றுவிட்டால் விரும்பும் பலன் கிடைத்துவிடாது. ஏற்கனவே படிப்போ ரிடம் மதிப்புப் பெற்ற ஆசிரியர்களுக்குத் தனிச் சலுகைகள் வழங்கிச் சிறந்த கதை களை உருவாக்கச் செய்யவேண்டும்

கதைகள் எழுதுவது எளிதான செய லன்று. ஒவ்வொரு சிறந்த சிறுகதையும் ஒரு கவிதைத் துணுக்கு (Lyric). தந்தச் சிமிழில் நுணுக்கமான சித்திர வேலைப்பாடு கள் செய்வதுபோல் எழுத்தாளன் ஒவ்

தமிழ்ச் சங்கம் கொண்டாடும் இப்பொன் விழா நன்னாளில்
எங்கள் வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்

*

சங்கம் தோன்றிய மதுரையில்
மக்களின் அமோக ஆதரவைப்பெற்ற

"ஸ்வர்ணமாலிகை"

●

A. S. S. M.
சோமசுந்தரம் செட்டியார் & CO.
பவுன் நகை, வெள்ளிப் பாத்திர வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி, மதுரை

*

தந்தி: FAITH ஸ்தாபிதம்: 1924 போன்: 113

வொரு வரிக்கும் மெருகேற்ற வேண்டி யிருக்கிறது. புதிய கற்பனை யென்பது வேண்டும் போதெல்லாம் கிடைக்கும் கடைச் சரக்கன்று. ஒவ்வொரு கதைக்கும் ஒரு புத்தம்புதுக் கதைக் கரு வேண்டும். அதைத் தேடி, உருக்கொடுத்து, முழுமை பெறச் செய்வதில் உள்ள சிரமங்கள் சிறு கதை ஆசிரியனுக்கே தெரியும். வெறும் எழுத்துக் கட்டிடங்கள் சிறு கதைகளல்ல. ஒவ்வொன்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு புத்தம் புதுப் பிறவி.

பதினேந்து வருட அநுபவத்தில் நான் கண்ட உண்மை இது. வெறும் புகழ்தான் சிறு கதைகளுக்கு ! சிறு கதைகள் எழுது வதைப்போல் நஷ்டமான கலைத் தொழில் வேறெதுவும் இல்லை. கதைக்காகச் செல விடும் நேரம், உழைப்பு, சிரமம் இவற்றுல் கத்திரிக்காய் பயிரிடலாம் ! குடித்துப் பழகிய வன் அதை மாற்ற முடியாமல் திண்டாடு வதைப்போல்தான் இன்றைக்குச் சிறு கதை ஆசிரியனும். பொழுது போக்கிற் காகப் பக்கம் நிரப்புகிறவர்களுக்கும், பிறர் எழுத்துக்களுக்கு விளக்கம் கூறுகிறவர்க ளுக்கும், சொந்தமாகக் கதை எழுதுகிறவர் களுக்கும் ஒரே விதமான பற்ருக்குறை-அன்பளிப்பு.

எழுதுகிறவர்களுக்குப் பொருளும் வேண் டும் ; புகழும் வேண்டும். இவை இரண்டும் இல்லாவிட்டால் புதிய புதிய கற்பனைகள் தமிழ்நாட்டில் மலரப் போவதில்லை.

கடைசியாகச் சிறுகதை எழுதுகிறவர் களை மதிப்பிடும் முறைபற்றி ஒரு சொல் :

கம்பனையும் வள்ளுவனையும் நிறுத்துப் பார்க்கும் தராசில் எங்களையும் எடை போடவேண்டாம். நிலைபெறக்கூடிய இலக் கியங்களாக நாங்கள் இதுவரை ஏதும் உரு வாக்காமல் இருக்கலாம். அப்படி ஆக்க முடியுமா, இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டியவர்கள் எங்களுடைய கதைகளைத் தொடர்ந்து படிப்பவர்கள் ; படிக்கப்போகிறவர்கள்.

பெற்ற தாய்க்கு ஒவ்வொரு குழ்சுமே பொன் குழ்சுதான். சொந்தக் கற்பனைகளை நாங்கள் நெஞ்சில் சுமந்து உருக்கொடுத்து உலவவிடுகின்றேரும். இலக்கியத் தோட் டத்தில் அன்றே மலர்ந்து அன்றே வாடும் மலர்களும் இருக்கலாம். ஒரு சில வாடா மலர்களும் இருக்கலாம். அன்றே மலர்ந்து அன்றே மறைவதாலும், அதன் மணத்தை நுகரக்கூடியவர்களுக்கு அம்மலர் மகிழ் வைத் தருகின்றதல்லவா ? வாடி உதிரும் மலர்களை எருவாகக்கொண்டு வாடாத மலர்கள் பல புதுமைத் தமிழ் இலக்கியத் தோட்டத்தில் மலரத்தான் போகின்றன.



இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

புத்தக வர்த்தகர், மதுரை

கிளை ஆபீஸ்:—திருநெல்வேலி கிளை ஆபீஸ்:—சென்னை

மதுரைத் தமிழ்ப் பேரகராதி

[1956-ம் வருஷத்துப் புதிய பதிப்பு]
பல லட்சக் கணக்கான சொற்கள் அதிகமாகச் சேர்க்கப் பெற்றுள்ளது
இதில் இல்லாத தமிழ்ச் சொற்கள் வேறு இல்லையென்றே கூறலாம்.

இது தமிழன்பர்களுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், வைத்தியர்கட்கும், சோதிடர்கட்கும், போட்டிப் பரிசுகளில் விடை எழுதுவோர்க்கும், நூல் நிலையங்களுக்கும், கலாசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும், பெரிதும் வேண்டற்பால தாகும்.

சொற்பக் காப்பிகளே தயாரிக்கப்பட்டுள்ளன. வேண்டுவோர் விரைவில் வாங்கிக் கொள்ளுதல் நலம்.

1, 2 பாகங்களின் விலை ரூ. 25—0—0

●

புகழேந்திப் புலவரியற்றிய நளவெண்பா மூலமும்

தமிழ்ப் புலவர்: புன்னைவனநாத முதலியார்,
தமிழ் வித்துவான்: வீ. ஆறுமுகம் சேர்வை,
பேராசிரியர்: செந்நாப் புலவர், ஆர். கார்மேகக் கோனர் ஆகிய மூவரும் எழுதிய
கருத்துரை, பதவுரை, பொழிப்புரை,
விருத்தியுரை, விசேட உரைகளும்

புகழேந்திப் புலவர் வரலாறும், பல நூற்களின் ஆராய்ச்சியும் அடங்கியுள்ளது.

இது தமிழறிவில் விருத்திபெற விரும்புவோர்க்கும், தமிழ்ப் புலமைத் தன்மையை அடைய விரும்புவோர்க்கும் ஓர் சிறந்த தமிழ்க் களஞ்சிய மாகும்.

தமிழ்க் கலை கற்றுத் தேறிய வித்வான்களுக்கும், மற்றைய தமிழபிமானிகட்கும் இது பெரிதும் பயன்படுவதாகும்.

விலை ரூ. 5—0—0

●

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்

சந்தக் குறிப்பும் அரும்பத உரையும் அடங்கியது.

முதல் பாகம் 642 பாடல்கள்
விலை ரூ. 5—0—0
இரண்டாம் பாகம் விலை ரூ. 5—0—0

ஸ்ரீவியாச பாரதம் வசன சங்கிரகம்

இது இதிகாசங்களிலே மிகச் சிறந்த காவியம். இகபர சாதனங்களுக்கு இன்றியமையாதது. நமது நாட்டு மக்கள் யாவரும் படித்து நான்கு வகைப் புருஷார்த்தங்களையும் அடைதற்குரியது.

விலை ரூ. 3—0—0

●

திருக்குறள் - மூலமும் தெளிபொருள் விளக்கஉரையும்

பாக்கெட் சைஸ்
யாவரும் எளிதில் உணருமாறு
சாமி-சிதம்பரனார் அவர்களால் எழுதப்பெற்றது.

விலை ரூ. 1—8—0

●

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

தமிழ்ப் படித்தவர்கள் உபாத்தியாயர் இல்லாமல் 60 நாட்களில் இங்கிலீஷ் படிக்கவும் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

இதில், இங்கிலீஷில் கடிதம் எழுதும் முறை, தந்தியடிக்கும் முறை, விண்ணப்பங்கள் எழுதும் முறை, கதைகள் இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதும் முறை, சம்பளக் கணக்குகள் இவை மிகவும் தெளிவான முறையில் அமைக்கப்பெற்றுள்ளன.

விலை ரூ. 4—8—0

●

ஹிந்தி தமிழ் ஆசான்

தமிழ்ப் படித்தவர்கள் உபாத்தியாயர் இல்லாமல் 3 மாதங்களில் ஹிந்திமொழியைக் கற்றுக் கொள்ளலாம்.

இது நமது தேச பாஷையாகும். இதை எல்லோரும் கற்கவேண்டியது மிக மிக முக்கிய மாகும். ஹிந்தியைக் கற்றவர்களுக்கே இனி நமது நாட்டில் பெருமை கிடைக்கும்.

விலை ரூ. 2—8—0

●

இங்கிலீஷ், தமிழ், சமஸ்கிருத மொழிகளில் சகலவிதமான புத்தகங்களும் எப்பொழுதும் தயாராயுள்ளன. விலை சகாயமாகக் கிடைக்கும்.



கட்டிடக் கலை

திரு. வை. மு. நரசிம்மன், ஆர்க்கிடெக்ட், சென்னை

★

[இச்சிறு வியாசத்தில், முதலில் கட்டிடக் கலையைப் பற்றின பொதுவான அம்சங்கள் கூறப்பட்டு, பிறகு தமிழரின் கட்டிடக் கலையைப் பற்றின முக்கிய செய்திகள் குறிக்கப்படுகின்றன. தமிழர் கட்டிடக் கலை மிக உன்னதமானது; எவ்விதக் குறைவு மில்லாதது; இன்றைக்கும் காண்போர் மனத்தைக் கவரக் கூடியது; ஆனால் காலப்போக்கில் மிகக் கீழ்நிலையில் உள்ளது. மறுபடியும் அதை உயர்நிலைக்குக் கொணர்விக்க வேண்டும்.]


கலையின் அடிப்படை: கட்டிடக்கலை (Architecture) சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளுக்கும் ஆதாரமானது. பண்டைய கட்டிடக் கலைஞர்கள் தோற்றத்தில் எளிமை (Simplicity), வலிமை (Strength), பயன் (Purposefulness), வசதி (Convenience) ஆகிய இந்த நான்கையும் அடிப்படையாகக் கொண்டு கட்டிடங்களை நிர்மாணித்தார்கள். கட்டிடங்களை அழகுபடுத்துதல் நெடுங்காலத்திற்குப் பின்பே கருத்திற்படலாயிற்று. **ரஸ்கின்** என்னும் ஆங்கிலப் பெரியார், கட்டிடக் கலையை, கட்டிடங்களை அழகு படுத்தும் கலையாகவே கருதுகிறார். ஆனால், அப்படி ஒரு கட்டிடத்தை மிக அழகாக நிர்மாணிப்பது, கேவலம் வெளித்தோற்றத்திலல் மட்டும் ஆகுவதரிது.

கலையின் அம்சங்கள்: எந்தக் கட்டிடத்திற்கும் முக்கியமாக மூன்று அம்சங்கள் உண்டு. (1) அதன் தன்மை (Character). அதாவது ஒரு கட்டிடம் எந்த உபயோகத்திற்காகக் கட்டப்பட்டது என்பது. (2) அதன் திடம் (Stability). (3) அதன் தோற்ற அழகு (Beauty). கட்டிடக் கலையின் பயன் இந்த மூன்று அம்சங்களையும் தெளிவாய் ஒவ்வொரு கட்டிடத்திலும் எடுத்துக் காட்டுவதே.

கட்டிடங்களின் தன்மை: சாதாரணமாகக் கட்டிடங்களை அவைகளின் தன்மையை ஒட்டி நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை, (1) கோயில்கள் போன்ற மத சம்பந்தமானவை, (2) ஞாபகார்த்தமாகக் கட்டப்படும் சமாதிகள் போன்றவைகள், (3) பொது ஜன சேவைக்காகும் பள்ளிகள், வைத்திய சாலைகள், புகை வண்டி நிலையங்கள் போன்றவைகள், (4) மக்கள் வசிக்கும் வீடுகள் என்பன. கோயில்களை வீடுகள் மாதிரியும், கோட்டைகளைக் காரியாலயங்கள் மாதிரியும் அமைக்கலாகாது. நெடுந்தூரத்திலிருந்து பார்க்கும் பொழுதே ஒரு கட்டிடம் எதற்காக உபயோகிக்கப்படுகிறது என்று அறியும்படி அமைக்கப்பட வேண்டும். இது கட்டிடக் கலையின் அடிப்படையான அம்சங்களில் முதன்மையானது.

கட்டிடத்தின் திடம்: அடுத்தபடியாக, கட்டிடத்தின் திடம், அதாவது அதன் வலிமையும், காலத்தை எதிர்த்து நிற்கக் கூடிய தன்மையும். இவை அதன் அமைப்பைப் பார்க்கும்பொழுதே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். பார்ப்பதற்கு மனத்தில் பீதியை எழுப்பக்கூடிய எந்த விதமான தோற்றங்களும் அதில் தென்படாமல் இருத்தல் அவசியம்.

கட்டிடத்தின் வாய்ப்பு : மூன்றுவதாக, கட்டிடத்தின் வாய்ப்பு, மனத்திற்கு மகிழ்ச் சியைக் கொடுக்கக்கூடியதாகவும், பார்ப் பதற்கு மிக அழகியதாகவும் அமையவேண் டும். இது அக்கட்டிடத்தின் அளவு, உருவ அமைப்பு, வர்ணப் பூச்சு, அதன் பலவகைப் உயர்த்தி மேற்படியைக் குறுக்கியோ, மூன்று மூலைகளில் கோபுரம் எடுப்பித்து நான்காவதில் எடுக்காமலோ, பாதிபூசிப் பாதி பூசாமலோ, ஓர் இடத்தில் வண்ணம் வைத்து அதிலும் மேம்பட்ட இடத்தில் வைக்காமலோ, ஓர் உறுப்பை ஒருமுறை




நம் பாரத நாட்டில் இன்று காணப்படும் கட்டிடக் கலையின் மூன்று பாணிகளின் இடங்களைக் காட்டும்.

பட்ட பாகங்கள் ஒன்றோடொன்று ஒன்று படப் பொருத்தப்பட்டிருக்கும் தன்மை முதலியவற்றுல் ஏற்படுவது. ஆயினும், அதில் கடைசியாகக் குறிக்கப்பட்ட அம்சம் மிக முக்கியமானது. நீளத்திற்கு ஏற்ற அகலம், இரண்டிற்கும் ஏற்ற உயரம், மூன் றிற்கும் ஏற்ற ஒளிர்வு ஆகிய இவைகள் இல்லாவிட்டால் எடுத்த சுவரையும், பூசிய சாந்தையும், வெறும் கல்லடுக்காகவும், காரைக் கட்டியாகவுமே மதிக்கவேண்டி வருமன்றே ? நெடுஞ்சுவர் எடுத்துக் குறு கிய தூண் நிறுத்தியோ, அடிப்படியை யிலும், மற்றோர் உறுப்பை வேறு ஒரு முறையிலும் முடித்தோ கட்டிடங்கள் கட்டுபவரைக் கண்டால் "இவருக்கு ஏன் செல்வம் ?" என்ற வினு எழாமல் இருக் காது. கட்டிடத்திற்கு மேம்பாடு அதன் பரிமாணத்தால் அல்ல ; அதன் வனப்பிலே தான். பெருங் கோயில்கள் பலவற்றில் உள்ள மாடங்களும், மண்டபங்களும், மஹாபலிபுரத்தில் கடல் ஓரத்தில் நிற்கும் சின்னஞ்சிறு கல் ரதங்களுக்கு ஈடாகுமோ ? சாதாரணமாக உயரம் ஒன்று, அகலம் இரண்டு, நீளம் நான்கு கொண்ட கட்டி

டங்கள் மிக அழகாகக் காணப்படும். இந்த விதியைக் கடைப்பிடித்து நடந்தால்தான் நன்மைகள் ஏற்படும்.

கலையின் நிலை : இன்னும், எந்தக் கட்டிடத்தையும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்றாவது சுவர்கள், தூண் கொள்கிறது. வில் வளைவுகள் (Arches) தெரியவர, தூண்கள் எண்ணிக்கைக் குறைந்து புதியவிதமான பாணிகள் ஏற்பட்டன. பிறகு, வில் மச்சுகள் (Domes) ஆர்ச் சிலிருந்து உண்டாகி, கட்டிடக் கலையில் ஒரு புதிய பாணியை உண்டாக்கின. இன்னும் இரும்புக் கம்பிகளால் பலப்படுத்தப்



படம். 2. வை-மு-ந.

இன்று தமிழ் நாட்டில் வழக்கத்திலிருக்கும் திராவிட (அல்லது தமிழர்) பாணியில் ஒரு மண்டபத்தின் தோற்றத்தைத் தெரிவிக்கிறது.


கள், தளங்கள் போன்ற கனபாகங்கள். காற்று, வெளிச்சம் போகக்கூடிய சந்து போன்ற பகுதி. இரண்டாவது ஒரு கட்டிடத்தின் பலம் அதன் சந்துகள் (Voids) அமைக்கப்பட்டிருப்பதை ஒட்டியிருக்கிறது. ஆகையால் கட்டிடக் கலை, இவ் விரண்டையும் எப்படி அழகாக ஒன்றை யொன்று ஒட்டி அமைக்கப்படவேண்டும் என்பதை அறிவுறுத்தும். இக்கலையும், புதிய புதிய கட்டிட முறைகள் கண்டுபிடிக்கப் பட்டு வரவரப் பல மாறுதல்களை மேற் பட்ட சிமெண்ட் காங்க்ரீட் (Reinforced Cement Concrete) வந்ததும், கட்டிடக் கலையிலேயே ஒரு புதுவிதமான தோற்றம் ஏற்பட்டுவிட்டது. அதன் விளைவாக இன்றைக்கு எவ்விடத்திலும் கட்டிடங்கள் கேவலம் இயந்திரங்களைப் போலவும், பெரிய அடுக்குப் பெட்டிகளைப் போலவும், அழகு என்பதே சிறிதும் இல்லாமலும் கட்டப் பட்டு வருகின்றன. நாட்டின் தட்பவெப்ப நிலையைக் கொஞ்சமும் கவனியாமலும் கட்டப்படுகின்றன. அந்தோ! இத்தகைய பரி

தாப நிலையை, நமது கனம் பிரதம அமைச்சர் **ஸ்ரீ ஜவஹர்லால் நேரு,** சங்கீதக் கல்லூரிக் கால்கோள் விழாவிற்குச் சமீப காலத்தில் சென்னைக்கு வந்திருந்தபொழுது குறிப்பிட்டுக் காட்டி, அத்தகைய நிலையைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துக் கூறியுள்ளார். ஒரு நாட்டிலுள்ள கட்டிடங்கள் அந்த நாட்டின் கலாசாரத்தைக் கண்ணாடியில் காண்பதுபோல் எடுத்துக் காட்டுவனவன்றே! நமது பாரத நாட்டிற்கு, முக்கியமாகத் தமிழ்நாட்டிற்குப் பெருமை அதன் கோயில்களும், மண்டபங்களுமேயன்றே! தமிழரின் மிக உயர்ந்த பாணியை அவைகளில்தான் இன்றும் காணலாம். ஆகையால், நம் நாட்டுக் கட்டிடக் கலை இனியும் மேற்கூறியவைகளை அனுசரித்தே கட்டப்படல் வேண்டும்.

பாரதநாட்டுக் கட்டிடக் கலைப் பிரிவுகள்: நமது பாரதநாட்டில் இன்று காணப்படும் கட்டிடங்கள் பலவகையான பாணிகளில் உள்ளன. எனினும், அவைகளை (1) சர்சேனியன் (முகமதியர் சம்பந்தப்பட்டவை), (2) பௌத்தம், (3) இந்து என மிகப் பெருவாரியான மூன்று பிரிவுகளாகவும், இந்துக் கட்டிடங்களை இண்டோ-ஆரியன், திராவிடம் என இரண்டு உட்பிரிவுகளாகவும் வகுக்கலாம். வட இந்தியாவில், டெல்லி, ஆக்ரா முதலிய இடங்களில் காணப்படும் மசூதிகள், தாஜ்மஹால் போன்ற சமாதிக் கட்டிடங்கள் சர்சேனியன் பாணியில் உள்ளவைகள். புத்த கயா, சாஞ்சி போன்ற இடங்களில் உள்ள பௌத்த ஸ்துபாக்கள், தனிப்பட்ட பௌத்த பாணியில் அமைக்கப்பட்டவைகள். கிருஷ்ணை நதிக்கு வடக்கே காணப்படும் கோயில்கள், இண்டோ ஆரியன் பாணியில் கட்டப்பட்டவைகள். அவைகளின் முக்கிய குணாதிசயம் மேல்நோக்கிச் செல்லும் வரிகளை (அம்சங்களை) எடுத்துக் காட்டும்படி கொண்டிருப்பதே. அக்கோயில்களின் அமைப்பு, தரைப் படத்திலும் (Plan), எல்லா முக்கிய விவரங்களிலும், திராவிடக் கட்டிட அமைப்புப் போல்தான் இருக்கும். தென் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள கட்டிடங்களை, திராவிடர் அல்லது தமிழர் கட்டிடக் கலையாகக்கொள்ளலாம். மைசூர் பிராந்தியத்தில் காணப்படும் ஹாய்சாலா (Hoysala) பாணியும் திராவிடத்தைச் சேர்ந்ததே. பாதாமி, ஐஹோல் போன்ற கிருஷ்ணை, கோதாவரிநதிகளுக்கு மத்தியிலுள்ள இடங்களில் காணப்படும் கோயில்கள் சாளுக்கியர் பாணியில் உள்ளன. இந்தப் பாணி இண்டோ-ஆரியன், திராவிடம் என்ற இரண்டின் கலப்பே. தமிழர் பாணியின் முக்கிய அம்சம் அடிவானத்துக்கு நேரான (Horizontal) சாயல்களை (Features) மிக எடுத்துக்காட்டாகக் கொள்வதே என மிகச் சுருங்கக் குறிக்கலாம். உதாரணமாக, நம் தமிழ்நாட்டின் கோபுரங்களைப் பாருங்கள். அவைகள் 1, 3, 5, 7, 9, 11 போன்ற பல மாடிகளைக் கொண்டவைகளாகவும், ஒவ்வொரு மாடியும் வெளித் தோற்றத்தில் நான்கு திசைகளிலும் நன்கு தெரிய "யாள வரிகளுடன்" அமைந்திருக்கும். வட இந்தியாவில், இன்றைக்கு இந்துக்கள் கட்டிடக் கலையில் அதாவது "இண்டோ-ஆரியன்" என்று வழங்கும் பாணியில், சர்சேனியன், பௌத்தக் கட்டிடக் கலைகளின் பாணிகளின் பலவித அம்சங்கள் மிக அழகுபடக் கலந்து தென்படுகின்றன. சர்சேனியன் பாணியின் முக்கியமான வில்வினைவுகள், வில்மச்சுகள், சத்திரிகள் போன்றவைகளும், பௌத்த பாணியின் பிரசித்தி பெற்ற தோரணங்களும், கூடுகளும், மிகப் பொருத்தமான நிலையில் இந்துக்கள் கட்டிடங்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், **தமிழர் கட்டிடக் கலை, தமிழ் எழுத்துக்கள் மாதிரி, மிகச் சுத்தமான நிலையிலேயே இருந்துவருகிறது.** அதற்குக் காரணம் இக்கட்டிடக் கலையின் குறைவின்மையும் (Perfection), இக்கட்டிடக் கலையைப் பற்றின பண்டை நூல்களை இன்னும் கடைப்பிடித்து நடந்து வருவதுமே. இத்தகைய உன்னதக் கலை, கேரளத்தில்

களும் மண்டபங்களும் கட்டுவதில்தான் இன்று வழக்கத்தில் உள்ளது. மற்றைய கட்டிடங்கள், மேல்நாட்டுக் கட்டிடக் கலையை அனுசரித்தே கட்டப்பட்டு வருகின்றன. என்னே நம் நிலை!

ருண்டுக் காலம் வளர்ந்து வந்தது. இந்த ஆண்டுகள் சுமார் 300 வருடங்கள் கொண்ட பல்லவ, சோழ, விஜயநகர பாணிகள் என வழங்கப்படுகின்றன. இன்னும் பல்லவர் பாணியை முற்பல்லவ, இடைப்



ஒரே படத்தில் ஒரு பாதி தமிழர் பாணியிலும், மற்றொரு பாதி இண்டோ-ஆரியன் பாணியிலும் கட்டப்பட்ட ஒரு விமானத்தின் தோற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இரண்டு பாணிகளின் அடிப்படை ஒன்றே என்பது தெரியவரும்.

தமிழ்க் கட்டிடக் கலை: இத்தகைய உன்னதமான தெய்வத்தன்மை வாய்ந்த தமிழர் கட்டிடக் கலை கி. பி. 7-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 15-ம் நூற்றாண்டு வரையிலான ஒன்பது நூற்

பல்லவ, பிற்பல்லவ பாணிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்; சோழர் பாணி முற்சோழர் பிற்சோழர் என இரண்டு பிரிவுகளாகவும் எடுக்கப்பட்டுள்ளது. பாண்டியர் பாணி, சோழருடனே சேர்க்கப்படும்.

இப்பாணிகளின் குணதிசயங்களைப் பற்றி இங்குக் குறிக்க வேண்டுவதில்லை. ஏனெனில் அவற்றைப் பற்றின பல புத்தகங்களும் உள்ளன. இங்ஙனம் இக்கலை பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்களால் முறையே செவ்வனே வளர்க்கப்பட்டு, 16-ம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் ஆண்ட காலத்தில், மிக உன்னத நிலைமையை அடைந்தது. அந்நிலையை, மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் உள்ள திருமலை நாயக்கர் மஹாலிலும் சங்கீத மஹாலிலும் காணலாம். வேலூர், திருவண்ணாமலை முதலிய இடங்களிலுள்ள பலவகையான மண்டபங்களிலும் காணலாம். நம் நாட்டில் பல கோயில்களை மிகப் பெரிதுபடுத்திப் பல மண்டபங்களையும், கோபுரங்களையும் விஜயநகர மன்னர்களே கட்டிவைத்தனர். அந்த விஜயநகர சாம்ராஜ்யம் முகமதியர்களால் அழிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலேயரிடம் வந்ததும், தமிழர் கட்டிடக் கலைக்கு—ஏன்? தமிழ்ப் பண்பாட்டிற்கே மிகத் துரதிர்ஷ்டம் பிடித்தது. மேல்நாட்டின் கலைகளிலும், கலாசாரங்களிலும் நம் நாடு முழுவதும் மூழ்கிவிட்டமையால் நமது பண்டைக் கலை பெரிதும் அழிந்தே போயிற்று என்று கூடச் சொல்லும் அளவிற்கு வந்துவிட்டது. ஆகையினால், சுதந்தரம் பெற்ற தமிழர் மறுபடியும் நம் கலையை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும்.

கட்டிடக் கலை நூல்கள்: நம் கட்டிடக் கலையைப் பற்றி மிக விரிவாகக் கூறும் நூல்களில் முக்கியமானது "மான சாரம்" எனும் வடநூல். ஐம்பத்தெட்டு அதிகாரங்களில் கிராமங்கள், வீடுகள், அரண்மனைகள், கோயில்கள் முதலியன கட்டுவதைப் பற்றியும், சிற்பங்கள் முதலியன அமைப்பதைப் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. இன்னும் பல வடநூல்களில் கட்டிடக் கலையோடு பல வேறுபட்ட விடயங்களும் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை—மயமதம், காசியபம், வைகானஸ, பாஞ்சராத்ர, சைவ சம்ஹிதைகள், வாஸ்து சாத்திரம், வாஸ்து விதானம், சனத்குமார வாஸ்து, ஆயாதிலட்சணம், சுக்ரநீதி போன்றவைகள்.

காசிபர், அகத்தியர், வசிட்டர், கர்க்கர் முதலிய மா இருடிகளுக்கு உபதேசிக்கப்பட்டு, விசுவகர்மா, மயன் முதலானவர்களால் வட மொழிகளில் எழுதப்பட்ட வாஸ்து சாத்திரங்கள் 32 பேதங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் சாரங்களை ஒழுங்கு சேர்த்து **மனையடி சாத்திரம்** என்று தமிழில் ஒரு நூல் உளது. அதிலிருந்து மனை இலட்சணங்களையும், அது கட்ட வேண்டிய இடம், காலம், கருவி முதலியவற்றையும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

வீடுகள் அமைக்கும் முறை: வீடுகள் கட்டும் பொழுது கவனிக்க வேண்டிய பல விதிகளை **மனையடி சாத்திரங்களும்**, சிற்ப நூல்களும் தெரிவிக்கின்றன. "ஒவ்வொரு வகையான உபயோகத்திற்கும் ஓர் இடம் உண்டு" என்பது அவைகளில் காணப்படும் ஒரு பொது விதி:— உதாரணமாகக் குளிக்கும் அறை கிழக்கிலும், சமையல் அறை தென்மேற்கிலும், பொக்கிஷ அறை வடக்கிலும், பூஜை அறை வடகிழக்கிலும் இருக்கலாம். பொதுவாக வீடுகள் மனிதனையே மேற்கோளாகக் கொண்டு கட்டப்பட வேண்டும் என்பது மற்றொரு பொதுவிதி. அதனால்தான் ஒரு வீட்டின் நீளம் அகலத்தைவிட மிக அதிகமாயும், அதன் முதற் வாசற்படி கடை வாசலை விடப் பெரிதாயும் அகலமாயும் அதன் இரு பக்கங்களிலும் கண்களைப் போன்ற ஒவ்வொரு விளக்கு வைக்கும் மாடத்துடனும் இருத்தல் வேண்டும். மேலும் ஒரு வீட்டின் நடுவில் திறந்த முற்றம், மனித உடம்பின் மூச்சுப்பை (Lungs) போல இருக்க வேண்டும். இன்னொரு பொதுவிதி: ஒளியை

கூறியபடி "இடம்பட வீடிடேல்"- மிகப் பெரிய வீடு கட்டாதிருத்தல். சிறிய வீடு பார்ப்பதற்கு அழகானது. மேலும், "யானை அசைந்துண்ணும் வீடு அசையாமலுண்ணும்" என்ற முதுமொழிப்படி வீட்டின் மேல் பணம் அதன் அளவிற்குத்தகச் செலவாகிக் கொண்டே இருக்க வேண்டுமன்றே! இன்னும், ஒரு வீட்டில் சமையலறை பெரிதாக இருத்தல் வேண்டும். அதை "அகன் அட்டில்" எனக்குறிக்கிறார் ஒரு பெரியார். "தலை வாசற்காலுக்கு இடப் பக்கத்தில் கதவு வைக்கப்படும்" என்பது மற்றொரு பொதுவிதி. தெருக் கதவுகள் வீட்டிற்குள் தான் திறக்க வேண்டும். கிரேக்கர்கள் பண்டைக் காலத்தில் கதவுகள் தெருவில் திறக்கும்படியானதாய் அமைத்தார்கள். அதனால், வீட்டிலிருந்து வெளியேறும்பொழுது சத்தம் கொடுத்துக் கொண்டே அவர்கள் வருவது வழக்கம் என அறிகிறோம். கடைசியாக, முற்காலங்களில் ஒவ்வொரு பெரிய மாளிகைக்கும் மூன்று இடங்களிலாவது திறந்த முற்றங்கள் இருக்கும்படி அமைத்தார்கள். ஒன்று வீட்டிற்குமுன்; இரண்டாவது வீட்டிற்கு நடுவில்; மூன்றுவது வீட்டிற்குப்பின். இப் பொழுது தோட்ட வீடுகள் (Garden Houses) என்று புதிதாக நடைமுறையில் வருவது போன்ற வீடுகளை நம் முன்னோர்கள் கட்டிய வீடுகள் எனலாம். என்னே அன்னார்திறம்! முன் திறந்த வெளிகளை "மௌவலிதழ் விரிந்து மணஞ்சூழ் பந்தர் செய் முன்றில்" எனக் குறிக்கின்றார் கல்லாடனார். கல்லாடம்-5-81. நடு முற்றத்தில் துளசி மாடம் அமைத்து மாலை வேளைகளில் கடவுளைக் கும்பிட்டனராம். அதைப் பொழுதறிந்து, "இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது" என்ற நெடுநல் வாடைச் செய்யுளால் அறியலாம். புழைக் கடைகளைப் பற்றி, "கூதளங் கவினிய குளவி முன்றில் செழுங்கோள் வாழை" என்ற புறநானூறு (12,13—168) வரிகளால் தெரியலாம்.

முடிவு: நம் கட்டிடக் கலையை நன்கு ஆழ அறிந்த பர்கூசன் என்ற ஆங்கிலப் பெரியார் "இக்கலை, இன்றைக்கும் நடைமுறையிலுள்ள கலை" (Living Tradition) எனச் சொல்லுகிறார். இன்றைக்கும் கட்டப்படும் மண்டபங்களும், கோபுரங்களும், பல நூற்றாண்டிற்கு முன் கட்டப்பட்டவைகளைப் போலவே இருக்கின்றன; பார்ப்போர் மனத்தை வசீகரிப்பனவாகவும் உள்ளன. ஆனால், நவீன முறையில் கட்டப்படும் கட்டிடங்கள் ஏதோ சிறிது காலத்திற்குச் சிலருக்கு மட்டுமே பிடிக்கும் தன்மையவாக இருக்கும். என்னே நம் பண்டைக் கட்டிடக் கலையின் தன்மை! இன்றைக்கு நாம் கடைப்பிடித்துவரும் பல விதிகளும் மேலே குறித்த பல நூல்களில் இருக்கும் பொது விதிகளை ஒத்தனவாகவே உள. ஆதலால் நமது நாட்டில் கட்டிடக் கலையில் ஈடுபடும் நிபுணர்கள் தங்களிடம் கட்டிடங்கள் நிர்மாணிக்கக் கொடுக்கும் "ப்ளான்களை"த் தமிழர் கட்டிடக் கலையைக் கூடிய வரையில் அனுசரிப்பனவாக இருக்கும்படி செய்தல் மிக அவசியம். கட்டிடங்கள், கட்டினவர் மனத்தின் பளிங்கு; ஒரு தேசத்தின் உயர்வை எடுத்துக்காட்டும் அளவுகோல்; அயல் தேசத்தவர் மதிப்பைப்பெற உதவும் கருவியும்கூட.



போன் : 70
1270

தந்தி : "ஸ்பின்வீவ்"

ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி
லிமிடெட்
கோயமுத்தூர்

★

மூலதனம் ரூ. 25,00,000

வசூலான தொகை ரூ. 20,76,900

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால நாயுடு
,, ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
,, சி. ஆர். சதாசிவம்
ஸ்ரீ ஜி. புருஷோத்தம நாயுடு
,, எ. துரைசாமி நாயுடு

கதிர்கள் : 72,832 தறிகள் 407 :

நூல் : 100 நெ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன், காரிகம், சலவை முதலிய எல்லாவிதமான ரகங்களும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவிதமான ஜவுளிகள், உயர்ந்த ஷர்டிங், லாங்க்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

சுதேச மூலதனம் பாரதத் தொழில்

பாரதீய நிர்வாகம்.

★

Agents & Secretaries :

R. G. S. NAIDU & CO.,
COIMBATORE.

பண்டை விளையாட்டுகள்

பேராசிரியர் வித்வான் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.

★

உலகக் கவலை, கையாறு, அழுங்கல்களிற் சிக்குண்டு, நாளும் ஓடியோடி உழைத்து இளைத்துச் சலிக்கின்ற மக்களுக்கு, அவற்றினின்றும் விடுதலை பெறுவதற்கு விளையாட்டுகள் இன்றியமையாதனவாகும். உடலைக் கட்டுடன் காப்பதற்கும், அறிவைத் தெளிவு பெறச் செம்மை செய்வதற்கும், மனவமைதி பெறுவதற்கும், மகிழ்ச்சியடைவதற்கும் விளையாட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. விளையாட்டுகளைப் பச்சிளங் குழந்தைகள் முதல் பழுத்துப் பல்விழுந்த கிழவர்கள் வரை விரும்புகின்றனர். உலக மக்கள் அனைவரும் அவாவி நிற்கும் விளையாட்டுகள் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறையில் அமைந்திருக்கும். ஒரு நாட்டின் இயற்கைச் சூழல்களுக்கும் வெப்ப தட்பங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு விளையாட்டுகளும் அமையும். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தையும் சீரிய பண்பாடுகளையும் அறிவதற்கு அவர்கள் பழக்கத்திற் கொண்டுள்ள விளையாட்டுகள் பெருஞ் சான்று பகர்வனவாகும்.

தமிழ்மக்களின் பண்டை விளையாட்டுகள் பல இன்னும் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஒரு சில வழக்கொழிந்தும் போயின. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் பல விளையாடல்களைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆனால், அந்த விளையாட்டு முறைகளிற் சில நம்மால் உணர்ந்து கொள்ள முடியாதிருப்பது வருந்தத் தக்கதாகும்.

இக்காலத்தில் நாம் அழும் குழந்தைகளுக்குக் கிலுக்குகளைக் கிலுக்கி ஒலியெழச் செய்து விளையாட்டுக் காட்டி அவர்களைச் சிரிக்கச் செய்கிறோம். கிலுக்கின் ஒலியிலே குழந்தையின் கருத்து கவரப்பட்டு, அது தன் நோயையும் கவலையையும் மறந்துவிடுகிறது. கிலுக்கின் காட்சியிலும் ஒலியிலும் அதன் எண்ணம் செல்லத் தொடங்குகிறது. அதனால் குழந்தை பெரிதும் ஆறுதல் அடைகின்றது. சிறுபாணாற்றுப் படையிலே ஒரு சிறு காட்சியைப் புலவர் நமக்குக் காட்டுகிறார். தென்பாண்டி வளநாட்டின் கொற்கைமாநகரிலே உப்பு வாணிகர் தங்கள் குழந்தைகளைச் செல்வமாய் வளர்த்தது போல் குரங்குகளையும் வளர்த்து வந்தனர். குரங்குகளும் குழந்தைகளும் கூடிக்கலந்து விளையாடின; கையிலே கிலுகிலுப்பைகளை வைத்து விளையாடின. கொற்கை முத்துக்குப் பேர்பெற்ற கடற்கரைப் பட்டினம் அல்லவா? அதனால், கிளிஞ்சிலின் உள்ளே உயர்ந்த முத்துக்களைப் போட்டு அடைத்துச் செய்த கிலுகிலுப்பைகளைக் கையிற் கொண்டு குழந்தைகளும் குரங்குகளும் விளையாடினவாம்:

> "நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த
> மகாஅ ரன்ன மஞ்சி மடவோர்
> நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
> வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
> தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
> உளரிய லும்பா லுமட்டிய ரீன்ற
> இளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
> தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்."

விலை குறைந்த மலிந்த பண்டமாயுள்ள எளிய உப்பை ஊர் ஊர் தோறும் வண்டியில் ஏற்றிச் சென்று விற்று வயிறு பிழைக்கும் உமணர்கள் தங்கள் குழந்தைகளுக்கு

விளையாட்டுகளை எவ்வாறு அமைத்துக் கொடுத்தனர் என்பதை இவ்வடிகள் நமக்கு நன்கு எடுத்துக் கூறுகின்றன. அவர்களின் குழந்தைகள் ஒளிவிடும் அணிகளைப் பூண்டிருந்தனர். அவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதற்கு என்று பெண் குரங்குகளையும் கூட வளர்த்தனர்; குரங்குகளையும் குழந்தைகளைப் போல் அன்பாய் வளர்த்தனர்; அவர்கள் விளையாட விலையுயர்ந்த முத்துக்களைச் சிப்பியில் அடைத்து அழகான கிலுக்குகள் செய்து கொடுத்தனர் என்பவற்றை யெல்லாம் நாம் படிக்கும்பொழுது, அவர்கள் செல்வத்தின் செழிப்பையும், சிறு குழந்தைகளின் விளையாட்டுகளை எவ்வளவு முக்கிய மாய் அவர்கள் கருதினர் என்பதையும் நாம் நன்கு தெரிகிறோம்.

இரவில் குழந்தைகள் அழுதால் நாம் இன்றும் அம்புலியை அழைத்து விளையாட்டுக் காட்டுகிறோம். தண்மதியின் நல்லொளியைக் கண்டதும் குழந்தைகள் அழுகையை மறந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றன. குழந்தையை இடுப்பிலே எடுத்துக்கொண்டு தாய்மார் அம்புலியையாட அழைத்துக் கொண்டே பாலுணவை ஊட்டுவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதனை அம்புலியாடல் என்பர்.

"புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் நிலைய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே."
(அகம்-54)

தலை நரைத்துத் தோல் திரைத்த தொண்டு கிழவர்கள் ஊர்ப்பொது அம்பலங்களிலே கூடியிருந்து பொழுது போக்காக நாய்கள் என்னும் வல்லுக் காய்களை வைத்துச் சூதாடிக் கழிப்பார்களாம்:

".....பொதியில்
நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம்....." (புறம்-52)

அதோ ஒரு காட்சி! அந்த மன்றத்திலே பாருங்கள், நரைத்து ஆடி நடுங்கும் தலையையுடைய கிழவர்கள், மிக்கு ஆழ்ந்த சிந்தனையோடு வல்லுகளை அங்கும் இங்கும் நகட்டி, மனத்திலே சூழ்ந்து விளையாடுகின்ற ஆட்டத்தை:

".....மன்றத்து,
நரைமூ தாளர் அதிர்தலை யிறக்கிக்
கவைமனத் திருத்தும் வல்லு." (அகம்-377)

இச்சூதாட்டத்தை வட்டுப் பொருவுதல் என்று கூறுவர். சொக்கட்டான், தாயம் என்று இப்பொழுது வழங்குகின்றோம். சூதாடு கருவியைக் கவறு என்றும் வட்டு என்றும் சொல்லுவர்; சூதாடும் பலகையை வல்லுப் பலகை என்பர்; சூதாடு களத்தைக் கழகம் என்பர். இவ்விளையாட்டுக்கு வேண்டுங் கைத்தொழில் வெல்லு மாயம் படப்பிடித் தெறிதல். அதிலே ஒவ்வொருவர் கைதேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இதில் கள்ளத்தனமாய்க் கைகரந்து விளையாடுதலும் உண்டு. அதனால் சச்சரவுகளும் ஏற்படும். சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் தாமப்பல் கண்ணனை வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்த செய்தி புறம்-43 ஆம் பாடலால் தெரிகிறது. இத்தகைய சூது விளையாட்டுகள் தீங்கு பயக்கும் என்று திருக்குறள் கண்டித்திருப்பதும் இங்கே குறித்தல் தகும்:

"கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார்"

குடுகுடு கிழவராய்த் தள்ளாடிக் கோலூன்றி இருமிக்கொண்டிருக்கும் நிலையிலுங்கூடத் தொடித்தலை விழுத்தண்டினர் என்னும் புலவர் தாம் இளமையில் ஆடிய விளையாட்டை இனிக்க இனிக்க நினைத்துத் தவித்துருகுகிறார். அவர் எவ்வாறு விளையாடினாராம் தெரியுமா? ஒளிப்பு மறைப்பு அற்ற வஞ்சனையில்லாத இளம் பிள்ளைகளாகச் சேர்ந்து, நீராடுகின்ற இளமகளிருடனே கூடித் தழுவு வழித் தழுவியும் ஆடியும், கரையிலுள்ள பெரிய மருத மரத்

தின் கோடுகளில் ஏறி ஆழமான மடுவின் கண் துடுமெனக் குதித்து அடியிலுள்ள மணலை எடுத்து மேலே கிளம்பி வந்து, கரையில் நிற்போருக்குக் காட்டித் தம் முடைய ஆற்றலை வெளிப்படுத்தியும், கல்வி யில்லாத இளமைக் காலம் இனிது விளை யாட்டிலே கழிந்ததாம். இனி அந்தக்காலம் முதுமையை அடைந்த தமக்கு எங்ஙனம் கிட்டப் போகிறது என்று ஏங்கிப் பாடு கிறார் :

"இனிநினைந் திரக்க மாகின்று தினிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தையிற்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய எமக்கே."
(புறம்-243)

சிறு பிள்ளைகள் தரையில் கட்டளையாகக் கோடு கிழித்து அரங்கு இழைத்து, அதில் சிறு ஓட்டுச் சில்லு அல்லது நெல் லிக்காயை வீசியெறிந்தும், உண் டை உருட்டியும் குதித்துத் தாவிக் காலால் செதுக்கித் தள்ளிக் கோட்டில் படாமல் குதித்து விளையாடும் விளையாட்டுக்குப் பாண்டி விளையாட்டு என்பதுபெயர். இதோ ஒரு சிற்றூரின் வேப்பமரத்து நிழலில் இன் னும் கல்வி கற்கத் தொடங்காத சிறுவர்கள் நெல்லிவட்டாடுவதைக் காண்மின் !

"சுன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்."
(நற்றிணை-3)

நெல்லிவட்டாடுதல் ஒருவகைக் கோலி விளையாட்டாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இக்காலத்துக் கோலி விளை யாட்டை உண்டை உருட்டுதல் என்று அக் காலத்தில் வழங்கினர் போலும். பரிமே லழகர் வட்டாடலை உண்டை உருட்டல் என்றே வழங்கினர். திருவள்ளுவரும் திருக் குறள் நூலில் " அரங்கின்றி வட்டாடி யற்றே " என்று குறிப்பிட்டுள்ளார். ஆனல் சில உரைகாரர்கள் வட்டாடலைச் சதுரங்க மாகிய சூது விளையாட்டு என்று பொருள் கூறினர். சூதென்னும் முகடி என்று அதனை அறவே வெறுத்தொதுக்கிய திருவள்ளுவர் உவமை வாயிலாக அதனைக் கொண்டுவந்து இங்கே குறிப்பிட்டு வேண்டாவிதமாய் நமக்கு நினவூட்டமாட்டார் என்பது குறிப் பிடத் தக்கது.

பழங்காலத்தில் இளைஞர்களுடைய விளை யாட்டுகள் எல்லாம் உடல் உறுதி பெறும் வகையிலும், வீரம் உண்டாகும் வகை யிலும், உடல் வலிபெற்று அச்சமும் கூச்ச மும் அகலும் விதத்திலும், சுறுசுறுப்புடன் எப்பொழுதும் உழைக்கும் விதத்திலும், மனவுக்கத்தை எழுப்பும் முறையிலும் அமையப்பெற்றிருந்தன. அக்காலத்தில் தமிழர் வீரவாழ்க்கையும் விழுப்புண்ணும் கொண்டு, போரெனிற் புகலும் புனகழல் மறவர்களாய்த் திகழ்ந்தார்கள்; இளமையி லிருந்தே போருக்கு வேண்டிய பயிற்சிகள் எல்லாம் விளையாட்டாகவே கற்றுக்கொண் டிருந்தார்கள். ஆடவரும் பெண்டிரும் கூடிப் புதுப்புனல் ஆடுதலையும் ஒரு விளை யாட்டாகக் கொண்டிருந்தனர். கொல்லேறு தழுவுதல் என்பது உயிருக்கும் உடலுக்கும் கொடிய ஊறு விளைக்கக்கூடிய ஒரு பொல் லாத விளையாட்டு. அதில் மணமாகாத இளை ஞர்கள் மகிழ்ச்சியுடன் இறங்கி, அடங்காத காளையையும் அடக்கிப் பிடித்துத் தங்கள் உடல்வலியினையும் வனப்பினையும் பிறருக்கு ஐயந்திரிபற எடுத்து விளக்கி அழகான கன் னியரை மணம் செய்துகொள்வது வழக்கம். இதனை முல்லைக்கலிப்பாடல்களிற் பரக்கக் காணலாம். மற்றும் யானை யேற்றம் (கலித் தொகை-97) குதிரை யேற்றம் (கலித்

தொகை-96), தேர் செலுத்துதல் முதலிய வற்றையும் விளையாட்டாகவே பழகி மிக்க தேர்ச்சிபெற்றிருந்தார்கள். சிறு குழந்தை களுக்குக்கூடச் சிறு தேர்களைச் செய்து கொடுத்து இழுத்து விளையாடச் செய்து, பின்னர் ஊர்ந்து இன்புறற்கு வழிகோலி யமைத்தனர் போல் தோன்றுகிறது.

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புருஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல."
(குறுந்தொகை-61)

ஆங்கிலத்தில் Boxing அல்லது Wrestling என்னப்படும் குத்துச்சண்டை அல்லது மற்போரையும் தமிழர் ஒரு விளையாட்டா கவே பழகி வந்தனர். பெருநற்கிள்ளி என் னும் சோழவரசன் ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்ற செய்தியைப் புற நானூறு 80-ஆம் பாடலிற் காணலாம். இவ்வாறு ஒவ்வொருவருடைய ஆற்றலையும் வலிமையையும் காட்டுவதற்காக நடத்தப் படும் மற்போர்கள் முதலிய விளையாட்டுகள் ஒரு போரவையின் முன்னிலையில் நிகழ்வன வாகும். ஆங்கிலத்தில் Umpires என்று சொல்லப்படும் நடுவர்களை இப்போரவை யத்தார் ஆவர். இத்தகைய போரவை யின் முன்னர்ப் பொருது வென்றதாலேயே, அச்சோழவரசன் போரவைக்கோ பெருநற் கிள்ளி என் று அழைக்கப்பட்டான் போலும். இவ்வித விளையாட்டுகளை ஆட வரும் பெண்டிருமாய் மக்கள் பெருந் திர ளாகக் கூடிவந்து கண்டு களிப்பார்கள். இதைக் குறித்து ஒரு சுவையுள்ள செய்தி அகநானூற்றிற் குறிக்கப்படுகின்றது.

கணையன் என்பவன் வட நாட்டிலிருந்து ஆரியப் பொருநன் என்னும் ஒரு மல்லனை வரவழைத்து, அவன் உடல் வன்மையைக் கண்டு வியந்து கொண்டாடினான். பாணன் என்பவன் ஒரு தமிழ்நாட்டு மல்லன். அகன்ற மார்பும் உயர்ந்த தோள்களும் படைத்தவன். பெருமிதங் கொண்டிருந்த ஆரியப் பொருநன் பாணனை மற்போருக்கு அறைகூவி அழைத்தான். பாணன் தன் தோள்களை எவ்வளவு இறுகப் பற்றிப் பிடித் தாலும், தான் திமிறிக்கொண்டு வெளிவந்து விடுவதாக வீரமொழி புகன்றான் அப்பொரு நன். அவ்விதமே, கணையன் முன்னிலையில் இப்போர் நடக்கலுற்றது. பாணன் ஆரியப் பொருநனின் தோள்களைத் தன் இரு கைக ளாலும் மார்போடு இறுக்கிப் பிணித்துக் கொண்டான். ஆரியப் பொருநன் தன் முழு வலிமையையும் செலுத்தி முயன்று வெளி வந்தான். எவ்வாறு? பாணன் பிடித்த பிடி நெகிழ்க்கவில்லை. ஆரியப் பொருநன் அவன் எதிரிற் கீழே இரு தோளும் அற்று விழுந்து கிடந்தான். அவன் தோள் இரண்டும் பாண னது பிடியிலேயே பொருந்தியிருந்தன. பொருநன் விசையாய் இழுத்துத் தன் வலி யைக் காட்டவும், அவன் தோள்கள் பிய்த் துக் கொண்டுவிட்டன. தோளற்ற அவ னது உடல் தரையில் விழுந்து துடித்தது. அதைக் கண்டு நாணிக் கணையன் தலைகுனிந் தான். பாணனது பிடி உடும்பையும் முதலை யையும் வென்றுவிட்டதென்றே சொல்ல லாம்:

"பாணன், மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரள் முழவுத்தோள்
கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு." (அகம்-386)

இளம் பருவத்திலிருந்தே தமிழ் மக்கள் இத்தகைய போர்த் தொழில்களைப் பயின்று வந்தார்கள். ஒவ்வோர் ஊரின் பொது மன் றத்திலும் போர்க்களம் அமைக்கப் பெற்றி ருக்கும். அது மர நிழலின்கண் மணல் நிறைத்து வனப்புற அமையப்பெறும். அதை இப்பொழுது கோதாக்குழி என்றும், ஆங்கி லத்தில் Arena என்றும் கூறுகின்றனர். இங்குப் போரவையத்தாரின் முன்னிலையில் பயிற்சிகள் நடைபெறும். அவ்வாறு பயி லும் பொழுதுகூடப் பெருஞ்சினமும் மற மும் காட்டி வெங்காட்டாது இளைஞர்கள் முனைந்து ஊக்கமாய் விளையாடுவார்களாம்:

"நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன் மொய்ம்பி னோர்"

என்பது பட்டினப்பாலை. இத்தகைய படைக்கலப் பயிற்சிகளோடு, கோழி, தகர், யானை, பூழ், சிவல், கிளி, பூவை, குதிரை முதலியவற்றை ஒன்றோடொன்று பொர விட்டும், ஓடவிட்டும், போட்டிகள் நடத்திப் பணயம் வைத்து விளையாடுவதும் உண்டு என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. தேர்களையும் வண்டிகளையும் பந்தயத்தில் ஓட்டம் விடுவதும், விற்போர்கள், வாட்போர்கள் நடத்துவதும், யாழ், பாட்டு, கூத்து என்னும் இவைகளிற் போட்டிகள் நடத்துவதும், கூத்தாட்டவைக் குழாங்களில் நாடகங்கள், பாவைக் கூத்துகள் காண்பதுவும் வழக்கமான விளையாட்டுகளாய் இருந்தன. திருவிழாக்காலங்களில் இவை சிறப்பாகக் கொண்டாடப் பெறும். திருநாட்களில் வீரர்கள் கூடித் தத்தம் சேரிகளில் நிகழ்த்தும் விளையாட்டுப் போர்களைச் சேரிப் போர் என்றும் மள்ளர் விழவு என்றும் வழங்குவர். அப்போர்களில் வீரர்கள் புண்களை மார்பிலும் முகத்திலும் விரும்பி ஏற்று மனமகிழ்வர். திருவோண நாளில் மதுரையில் நிகழும் சேரிப் போரைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது:

"மாயோன் மேய வோண நன்னாள்
* * *
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாரு துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்."

இக்காலத்தும் திருவிழா நாட்களில் சிலம்பம் விளையாட்டுகள் நடக்கின்றன.

தமிழ் நாட்டுப் பண்டைய வரலாற்றை நாம் துருவி ஆராயும்பொழுது, பிறர் நாட்டைக் கைக்கொள்ளும் நோக்கம் சிறிதுமின்றித் தங்கள் வலிமையை நிலைநாட்டுவதற்காகவே தமிழ் மன்னர்களும் சிற்றரசர்களும் பெரும் போர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். போர்த்தினவு கொண்டு உடற்றிய சில போர்களில் இருதிறத்தார்களும், ஒருவராவது எஞ்சினர் என்றில்லாமல், அனைவரும் மடிந்தும் போயிருக்கிறார்கள்.

சேரி விழவுகளிலும் திருவிழாக்காலங்களிலும் ஆடவரும் பெண்டிரும் தம்முட் கலந்து, கை கோத்துத் தழுவித் துணங்கையாடுதலும் குரவையயர்தலும் தமிழ் நாட்டில் பெரு வழக்கிற்றாயிருந்தன. துணங்கை என்பது ஒருவகைக் கூத்து. அதனைச் சிங்கிக்கூத்து என்றும் கூறுவர். "பழுப் புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்," என்று அதன் இலக்கணமும் கூறப்பட்டிருக்கிறது. ஆடவர் மகளிருக்கு முதற்கை கொடுத்து ஆடுவார்களாம். மகளிருடைய துணங்கை நாளும் மள்ளருடைய சேரிப் போரும் ஒன்றாய் நிகழும் என்பது தெரிகிறது.

"வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே."
(குறுந்தொகை—364)

ஆடவர் விளையாட்டுகளைவிட மகளிரின் விளையாட்டுகளே மிகுதியாகச் சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றன. அக்காலத்தில் இளமகளிர் யாதொரு கவலையுமின்றி விளையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தைகளை விளையாட விடாமல் வீட்டினுள் அடைத்துவைப்பது பெரும்பாவம் என்றும், அதனால் செல்வம் தேய்ந்துவிடும் என்றும் கருதினர்கள். இதனை,

"விளையா டாயமொ டோரை யாடா
தினையோ ரில்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனு மன்றே யாக்கமுந் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமல ருந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்."
(நற்றிணை—68)

என்பதால் அறியலாம். இளமகளிரைக் குறிக்கும்போதெல்லாம் "ஓரையாயம்"

என்றும் "பொய்தன்மகளிர்" என்றும் பாடுகின்றனர். ஓரை என்பது ஒருவகை விளையாட்டு. அது இன்னது என்று நன்றாக விளக்கப்படவில்லை. அது பஞ்சாய்ப் பாவைகொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்.

மகளிர் ஆடும் விளையாட்டுகள் பலவும் பலராகக் கூடியிருந்து விளையாடுவனவாகும். பெண்களுக்கென அமைந்த விளையாட்டுகள் அவர்களுடைய மெல்லியல் மேனியின் வளர்ச்சிக்கும் எழிலின் எழுச்சிக்கும் ஏற்றபடி இருந்தன. அவர்கள் வயது வந்து இல்லறம் ஏற்றுக் கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து வாழ்க்கையை இனிது நடத்துவதற்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளே அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. வண்டலயர்தல், சிறுவீடு கட்டுதல், சிறு சோறு சமைத்தல், பாவையாடல் முதலியன இல்லறக் குறிப்புடனேயே இயன்றுள்ளன. இவ்வாடல்களைப் பன்னிரண்டு வயது வரையில் பெண்கள் ஆடிவந்தனர். அவற்றை விளையாட்டாகக் கருதாது, விழவுநோன்பு அயர்வதாகவே கருதி விளையாடினர். அவற்றை உண்மையோடு செய்து வந்தால் நல்ல கணவனை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் நிலவிவந்தது.

பூந்தாதும் பஞ்சும் பட்டும் கொண்டு அழகான பொம்மைகள் செய்து, அவற்றை ஈன்றெடுத்த குழந்தைகளைப்போலப் பேணி, குழமகன், சிறுமுத்தன் போன்ற பெயர் களைச் சூட்டி, அவை ஒன்றோடொன்றை மணம் செய்வித்து மண விளையாட்டு நடத்துவதை ஒரு நோன்புபோலக் கொண்டாடினர். இதற்காகப் பல வீடுகளிற் சென்று ஐயம் எடுத்து வந்தும் பிறர்க்கு இட்டு அறத்தைப் பெருக்கினர் :

"பொய்தல மகளீயாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கித்த பயம்பயக் கிற்பதோ."
"சிறுமுத் தனைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ,"
(கலித்தொகை–59)

தாம் வளர்க்கும் பாவைக்கு ஏதாவது சிறு துன்பம் நேரிட்டால் அதைப் பெரிதாகக் கொண்டு தாங்களும் துயருறுவார்களாம் :

"தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றேரும்பென."
(குறுந்தொகை–48)

அச்சிறு பெண்கள் பாவையை மடியில் வைத்துக் காலை நீட்டி இருந்துகொண்டு இதோ பாலூட்டுவதைப் பாருங்கள் !

"உரு அ வறுமுலை மடாஅ
உண்ணுப் பாவையை யூட்டு வோளே."
(ஐங்குறு நூறு–128)

மார்கழி மாதத்தில் இளமகளிர்கள் கூடிப் புலரிவிடியலின்கண் நீர்த்துறையை நண்ணி நீராடிப் பாடித்தொழுது நோன்பிருப்பர். இதன் பலன் நல்ல கணவனை யடைதலாகும். இதனைத் தைநீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் கூறுவர் :

"வையெயிற் றவர்நாப்பண் வகையணிப்
பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ."
(கலித்தொகை–59)

சுனையிலும் ஆற்றிலும் கடலிலும் பாய்ந்து நீந்தி ஓடி விளையாடி, மகளிர் உடற்கட்டுடன் நோயின்றி வாழ்ந்தனர். நுங்கின் நீரும் கரும்பின் சாறும் தெங்கின் இளநீருடனே கலந்து முந்நீருண்டு முந்நீர்ப்பாய்ந்து முழுகியாடினராம். (புறம்–24). அவலை உண்டு அலைகடற் பாய்ந்தனராம் (புறம்–63). இளமகளிரை நீர்த்துறைக்கண் கண்டுவிட்டால் நண்டுகள் பாடு திண்டாட்டம்தான். அல வலைட்டுதலை ஒரு விளையாட்டாகவே பெண்கள் கொண்டிருந்தனர். பொன்னாலும் பளிங்காலும் கழங்குகள் செய்து அம்மானை விளையாட்டு ஆடினர். நொச்சியும் முல்லையும் வளர்ப்பது ஒரு விளையாட்டு. சிலம்பெதிர் கூவுதலும் ஒரு விளையாட்டு. மலைப் பக்கங்களில் குகைகளின் முன்னால் நின்று கூவியழைத்து எதிரொலி கேட்டு மகிழ்வர். இது மணமான பின்னர்க் கணவன் சொல்லு

வதையே தாம் சொல்லி வாழ்க்கை நடத்து வதற்குப் பயிற்சி போன்றமைந்தது :

"நின்மலைச், சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கே ரெல்வளை யிவளுடை நோயே."
(கலித்தொகை–46)

இளம்பெண்கள் மலர்களும் இலைகளும் கொய்து தழையுடைகளும் தொடலைகளும் தைத்து உடுத்து விளையாடினர். வேங்கை மரத்தினடியிற் சென்று 'புலி! புலி!' என்று கூப்பிட்டு, வளைந்த கொம்புகளில் மலர் பறித்து விளையாடினர். கும்மி கோலாட்டம் என்றால் ஒரே கும்மாளம்தான். ஊஞ்சல் ஆடுவதில் ஊக்கமாய் முனைந்து நிற்பர். அக் காலத்தில் சந்தன மர உரலிலே முத்து நிறைந்த யானைக் கொம்பால் தினையைக் குத்தி வள்ளைப் பாட்டுப் பாடி விளையாடினர். சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதை உரையில் அடியார்க்கு நல்லார் காட்டிய "சிந்துப் பிழுக்கையுடன்" என்று தொடங்கும் மேற்கோளிற் குறிக்கப்பட்ட பல்வரிக் கூத்துக்கள் பலவற்றுள், திருவாசகத்துட் காணப்படும் அம்மானை, வண்டு (திருக்கோத்தும்பி), தோள்வீச்சு (திருத்தோணோக்கம்), சாழல், உந்தி, அவலிடி (திருப்பொற்சுண்ணம்), கொய்யுமுள்ளிப்பூ (திருப்பூவல்லி), படுபள்ளி (திருப்பள்ளியெழுச்சி), தெள்ளேணம் முதலியன யாவும், பாடிக் கொண்டே மகளிர் ஆடும் விளையாட்டுகள் என்பது தெளிவாகும். இவை போல்வன பண்டைக் காலத்தில் பல்கியிருந்தன போலும். கைகோத்தாடும் குரவையைத் தெற்றியாடல் என்றும் கூறுவது உண்டு.

அந்நாளில் ஆடவர் விளையாடாத மகளிர்க்கே உரித்தாயிருந்த விளையாட்டு ஒன்று உண்டு. அதுதான் பந்து விளையாடுதல். பந்துகள் பட்டுத் துணி கொண்டு நூலால் வரிந்து கட்டப்பட்டுக் கண்கவர் வனப்பின வாய் இருக்கும். சிலம்புகள் கலீர் என்று ஒலிக்கப் பெண்கள் காலால் அடித்துப் பந்து விளையாடுவர். பந்து விளையாட்டு காலுக்கு வலிமை ஊட்டும். கால் சலித்துப் போனால் வீட்டு முன்றிலின் மணலிடத்திருந்து கலகல வென்று வளையல் ஒலிக்கக் கழற்காய் ஆடுவர். அம்மானை விளையாட்டு கைகளுக்கு உரம் ஊட்டும் :

பஞ்சாலை தொழிலுக்கு சுமார் 50 வருட சேவை

காளீஸ்வரர் மில்ஸ் லிமிடெட்,

கோயமுத்தூர்.

தபால் பெட்டி நெம்பர் 503 தந்தி : 'காளீஸ்வரர்'

போன் :

ஆபீஸ் :		59 (8 எக்ஸ்டன்ஷன்கள்)
ஜெனரல் மானேஜர்	(Per.)	959
,,	(Res.)	60
ஆபீஸ் மானேஜர்	(Res.)	1168

★

10 நெ. முதல் 80 நெ. வரை ஒற்றை, இரட்டை நூல்களும் வேஷ்டிகள், துண்டுகள், லாங்கிலாத்துகள், மல், காடா, மேட்டி, ஷர்ட்டிங், முதலான ரகங்கள் உயர்ந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன.

★

புதிய நிர்வாகம் மில்லின் பழஞ் சிறப்பை நிலை நிறுத்த இடைவிடாது உழைத்து வருகிறது.

P. S. S. சோமசுந்தரம் செட்டியார்

ஜெனரல் மானேஜர்

"தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றேய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்."
(பெரும்பாணாற்றுப்படை)

பண்டை நாளில் பாவையரே பந்துவிளை யாடுதலைப் பழக்கத்திற் கொண்டிருந்தனர். ஆடவர் விளையாடுவதில்லை. இதற்குச் சான்று யாதெனிற் கூறுவாம்: பாண்டிய மன்னர் மதுரைக் கோட்டை வாயிலிற் பறக்கவிட்டிருந்த மீனக்கொடிக்குப் பக்கத் தில் பந்தும் பாவையும் கட்டித் தொங்கவிட் டிருந்தனர். "எங்கள்மீது பகைமை கொண்டு போரில் எதிர்த்துவரும் மடவோர் இருப்பார்களேயானால், அவர்களைப் போரில் முறியடித்து மகளிராக்கிக் கையில் அந்தப் பந்தையும் பாவையையும் கொடுத்து விளை யாட விடுவோம்" என்ற எச்சரிக்கையின் அறிகுறியாகவே அவை அங்குக் கட்டப்பட் டிருந்தனவாம். அவ்வாறு யாரும் பகைவர் வாராததால், அவை வாயிலில் தூங்கிக் கொண்டிருந்தனவாம்.

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்
கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்."
(திருமுருகாற்றுப்படை)

இதனால் பந்து விளையாடுதற்குரியார் மக ளிரே என்பது தெற்றெனப் புலனும். அக் காலத்து மகளிர் பந்து விளையாடிய திறனை யெல்லாம் சிலப்பதிகாரம், பெருங்கதை போன்ற நூல்களில் விரிவாகக் காணலாம். எஞ்சாது மேற்கோள்களைக் கூறுவதானால் இக்கட்டுரை ஒரு பெருநூலாக விரியும் என்று அஞ்சி ஒரு சில மேற்கோள்களே தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையும் விளை யாட்டாகவே எழுதப்பட்டது. இதைப் படிப்போர்களும் விளையாட்டாகவே படித்து மகிழ்வார்களாக.

பொன் விழா வரவு
நல் வரவாகுக
★
உங்கள் தொடர்ந்த ஆதரவை
விரும்பும்
காலேஜ் ஹவுஸ்
மதுரை

பண்டைய இந்திய நாணயங்கள்

குமாரி ஆர். வனஜா, எம். ஏ.
(Curator, Numismatics Section, Government Museum, Madras.)

★

நாணயங்களின் மதிப்பையும் உயர்வையும் நமக்கு முதன் முதலில் உணர்த்தியவர்கள் ஐரோப்பியர்கள். நமது இந்திய அரசாங்கமும் சென்ற நூற்றாண்டிலிருந்து கல்வெட்டிலாகா ஒன்று நிறுவிக் கல்வெட்டுகளைத் தக்க அறிஞர்களைக் கொண்டு படி எடுப்பித்தும், புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும், ஆங்காங்குக் கிடைக்கும் செப்பேடுகளையும், பழைய நாணயங்களையும் சேகரித்து வருகின்றார்கள். இவ்விதம் கண்டெடுக்கப்பட்ட பழைய நாணயங்களின் உதவியால் நமக்கு முக்கியமான, அரிய பல ஆதாயங்கள் கிடைக்கின்றன. அவைகளைக் கொண்டு நாம் ஒரு குறிப்பிட்ட தேசத்தின் சமய, பொருளாதார நிலைமையையும், சரித்திர சம்பந்தமான பல உண்மைகளையும் அறிய முடிகிறது. இதற்கு நமது பண்டைய இந்திய நாணயங்களே ஒரு தக்க சான்றாகும்.

பண்டைய இந்திய நாணயங்கள் யாவும் ஊர் பெயர் அற்றவை. பாக்ட்ரியா, கிரேக்க மன்னர்களின் (Bactrians, Greeks) தொடர்பு ஏற்பட்ட காலத்திலிருந்து இந்திய அரசர்களும் தம் பெயரோடு கூடிய நாணயங்களை வெளியிடலானார்கள். இவைகளின் உதவியால் நாம் அரச வழிகளையும், காலங்களையும் நிர்ணயித்துக் கொள்வதோடு அல்லாமல் திருத்தியும் கொள்ளலாம்.

வேந்தர் சிலர் இரு மொழியில் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர். அவைகளின் துணை கொண்டே ஆங்கில அறிஞர் ஒருவர் அசோகரின் 'பிராமி' கல்வெட்டுகளைப் படித்ததாக அறிகிறோம். அதைத் தவிர, நாம் பண்டைய வேந்தர்களின் உருத்தோற்றத்தைப் பற்றி இந்திய—கிரேக்க மன்னர்களின் நாணயங்கள் மூலம் அறிகிறோம். மன்னர்களின் உருத்தோற்றத்தை நாணயங்களின் மேல் வெளியிடும் பழக்கமானது முஸல்மான்கள் காலம் வரை நீடித்து வந்தது.

பொன், வெள்ளி, செப்பு நாணயங்கள் ஏராளமாக அகப்படுகின்றன. இவற்றைத் தவிர பண்டைய இந்தியர்கள் கலப்பு உலோகங்களையும் உபயோகித்து வந்தார்கள். ஆந்திரர்கள் அல்லது சாதவாஹனர்கள் ஈய நாணயங்களோடு, 'போடின்' (Potin) எனச் சொல்லப்படும் ஒரு விதக் கலப்பு உலோகத்தில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார்கள். சில இராஜபுத்திர வம்ச மன்னர்கள் 'எலக்ட்ரம்' (Electrum) எனச் சொல்லப்படும் உலோகத்திலும் 'பில்லன்' (Billon) எனும் உலோகத்திலும் நாணயங்கள் செய்துள்ளார்கள்.

நாணய நிறுவைக்குப் பண்டைய காலத்தில் விதைகளைப் பயன்படுத்தினர்கள். 'ரதி' விதையானது அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. புராணக்கள் எனச் சொல்லப்படும் ஒரு வகைப் பண்டைய நாணயங்கள் இந்த நிறுவையை அடிப்படையாகக் கொண்டவை. தென்னிந்தியாவில் மஞ்சாடி (5 குன்றிமணி), கழஞ்சு என்ற இரண்டுவித நிறுவைகளைப் பின்பற்றி நாணயங்கள் வெளியிடப்பட்டன.

இந்த நிறுவைகள் ஷெர்ஷா சூர் காலம் வரை நீடித்திருந்தன. அதற்குப் பிறகு அவ்வரசன் 175 குன்றிமணி எடையுள்ள

வெள்ளி ரூபாய்களை வெளியிட்டான். இன்றைய இந்திய ரூபாய் ஷெர்ஷா வினுடைய ரூபாய் நிறையைப் பின்பற்றி யிருக்கிறது.

புராணைக்கள் என வழங்கப்படும் நாண யங்கள்தாம் மிகப் பழமையான நாணயங் கள். இந்நாணயங்களின் மேல் நாம் பல விசித்திரமான சின்னங்களைக் காண்கிறோம். இச்சின்னங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பது இன்றுவரை ஒரு மர்மமாகவே இருந்து வருகிறது. அறிஞர்கள், இவை மௌரிய காலத்தவையாகவோ அல்லது இன் னும் பழமையானவையாகவோ இருக்கலாம் என நினைக்கிறார்கள். சென்னை மியூஸியத்தி லுள்ள ஒரு புதைக்குவியல் மிகவும் புதுமை யானதாக இருக்கிறது. இந்நாணயங்களின் பின்புறம் காணப்படும் சின்னம் பாண்டிய இலச்சினையான மீன் போல் இருக்கிறது. ஆகையால் இதைப் பாண்டிய வெளியீடு என்று சொல்லலாம். இது கி. பி. 2-வது நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று நினைக்கவும் இடமிருக்கிறது.

பாக்ட்ரியா, கிரேக்க மன்னர்களின் நாண யங்களைப் பின்பற்றி இந்தோ—கிரேக்கர்கள் தங்களுடைய நாணயங்களின் மேல் ஒரு பக்கத்தில் கிரேக்க மொழியிலும், மற்றொரு பக்கத்தில் கரோஷ்டியிலும் பெயரைச் செதுக்கினர்கள். சில மன்னர்களின் உரு வங்களையும் நாம் இந்நாணயங்களின் மேல் காண முடிகிறது.

கி. பி. 1-வது நூற்றாண்டில் அன்னிய முறை கைவிடப்பட்டு, இந்திய முறையில் நாணயம் அடிக்கும் வழக்கம் ஆரம்பமா யிற்று. கிரேக்கக் கடவுள்களுக்குப் பதிலாக இந்தியக் கடவுள்களை நாம் முதன் முதலாக நாணயங்களின் மேல் காண்கின்றோம். வீமா கட்பீஸஸ் (Vima-Kadphises) போன்ற குஷான் மன்னர்களின் நாணயங்களின்மேல் சிவன், நந்தி முதலிய சைவச் சின்னங்கள் காணப்படுகின்றன. குஜுலா கட்பீஸஸ் (Kujula-Kadphises) என்பவன் புதுச் செப்பு நாணயங்களை வெளியிட்டான். அச் செப்புக் காசுகளில் யுவராஜா, மகாராஜா, ராஜாதிராஜா என்னும் பட்டங்கள் பொறிக் கப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் மற்றொரு விருதை நோக்கின் அக்குஷான் மன்னன் பௌத்த சமயத்தில் பற்றுடைய வன் என்பதை அறிகிறோம். வீமா கட் பீஸஸ் வெளியிட்ட பொன் நாணயங்களின் ஒருபுறத்தில் மன்னன் வடிவமும், மற்றொரு புறத்தில் சிவபெருமானின் வடிவமும் காணப்படுகின்றன. இக்குலத்தில் சீரோங் கியவன் கனிஷ்கனுவான். கனிஷ்கனின் நாணயங்கள் வட இந்தியா முழுவதும் கிடைக்கின்றன. இதிலிருந்து வட இந்தியா முழுவதும் கனிஷ்கன் ஆட்சியின்கீழ் இருந் தது என்பது தெளிவாகிறது. கட்பீஸஸ் என்ற அரசனைப்போலக் கனிஷ்கனும் புத் தர் உருவங் கொண்ட நாணயங்களை வெளி யிட்டான். இதிலிருந்து இவ்வரசனும் பௌத்த மதத்தில் பற்றுடையவன் என்று அறிகிறோம். குஷான் மன்னர்களின் மற்ற நாணயங்களில் ஒரு பக்கம் மன்னன் யாகம் செய்துகொண்டிருப்பதையும், மற்றொரு பக்கம் ஒரு தேவதையையும் காணலாம். நாணயத்தின் ஒருபுறம் தேவதை பொறிக்கப் படும் வழக்கத்தைப் பிற்கால இந்திய மன் னர்கள் பலர் பின்பற்றியுள்ளார்கள்.

நயத்திலும், வேலைத் திறத்திலும் சிறந்த நாணயங்கள் குப்த மன்னர்களால் வெளி யிடப்பட்டன. குப்த நாணயங்களுக்கு இணையாக நம் நாட்டில் வேறு எந்த நாண யங்களும் இல்லை. கி. பி. 4–வது, 5–வது நூற்றாண்டுகளில் குப்தர்கள் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த பொற்காசுகளை வெளியிட்டார்கள். இவர்களுடைய நாண யங்கள் மன்னரின் உருவத்தை ஒருபுறத் திலும், லக்ஷ்மியை மற்றொரு புறத்திலும் சித்திரிக்கின்றன. மன்னர் உருவத்தின் பக் கத்தில் பிராகிருத மொழியில் மன்னரின் பெய ரும், அவருடைய விருதுகளும் காணப்படு கின்றன. குப்த நாணயங்களுள் மிக முக்

PANDIT D. GOPALACHARLU'S



Three Gems

Aruna

Super Uterine Tonic



BALA PRASA

Ideal Tonic for Children



JEEVAMRUTHAM

The Best Nervine Tonic



AYURVEDASRAMAM LTD., MADRAS-17

கியமானவை சமுத்திரகுப்தனின் நாணயங்கள். இந்நாணயங்களின் ஒருபுறத்தில் சமுத்திர குப்தன் வீணை வாசித்துக்கொண்டிருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. சமுத்திர குப்தன் ஒரு பெரிய வீரன் மட்டுமல்ல, கலைஞனும் கூட என்பதை இதிலிருந்து அறியலாம். இவற்றைத் தவிர அஸ்வமேத யாகத்தையும், சிங்கம், காண்டாமிருகம் முதலிய மிருகங்களை அரசன் கொல்வதையும், குதிரை வீரனையும் சித்திரிக்கும் நாணயங்களைக் குப்த மன்னர்கள் வெளியிட்டார்கள். வெள்ளி, செப்பு குப்த நாணயங்கள் மிகக் குறைவு. குப்த நாணயங்களைப் பற்றிப் பேசும்போது நமக்குப் பாகியன் (Fa-Hien) என்ற சீனக் கவி எழுதியிருப்பது நினைவுக்கு வருகின்றது. 'அழகிய பொற்காசுகள் குப்தரால் வெளியிடப் பெற்றிருந்தும் மக்கள் சோழியையே நாணயமாகக் கையாளுகின்றனர்' என்று அவன் எழுதியுள்ளான். இதற்குத் தக்க காரணத்தை நம்மால் அறிய முடியவில்லை. குப்தர்கள் வைணவர்கள் என்பது அவர்கள் நாணயங்களின் மேலுள்ள கருட இலச்சினையின் மூலமும், பரம பாகவதர் என்ற விருதுவின் மூலமும் நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

வங்காளத்தில் குப்த நாணயங்களைப் போல் பல நாணயங்கள் அகப்பட்டுள்ளன. ஆனால், இவை குப்த நாணயங்களைப் போல் அவ்வளவு நேர்த்தியாக இல்லை. குப்தர்களுக்குப் பின் தோன்றிய ஹர்ஷவர்த்தனன் தன்னுடைய நாணயங்களின்மேல் தன் உருவத்தை ஒரு புறமும், மயிலின் உருவத்தை மற்றொரு புறமும் சித்திரித்திருக்கிறான். இந்நாணயங்களில் காணப்படும் சிலாதித்யன் எனும் பட்டம் இவனுடைய சிறப்புப் பெயர் என்பது விளங்குகின்றது.

ஹர்ஷவர்த்தனின் காலத்திற்குப் பின் இராஜபுத்திரர் என்னும் பெயரால் சிறப்பிக்கப் பெற்ற பல அரசவழிகள் தோன்றின. இவர்கள் வெளியிட்ட செப்பு, பில்லன் நாணயங்களின்மேல் குதிரை வீரனும், நந்தியும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நந்தியுடன் அரசனின் பெயர் தேவநாகரியில் பொறிக்கப்பெற்றது.

கி.பி. 12–வது நூற்றாண்டுவரை இராஜபுத்திர நாணயங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. பிற்கால இந்திய மன்னர் பலரும் இம்முறையைப் பின்பற்றி 17–வது நூற்றாண்டு வரை நாணயங்கள் வெளியிட்டார்கள்.

இஸ்லாமிய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து (கி. பி. 13–வது நூற்றாண்டு) நாணயங்களில் மாறுதலைக் காண்கின்றோம். மன்னர் உருவத்தைப் பொறிக்கும் வழக்கம் கைவிடப்பட்டு, மன்னர் பெயரும், விருதுகளும் பாரசீக மொழியில் ஒரு புறமும், 'கலீமா' என்ற இஸ்லாமிய தத்துவம் மற்றொரு புறமும் பொறிக்கப்படும் வழக்கம் கையாளப்பட்டது.

மொகலாய நாணயங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. மொகலாயர் வெளியிட்ட தங்க மொஹராக்கள் மிகவும் அழகானவை. அக்பர் தம்முடைய புதிய மதமான தீன்–இலாஹி (Din-Ilahi) யை ஸ்தாபிப்பதற்கு நாணயங்களை ஒரு கருவியாகக் கொண்டார். ஜஹாங்கீரின் நாணயங்கள், மொகலாய நாணயங்களுள் சிறந்தவை. மன்னர் உருவமும், நூர்ஜஹானின் பெயரும், பன்னிரண்டு ராசிகளின் சின்னங்களும் (Zodiacal Signs) கொண்ட ஜஹாங்கீரின் நாணயங்கள் குறிப்பிடத் தக்கவை.

தென்னிந்திய நாணயங்களின் வரலாறு, வட இந்திய நாணயங்களின் வரலாற்றுக்கு முற்றும் மாறுபாடானது. போடிநாயக்கனூர் என்ற இடத்தில் கிடைத்த புதைக்குவியலைத் தவிர, தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட மற்ற எல்லாப் புராணக்களும் வட இந்தியப் புராணக்களை எல்லா விதத்திலும் ஒத்துள்ளன. இதிலிருந்து புராணக்கள் தென்னிந்திய அரச வம்சத்தினரால் பிரத்தியேகமாக வெளியிடப்படவில்லை என்

பது தெளிவாகிறது. மிகப் பழமையான தென்னிந்தியப் பொன் நாணயங்கள் வட்ட வடிவமுள்ளன. இவற்றின்மேல் காணப் படும் சின்னத்தை விவரிக்க முடியவில்லை. இதன் பிறகு நடைமுறையில் வந்த தாமரைப்பூ சின்னத்தோடு கூடிய நாணயங் களைப் 'பத்மடங்காக்கள்' என அறிஞர் வழங்குகின்றார்கள். இறுதியில், அச்சடிக் கப்பட்ட (die-struck) முத்திரையோடு கூடிய நாணயங்கள் வெளிவந்தன. இவற் றுள் விஜயநகர நாணயங்கள் மிகவும் சிறந் தவை. 5 குன்றிமணி எடையுள்ள பணம் என்று சொல்லப்படும் மிகச் சிறிய தென் னிந்திய நாணயங்கள் ஏராளமாகக் கிடைக் கின்றன. கி. பி. 15, 16–வது நூற்றாண்டு களில் இவை மிகவும் பிரசித்தமாயின.

தென்னிந்திய அரசர்கள் பொன், செப்பு நாணயங்களைப் பெரிதும் உபயோகித்தார் கள். தென்னிந்திய வெள்ளி நாணயங்கள் மிகக் குறைவு. இந்நாணயங்களின் மேலுள்ள சின்னங்களிலிருந்து அவை எந்த வம்சத்தினரால் வெளியிடப் பெற்றவை என்று அறிய முடிகிறது.

குரும்பர்கள் என அழைக்கப்படும் ஒரு குறுநில அரச வம்சத்தினரின் நாணயங்களின் மேல் பாய்மரக் கப்பலின் வடிவம் சித்திரிக் கப்பட்டுள்ளது.

தக்கணத்தின் வடமேற்குப் பகுதியில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் சாதவாஹனரின் (ஆந்திரர்) ஆட்சி நிறுவப்பெற்றது. கி. பி. 2–வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கௌதமிபுத்ர ஸ்ரீ சதகர்ணி என்பான் பட்ட மெய்தினன். இவ்வரசன் தன் நாணயங் களைத் தவிர நகபாணன் என்னும் க்ஷகரத குலத்தைச் சேர்ந்த தன்னுடைய விரோதி யின் நாணயங்களையும், தன் பெயரால் அச்ச டித்து வெளியிட்டான். சாதவாஹனரின் நாணயங்களின் மூலம் நாம் அவர்களின் வம்ச சரித்திரத்தை அறிகிறோம். பௌத்த மதச் சின்னங்களையும், பிராமியில் அர சன் பெயரையும், யானை, குதிரை, சிங்கம், ஒட்டகம் முதலிய மிருகங்களையும், ஸ்தூபி, கப்பல் முதலிய சின்னங்களையும் இந்நாண யங்களின் மேல் காணலாம்.

மேற்கூறிய ஆந்திர நாணயங்களில் காணப்படும் சின்னங்களைத் தென்னிந்திய சரித்திரத்தில் பிரசித்தி வாய்ந்த ஒரு வம்சத் தினரான பல்லவ அரசர்களின் நாணயங்களி லும் நாம காண்கின்றோம். மற்றும் "ஸ்ரீபரன்," "ஸ்ரீநிதி" என்ற விருதுகளைக் கொண்ட நாணயங்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவ்விருதுகள் முறையே முதலாவது மகேந்திரவர்மனையும், இராஜ சிம்ம பல்லவனையும் குறிக்கும்.

தமிழக மூவேந்தரில் ஒருவரான பாண்டி யர் முதன் முதலில் சதுர வடிவமான செப்புக் காசுகளை வெளியிட்டனர். இவற் றின் மேல் யானை, ரிஷபம், விளக்கு முதலிய சின்னங்கள் ஒரு புறமும், பின்புறத்தில் மீனைப் போன்ற ஒரு சின்னமும் காணப் படுகின்றன. 7-வது, 10-வது நூற்றாண்டு களில் மீன் இலச்சினை நாணயங்களின் மேல் பெரிதும் உபயோகிக்கப்பட்டது. மற்றும், மன்னர்களின் சிறப்புப்பெயர்களும் பொறிக் கப்பட்டன. 'அவனிபசேகரன் கோளகை' என்ற சிறப்புப் பெயர் ஸ்ரீ மாரன் ஸ்ரீ வல்லப பாண்டியனைக் குறிக்கும். 'சோணாடு கொண்டான்,' 'எல்லாந் தலையனன்,' 'சேர நாடு கொண்டான்,' 'கச்சி வழங்கும் பெருமாள்' என்ற விருதுகள் அக்காலத்துப் பாண்டிய அரசர்களின் சிறப்பையும், வல் லமையையும் விளக்குகின்றன. சில பாண் டிய நாணயங்களின் மேல் சோழ இலச்சினை யான புலியும், சேர இலச்சினையான வில்-அம்பும், பாண்டிய இலச்சினையான மீனு டன் காணப்படுகின்றன.

சோழர்கள் பாண்டியரை வென்ற பிறகு 9-வது நூற்றாண்டிலிருந்து 13-வது நூற் றாண்டுவரை தமிழகத்தில் பேரரசு புரிந்தார் கள். சோழ இலச்சினையான புலியை இவர்கள் நாணயங்களில் காணலாம். இவர்

களின் வழி வந்தவர்களான ரேணுண்டுச் சோழர்கள் (தெலுங்கு நாட்டுச் சோழர்கள்) சிங்க இலச்சினையைத் தங்கள் நாணயங்களின் மேல் பொறித்தார்கள். சோழர் காலத்தில் பொன், செம்பு நாணயங்களைத் தவிர, கருங்காசு, ஈழக்கருங்காசு என்னும் வெள்ளிக் காசுகளும் நடைமுறையில் இருந்து வந்தன. கல்வெட்டுகளில் அக்கம், திரமம், கச்சாணம் என்று பல்வேறு நாணயங்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இவையன்றித் துளைப்பொன் என்ற பொற் காசுகளும் இருந்தன. இவை அரசாங்க அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டுத் துளையிடப்பட்டவை. கி. பி. 985–க்கு முன் பொன், வெள்ளி, சோழ நாணயங்களின் மேல் கயல் வடிவம் சோழ இலச்சினையான புலியுடன் காணப்படுகிறது. இதன் பிறகு சோழச் செப்புக் காசுகளின் இரு புறமும் ஓர் உருவத்தையும் (மன்னன்?), தேவநாகரியில் மன்னரின் பெயரையும் ஒரு புறமும் காண்கின்றோம். இராஜராஜன் ஈழ வெற்றிக்குப் பிறகு லங்கேஸ்வரன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட மாடைகளை (பொன் நாணயங்களை) வெளியிட்டான். விஷ்ணு பாதம், முரளீதரன் முதலிய சின்னங்களையும் இராஜராஜன் நாணயங்களில் காணலாம். குதிரை வீரனைச் சித்திரிக்கும் இராஜராஜனின் நாணயங்கள் மிகவும் பிரசித்தமானவை. ஆனால் இவை எளிதில் அகப்படுவதில்லை.

இராஜேந்திர சோழனின் நாணயங்களின் மேல் மன்னன் பெயரைச் சிலவற்றிலும், கங்கைகொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரைச் சிலவற்றிலும் காண்கின்றோம். சோழ நாணயங்களின்மேல் புலியுடன் கயலை ஒரு புறமும், வில்–அம்பு இவற்றை ஒரு புறமும் சித்திரிக்கும் வழக்கம் குலோத்துங்க சோழன் காலத்தில் (1070–1120 A. D.) கையாளப்பட்டது.

'வீரகேரளஸ்ய' என்று பொறிக்கப்பட்ட சேர வெள்ளி நாணயங்கள் கி. பி. 11-12–வது நூற்றாண்டு சேர அரசர்களால் வெளியிடப்பட்டவை. முக்கியமாக இரவி வர்மன் குலசேகரன், மாற வர்மன் குலசேகரன் இவ்விரு அரசர்களின் நாணயங்கள் பேரளவில் கிடைக்கின்றன.

பத்மடங்காக்கள் என்னும் தாமரைப்பூ அடையாளத்தைக் கொண்ட நாணயங்கள் முதன் முதலில் கடம்பர்களால் வெளியிடப்பட்டன. 11–12–வது நூற்றாண்டில் மேற்கிந்தியச் சளுக்கிய மன்னர்கள் தாமரைப் பூவிற்குப்பதிலாகச் சிங்க இலச்சினையையும், கன்னட மொழியில் விருதுகளையும் கொண்ட இதேவித நாணயங்களை அச்சடித்தார்கள். பின் வந்த தெலுங்கு சோழ வம்சத்தினரும் கன்னட ஹொய்சாளர்களும் இவ்வித நாணயங்களை வெளியிட்டனர்.

கங்கபாடியைச் சேர்ந்த கங்க வம்சத்தினரும், வாரங்கலைச் சேர்ந்த காகதிய வம்சத்தினரும் விருஷப இலச்சினையைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டனர். ஓரிஸ்ஸாவை ஆண்ட கஜபதிகள் ஆனைக் காசுகள் என்ற யானை முத்திரையோடு கூடிய நாணயங்களை வெளியிட்டார்கள்.

விஜயநகர நாணயங்கள் மிகவும் நேர்த்தியானவை. இவற்றின்மேல் ரிஷபம், யானை, கண்டபேருண்ட பறவை முதலியவைகளைக் காணலாம். கிருஷ்ண தேவராயர் வெளியிட்ட துர்கி பகோடாக்களின் மேல் விஷ்ணுவையும், லக்ஷ்மியையும் ஒரு புறத்திலும், தேவநாகரியில் மன்னரின் பெயரை மற்றொரு புறத்திலும் காணலாம். இராம ராயர் கண்டிகாடா பகோடாக்கள் என்ற நாணயங்களை வெளியிட்டார். 'மூன்று ஸ்வாமி பகோடாக்கள்' என்னும் பிரசித்தி வாய்ந்த தென்னிந்திய நாணயங்களை முதன் முதலாக வெளியிட்டவன் திருமலைராயன். பிற்கால விஜயநகர நாணயங்களின் மேல் மன்னன் பெயர் கன்னடத்தில் காணப்படுகிறது.

16–வது, 17–வது நூற்றாண்டுகளில் மதுரை திருநெல்வேலி நாயக்கர்களும், இராமநாதபுரம் சேதுபதிகளும் நாணயங்



லக்ஷ்மி மில்ஸ்

பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்டுகள்: G.துப்புஸ்வாமி நாயுடு அண்ட் கம்பெனி.

களின் மேல் தங்கள் பெயரைத் தமிழ் மொழியில் வெளியிட்டார்கள். இக்காலத்துச் செப்பு நாணயங்களில் தெலுங்கு மொழியில் 'ஸ்ரீவீர' என்ற பெயரையும், முகப்பில் ஹநுமான், கணேசன், யானை, விருஷபம் முதலிய சின்னங்களையும் காணலாம்.

கிருஷ்ண தேவராயர் நடைமுறையில் கொண்டுவந்த துர்கி பகோடாக்களைப் பின்பற்றி 17-வது, 18-வது நூற்றாண்டுகளில் இக்கேரி நாயக்கர்களும், சித்தல்துர்கம் நாயக்கர்களும் நாணயங்கள் வெளியிட்டார்கள். பெட்னூரிலும் இவ்வித நாணயங்கள் வெளிவந்தன. ஹைதர் அலி பெட்னூரைத் தன் வசமாக்கிக்கொண்டபொழுது இவ்வித நாணயங்களை 'ஹி' என்ற எழுத்தைப் பின்புறத்தில் அடித்து மைசூரில் வெளியிட்டான்; பிறகு பாரசீக மொழியில் தேதியைப் பின்புறத்திலும், 'ஹி' என்ற எழுத்தை முகப்பிலும் அடித்து நாணயங்கள் வெளியிட்டான்.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரஞ்ச் கிழக்கிந்தியக் கம்பெனியும், டச் கிழக்கிந்தியக் கம்பெனியும் இந்திய முறைகளை, முக்கியமாக விஜயநகர முறையைப் பின்பற்றி நாணயங்கள் அடித்தன.

'போர்டோ நோவோ' (Porto-novo) என்ற டச் பகோடாக்கள், வேங்கட பகோடாக்களைப் பின்பற்றி வெளியிடப்பட்டவை. ஆங்கிலேயக் கம்பெனியார் சென்னையிலிருந்து நட்சத்திரப் பகோடாக்கள், ஒற்றை ஸ்வாமி பகோடாக்கள் முதலிய நாணயங்களை வெளியிட்டனர்.

கி. பி. 1814-16-ல் வெள்ளி ரூபாய் இந்திய நாணயமாக நிர்ணயம் செய்யப்பட்டது. 1835-லிருந்து ரூபாயின் ஒரு புறம் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் பெயரும், மற்றொரு புறம் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரும் வெளியிடப்பட்டன. கம்பெனி ஆதிக்கத்தின் இறுதிவரை இம்முறை கையாளப்பட்டது.

பாங்க் ஆப் மதுரை லிட்.,

(ஸ்தாபிதம் : 1943)

தலைமை ஆபீஸ் :—மதுரை

★

கிளைகள்: புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்

★

செலுத்தப்பட்ட மூலதனமும் இதர நிதிகளும் ரூ. 14,98,700
மொத்த டிபாசிட்டுகள் ரூ. 2,55,91,000
மொத்த அலுவல் நிதி ரூ. 2,76,78,000

★

டைரக்டர்களின் போர்டு :

ஸ்ரீ கருமுத்து தியாகராசன், சேர்மன்
ஸ்ரீ வ. ராம. வள்ளியப்ப செட்டியார்
ஸ்ரீ நா. அ. அண்ணாமலை செட்டியார்
ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார்

★

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

P. S. விஸ்வநாதன்
காரியதரிசி

நாடகத் தமிழ்

திரு. பி. சம்பந்த முதலியார், B.A., B.L.

★

நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி தொன்று தொட்டு முத்தமிழ் என வழங்கப் பட்டு வருகிறது; இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவு உடைமையால் முத் தமிழ் எனப் பெயர் பெறலாயிற்று. நாடகத் தமிழ் என்று ஒரு பிரிவு தமிழ் மொழியில் இருப்பதுபோல், உலகிலுள்ள மற்றெந்த மொழிகளிலும் நாடகப் பிரிவு என்பது இல்லை. ஆகவே நாடகத் தமிழ் என் பது தமிழ்மொழி ஒன்றிற்கே உரிய சிறந்த செல்வமாகும்.

தமிழ் பேசுவதற்கும் எழுதுவதற்கும்உரிய மொழி ஆனதுமுதல் நாடகத்தமிழ் உண்டா யிருக்க வேண்டுமென்று நாம் ஒருவாறு ஊகிக்கலாம். தமிழில் மிகவும் தொன்மை யான நூல் தொல்காப்பியம் என்பதாம். அந்நூல் சுமார் 2000 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டது என்பதை மொழி ஆய்வு அறிஞர் ஒப்புக்கொள்கின்றனர். அந் நூலில் ஒரு சூத்திரத்தில் "நாடக வழக்கி னும் உலகியல் வழக்கினும்" என்கிற சொற்றொடர் வருகிறது. ஆகையால் அக் காலத்திலேயே தமிழ் நாடகம் இருந்திருக்க வேண்டுமென்று நாம் உறுதியாய்க் கூற லாம்.

அப்படி இருந்தும் அக்காலத்தில் எழுதப் பட்ட நாடகம் ஒன்றும் நமக்குக் கிடைக்க வில்லை. சிலப்பதிகாரத்தையும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையையும் காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய டாக் டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தமிழ் உலகிற்கு அச்சிட்டு வெளியிடாவிட்டால், தமிழ் நாடகங்கள் அக்காலத்தில் இருந் தனவோ என்று ஐயப்பட்டிருப்போம். மேற்கண்ட நூல்களில் நமக்குக் கிடைத் துள்ள சில விவரங்களைப்பற்றி இங்கு எழுது கிறேன்:

தொல்காப்பியர் காலத்திலேயே வள்ளி நாடகம் இருந்ததாக நாம் உறுதியாய்க் கூற லாம். தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரத் தில் "வாடா வயவர் ஏத்தும் வள்ளி" என் னும் சொற்றொடருக்கு அடியார்க்கு நல் லார் உரை எழுதுங்கால் 'வள்ளி என்பது என்னை?—வள்ளிக்கூத்து' என்றே தெளி வாய் எழுதியிருக்கிறார். ஆகவே வள்ளிக் கூத்தானது அக்காலத்தில் ஆடப்பட்டது என்பதில் ஐயமில்லை. இதன்றிப் 'பால சரிதை நாடகம்' என்னும் ஒரு நாடக மும் அக்காலத்தில் ஆடப்பட்டதாக அறிகிறோம். இது கண்ணன் பலராம ரோடும் நப்பின்னை பிராட்டியாரோடும் செய்த லீலைகளைப்பற்றிய நாடகமாம். இச் சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், ஆதி காலத்து நாடகங்களெல்லாம் மத சம்பந்தமானவை கள் என்பனவேயாம்; இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் முதல் முதலாக ஆடப்பட்ட நாடகங்கள் மதசம்பந்தமானவை என்பது கவனிக்கத்தக்கது. நமது கோயில்களின் உற்சவங்களில் பன்னிரண்டு பதின்மூன்றும் நூற்றாண்டுகளிலும் அநேக இடங்களில் ஸ்தல மகாத்மியக் கதைகளையொட்டி நாட கங்கள் ஆடப்பட்டன என்று அக்கோயில் களிலுள்ள கல்வெட்டுகளினால் நாம் அறி கிறோம். இனி அடியார்க்கு நல்லார் முதலி யோருடைய உரைகளினின்றும் பழங் காலத்து நாடகங்களைப்பற்றி நாம் அறியக் கிடக்கும் சில விஷயங்களை ஆராய்வோம்.

அக்காலத்தில் தமிழ் நாடகங்கள் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்தன என்பதை நாம் ஊகிக்கலாம்.

நாடக மேடைகள் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தவேண்டும், அவைகளின் உயரம், அகலம், நீளம் எவ்வாறு இருக்கவேண்டும், அவைகளின்மீது தூண்கள் எப்படி நாட்டப்பட்டிருக்கவேண்டும், திரைச்சீலைகள் எப்படி எப்படிக் கட்டப்படவேண்டுமென்பன போன்ற விவரங்களும், நாடகம் ஆடுபவர்களுக்கு இன்ன இடம், பின்பாட்டுப் பாடுவோர்க்கு இன்ன இடம், நாடகத்தைப் பார்க்க வரும் அரசர் முதலிய பெரியோர் உட்கார இன்னவிடம், மற்றும் சாதாரண மக்கள் உட்கார இன்னவிடம் என்பன போன்ற விவரங்களும் அந்நூல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் பற்றி இங்கு எழுத இடமில்லை ; ஓர் உதாரணத்தை மாத்திரம் எடுத்துக்கொள்கிறேன். நாடகமேடையில் விளக்குகளை அமைக்கும் போது அவைகளின் மூலமாக அருகிலிருக்கும் தூண்களின் நிழல் அரங்கத்தில் ஆடுபவர்கள்மீது விழலாகாது என்று குறிப்பிட்டிருக்கிறது. அன்றியும் ஆடவர் பெண் வேஷம் பூணுவதாலல் இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்றும் எழுதியிருக்கிறது. இக்காலத்தில் உபயோகிக்கப்படும் ' ஐப்ரோ பென்ஸில் ' என்பதைப் போலப் புருவத்திற்கும் கண்ணிற்கும் மைதீட்ட அக்காலத்திலேயே ஒரு சிறிய கருவி இருந்ததாக அறிகிறோம்.

தமிழ் நாடகமானது இவ்வாறு அக்காலத்திலே உன்னத நிலையை அடைந்திருந்தால் அக்காலத்தில் தமிழ் நாடக நூல்கள் இருந்திருக்க வேண்டுமே? அவை ஏன் பிற்காலத்தில் மறைந்து போயின? என்னும் இக்கேள்விக்கு நாம் தக்க பதில் கூறித்தான் ஆக வேண்டும். இவைகளைப்பற்றி ஆராயின், பழங்காலத்து நூல்களெல்லாம் ஓலைகளில் தான் எழுதப்பட்டன என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். நான் என் சிற்றறிவிற்கு ஏற்றபடி ஆராயப் புகுந்த போது பல அறிஞர்களை ஓலையில் எழுதப் படும் நூல் எத்தனை காலம் கெடாது நிற்கும் என்று வினவினேன். அவர்களுள் பெரும் பாலோர், எவ்வளவுதான் ஜாக்கிரதையாக நாம் ஓர் ஓலை நூலை வைத்திருந்த போதிலும், அது 150 அல்லது 200 ஆண்டுகளுக்கு மேல் நிற்காது; துகள் துகளாய்ப்போய் விடும் என்று கூறினர். ஆகவே ஒரு நூலை இவ்வரம்பிற்குள்ளாக அடிக்கடி பெயர்த்துப் புதிய சுவடிகளில் எழுதிக்கொண்டு வராவிட்டால் அந்நூல் பிற்காலத்தில் நிலைத்திருக்க முடியாது. இம்மாதிரியாகத் தொல் காப்பியம் முதலிய நூல்கள் அடிக்கடிப் பெயர்த்து எழுதப்பட்டதனால்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன என்பதற்கு ஐயமில்லை. நாடக நூல்களை அடிக்கடி பெயர்த்து எழுதுவோர் வரவரக் குறைந்து கொண்டே வந்தனர் போலும் ! அடியார்க்கு நல்லார் தம் காலத்திலேயே அகத்தியம், பரதம், மாபுராணம், பூதபுராணம் முதலிய நாடக நூல்கள் மறைந்து போனதாகக் கூறியிருக்கின்றார். அவர் காலத்தில் வழங்கியிருந்த மதிவாணன் நாடகத்தமிழ், பரத சேனாபதியம் என்னும் இரண்டு நூல்களைப்பற்றிப் பேசியிருக்கிறார். இவையிரண்டிலும் மதிவாணன் நாடகத் தமிழ் மாத்திரம் ஏதோ நமது புண்ணியவசத்தால் பிழைத்திருக்கிறது.

மேற்சொல்லிய நாடக நூல்களெல்லாம் இலக்கண நூல்களாகும். ஒன்றுவது நாடக இலக்கிய நூல் அன்று. அக்காலத்திய இலக்கிய நூல் ஒன்றும் நமக்குக் கிடைத்திலது. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறல் மரபாகும். ஆகவே, இலக்கண நூல்களிருந்தால் அவைகளுக்கு முன்பே இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும். அங்ஙனமாயின் அந்நூல்களெல்லாம் மறைந்துபோன காரணத்தை நாம் நன்றாய் ஆராயவேண்டும். இதன் முக்கிய காரணம் என் சிற்றறிவிற்குத் தோன்றுவது

என்ன வென்றால், அந்நூல்களெல்லாம் அடிக்கடிப் பெயர்த்து எழுதுபவர் இல்லாமற் போனதால் அழிந்து போயின என்பதேயாம். இப்படி இருக்கின், மற்ற மதசம்பந்தமான நூல்களும் காவியங்களும் அடிக்கடிப் பெயர்த்து எழுதப்பட்டபோது நாடக நூல்களை மட்டும் பெயர்த்து எழுதுபவர் ஏன் இல்லாமற் போயினர் என்பது கேள்வியாகும். இதற்கு என்னுடைய பதில், ஆதி காலத்தில் தமிழ் நடிகர்களும் நடிகைகளும் ஏதோ ஒருவிதமாக மதிக்கப்பட்டனர் என்றே சொல்லவேண்டும்; சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பாயிரத்தில் "நாடகமேத்தும் நாடகக்கணிகை" என்னும் சொற்றொடரை விளக்கி எழுதுங்கால் நாடகத்திற்கே ஒரு பெருமை உண்டாக்கிய நாடகக் கணிகை (மாதவி) என்று எழுதியிருக்கிறார். அதற்குப் பின்பாக வரவர நாடக மாடும் ஆண்மக்களும் பெண்டிரும் ஈன நிலையை அடைந்துகொண்டே வந்தனர் என்பதற்கு ஐயமில்லை. கடைசியாகக் கி.பி. 10-ம் நூற்றாண்டில் நாடகமே மிகுந்த கீழ் நிலையை அடைந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. அப்படி இருக்குங்கால், கீழ்ப்பட்டவர்களாக மதிக்கப்பட்ட 'கூத்தாடி'களுக்காக நாம் நாடக நூல்களை ஏன் பெயர்த்து எழுதவேண்டும் என்று கைவிட்டிருக்கக்கூடும் என்பதுதான் நாடகநூல்கள் மறைந்து போனதற்கு முக்கியமான காரணமாயிருக்கலாம்.

தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தின் கல்வெட்டு ஒன்றில், வருஷாவருஷம் ஆலயத்தின் உற்சவகாலத்தில் 'ராஜராஜேஸ்வரன்' என்னும் நாடகம் ஆடுவதற்காகத் திருவாளர் விஜயராஜேந்திர ஆசாரியனுக்கும் அவனைச் சார்ந்த நடிகர்களுக்கும் இவ்வளவு நெல் கொடுக்கவேண்டுமென்று வெட்டப்பட்டிருக்கிறது. இது போலவே, இன்னும் சில கோயில்களில் உற்சவகாலங்களில் தமிழ் நாடகங்கள் ஆடப்பட்டதாக அறிகிறோம். இதற்குப்பின் பதினான்காம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் தமிழ் நாட்டின் மீது படையெடுத்துவந்து தென்னாட்டு அரசர்களை முறியடித்துத் தென்னாட்டில் பல கோயில்களை அழித்துச் சென்றனர் என்பது சரித்திர பிரசித்தமான விஷயம். நாடெங்கும் குழப்பமாகி அல்லற்பட்டுக் கொண்டிருந்தபொழுது நாடகங்களை நடிப்பவர் யார்? அவைகளை ஆதரிப்பவர் யார்? ஒரு குடியானவன் தான் விதைத்த தானியத்தின் பலனைத் தான் அடைவானே இல்லையோ என்று திகில் அடைந்திருக்கும் காலத்தில் கூத்து முதலிய விநோதங்களின் மீது யாருடைய மனம் செல்லும்? ஆகவே, படிப்படியாகக்கீழ்நிலைஅடைந்துகொண்டே வந்த தமிழ் நாடகமானது தெருக்கூத்தாய் முடிந்தது. இத் தெருக்கூத்துகளைப்பற்றி உங்களுக்கு நான் அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. இங்கு ஒரே உதாரணத்தை மாத்திரம் எழுதுகிறேன். பல வருடங்களுக்கு முன் தென்னாட்டு ஜமீன்தார் ஒருவர் கலியாணத்திற்கு நான் போயிருந்த சமயத்தில் ஒருநாள் இரவு பக்கத்துக் கிராமத்தில் தமிழ் நாடகமொன்று ஆடப்போவதாகக் கேள்விப்பட்டு அங்குப் போயிருந்தேன். ஏதோ ஜமீன்தாரின் சிநேகிதர் வந்திருக்கிறாரேயென்று நடிகர்களெல்லாம் வேஷம் பூண்டுவந்து என்னைப் பார்த்து வணங்கினர். அப்போது நீங்கள் என்ன நாடகம் இன்று இரவு ஆடப் போகிறீர்கள்? என்று நான் கேட்டதற்கு அவர்கள் தந்த பதில் என்னை வாரித் தூக்கிப் போட்டது. அவர்களுடைய பதிலை அப்படியே எழுதுகிறேன். "எங்களுக்கு நாலைந்து நாடகங்கள் ஆடத்தெரியும்; திரௌபதி துகில் உரிவு, அபிமன்யு கல்யாணம், ஸ்திரி சாகஸம், மார்க்கண்டேயர் நாடகம்—இவைகளில் நீங்கள் எதை ஆடச் சொல்கிறீர்களோ அதை ஆடுகிறோம்" என்றார்கள். ஒரே ஆடையில் மேற் சொன்ன நாடகங்கள் எதையும் ஆடும்படியான சக்தி அவர்களுக்கு இருந்தது என்றால் அக்காலத்தில் தமிழ் நாடகம் எந்த நிலை

அடைந்திருந்தது என்று நான் கூறவேண்டியதில்லை. இரவெல்லாம் ஒரு நாடகத்தை ஆடிவிட்டு மறுநாட் காலையில் நடிகர்களெல்லாம் அவர்கள் ஆடிய உடையிலேயே அந்த நாட்டுப்புறத்தின் வீதிதோறும் சென்று நெல் அரிசி முதலியவைகளையும் சொற்பக் காசுகளையும் யாசித்தனர். சுமார் 60 வருடங்களுக்கு முன் தமிழ் நாடகத்தின் கதி இதுவாயிருந்தது.

தமிழ் நாடகம் இந்த நிலையிலிருந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்தி ஜனங்களின் மதிப்பைப் பெறுவதற்கு வேண்டிய முறையில் வளர ஆரம்பித்த கதையை இனி எழுதுகிறேன்.

ஆயினும் இதற்கிடையில் தமிழ் நாடகத்தைப் பற்றிச் சில சமஸ்கிருத அபிமானிகள் ஏளனமாகக் கூறும் ஒரு விஷயத்தை மறுக்க விரும்புகிறேன். அவர்கள் சொல்லுவதாவது :—

ஆதியில் தமிழ்நாடகமே கிடையாது. சமஸ்கிருத மொழியின் தொடர்பு தமிழ் நாட்டிற்குக் கிட்டிய பிறகுதான் தமிழ் நாடகங்கள் ஆரம்பிக்கப்பட்டன—என்பதாம். இது முற்றிலும் தவறான கருத்து என்று இதை நான் மறுக்கவேண்டும். இவ்வாறு கூறுவது எனக்குச் சம்ஸ்கிருத மொழியின் மீது உள்ள வெறுப்பினால் என்று ஒருவரும் எண்ணக்கூடாது என்று நான் வேண்டிக் கொள்கிறேன். சம்ஸ்கிருத மொழியின் மீது எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. நான் பெரியவனான பிறகு 14 ஆண்டுகள் ஒரு சம்ஸ்கிருத ஆசிரியரை வைத்துக் கொண்டு அம்மொழியைக் கற்றேன்; முக்கியமாகச் சாகுந்தலம் முதலிய சிறந்த நாடகங்களைப் படித்து அந்நாடகங்களிலுள்ள பல சிறப்புக்களை அறிந்தேன். ஆயினும், 'தமிழ் நாடகமானது சம்ஸ்கிருத நாடகத்திலிருந்து வந்தது; அதைப் பார்த்துக் கற்றுக்கொண்டது' என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். தமிழ் நாடகமானது தானுய்த் தமிழ்மொழியிலேயே உற்பத்தியானது என்பது என் திடமான கொள்கை. இதற்குப் பல காரணங்களை 'நாடகத்தமிழ்' என்னும் சில வருடங்களுக்குமுன் நான் அச்சிட்ட ஒரு நூலில் விவரித்துக் கூறியிருக்கிறேன்; அவைகளையெல்லாம் இங்கு எழுதுவது என்நூல் இடமுமில்லை; காலமுமில்லை. அவற்றுள் சில வற்றை மட்டும் இங்கு எழுதுகிறேன். சம்ஸ்கிருத நாடகத்தில் அங்கங்கள் எனும் பிரிவு உண்டு. கதாநாயகன் இன்னின்ன குணங்களையுடையவனை யிருக்கவேண்டும் என்ற நியதியுண்டு. அவர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள்; கதாநாயகிகளை மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். இவைகளெல்லாம் தமிழ் நாடகத்தில் இல்லை. சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் நாடகம் உண்டாயிருந்தால் இவைகளெல்லாம் இருக்க வேண்டுமல்லவா? அன்றியும் இன்னொரு முக்கிய வேறுபாட்டைப் பற்றி எழுதுகிறேன். சமஸ்கிருத நாடகத்தின் துவக்கத்தில் சூத்திரதாரன் வருவான் தமிழ் நாடகத்தில் இந்தச் சூத்திரதாரன் இல்லை. ஆனல் கட்டியக்காரன் என்று ஒரு பாத்திரம் மட்டும் உண்டு. சம்ஸ்கிருத அபிமானிகள் கட்டியக்காரன்தான் சூத்திரதாரன் என்று கூறுகிறார்கள். இது முற்றிலும் தவறாகும். சூத்திரதாரன் சம்ஸ்கிருத நாடகத்தில் முதலில் தோன்றி நாடகத்தை ஆரம்பித்துவிட்டு மறைகிறான். தமிழ் நாடகக் கட்டியக்காரனோ நாடக ஆரம்பமுதல் கடைசிவரையில் மேடையின்மீது இருந்துகொண்டு ஒவ்வொரு புதுப் பாத்திரம் வரும்போதெல்லாம் அதைத் தெரிவிக்கவேண்டியவனாயிருக்கிறான். இன்னும் பல வித்தியாசங்களுமுண்டு. அவைகளைப் பற்றி யெல்லாம் நான் இச் சிறு வியாசத்தில் கூறுவதற்கில்லை. நாடக அபிமானிகள் அவைகளைப் பற்றியெல்லாம் நாடகத்தமிழ் என்னும் மேற்குறித்த எனது புத்தகத்தில் படித்துத் தெரிந்துகொள்ளும்படி வேண்டுகிறேன்.

இனித் தமிழ் நாடகமானது மிகவும் இழிந்த நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கடைத்தேறி முன்னுக்கு வந்ததைப் பற்றி எழுதுகிறேன். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பாக பூனாவிலிருந்து ஒரு மஹாராஷ்டிர நாடகக் கம்பெனியார் தஞ்சாவூருக்கு வந்து சில நாடகங்களை நடத்தினர்கள். அப்போது அங்கிருந்த கோவிந்தசாமி ராவ் என்ற மஹராஷ்டிரர் அந்தக் கம்பெனியாரைப்போல் தமிழில் நாடகங்கள் நடத்த வேண்டுமென்று தீர்மானித்துத் தஞ்சாவூரிலிருந்த சில மஹராஷ்டிரர்களை ஒருங்கு சேர்த்து அவர்களுக்குத் தாம் அறிந்தபடி நாடகமாடக் கற்பித்து, "மனமோகன நாடகக் கம்பெனி" எனும் ஒரு நாடகக் கம்பெனி ஏற்படுத்தி முதலில் தஞ்சாவூரில் நடத்தினர். அங்கே இவர்கள் நாடகத்திற்குக் கொஞ்சம் ஆதரவு கிட்டவே, அந்தக் கம்பெனியைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டு வந்து இங்குத் தமிழில் நாடகங்களைச் செங்காங்கடைக் கொட்டகையில் நடத்தினர். ஏறக்குறைய இதே சமயத்தில் பல்லாரியில் வக்கீலாயிருந்த கிருஷ்ணமாசாரலு என்பவர் சில தெலுங்கு நாடகங்களை எழுதி, பல்லாரியில் முதலில் ஆடிவிட்டுப் பிறகு சென்னையில் 1891-வது வருஷம் மூன்று நாடகங்களை நடத்தினர். அவைகளில் கடைசி நாடகத்தைப் பார்த்த நான், தமிழ் நாடகங்களை எழுதி அவைகளில் நடிக்க வேண்டுமென்று ஆசை கொண்டவனுய் அவ்வருஷம் சுகுண விலாச சபை என்னும் தமிழ் நாடக சபையை எனது பால்ய நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து வைத்தேன். இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளாகச் சென்னையில் பல "அமெச்சூர்" நாடக சபைகள் (அதாவது வேடிக்கைக்காக நாடகங்களை நடத்தும் சபை) பரவலாயின. இவைகள் மூலமாகத் தமிழ் நாடகம் புத்துயிர்பெற்றது என்றே சொல்ல வேண்டும். இச்சபைகள் மூலமாகத் தமிழ் நாடகமானது பலவிதங்களில் சீர்திருத்தப்பட்டது. அவைகளில் முக்கியமான சில வற்றை இங்கு எழுதுகிறேன். இரவெல்லாம் ஆடும் நாடகங்கள் போய், இரவு 9 மணிக்கு ஆரம்பித்து நாடகங்களைச் சுமார் 4, 5 மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்பது வழக்கத்தில் வந்தது. ஒவ்வொரு காட்சியிலும் காட்சிக்குத் தக்கபடி திரைகளும் பக்கபடுதாக்களும் மேல் ஜாலர்களும் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு நாடகத்திலும் கதையின் காலதேச வர்த்தமானப்படி நடிகர்களும், நடிகைகளும் ஆடை ஆபரணங்களைப் பூணும் வழக்கம் கொண்டு வரப்பட்டது. சங்கீதமானது தக்க இடங்களில் தான் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது விதியாயிற்று; பின்பாட்டு அடியோடு ஒழிக்கப்பட்டது. ஜாலர்கள், தாளங்கள் சங்கீதத்தினின்றும் விலக்கப்பட்டன. பக்க வாத்தியக்காரர்கள் பக்க படுதாக்களில் இருந்து மறைந்தே வாசிக்க வேண்டும் என்பது வழக்கமாயிற்று; விளக்குகளை மேடையில் எங்கே பார்த்தாலும் வைப்பதும் கூரையினின்றும் தொங்க விடுவதும் முற்றிலும் நீக்கப்பட்டது. இன்னும் இப்படிப்பட்ட பல சீர்திருத்தங்களை 'அமெச்சூர்' சபைகள் வழக்கத்தில் கொண்டுவர, அவைகளைப் பார்த்து ஜீவனத்திற்காக நாடகங்கள் ஆடும் சபைகளும் விருத்தி அடைந்தன.

பல புதிய நாடகங்கள் எழுதப்பட்டன. மேனாட்டு ஷேக்ஸ்பியர் முதலிய மகா நாடகக் கவிகளின் நாடகங்கள் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட்டன. சம்ஸ்கிருத நாடகங்களில் சிலவும் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ் அரங்கு ஏறின. இவ்வாறு தமிழ் நாடகங்கள் தலையெடுத்து முன்னேற்றம் அடையும் காலத்தில் திடீரென்று 'வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்தது' என்பதைப் போல் பேசும் படங்கள் நமது தேசத்தில் புகுந்து தமிழ் நாடகத்தையே அமிழ்த்திவிட்டன என்பது எல்லா நாடக அபிமானிகளும் அறிந்த விஷயமே. அமிழ்த்தின என்பதைக் கவனிக்கவும். அழித்தன என்று நான் கூறவில்லை. இதற்கு முக்கிய

காரணம் சினிமாக்கள் எவ்வளவுதான் பிர பலம் அடைந்தபோதிலும் அவைகள் தமிழ் நாடகங்களை அடியுடன் அழிக்க முடியாது என்பது எனது கண்டிப்பான கருத்து. இது என் னு டை ய கருத்துமட்டும் அன்று; ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் உள்ள கலைவாணர்களுடைய கருத்தும் ஆகும். அவர்கள் கூறுவது என்னவென்றால் நடிகர்களின் படங்களைத் திரையில் பார்ப்பதைவிட, அவர்கள் மேடை யின் மீது நடிக்கும்போது நேராகப் பார்ப்ப தில் 'ருசி' நாடகாபிமானிகளுக்கு எப் பொழுதும் குன்றாது என்பதாம்.

கடைசியாகத் தமிழ் நாடகத்திற்கு இப் பொழுது நல்லகாலம் வந்துவிட்டது என்றே கூற வேண்டும். வெள்ளைக்காரர் கள் நம்மை ஆண்ட காலத்தில் அவர்கள் தமிழ் முதலிய தேச மொழி நாடகங்களைச் சிறிதும் கவனிக்கவில்லை என்பது எல்லோ ரும்அறிந்த விஷயமே. அவையெல்லாம் மாறி நமது நாட்டை நாமே ஆளும் உரிமை கிடைத்த பிறகு நமது அரசியலார் தேச மொழி நாடகங்களுக்குப் பலவிதத்தில் ஊக்கமளித்துக் கைகொடுத்துத் தூக்கஆரம் பித்திருக்கின்றனர் என்று நான் சந்தோஷத் துடன் கூறுகிறேன். நம்மை ஆளும் ஜன நாயகத் தலைவர்கள் முக்கிய பட்டணங் களில் பொருளுதவி செய்து நாட்டு நாடகங் களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையில் ஏற்படுத்த ஆரம்பித்திருக் கின்றனர்; அன்றியும் சிறந்த நாடகங் களுக்குப் போட்டிப் பந்தயம் வைத்து முத லாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங் களுக்குப் பரிசளிக்கும் வழக்கத்தை ஆரம் பித்திருக்கின்றனர்; மேலும் சிறந்த நடிகர் க ளு க் கு ப் பொற்பதக்கங்கள் ஆண்டு தோறும் அளித்து அவர்களை உற்சாகப் படுத்த முன் வந்திருக்கின்றனர்; இதுவரை யில் தமிழ் நாடகங்களை அமிழ்த்தி வருத்திக் கொண்டிருந்த'வினைதவரி'க் கட்டணத்தை அறவே நீக்கிவிட்டனர். இப்படிச்சொல்லிக் கொண்டு போனால் விரியும். ஆகவே இதை நிறுத்தித் தமிழ் நாடகங்களுக்கு நற்காலம் வந்த இத்தருணத்தில் அரசாங்கத்தாரும் நாடக அபிமானிகளும் என்னென்ன விதங் களில் அவைகளை முன்னுக்குக் கொண்டு வரலாம் என்பதைப் பற்றிச் சில வாக்கியங் கள் எழுதி இச்சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

முதலாவதாகத் தமிழ் நாடகம் இன்னும் விருத்தி அடையாததற்கு முக்கியமான கார ணம் என்னவென்றால் இப்போது நாடகம் ஆடுவதற்கு மேடைகள் போதுமானபடி இல்லாதிருப்பதேயாம். பழைய நாடக மேடைகளெல்லாம் எங்குப் பார்த்தாலும் சினிமாத் தியேட்டர்களாக மாற்றப்பட் டன. ஆகவே முக்கியமாகப் பெரிய பட்ட ணங்களில் எல்லாம் நாடகம் ஆடுவதற்கு என்றே பெரிய நாடக சாலைகள் கட்டப்பட வேண்டும். தமிழ் நாட்டில் 30,000 ஜனத் தொகைக்கு மேற்பட்ட ஊர்கள் ஒவ் வொன்றிலும் ஒரு நாடக சாலையாவது இருக்க வேண்டும். இப்படிக் கட்டுவதற்கு நமது அரசாங்கத்தார் இலவசமாக நிலங்களை வழங்க வேண்டும். அன்றியும் கட்டிடங் களுக்குப் பொருளுதவியும் செய்ய வேண் டும். மேலும் இந்தக் கட்டிடங்களைச் சினி மாக்களுக்கு விடக்கூடாது என்ற சட்டம் இருக்க வேண்டும்—சினிமாக்களுக்குவிட ஆரம்பித்தாலோ முடிவில் ஒட்டகத்திற்கு மூக்கு நுழைக்கக் கூடாரத்தில் இடம் கொடுத்த எஜமான் கதை போலாகும்.

இரண்டாவதாக, ஆங்காங்கு நாடகக் கலை கற்பிக்கப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட வேண்டும். அவைகளில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் நடிப்புக் கலை கற்பிக்க நிபு ணர்களான நடிகர்களை ஏற்படுத்த வேண் டும். இரண்டு வருடத்திற்கு ஒருமுறை அங் குப் பயில்பவர்களைச் சோதித்துத் தேர்பவர் களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்க வேண்டும்.

மூன்றாவதாகத் தமிழ் நாட்டில் உள்ள சிறந்த நடிகர்களை வட இந்தியாவிற்கும்

இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா முதலியதேசங்களுக்கும் அனுப்பி அங்குள்ள சிறந்த நடிகர்கள் எப்படி நடிக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கற்கச் செய்ய வேண்டும். நான்காவதாக, மற்ற மொழிகளில் உள்ள சிறந்த நாடகங்களைத் தமிழில் தக்க வர்களைக்கொண்டு மொழி பெயர்த்துத் தமிழ் அரங்கு ஏற்ற வேண்டும். ஐந்தாவதாக, முதிர்வயது அடைந்தபடியாலோ அல்லது வியாதியிலல் பீடிக்கப்பட்டதனாலோ நடிப் பதற்கு இயலாதபடி இருக்கும் நடிகர் களுக்கு ஜீவனும்சமாகவோ அல்லது உப காரச் சம்பளமாகவோ பணம் கொடுக்க அர சாங்கத்தார் ஒரு தனி நிதி ஏற்படுத்த வேண்டும். கடைசியாக, ஆடவரும் பெண் டிரும் நாடகமாடுவதை இழிதொழிலாகக் கருதாது அதையே தங்கள் ஜீவனோபாய மான தொழிலாகக் கொள்ள வேண்டும். குடும்பப்பெண்கள் நாடகமேடையில் ஆடும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ வேண்டும். இதில் சில கஷ்டங்கள் இருக் கின்றன என்பதை நான் அறிவேன்; முத லில் கணவனும் மனைவியும் கதாநாயகனுக வும் கதாநாயகியாகவும் ஆடலாம். சகோ தரர்களும் சகோதரிகளும் அவ்வாறே செய்ய லாம். நெருங்கிய பந்துக்களும் சிநேகிதர் களும் ஒன்றுய் நடிக்கலாம். இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாகத் திரிந்து வந்தால் இக்காலத்தில் ஐரோப்பா முதலிய கண்டங் களில் நற்குல மாதர்கள் ஆடும் வழக்க மானது நமது நாட்டிலும் பரவும் என்ப தற்குச் சந்தேகமில்லை. நாடகத் தமிழ் வாழ்க!



மதுரையின் பெருமைக்கு பாத்திரமான மகத்தான ஹோட்டல்!

★

நீங்கள் தங்குவதற்கு வசதியான அறை களும், நல்ல ருசிகர மான சிற்றுண்டி, சாப்பாடும் முக மலர்ந்த உபசரிப் புடன் கிடைக்கும்.

★

"உடிப்பி போர்டிங் லாட்ஜ்"

(போடி ஜமீன் பங்களா)

159, மேலமாசி வீதி, மதுரை

தமிழ்த் திரைப் படங்கள்

கலைவாணர் திரு. N. S. கிருஷ்ணன்

★

தமிழ்ப்பட உலகின் நிலைமை இன்று பரிதாபப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறதே தவிர, பாராட்டும் அளவுக்கு இல்லை; காரணங்கள் குறித்துப் புத்தகமே எழுதலாம்; கட்டுரையில் சுருக்கித் தருகிறேன்.


கலையுலகில் பிரவேசிப்பவர்களின் எண்ணம் எப்போது, பணத்தை மட்டுமே நாடிச் செயல் புரிகிறதோ, அப்போது கலை நிச்சயமாகப் பாதிக்கப் படுகிறது; இப்படித்தான் பாதிக்கப்பட்டு வருகிறது தமிழ்த் திரைப்படவுலகம்.

தமிழ்ப்படமெடுக்க வேண்டிய பெரியவர்கள் பிறமொழி களில் எல்லாம் லட்சம் லட்சமாகப் பணத்தைக் கொட்டிப் படம் எடுக்கிறார்கள்; அப்போது தமிழ்க் கலை கவனிப்பாரற்றுச் சாய் கிறது. தமிழ் நலிகிறது—தமிழ் நாடு நலிகிறது—தொடர்ந்து தமிழர்களும் நலிய நேரிடுகிறது! முதலில் இந்த நிலை மாற வேண்டும்.

இரண்டாவதாக, கலையுலகில் உள்ளவர்கள் யாவரும் தங்களை ஒரே குடும்பத்தார் என்று எண்ணிப் பழகவேண்டும். அந்த நிலை இன்றைய தமிழ்ப்பட உலகில் இல்லவே இல்லை. ஒருவரை ஒருவர் பெரும்பாலும், உதட்டளவில்தான் நேசிக் கிறார்கள். உள்ளமெலாம் பொறுமை–போட்டி இவை போன் றவை. இவ்வாறு உள்ளத்தைத் தீய சக்திகள் ஆட்கொண்டு விட்டால், அங்கே கலை மணம் ஏது?

மூன்றாவதாக, நம்மிடையில் நல்ல விமர்சகர்கள் இல்லை. ஓரிருவர் இருந்தாலும் ஒதுங்கி வாழ்கிறார்கள்; எதையும் பொரு ளுக்காகப் பாராட்டி விமர்சனம் செய்யத் துணிந்து விடுகிறார் கள்; தனக்குப் பிடிக்காதவர்களின் கலைப் பணிகளைத் தாக்கி மகிழ்கிறார்கள். நல்ல விமர்சகன், தானும் வாழ்வான்; நாட் டையும் வாழவைப்பான்; பாரபட்ச விமர்சகன், தன்னுடன் நாட்டையும் நாளடைவில் வீழ்த்திக்கொள்வான்!

இந்தக் குறைகளெல்லாம் நீக்கப் பெற்றால், தமிழ்த் திரைப் படங்கள் உலக அரங்கத்தை அழகு செய்யும் என்பது என் நம்பிக்கை. அந்த அளவுக்கு, நம்மிடம் ஆற்றல் இருக்கிறது. தமிழ்க் கலை வரலாற்றை மேலெழுந்த வாரியாகப் படித்தவன் கூட, இதை ஒப்புக்கொள்ளுவான்!



தமிழர் சமூக வாழ்க்கை

திரு. அர. சு. நாராயணசாமி நாயுடு, எம். ஏ.
செந்திக் குமார நாடார் கல்லூரி, விருதுநகர்

★

தமிழர் சமூக வாழ்க்கையின் பல கூறுகளைப் பற்றி யறிஞர் பலர் ஆய்ந்தெழுதுகின்றனர். ஆதலின் தலைப்புப் பெரிதாகத் தோன்றினும் சில கூறுகளைப் பற்றிச் சில கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாம்.

I

தெளிவாக அறிந்துகொள்ள முடியாத மிகப் பழங்காலத்தே தமிழர் தமிழ்நாட்டெல்லையுளகப்படாத பல நில மக்கட் சமூகங்களொடு ஓரளவு தொடர்பு கொண்டுவிட்டனர். ஈழ நாட்டார், வடுக நாட்டார், வடவடுகராகிய ஆரியர், மிலேச்சர், யவனர் இவர்களைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். தமிழ்நாடு கடல்கடந்து பல நாடுகளொடும் வணிகத் தொடர்புடையதாயிருந்தது. பிறபல நாட்டார் இந்நாட்டில் வந்து வதிவாராயினர்.

தமிழ் மூவேந்தர் திறம்படப் 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' ஆய எல்லா முடையராய் அரசோச்சிப் பிறநாடுகளிலும் நன்கறியப்பட்ட காலமே கி. மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னதாதல் வேண்டுமென்பது அசோகன் கற்றூண்களாலும் காரவேலனது ஹாதிகும்பக் கல்வெட்டாலும் அறியப்படுவதொன்று.

இன்று நமக்குக் கிடைத்திருப்பனவாய பழைய இலக்கண விலக்கியங்களால் இந்நிலையுடையராயிருந்தனர் தமிழர் என்பது தெளிவாகிறது.

இப்பழ நூல்களையாய்ந்தால் இதனினும் முன்னைய நிலையும் ஓரளவு அறியப்படுதலாம்.

அகத்திணை பற்றிய இலக்கணக் குறிப்புக்களால் ஐந்திணைப் பிரிவும் அவ்வத்திணைக்குரிய முதலுரிகருப் பொருள்களுமறிகிறோம். கருப் பொருளில் ஒரு பகுதியாக மக்களைக் கூறுங்கால், தலைமக்கள் நில மக்களென்ற பகுதியினரை யறிகிறோம். ஆயினும் அவ்வத்திணைக்குரிய அரசராவாரைப்பற்றி யேது மறிந்திலோம்.

நாட்டு நடப்பு மாறிக் காலப் போக்கிலமையினும் அது நூலகத்திடம் பெறல் மிகத் தாழ்த்தேயாம்.

தமிழ்நாடு சிறுசிறு கூறுகப் பிரிந்து அவ்வக் கூற்றிலுள்ள பெரும்பான்மையான மக்களின் தலைவரே சாதித் தலைவராக அரசோச்சிய காலத்தை யிலக்கணக் குறிப்புகளறிவிப்பனவாகலாம். முடியுங் குடையுமிலராய்ச் சாதித் தலைவர்களாய் மழவர் கோமான், களவர் கோமான் முதலியோர் நாட்டுத் தலைவராயாண்டமையைச் சங்க நூல்களாலும் அறிகிறோம்.

இவ்வாறு மழவர், களவர் முதலிய பல சாதி அல்லது குடியினர் தத்தங் குடிக்குத் தனியாட்சி கொண்டு விளங்கிய நெடுங் காலத்தின் பின்னரே அவர்கள் குடியாட்சியைச் சிறுகச் சிறுகத் தேய்த்து முடிவேந்தர் கோலோச்சும் நிலை முதிர்ந்திருக்கும்.

சங்க நூல்களாலறியப்படும் வேளிர் முதலியோருடைய ஆட்சிக் கூறுகளைத் தமிழ்நாட்டுப் படத்திற் குறித்து நோக்கின் போக்குவரவுக்கு வசதியில்லாத மக்கள்

நிலைத்துள்ள கோடி கொடங்குகளில் கி. பி. நான்காம் நூற்றாண்டுவரை இக்குடியாட்சிகள் நிலைத்து வலுவொடு திகழ்ந்தமை பெறப்படும்.

எனவே தமிழர் சமூகம் முதலில் குடித் தலைவரது ஆட்சியுள் நின்று,பின்னர்க் குடித் தலைவர், முடியரசர் இவ்விருவராலும் ஆளப் பெற்றுக் காலப் போக்கில் வேத்தாட்சிக் குட்பட்டமையைக் காண்பதற்கு இதுவரை கூறியவை யிடந்தரலாம்.

II

ஆட்சிவகை இவ்வாறு மாறி வளர்ந்தமை போன்றே சாதிப் பிரிவுகளும் வளர்ச்சியுற் றிருக்கலாம்.

அகத்திணை மக்களாகப் பார்ப்பார்,அரசர், வணிகர், வேளாளரிவர் குறிக்கப்பட்டிலர். எனினும், தொல்காப்பியத்திலே இவர்களைப் பற்றிய குறிப்புக்களுள்ளன.

வளவு, சுற்று என்று தமிழ்மக்கள் தங் கள் குடியிருப்புக்கும் பெயர் தந்துள்ளனர். பெரிதாக வளைத்துக் கட்டப்பட்டு ஒரு குடி யினர் வாழுமிடமே வளவெனப்பட்டது போலும். ஒருவனைச் சுற்றிலும் வதியும் இயல்பினர் அவன் சுற்றமே போலும். இவ் வாருன தனிநிலை மாறிப் பொருள் தேடல், இடம் நாடல் முதலிய காரணங்களால் சமூ கம் சார்நிலை பெற்றுப் பெருகியபோது, சில தொழில்களிற் சில கூட்டங்கள் திறன் பெற்றேராய்த் தனிநிலை பெற்றிருப்பர்.

அந்நிலையிற் பழநூல்களிற் பாணன், பறையன், பொருநன், மறவன் என்ற தொழிற்றிறக் கூட்டங்களைக் காண்கி றோம். அவர் தம்முள்ளே கொள்வன கொடுப்பனவாய உறவால் தனிச்சாதியினரா யினர். வடவாரியர் தொடர்பிற்றான் பார்ப்ப னர் முதலிய பிரிவுகள் இங்கே கொள்ளப் பட்டிருக்கவேண்டும். சங்க நூல்களில் பார்ப்பனரைப்பற்றிய குறிப்புக்கள் அவர் கள் இந் நாட்டிற் குடியேறி இந் நாட்டுப் பழக்க வழக்க மரபுகளில் முழுத் தோய்வு பெருதாராகவே காட்டுகின்றன.

'நால்வேத நெறி' யூபம் நட்டு வேள்வி செய்தல் முதலியன பிறர் கலப்பாற்றமிழர் சமூகமறிந்தபோதும் மேற்கொண்டபோ தமே 'நால் வருண' வெண்ணமும் வளர்ந் திருக்கும். சங்கப் பழம் பாடல்களில் இந் நிலையிந் நாட்டில் நுழைந்தமை குறிக்கப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நால் வருணங்களும் அவற்றுள் முதலது இரண்டாமது மூன்று மது முதலிய தெளிவான குறிப்புக்களுங் காண்கிறோம். எனவே, கி. பி. ஆறும் நூற்றாண்டளவில் 'நால் வருண'ப் பகுப்பு தெளிவான உருப் பெற்றுவிட்டது நம் நாட்டிலெனக் கொள்ளலாம்.

வலங்கை யிடங்கைச் சாதிகள், அநு லோமர் பிரதிலோமர் பிரிவுகள் முதலியன வும் பத்தாம் நூற்றாண்டுமுதலறியப்படு வனவாம்.

ஒரு கூற்றிலே யுறைந்த மக்கள் ஒரு சாதி யினராயிருந்தது மாறிப் பலபட விரிந்து பல் வகை யுயர்வு தாழ்வுகளொடு சமூகங் காட்சி யளிக்கத் தொடங்கிற்றுப் பத்தாம் நூற்றாண்டில்.

அதன்பின் தெலுங்கர், கன்னடர் முதலி யோர் நாட்டிற் பல்கினர். புதிய பிரிவுகள் வளர்ந்தன. இன்றே எண்ண முடியாத பல சாதிகளாகத் தமிழர் சமூகம் பிரிந்து கிடக்கிறது.

முகம்மதியர் கிறிஸ்தவர் முதலியோர் தொடர்பும் அதன்முன்பே ஜைன பௌத்த மத நுழைவும் பிற்காலத்தில் மேலைப் புலக் கருத்துக்களின் அறிவுமாகிய இவை பரவி யிச் சாதிகளின் பிரிவுக் கொடுமையைத் தலைதட்டி வைத்துள்ளன.

தமிழ்நாடு காலப்போக்கில் விளைந்த அறி வியல் வளர்ச்சியாலும் வேறு பல மாறுதல் களாலும் நிலப்பரப்பு மொழிவகை யிவை

தேய்ந்து ஓரில்லமெனத் தோற்றமளிக்கு மிக்காலம் தமிழ ரெல்லோரும் ஒரே சாதி யினரென்று கொள்ளத் தக்க பெருநிலை யினைச் சிறுகச்சிறுக வளர்த்தே தீருமென நம்பலாம்.

III

பாண்டிய நாட்டிலே சங்கங்கள் உயர்ந் தனவென ஒரு நம்பிக்கை தமிழரெல்லோ ரிடையும் பரவியுள்ளது. வேந்தரும் வேளி ரும் கற்றுத் துறைபோய புலவர்களைச் சுற்ற மெனப் பேணியமை பழநூல்கள் காட்டும். இசையுங் கூத்தும் வல்ல பாணர் பொருநரி வரும் பெருமதிப்புக் குரியராய் வாழ்ந்தமை யும் அந்நூல்களா லறியலாம்.

இந்நாட்டு மக்களது கல்விநிலையைப் பற் றிக் கருதுவோம்.

சங்க வரலாறு, இலக்கண நூற்பாயிரங் களிலே கூறப்படும் ஆசிரியரிலக்கணம், மாணவரிலக்கணம் இவற்றை நோக்கின் தமி ழர் சமூகம் கல்வியறிவு பெற்றுத் தழைத்த தொன்றே யென வெண்ணலாம். மதுரைக் கணக்காயனர் முதலிய பெயர்களாலும், இறையனாரகப் பொருளுரை ஆசிரியர் மாண வர்க் குரைத்து வழிவழியாக வந்து பின்ன ரெழுதப்பெற்ற தென்பது கொண்டும், 'கந்தினைய னையவர்களை தெரிகழகங்' கள் பற்றி நம் பெரும் புலவர்கள் குறிப்பது கொண்டும் தமிழர் கல்வி கற்று ஆராய்ச்சி யுடையராயிருந்தன ரெனலாம். கல்வியின் பெருமையையும் கற்கவேண்டுவதன் இன்றி யமையாமையையும் குறளேயன்றி வேறு சில சங்கப் பாட்டுகளுங் கூறுகின்றன.

எனினும், பழநூல்கள் தவிரப் பிற சான் றுகளெல்லாம் நம்மை வேறொரு வழியில் எண்ணத் தூண்டுகின்றன.

கி. பி. ஆரும் நூற்றாண்டு வரை தமிழ்க் கல்வெட்டுக்கள் காணக் கிடைத்தில. தமிழ் நாட்டிற் காணப்படும் பழைய குகைக் கல் வெட்டுக்கள் பிராமி யெழுத்தி லெழுதப்பட் டுள்ளன. இவையும் பெரும்பாலும் ஜைன பௌத்தச் சார்பான குறிப்புக்களையே உடையன.

ஜைனம் பௌத்தம் வேதநெறியாகிய இவை தமிழர் சமூகத்திற் பரவியபின், தமிழ் நாட்டில் சமஸ்கிருதக் கல்வி பற்றியே பல குறிப்புக்களுள்ளன. தமிழிலக்கண இலக் கியப் புலமையூட்டும் பள்ளிகளைப் பற்றி யெதுவுந் தெரிந்திலது.

இத்தகைய மோகந் தமிழர் சமூகத்திலேற் படக் காரணமென்ன வென்பதை யறிஞர் கள் ஆராயவேண்டும். காரண மெதுவாயி னும் தமிழர் சமூகத்தின் தனிநிலையை-பெரு நிலையை இக்கல்வி யேற்பாட்டுக் குறைபாடு குறைத்த தென்பதி லையமில்லை.

'நால் வருணப் பிரிவு' நமக்கு மேற்றதே யென்று கொண்டபின் தமிழர் முதல் வரு ணத்தார்க்கே கற்கு முரிமையையும் விட்டுக் கைகட்டி நின்றனர் போலும். கல்வி யேற் பாடுகளில் இருந்த குறையையும் எதிர்த்துக் கம்பர், சேக்கிழார், செயங்கொண்டார், புகழேந்தி போன்ற பெரும்புலவர் இடைக் காலத்து விளங்கியமை தமிழர் சமூகக் கல்வி யவாவின் உறுதியையே காட்டத் தக்க சான்று போலும்.

தமிழர் சமூகத்தில் மேற்படிகளில் நின் றோர் மட்டுமன்றிக் கீழ்ப்படியினருந்தங் கொள்கைகளை யறிய வேண்டுமென்று ஜைன பௌத்த வைதிகர்கள் கருதிய காலத்தேதான் அக்கொள்கைகள் நிரம்பிய தமிழ் நூல்கள் வெளிவரலாயின.

காஞ்சியிலே கடிகையிருந்தது. கி. பி. நான்காம் நூற்றாண்டிலேயே அது விளங்கி யமை தெரிகிறது. அங்கே பார்ப்பனரே வேத முதலியன கற்றனர்.

காவேரிப்பாக்கத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வைணவப் பிராமணர் படிப் புக்கு வசதியளிக்கும் மடமிருந்தது.

பதினென்றாம் நூற்றாண்டில் நாகைக் கடிகை ஆசிரியர் பலரையுடையதாய் மாண

வர் பலருக்கு உண்டியுமுறையுளு முதவி வேத சாத்திரக் கல்வியளித்தது. இந்நூற் றாண்டில் இம்முறையிலமைந்த படிப்பிடங் கள் எண்ணூயிரம், திருபுவனி,திருமுக்கூடல் முதலிய இடங்களிலும் அமைந்திருந்தன. திருவாடுதுறையில் சம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத நூற் கல்வி கற்பிக்கும் பள்ளி யொன்றிருந்தது.

தமிழ் மன்னர் இப்பள்ளிகட்கு இறையிலி யாக நில முதவியதோடு வேறு பலவகையில் ஊக்கினர்.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையில் மதம் தத்துவமிவை பற்றிப் பத்தாயிரம் மாணவர்கள் பயின்று வந்தனராம். எல் லோரும் பிராமணர்களாம்.

எனவே, களப்பிரர் குழப்பத்துக்குப் பின் சம்ஸ்கிருதக் கல்வி தமிழ் நாட்டில் தழைப்ப தற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பல்லவரும் பாண்டியரும் சிறக்கச் செய்தனர். பதினெட் டாம் நூற்றாண்டுவரையிந் நிலையில் பெரு மாறுதலில்லை.

தத்தம் தொழிலைத் தங்குல வித்தையாகப் பயில்தல், விழா முதலிய சிறப்புக் காலங் களில் கற்றோர் எடுத்துரைப்பனவற்றைக் கேட்டு நல்லனவறிதல் என்ற நிலையில் தான் தமிழர் கல்வியிருந்தது.

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வதிந்து தமிழ் நாட்டுக் குடிகளாகி விட்டவர் எவ ரெனினும் தமிழரே. அவர் தமிழர் சமூகத் துக்குப் புறம்பானவரல்லர். முன்பொரு காலத்தே பலப்பல காரணங்களால் ஆரியர், தெலுங்கர், கன்னடர், ஹிந்துஸ்தானிகள், மராத்தியர்கள் என்போர் இங்கே வதிந்தும் இங்கே வேர் கொள்ளாது தாமரையிலை மேற்றண்ணீர் போல இருந்திருக்கலாம். அக்காலமும் அந்நிலையும் மலையேறிவிட்டன பழந்தமிழர், வந்துகுடியேறியோர்கொள்கை களை யொப்பித் தம்மைத் தாழ்த்திக்கொண்டு நின்றனர். தமிழ் நாட்டரசரும் சம்ஸ்கிருதக் கல்விக்குத் தழைப்பு நல்கி ஊரார் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வள ரும் என்றிருந்தனர். நல்லறிவு இந்தப் பொய்க் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து விட்டது.

இன்று இங்கு நிலைத்து வாழ்வோர் எல் லோரும் தமிழர். இவருள் உயர்வு தாழ்வு களும் படைத்துக் கொள்ளப்பட்டனவே. அவையும் பட்டு மாய்ந்து கொண்டிருக்கின் றன. படிப்பதற்குரியோர் இன்னவர் என் னும் வரையறையிருந்த இடந்தெரியாது அழிந்து போயிற்று.

எனவே 'எல்லோரும் தமிழர்' என வெழுச்சியோடெண்ணித் தமிழ் மொழி பேணி வளர்த்துத் தமிழராயோர்க்கு வேண்டுவதாய பரந்துபட்ட அறிவு முழு வதையும் தமிழிலே கற்றுப் பெருமை பெறலே இன்றுள்ள நிலைக் கேற்றதாம். பழம் பாடங்களை வரலாற்றுணராது இன்றும் தமிழரையாளும் நிலையுடைய தமி ழர்தம் மொழியைத் 'தானே வளரும்' என்று விட்டு ஊரார் மொழிகளை 'யூட்டி வளர்ப் பர்' எனின் அது தகுவதாமா? நம் நாட்டுக் கல்வியின் முன்னைப் பழம் பெருமையையும், பின்னுண்டாய இழிவையுங்கண்டு எண்ணிப் பார்த்துத் தக்கதே செய்வராக.

இக்கட்டுரை காட்டிய தமிழரசு பற்றிய குறிப்புக் காட்சிப் பழம் பொருளே. தமிழர் சமூகச் சாதி பற்றிய குறிப்பும் கல்வி பற்றிய குறிப்பும் எதிர்காலத்துக்கேற்ற நற்பாடங் களை யேற்கவுதவுவனவாக.



தமிழ் நாட்டின் இயற்கைவளம்

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை, M.A., L.T.

★

உலகின் பல மொழிகளுக்கும் நாடுகளுக்கும் பெயரும் உருவும் எல்லையும் பண்பும் உருவாவதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முற்பட்டே தமிழ் என்ற திருந்தியமொழியும், தமிழகம் என்ற நாடும், மொழி நாடு சார்ந்த எல்லைப் பிரிவுகளும், நாகரிகமும் பண்பாடும் அமையப்பெற்ற இனம் தமிழினம். ஆனால் முத்திசைக்கடல் சூழ்ந்த அதன் பண்டைப் பரப்புக் கடல்கோளால் தெற்கிலும், அயலினக்கலப்பால் வடக்கிலும் மேற்கிலும் சென்ற ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே குறுகிற்று. வெள்ளையர் ஆட்சியிலும், அதன் மரபில் வந்துள்ள இந்தியர் ஆட்சியிலும் அது தன் தனி உருவும் தனித் தன்மையும் தனி உரிமையும் இழந்துள்ளது. இங்ஙிலையிலும் இழந்த உரிமைத் தமிழகத்தை மொழிவழி எல்லையிலேனும் பெற நாம் இன்று அவாவுகிறோம், கனவு காண்கிறோம்.

நாம் அவாவும் தமிழகம் நம் அவாவும் நாடாத இயற்கைவளம் உடையது. ஆனால் அதன் இன்றைய நிலை பண்புடைய அயலவரும் கண்டு பரிவுறும் நிலை ஆகும்.

இன்றைய தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ் பேசுவோர் ஒருங்குறையும் தென்கிழக்குப் பகுதியேயாகும். இது பண்டைத் தமிழகம்போல முத்திசைக்கடலெல்லை கொண்டதன்று. இரு திசைக் கடல் எல்லையும் இருதிசை நில எல்லையும் கொண்டது. கிழக்கேயும் தெற்கேயும் பழவேற்காட்டு ஏரிமுதல் கன்னியாகுமரி வரை வங்கக்குடாக் கடலும் மன்னர்குடாவும் எல்லைகள். வடக்கே தெலுங்கு கன்னடப் பகுதிகள் பழவேற்காட்டு ஏரிமுதல் நீலகிரிவரை எல்லையாகின்றன. மேற்கே அரபிக்கடல், மேற்குமலைத் தொடர், மலையாளம் பேசும் பகுதிகள் ஆகியவை ஆங்காங்கே எல்லையாகின்றன.

இன்று சென்னை அரசில் இடம் பெற்ற நிலப்பரப்பிலே, பண்டைப் பாண்டிய நாட்டுப் பகுதிகளான திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள்; பண்டைச் சோழ நாட்டுப் பகுதிகளான (புதுக்கோட்டை உட்பட்ட) திருச்சிராப்பள்ளி, தஞ்சை, தென் ஆர்க்காட்டு மாவட்டங்கள்; பண்டைச் சோழ நாட்டோடிணைந்த தொண்டைநாட்டுப் பகுதிகளான சென்னை, செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களும் அவற்றுடன் இணைந்த சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளும்; பண்டைச் சேரநாட்டோடிணைந்த கொங்கு நாட்டுப்பகுதிகளானசேலம், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களும் அவற்றுடன் இணைந்து மைசூர் எல்லையிலிருக்கும் கோலார்ப் பகுதியும், மலபார் எல்லையில் கிடக்கும் பாலக்காட்டு வட்டப்பகுதியும், நீலகிரிப் பகுதியும், திரு-கொச்சி அரசின் எல்லையிலுள்ள சித்தூர் வட்டமும், தேவிகுளம் பீர்மேடு வட்டங்களும், செங்கோட்டை வட்டமும், நெய்யாற்றங்கரை வட்டமும், தோவாளை, அகஸ்தீசுரம் இரணியல், கற்குளம், விளவங்கோடு வட்டங்களும் தமிழ்நாடு என்று மீண்டும் தனியுரிமை பெற வேண்டிய இந்திய எல்லைகள் ஆகும்.

தமிழர் குடியேறியும் பண்டிருந்தே தொடர்ந்து வாழ்ந்தும் வந்துள்ள கடல் கடந்த பகுதிகள் இலங்கை, மலாயா, தென்

கிழக்குத் தீவுகள், தென் கிழக்காசியா, பிஜி, திரினிதாத், மோரிசு, தென் ஆபிரிக்கா, ஜமய்க்கா, பிரிட்டிஷ் கயானு ஆகியவை ஆகும். தமிழ் நாடு உருவானால், அதன் பண்பாட்டு விரிவான தமிழகம் அல்லது பெருந் தமிழ் நாடு என்று கூறத்தக்கவை இவை.

தமிழ் நாடு நிலவுலக நடுவரைக்குச் சற்று வடக்கில் வடநேர்வரை (North Latitude) 8 பாகையிலிருந்து 13½ பாகைவரையும் கீழ் நிரைவரை (East Longtitude) 78 பாகையிலிருந்து 82 பாகைவரையும் பரவியுள்ளது. சென்னை அரசு எல்லைக்குள் கிடக்கும் பகுதியளவிலேயே இதன் நிலப்பரப்பு ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட சதுர மைல்களும், 2 கோடி 78 நூறாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையும் உடையது. மொழியுரிமையாக அமையும் மாநிலம் ஐம்பத்தையாயிரம் சதுர மைல் பரப்பும் மூன்று கோடி மக்கள் தொகையும் உடையதாயிருக்கும் என்னலாம்.

தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி அல்லது மலைப் பகுதி என்றும், முல்லை அல்லது காட்டுப் பகுதி என்றும், மருதம் அல்லது ஆற்றுப் பகுதி என்றும், நெய்தல் அல்லது கடற்கரைப் பகுதி என்றும், பாலை அல்லது வளங்குன்றிய பகுதி என்றும் ஐந்திணையாகப்பிரித்திருந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியில் ஒரு சிறு பரப்புத் தவிர, தமிழ் உட்பகுதி எதுவும் இன்று பாலை என்று குறிக்கத் தக்கதன்று. மற்ற நால்வகைத் திணைகளும் அவற்றுக்குரிய மலைவளம், காட்டுவளம், ஆற்றுவளம், கடல்வளம் ஆகிய நால்வகை இயற்கை வளங்களும் நிறைந்த முழுநிறை மாநிலம் தமிழ்நாடு.

பண்டை நாகரிக உலகிலும் சரி, இன்றைய உலகிலும் சரி, தமிழகம் இயல்பாகவே உலகின் நடுமையமாக அமைந்துள்ளது. ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியாவின் பிற பகுதிகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் கிட்டத்தட்ட அதைச் சுற்றிலும் நிலவுலகில் பதிக்கப்பட்டவை போலக் கிடக்கின்றன. கடலுலகிலும் இந்துமா கடலில் அதுவும் இலங்கையும் கிட்டத்தட்ட மையமாகவே இருக்கின்றது. மனித நடமாட்டமுடைய அட்லாண்டிக் மாகடலும் பஸிபிக் மாகடலும் இதன் இருதிசையிலும் உள்ளவையே. கடலுலகின் வாயில்களான ஜிப்ரால்ட்டர், சூயஸ், ஏடன், சிங்கப்பூர், பனமா ஆகியவற்றிடையேயுள்ள கோட்டின் மீதே தமிழகம் அமைந்துள்ளது காணலாம். உலகின் கடல் நெறிகளும் வான் நெறிகளும் பெரும்பாலும் தமிழ்நாடு அல்லது இலங்கை கடந்தே செல்கின்றன. நிலப் பாதைகள் இவ்வாறு செல்ல முடியாவிட்டாலும், எல்லாப் பாதைகளுக்கும் இடங்களுக்கும் தமிழ் நாடு அணிமையுடையதேயாகும்.

தமிழகத்தின் இம்மைய அமைப்பே அதை உலகில் முதல் நாகரிக நாடாகவும் நாகரிக முன்னோடியாகவும் உலக நாகரிகத் தாயாகவும் ஆக்கியிருந்தது. உலகின் முதல் கடலோடியினமாகவும் உலகின் முதல் பேரரசு கடற் பேரரசு கடல் வாணிக இனம் ஆகவும் அதுவே தமிழகத்தை ஆக்கியிருந்தது. இவ்வியற்கை வாய்ப்புக்கள் இன்று பயன்படாவிட்டாலும் அணிமை வருங்கால உரிமைத் தமிழகத்தால் இவை நன்கு பயன்படுத்தத் தக்கவையேயாகும்.

உலகின் தட்பவெப்ப மண்டலங்களுள் தமிழகம் வெப்ப மண்டலத்தினுள்ளே உலக நடு வரை அருகிலேயே உள்ளது. ஆயினும் மட்டற்ற வெப்பம், மட்டற்ற குளிர், மட்டற்ற மழை என்ற நிலைகளுக்கு ஆளான நாடுகளில் தமிழகம் ஒன்றன்று. மிட்டான வெப்பம், மட்டான பருவ மழை இவையே அதன் பொது அமைதிகள் ஆகும். கிழக்கும் தெற்கும் கடலும், மேற்கில் மலையும், வடக்கில் மேட்டு நிலமும் வெப்பநிலையை மட்டுப்படுத்துவதுடன் மிகு வெப்பு, மிகு குளிர்

நிலைகளைத் தடுக்கின்றன. கோடை காலங்களில் அது டில்லியைவிட வெப்புக் குறைவாக உள்ளது. மழை வடையிலும் மேற்குத்தொடர் தென்மேற்குப் பருவமழையைக்குறைத்துவிடுகிறது. வைகாசி15 முதல் ஐப்பசி 15 வரை (ஜூன்-அக்டோபர்) வீசும் இப்பருவத்தில் தமிழகத்தின் பெரும் பகுதிக்கு 20 அங்குல முதல் நாற்பது அங்குலம் வரை மழை கிடைக்கிறது. பாண்டி நாட்டில் மலைசாராப் பகுதியில் மட்டும் 20 அங்குலத்துக்குக் குறைந்த மழை பெய்கிறது. அதேசமயம் வடகிழக்குப் பருவத்திலும் ஐப்பசி முதல் மார்கழி வரை (நவம்பர்-டிசம்பர்) தஞ்சைமாவட்டத்துக்கு 20 அங்குலத்துக்கு மேலும் பிற தெற்குக் கிழக்கு மாவட்டங்களுக்கெல்லாம் 10 அங்குலத்துக்கு மேலும் மழை பெய்கிறது. இங்ஙனம் ஆண்டுக்கு இரு பருவங்களாக ஆறுமாத காலம் பரவலாகத் தமிழகத்தின் பெரும்பகுதிக்கு மட்டான மழை கிடைக்கிறது.

தமிழகத்துக்குப் பொதுவாகத் தென் கிழக்குப் பருவமழையும் மேற்குமலைத் தொடருமே பல ஆறுகளையும் ஆற்று வளங்களையும் தருகின்றன. சில ஆறுகள் கிழக்கு மலைத் தொடரிலும் எழுகின்றன. முக்கியமான ஆறுகள் பாலாறு, தென் பெண்ணை, வெள்ளாறு, காவிரி, வைகை, தாம்பிரவருணி ஆகியவை. இந்த ஆறுகளின் நீளம், அவற்றின் பிறப்பிடம், ஓடும் மாவட்டங்கள், விழுமிடம், துணையாறுகள், கிளை ஆறுகள் ஆகிய விவரங்கள் வருமாறு :—

	ஆறு	பிறப்பிடம்	ஓடும் மாவட்டங்கள்	துணையாறுகள்	கிளை ஆறுகள்	விழுமிடம்
1	பாலாறு (230 மைல்)	கிழக்குமலைத் தொடர் கோலார் (மைசூர்)	வட ஆர்க்காடு செங்கற்பட்டு	செய்யாறு		வங்க விரிகுடா (சதுரங்க பட்டணம்)
2	தென் பெண்ணை (250 மைல)	,,	சேலம் தென் ஆர்க்காடு			(கூடலூர் அருகே)
3	வெள்ளாறு (135 மைல்)	சேர்வராயன்மலை (சேலம்)	திருச்சி தென் ஆர்க்காடு	வசிட்ட நதி சுவேத நதி		(பறங்கிப்பேட்டை அருகே)
4	காவிரி (475 மைல்)	மேற்குத்தொடர் (குடகு)	(மைசூர்) சேலம் கோயமுத்தூர் திருச்சிராப்பள்ளி தஞ்சை	(கல்யாணி) பவானி நொய்யல் அமராவதி	கொள்ளிடம்	வங்க விரிகுடா
5	வைகை (180 மைல்)	மேற்குத்தொடர் (ஏலமலை)	மதுரை இராமநாதபுரம்	வராக நதி சுருளியாறு வெத்திலைகுண்டு		பாக்ஸ் கடற்கால்
6	தாமிரபருணி (80 மைல்)	மேற்குத்தொடர் அகத்தியமலை (பொதிகை)	திருநெல்வேலி	சிற்றாறு மணிமுத்தாறு		மன்னார்குடி சேவைகுண்டம் அருகில் ஏரல் என்னுமிடம்

மிகப்பெரிய ஆறுகிய காவிரியும் மிகச் சிறி தான தாமிரவருணியுமே ஆண்டுமுழுதும் நீரோட்டமுடைய உயிர் ஆறுகள். இவை தென்மேற்குப் பருவக்காற்றால் வளம் பெறும் மேற்குத் தொடர்ப்பகுதியில் பிறந்து அடர்ந்த காடுகள் வழியாய் ஓடிப் பல கிளையாறுகளுடன் இணைவதே இவற் றின் தனிப்பட்ட உயர் நீர் வளத்திற்குக் காரணம். இவற்றுக் கடுத்தபடி வைகை யும் பாலாறும் காடற்ற கடுநிலத்தின்மீது ஓடுவதால் ஊற்றுவளமே உடையன. காவிரியும் வைகையும் தாமிரவருணியுமே சோழபாண்டிய அரசுகளின் நிலைக்களமாக வும் அவற்றின் நாகரிகப் பண்ணைகளாகவும் இயங்கிவந்துள்ளன. திருவாங்கூர் தமி முகத்திலுள்ள பெரியாற்று அணைத்திட்டத் தால் வைகை துணைவளம் பெற்றுள்ளது, பெற்று வருகிறது.

பண்டைத்தமிழகம் உலகிலேயே சிறந்த துறைமுகங்களை உடையதாய் இருந்தது. கடற்கரைப் பட்டினங்களும் உள்நாட்டு நகர்களும் சிறந்திருந்ததால், அது இன் றைய கிராம இந்தியாவைப்போல் இராமல், மேல் நாடுகளைப்போல நகர வாழ்க்கைச் சிறப்பும் உயர்தர வாழ்க்கைச் சிறப்பும் உடையதாய் இருந்தது. கடல்வாணிகம், உள் நாட்டு வாணிகம், செய்தொழில் ஆகியவற் றிலும் வளமிக்கதாய் உலகில் செல்வவளத் தில் முதன்மைபெற்றிருந்தது. ஆனால் நீராவிக்கப்பல் வந்தபின் அதற்குப் போதிய ஆழ்கடலும் இயற்கைத் துறைமுகமும் தமிழகத்தில் குறைந்துள்ளன. சென்னை வெள்ளையராட்சியில் பெருந் துறைமுக மாகியுள்ளது. சிறு துறைமுகப் பட்டி னங்களில் தூத்துக்குடியும் புதுச்சேரி யும் சென்னைக்கடுத்தபடி ஏற்றுமதி இறக்குமதிச் சிறப்பு அடைந்துள்ளன. இவையன்றிக் காரைக்கால், நாகப்பட்டி னம், தனுஷ்கோடி ஆகிய துறைநகரங் களும், மரக்காணம், சதுரங்கப்பட்டினம், மாமல்லபுரம், கூடலூர், தரங்கம்பாடி, காயல்பட்டினம், குலசேகரன் பட்டினம், குளச்சல் ஆகிய படகுத் துறைகளும் தமி முகத்தில் உள்ளன. இவற்றுட் பலவும் இவற்றையடுத்த இடங்களும் பண்டு உல கின் பெரிய வாணிகத் துறைகளாக நிலவி யவையோகும்.

கடல் வளமாகிய முத்து, சங்கு, சிப்பி, மீன், பவளம், உப்பு; மலைவளமாகிய சந்த ணம், அகில், தேக்கு, ஒண்மணிகள்; காட்டு வளமாகிய தேன், அரக்கு; அடிநிலவளமாகிய தங்கம், இரும்பு; ஆற்று நிலவளமாகிய நெற்பயிர், கரும்பு, அவரி, கோரை, புன் செய்ப்பயிர்கள், பருத்தி; இவற்றையொட் டிய உழவுத்தொழில், முத்தெடுத்தல், கடல் வாணிகம், சுரங்கத் தொழில், சர்க்கரைத் தொழில், சாயத் தொழில், பொன்வினை, மணிவினை, வளையல் தொழில், நூற்பு நெச வுத் தொழில்கள்; செங்கல் தொழில், மரத் தொழில் ஆகியவை தமிழன் இயற்கையிலி ருந்தும் தன் இயற்கை சார்ந்த வாழ்விலிருந் தும் முதன் முதல் கண்டு எடுத்து மனித உலகுக்கு வழங்கிய செல்வங்கள் என்று உலக வரலாறு நமக்கு எடுத்தியம்புகிறது. உலகின் பல மொழிகளிலே இன்னும் இவற் றுக்குரிய சொற்கள் தமிழ்ச் சொற்களா கவே அமைந்துள்ளன.

முத்தும் சங்கும் இன்றும் திருநெல்வே லிக்கடல்தீரத்திலும் இராமநாதபுரக் கடல் தீரத்திலும் முக்கியத் தொழிலாகவே உள்ளன. பாரசீகவளைகுடாவிலும், ஆஸ்தி ரேலிய வட கரையிலும் இப்போது முத்துப் பண்ணைகள் ஏற்பட்டுவிட்டாலும், உலகின் முத்து வளத்தின் பெரும்பகுதி இன்னும் தமிழகத் தென்கரைக்குரியதாகவே உள் ளது. மற்றவகைகளில் இன்று கேலிக் குரியதாகிவிட்ட கூவத்தாறு சிப்பித் தொழி லுக்குரிய சாலையாகவே இன்றும் இயங்கு கின்றது. கோலாரில் எடுக்கப்படும் தங்கம் உலகத் தங்கவளத்தில் நூற்றுக்கு இரண்டு விழுக்காடேயானாலும், இந்திய மாநிலத் தின் தங்க வளத்தில் நூற்றுக்கு 90 விழுக் காட்டுக்கு மேற்பட்டதாகும். இது

போலவே மீன் வளத்தில் உலகில் இந்தியா பிற்பட்டுள்ளதானாலும், தமிழகக் கரையில் அதன் வளம் மிகப் பெரிது. அரசியலாரும் அதில் கருத்தைச் செலுத்தி வளம் பெருக்க முயன்றாலும், நாட்டுரிமை அரசு ஏற்படாத காரணத்தால், கான்டா, சப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளைப்போல அவ்வளம் பெருக்க முடியவில்லை. தென் கடலின் மீன் வகைகள் மற்றக் கடல்களுக்கு ஈடல்லவாயினும், ஏ–ஊட்டமிக்க சுறுவுக்கு அதுவே தனிச் சிறப்பான தாயகமாகும். தமிழகக் கடல் மறவராகிய மீனவர் ஆற்றல் இத்துறையில் போதிய அளவு பயன்படுத்தப் பெற வில்லை.

கோலாரில் மட்டுமின்றிப் பிற தமிழகப் பகுதிகளிலும் தங்கச் சுரங்கங்கள் பண்டை நாட்களில் இருந்ததாக அறிகிறோம். இரும்பும் நிலக்கரியும் பிற உலோகங்களும் கனிப் பொருள்களும் இதுபோலப் பல இடங்களில் வள ஆதார நிலையில் இருப்பதாக அறிகிறோம். இவற்றுள் தென் ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி இப்போதுதான் அரசியல் முயற்சிக்குரியதாகியுள்ளது. சேலத்திலுள்ள இரும்பும் இதுபோல இனிப் பயன்படுத்தப் படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. ஆனால் இவை இன்னும் இந்திய நடு அரசின் உரிமையாட்சியில் இருப்பதாலும், சென்னை அரசு தமிழக உரிமையரசாய் இல்லாததாலும் இவ்வளங்கள் போதிய அளவு நாட்டை வளப்படுத்தும் முறையில் பயன்படுத்தப்படாமல், பிற பகுதிகளின் நலங் கருதியே ஊக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

தஞ்சையில் நில எண்ணெய் கூட இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். இது வருங்கால நில அகழ்வாய்வாளர் முயற்சிக்குரியது.

தாமிரம் சேலத்திலும், அப்பிரகம் சேலம், கோவையிலும், மாங்கனைசட் நாகர் கோவிலையடுத்த மணவாளக் குறிச்சியிலும், ரப்பர், தேயிலை, காப்பி ஆகியவை மேற்கு மலைத் தொடரின் இரு சரிவுகளிலும் செல்வ வளம் பெருக்க உதவுகின்றன.

பண்டைத் தமிழரசர்கள் காவிரிக்குக் கரைகட்டித் தொண்டை நாட்டை வளப் படுத்தியவர் என்று புகழ் பெறுகிறார்கள். தமிழரசரும் புலவரும் நீர்ப்பாசனத்தையே மன்னன் கைவளம் தரும் மழையாகப் போற்றினர். தமிழகத்தின் ஆறுகள் இன்று நீர்-மின்சார மூலம் புதுவளம் தருபவையாய் உள்ளன. பெரியாற்றுத் திட்டம், பாவநாசத் திட்டம், மேட்டூர்த் திட்டம், மணிமுத்தாற்றுத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழகத்துக்கு உழவுவளமும் நகர நல வாய்ப்பு வளமும் தருவதுடன் தொழில் வளங்களுக்கும் ஆதாரமாகி வருகின்றன. நல்ல தமிழ்த் தேசிய அரசியல் அமைந்தால் இவ்வளங்கள் பன்மடங்கு பெருகும் என்பது உறுதி.

தமிழகத்தின் வேளாண்மை மழை வளம், ஆற்று வளம், கால்வாய்ப் பாசன வளம், வான்பார்த்த ஏரி வளம், இறைவைக்கிணறு வளம் ஆகியவற்றை எதிர்பார்த்து நடை பெறுபவை. இவற்றுள் இடைக்கால அரசியல் கோளாறுகளின்போதும் வெள்ளைய ராட்சியின் போதும் காடுகள் அழிக்கப்பட்டன. வானம் பார்த்த ஏரிகள் நிலமாக்கப் பட்டு நீர்வளமும் நிலவளமும் மழை வளமும் குறைந்தன. அத்துடன் புன்செய்கள் நன்செய்களாக்கப் பட்டதால், நாட்டில் உழவர்க்குப் போதிய நல்ல விலை கிடைக்காமலும் தொழிலுக்கான பயிர்கள் அழிவுற்றும் போயின. வருங்கால அரசியல் நாட்டுத் தேவை, பொருளியல் வாழ்வு ஆகியவற்றுக்கேற்ற தேசீயத் திட்டம் அமைத்தால், வெள்ளையர் ஆட்சிக்கு முன் இருந்த தமிழக வளத்தை நாம் மீட்டும் பெறுதல் கூடும்.

இயற்கை வளம் வாழ்க்கை வளமாக மக்கள் ஆள்வளமும் திறவளமும் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். நல்ல அரசியல் இயற்கை வளம் பெருக்கத் திட்டமிடுவதோடு, அதற்கேற்ற மக்கட் பண்புவளமும் பெருக்க வேண்டும். தொழிலும் உழைப்பும் அறிவும் பயன்படாமல், அயல் நாட்டுக்கு அடிமையாக வாழும் பண்பும் இன்று கற்ற வரிடமும் கல்லாதவரிடமும் ஒருங்குப் பரவி வருகிறது. நாட்டுரிமை அரசியல் இயற்கை வளம் பண்படுத்துவதுடன் இம் மக்கள் பண்பு வளமும் பண்படுத்த வேண்டும்.

———

தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய வழிகள்

பண்டித அ. முத்துசாமி பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர்,
தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி, மதுரை

அறுசீர்விருத்தம்

பாண்டியரும் சோழர்களும் சேரர்களும் வேளிர்களும் பண்டை நாளில்
மூண்டபெருங் காதலுடன் தமிழணங்கின் வளர்ச்சிதனை முழுதும் நாடி
வேண்டியவா தரவெல்லாம் தந்துமிகப் பேணியதால் வீறு மேவி
ஈண்டு புகழ் கொடுதமிழ்த்தாய் இனிதிருந்தாள் தமிழ்நாடும் இலங்கிற் றன்றே. 1

முன்னாளில் தமிழ்நாடும் தமிழ்மொழியும் பெற்றிருந்த முதன்மை முற்றும்
பின்னாளில் பழங்கதையாய்க் கனவாகிப் பொய்யாகிப் பிறழ்ந்த தின்னும்
சின்னாளில் எப்படியோ அதுதெரியோம் நாமெல்லாம் திரண்டு கூடிப்
பொன்னாடாம் தமிழ்நாடும் தமிழ்மொழியும் சிறக்கவகை புரிதல் வேண்டும். 2

அந்நாளில் நுகர்பொருளும் அறிவுமயல் நாடுகளுக் களித்து வந்தோம்
இந்நாளில் நுகர்பொருட்கும் அறிவினுக்கும் அயல்நாட்டை எதிர்பார்க் கின்றோம்
எந்நாளும் இலாதஒரு புத்துணர்ச்சி தமிழகத்தில் எழுவ தாலிந்
நன்னாளில் முயலாது வறிதிருத்தல் தமிழகத்தீர் நலமோ சொல்லீர்! 3

ஊனமிலாத் தமிழரெனில் உலகமெலா மறிந்திருந்த உண்மை இன்று
போனதற்கும் கீழ்நிலைநாம் போனதற்கும் மிகவருந்திப் புலம்பி என்னே?
மானமுடன் வாழ்வதுவே வாழ்வாகும் எனமுன்னோர் வழுத்திப் போந்த
ஞானவுரை தனைத்தெளிந்து முன்னேறும் வழியினைநாம் நாட வேண்டும். 4

தமிழரெனப் பெயர்பூண்டார் உடல்முழுதும் தமிழ்க்குருதி தவழ வேண்டும்
தமிழரெனப் பெயர்பூண்டார் உளமுழுதும் தமிழுணர்ச்சி ததும்ப வேண்டும்
தமிழரெனப் பெயர்பூண்டார் செயல்முழுதும் தமிழ்த்தொண்டே தளிர்க்க வேண்டும்
தமிழரெனப் பெயர்பூண்டார் பேச்செல்லாம் தமிழ்ப்பேச்சாய்த் தழைக்க வேண்டும். 5

தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பழித்துரைக்கும் மனப்பான்மை தவிர வேண்டும்
தாய்மொழியாம் தமிழ்மொழியைப் புறக்கணிக்கும் பெருங்குற்றம் தகர வேண்டும்
தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு நேரும்இடை யூறுகளைத் தடுக்க வேண்டும்
தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு வேண்டியஆ தரவெல்லாம் தருதல் வேண்டும். 6

தமிழணங்கு தலையெடுத்தால் தமிழ்நாடும் தலையெடுக்கும் தமிழ் தொலைந்தால்
தமிழகமும் தலைகவிழும் எனுமுணர்ச்சி தமிழரிடைத் ததும்ப வேண்டும்

தமிழணங்கின் விடுதலையே தாய்நாட்டின் விடுதலையாம் தன்மை யோர்ந்து
தமிழரெலாம் திரண்டுழைத்துத் தமிழணங்கை அரியணைமேற் சார்த்தல் வேண்டும்.7

வள்ளல்களிற் பலருவந்து தமிழ்மொழியை வளர்த்திடமுன் வருதல் வேண்டும்
ஒள்ளியநூ லறிவுடையார் புதுமுறையில் நூலியற்றி உதவ வேண்டும்
பள்ளியுறும் மாணவர்கள் பற்றோடு தமிழ்மொழியைப் பயில வேண்டும்
கொள்ளைகொளும் தமிழ்மொழியிற் பலநூல்கள் மலைபோலக் குவிதல் வேண்டும். 8

செந்தமிழிற் சுவைகனிந்து திகழுமிசைப் பாடல்பல செய்தல் வேண்டும்
அந்தநல்ல தொண்டுசெய முன்வருவோர்க் குதவிபல அளிக்க வேண்டும்
நந்தமிழர் இசையரங்கில் தமிழ்மொழிக்கே முதன்மைஇடம் நல்க வேண்டும்
விந்தைமிகும் நம்செயல்கண் அயல்நாட்டார் தலையசைத்து வியக்க வேண்டும். 9

சீருலவும் நந்தமிழிற் சிறந்தபல நூல்களையும் தெரிந்தெ டுத்துப்
பாருலகோர் அறியும்வகை பலமொழியில் மொழிபெயர்த்துப் பரப்ப வேண்டும்
ஏருலவும் நந்தமிழில் நாடகநூல் ஒருசிலவும் இல்லை யென்றே
ஊருலகம் சொலாதபடி விரைந்தறிஞர் வரைந்தியற்றி உதவ வேண்டும். 10

உடல்நூலும் உயிர்நூலும் அறிவுநூல் கணிதநூல் உள்ள நூலும்
மடனறுநற் பொருணூலும் மரநூலும் நிலநூலும் வான நூலும்
தடையிலா மொழிநூலும் இசைநூலும் சரிதநூல் தருக்க நூலும்
அடைவேநம் தமிழ்மொழியில் அழகியநல் லுரைநடையில் அமைக்க வேண்டும். 11

காலையிலும் மாலையிலும் காட்டினிலும் வீட்டினிலும் கருதிச் செய்யும்
வேலையிலும் பள்ளியிலும் மேடையிலும் படக்காட்சி மிளிரு கின்ற
சாலையிலும் சந்தினிலும் இசைபாடும் அரங்கினிலும் சரிந்து செல்லும்
மூலையிலும் முடுக்கிலும் நம்தமிழ்மொழியின் இன்னிசை முழங்க வேண்டும். 12

ஆட்சிமொழி யாகநம் தமிழ்மொழியைத் தமிழகத்தில் ஆக்க வேண்டும்
மாட்சிமிகு நீதிமன்ற மொழியாகத் தமிழ்மொழியை வைக்க வேண்டும்
காட்சிமிகு கல்லூரி மொழியாகத் தமிழ்மொழியைக் கணிக்க வேண்டும்
சூட்சிகளைத் தகர்த்தெறிந்து பலதுறையில் தமிழ்மொழியைத் துலக்க வேண்டும். 13

மாமதுரைத் தமிழ்ச்சங்கம் தமிழ்மொழியைப் பலவகையில் வளர்க்க வேண்டும்
பாமரரும் அறியும்வகை தமிழ்மொழியின் சிறப்பியல்பைப் பரப்ப வேண்டும்
நாமதற்குத் தருமுதவி அத்தனையும் உளமுவந்து நல்க வேண்டும்
தேமதுரத் தமிழ்முழக்கம் திக்கெட்டும் எதிரொலிக்கச் செய்தல் வேண்டும். 14

இத்தகைய திட்டமொன்றை இயற்றியதன் படிதமிழர் எல்லாம் கூடி
ஒத்துமுழு மனத்துடனே முயன்றக்கால் முடியாத தொன்று மில்லை
முத்தமிழும் விரிவடையும் முயற்சியும் நற்பய னளிக்கும் முகமலர்ந்து
மெத்தவும்நம் தமிழன்னை யகங்குளிர்வாள் தமிழ்நாடும் விளங்கு மன்றே. 15

———



தமிழர் காதல் வாழ்வு

சோ. பாகீரதி, எம். ஏ.,
Asst. Lecturer, Queen Mary's College, Madras.

★

தமிழகத்தின் பொற்காலமெனப் போற்றத்தக்கது சங்க காலமேயாகும். வீரஞ் செறிந்த தமிழ் நாடாகவும், காதல் கனிந்த கன்னித்தமிழ் நாடாகவும் அன்று நம் நாடு காட்சியளித்தது.

"ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்றூர் புறநானூற்றுப் புலவர் ஒருவர். நாட்டின் நலம்நாடிப் போர்க்களம் புக்கு யானையை வீழ்த்தி விழுப்புண் பட்டு வருவதே தமிழ் மகனின் கடமையெனக் கருதப் பட்டது. புறத்தில் போரைப் போற்றிய அவன், அகத்தில் இன்பத்தை முழுதும் மாந்தி மகிழ்ந்தான். தமிழர் வாழ்வே அகம், புறம் என்ற இரண்டனுள் அடங்கியது.

அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப் பொருள்கள் மூன்றினை அகம், புறம் என்ற இரண்டனுள் அடக்கினர் நம் முன்னோர். அறமும் பொருளும் புறத்திலும், இன்பம் அகத்திலும் இடம்பெற்றன. சங்கநூல்களில் புறத்தைப் பற்றிப் புகல்வன சிலவாகவும் அகத்தை விளக்குவன பலவாகவும் இருத்தலே, தமிழர் வாழ்வில் அகவாழ்வே தலைமையிடம் வகித்தது என்பதைத் தெள்ளிதின் விளக்கும். இன்பம் மலிந்த இல்வாழ்க்கையே நாட்டின் நல்வாழ்விற்கு அடித்தளம் என நம்பினர் சங்கத்தமிழர்.

பொருளுக்கு இலக்கணம் தந்த தண்டமிழ், நிலத்தை ஐந்தெனப் பிரித்தது; இயற்கை நிலைக்கேற்ப ஐவகை நிலத்திற்கும் ஐவகைப்பட்ட அகவொழுக்கம் வகுத்து, அதனை ஐந்திணை என்ற பெயர் கொண்டு போற்றியது.

"போக்கெல் லாம்பாலை புணர்த னறுங்குறிஞ்சி
யாக்க ளிளூட லணிமருத—நோக்கொன்றி
யில்லிருத்தன் முல்லை யிரங்கியபோக்
கேர்நெய்தல்"

என வரும் அடிகள் ஐவகை நிலத்தையும் அவற்றிற்குரிய ஒழுக்கத்தையும் விளக்குவனவாம். மேற்கூறிய ஐந்திணை ஒழுக்கங்களுக்கும், அன்பே அடிப்படையாய் அமையும். அன்புடைக் காமமாகிய இவ்வைந்திணை ஒழுக்கமே அக வாழ்வென்றும், காதல் வாழ்வென்றும் பெயர் பெறும்.

உருவானும் நலத்தானும் ஒத்த தலைவனும் தலைவியும் அன்பாற் கூடித் தமர் அறியாமல் களவொழுக்கத்தின்கண் நின்று பின்னர்ப் பலரும் அறிய மணம் முடித்து இல்லறமென்னும் நல்லறமாற்றிக் "காமம் சான்ற கடைக்கோட்காலை ஏமம் சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல்" ஆகிய அனைத்தும் அக வாழ்வில் இடம்பெற்றன. காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பமாகும்.

நெஞ்சங் கலந்த காதல் சாதியைப் பாராது; சமயத்தை நோக்காது; பட்டம் பதவியையும் மதிக்காது. வீரன் ஒருவனைக் கண்டாள் ஒரு தமிழ் மகள். ஆண்மை மிக்க அவனை அவள் நெஞ்சம் நாடியது. தலைவனும் நாணமும், பண்பும் இணைந்த

அவள் எழிலில் இதயத்தைப் பறிகொடுத் தான். இங்ஙிலையில் இருவர் மனமும் செம் புலப் பெயல் நீர்போல் ஒருமைப்பட்டன. இதனை ஙினைந்து ஙினைந்து நெஞ்சம் மகிழ்ந்த தலைவன் ஒரு நாள் தலைவியிடம்,

"யாயு ஞாயும் யாரா கியரோ
வெஙதையு நுஙதையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயஙநீர் போல
வன்புடை நெஞ்சந் தாம் கலந்தன."

என்று கூறிக்களித்தான். செம்மண் நிலத் தில் பொழிந்த மழை நீர் அந்த நிலத்தின் செம்மை நிறத்தைப் பெற, நிலமோ நீரின் தன்மையை ஏற்று நெகிழ்ந்து குழைகிறது. இது போன்றே காதலனும் காதலியும் ஒரு வரின் தன்மை ஒருவராதாகக் கலந்து நெஞ் சம் ஒன்றுவர். அக்காலத்தில் விளங்கிய உள்ளங் கலந்த காதலைக் காட்ட இப்பாட்டு ஒன்றே போதும்.

இங்ஙனம் கருத்தொருமித்த காதலர் உற் றோரும், பெற்றோரும் அறியாத நிலையில் மறைமுகமாகச் சின்னாள் இன்பம் நுகர்வர். பிறர் அறியாது ஒழுகும் இவ்வொழுக்கமே களவொழுக்கமாகும். இம்மை யின்பங் கருதி ஈடுபட்ட இருவரை அவர் அறியா மலே வீட்டின்பத்திற்கு அழைத்துச் செல் லும் இவ்வொழுக்கத்திற்குக் 'களவு' என் னும் பெயர் சாலப் பொருந்தும்.

மறைவில் நடக்கும் இவ்வொழுக்கம் சிறிதே வெளிப்பட்டது. ஊரார் அலர் தூற்ற முற்பட்டனர். இதனைச் செவிமடுத்த பெற்றோர், நிறைகாக்க விரும்பும் தலைவிக் குச் சிறைக் காவல் என் செய்யும் என்பதை யுணராது, அவளை இல்லத்தில் சிறை வைத் தனர். அறிந்தான் தலைவன்; பலரறிய மணம் புரிதலே இனித் தன் கடமையென உணர்ந்தான். எண்ணியது எண்ணியாங்கு முடிக்க வேண்டிப் பொருள் நாடிப் பிரிய முற்பட்டான்; தான் விரும்பும் தலைவிக்குத் தன் முயற்சியால் ஈட்டும் பொருளைக் கொண்டே அணிகலன் பூட்டி மணக்க விழைந்தான். பரிசப் பொருள் விழைந்து செல்லும் இப்பிரிவே, "வரைவிடை வைத் துப் பொருள் வயிற் பிரிதல்" என்னும் பெயர் பெற்றது. செல்வக் குடியில் தோன் றிய செம்மலாயிருந்தும், பெற்றோரின் பொருளைக் கொண்டு மணவினை முடிப்பதை அவன் மனம் ஏற்கவில்லை. தன்மானம் படைத்த தமிழுள்ளம் தன் முயற்சி தரும் பொருளைக் கொண்டே பரிசம் தர விழைந் தது. அதன் பொருட்டுப் பிரிய மறுக்கும் தன் நெஞ்சத்தையும் கல்லினும் கடிதாக்கிப் பிரிகின்றான். பெண்ணை மணக்கப் பேரம் பேசும் இன்றைய தமிழினம் தன் பண்டைய பண்பினைப் பெறும் நாள் எந்நாளோ?

தலைவன் பரிசம் தருதல் வழக்கமேயாயி னும் அதனையே அளவுகோலாகக் கொண்டு மணத்தலை அன்னாள் மகளிர் விரும்பினர் அல்லர். ஆண்மை மிக்கானையே, ஒழுக்கத் தில் உயர்ந்தானையே, அவர் மனம் விழைந் தது. ஒரு தந்தை, "நீ பெரும் பொருளைப் பரிசமாகக் கொடுப்பினும் ஒப்பற்ற தகுதி வாய்க்கப் பெறுதானை என் மகள் மணக்க ஒருப்படாள்" என்று கூறிப் பெண் கொடுக்க மறுத்த செய்தி புறப்பாட்டொன் றினுல் புலனுகின்றது.

தலைவன்பால் தலைவி எல்லையற்ற காதல் கொண்டிருந்தாள். அக்காதல் நிலத்தினும் பெரிதாய் ஆழியினும் ஆழமுடைத்தாய் விளங்கியது.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனெடு நட்பே"

இத்தகைய ஆழ்ந்தகன்ற அன்புப் பெருக் கினை அடைக்குந் தாழுமுண்டோ? தான் விழையும் காதலனையடைய, பெற்றோர் தடையாவர் என்பதை உணர்ந்ததும் தலைவி தலைவனுடன் யாருமறியாமல் தந்தையின் கடிகாவலையுங் கடந்து செல்லத் துணிவாள். இதனையே தமிழ் இலக்கணம் 'உடன் போக்' கெனக் கூறி ஏத்துகிறது. அனிச்ச

மும், அன்னத்தின் தூவியும் நெரிஞ்சிப் பழ மென வருத்தும் மென்மை மிகும் பாத முடைத் தலைவி, கல்லும் முள்ளும் நிறைந்த கானகத்தைக் கடக்கவும் முற்படுகிறாள். தலைவனுடன் செல்லும் போக்கினையே யின்பமெனக் கருதுகிறது அவளுள்ளம். அறிவுடைப் பெருமக்களும் காதலைக் காப் பான் வேண்டித் தலைவனுடன் உடன் போதலை அறமெனக் கூறிப் போற்றினர். "மலையிடைப் பிறந்த சாந்தும், கடலிடைத் தோன்றிய முத்தும், யாழ் புணரிசையும் முறையே பூசுவோருக்கும், பூணுவோருக் கும், கேட்போருக்குமே இன்பம் பயக்குமே யல்லாது தாம் பிறந்த இடத்திற்குப் பயன் தரா; அதேபோல் உன் மகளும் அவள் விரும்பிய தலைவனுக்கே இன்பமும் பயனும் தருவள்; அவனுடன் செல்லுதலே அவ ளுக்கும் சிறப்பாகும்; இம்மைக்கேற்ற அறமும் அஃதே" எனக் கூறி உடன் போய தலைவியைத் தேடிச் சென்ற செவி லியை முக்கோற் பகவர் வீடு திரும்பச் செய்த ஒரு நிகழ்ச்சி கலித் தொகையில் வருகிறது.

"இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானே வழிபடூஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறு மற்றதுவே"
(கலி. பாலை. 9.)

இம்மையில் கற்புநெறி தவறாது காதல னுடன் கூடி நடத்தும் இல்லறமே நல்லற மென்றும், மறுமை இன்பத்திற்குச் செலுத் தும் மார்க்கமும் அஃதேயென்றும் துணிந்த தமிழுள்ளத்தையே வள்ளுவரும் 'அற மெனப்பட்டதே இல்வாழ்க்கை' யெனக் கூறி வலியுறுத்துகிறார்.

இல்லறம் போற்றும் கற்பு நெறியிலும் பிரிவு நேரும். தலைமகன் பொருள் நாடியும், போர் குறித்தும் பிரிவான். வெள்ளத் தனைய காதல் உள்ளத்தில் கொண்ட தலைவி தனது பிரிவுத்துயரை "விரி நீர்-வையக வரையளவிறந்த, எவ்வநோய்" என்றுகூறி இரங்குகின்றாள். அன்புள்ளம் பிரிவைத் தாங்கயியலா நிலையிலும் கடமை கருதி ஆற்றியிருக்கின்றது; வினைநாடிப் பிரிந்தவர் என்று வருவார் என்று ஏங்குகிறது; வரும் வழி பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத்தது.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரலு"ம்

அவள் காதலைக் காட்டும் சான்றுகளாகும். இப்பிறப்பில் மட்டுமன்றி எத்தனை பிறவி யெடுப்பினும் தனது காதலனையே கருத்தில் நிறுத்த விழையும் தமிழ் மகளிரின் காதலுள் ளத்தைச் சொல்கொண்டு அளவிடுதலி யலுமோ! ஒரு தலைவி தன் தோழியிடம் "பிரிவு நோய் என்னுயிரையே கொள்ளை கொண்டுவிடும் போலிருக்கிறதே; தோழி, யான் இறப்பைக் கண்டு அஞ்சுகிறேன் என எண்ணுதே. சாதல் அஞ்சேன். ஆனால், இறந்து மறுபிறப்பு எடுத்தால் இத்தலைவனை மறந்து விடுவனே என்று அஞ்சுகிறேன்" என்று கூறி வருந்தினள் என்ற செய்தி நற் றிணையில் நலமிகக் கூறப்படுகின்றது.

இத்தகைய காதலுள்ளம் தலைவனை மிக வுயர்வுடையோனாகவே மதிக்கும். அவனைக் குறித்துக் குறை நினையவே நோகிறது அவ ளுடைய நெஞ்சம். "பிரியேன், பிரியினுந்தரி யேன்" என்று அன்று சூளுரைத்த தலைவன் இன்று பிரிந்தது மன்றித் திரும்பி வரவும் காலம் நீட்டிக்கின்றானே என்று தோழி தலைவனைக் குறைகூற, அது பொறுத்த தலைவி, "குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய் தோன்றிற், றிங்களுட்டீத் தோன்றியற்று" என்று கூறுஞ் சொற்கள் அவளது அன்பின் உறுதியைக் காட்டுகின்றன. அஞ்சுவ தஞ் சும் அறிவுடையோன் என்னுடைய காத லன் என்று கூறுமளவிற்கு அவளது காதல் நம்பிக்கையை ஊட்டியது. தான் விழைந்த தலைவனுடன் கூடி வாழ்தலே இன்பம், வறுமை நிலையிலும் அவனுடன் ஒன்றி வாழும் வாழ்வே வாழ்வாகும் என அவள் கருதினள்.

'ஒருகூ றுடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை' அன்றே!

தலைவியின் காதலுக்குக் கிஞ்சித்தும் குறையாமல் தலைவனிடத்தும் காதல் தழைத்திருந்தது. காதலுக்காக வீரநெஞ்சமுடைய அவன் மெல்லியலாள்முன் பணியவும் தயங்கான். உலகையே கேட்பினும் அதனைப் பரிசமாகத்தர முன் வந்தான். மழைக்கும், கொடிய இடிக்கும், சூருவளிக்கும் அசையாக் கொல்லிமலைப் பாவை போன்ற உறுதி கொண்ட காதலுடையான் தமிழ்த் தலைவன் என்பதை ஒரு நற்றிணைப் பாடல் நிலைநாட்டுகின்றது. இத்தகைய உறுதியுடைக் காதல் உள்ளத்தே நிற்கவும் கடமையை மறவாத தன்மை அவனிடம் காணப்படுகின்றது. பிரிவு என்ற நினைவே அவனுக்கும் எல்லையில் தொல்லையைத் தரத்தான் செய்கின்றது. அவனுடைய வாழ்வில் என்றுமே காதலுக்கும் கடமைக்கும் ஓயாத போராட்டம் நிகழ்கிறது. இறுதியில் கடமையே வெல்லக் காண்கிறோம். இரப்பார்க்கொன்று இல்லையென்பதினும் இறத்தலே சாலச் சிறந்தது என்பதே தமிழ்ப் பண்பாடாகும். இப்பண்பாடு தமிழ்த் தலைவனிடத்தில் தலைமையிடம் பெற்றுத் திகழ்ந்தது யென்பதை,

"இடும்பையா லின்மை யுரைத்தார்க்கது
நிறைக்கலாற்றுக்காற்
நன்மெய் துறப்பான் மலை"

என்ற கலித்தொகை அடிகள் காட்டுகின்றன. ஈத்துவக்கும் இன்பம் வேண்டி மற்றின்பத்தைத் தியாகம் செய்யவும் துணிகிறான் தலைவன். நீ பிரியின், தலைவி உயிர் நீப்பள் என்று தோழி வெளிபடக் கூறியும் தலைவன் பிரிதலைத் தவிர்க்கவில்லை.

"மற்றிவ—ளின்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்று செய்
பொருளே"

எனக் கூறித் தலைவனைச் செலவழுங்கச் சொல்கிறாள் தோழி. ஆனால், தலைமகன் அதனைப் பொருட்படுத்தாது பொருள் தேடப் பிரிந்து விடுகிறான்.

"செல்லாமை யுண்டே லெனக்குரை
மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை"

என்று தலைவனிடம் கூறிய அதே தோழியே, தலைவன் பிரிந்த காலத்து,

"நாளு நாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையார் புகழென
வொண் பொருட்க கல்வர் நங்காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே"

என்று கூறித் தலைவியைத் தேற்றவும் செய்கிறாள்.

மாசற்ற காதலுடைத் தலைவனும், தலைவியும் நடத்தும் இல்வாழ்வில் நாளுங்காதல் வளர்கிறது. தன்னலம் பேணியே பிறந்த காதல், மனையறத்தில் தன்னலம் துறக்கவும், பிறர் நலம் போற்றவும் முற்படுகின்றது.

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று எண்ணியது தமிழ்ப் பேருள்ளம். எந்நிலையிலும், எந்நேரத்திலும் விருந்தினர் பேணலை உள நிறைவுடன் மேற்கொண்டாள் தமிழ்ப்பெண். மலரத்திறந்த வாயிலை உடையதாய்ப் பொலிந்தது அவர்தம் மனை. தலைவனைப் பிரிய நேர்ந்த காலத்துத் தனது இளமை வறிதே கழியுமே என்று தமிழ் மகள் வருந்தாள். ஆனால், அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும், துற வோர்க் கெதிர்தலுமாகிய அறம் பிழைபடுமே யென்றுதான் ஏங்கினாள். இத்தகைய பெருந்தகையுள்ளம் படைத்த பெண்டிரைக் கொண்ட நாடன்றே பொன்னெடுன்று போற்றத்தகும்!

காதல் வாழ்வே, பரிவு காட்டிப் பசிப்பிணி போக்கிடும் பொது வாழ்விற்கு அடிப்படையானது கண்டோம். பொதுப் பணியென்ற பெயரில் இல்லத்தை மறந்து திரியும் இன்றைய நாகரிக உலகம் இதனை உணர்தல் வேண்டும். போலி இன்பத்தில் மயங்கி மாசற்ற காதலு மறியாது காலத்தைப் பாழாக்கும் தமிழ் மக்கள், நம் முன்னோர் போற்றிய இல்லறத்தை அறிந்தும் உணர்ந்தும் பின்பற்ற முயல்வார்களாக.

தமிழர் வாழ்ந்து காட்டிய காதல் வாழ்வு இன்பத்திற்கும் கடமைக்கும் உறைவிட மாய்த்திகழ்ந்தது. கள வொழுக்கத்தில் இன்பம் நுகர்ந்த காதலர், கற்பு நெறியில் கடமையைப் போற்றி அறத்தை ஆற்றினர். களவில் அரும்பிய காதல் கற்பு நெறியிலேயே மலர்ந்தது. மங்கலமென்னும் மனை மாட்சி சிறக்க நன்கலமாகிடும் நன் மக்களைப் பெறுவது கற்பு நெறியிலல்லவா? இருவரிடைத் தோன்றிய உழுவல் அன்பு தம் மக்கள் மாட்டு விரிந்து, பின் தம் மக்களோடு தொடர்புடையார் அனைவரிடத்தும் சென்றது. இவ்வாறு படிப்படியாக, இன்பங் கருதித் தோன்றிய காதல் அருளாக உருவெடுத்தது. மாசற்ற காதல் இறுதியில் அருளாக மாறியே தீரும் என்பதை உணர்ந்தே தெய்வப் புலவர் திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் கூறி வீட்டினைப் பற்றிக் கூறாது விடுத்தார். அருளுடையார்க் கவ்வுலகம் தானே முந்துறும் அன்றே! தலை மகனின் பண்பட்ட அருள் உள்ளத்தை நற்றிணைப் பாடல் ஒன்று அழகுறச் சித்திரிக்கின்றது. வினை மீண்டு வருகிறான் தலைவன். உள்ளம் தலைவியைக் காணத் துடிக்கின்றது. உணர்ச்சி வயப்பட்ட அந்நிலையில் கூட அவன் அருளுள்ளம் படைத்தோனாகக் காணப்பட்டான் எனின், அவனுடைய உயர்வுதான் என்னே! தலைவியைக் காணுந் துடிப்பில் கடுமாப்பூட்டிய நெடுந்தேரூர்ந்து காற்றினுங் கடுகி வருகின்றான். வழியிலே நண்டுகள் நிறைந்துள்ளன. தலைவனினுள்ளம் அவற்றிற்கு இன்னலிழைக்க இசையவில்லை. இதனைக் குறிப்பாலுணர்ந்த பாகன் நிலவின் உதவியால் நண்டுகளை நசுக்காது தேரைப் பையச் செலுத்தினான்.

"ஆழி மருங்கின் அலவ னேம்பி
வலவன் வள்பாய்ந் தார
நிலவு விரிந்தன்றுற் கான லானே"
(நற்றிணை, 11)

இத்தகைய அருளுள்ளம் படைத்தோர்க்கு ஆண்டவனும் எதிர்ப்படுவான் என்பதில் ஐய மென்ன? அன்பே கடவுள்-காதலே கடவுளெனக் கண்டவன் தமிழன். கடவுளையே காதலனாகக் கொண்டு கவி பாடிய இனமும் நம் தமிழினம் அன்றே!

தி சோமசுந்தரம் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,

கோயமுத்தூர்.

தந்தி: சோம்சுந்தரம் டெலிபோன்: 69

மேனேஜிங் டைரக்டர்: பி. எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார்

●

கதிர்கள் .... 24592 விசைத்தறிகள் 390

10 நெ. முதல் 80 நெ. வரை ஒற்றை, மூறுக்கு, பஞ்சு, ஸ்டேபிள் நூல்களும், வேஷ்டிகள், துண்டுகள், லாங்கிளாத், டவல், ஷர்ட்டிங், மல், காடா ரகங்கள் தயாரிக்கிறோம்.

எங்களுடைய பதிவு செய்யப்பட்ட புதுவகை துணி ரகங்கள்:

மான்பட்சி, குதிரைத் தலை, மூன்று மாங்காய், கினாட்பாய், பெர்ரிமென்

வாடிக்கைகாரர்களது திருப்தியே எமது குறிக்கோள்

ஜெய் ஹிந்த்

தமிழர் வீரம்

பெருஞ்சொல் விளக்கனர், அ. மு. சரவண முதலியார், திருச்சி

★

'தமிழர் வீரம்' என்னும் இத்தொடர் தமிழர்களின் வீரம் என விரிந்து பண்டைக் காலத்தில் நம் தமிழ்ப் பெருமக்கள் காட்டிய வீரச் செயல்களை உணர்த்தும் வாயிலாக, நிகழ்காலத்தில் நாம் அடைந்துள்ள பிற் போக்கையும், எதிர்காலத்தில் எவ்வாறு பண்டைய நிலையை அடையலாம் என்பதை யும் அறிவிக்கும் பொருட்செறிவுடைய தாகும்.

தமிழர் என்பார் யார் ?

பரந்த இந்நில உலகத்தில் முதல் முதல் மக்கட் பிறப்பு எடுத்தவர்களால் பேசப் பெற்றதும், அவர்களது முதிர்ந்த அறிவு வளர்ச்சியின் பயனாக வெளிவந்த பலப்பல இலக்கியங்களைக் கொண்டதும், குல்லாவுக் குத் தலை செய்யாமல் தலைக்குக் குல்லாச் செய்தது போன்ற இலக்கணங்களையுடை யதுமாகிய தெய்வச் செந்தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு, அத்தாய் மொழிப் பற்றுக் காரணமாக அதற்கு ஏதே னும் இடையூறு நேருமாயின் தம் உயிரைக் கொடுத்தேனும் அவ்விடையூற்றை நீக்கி அம்மொழியைப் பேணுபவர்கள் அனைவரும் தமிழர்களே !

பண்டைக் காலத்தில் இவர்கள் வாழ்ந்த இடம், வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே (கன்யா) குமரியும், கிழக்கும், மேற்கும் கடல்களும் எல்லையாக உடையது என்பதை,

> "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
> நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
> யாப்பின் வழிய தென்மனார் புலவர்"

என ஒல்காப்புகழ்த் தொல்காப்பியரும்,

> "வடவேங் கடம்தென் குமரி யாயிடைத்
> தமிழ்கூறும் நல்லுல கத்து"

எனப் பனம்பாரனரும்,

> "வேங்கடம் குமரி நீம்புனற் பௌவமென்(று)
> இந்நான் கெல்லை தமிழது வழக்கே"

எனச் சிகண்டியாசிரியரும்,

> "வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
> வேங்கடங் குமரி நீம்புனற் பௌவமென்(று)
> அந்நான் கெல்லை அகவயிற் கிடந்த
> நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்"

எனக் காக்கை பாடினியாரும்,

> "வடதிசை மருங்கு வடுகு வரம்பாகத்
> தென்திசை யுள்ளிட்(டு) எஞ்சிய மூன்றும்
> வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
> நாட்டியல் வழக்கம்"

எனச் சிறு காக்கை பாடினியாரும்,

> "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் படுத்த தண்புனல் நன்னாட்டு"

என இளங்கோவடிகளும் கூறியிருப்பவற் றால் அறியலாம். இத்துணை விரிந்த எல்லை யைக் கொண்ட நமது அருமைத் தாய் நாடா கிய தமிழ்நாடு இப்போது எத்துணைச் சுருங்கிவிட்டது என்பதை நினைத்தால் உண்மையான தமிழனின் குருதி கொதிக்கா மல் இராது. அச்சுருக்கம் தமிழ் மொழியா கிய நம் தாய் மொழியினிடத்து நாம் வைத்த அன்புச் சுருக்கத்தையே காட்டுகின்றது.

எனவே மேலே காட்டிய எல்லைக்குள்ளி ருந்து தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவரும் தமிழராவார் என்பது பெறப்பட்டது.

வீரம் என்பது யாது ?

இஃது எல்லா மக்களிடத்தும் இயல்பாக அமைந்துள்ள உயிர்க்குணங்களுள் ஒன்று. மற்றப் பிராணிகளிடத்து இது காணப்படுவ தாயினும் அஃது அவ்வுயிர்களிடத்து இயல் பாக அமைந்தது ; ஆனல் பகுத்தறிவோடு பொருந்தாததாகும். மக்களிடத்துக் காணப் படுவது பகுத்தறிவோடு பொருந்தியதாகும். பகுத்தறிவற்ற பிராணிகளிடத்து இயல்பாக அமைந்த செயலைப் புலவன் கண்டு அதற் கொரு காரணம் கற்பித்து அதனை ஒரு வீர னுடைய வீரச் செயலுக்கு உவமையாக்கு கின்றன் என்பதை அடியில்வரும் நாலடி யாரிலுள்ள பாடல் ஒன்றல் அறியலாம். அது,

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணு நிறக்கும்—
இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார்
விழுமியோர்
மானம் அழுங்க வரின்"

என்பது. புலி ஒன்று தான் உண்டு பசி யைப் போக்கிக்கொள்ள யானை ஒன்றை அறைந்து வீழ்த்தும். அக்களிறு அக்கொடு வரியின் வலது பக்கத்தில் வீழ்ந்தால் உண்டு பசி தீருமாம்; அஃதன்றி இடப் பக்கத்தில் வீழ்ந்தால் உண்ணுதொழியும். இது அப் புலியினிடத்துக் காணப்படும் பரம்பரைப் பழக்கம். பெரியோர்கள் தங்கள் மானம், வீரம் முதலியவற்றை இழத்தலால் தேவ லோகப் பதவி கிடைப்பதாயினும் அதனை விரும்பமாட்டார்கள் என்பதற்கு அப்புலி யின் செயலை உவமையாக்கினன் புல வன்.

வீரம் என்பது உள்ளத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அடங்கிக் கிடக்கும் போது ஒரு குணமாக இருந்து வெளியே வருகையில் வீரச் செயல் என்னும் பெய ரைப் பெறுகிறது. மனத்துக் கண் மாசி லாதவனுய் எல்லா உயிர்கட்கும் நலம் செய்ய வேண்டுமென்று ஒருவன் கருதினல் அக்கருத்து அறம் என்னும் பெயர் பெற்றுப் பின் அது செயலாக வெளிப்படும்போது 'அறவினை' என்று சொல்லப்படுதல் போல மேலே காட்டிய வீரமும், உள்ளத்தில் அடங்கியிருக்கும் நிலை ஒன்று. வெளிப்ப டும் நிலை ஒன்று. ஆனல் 'அறவினை' (அற மன்று) காலம் தோறும் மாறுபடும் இயல்புடையது. வீரச்செயல் அவ்வாறு மாறுபடாமல் எக்காலத்தும் ஒரே தன் மையாயுள்ளது. இவ்வீரத்தை எண்வகைச் சுவைகளுள் ஒன்றாக வைத்துப் 'பெரு மிதம்' என்ற பெயரால் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலுள் கூறுகின்றார். அப்பெருமிதம் என்பது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கையும் நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் என்பதை,

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்ற சூத்திரத்தால் அவர் பெறவைக்கிறார். அவற்றுள் நாம் இங்குத் 'தறுகண்' அதாவது அஞ்சாமை வாயிலாக வரும் வீரத்தை எடுத் துக்கொள்வோம்.

முடியுடை வேந்தர் மூவரின் வீரச்செயல்கள்

திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகா ரத்தை அரசர்களுக்குச் சிறப்பும் பயனும் கருதிக் கூறி மற்றவர்களுக்கும் பெறவைத் தாரல்லவா ? அதுபோல நாமும் நம் பண்டைத் தமிழர் வீரத்தைத் தமிழ் மன்னர் களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் வீரச்செயல்களை உணரும் வாயிலாக அறிந்துகொள்வது சால்புடையது.

"மண்ணில் வாழ்தரும் மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெங் காவலன்"

என மநுநீதிகண்ட சோழமன்னனைச் சேக்கிழார் பெருமான் தம் தெய்வத்திருவாக் காற் செப்பியருளியது போல உயிர்க ளனைத்திற்கும் (மக்கட்கு மட்டும் அன்று) கண்ணும் உயிரும் போல இருந்து செங் கோல் நடாத்திய முடியுடை வேந்தர் மூவ

ரும் நீதியையும், வீரத்தையும், கொடையையும் தமது உயிர் போலப் போற்றி வந்தார்கள் என்பதற்கு அவர்கள் அரண்மனை வாயிலில் காலையில் முழங்கிய நீதி முரசும், உச்சிப்போதிற் கொட்டப்பட்ட வீரமுரசும், மாலையில் ஒலித்த கொடை முரசுமே போதிய சான்றாகும். அம்மூன்றனுள்ளும் வீரத்தால் வரும் புகழையே அவர்கள் சிறந்ததாகக் கருதினார்கள் என்பதையும், அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு செய்த வீரச் செயல்களையும், அவர்காலத்தில் உடன் இருந்தவர்களாகவும், அவர்கட்குப் பிற்காலத்தில் இருந்தவர்களாகவுமுள்ள நல்லிசைப் புலவர் பெருமக்கள் பலர்—

"பீடில் மன்னர்ப் புகழ்ச்சிவேண்டி,
செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று
என் சிறு செந்நாவே"

என்னும் ஏக்கமுழுத்த முடையவர்களாய்ப் பாடிய பாடல்களிலிருந்து தெள்ளத்தெளிய அறியலாம். இறந்தகாலம் என்னும் பரந்த திரையால் மறைக்கப்பட்ட அவர்களின் வீரச் செயல்கள் முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டியது போல அப்புலவர் பெருமக்கள், தங்கள் கவி ஓவியங்களாற் காட்டியிருக்கின்றார்களாதலால், அப்பாடல்களைக் கொண்டு அறிவோமாக!

பாண்டிய மன்னனின் பரிசுத்த வீரம்!

முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்கள் நிறுவிப் பண்டைக் காலத்துக் கயற் கொடி கொண்ட தென்னர்குல மன்னர்கள் "என்றுமுள தமிழை' வளர்த்ததும், அப்பரம்பரை இயல்பு அழியாமல், தமிழ்நாடு செய்த தவப்பயனுய்த் தோன்றிக் காலஞ் சென்ற பாண்டித்துரைத் தேவரவர்களாலே தோற்றுவிக்கப்பெற்று இன்றும் வளர்ந்து வருவதாயும், இன்று நாம் பொன் விழாக் கொண்டாடுவதற்குக் காரணமுள்ளதாயும் விளங்கும் சங்கமிருப்பதுமான இம் மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பாண்டிய மன்னரின் வீரச்செயலை முதலில் அறிதல் பொருத்தமுடையதல்லவா?

இம்மன்னர்கள், தம்மோடு மாறு கொண்டு அமர் செய்யும் மாற்றுரை வென்று, அவர்கள் ஆண்மையை அழித்து, பெண்தன்மையுடையவர்களாக அவர்களை மதித்து, அவர்கள் விளையாடுவதற்குப் பாவையும் பந்தும் கொடுப்போம் என்பதற்கு அறிகுறியாகத் தங்கள் அரண்மனை முகப்பில் பாவையும், பந்தும் கட்டித் தொங்கவிட்டிருக்கும் செய்தியைக் கல்வி வீரராகிய நக்கீரர் பாடியருளிய,

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகளால் அறியலாம். மேலும் அவர்கள் வடநாடு சென்று ஆங்குள்ள ஆரிய மன்னர்கள் பலரையும் வென்றுவந்தார்கள் என்பதை,

"வட ஆரியர் படை கடந்து, தென் தமிழ் நாடொருங்குகாண, புரைதீர்கற் பிற்றேவி தன்னுடன் அரசு கட்டிலிற்றுஞ்சிய பாண்டியன்"

என்பதால் அறிகிறோம். அவர்களின் தூய வீரத்திற்கு மற்றுமோர் அழகிய சான்றைக் காண்போம்:

விதர்ப்பநாட்டு வேந்தன் மகளாகிய தமயந்தி என்பாள் நளனுக்கு மணமாலைசூட்டியபோழ்து, அவளை மணம் செய்துகொள்ளும் விருப்பத்துடன் அங்கு வேற்றருக் கொண்டு வந்திருந்த தேவேந்திரன் அழுக்காறு காரணமாக அங்குக் குழுமியிருந்த அரசர்களை நோக்கித் "தானும் ஒளியுடைய தாய், சந்திரனுக்கும் ஒளிதருவதாயுள்ள பகலவன் குலத்திலே தோன்றிய நீவிர் அனைவரும் இத்திங்கட்குலத்திலே தோன்றிய நளனுக்கு மாலைசூட்டுவதைக் கண்டு சும்மா இருக்கின்றீர்களே! உங்கட்கு மான

உணர்வு சிறிதும் இல்லையா?" என்று கூறிக் கலகத்தை மூட்ட, அதனைக் கேட்ட பாண்டிய மன்னன் சந்திர குலத்தவனதலால் தனது குலத்தை இழித்துக் கூறிய அவன் தலையைத் துண்டிக்கிறேன் என்று வாளை உருவிய செய்தியும், அங்குள்ளவர்களால் அவன் இந்திரன் என்றறிந்து, உடனே நாணமுற்று, 'நம் முன்னோர்களால் பண்டு மகுடபங்கம் செய்யப்பட்ட இந்தப் பேடியின் தலையை அறுத்தல், எங்கள் பரம்பரை வீரத்திற்கே இழுக்கைத் தருவதல்லவா?" என்று கருதி உருவிய ஒள்வாளினை உறையிற் செறித்துச்சென்றான் என்பதை,

"என்றலுங் கடவுட் டிங்கள் இருங்குலம்
இழித்துக் கூறல்
நன்று நன்றென்ன நக்குநாமவேல் வழுதி சிறி
உன்தலை துணிப்பன் என்னு ஒளிறுவாள்
உறையி னீக்கிக்
குன்றெறி வயிர ஒள்வாட் குரிசின்மேற்
கனன்று சென்றான்"
"வெகுளனை அணங்கிற் காக
ளனுருக் கொண்டு மேய
அகல்விசும் பளிக்கும் வேந்தன் இவனென
அமரர் கூறத்
துகளெழ மௌலி பண்டு தோற்றவன்
தன்னை டென்கொல்
இகலெனப் புகையும் ஒள்வாள்
உறைசெறித் தேகினனே"

என வரும் நைடதச் செய்யுட்கள் அறிவிக்கின்றன.

சோழ மன்னரின் சொல்லரும் வீரம்

"பரணிக்கோர் ஜயங்கொண்டார்" எனப் புலவர் பெரு மக்களால் பாராட்டப் பெற்ற வரும், தன்மை நவிற்சியே பாடும் தகுதியுடையோருமாகிய கவிச் சக்ரவர்த்தி ஜயங்கொண்டார், கலிங்கத்துப்பரணி என்னும் நூல் பாடினர். பரணி என்பது ஒரு வீரன் போர்க்களத்தில் ஒரே காலத்தில் ஆயிரம் களிறுகளைக் கொன்று குவித்தாலில் அவன்மீது பாடப் பெறுவது. மேலே காட்டிய பனுவல் இற்றைக்கு 800 ஆண்டு சட்கு முன் கருணாகரத் தொண்டைமானைப் படைத்தலைவனாகக் கொண்டு கலிங்கத்தை அழித்த முதற்குலோத்துங்கன்மீது பாடப் பெற்றதாகும். இச்செய்தி அவனது அளப் பரும் வீரத்தை உணர்த்துகின்றது.

மேலும் விக்கிரம சோழனுலாவில், "பற்ற லரை, வெப்பத்தடுகளத்தில், வேழங்களா யிரமும், கொப்பத் தொருகளிற்றுற் கொண் டோனும்" எனவும், சங்கர சோழனு லாவில் "புண்ணூறு தன் திருமேனியிற் பூணுகத் தொண்ணூறும் ஆறும் சுமந் தோனும்" எனவும் வரும் அடிகளால் அவர் களின் வேழப்போர்த்திறமும், தொண்ணூற் றாறு விழுப்புண்களை முகத்தினும், மார் பினும் கொண்டு அமர்க்களத்தில் சலியாது நின்று செய்த வெம்போர்த்திறமும் கண்டு களிப்புறுவோமாக.

கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன் தமிழ் எல்லையுள் தன்னோடு எதிர்த்து நின்று போர் புரிபவர் யாருமில்லை யாதலால், 'வடநாட்டு ஆரிய அரசர்களுள் யாரேனும் எதிர்த்து வந்தாலும் என் போராசை தீருமே' என்று கருதித் தன் படையோடு அந்நாட்டிற் செல்ல, அங் குள்ள அரசர்கள் பலரும் அஞ்சித்திறையாக முத்துப்பந்தர் முதலியவற்றைக் கொடுத்து வணங்க அவற்றைப் பெற்று மீண்டான் என்னும் செய்தி சேர நாட்டு இளங்கோ அடிகளாற் பாடப் பெற்ற முத்தமிழ்க் காப் பியமாகிய சிலப்பதிகாரத்தில் உள்ள,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெருஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணர்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கில்என் வலிகெழு
தோள்எனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
.....
மாநீர் வேலி வச்சிர நன்னுட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னுட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த
பட்டிமண் டபமும்

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றேரண வாயிலும்''

என்னும் அடிகளால் அறியக்கிடக்கின்றது.

மேலும் அவர்கள் வட நாட்டு மன்னர் கள் அனைவரையும் வென்று தமது புலிக் கொடியை இமய மலையில் உச்சியிற் பொறித்து வைத்துள்ளார்கள் என்பது ''இமயவர் உறையும் சிமயப்பிடர்த் தலைக் கொடுவரி ஏற்றி'' என்ற சிலப்பதிகார அடிகளாலும்,

''செண்டு கொண்டு கரிகாலன் ஒருகாலில் இமயச்சிமய மால் வரை திரித்தருளி மீள அதனைப்பண்டு நின்றபடி நிற்க இதுவென்று முதுகிற் பாய்புலிப் பொறிகுறித்தது மறித்த பொழுதே'' என்னும் கலிங்கத்துப் பரணிப் பாடலாலும் புலனாகின்றது.

சேர மன்னரின் செப்பரும் வீரம்

சேரன் செங்குட்டுவன் கண்ணகி என் னும் கற்புக்கடம் பூண்ட தெய்வத்திற்குச் சிலை செய்யும் பொருட்டு வடபால் சென்று தமிழரசர்களை இகழ்ந்து கூறிய கனகன், விசயன் முதலியோரை வென்று பனி மலையிற் கல்லெடுத்துக் கங்கைப் பேரியாற் றில் அக்கல்லைத் தூய்மைப்படுத்தி அக்கனக விசயர் தலையிலே அக்கல்லைக் கொணர்ந்து, பத்தினிப்படிமம் செய்து கோட்டம் எடுப் பித்து அப்படிமத்தை அதன்கண் எழுந் தருளச் செய்து வழிபட்ட செய்தி சிலப்பதிகாரத்தால் அறியக் கிடக்கின்றது.

இவ்வீரச்செயலைச் சேரன் தம்பி இசைத்த சிலம்பால் அறியலாம்.

''வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலென் ஆக''

என்று வஞ்சினம் கூறி,

''பகைப்புலம் புக்குப் பாசறை யிருந்த
தகைப்பரும் தானை மறவோன் தன்முன்
உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்—
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவர் எல்லாம்
தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
இரைதேர் வேட்டத் தெழுந்த அரிமாக்
கரிமாப் பெருநிரை கண்டுளம் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேல் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப''

என்னும் சிலப்பதிகார அடிகளும்,

''பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
.....
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது''

என்னும் அடிகளும் எத்தகைய வீர உள் ளத்திலிருந்து வெளி வந்திருக்குமென்பது உணர்வுடன் ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகாது போகாது.

இன்னும் பெருஞ்சேரலாதன் என்பவன் கரிகாற் சோழன் என்பவனோடு எதிர்த்து வெண்ணிப் பறந்தலை என்னும் இடத்துப் போர் புரிந்த காலை அச்சோழன் எய்த கூரிய அம்பொன்று சேரனுடைய மார்பிற்பட்டு முதுகின் வழியே சென்றது. 'அம்முதுகுப் புண்ணும் புறப்புண்தானே! இவ்வீழி செய லுக்கு ஆளான யான் உயிரோடு வாழ்தல் தகாதெனக் கருதி வடக்கிருந்து உயிர் நீத்த செய்தி, அம்மன்னனது மானத்தோடு கூடிய வீரச்செயலைக் காட்டுகின்றது.

இங்ஙனம் காட்டியவற்றைத் தாலிபுலாக நியாயமாகக் கொண்டு, மற்றும் அவர்களின் வீரச் செயல்களின் பரப்பை நமது பண் டைய இலக்கியங்களிற் காண்க.

இவ்வீரச் செயல்களுக்குக் காரணமாயிருந் தவர்கள் நம் தண் தமிழ் நாட்டின் தாய்மார் கள் என்று சொல்லின் அது மிகையாகாது. ''நரம்பெழுந்துலறிய'' எனவும், ''கெடுக சிந்தை'' எனவும் தொடங்கும் புறநானூற் றுப் பாடல்களாலும் அவைபோன்ற பிற

பாடல்களாலும் நம் குடி மகளிரின் வீரம் அறியக்கிடக்கின்றது.

எனவே, அப்பெண்களின் கருவிலிருந்து வெளிவந்த தமிழருக்கு அவ்வீரம் இல்லை யாயின் வியத்தற்குரியது இருத்தல் இயல்பு.

இற்றைய நிலை

இத்துணைச் சிறந்த தமிழர்களின் பரம்பரை யில் வந்த நமது இற்றைய நிலை என்ன வென்று சிந்தித்தால் வெட்கித் தலைகுனிய வேண்டாவோ? இவ்வீழ்ச்சிக்குக் காரணம் பலவாயினும், அவற்றுள் தலைசிறந்து நிற் பது மொழிப்பற்றின்மையே. பிறநாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டுப் பிறமொழி மோகத் தில் தலைசிறந்து தம் தாய்மொழியைப் புறக் கணித்து இகழ்ந்த செயலில் தமிழருக்கு இணையானவர் யாரும் இல்லையென்றே அறு தியிட்டுச் சொல்லலாம்.

இருபது ஆண்டுகட்குமுன் பெரிய ஆங் கிலப் பட்டதாரிகளாக உள்ள நம் தமிழர் கள் மேடைகளிற் பேச நேர்ந்தால், தமக்குத் தமிழிற் பேசியே பழக்கமில்லையென்றும், தாம் படித்த காலத்துத் தமிழ்வகுப்பை அவ மதித்த விதத்தையும், தமிழாசிரியர்களைத் தாம் படுத்திய பாட்டையும் விரித்துக் கூறி விட்டுப் பின் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்ட பழைய அன்பர்களின் காதில் அவை இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கலாம்.

அப்படி அவர்கள் பேசுவதற்கு அடிப் படை, தம்மை ஓர் ஆங்கில மேதை என்று கருதிப் பிறர் பாராட்ட வேண்டுமென்பதே!

சில ஆண்டுகளுக்கு முன்னும், ஏன்? தமிழ் 'மறுமலர்ச்சிக் காலம்' என்று சொல்லிக் கொள்ளும் இந்நாளிலும்கூட, கல்லூரிமாண வர்கள் தங்கியிருக்கும் அறைகளிற் சென்று பார்த்தால், மலையாள மாணவர்கள் இருக் கும் அறையில் அவர்கள் தாய்மொழியி லேயே பேசுவார்கள். தெலுங்கு மாணவர்

எங்கள் இலக்கிய வெளியீடுகள்

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

	ரூ.	அ.
இலக்கிய மணிமாலை	3	8
இலக்கிய உதயம் I	2	8
,, II	5	0
கம்பன் காவியம்	3	0
தமிழர் பண்பாடு	3	0
திராவிட மொழிகளில் ஆராய்ச்சி	1	0
காவிய காலம்	7	0

மயிலை சீனி. கோவிந்தராசனார்

திருக்குறள் நாடகம்	3	0

வித்வான் ல. சண்முகசுந்தரம்

ஆனந்தக் கூத்து	3	0
நந்திக்கலம்பகம்	2	8
டி. கே. ஸி. வரலாறு	1	8
தமிழ்க் கவியமுதம்	3	0

வித்வான் விசு. திருநாவுக்கரசு

சிலப்பதிகாரக் காட்சிகள்	3	0
பூச்சூட்டல்	2	0
பண்டித மணி	1	4

சா.பி. சிதம்பரனார்

புதிய தமிழகம்	0	12
கம்பன் கண்ட தமிழகம்	2	4
தொல்காப்பியத் தமிழர்	2	4
பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்	2	4

பள்ளிகள், நூல் நிலையங்களுக்கு வேண்டிய எல்லாவிதத் தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

★

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி, சென்னை - 5

★

60, மேலக்கோபுரத் தெரு, மதுரை.

ஸவுத் ஆர்காட் எலக்டிரிஸிடி டிஸ்டிரிபியூஷன் கம்பெனி லிமிடெட்

ஜம்மி பில்டிங்ஸ், மைலாப்பூர், மதராஸ்-4

★

தென் ஆற்காடு ஜில்லாவில் திண்டிவனத்திலிருந்து சிதம்பரம் வரை, 1,300 சதுர மைல்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகின்றது.

தொழிலதிபர்களுக்கு அழைப்பு:
பிரத்யேக கட்டணம் கொடுக்கப்படும்

இந்தப் பிரதேசத்தில் உள்ள முக்கிய விளை பொருள்கள்:
பருத்தி, நெல், மணிலா & கரும்பு

★

டைரக்டர்கள்:

ஸ்ரீ P. T. ராஜன், M.L.A., பார்--அட்-லா
,, V. T. ரங்கஸ்வாமி, பி.எ., பி.எல். அட்வகெட்.
,, B. D. V. ரரமஸ்வாமி நாயுடு, துபாஷ், M/s பின்னி & கோ. லிமிடெட்.
,, P. லக்ஷ்மீபதி நாயுடு, கப்பல் துபாஷ், M/s பாம்பே கம்பெனி லிமிடெட்.
,, S. ராஜரத்னம், காரியதரிசி, மதராஸ் இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

1939	வருடத்திற்கு	மொத்த	வருமானம்	ரூ.	2,08,941
1940	,,	,,	,,	,,	2,49,821
1941	,,	,,	,,	,,	2,92,617
1942	,,	,,	,,	,,	3,74.402
1943	,,	,,	,,	,,	3,80,554
1944	,,	,,	,,	,,	4,44,535
1945	,,	,,	,,	,,	5,58,402
1946	,,	,,	,,	,,	6,38,437
1947	,,	,,	,,	,,	8,91,270
1948	,,	,,	,,	,,	12,16 092
1949	,,	,,	,,	,,	13,64,675
1950	,,	,,	,,	,,	13,51,820
1951	,,	,,	,,	,,	15,12,139
1952	,,	,,	,,	,,	15,96.687
1953	,,	,,	,,	,,	15,60,572
1954	,,	,,	,,	,,	18,84,552

களும் அப்படியே. ஆனால், நம் தமிழ் மாணவர்கள் மட்டும் ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள்.

நாட்டின் விடுதலை இயக்கம் தோன்றிய பிறகுதான் மேடைகளிலே தமிழிலே பேசத் தொடங்கினர்கள். அதுவும் பாமர மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமே என்ற கருத்தினாலேயன்றி மொழிப் பற்றினால் அன்று.

மொழிப் பற்றுக் குறையாத காலத்தில் தமிழர்களிடத்தில் இயல்பாக அமைந்துள்ள பண்பாடு ஒன்றும் அவர்களின் உலகியல் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது என்று கூறினால் அது மிகையாகாது. அஃது என்ன? வெளிநாடுகளில் உண்டான கலகம் காரணமாக ஓடிவந்து தஞ்சம் புகுந்தவர்களை ஏற்று அளவுக்கு மீறிய ஆதரவு அளித்து அவர்கட்கு 'மாப்பிள்ளை' என்ற முறைப் பெயரும் சூட்டிக் காப்பாற்றியது. "ஒப்புர வினன் வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக் கோட்டக்கதுடைத்து" என்னும் பொய்யாமொழி பொய்க்காதபடி 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டியது' என்ற பழமொழிப்படி நாம் விற்கப்படுபவர்களாகவும், ஓட்டப்படுபவர்களாகவும் ஆகி விட்டோம்.

எதிர்காலம்

'ஒரு மொழி வைத்து உலகாண்ட' நமது பழைய காலத்தை இனி நாம் கனவிற்கூடக் காணமுடியாது. பல மாறுதல்கள் ஏற்பட்டதே அதற்குக் காரணம். எனினும், அதனை நினைந்து சோம்பியிராமல் பண்டைத்தமிழர்களின் மொழிப் பற்றையும் அவர்களின் வீர உணர்வையும் கொண்டு வீறிட்டு எழுவோமானால் தமிழ்ச் சமுதாயமும், ஒரு சிறந்த சமுதாயந்தான் என மற்றவர்கள் மதிக்கும் நிலையைப் பெறலாம் என்பது முக்காலும் உறுதி.


"கல் தோன்றி மண் தோன்றுக் காலத்தே, முன் தோன்றி மூத்தகுடி" எனப் பெருமக்களால் பாராட்டப்பட்ட நம் முன்னோர்கள் தம் வாழ்க்கையின் அனுபவப் பயனைக் கண்ட கடவுட் கொள்கையும் புறக்கணிக்கப்படுவது அன்று. தமிழ் எழுத்துக்கட்குப் பெயர் இடுவதற்கு முன்பே தத்துவஞானம் கைவரப்பெற்றவராக இருந்தார்களென்பதற்கு எந்த மொழியாளரும் கையாளாத காரணப் பெயராக உயிர் எழுத்து என்றும், மெய் எழுத்து என்றும் பெயரிட்டதே தக்க சான்றாகும். எனவே, கடவுட் பற்று இல்லாத மொழிப் பற்று முதலியன உயிரற்ற உடலை நிகர்க்கும்.

புறக் கருவிகளாகிய போர்க் கருவிகள் பலவற்றைக் கொண்டு புறப் பகைவர்கள் பலரைக் கொன்று குவித்த ஒருவன் வீரத்தைவிட, கடவுட் கொள்கை, பொய்யாமை முதலிய அகக் கருவிகளால் உள்ளத்தே நிகழும் தீய சக்திகளாகிய பகைவர்களை ஒழித்த ஞானிகள் வீரம் சிறந்தது என நம் முன்னோர்கள் பனுவல்கள் பலவற்றுள் கூறியிருப்பது சிந்தித்தற்குரியது.

எனவே, நம் வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஐயம் திரிபற அறிந்து அவற்றை நீக்கி உயர் நிலையடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

வாழ்க தமிழர் வீரம்! வாழ்க தமிழர்! வாழ்க தமிழ்நாடு!





ஒப்பியல் இலக்கணம்

திரு. ஞா. தேவநேயப்பாவாணர், எம். ஏ.
சேலங்கல்லூரி, சேலம்

★

பொருள் வரையறை

ஒப்பியல் இலக்கணமாவது, மொழிகளின் இலக்கணங்களை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கி, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல். இந்நாடு திரவிட நாட்டின் கூறான தமிழ் நாடாதலானும் இக்கட்டுரை மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலரிதழாதலானும், ஒப்பியல் இலக்கணமென்பது திரவிட மொழிகளின் இலக்கணவமைதிகளை ஒப்பு நோக்குவதையே ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கும். ஆயினும், பல்வேறு மொழிகட்கும் ஏதேனுமொரு வகையில் தொடர்போ ஒப்புமையோ இருத்தலானும், ஒரு குடும்ப மொழிகளை ஒப்பு நோக்குவது போன்றே பல மொழிக் குடும்பங்களையும் ஒப்பு நோக்குவதும் ஒப்பியல் இலக்கணமேயாதலானும், இக்கட்டுரை யிறுதியில், திரவிட மொழியமைதி ஆரிய மொழியமைதியொடும் ஒரு சிறிது ஒப்பு நோக்கப்பெறும். கால்டுவெல் கண்காணியாரும் இம்முறையை விரிவாகக் கடைப்பிடித்திருத்தல் காண்க.

ஒப்பியற் சிறப்பு

ஒப்பியல் என்பது, எல்லாக் கலைத் துறைகளிலும் உண்மையைக் காண்பதற்கு இன்றியமையாத முறையாம். ஆகவே, ஒப்பியல் என்று பெயரும் வாய்ந்த கலைகட்கும் நூல்கட்கும் அதன் இன்றியமையாமையைச் சொல்ல வேண்டுவதில்லை. கால்டுவெல் ஐயர் ஒப்பியலின் தேவையைத் தம் இலக்கண முகவுரையில் (ப. 10) பின்வருமாறு வற்புறுத்துகின்றார்:

"அவர்கள் (திரவிடர்) தங்கள் மொழிகளைப் பிறவற்றுடன் ஒப்பு நோக்க ஒரு போதும் முயன்றதில்லை; தங்கள் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிறமொழிகளுடன் கூட ஒப்பு நோக்கியதில்லை. மொழிக்குடும்பம் என ஒன்றுண்டு என்னும் கருத்தைக் கூட அவர்கள் மனம் பற்றியதில்லை. இதனால், அவர்கள் தங்கள் மொழியைப் படிப்பதில் எடுத்துக்கொண்ட அக்கறையானது, மதி நுட்பத்தோடும் பகுத்துணர்வோடும் கூடியதாயிராமல், நேர்மையாக எதிர்பார்த்த அளவிற்கு மிகக் குறைவான பயனை விளைத்துள்ளது. அவர்கள் மொழி நூல், அப் பெயராற் குறிக்கப்படக் கூடுமாயின், நம் காலம் வரையும், ஊழிகட்கு முன்னிருந்தவாறே தொடக்க நிலையிலும் தண்டு துணிக்கையாகவும் இருந்து வந்திருக்கின்றது. ஒப்பியல் தன்மையில்லாமையால் அது அறிவியல் திறமும் முன்னேற்றமும் அடையவில்லை. ஒப்பியற் கல்வி ஒவ்வோர் அறிவியல் துறையிலும் ஐரோப்பாவில் பெருநலம் பயத்திருக்கின்றது. இந்தியாவிற்கும் அது பெரிதுதவும் என்று எதிர் பார்க்கக் கூடாதா? தென்னிந்திய மக்கள், தங்கள் சொந்த மொழிகளை ஒப்புநோக்கிப் படிப்பதிலும் பொதுவாக ஒப்பியல் மொழி நூலிலும் விருப்பங் கொள்வாராயின் அது, அவர்களின் தனியிலக்கணக் கல்வி இது வரை பயன்பட்டதைவிட மிகமிகப் பல்வேறு வகைகளிற் பயன்படும் என்பதைக் காண்பார்கள். அவர்கள் செய்யுள் நடைப்பட்ட பிதிர்களையும் இன்னிசைப்பட்ட வெற்றெனத் தொடுப்புகளையும் உருப்போட்

டுப் படித்துப் பொந்திகை (திருப்தி) கொள்வதை விட்டு விடுவார்கள்.''

வரலாற்றடிப்படை

எல்லாக்கலைகளும் நூல்களும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன வென்பது, எவரும் அறிந்த வுண்மை. வரலாற்றெடு முரணும் எந்நூலும் நூலாகாது. ஆதலால், மொழி நூலும் அதனை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

தென்னாட்டு வரலாறு உண்மையான முறையில் இதுவரை எழுதப் பெறவில்லை. இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்க வேண்டுமென்று சென்ற நூற்றாண்டே சுந்தரம் பிள்ளையும் வின்செண்டு சிமித்தும் கூறிப்போயினர். ஆயினும், இன்னும் அம்முறை கையாளப் பெறவில்லை. இதற்கு மாறுகத் தென்னாட்டு வரலாறு திறமையுடன் மறைக்கப்பட்டே வருகின்றது. இதனால், மகன் தந்தைக்கும் பேரன் பாட்டனுக்கும் முந்தியவர் என்பதுபோல் தலைகீழாகத் தமிழ் வரலாறும், தமிழ் நாட்டு வரலாறும், இருந்து வருகின்றன.

இந்து மாவாரியில் மூவேறு கடல் கோளால் முழுகிப்போன குமரி (Lemuria) நாட்டுச் செய்தியே தென்னிந்திய அல்லது தமிழக வரலாற்றுத் தொடக்கம். குமரி நாட்டுண்மை,

> ''மூன்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே''
> (9 : 9-11)

என்னும் புறநானூற்றடிகளாலும்,

> ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்திசை யாண்ட தென்னவன் வாழி''
> (11 : 19-22)

என்னும் சிலப்பதிகார அடிகளாலும்,

> ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா
> டிடம்படப்
> புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த
> கிளர்கெண்டை
> வலியிருன் வணக்கிய வாடாச் சீர்த்தென்ன
> வன்''

என்னும் முல்லைக்கலித் தரவாலும் (104),

அக்காலத்து அவர் (தலைச் சங்கப் பாண்டியர்) நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும்—நாற்பத்தென்பது நாடும்—பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவ மென்ரு ரென்றுணர்க.''

என்னும் அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியாலும் (சிலப். சாமிநாதையர் பதிப்பு, பக். 230),

''.....தலைச் சங்கமிருந்தார்.....தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப'' என்றும்,

''.....இடைச் சங்கமிருந்தார்.....தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப,'' என்றும்,

இறையனரகப் பொருளுரை கூறுவதாலும் (பக். 6, 7), பிறவற்றாலும் அறியப் படும்.

திரவிடரெனப் படுவார் தென்னாட்டுப் பழங்குடி மக்களே யென்று, இராமச்சந்திர தீட்சிதர் எழுதியுள்ள **வரலாற்று முன்னைத் தென்னிந்தியா** (Pre-Historic South India), **தமிழரின் தோற்றமும் பரவலும்** (Origin and Spread of the Tamils) என்னும் நூல்களிலும், P. T. சீனிவாசையங்கார் எழுதியுள்ள **இந்தியக் கற்காலம்** (Stone Age of India) என்னும் நூலிலும் பரக்கக் கூறியிருத்தல் காண்க.

குமரிநாட்டு உண்மையை அறிந்தால் தான், தமிழர் தெற்கே தோன்றி வடக்கே சென்று திரவிடராய்த் திரிந்தாரென்ற வுண்

மையையும், திரவிடர் மீண்டும் வட மேற்கே சென்று ஆரியராய்த் திரிந்தாரென்ற வுண்மையையும், தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்ற வுண்மையையும் உணர்தல் இயலும்.

"தென்னாட்டு மொழிகளுக்குள் தமிழ் மிகத் தொன்மையான தென்றும், என் கருத்தின்படி அது திரவிடத் தாய் என்றும் நம்புவதற்கு ஒரு பாணிப்பும் தேவையில்லை" என்று **தமிழரின் தோற்றமும் பரவலும்** என்ற நூலிலும்,

"தமிழேனும் வேறு எத்தென்னிந்திய மொழியேனும் சமற்கிருதத்தினின்று தோன்றியதன்று என்பது மட்டுமன்று; நாம் நெருங்கி ஆயுங்கால், திரவிட மொழிகள் சமற்கிருதத்திடத்தும் வேதமொழிக் கிளைகளிடத்துங்கூட மிகுந்த அளவு செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன என்னும் எம் கொள்கையை வலியுறுத்த மிகுந்த ஒப்புமைகள் காண்கின்றோம்" என்று **திரவிட முன்னைத் தென்னிந்தியா** என்னும் நூலிலும், இராமச்சந்திர தீட்சிதர் கூறியிருப்பதைக் கவனிக்க.

திரவிட மொழிகள் ஆரிய மூலமொழிக்கு மிக நெருங்கியவை என்று கால்டுவெல் தம் ஒப்பியல் இலக்கணத்தில் ஆங்காங்குக் கூறியிருப்பது, ஆழ்ந்து நோக்கத் தக்கது.

திரவிட மொழிகளின் உறவியல் வரிசை

திரவிட மொழிகள் :

(1) தமிழ்
(2) மலையாளம்
(3) தெலுங்கு
(4) கன்னடம்
(5) துளு (துளுவம்)
(6) குடகு (குடகம்)

எனத் திருந்தியவை ஆறும்,

(1) தோடா (தொதுவம்)
(2) கோட்டா
(3) கோண்டு (கோண்டி)
(4) கூ
(5) ஒராஒன்
(6) அரசமகால் (ராஜ்மஹால்)

எனத் திருந்தாதவை ஆறும்,

ஆக மொத்தம் பன்னிரண்டு எனக் கூறினர் கால்டுவெல் ஐயர். இவற்றுடன் பிராகுவீ, பர்சி (பர்ஜி) என்னும் இரு திருந்தா மொழிகளும் சேர்க்கப்பெறும்.

திருந்திய திரவிட மொழிகள் ஆறும், தூய்மை பற்றிய இறங்கு வரிசையிற் பின் வருமாறு அமையும் :

(1) தமிழ்
(2) மலையாளம்
(3) கன்னடம்
(4) துளுவம்
(5) குடகம்
(6) தெலுங்கு

திரவிடம் எனப் பெறும் எல்லா மொழிகளும் இன்று ஒரே பெயரால் வழங்கினும், தமிழொழிந்தவை யெல்லாம் சிறிதும் பெரிதும் ஆரியத் தன்மையடைந்து விட்டமையால், அவற்றைத் தமிழும் திரவிடமும் எனப் பிரித்துக் கோடலே தக்கதாம். அவ்விருபாற்கும் தமிழியம் (Tamulic) என்பதைப் பொதுப் பெயராகக் கொள்ளலாம்.

தமிழினின்று திரிந்த திரவிட மொழிகளுள் மலையாளமும் ஒன்றுகக் கொள்ளப் பெறினும், அது நெருக்கத்திலும் தூய்மையிலும் பிற திரவிட மொழிகளிலும் வேறுபட்டு, தமிழுக்கும் திரவிட மொழிகட்கும் இடைப்பட்ட நிலையிலுள்ளதாகக் கொள்ளல்வேண்டும். தொன்றுதொட்டுப் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சேரநாட்டுச் செந்தமிழாகவும், அதன்பின் 16-ஆம் நூற்றாண்டு வரை கேரளநாட்டுக் கொடுந்தமிழாகவும், இருந்து வந்த மொழியைப் பிற திரவிடமொழிகளோடொப்பக் கொள்வது எவ்வகையினும் பொருந்துவதன்று.

பொதுவாக, திரவிடம் தெற்கே செல்லச் செல்லத் திருந்தி விரியும் என்றும், வடக்கே

செல்லச் செல்லத் திரிந்து சுருங்குமென்றும் அறிதல் வேண்டும்.

திரவிடமெல்லாம் ஒரு மொழி

திரவிட மொழிகள் இன்று பதினொன்கெனக் கணக்கிடப்பட்டிருப்பினும், அவையனைத்தும் ஒரு காலத்தில் ஒரே மொழியாய் வழங்கியமை பின்வரும் சான்றுகளால் உணரப் பெறும் :

(1) திரவிட மொழிகளெல்லாம், முதற் காலத்தில், வேறுபாடின்றி அல்லது வேறுபடுக்கப்படாது தமிழம் அல்லது திரவிடம் என ஒரே பெயரால் அழைக்கப் பெற்றமை.

(2) திரவிட மொழிகட் கெல்லாம் அடிப்படைச் சொற்றொகுதி பெரும்பாலும் ஒத்திருத்தல்.

(3) எல்லாத் திரவிட மொழிகட்கும் இலக்கண அமைதி ஒன்றாயிருத்தல்.

(4) திரவிட மொழிகளுள் ஒவ்வொன்றையும் செவ்வையாய் அறிய ஏனையவற்றின் அறிவு இன்றியமையாமை.

(5) தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய திரவிட மொழிகள் ஒவ்வொன்றுந் தமிழினின்று பிரிந்துபோனமை வரலாற்றாலும் மொழி நூலாலும் அறியப் பெறுதல்.

(6) தமிழல்லாத பண்டைத் தாய் மொழிகளும் பிற்காலத்துப் பல்வேறு கிளை மொழிகளாய்ப் பிரிந்து போனமை.

திரவிடத்தாய்

திரவிட மொழிகட்கெல்லாம் தாய் தமிழே. இதற்குச் சான்றுகளாவன :—

(1) தமிழின் தொன்மையும் அது குமரி நாட்டில் தோன்றியமையும்.

(2) தமிழின் ஒலியெளிமை.

(3) வட மொழியும் பிற மொழியும் கலவாத் தூய்மையில் தமிழ் சிறந்திருத்தல்.

(4) தமிழின் சொல்வளம்.

(5) தமிழின் சொற் செம்மை.

(6) திரவிடத்திற்குச் சிறப்பான இலக்கியம் தமிழிலேயே இருத்தல்.

(7) தமிழம் என்னும் பெயரே (த்ரமிளம்—த்ரமிடம்—த்ரவிடம்) திரவிடம் எனத் திரிந்தமை.

(8) கடைச் சங்க காலத்தில் வேங்கடத்திற்குத் தெற்கில் தமிழே வழங்கியமை.

தமிழின் திரவிடத் தாய்மையை, அதனின்று மிகமிகப் பிரிந்து போனதும் பெருநிலத்தில் வழங்குவதும் திரவிட மொழிகட்குள் பிறங்கித் தோன்றுவதுமான தெலுங்கொன்றன் வாயிலாய் அறியலாம்.

எடுத்துக்காட்டு : 1. மூவிடப் பெயர்

தமிழ்	தெலுங்கு
யான்—நான்	நேனு
யாம்	மேமு
நாம்	மனமு
நீன்—நீ	நீவு
நீம், நீர்	மீரு
அவன்	வாடு
அவள்	அதி
அவர்	வாரு
அது	அதி
அவை	அவி

2. ஆகு என்னும் வினைச்சொற் புடைபெயர்ச்சி

தமிழ்	தெலுங்கு
பகுதி—ஆ, ஆகு	அவு
ஏவல் ஒருமை—ஆ, ஆகு	கா, கம்மு
ஏவல் பன்மை—ஆகுங்கள்	கண்டி
தன்மையொருமை	
இ. கா. முற்று—ஆயினேன்	அயினனு
இ. கா. பெயரெச்சம்—ஆன	அயின, ஐன
,, ,, வினையெச்சம்—ஆய்	அயி, ஐ
நி. கா. ,, —ஆக	கா, அவ
எ. கா. ,, —ஆயிற்றேல்	அயித்தே
படர்க்கை எதிர்கால	
வினைமுற்று—ஆகும், ஆம்	அவுனு
உடன்பாட்டிடைச்சொல்—ஆம்	அவுனு
ஒன்றன்பால் எதிர்மறை	
வினைமுற்று —ஆகாது	காது

தொழிற்பெயர்—ஆதல், ஆகுதல் (முதலியன)	அவுட்ட, காவ டமு (முதலியன)

தமிழுக்குத் திரவிடத்துணை

பண்டைத் தமிழகத்தின் பெரும் பகுதியைக் கடல்கொண்டமை காரணமாக, அப் பகுதியில் சிறப்பாக வழங்கிய உலக வழக்குச் சொற்களும் தொல்காப்பியத்திற்கு முந்திய இலக்கண இலக்கியக் கலைநூல்களும் மறைந்துபோனமையாலும், அதன் பின்னரும் இயற்கையாகவும் செயற்கையாகவும் தமிழுக்கு நேர்ந்துள்ள பல இன்னல்களின் விளைவாகவும், பல தமிழ்ச்சொற்களும் சொல் வடிவுகளும் இன்று தமிழல்லாத திரவிட மொழிகளிலேயே வழங்கிவரக் காண்கின்றோம்.

எ. டு:	சொல்	சொல் வடிவு
(தெலுங்கு)	எச்சரிக்கை	நன் (நான் என்பதன் வேற்றுமையடி)

இற்றைத் தமிழிலில்லாது பிற திரவிட மொழிக்ளிற் சிறப்பாக வழங்கும் தென் சொற்கள், திசைச் சொல்லின் பாற்படும்; சொல்வடிவுகள் **குடியேற்றப் பாதுகாப்பு** (Colonial Preservation) என்னும் நெறி முறைக் கெடுத்துக்காட்டாம்.

திரவிட மொழிகளுள், தமிழை வளம் படுத்தற்கும் தமிழ் இலக்கணச் சொல் லுறுப்புக்களின் பண்டை நிலையை அறிதற் கும் மலையாளம்போல் உதவுவது பிறி தொன்றுமில்லை.

எ. டு: (1) கின்று என்னும் நிகழ்கால இடைநிலை

கின்று என்னும் நிகழ்கால இடைநிலை, குந்து-வந்து என்று மலையாளத்திலும், (குந்து)–குந்–உந்–ந் என்று தமிழிலும் திரியும்.

செய்கின்று–செய்குந்து–செ ய் யு ந் து. (மலை.)

எ. டு:

செய்கின்றுன்–செய்குந்நான்–செய்குநன் (தமிழ்)

செய்குந்நான்–செய்யுந்நான்–செய்யுநன்–செய்நன்—(தமிழ்)

'மகிழ்நன்', 'வாழ்நன்' (வாணன்) முதலியன இங்ஙனம் திரிந்தவையே.

(2) செய்யாதே என்னும் எதிர்மறை ஏவல்வினை

செய்யாதே என்னும் எதிர்மறை ஏவல், மலையாளத்தில் செய்யருது என்னும் வடிவு கொண்டு நிற்கும். 'செய்யருது' என்பது 'செய்யரிது' என்பதன் திரிபு. 'செய்யரிது' என்பது முறையே, செய்ய முடியாது, செய்யக்கூடாது என்னும் பொருளது, அருது (அரிது) என்பது மலையாளத்தில் தனிவினையாகவும் வரும்.

எ.டு: ஈ ஆள்க்கு வேறே பணி அருது=இவ் ஆட்கு வேறுவேலை கூடாது.

'ஆர்க்கானும் கொடுக்கும் போழ் அருதென்னு விலக்கருது.' (பழமொழி)

(3) யகரமெய்யீற்று இறந்தகால வினையெச்சம்

தமிழ் வினைமுற்றுக்கள் முதற்காலத்தில் எச்ச வடிவில் வழங்கிப் பின்பு முற்றீறு புணர்ந்தனவாதலின், அவற்றைப் பகுக்கும் போதும் எச்சமும் ஈறுமாகவே பகுத்தல் வேண்டும்.

எ. டு:

வந்து + ஆன் = வந்தான்
உறங்கி + ஆன் = உறங்கியான்—உறங்கினன்

ய–ந போலி. ஒப்புநோக்க: யான்–நான், யமன்–நமன்.

'ஆய்', 'போய்' முதலிய யகர மெய்யீற்று இறந்த கால வினை யெச்சங்கள் மலையாளத்தில் ஆயி, போயி என இகரவீற்று வடிவில் நிற்கும்.

ஆயி + ஆன் = ஆயியான்—ஆயினன்
ஆயி—ஆய் + ஆன் = ஆயான்—ஆனன்

இனி வடநாட்டு மொழியாகிய இந்தியிலும் பிற ஆரிய மொழிகளிலும், எழுவாயையும் பெயர்ப்பயனிலையையும் இணைக்கும் 'இரு' என்னும் புணர்ப்புச்சொற்கும்

(Copula), மலையாளம் அடிகோலியது என்னலாம்.

எ. டு:

மலையாளம்	இந்தி	ஆங்கிலம்
இதுஎந்தாகுன்னு?	யஹ் கியா ஹை?	What is this?
இது ஒரு மரமாகுன்னு.	யஹ் பேட் ஹை.	This is a tree.

வடநாட்டு ஆரியமொழிகளின் திரவிட அடிப்படை

ஆரியமொழிகளாகக் கூறப்படும் வட நாட்டு மொழிகளில், திரவிடச் சொற்கள் மட்டுமின்றித் திரவிட மொழியமைதியும் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. இதை இந்திவாயிலாற் காட்டுவல்.

(1) ஆயா, போலா என ஆவீறுகொண்டு இறந்தகாலம் காட்டும் இந்தி வினைமுற்றுக் கள் செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சத்தை யொத்தன.

(2) ஆயியே, போலியே என 'இயே' ஈறுகொள்ளும் இந்தி வேண்டுகோள் வினை கள், செய்யிய என்னும் வாய்பாட்டு வியங் கோள் வினை யொத்தன.

(3) படே படே, சல்தே சல்தே என அடுக்கிவரும் இந்திச்சொல்லிரட்டைகள், பெரிய பெரிய, நடந்து நடந்து என வரும் அடுக்குத் தொடரை முற்றும் ஒத்தன.

(4) வஹ் கியா கர்த்தா ஹை? (அவன் என்ன செய்கிருன்?), ராமா பாத் காத்தா ஹை (இராமன் சோறு உண்கின் ருன்) என அமையும் இந்திச் சொற்றொடர் கள் முற்றும் தமிழொழுங்கைப் பின்பற்றி யன.

ஆங்கிலத் தமிழமைதி யொப்புமை

(1) தனிக்குறில் முன்னெற்றுயிர்வரின் இரட்டல்.

எ. டு: thin + er = thinner, sit + ing = sitting.

(2) நிகழ்கால வினையெச்சம் எழுவாயா தல்.

எ. டு: *to err* is human.

எனக்குப் பாடத் தெரியும்.

(3) வினைக்காலங்களின் நால்வேறுபாடு.

எ. டு: **நிகழ்காலம்** வருகிருன் – தனிப்பு (Indefinite)

வந்து கொண்டிருக்கிருன்–தொடர்ச்சி (Continuous)

வந்திருக்கிருன்–நிறைவு (Perfect)

வந்து கொண்டிருந்திருக்கிருன்–நிறைவுத் தொடர்ச்சி (Perfect Continuous).

கால்டுவெல் ஐயரின் சறுக்கல்கள்

கால்டுவெல் ஐயர் தலைசிறந்த திரவிட மொழியாராய்ச்சி சொல்லாராய்ச்சி வல்லுன ரேனும், தொல்காப்பியப் பயிற்சியும் சங்க நூற் கல்வியும் மொழியாராய்ச்சியும் அக் காலத்தன்மையாலும், எல்லாத் துறையி லும் ஆரியத் தலைமை எதிர்ப்பின்றியிருந்து வந்ததினாலும் தமிழின் தனித் தன்மையை யன்றித் தாய்மையையும் தலைமையையும் உணராது இலக்கண முள்ளிட்ட உயர்தரக் கலை நூல்கள் ஆரிய வழியினவென்றும், ஆன்மா பாவம் முதலிய பல கருத்துக்களை யுணர்த்தத் தமிழிற் சொல்லில்லை யென்றும் தமிழ்ப் பெயர் வேற்றுமை வகுப்பு சமற் கிருதத்தைப் பின்பற்றிய தென்றும் தமிழர் அல்லது திரவிடர் பொதுவாய்த் தாழ்ந்த நாகரிக நிலையினர் என்றும் கூறிப்போந்தார். இனி, திரவிட மொழிகளிற் செயப்பாட்டு வினையில்லையென்றதும், ஆரிய முறையை அவர் அளவையாகக் கொண்டதைக் காட்டும்.

தமிழின் பொது வியல்பு

தமிழ் உலக முதற்றாய் மொழியாதலால், சின மொழியின் அசை நிலைத் தன்மையை யும், ஆரிய மொழிகளின் விகுதி நிலைத் தன்மையையும், சித்திய மொழிகளின் கொளுவு நிலைத் தன்மையையும், சேமிய மொழிகளின் உயிர்த்திரிவுத் தன்மையையும், ஆப்பிரிக்க மொழிகளின் பாலிசைவுத் தன்மையையும், அமெரிக்க மொழிகளின் தொகுதி நிலைத் தன்மையையும் ஒருங்கே கொண்டுள்ளது.

ஒழுக்கமே மக்கட் பண்பு

நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்

★

மதி நுட்பம் அல்லது புத்தியே உயிர்ப் பண்பு என்பது வடநூலுடையார் கொள்கை. பொருள் அனைத்தும் சேதனம் அசேதனம், அறிவுற்றதும் அற்றதும் என இரு வகுப்பினுள் அடங்கும் என்பதவர் துணிவு. உயிர்கள் ஒன்று முதல் ஆறுவரை அறிவுடையவை; உயிரினத்தில் மக்களும் தலையாய ஒரு வகுப்பினரே யாவர்; அறிவு ஆறும் நிறையப் பெற்றவர் மாந்தர்; அவரல்லா அனைத்துயிரும் வரிசையாக ஒன்று முதல் ஐந்தறிவே உடையன. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐந்து புலனுணர்வோடு, சிந்தித்துத் துணியும் மதியுடைமையே மக்கட் பண்பு என்று அவர் கருதுவர்.

மதியுடைமை மக்கட்குச் சிறப்புரிமையன்று; மாக்களும் மதி நுட்பமுடையனவே என்பது தமிழர் கொள்கை. மக்களும் மாக்களும் தம்முள் மதி அளவால் மாறுபடுவதன்றி, தன்மை அல்லது பண்பால் அவருள் வேறுபாடு காணற்கில்லை. அறம் பிறழா ஒழுக்கம் ஒன்றே மக்கட் சிறப்பு என்பர் தமிழறிஞர். தமிழில் திணை என்பது ஒழுக்கம் குறிக்கும் மரபுச் சொல். உயிராலும் அறிவாலு மன்றி, ஒழுக்கம் ஒன்றே பற்றிப் பொருளனைத்தையும் உயர்திணை அஃறிணை எனப் பிரிப்பர் தமிழ்ச் சான்றோர்.

> "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவரல பிறவே"

என்பது மூவாயிர மாண்டுகட்கு முந்திய தொல்காப்பியர் கூற்று.

உயிருள்ளவை இல்லவை என்றேனும், அறிவுடையவை இல்லவை என்றேனும் பிரிக்காமல், பொருளனைத்தையும் மக்கட்கே சிறப்புரிமையான ஒழுக்கம் ஒன்றையே ஆதாரமாகக் கொண்டது இப்பாகுபாடு என்பது தேற்றம். எனவே, பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் ஒழுக்கம் ஒன்றையே மக்கட் பண்பு எனக் கொண்டனர்.

ஏறத்தாழ எல்லா உயிர்கட்கும் பொதுவான அறிவைப் பொருட்டாக்காமல், ஒழுக்கம் ஒன்றையே ஆதாரமாகக் கொண்டது இப்பாகுபாடு என்றும், திணை என்பது ஒழுக்கம் குறிக்கும் மரபுச் சொல் என்றும் முன்பு யாம் சுட்டியது காண்க.

ஒழுக்கம் ஒன்றையே தமக்குச் சிறப்புரிமையாகக்கொண்டவர் மக்கள் மட்டுமே. அதனால் அவரைத் தனிவேறு பிரித்துத் தலைமை தந்து நிறுத்தி, மற்றுயிரை அறிவுடையவும் இல்லவுமான எல்லாவற்றையும் வேறு ஒரே வகுப்பினுள் அடக்குவாரானார் தமிழ் நூலுடையார். **"உயர்திணை என்மனார் மக்கள்தாமே"** என்னுமல் "மக்கட் சுட்டே" என விதந்து சுட்டுவர். எனவே மாந்தர் ஒழுக்கம் உடைமையால் மக்கள் எனவும் அஃதின்மையால் மாக்கள் (விலங்குகள்) எனவும் கொள்ளப்படுவாராயினர்.

இது மட்டோ? பிறப்பால் மாந்தராய், உருவத்தால் மக்கள் போல்வார் எல்லாரையும் மக்கள் எனக் கொள்ளாமல் விலக்கவும் துணிவர்.

> "உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்ரூல்;
> வெறுத்தக்க
> பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு."

என்பது பொய்யில் புலவர் பொருளுரை.

கேவலம் மதி நுட்பம் மக்கட் பண்பாகாது என்பதையும் ஒழுக்கம் ஒன்றே மக்கட் பண்பாம் என்பதையும் வற்புறுத்துவர் தமிழ்ச் சான்றோர்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்
போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

என விளக்கப்படுதல் காண்க.

எல்லா நன்மைக்கும் ஒழுக்கமே வித்தும் விளைபயனும் ஆகும். இதனை "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பதனால் அறிக.

மக்களுள் உயர்வு தாழ்வு பிறப்பால் இல்லை; ஒழுக்கத்தால் உண்டு. மக்கட்கு மட்டுமன்றி, எல்லா உயிர்கட்கும் பிறப் பொப்புமை உண்டு. "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பர் வள்ளுவர். ஒழுக்கம் ஒன்றால் மட்டுமே மக்கள் தனிச் சிறப்புடையவராவர் என்பதை,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்
கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்பர். அந்த

"ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என எச்சரிப்பர். ஒழுக்கமின்மையால் எய்தும் பழியை அறிவுடை மக்கள் அனைவரும் நாணுவர். "நாணுடைமை மாந்தர் சிறப்பு".

மதி நுட்பம் மக்கள் பண்பன்று; ஒழுக்கமே மக்கட் பண்பு என்பது தமிழர் கொள்கை. ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புதல் தமிழர் கடமை.

வணிக வளர்ச்சிக்கு விளம்பரம் அவசியம் : அதற்கு ஏற்ற சிறந்த சாதனம்

தமிழ் நாடு

உண்மை ஒளிக்க

Tamil Nadu

நிருவாக ஆசிரியர்: திரு. கருமுத்து தியாகராசன்

எளிய, இனிய, தூய தமிழில் நடு நிலைமையுடன் செய்திகளும், கருத்துக்களும் இந்நாளிதமிழில் வெளி வருகின்றன. செல்வாக்குள்ளவர்களால் வெளியிடப்பட்டு, தொழிலதிபர்கள், வணிகர்கள், அரசியல் தலைவர்கள் கலைஞர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவருடைய நன்மதிப்புடன் உலவிவருவது "தமிழ் நாடு".

இந்தியாவின் பல பாகங்களிலும், வெளி நாடுகளிலும் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் படிப்பது "தமிழ்நாடு" ஒன்றேதான்.

தனிப் பிரதி விலை 1 அணா. ஆண்டு சந்தா ரூ. 23, 6 மாத சந்தா ரூ. 11 8 0

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

மற்ற விவரங்களுக்கு: செயலர் "தமிழ் நாடு"
7, ஆண்டாள்புரம்,
அஞ்சல் பெட்டி எண் 49
மதுரை

இடைக்கால இசை

இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்

★

தெய்வீக இசை வளர்ந்த காலமாகிய இடைக்கால இசையைப்பற்றிப் பேசப் புகு முன், அதற்கு மூலகாரணமாக விருந்த முதற் கால இசையைப் பற்றியும் சிறிது கூறுதல் இன்றியமையாததென்று கருதுகின்றேன்.

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய் தல் ஆகியவை பண்டைத் தமிழ் நாட்டின் பாகுபாடுகளாம். குறவர், ஆயர், எயினர், உழவர், பரதவர் எனப்படுவோர் அந்நிலத்து வாழ்ந்த மக்கள். அவரவரும் தாம் வாழ்ந்த நிலத்திற்கேற்றவாறு தொழிலையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு வாழ்ந்த னர். உணவு வகைகளும் நிலத்திற்கேற்ற வாறு வேறுபட்டிருந்தன. மணமுறை நிலத்திற்கேற்றவாறு மன வுணர்ச்சியை இனிய முறையில் வெளிப்படுத்தும் இசையும் தோன்றலாயிற்று. இதற்குத் துணைக் கருவி களும் பல தோன்றத் தொடங்கின. குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் குறிஞ்சிப் பண்ணைப் பாடி மகிழ்ந்தனர். முல்லை நிலத்து வாழ்ந்த ஆயர் தாம் பாடிய இசைக்கு முல்லைப்பண் அல்லது சாதாரிப் பண் எனப் பெயரிட்டனர். மருத நிலத் தோர் பாடி மகிழ்ந்த பண் மருதப்பண்ணே. செவ்வழிப்பண் அல்லது நெய்தற் பண்ணைப் பாடியின்புற்றார்கள் நெய்தல் நிலத்தார். பாலை நிலத்தோர்க் குரியதாக வமைந்தது பாலைப்பண். இவ்வாறு ஐவகை நிலத்தா ரும் தம் மனவுணர்வைத் தாம் வாழ்ந்த நிலத்திற் கேற்றவாறு வெளிப்படுத்த ஐவ கைப் பண்களைக் கண்டார்கள். மனிதன் மலையையும், கடலையும் மற்றவற்றையும் சார்ந்து வாழ்ந்த காலம் மிகப் பழைய கால மென்பதை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் வாழ்ந்த காலத்தில் கண்ட பண்களே குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப்பண், முல்லைப்பண், நெய்தற்பண் எனப்படுவன. இவ்வைந்துமே ஆதிப் பண்களாகும். இவற்றினின்றும் கிளைத்தனவே இன்று நாம் காணும் தமிழ்ப்பண்களனைத்தும். இந்தப் பண்ணினின்றுந் தோன்றியவை இவை இவையென்று இன்று நம்மால் அறியக் கூடவில்லை. அந்தப் பாகுபாடு நமக்கு வரு மாயின் பண்ணறிந்து பாடுதல் எளிதாக முடியும். பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிலே பேசப்படும் பண்களைப் பெய ரளவில்தான் அறிகின்றோம். அவற்றைப் பாடும் முறையையும் அவற்றிற்குரிய பாட் டுக்களையும் நம்மால் அறியமுடியவில்லை. வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி முதலி யன குறிஞ்சிப் பண்ணின் வகையோ வென்று கருத வேண்டியிருக்கிறது. இவ் வகையில் இசைவாணர்களின் ஆராய்ச்சியும் உழைப்பும் மிகுதியும் தேவைப்படுகின்றது.

பண்களைத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்து வாழ்ந்தோரும் இசைக் கருவிகளையும் தோற்றுவித்தார்கள். குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் யாம யாழினையும் தொண்டகப் பறையினையும் கண்டார்கள். முல்லை நிலத்தோர் முல்லை யாழினையும் ஏறு கோட் பறையினையும் மேற்கொண்டார்கள். மருதயாழும் மணமுழவும் மருத நிலத்திற் குரியவாயின. விளரி யாழினையும் மீன் கோட் பறையினையும் நெய்தல் நிலத்தோர் கொண் டார்கள். பாலை நிலத்தோர் பாலை யாழினை யும் நிரைகோட்பறையினையும் பெற்றார் கள். இவையே ஆதிகால யாழ் வகைகளும்

பறை வகைகளுமாம். இவற்றினின்றுங் கிளைத்தெழுந்து வளர்ந்தனவே இன்று நாம் காணும் இசைக் கருவிகளனைத்தும்.

இவை கண்டது மட்டுமின்றிப் பண்கள் பாடப் படுவதற்குரிய காலத்தையும் அவர் கள் கண்டறிந்தார்கள். குறிஞ்சிப்பண் பாடுவதற்குரிய நேரம் யாமம் என்பதும், பாலைப்பண் பாடுதற்குரிய நேரம் நண்பகல் என்பதும், சாதாரிப் பண் பாடுதற்குரிய காலம் மாலை யென்பதும், விளரிப் பண்ணிற் குப் பொருந்திய நேரம் எற்பாடு என்பதும், மருதப் பண்ணிற்குரிய நேரம் விடியல் என் பதும் அவர்கள் கண்டனவே.

இவ்வாறு பண்களைக் கண்டு அவற்றிற் குரிய இசைக் கருவிகளுடன் உரிய காலங் களில் அவற்றைப் பாடி இசையின்பம் பெற்று மகிழ்ந்தார்கள் நம் முன்னோர். இவற்றிற் பிறழ்தலின்றிப் பாடுதலையும் அவர்கள் பெருங்கடனுகக் கொண்டார்கள். பத்துப் பாட்டுள் ஒன்றுகிய மலைபடு கடாத் தில் பெருங் கௌசிகனுர் கூத்தன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் பொழுது "நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி" யெனவும், "எருது எறி காமரோதையொடு நல்யாழ், மருதம் பண்ணியசையனிர் கழிமின்" என வும் குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சிப் பண்ணை யும் மருத நிலத்தில் மருதப் பண்ணையும் பாடிக்கொண்டு போகுமாறு அறிவுறுத்து வதும் இங்கு நினைவுகூர்தற்குரிய தொன் றும்.

இங்ஙனம் பாடுதல் தொழிலையே தன் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பாணன், பாடினி யெனப்பட்டார்கள். அவர் கள் அரசர்களையும் வள்ளல்களையுமடைந்து தம் திறங் காட்டிப் பரிசில் பெற்று வாழ்ந் தார்கள். அரசர்களும் வள்ளல்களும் பாணர்களைப் பெரிதும் ஆதரித்தார்கள். அர சர்களுக்கும் பாணர்களுக்கும் நல்லுறவு ஏற் பட்டிருந்தது. இயற் புலவர்கள் தாம் அர சர்களைப் பற்றியோ வள்ளல்களைப் பற் றியோ பாடுவதாக இருந்தால் பாணன் கூற்றுகவோ, பாடினி கூற்றுகவோ, பாணனை ஆற்றுப்படுத்துவதாகவோ, விற லியை ஆற்றுப்படுத்துவதாகவோ பாடும் முறையை மேற்கொண்டிருந்தார்கள். தம் மைப் பாணனுகவும் பாடினியாகவும் படைத் துக் கொண்டு பாடிய புலவர்களும் உண்டு. இம்முறையைப் புலவர்கள் படைத்துக் கொண்டு பாடியதற்குரிய காரணங்கள், பண்டைப் புரவலர்க்கும் பாணர்க்கும் ஏற் பட்டிருந்த நல்லுறவும் பெரு மதிப்புமே யாகும். ஆகவேதான், இயற் புலவர்கள் இவ்வாறு தம்மைப் பாணனுகவும் பாடினி யாகவும் படைத்துக்கொண்டு செய்யுள் இயற்றினர்கள்.

இயற்றமிழின் பொற்காலம் சங்க காலம் எனப்படும். இசைத் தமிழுக்கும் பொற் காலம் அதுவே யாதலை நாம் அறிதல் வேண் டும். முதல், இடை, கடைச் சங்கங்கள் முத்தமிழையும் வளர்த்தன. அகத்தியர், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக் கும் இலக்கணம் வகுத்தாரெனக் கேட்கின் றோம். இசை நூல்கள் எண்ணற்றன தோன்றின. அச்சங்கங்களில், ஔவையார் விநாயகரைப் "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றுந் தா"வெனக் கேட்கின்றுர். இசையினையும் சங்கத்தார் வளர்த்தார்கள் என்பதனை இதி னின்றும் நாம் அறியலாமல்லவா? இயற்ற மிழை வளர்ப்பதற்குச் சங்கம் இருந்தது போன்றே இசைத்தமிழை வளர்க்கத் தனிச் சங்கம் இருந்தது என்று கூறுவோருமுளர். திருக்கோவையாருள் வரும் பாட்டினை அவர்கள் மேற்கோளாகக் காட்டுவர். நினது உடல் இங்ஙனம் இளைத்துப் போகக் கார ணம் என்னவெனத் தோழன் தலைவனைக் கேட்பதாக வரும் துறைப்பாட்டு அது.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலிலைந்த
வொண் தீந்தமிழின்

துறைவாய் நுழைந்த னையோவன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு
என்கொலாம் புகுந்தெய்தியதே.''

தமிழின் அகத்துறை புறத்துறைகளை ஆய்ந்து கற்கப் புகுந்தாயோ ; ஏழிசைச் சூழலை யெய்தினையோ ; நினது உடல் இங்ஙனம் இளைத்திருக்கக் காரணமென்னவென்று பாங்கன் தலைவனைக் கேட்டதாக மணிவாசகனார் பாடியிருக்கின்றார். இதனுள் ஏழிசை யெனக் குறிக்கப்படுவது இசையேயாகும். சூழல் எனப்படுவது சங்கமேயாகும். இயலை வளர்த்தது போன்றே இசைக்கும் தனிச் சங்கம் வைத்து வளர்த்தார்கள் பாண்டியர் கள் எனக் கூறுவார்கள்.

இக்கருத்தினை வலியுறுத்துவது போன்று காணப்படுகின்றது நள வெண்பாவிற் காணப்படும் நல்லதொரு செய்யுள். சுயம் வரம் நடைபெறுகின்றது. தமயந்திக்கு அருகிலிருந்த தோழி அரசர்கள் ஒவ்வொரு வரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு வரு கின்றாள். பாண்டியனை அவள் அறிமுகப் படுத்தும்பொழுது,

''ஆழி வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூற்சங்கத் திருந்தானும்—
நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய்இச் சேய்.''

என அறிமுகப்படுத்துகின்றாள். ஏழிசை நூற் சங்கத்திருந்தான் பாண்டியன் என அறிமுகப்படுத்தப்படுவதை நாம் ஆராய்தல் வேண்டும். இசைத் தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் இருந்ததென்பதும் அதனையும் பாண் டியர்களே ஆதரித்தார்களென்பதும் இதி லிருந்து நாம் அறியக்கூடிய செய்தி களாம். சிகண்டியார் என்பவர் தொல் காப்பியர் காலத்து வாழ்ந்தவர். அவ ரால் இயற்றப்பட்டது இசை நுணுக் கம் என்பதாகும். இந்திரகாளியம், பஞ்ச மரபு, செயிற்றியம் போன்ற இசை நூல் களும் சங்க காலத்தேதாம் தோன்றின. ஏர ணம் முதலிய நூல்களின் பெயரைக் கூறி அவையனைத்தும் ''வாரணம் கொண்டது அந்தோ வழிவழிப் பெயருமான'' வென்று வருந்துகின்றார் ஒரு புலவர். அவர் கூறும் நூல்களுள் பல இசை நூல்களாக விருக் கலாமெனத் தோன்றுகின்றது. இயலிலும் இசையிலும் வல்ல புலவர்கள் பலர் சங்கத் திருந்தார்களென அறிகிறோம். அவர்களால் விடப்பட்ட அங்கொன்றும் இங்கொன்று மாகக் கிடைக்கின்ற செய்யுட்கள் அதற்குச் சான்றுகளிருக்கின்றன.

எனவே முதல், இடை, கடைச் சங்கங் களில் முத்தமிழிலும் வல்ல புலவர்கள் ஒருங்கிருந்து முத்தமிழையும் வளர்த்தார் களென்பதும் இயற்றமிழில் நூல்கள் எண் ணற்று எழுந்தது போன்றே இசைத் தமிழி லும் நூல்கள் எழுந்தனவென்பதும் சங்க காலம் இசைக்குப் பொற்காலமாக இலங் கிற்றென்பதும் அறியப்படும்.

கடைச் சங்க காலத்தை யடுத்து எழுந் தது எனக் கருதப்படும் சிலப்பதிகாரமும் முத்தமிழ்க் காப்பியமாகவே காணப்படுகின் றது. இசையாசிரியன் அமைதி, தண்ணுமை யாசிரியன் அமைதி, குழலாசிரியன் அமைதி, யாழாசிரியன் அமைதி, அரங்கின் அமைதி முதலியன கூறும் அரங்கேற்று காதை இசைக்கு இலக்கணங் கூறுங் காதையாக அமைந்திருக்கின்றது. கானல்வரியும், ஆய்ச் சியர் குரவையும், வாழ்த்துக் காதையும் அவ்விலக்கணங்கட் கேற்ற இலக்கியங் களாகக் காட்சியளிக்கின்றன. சிறப்பாக வரிப்பாடல்கள் நிரம்ப மேற்கொள்ளப்பட் டிருக்கின்றன இளங்கோ அடிகளால். வரிப் பாட்டுக்கள் திணை நிலைவரி, கிணை நிலைவரி, முகமுடை வரி, முகமில் வரி, படைப்பு வரி யெனப் பலவகைப்படுமென்பர். அவை யனைத்தும் இந்நூலுள் சிறப்பாகக் காணப் படுகின்றன.

கானல் வரி முதலியன திணை நிலை வரியின் பாற்படும். ஆற்று வரி, ஊர் வரி முதலி யன கானல் வரியின் பிளவுகளே. இவை

யனைத்தையும் அடிகளார் சிறப்புறக் கையாண்டிருக்கின்றார் தம் நூலுள். ஒன்றினை முன்னிலைப்படுத்தித் தன் கருத்தினைக் கூறுவதை முகமுடை வரி யென்பர். காவிரியை முன்னிலைப்படுத்தித் தன் கருத்தைக் கோவலன் கூறியதாக இளங்கோஅடிகளார் கூறும் திறன் அறிந்து மகிழ்தற்குரிய தொன்றும்.

திங்கள் மாலை வெண்குடையான் சென்னி
செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்
வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா
தொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று அறிந்தேன்
வாழி காவேரி

என்பது முகமுடை வரிக்கு எடுத்துக்காட்டாகும்.

சிலம்பினை யடுத்தும் அதே காலத்தும் தோன்றிய நூல்களுள்ளும் இசையின் பெருமையை ஆசிரியர்கள் விளக்கியிருக்கிறார்கள். உதயணனுடைய வரலாற்றைக் கூறுவது பெருங் கதை யென்னும் பெருநூல். உதயணனை இசையின் வடிவமாகக் காட்டியிருக்கும் திறம் அறிந்து மகிழ்தற்குரியதாம். அஃறிணைப் பொருளாகிய யானையையும் தனது இசைத் திறத்தால் தன் வயப்படுத்தித் தனது ஏவல் செய்யுமாறு ஆக்கிக்கொண்டான் உதயணன் என்பது பெருங்கதையுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

திருத்தக்க தேவர் இயற்றிய சிந்தாமணியுள்ளும் இசைத்திறம் சிறப்பாகப் பாராட்டப்பட்டிருக்கின்றது. காந்தருவதத்தையார் பாடிய முறை பின்வருவோர் அனைவருக்கும் வழிகாட்டியாக இருக்குமாறு அதனுள் ஆசிரியரால் காட்டப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு காப்பியம் பாடிய புலவர்களனைவரும் இசைத்தமிழை வளர்த்தலும் தம் கடனெனக் கருதிப் போற்றினர்கள். இவையனைத்தும் கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டு வரை இசைத் தமிழ் வளர்ந்த வரலாற்று விளக்கங்களே.

தமிழக வரலாற்றுள் கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள இடைப்பட்ட காலத்தை இருண்டகாலம் என்பர். அக்காலத்து ஆண்ட அரசர்களைப் பற்றியோ வள்ளல்களைப் பற்றியோ வாழ்ந்த மக்களைப் பற்றியோ யாதொன்றும் அறியப்பட்டிலது. ஆகவே அக்காலத்திய இசை வளர்ச்சியைப் பற்றியறிந்து கொள்ளவும் இயலவில்லை.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றும் நூற்றாண்டு வரை தெய்வீக இசை தமிழகத்தில் தோன்றிச் செழிப்புற்றிருந்தது. இக்காலத்தின் முற்பகுதியைத் தெய்வீக இசைத் தோற்றத்தின் காலமாகவும் பிற்பகுதியை அதன் வளர்ச்சிக்குரிய காலமாகவும் கொள்ளவேண்டும். ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி நாளும் இவ்விசையால் நற்றமிழ் பரப்பினர்கள். பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டு வரை சோழவரசர்கள் சிவநெறிச் செல்வராயிருந்து தேவாரங்களை நாடு முழுவதும் பரப்பினர்கள்.

இடைக்காலத்தில் தோன்றிய அடியவர்கள் அனைவரும் இன்னிசையால் இனிய தமிழைப் பரப்பினர்கள். இன்னிசையோடு பாடல்களைப் பாடவேண்டிய சூழ்நிலை அன்றிருந்ததென அறியக்கிடக்கின்றது. இசையில் மக்கள் பெரு விருப்பமுடையவர்களாக அன்றிருந்தமையால் அதனையே கருவியாகக் கொண்டார்கள் அடியார்கள் என்று கொள்ளல் தகும். அவ்வாறுயின் இருண்டகாலமெனப்படும் காலத்திலும் இசை தடையேதுமின்றி வளர்ந்து வந்தது என்று கொள்ளவேண்டும். இசையையே மக்கள் இன்னதென்றறியா திருந்த காரணத்தினால் தான் அதனையே கருவியாகக்கொண்டு அடியார்கள் தம் கருத்தைப் பரப்பினர்கள் என்

றுங் கொள்ளல் தகும். எது எவ்வாறு யினும் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது இசை யென்பதை யுணர்ந்து அதனைக் கருவியாகக் கொண்டார்கள் அடியவர்கள் அனைவரும் என்பது மட்டும் உறுதியாக அறியக்கிடக்கின்றது. சமணம் போன்ற பிற சமயங்களினின்றும் மக்களை விடுவிக்க அடியார்கள் முயன்றார்களாதலின் அனைவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் இசையே அம்முயற்சி முற்றுப் பெறுதற் கேற்ற கருவியென்றும் அடியார்கள் கருதியிருக்கலாம். எனவே இயற்றமிழும் இசைத் தமிழும் அடியார்களால் பரப்பப்பட்ட காலம் இதுவேயாகும்.

மக்களின் உள்ளத்துறும் உணர்ச்சிகளை மட்டும் வெளியிட்டு வந்த இசை - அகப்பாட்டாக மட்டும் இருந்த இசை-தெய்வத்தைப் பற்றிய கருத்துக்களையும் வெளியிடுவதற் குரியதாக ஆயிற்று. அடியவர்கள் தெய்வீக இசையாக அதனை மாற்றியமைத்தார்கள். இசை வளர்ச்சியில் இக்காலம் சிறந்ததொரு காலமாக விருந்தது. பாடப்படுகின்ற பொருளில் மாற்றங்கண்டார்கள் அடியவர்கள். காதலுணர்வைப் பற்றி மட்டும் விளக்கிய இசை கடவுள் உணர்வையும் விளக்கு மிசையாக மாறிற்று. சில விடங்களில் முன்னோர் கொண்ட முறையையும் விடாது தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனுகவும் கொண்டு அடியவர்கள் இன்னிசை பாடி மகிழ்ந்து மிருக்கின்றார்கள். வண்டு, கிளி முதலிய வற்றைத் தாம் இறைவன் பால் தூது விடுவ தாக அடியவர்கள் பாடியிருக்கும் பாடல்கள் அதற்கு எடுத்துக் காட்டுகளாக அமையும்.

அடியவர்களனைவரும் ஓரிடத்திருத்தலின்றி நாடு முழுவதுமிருந்த தலங்களனைத்திற்குஞ் சென்று இறைவனை இன்னிசை பாடித் துதித்து மகிழ்ந்தனர். அடியார்கள் கூட்டம் தம்மைச் சூழ்ந்து வர ஊர்தோறும் சென்று இறைவனை இன்னிசையால் பாடி மகிழ்ந்தார்களாதலால் மக்களனைவரும் அவர்கள் நெறியிற் சேர்ந்ததன்றி இசை யுணர்ச்சியுடையவர்களாகவும் ஆயினர். இம்முறையில் அடியவர்கள் தாம் வாழ்ந்த காலத்து அனைவர்க்கும் இசையறிவு உண்டாகும் வகையிலும் பெருந் தொண்டு செய்திருக்கின்றார்கள்.

தேவாரப் பாடல்கள் இடைக் காலத்தில் தோன்றிய இன்னிசை மலர்கள். "நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" எனச் சிறப்பிக்கப்பட்ட ஆசிரியர் தேவார மூவர்களில் தலை சிறந்தவராவர். சூலை நோயால் துடித்த பொழுது நாவுக்கரசர் தாம் செய்து வந்த தொண்டினைச் சொல்லுகின்றார்,

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"

என்று. இவர் தேவார ஆசிரியர்களிலே இரண்டாவது வைத்து எண்ணத்தக்கவர். தம்பிரான் தோழனை சுந்தரமூர்த்தியும் தேவார ஆசிரியரேயாவார். இம்மூவரும் இடைக்காலத்தில்—இசை வளர்ச்சி குன்றியிருந்த காலத்தில் இன்னிசை பாடி இசைத் தமிழை வளர்த்தார்கள். இவர்களுடைய பாடல்களிலே வரும் பண்கள் பலவாம். நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி, இந்தளம், கோகமரம், காந்தாரம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, சாதாரி முதலியன இவர்களுடைய பாடல்களில் பயின்று வந்திருக்கின்றன. இவையேயன்றித் திருகோசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலியனவும் இருக்கின்றன. இவை யனைத்தும் இன்று வழங்குகின்ற இசையுள் எப்பண்களை யொத்திருக்கின்றன வென்பதனையறிந்தால் அவற்றை அம்முறையோடு பாடமுடியும். பண்டைத் தமிழ்ப் பண்கள் இன்று வழக்கிலில்லாமையால் அவற்றை இன்று வழங்கும் பண்களோடே ஒப்பிட்டு அறிய வேண்டியிருக்கின்றது. வள்ளல் இராஜா சர் அண்ணமலைச் செட்டி

யார் அவர்களாலும் இவரின் திருமகனாகிய உயர்திரு இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களாலும் தோற்றுவிக்கப் பெற்ற சென்னைத் தமிழிசைச் சங்கத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இப் பெருந்தொண்டினைச் செய்து வருவதானது பாராட்டிற் குரியது. அத்தொண்டு மேலும் மேலும் வளர்ந்து தேவாரப் பண்களின் இயல்பையுள்ளபடியறிந்து அனைவரும் ஓதி மகிழும் நாள் விரைவில் வந்தெய்துமாக.

இம்மூவரேயன்றி மணிவாசகரும் இசைக்குப் பெருந்தொண்டு புரிந்தாரென்பதை நாம் இங்கு உணரவேண்டும். திருவெம்பாவைப் பாட்டு, அம்மானைப் பாட்டு, கோத்தும்பிப்பாட்டு, தெள்ளேணப்பாட்டு, பூவல்லிப்பாட்டு, ஊசற் பாட்டு, குயிற் பாட்டு முதலியனவும் இசைக்கு உரிய பாட்டுக்களாம். இவற்றையும் இவற்றைப் பாடுமியல்பை அறிந்து பாடி மகிழ்தல் நம் கடனும்.

சைவ அடியவர்களேயன்றி வைணவ அடியவர்களும் இம்முறையை மேற் கொண்டு இறைவனைத் துதித்தனர். நம் மாழ்வார் பக்தியிலேயன்றிப் பண்களை யமைத்துப் பாடுதலிலும் சிறந்தவராய் விளங்கினர். பழந்தமிழ்ப்பண்களும்பழைய இலக்கணத்திற்கேற்ற தாளமும் அவருடைய பாசுரங்களில் அமைந்திருப்பதை யறியலாம். வைணவப் பெரியார் அதனைத் தேவகானம் எனப் பாராட்டுவர். தேவாரத்திற் காணப்படும் தக்கராகம், காந்தாரம், நட்டபாடை, இந்தளம் முதலிய பண்கள் திருவாய் மொழியிலும் காணப்படுகின்றன. தேவாரத்திற் காணப்படாத பண்கள் சிலவும் இதனுள் காணப்படுகின்றன. அவை செருந்தி, முதிர்ந்த விந்தளம், வியந்தம், நாட்டம் முதலியனவாம்.

பாணர் குலத்திற் பிறந்து பரந்தாமனுடைய அழகைப் பாதாதி கேசமாக வருணித்து இசையின் பெருமையை யெல்லோரு மறியச் செய்த திருப்பாணழ்வாரின் வரலாற்றை யறியாதார் யார்?

இங்ஙனம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இடைக் காலத்தில் தோன்றிச் சைவ வைணவங்களை வளர்த்ததோடன்றி இசையையும் வளர்த்தார்கள் என்பது இதுகாறுங் கூறியவாற்றுல் அறியப்படும்.

தோன்றிய இன்னிசைப் பாடல்களை நாடு முழுவதும் பரவச் செய்த பெருமை சோழர்களையே சாரும். சோழர்கள் ஆட்சியினல் தமிழகம் அடைந்த நன்மை சொல்லுந்தரத் தன்று. அரசியல் அமைப்பிலே, பிற நாட்டாரோடு செய்த வணிகத்திலே, வீரத்திலே, கலை வளர்ச்சியிலே, பிறவற்றிலே தன்னிகரற்று விளங்கிய காலம் சோழர் காலமேயாகும். மண்ணலும் செங்கல்லாலும் ஆன கோவில்களைக் கருங்கற் கோவில்களாகச் செய்த பெருமை சோழர்களையே சாரும். இறைவன் உறையும் கோவிலைக் கலைகள் உறையுங் கோவிலாகச் சிற்பம் சித்திரம் ஆகியவையமையச் செய்த பெருமையும் சோழர்களையே சாரும். தோன்றிய சைவ வைணவ சமயங்களை எஞ்ஞான்றும் நிலை நிறுத்துவார் போன்று சிவன் கோவிலும் திருமால் கோவிலும் அவர்களால் நாடு முழுவதும் கட்டுவிக்கப்பட்டன. நாள் விழாவும் ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற அவர்கள் கோவில்களுக்கு நிலத் தானமும் செய்தனர். சுருங்கச் சொல்வதானல் சைவ வைணவ சமயங்கள் இந்நாட்டில் நிலைத்திருக்க நிலையான வழிகோலியவர்கள் சோழர்களேயென்று கூறலாம்.

சிவனுக்கும் திருமாலுக்கும் கோவில் எடுத்ததோடு மட்டுமன்றிச் சைவ வைணவச் சமயங்களின் நூல்களையும் அவர்கள் போற்றி ஆதரித்தார்கள். மறைந்து அழிந்து பட்ட தேவார ஏடுகளைக் கண்டெடுத்தவர் யார்? திருமுறை கண்ட சோழ தேவரிலிருந்து குலோத்துங்க சோழன் வரையில் வாழ்ந்த சோழ மன்னர்கள் சமயங்கட்குச் செய்த தொண்டுகளை எவ்வாறு எடுத்துரைக்

கவியலும்! பொன்னேடுவேய்ந்து சிற்றம் பலத்தைப் பொன்னம்பலமாக்கிய பெருமை யாரைச் சாரும்? முன்னும் பின்னும் இல்லா வகையில் தஞ்சையிலும், கங்கை கொண்ட சோழ புரத்திலும் இறைவனுக்குக் கோவில் களெடுத்த பெருமை இராசராசனையும் அவன் மகன் இராசேந்திரனையுமன்றே சாரும்? அவர்கள் மட்டுமல்ல; அரசிகளும் இப்பணியில் சிறந்திருந்தார்களென்பது அறிந்து மகிழ்தற்குரியதொன்றும். குந்தவை போன்றவர்கள் கோவில்களுக்கு அளித்த நந்தா விளக்குகள் எத்தனை? அளித்த அணிவகைகளின் மதிப்பு என்ன? எனவே சோழர்கள் குடும்பமே சமயங்களை வளர்த்த குடும்பமாகக் காட்சியளிப்பதையறியலாம்.

தேவாரப் பாடல்களைப் பரப்புவ தற்குச் சோழர்கள் செய்த தொண்டு சொல்லுந்தரத்தன்று. தேவாரப் பண்க ளிலே சிலவற்றைப் பற்றியாவது நாம் இன்று அறிந்து கொள்கின்றோமென்றால் ஒதுவார்கள் சிலராவது இங்குமங்குமாகக் காணப்படுகின்றார்களென்றால் அவையனைத் திற்கும் காரணமாக விருந்தவர்கள் சோழர் களே யென்பதை நாமுணரவேண்டும். தஞ் சைப் பெரிய கோவிலைக் கட்டிய பேரரசன் இராசராசனேயாவான். அவன் சைவத் திடத்தும் தமிழிடத்தும் நிறைந்த அன்புடை யவன். அவன் தஞ்சைக் கோவிலுக்கே யன்றி மற்றைய கோவில்களுக்கும் அளித்த நிலத்தானங்கள் அளவில. தஞ்சைப் பெரிய கோவிலிலே நாள்தோறும் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய நாற்பத்தெண்மரை நியமித்திருந்தான். அதன் பொருட்டு அவர் களுக்கு நிலத் தானமும் வழங்கியிருந்தான். இச்செய்தி இராசராசனுடைய கல்வெட்டுக் களிலிருந்து நாமறியக் கிடக்கின்றது.

இராசராசன் மட்டுமன்று, அவன் மகன் இராசேந்திர சோழனும் இம்முறையையே மேற்கொண்டு தேவாரப் பண்களை வளர்த்தான். அவனால் கட்டப்பட்ட கோவில்

போன்: 909 தந்தி: FINEMIL

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாவிற்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

சிவானந்தா மில்ஸ் லிமிடெட்

கணபதி போஸ்ட் :: கோயமுத்தூர்

இணைக்கப்பட்ட கதிர்கள் ... 18,816
இணைக்கப்படுபவை ... 6,272

★

உயர்ந்த ரக கார்டெட் 80 நி. 60 நி. நூல் நூற்கிறோம்.

மானேஜிங் ஏஜன்ட்ஸ் & செக்ரடரீஸ்

S. R. P. பொன்னுசாமி செட்டி & சன்ஸ்,

கோயமுத்தூர்.

தஞ்சைப் பெரிய கோவிலே யொத்த கங்கை கொண்ட சோழீச்சுரமாகும். அதன்கண் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. தேவாரம் ஓதுவார் இருந்து பாடவென்றே மண்டபம் ஒன்று கோவிலினுள் அமைத் திருந்தான். இது தேவார மண்டபம் என வழங்கப்பட்டது. இராசேந்திர சோழ னுடைய கல்வெட்டு ஒன்றால் இச்செய்தி அறியப்படுகின்றது. இவர்களில் பின்வந்த சோழர்களும் இம்முறையிலேயே கோவில் களிலே தேவாரம் ஓதப்படவேண்டிய ஏற் பாடுகளைச் செய்தார்கள்.

குலோத்துங்க சோழன் பெரியபுராணம் பாடக் காரணமாக விருந்த பேரரசன். அவ னுடைய தேவியர்களில் ஒருவர் ஏழிசை வல்லபியென்னும் பட்டப் பெயரையுடைய வர். குலோத்துங்க சோழன் இசையிடத் துப் பெற்றிருந்த பேரன்பால் ஏழிசை வல் லபியென்னும் இசைவிருதுபெற்ற மங் கையை மணந்து வாழ்ந்தான் என்று கூறுவர்.

இங்ஙனம் சோழர்கள் இன்னிசை பரவச் செய்த தொண்டுகள் எண்ணில. சோழர் களே சமயங்களையும், இசையையும் வளர்த்த பேரரசர்கள் எனலாம்.

எனவே, இடைக்காலத்தில் தோன்றியது தெய்விக இசையே யென்பதும் அதனை நாட் டில் நிலை பெறச் செய்தவர்கள் சோழர்களே என்பதும் இதுகாறும் கூறியவாற்றால் பெறப்படும். அத்தகைய தெய்விக இன்னி சையை வளர்க்க அனைவரும் தங்களால் ஆன தொண்டுகளைச் செய்யவேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன்.

—

சங்கம் எப்படி தமிழுக்கோ
அதுபோல் உழைப்புக்கும் உண்மைக்கும்
இருப்பிடம்

K. நடராஜ பிள்ளை & கம்பெனி

30, மேலவாசல் — மதுரை

★

மோட்டார் ஸ்பேர் சாமான்கள் — ரெப்ரிஜரேஷன்,
ஏர் கண்டிஷன் சாமான்கள் — மின்சார சாமான் வியாபாரிகள்



தமிழர் நாகரிகம்

வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

★

நாகரிகம் : சொற்பொருள்

நாகரிகம் என்னும் சொல்லுக்குக் 'கண் ணோட்டம்' என்பது பொருள் என்று திருக்குறள் கூறுகின்றது[1]; நகரத் தொடர் பான ஒழுக்கம் என்று பெருங்கதை பேசு கின்றது[2]; 'மரியாதை' என்னும் பொருளை உடையது என்று சிவரகசியம் செப்புகின் றது[3]; பலகலை வல்லோரை 'நாகரிகர்' என்று சீவக சிந்தாமணி குறிக்கின்றது[4]; 'இலக்கியம், கலை முதலியவற்றை இரசிப்ப வர் நாகரிகர்' என்று நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் நவில்கின்றது[5]; 'நகரமக்கள்' என்று திவாகரமும், சமர்த்தர் என்று பிங் கலமும் பேசுகின்றன.

இவையனைத்தையும் ஒரு சேரப் பார்க் கும்போது, கல்வி, கலை உணர்வு, கண் ணோட்டம், மரியாதை முதலியவற்றின் திரட்சியே 'நாகரிகம்' என்பது, என்று கூறலாம். இவ்விலக்கணத்தை உளம் கொண்டு, பழந்தமிழர் நாகரிகத்தை ஓரளவு இங்குக் காண்போம்:

கல்வி

பழங்காலத் (சங்ககாலத்) தமிழர் இக் காலச் சாதிவேறுபாடுகள் இன்றி வாழ்ந்த வர். மன்னரும் 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்ற முறைப்படி, கல்வி கேள்விகளில் அறிவுடைய மக்களையே மதித்தனர். இன்னவர் படிக்க வேண்டும், இன்னவர் படித்தலாகாது என்ற வரையறை இல்லாததால், அக்காலத்தில் சமுதாய மக் கள் அனைவரும் கல்வி கற்றிருந்தனர். வள மனை காத்த காவற்பெண்டு, குறமகள், குயத்தி, பாணச்சி முதலிய சாதாரணப் பெண்மணிகளும் நல்லிசைப் புலமை மெல் லியலாராக விளக்கமுற்றிருந்தனர். அதிய மானிடமிருந்து தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றார் என்பதை நோக்க, அக்காலப் பெண் கல்வியின் திறத்தை என்னென்பது! பெருங்காக்கை பாடினியார், சிறு காக்கை பாடினியார் என்ற பெண்பாற் புலவர் யாப்பிலக்கண நூல் செய்தனர் என்பது அக்காலப் பெண் ணுலகச் சிறப்பை நன்கு உணர்த்துகின்ற தன்றே! அரசரிருவரும் போரிட்ட போர்க் களத்திலும் ஔவையார் இருந்து தம் அர சனை ஊக்கப்படுத்தினர் என்பதை நோக்க, படித்த பெண்கள் அரசனால் மதிக்கப்பட்ட திறத்தை நன்கறியலாம்.

இங்ஙனமே பலதுறை ஆடவரும் கல்வி கற்றுச் சிறந்திருந்தனர் என்பதைச் சங்க கால நூல்களால் அறிகிறோம். முடி மன்ன ராகிய சேர, சோழ, பாண்டியர்களும், அவர்தம் மனைவியர்களும், மக்களும் தாய் மொழியிற் சிறந்திருந்தனர். முடி மன்னரும் சிற்றரசரும், பெருநிலக் கிழாரும் இயற்றமி ழில் வல்ல புலவரையும், இசைத் தமிழில் வல்ல பாணரையும், நாடகத் தமிழில் வல்ல

1. குறள், 580. 2. உஞ்சைக்காண்டம், 41,83. 3. தாருக, 9. 4. செய்யுள்—1110. 5. பெரிய திருமொழி 9, 2, 4.

கூத்தரையும் நன்முறையில் ஆதரித்து முத் தமிழைப் பேணிவந்தனர் என்பதைப் பண்டை நூல்களால் அறிகின்றோம். பாண்டிய மன்னர் தம் கோநகரில் புலவ ரைக் கூட்டிச் சங்கம் அமைத்துத் தமிழை வழிவழிக் காத்து வளர்த்து வந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. நாகரிகத்தின் அடிப் படை கல்வியே என்று அறிஞர் கூறுவர். சங்க காலத்தில் அவ்வடிப்படை மிகச்சிறந்த நிலையில் அமைந்திருந்தது என்பதை மேற் காட்டிய உண்மைகள் நன்கு உணர்த்தும்.

தொழில்கள்

கல்வியின் தெளிவினால் தமிழர் உழவு, கைத்தொழில், வாணிகம் முதலிய வாழ் வியல் நிலைகளில் தலை சிறந்து விளங்கினர். திருக்குறளிலுள்ள 'உழவு' என்னும் அதி காரம் பழந்தமிழர் பயிர்த்தொழில் அறிவை நன்கு தெரிவிக்கும். உழுதொழிலுக்கு அடுத்து உயர்ந்த தொழிலாகக் கருதப்பட் டது 'நெய்தல்' தொழிலேயாகும். பருத்தி, எலி மயிர், ஆட்டு மயிர் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன. ஆடைகளில் பூத்தொழில் செய்யும் வழக்கமும் இருந்து வந்தது. மிக நுட்பமாக நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகள் பாம்பின் சட்டை போலவும், மூங்கிலிலிருந்து உரிக்கப்பட்ட மெல்லிய தோல் போலவும், புகையைப் போலவும், பால் நுரையைப் போலவும், தெளிந்த வெண்ணிறமுள்ள அருவிநீர் போலவும் இருந்தன என்று பண்டை நூல் கள் பகருகின்றன. கோசிகம் முதல் பணிப் பொத்தி ஈறாக முப்பத்தாறுவகைப்பட்ட ஆடைகள் சிலப்பதிகார உரையில் காட்டப் பட்டுள்ளன.

சங்க காலப் பெண்கள் அணிந்து வந்த அணிகள் பலவாகும். அவற்றைச் செய்து வந்த உருக்குத் தட்டாரும், பணித்தட்டா ரும் பலராக இருந்தனர். அப்பொற் கொல் லர் மாணிக்கம், நீலம், வைரம் முதலிய ஒன் பான் மணிகளைப் பற்றிய இலக்கணங்களை நன்கு அறிந்திருந்தனர். அவைபற்றிய நூல்களும் அக்காலத்தில் இருந்தன. கன்னர், செம்பு கொட்டிகள், தச்சர், மரத் தொழிலாளர், கப்பல் கட்டுவோர், கட்ட டம் கட்டுவோர், துணி துவைப்பவர், தோலைக் கொண்டு பல தொழில் செய்பவர், நெட்டித் தொழிலாளர், முத்துக் கோப்ப வர், சங்கு முதலியவற்றால் வளையல் செய் பவர், பல வகைப்பட்ட இசைக் கருவிகள் செய்பவர், ஓவியம் தீட்டுவோர், சிற்பியர் முதலிய பல திறப்பட்ட தொழிலாளரும் சங்ககாலத்தில் வாழ்ந்தனர்.


வாணிகம்

பிளைனி, தாலமி, பெரிப்ளூஸ் ஆகியோர் வரைந்துள்ள குறிப்புக்களும், சங்கநூற் குறிப்புகளும் சங்ககாலத்துக் கடல் வாணி கம் சிறப்புற நடந்து வந்ததைக் குறிக்கின் றன. பழந்தமிழ் வணிகர் மேல்நாடுகளுட னும் கீழ்நாடுகளுடனும் சிறந்த முறையில் கடல் வாணிகம் செய்து வந்தனர். தமிழ கத்து அரிசி, மயில், மிளகு, முத்து முதலியன வெளிநாடுகட்கு ஏற்றுமதியாயின. அயல் நாடுகளிலிருந்து பவளம், மணப்பொருட் கள், பலவகைப் பொறிகள், குடிவகைகள் என்பன தமிழகத்தில் இறக்குமதியாயின. தமிழகத்துத் துறைமுகங்களான தொண்டி, முசிரி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களில் அராபியர், கிரேக்கர், உரோமர், சீனர் முதலியோர் தங்கி வாணி கம் செய்தனர்.

தமிழகத்தில் உள்நாட்டு வாணிகமும் சிறப்புற நடந்தது. வணிகர்கள் எருது, கோவேறு கழுதை இவற்றின்மேல் பண்டப் பொதிகளை ஏற்றிக்கொண்டு கூட்டம் கூட் டமாய் ஊரூராகச் சென்று வாணிகம் செய் தனர். அக்கூட்டம் 'வாணிகச் சாத்து' எனப்பட்டது. தமிழ் வேந்தர்களும் இவ் வணிகர்க்குத் தக்க பாதுகாப்பளித்தனர். இவர்கள் தமிழகத்தின் வட எல்லையாகிய வேங்கடத்தைக் கடந்து தெலுங்கு, கன் னட நாடுகளிலும், அவற்றுக்கு அப்பாற்

Manufacturers of:

TEXTILE MACHINERY



CARDING SPINNING
AND
REELING FRAMES

RAMAKRISHNA INDUSTRIALS
(Private) *Limited.*

PEELAMEDU (P.O.) COIMBATORE.

GRAMS: "NAVA INDIA". COIMBATORE.
PHONE: 1206.
POST BOX No. 7.

RAJU-NAVA INDIA

பட்ட நாடுகளிலும் சென்று வாணிகம் செய்தனர். அறிவிற் சிறந்த தமிழரசர் வாணிகத்தைத் திறம்பட நடத்திய வணிகர்க்கு 'எட்டி' என்ற பட்டத்தையும் பொற் பூவையும் அளித்துச் சிறப்பித்தனர். சேரர் தலைநகரான வஞ்சிமாநகர், பாண்டியர் கோநகரான மதுரை, சோழர் தலைநகரான பூம்புகார் என்ற பெருநகரங்களில் இருந்த பெரிய கடைத் தெருக்களில் அயல்நாட்டுப் பண்டங்கள் குவிந்து கிடந்தன. அக்கடைத் தெருக்களில் இன்னின்ன பொருள்கள் விற்கப்பட்டன என்பதைச் சிலப்பதிகாரமும் பிறவும் சிறப்புறக் கூறுகின்றன.

உணவு

குறிஞ்சி நிலமக்கள் மலைநாட்டு விளை பொருள்களை உணவாகக் கொண்டனர். மலைநாட்டுப் பொருள்கள் இன்னவை என்பதைச் சிலப்பதிகாரம்-வஞ்சிக் காண்டம்-காட்சிக் காதை நன்கு தெரிவிக்கின்றது. முல்லை நிலத்து ஆயர், பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை மருதநிலத்தில் விற்றுத் தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். மருதநிலத்து மக்கள் நெற்சோற்றையும், பலவகைக் காய்களையும், கனிகளையும் உண்டு வந்தனர். நெய்தல் நில மக்கள் பிற நிலத்தாருடன் மீன் வாணிகம் செய்து தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைப் பெற்றனர். இங்ஙனம் நானில மக்களும் தத்தம் நிலத்தில் விளையாத பொருள்களைப் பிறரிடம் பெற்று வாழ்ந்து வந்தனர்.

கட்டடக்கலை

மனிதனது உள்ளத்தில் நிரம்பிப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றலே **கலை** என்பது. இவ்வாற்றல் கட்டடமாக வெளிப்படும்; காவியமாக வெளிப்படும்; ஓவியமாக வெளிப்படும்; சிற்பமாக வெளிப்படும்; இசையாகவும் வெளிப்படும்; உள்ளத்து உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் நடனமாகவும் வெளிப்படும். காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்தில் ஓர் அற்புத மண்டபம் இருந்தது. மகதநாட்டு மணி வேலைக்காரரும், அவந்தி நாட்டுக் கொல்லரும், மகாராட்டிரத்தைச் சேர்ந்த பொன் வேலைக்காரரும், யவன நாட்டுத் தச்சரும், தமிழ்நாட்டுத் தொழில் அறிஞரும் ஒன்று சேர்ந்து அம்மண்டபத்தை அமைத்தனர். அதன் தூண்கள் பவளத்தால் இயன்றவை; போதிகைக் கட்டைகள் பலவகை மணிகளால் சமைந்தவை; மண்டபத்தின் ஒவ்வொரு கோணத்திலும் முத்து மாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. மேற்கூரையும் கீழிடமும் பொன்னால் இயன்றவை. எனவே, தரைப்பகுதி சந்தனத்தால் மெழுகப்பட்டிருந்தது.[6]

மக்கள் வாழ்ந்த உயர்ந்த மாடங்களில் நிலா முற்றங்கள் அமைந்திருந்தன. தெருக்களின் அடியில் கண்ணுக்குத் தெரியாதபடி பெரிய கழிநீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரிய நகரங்களில் பூங்காக்களும் இயந்திர வாவிகளும் அமைந்திருந்தன.

ஓவியக்கலை

ஓவியம் வல்லாரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி கூறுகின்றது. "நோக்கினர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்" என்பது இதன் பொருள்.

நடன அரங்கின் மேற்கூரையில் பல வகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. கட்டடச் சுவர்கள் மீது தேவர், மக்கள் ஓவியங்களையும் பல கதைகளை விளக்கும் கண்கவர் ஓவியங்களையும் தீட்டுதல் தமிழர் மரபு. அக்காலத்தார் ஓவியங்களை அமைத்துப் பல ஆடைகளை நெய்து வந்தனர். அக்காலத்தில் ஓவியக்கலை பற்றிய நூல் வழக்கிலிருந்தது. அதனை நாடக மகளிரும் நன்கு பயின்று வந்தனர். கோவில் மண்டபங்களில் புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன.

---

[6]மணிமேகலை—சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை.

சிற்பக்கலை

போரில் தன் ஆற்றலைத் தோற்றி விழுப் புண் பட்டு இறந்த வீரனுக்கு அறிகுறியாக ஒரு கல்லை நட்டு, அதனில் அவனது உருவத்தைப்பொறித்தல் தமிழ் நாட்டு வழக்கம். இதனைச் சிற்பக் கலையின் தொடக்கமென்று கூறலாம். கண்ணகியின் சிலை அமைக்கப் பட்டதைக் கொண்டும் இதனை உணரலாம். சங்க காலக் கோவில்களில் பல தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுதை கொண்டு உருவங்களை அமைக்கும் மண்ணிட்டாளரும், கல்லில் உருவங்களை அமைக்கும் சிற்பத் தொழிலாளரும் சங்க காலத்தில் வாழ்ந்தனர்.

இசைக்கலை

இசைத் தமிழ் சங்க காலத்தில் நன்கு வளர்க்கப்பட்டது. பெருநாரை, இசை நுணுக்கம் முதலிய இசைத் தமிழ் இலக்கண நூல்களும், சிலப்பதிகாரம், பரிபாடல், கலித் தொகை போன்ற இசைத் தமிழ்ச் செய்யுள் நூல்களும் சங்க காலத்தவை. குரல், துத்தம், கைக்கிளை, உழை, கிளி, விளரி, தாரம் என்னும் ஏழு சுரங்கள் தமிழில் இருந்தன. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பண் வகைகளும், அவ்வப் பொழுதிற்கமைந்த பண்களும், பண்களிலிருந்து பிறக்கும் திறங்களும் இவை பற்றிய குறிப்புக்களும் சங்க நூல்களில் காணலாம். தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என இசைக்கருவிகள் நால்வகைப் பட்டன. பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் எனப் பலவகை யாழ்கள் வழக்கில் இருந்தன. பாணர், பாடினியர் இசைத் தமிழில் ஏற்றம் பெற்றிருந்தனர்.

நடனக்கலை

நடனம் சங்க காலத்தில் 'கூத்து' எனப் பெயர் பெற்றிருந்தது. மலை நாட்டு மக்கள் முருகனை வழிப்பட்டு ஆடிய கூத்துக் **'குன்றக்குரவை'** எனப்பட்டது. முல்லை நிலத்து மகளிர் கண்ணனை வழிப்பட்டு ஆடிய கூத்து **'ஆய்ச்சியர் குரவை'** எனப் பெயர் பெற்றது. பாலை நில மக்கள் கூத்து **'வேட்டுவ வரி'** எனப் பெயர் பெற்றது. மெய்ப்பாடுகள் தோன்ற நடித்து உள்ளக் குறிப்பைப் புறத்துக் காட்டும் திறமை பெற்றவள் **'விறலி'** எனப் பெயர் பெற்றாள். இத்தகைய விறலியரையும் கூத்தரையும் தமிழ் வேந்தர் பெரிதும் ஆதரித்தனர். சிறந்த கூத்தி 'தலைக்கோலி' என்ற பட்டத்தைப் பெற்றாள். நடன மக்கள் ஏழு வயது முதல் பன்னிரண்டு வயதுவரை கூத்துக்கலையில் பயிற்சி பெறுதல் வேண்டும். அவளை அத்துறையில் பயிற்சி பெறுவிக்க ஆடலாசிரியன், இசையாசிரியன் என்பவர் தேவைப்பட்டனர். இவர்களைப் பற்றியும் கூத்து வகைகளைப் பற்றியும் கூத்தியரைப் பற்றியும் சிலப்பதிகாரம் முதலிய பண்டை நூல்கள் பரக்கப் பேசுகின்றன.

சமயநிலை

பழந்தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கையுடையவர். ஒவ்வொரு பேரூரிலும் பல வகைக் கோவில்கள் இருந்தன. சைவம், வைணவம், பௌத்தம், சமணம் பற்றிய கோவில்கள் விளங்கின. மக்கள் தமக்கு விருப்பமான சமயக் கொள்கைகளைப் பின் பற்றினர். கோவில்களில் விழாக்கள் சிறப்புற நடைபெற்றன. விழாக்களில் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. சமயவாதிகள் ஒருவரோ டொருவர் பூசலிடாமல் தத்தம் சமயத்தைப் பரப்பி வந்தனர்.

நாகரிகத்தின் உயர்வு

மக்கள் தாம் வாழும் குடும்பத்தையும், சமுதாயத்தையும், நாட்டையும், உலகையும் தம் வாழ்வுக்குத் தேவையான பிறவற்றையும் அறியவும், அறிந்து நல்வழியில் நடக்கவும் கல்வி இன்றியமையாதது. பழந்தமிழ்

மக்கள் கல்வித் தெளிவினல் பயிர்த் தொழில் போன்ற பல தொழில்களைத் திறம்படச் செய்தனர்; வாணிகத்தை வளம் பெற நடத்தினர்; "யாதும் ஊரே, யாவரும் கேளிர்," என்ற உயர்ந்த கொள்கையைப் பின்பற்றினர்; தொழிலிலும் வாணிகத்திலும் அற நெறி தவருது நடந்தனர். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" (மனிதன் ஆவதும் அழிவதும் தன்னலேதான்) என்னும் விழுமிய கருத்தை அழுத்தமாக உணர்ந்து நடந்தனர்; கட்டடக் கலையிலும், இசை, கூத்து போன்ற நுண்கலைகளிலும் பண்பட்டு இருந்தனர்; உண்மையுடைமை, ஒழுக்க முடைமை, அன்புடைமை, அருளுடைமை முதலிய நற்பண்புகளைப் பெற்று நலமுற வாழ்ந்தனர். சுருங்கக் கூறின், சங்க காலத் தமிழ் மக்கள், "வையத்து வாழ்வாங்கு" வாழ்ந்தனர். இங்ஙனம் "வையத்து வாழ்வாங்கு" வாழ்பவரே 'நாகரிக மக்கள்' என்று அறிஞர் கூறுவர்.

———

இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், மதுரை.

6, மேல மாசி வீதி, மதுரை.

தபால் பெட்டி நெ. **96**

தந்தி: "ராம்ஸென்பாங்க்" போன்: **96**

கிளை: **காரைக்குடி**

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ. 15,00.000
செலுத்தப்பட்ட மூலதனம	...	ரூ. 9,53,639
ரிசர்வ் நிதிகள்	...	ரூ. 7,33,718
அலுவல் நிதிகள்	...	ரூ. 1 கோடி

கீழ்க்கண்ட விகிதங்களில் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நிரத்தர டிபாசிட்

6 மாதங்கள்	... 2¾%	3 வருடங்கள்	... 3½%
1 வருடம்	... 3%	4 வருடங்கள்	... 3¾%
2 வருடங்கள்	... 3¼%	5 வருடங்கள்	... 4%

சேசன் டிபாசிட்டுகள் ரூ. 5,000/-மும், அதற்கு மேலும் 4 மாத முதல் 3%

கரண்ட் டிபாசிட்	ரூ. 5,000/- வரை ½%
பிராவிடெண்டு டிபாசிட்	ரூ. 5,000/- வரை 3½%
சேவிங்ஸ் டிபாசிட்	ரூ. 5,000/- வரை 1½%

எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்பெறும்

எம். மெய்கண்ட தேவன்,
கூட்டுறவு சப் ரிஜிஸ்திரார் அன்ட் காரியதரிசி

ஆர். நாகுலுசாமி நாயுடு,
தலைவர்

சொல்லாட்சி

வித்வான் திரு. நா. இராமையா பிள்ளை

★

சங்க காலத்தில் சொற்கள் ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருளைக் குறித்து வழங்கின. அவை தமக்கே உரிய பொருளைக் கொண்டு வழங்கின என்பதைச் சங்ககாலச் சான்றோர்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுவர். எனினும், அச்சான்றோர் நுண்மாண் நுழைபுலத்தை அறியாத பிற்காலப் புலவர் ஒரு பொருள் குறித்த பல சொற்களெனக் காட்டுவாராயினர். அதனை நம்பி நாம் அவ்வாறே ஆட்சி புரியலானேம். எனவே நுண்மையும், திண்மையும், தெளிவும் குறையலாயின. இதனைக் கீழ்வரும் கலித்தொகை, மருதக்கலி - 2 - வது பாட்டின் வரிகள் கொண்டு காண்போம்:

இப்பாட்டில் மூன்று தாழிசைகள் வந்திருக்கின்றன. மூன்றும் ஒரேகருத்தை விளக்குவனவாக இருப்பின் ஒன்றே போதும். பின்பு மூன்று தாழிசைகள் இருப்பது ஏன்? மூன்று வேண்டும் எனின், கூறியது கூறல் என்னும் குற்றம் தங்கும். அவ்வாறு கலிப் பாட்டுக்கள் இருக்கும்? அதனைக் காண்போம்:

தலைவன் பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்தான். அவனைத் தலைவி ஏற்றுக்கொண்டாள். இதனைக் கண்ட தோழி, "அவன் பரத்தையிற் சென்றிருந்தபோது அவனைப் பற்றிக் குறை கூறிய நீ இப்போது அவனை ஏற்றுப்

தரவு

கார்முற்றி இணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
நேர்முற்றென் றறியாத புரிசைசூழ் புனலூரன் ;

தாழிசைகள்

நலத்தகை யெழிலுண்கண் நல்லார்தங் கோதையால்
அலைத்தபுண் வடுக்காட்டி அன்பின்றி வரினெல்லா !
புலப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கலப்பேன் என்னும்இக் கையறு நெஞ்சே ;
கோடெழில் அகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரின்எல்லா !
ஊடுவேன் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கூடுவேன் என்னும்இக் கொள்கையில் நெஞ்சே ;
இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்கெயி றுருஅலின்
நனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரின்எல்லா !
துனிப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
தனித்தே தாழுமித் தனியில் நெஞ்சே ;

(தனிச்சொல்)

எனவாங்கு

பிறைபுரை யேர்நுதால் ! தாமெண்ணி யவையெல்லாந்
துறைபோதல் ஒல்லுமோ ? தூ ஆகா தாங்கே
அறைபோகு நெஞ்சுடை யார்க்கு

(இது சுரிதகம்)

போற்றியது பொருந்துமா ?'' என்று தலைவி யிடம் வினவினள். இதற்கு விடையிறுப்ப தாக அமைந்திருப்பதே இப்பாட்டு.

தலைவன் மதுரையில் வாழ்பவன். எனவே தரவில் மதுரையின் சிறப்புச் சொல்லப்படு கிறது. மதுரையை யடுத்து ஓடும் ஆறு வையை. அது மணமுற்றிய மலர்களால் மூடப்பட்டுப் புலவர்களால் சிறப்பாகப் பாடப்பெற்றது. நிலமகளுக்கு மாலையணிந் ததுபோல அது ஓடி வருகிறது. அது நிரம் பிய நீரொடு வந்து அலையாகிய கரமெழுப்பி மதுரை நகரின் மதில்களை மோதிக்கொண்டு ஓடுகின்றது. வையையின் மோதுதலைத் தவி ரப் பகையரசர் மோதுதலை என்றும் அறி யாத மதில்சூழ்ந்த நகரம் மதுரை, அம் மது ரையில் வாழும் தலைவன், தன் துன்பத்திற் குக் காரணமாயிருந்தான் என்பது தலைவி கருத்து. அத்தலைவன் பரத்தையரோடு மகிழ்ந்து பிரிந்து வருவானுயின் **புலப்பேன், ஊடுவேன், துனிப்பேன்** என்று துணிந் திருந்தாள் தலைவி. ஆனால், தலைவன் வந்த போது அவள் அவற்றை விடுத்து அவனை ஏற்றுப் போற்றினள். அதற்குக் காரணம் அவள் நெஞ்சு அவள் உரிமையில் இல்லா ததுதான். இதை அவளே கூறுகிறாள். இதுவே பாட்டின் கருத்து.

புலப்பேன், ஊடுவேன், துனிப்பேன் என்ற மூன்று சொற்களும் ஒரே பொருளை யுடையனவாயின், பாட்டின் சிறப்புக் குறையும். ஆனால் இவை வெவ்வேறு பொருளையுடையன. கணவனொடு பிணங்கி யிருப்பதற்கு இச்சொற்கள் ஆளப்படுகின் றன. எனினும், இவற்றுள் வேறுபாடு உண்டு. இம்மூன்று சொற்களும் மூன்று நிலை (Stage) களைக் காட்டுவன. இதனை இக்கலிப் பாட்டுக் கொண்டு உணரலாம். இதற்கு ஆதாரமாகத் திருக்குறளும் பரிமே லழகர் உரையும் இருக்கின்றன.

புலத்தல் என்பது தலைவி ஒருத்தி தன் தலைவனொடு பிணங்கி இருத்தலின் முதற் படி. இதனை இளைய கலாம் என்பர்.

ஊடுதல் என்பது சிறு துனி. புலத்த லுக்கு அடுத்த நிலையிலிருப்பது.

துனித்தல் என்பது முதிர்ந்த கலாம். புலத்தல், ஊடுதல் இரண்டையும் அடுத்து மூன்றும் நிலையிலிருப்பது.

இம்மூன்று சொற்களும் மூன்று நிலையின என்பதைத் திருக்குறள் விளக்குவது காண் போம் :

''துனியும் புலவியும் இல்லாயிற் காமம்
கனியும் கருக்காயும் அற்று'' (குறள், 1306)

புலவி கருக்காய் ஆயிற்று. கருக்காய் பருவம் வாராத காய் ; நுகரும் செவ்வியற்றது. புல வியும் அதுபோல இளைய கலாம் ஆயிற்று. துனி, கனி ஆயிற்று. கனி பழுத்து முதிர்ந்து நுகரும் செவ்வியற்றது. துனியும் அதுபோல முதிர்ந்த கலாம் ஆயிற்று. ஊடுதல் என்பது இவ்விரண்டிற்கும் இடைப்பட்டது ; சிறு துனி என்று சொல்லப்படும். ''ஊடலில் தோன்றும் சிறுதுனி'' என்பது திருக்குறள். (1322)

பரிமேலழகர் காமத்துப்பால் இறுதிக் குற ளில் இவ்விளக்கங்களைக் காட்டுவது கண்டு எளிதில் உணரலாம்.

இம்மூன்று நிலைகளைத்தாம் மருதக்கலி யாசிரியர் மனத்திற் கொண்டு தலைவி வாயிலாக அமைத்திருக்கின்றார். இதனைக் காண்போமாயின் நாமடையும் உவகைக்களவில்லை. மருதக்கலியாசிரியரின் பெருமையைப் பாராட்டத் துணிவோம். சங்க காலப் புலவர்கள் சொல்லின் தனிப் பொருள் தெரிந்து ஆட்சி புரிகிறார்கள் என்று கண்டு நாம் மகிழ்வோம் ; இலக்கிய நயத்தை முற்றும் நுகர்வோம்.

புலவர், தலைவி கூற்றாகத் தலைவன் **அன் பின்றி** வரின் 'புலப்பேன்' என்றும், **பண் பின்றி** வரின் 'ஊடுவேன்' என்றும், **நாணின்றி** வரின் 'துனிப்பேன்' என்றும் அமைத்திருக்கின்றார். இவ்வழகும் நிலை களும் கண்டு மகிழ்தற் குரியன.

'என்மாட்டு அன்பின்றி வரின் புலப் பேன்' என்று தலைவி கூறுகிறாள். அன் பின்றி வந்தால் சிறிய கலாம் விளைப்பதாக மட்டும் சொல்லுகிறாள். தலைவன் பண்பு இன்றி வருவானானால் 'ஊடுவேன்' என் கின்றாள். எல்லார் இயல்புகளும் அறிந்து நன்னெறிக்கண் ஒத்துவாழுதல் நன்மக்கள் பண்பாம். அதனை விடுத்துத் தலைவன் வந் தால் இரண்டாம்படியான ஊடல் செய்யப் போவதாகத் தலைவி கூறுகிறாள். தலைவன் நாணைத் துறந்து தன் மாட்டு வருவானையின் 'துனிப்பேன்' என்கின்றாள். நாண் என் பது ஒவ்வாத கருமங்களைச் செய்வதிலிருந்து விலகுதல். அந்நாணிலிருந்து விலகித் தன் மாட்டு வருவானையின் முதிர்ந்த கலாம் விளைப்பதாகத் தலைவி கூறுகிறாள். இந்ய மெல்லாம் கண்டு மகிழத் தக்கன. இந்த அமைப்பிலேயே இந்த மூன்று தாழிசை களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இறுதியாகச் சுரிதகத்தில் ஒரு நீதியை அமைத்துப் பாட்டை முடிக்கின்றார் புலவர். 'மனவுறுதியற்றவருக்குத் தாம் எண்ணிய காரியங்களெல்லாம் முடிவு பெறாது' என்ற நீதியைப் புலவர் இறுதியில் வைத்தார். மன வுறுதியுடையவராயின் எண்ணிய கருமம் இனிது முடியும் என்பது பெறவைத்தார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (குறள், 666.)

என்ற குறட்கருத்து அடங்கிக் கிடப்பது காண்க. இனி,

"புலப்பல் எனச்சென்றேன்; புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு." (குறள், 1259)

"ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் நெஞ்சு."
(குறள், 1284)

"எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து." (குறள், 1285)

"காணுங்காற் காணேன் தவறுய."
(குறள், 1286)

என்னும் குறட்பாக்களுக்கு விளக்கம்போல இக்கலிப்பா அமைந்திருப்பது கண்டு மகிழ்க. புலப்பேன், ஊடுவேன், துனிப்பேன் என்ற சொற்களையும் அவற்றின் நிலைகளையும் காண்க. அன்பு, பண்பு, நாண் என்னும் சொற்களைப் பொருத்தியிருக்கும் அழகை நோக்குக. முழுப்பாட்டின் நயத்தை அறிக.

இங்குக் காட்டிய இவற்றால் சங்ககாலச் சான்றோர்கள் சொற்களை நுனித்தறிந்து தம் பாக்களில் அமைத்திருக்கின்றனர் என் பது நாம் அறியவேண்டுவது. அவ்வாறு அறிந்து அறிவைப் பெருக்கிக்கொள்வது நம் கடன்.



தமிழர் பண்பாடு - ஆடையும் அணியும்

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L., சென்னைப் பல்கலைக் கழகம்

★

ஆடையும் அணியும் பல்லாயிரம் ஆண்டு களாகத் தமிழ் நாட்டிலே உண்டு. "ஆடை யில்லாதவன் அரை மனிதன்" என்பது இந் நாட்டுப் பழமொழி. ஆடை நெய்யும் தொழில் நினைப்பிற்கு எட்டாத நெடுங்கால மாக இந்நாட்டில் நடந்து வருகின்றது. பட்டு நூலாலும், பருத்தி நூலாலும், கம்ப ளத்தாலும் பல வகைப்பட்ட ஆடைகள் நெய்யும் தொழிலாளர் பண்டைத் தமிழ் நாட்டில் சிறந்து வாழ்ந்தார்கள் என்று சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. அந்நாளில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்ற இடங்களிற் சிலவற் றைத் தெரிந்துகொள்வதற்கேற்ற சான்று களும் உண்டு. கொரநாடு என்பது தமிழ கத்திலுள்ள ஓர் ஊரின் பெயர். அங்கு நெய் யப்படும் புடைவை கொரநாட்டுப் புடைவை என்று வழங்குகின்றது. கொர நாடு எங்கே உள்ளது? அதற்குக் கொரநாடு என்ற பெயர் எப்படி வந்தது? என்று பார்ப்போமானால் நெசவுத் தொழில் முன் னாளில் எத்துணை விரிவாக நிகழ்ந்தது என்பது ஒருவாறு விளங்கும். மாய வரம் என்னும் மாயூரத்திற்கு அருகே உள் ளது கொரநாடு. கூறைநாடு என்ற பெயரே கொரநாடு என மருவி வழங்குகின்றது. கூறை என்பது ஆடை. இப்போது அச் சொல் வழக்காற்றில் இல்லை. ஆனால் முற் காலத்தில் அது எல்லார்க்கும் தெரிந்த சொல்; பாட்டிலும் உரையிலும் பயின்ற சொல். தேவாரம் அச்சொல்லை எடுத்தாளு கின்றது.

"இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடுகலாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்பது சுந்தரர் பாடிய தேவாரம். இறை வனுகிய ஈசனை உள்ளன்போடு வழிபட்டால் இம்மையில் உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்கும்; மறுமையில் சிவ லோக வாழ்வும் சித்திக்கும் என்பது இப் பாட்டின் கருத்து.

இப்பாட்டிலே உள்ள கூறை என்னும் சொல்லைத் தமிழ்நாட்டார் இன்னும் அறவே மறந்து விடவில்லை. கூறைச் சேலை என்ற தொடர் மொழியிலே அச்சொல்லைக் காண லாம். கூறைச் சேலை என்பது முழுத்த வேளையில் மணமகள் உடுத்துக் கொள்வதற் காக மணமகன் வீட்டார் கொடுக்கும் சேலை. கூறை என்றாலும் சேலை என்றாலும் பொருள் ஒன்றுதான். ஆயினும் கூறை என்ற பழைய சொல்லின் பொருள் மழுங்கி விட்ட காரணத்தால் சேலை என்ற பதத்தை யும் அதனோடு சேர்த்து இக்காலத்தினர் கூறைச் சேலை என்று வழங்குகின்றார்கள். கூறை நெய்யும் நாடாகத் தமிழ் நாட்டில் முற்காலத்தில் பேரும் புகழும் பெற்றிருந்த கூறைநாடு இப்பொழுது பேரும் மாறி, சீரும் குன்றி ஒரு சிற்றூராக இருக் கின்றது.

ஆதியில் மரப்பட்டைகளையும் விலங்கின் தோல்களையும் மக்கள் ஆடையாகச் செய்து உடுத்தார்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறு வர். பழந் தமிழ் இலக்கியத்தில் மரவுரி ஆடை குறிக்கப்படுகின்றது. மாதவம் புரிந்த முனிவர் ஒருவரை 'மரவுரி உடை யன்' என்று மணிமேகலை உணர்த்துகின்

கவனமுடன் நெய்யப்பட்டு
பெருமையுடன் அணியப்படுபவை



உங்களுடைய கம்பீரமான தனி பிரோவில் புதிய காதலி களே ஏற்படுத்த விரும்பினால், கைத்தறி துணிகளில் மிக சமீபத் திய மோஸ்தர்களைக் காண்பிக்கச் சொல்லுங்கள்.

உங்கள் உடை தேவை உடையாகவோ, அத்தந்த பிரதேச வாணிபமோ இருக்க விரும்பினாலும், விசேஷ சந்தர்ப்பங்களுக்கு ஏற்றதாகவோ, அல்லது ஒய்வுநேர உடையாகவோ வேண்டுமானா லும் ஏராளமான கைத்தறி நிறுவனங்களிலிருந்து பொருட்கள் எடுத்து கொள்ளலாம். குளிர்ச்சி பொருந்திய பருத்தி அல் ஜவுளிகளி லிருந்து, மிக மிருதுவான பட்டுத் துணிகள், கம்பளித் நிறுவனங் மற்றும் கடுங் குளிரிலும், கதகதப்பு உண்டாக்கக்கூடிய எவ்வகை கம்பளி ரகங்கள் வரை சகல வகைகளும் கிடைக்கும். ஆடம்பரம் விரும்புவோருக்கு மஸ்லு, ஜிம்மு, பெர்கப் மற்றும் விசேஷ காலங் களுக்கேற்ற ஜரிகைத் துப்பட்டாக்கள் கிடைக்கும். எத்தந் துணி வாங்கினாலும் இந்தியாவின் கைத்தறி தொழிலாளர்களின் இணை யற்ற திருஷ்டிநிறனும், பரம்பரை வேலைப்பாடும் பிரதிபலிப்ப தான தேர்ந்தெடுப்பான நரம் உத்தரவாதமாகக் கிடைக்கிறது.



அகில இந்திய ஹாண்ட்லூம் போர்டு
98, மேஜர்ஸ் ரோடு, சென்னை-18; ஷாஹீதாக் ஹவுஸ், விட்டல்ரோடு, பலார்ட் எஸ்டேட், பம்பாய், மற்றும் 7/192, ஸ்வரூப் நகர், கான்பூர்.

றது. சீரை என்ற சொல்லும் மரவுரியைக் குறிக்கும். திருஆவினன்குடி என்னும் பழனி மலையில் முருகனை வழிபடப் போந்த முனிவர்கள் சீரை உடுத்திருந்தனர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

அயோத்தி மாநகரில் அரச கோலம் துறந்து தவக்கோலம் பூண்ந்து கானகம் நோக்கிச் சென்ற இராமனும் சீதையும் சீரை உடுத்திருந்தார்கள் என்று கம்பர் பாடுகின் ரூர்.

"சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை இளையவன் முன்செல
காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
ஊரை உற்றது உரைக்கவும் ஒண்ணுமோ"

என்ற பாட்டில் சீதை மரவுரி தரித்துச் சென்ற செய்தி குறிக்கப்படுகின்றது.

மலை நாட்டில் வாழ்ந்த மக்கள் இலைகளா லும் தழைகளா லும் செய்யப்பட்ட ஆடையை உடுத்தார்கள். மரவுரியும் பசுந் தழையும் மலைநாட்டில் வாழும் மக்களுக் குரிய உடைகள் என்று ஒரு குறத்திப் பாட் டுக் கூறுகின்றது. பொதியமலைக் குற வஞ்சி பாடுகின்ருள்—

"கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்கு
கல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும் வாய்
மடுப்போம்
பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே
யுடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக்
கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண்
படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்
போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த வியல்பிது
காணம்மே."

என்ற பாட்டில் மலைநாட்டு மக்களின் வாழ்க்கை நன்கு எடுத்துக் கூறப்படுகின் றது. நாள்தோறும் வள்ளிக் கிழங்கை அகழ்ந்து எடுப்போம், குறிஞ்சி மலரைப் பறித்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்போம், பசுந்தழையும் மரவுரியும் ஆடையாக உடுப்போம், செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தினர்க்குக் கொடுப் போம், பதனிட்ட புலித்தோலிற் படுப் போம் என்று சொல்லிக்கொண்டே போகின்ருள் குறவஞ்சி.

காட்டு விலங்குகளாகிய மான், புலி, யானை முதலியவற்றின் தோல்களும் ஆடை களாக உடுக்கப்பட்ட செய்தி பழம் பாடல் களால் தெரிகின்றது. ஈசன் புலியின் தோலை ஆடையாகவும் யானையின் தோலைப் போர் வையாகவும் கொண்டான் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. எல்லா உலகமும் தானே ஆகி நின்ற ஈசனுர்க்குக் "கொல் புலித்தோல்" நல்லாடையாயிற்று என்று திருவாசகம் பாடிற்று.

தமிழ் நாட்டு முனிவர்கள் மான் தோலை மேலாடையாகப் போர்த்திருந்தார்கள் என்று திருமுருகாற்றுப்படை கூறும்.

"மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்"

என்று அன்னூர் தவக்கோலத்தைத் திருமுரு காற்றுப்படை நன்கு எழுதிக் காட்டு கின்றது.

ஆடையைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொற் கள் பல வுண்டு. கலிங்கம், காழகம், அறுவை, துகில் முதலிய பல சொற்களைத் தமிழிலக்கியத்திற் காணலாம். அவற்றுள் கலிங்கம் என்ற சொல்லைப் பார்ப்போம். பாரத தேசத்திலுள்ள ஐம்பத்தாறு நாடு களுள் கலிங்கம் என்பதும் ஒன்று. தமிழ் நாட்டில் சோழ மன்னர்கள் சிறப்புற்றிருந்த காலத்தில் கலிங்கம் தமிழ் அரசனுக்குத் திறை செலுத்தும் நாடாக இருந்ததென்பது வரலாற்று உண்மை. கலிங்க நாட்டு அரசன் வழக்கம் போல் திறை செலுத்தாமையால் குலோத்துங்க சோழன் அந்நாட்டின் மேல் படை எடுத்து வெற்றி மாலை சூடிய செய்தி

கலிங்கத்துப் பரணி என்னும் தமிழ்ப் பாட்டால் விளங்குகின்றது. இத்தகைய சீர்மை வாய்ந்த கலிங்கத்தில் நெய்யப்பட்ட ஆடை கலிங்கம் என்றே பெயர் பெற்றிருந்தது. தமிழ்க் கவிஞர்கள் கலிங்கம் என்ற சொல்லை நயமாக எடுத்து ஆண்டுள்ளார்கள். இரட்டைப் புலவர்கள் என்று தமிழ் நாட்டில் கவிஞர் இருவர் இருந்தனர். அவர்கள் எங்கும் ஒன்றாகவே சென்று கவிபாடுவர். ஒரு நாள் மதுரை மாநகரிலுள்ள பொற்றாமரைக் குளத்தில் இருவரும் நீராடச் சென்றார்கள். ஒருவர் கரையிலிருந்தார். மற்றவர் படியில் இறங்கி ஆடைகளைத் துவைக்கத் தொடங்கினர். அப்போது அவருடைய ஆடைகளில் ஒன்று படியிலிருந்து நழுவித் தண்ணீரில் விழுந்து குளத்தினுள்ளே சென்று கொண்டிருந்தது. கரையிலிருந்த புலவர் அதைக் கண்டார். 'ஐயோ! கலிங்கம் போகிறதே' என்று கூவினர். துவைத்துக் கொண்டிருந்த ஆடைகளில் ஒன்று தண்ணீரில் மிதந்து செல்வதைக் கண்டார் கவிஞர். ஆனால் அதற்காக மன வருத்தப்பட வில்லை. சுவையாக மறுமொழி அளித்தார். இக்கலிங்கம் போனால் போகட்டும். கவலையில்லை. இப்பதியிலே சொக் கலிங்கம் இருக்கின்றார். அவர் இருக்கையில் நமக்கு என்ன குறை என்ற கருத்தை அமைத்து ஒரு கவி பாடினர்.

''இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்கமாம்
மதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை.''

என்ற பாட்டைக் கேட்டுக் கரையில் இருந்த புலவரும் களிப்புற்றார்.

பலவகைப்பட்ட ஆடைகள் தமிழ் நாட்டில் உண்டு. பொன்னாடை உண்டு. பூவாடை உண்டு. பாவாடை உண்டு. சிற்றாடை உண்டு. கல்லாடை உண்டு. மேலாடை உண்டு. இன்னும் பல உண்டு. இவற்றுள் சில ஆடவர்க்குரிய உடைகள். சில பெண்களுக்குரியவை. இக்காலத்தில் கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தும் பழக்கம் தலையெடுத்து வருகின்றது. தெய்வங்களுள் திருமாலுக்குரியது பொன்னாடை. ''பொலம் பூவாடையில் பொலிந்து தோன்றும் செங்கண் நெடியோன்'' என்று திருமாலைப் பாடிற்று சிலப்பதிகாரம். பொன்னாடையைப் பீதாம்பரம் என்றும் சொல்வதுண்டு. பூவாடை என்பது அழகிய வேலைப்பாடுடைய ஆடை. பாவாடையும் சிற்றாடையும் இளம் பெண்களுக்குரிய ஆடைகள். கல்லாடை என்பது காவித்துணி; துறவியர்க்குரியது அவ்வாடை. மேலாடை என்ற சொல் நளவெண்பாவிலே நயமாக எடுத்தாளப்பட்டுள்ளது. மேலாடை இப்பொழுது அங்கவஸ்திரம் என்று சொல்லப்படுகின்றது.

ஆடை என்றாலும் உடை என்றாலும் பொருள் ஒன்றே. உடுக்கின்ற ஆடையை உடுக்கை என்றார் திருவள்ளுவர். ''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'' என்பது அவர் அருளிய திருக்குறள். உடுக்கை என்பதும் உடுப்பு என்பதும் ஒரே அடிச் சொல்லினின்றும் பிறந்தனவே யாயினும் அவற்றின் இடையே பொருள் வேற்றுமை உண்டு. இடுப்பில் உடுத்தும் உடை உடுக்கை என்றும், மேலே அணியும் சட்டை உடுப்பு என்றும் இக்காலத்தில் வழங்குகின்றன. முற்காலத்தில் மெய்ப்பை என்பது உடுப்பின் பெயர். பணத்தைப் பாதுகாக்கும் பையைப் பணப்பை என்பது போல உடம்பைப் பாதுகாக்கும் உடையை மெய்ப்பை என்று குறித்தார்கள்.

வட்டுடை என்ற உடையும் முன்னாளில் இருந்ததாகத் தெரிகின்றது. போர்க்களம் செல்லும் வீரர்கள் இடுப்பிலிருந்து முழந்தாள் வரை உடுக்கும் உடையே வட்டுடை என்று பெயர் பெற்றிருந்தது. சீவகன் என்ற வீரன் போர்க்கோலம் கொண்டபோது வட்டுடை தரித்திருந்தான் என்று சிந்தாமணி கூறுகின்றது.

துகில் என்பது மாதர் அணியும் மெல்லிய ஆடை. கடற்கரைக்குத் தன் காதலனுகிய கோவலனேடு சென்ற மாதவி "நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடுத்தி" இருந்தாள் என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே துயிலி என்ற ஊர் ஒன்று உண்டு. அவ்வூரில் நெய்யப்படும் மெல்லிய ஆடையும் துயிலி என்றே வழங்குகின்றது. நேர்த்தியான துகில் நெய்யப்பட்ட தனால் அவ்வூர் துகிலி என்று பெயர் பெற்று, அப்பெயர் நாளடைவில் துயிலி என்று மருவியதோ என்பது ஆராய்தற்குரிய தாகும்.

ஆடையைக் குறிக்கும் பல அருமையான சொற்கள் இப்பொழுது பழகு தமிழில் இல்லை. அத்தகைய சொற்களில் ஒன்று அறுவை என்பது. ஆடை செய்யும் தொழிலாளரை அறுவையர் என்று மணிமேகலை குறிக்கின்றது. இச்சொற்களை ஆராயும் பொழுது முன்னுளில் கைத்தறியிலேயே ஆடைகள் நெய்யப்பட்ட முறை நன்முக விளங்கும். தறியினின்றும் துணிக்கப்பட்டது துண்டு; அறுக்கப்பட்டது அறுவை; குறைக்கப்பட்டது கூறை; எனவே ஆடையின் வரலாறு இந்நாட்டுக் கைத்தறியின் சீர்மைக்கு ஒரு சிறந்த சான்முக அமைந்துள்ளது.

இனி உடம்பினை அழகு செய்யும் அணிகலன்களைச் சிறிது பார்ப்போம். அவற்றை நகை என்பர் இக்காலத்தார். பொன்னாலும் மணியாலும் நகை செய்து மேனியை அலங்கரித்துக் கொள்ளும் வழக்கம் இந்நாட்டில் மிகப் பழமை வாய்ந்தது. பெண்கள் சிறப்பாகத் தலை முதல் தாள்வரை நகை யணிந்து கொள்ள ஆசைப்படுவர்.

இத்தகைய நகை பிறந்து வளர்ந்த வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குத் தமிழ் நாட்டில் வழங்கும் சில நகைப் பெயர்கள் சிறந்த கருவியாகும். பாண்டி நாட்டிலே நகையைத் தடையம் என்பார்கள். மணம் பேசும் பொழுது பெண்ணுக்கு என்ன தடையம் போடுவீர்கள் என்று மணமகனைச் சேர்ந்தோர் கேட்கும் வழக்கம் இன்றும் நாட்டுப்புறங்களில் உண்டு. தடையம் என்ற சொல்லை ஆராய்ந்தால் நகை பிறந்த முறை ஒருவாறு விளங்கும். தடையம் என்றாலும் தடை என்றாலும் பொருள் ஒன்றே. நிலை என்பது நிலையம் என்று வழங்குதல் போலவே தடை என்பது தடையம் ஆயிற்று. பேய் பிசாசுகளால் உடம்பிற்கு நோய் நொடிகள் வரும் என்ற அச்சம் ஆதி காலத்தில் உலக மெங்கும் பரவி இருந்தது. ஆதலால் அவற்றைத் தடை செய்வதற்குக் கழுத்திலும் கையிலும் இடுப்பிலும் காலிலும் மந்திர ஓலைச் சுருள்களை நூலிற் கட்டினார்கள். பீடைகளும் பிணிகளும் வாராமல் அவை தடுத்தமையால் தடையம் என்ற பெயர் வந்தது. பெரும்பாலும் கையில் அணியும் நகை ஒன்றையும் காலில் அணியும் நகை ஒன்றையும் ஆராய்ந்து பார்ப்போம். திருமணம் முதலிய நற்காரியங்களைத் தொடங்கும் பொழுது காப்புக் கட்டிக் கொள்ளும் வழக்கம் இன்றும் உண்டு. அதன் கருத்தென்ன? இடையூறு வாராமல் எடுத்த காரியம் இனிது நிறைவேறுவதற்குக் கையில் கட்டும் நூலே காப்பாகும். பீடைகளைத் தடுத்துப் பாதுகாத்தலாலேயே அது காப்பு என்று பெயர் பெற்றது. ஆதியில் நூலாகக் கட்டிய காப்பு இப்பொழுது தங்கம் முதலிய விலை உயர்ந்த பொருள்களால் செய்யப்படும் நகையின் பெயராயிற்று.

கையிற் காப்புக் கட்டியதுபோலவே காலிலும் தடை கட்டினார்கள். அத்தடைதான் தண்டை என்று பெயர் பெற்றது. பூடு என்பது பூண்டு என்றும் அடு என்பது அண்டு என்றும் வழங்குதல் போலவே தடை என்பது தண்டையாயிற்று. ஐம்பொன்னால் தண்டை செய்து குழந்தையின் காலில் அணிந்தால் பேய் அணுகாது என்ற நம்பிக்கை இன்றும் தமிழ் நாட்டில் உண்டு.

இவ்வண்ணம் கழுத்தில் தடையாக அணிந்த நூல் தாலி என்று பெயர் பெற்றது.



*10 சைக்கிள் வியாபாரிகளில் 8 பேர்கள்

ஹெர்குலிஸ்

தான் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானம்அளிக்கிறது என்கிறார்கள்

நீங்கள் குறைந்த விலைக்கோ அல்லது அதிக விலைக்கோ சைக்கிள் வாங்கலாம். ஆனால் ஹெர்குலிஸ்லைக் காட்டிலும், கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானமுடைய வேறு ஒரு லைக்கிள் பெறமுடியாது. இந்த உண்மையை அறிந்துதான் பத்து லைக்கிள் வியாபாரிகளில் எட்டுபேர்கள் 'நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு ஹெர்குலிஸ் தகுந்த பெறுமானம் அளிக்கிறது' என்கிறார்கள். அவர்களுடைய புத்திசாலித்தனமான ஆலோசனையைப் பின்பற்றி ஹெர்குலிஸ் லைக்கிளையே வாங்குங்கள்

* ஒரு தனிப் பட்ட ஆராய்ச்சியின் மூலம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

லைக்கிளில் முதலீடு செய்வது ஒரு சிறந்த மூலதனம் போலாகும்

ஹெர்குலிஸ்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானம் அளிக்கிறது

தயாரிப்பவர்கள்: டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்

TIC. 252 (A)

தாலிக்கே நூல் என்ற பெயர் உண்டு. தாலி யிழந்த பெண்ணை நூலிழந்தவள் என்பர். கவியரசனுகிய கம்பன் இறந்தபொழுது கலை மகள் நூலிழந்தாள் என்று பாடினர் ஒரு புலவர்.

"பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றி ருக்க நாமடந்தை நூல் இழந்த நாள்" என்ற பாட்டிலே நூல் என்பது மங்கல நாணுகிய தாலியைக் குறிக்கின்றது. இக் காலத்தில் தாலி பொன்னல் செய்யப்பட்டுப் பொற்றுலி என்று பெயர் பெற்றாலும் அத னுள்ளே மங்கல நாணுகிய நூலை இடும் வழக்கம் இன்றும் உண்டு. குழந்தைகளுக்கு நோய் வராதிருப்பதற்காக ஐம்படைத் தாலி கட்டும் வழக்கம் முன்னாளில் இருந்தது. காக்கும் தெய்வமாகிய திருமாலின் ஐந்து படைக் கலங்களும் எழுதி நூலிலே கோத் துக் கழுத்தில் அணிந்தால் பீடை அணுகாது என்பது பண்டையோர் கொள்கை. இதனா லேயே இழை என்னும் பெயர் நகைக்கு அமைந்தது. நூலின் பெயராகிய இழை என்பது நகையின் பெயராயிற்று.

பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு ஒரு சான்றாக நிற்பது நகை. அந்நாளில் மாதர் அணிந்திருந்த நகைகளை அழகாகக் கூறுகின் றது சிலப்பதிகாரம். கண்ணகி அணிந்திருந்த சிலம்பும் மாதவி அணிந்திருந்த பலவகை யான நகைகளும் அழகிய வேலைப்பாடுடை யனவாய் அம்மாதரின் அழகுக்கு அழகு செய்தன என்பது சிலப்பதிகாரத்தால் நன்கு விளங்குகின்றது.

சிலப்பதிகாரத்திலே குறிக்கப்படும் நகை களுள் வளையலை மட்டும் சிறிது பார்ப்போம். தங்கவளையலும், சங்கு வளையலும், பவழ வளையலும் மாதவியின் கையில் அமைந்து அழகு செய்தன என்று சிலப்பதிகாரம் கூறு கின்றது. இக்காலத்தில் வயிர வளையல் முதல் கண்ணாடி வளையல்வரை பல திறப் பட்ட வளையல்கள் காணப்படுகின்றன. ஆயினும் ஆதியில் வெண்மையான சங்கு வளையல்களையே மாதர் அணிந்தார்கள். சங்கறுத்து வளையல் செய்யும் பணியாளர் பழந்தமிழ் நாட்டில் இருந்தார்கள். "சங் கறுப்பது எங்கள் குலம் சங்கரனுர்க்கு ஏது குலம்" என்று நக்கீரர் பாடினர் என்பர். சீதை சங்கு வளையல் அணிந்திருந்தாள் என் பது, "சங்கிற் பொலிந்த கையாள்" என்று கம்பர் பாடுதலால் தெரிகின்றது. திருஞான சம்பந்தர் தேவாரமும் சங்கு வளையலைக் குறிக்கின்றது. "வெள்வளை சோர என் உள்ளங்கவர் கள்வன்" என்பது அவர் திருப் பாட்டு. எனவே ஆதி வளையல் சங்க வளை யல்; பின்னே வந்தன தங்க வளையல்; பவழ வளையல்; வயிர வளையல் முதலியன. இந்த வகையில் தமிழ் நாட்டு நகைகள் சொல் லும் கதையை அறிந்து கொள்வது ஓர் ஆனந்தம்.



தேசீய குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்.

★

அனில் மார்க்

தீப்பெட்டிகளையே

எப்பொழுதும்

உபயோகியுங்கள்



(1928ல் ஸ்தாபனம்)

★



*

தயாரிப்போர்:

தி நேஷனல் மேட்ச் வொர்க்ஸ்

சிவகாசி, (தென் இந்தியா)

★

தி நேஷனல் மேட்ச் டிஸ்ட்டிரிபியூடிங் கம்பெனி

323, கீழ மாசி வீதி, மதுரை

போன்: 726 தந்தி: "STEADY"

சைவம்

சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ., கோவை

★

சைவம் என்ற சொல் சிறந்த பல பொருள்களைத் தரும் பண்புடன் விளங்குகிறதொன்று. சிவசம்பந்த முடையது சைவம் என்பது அதன் மொழிப் பொருள். **சிவம்** என்ற சொல் முழுமுதற் கடவுளைக் குறிப்பதாய் எல்லாம் கடந்தது, எங்கும் இருப்பது, எல்லாம் வல்லது என்பனவாதிப் பல பொருள்களை உள்ளடக்கியதாய் விளங்குவது. "அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர் கட்கும், தெரிக்கும் படித்தன்றி நின்ற **சிவம்**" என்பது திருவாசகம். இத்தகைய சிவத்தைக் குறிக்கும் எல்லாக் கொள்கைகளின் தொகுதியைச் சைவம் என்பர்.

"சைவம்" உலக வழக்கு

மேலே கண்டவாறு கடவுளைப்பற்றிய எல்லாக் கொள்கைகளுக்கும் இருப்பிடமாவது **சைவம்** என்றிவ்வாறிருக்க, உலக வழக்கில் அது வழங்குமாற்றைப் பார்ப்போம்: **சைவம், சைவர்** என்பதை ஒரு சாதிப் பெயராகச் சிலர் வழங்குவர். மற்றும் சிலர் அற்றன்று, அது புலாலுண்ணுமையைக் குறிக்கும் என்று வழங்குவர். இதுவே பெருவழக்காம். "இன்றைக்கு நான் சைவம்" "என் வீட்டில் நான் மட்டும் சைவம்" "எங்கள் தகப்பனுர் கால முதல் நாங்கள் சைவம்" (நாராயணநாய்க்கர் மிலிடரி ஹோட்டல் போர்டு பலகையின் கீழ்ச் சில நாட்களில் தொங்கும்) "இன்று சைவச் சாப்பாடு" என்ற சிறு பலகை விளம்பரம். இவைபோன்று உலக வழக்கில் உரையாடல்களில் வரும் **சைவம்** என்னும் சொல் புலாலுண்ணுமை என்ற பொருளையே தாங்கிநிற்றல் காண்க. சைவம் என்பது புலாலுண்ணுமை என்ற அடிநிலையின் மேலெழுந்த கட்டடம் என்ற உண்மை உலகர் யாவரும் ஒப்புக்கொண்டது என்பது இதனால் புலனுகும். இது சைவத்தின் சிறப்பு. வைணவம், சைவம், புத்தம், கிறித்தவம், இஸ்லாம் முதலிய ஏனைய சமயப்பெயர்களுக்கு இப்பொருள் பொருந்தாமையால், வழக்கில் இல்லாததும் காண்க. சைவம் என்னுல் புலாலுண்ணுமையை இன்றியமையாது குறிப்பதுபோலக் கிறித்துவம், இஸ்லாம், புத்தம், சமணம், வைணவம் என்ற சமயப் பெயர்கள் குறிப்பதில்லை. சில சமயப் பெயர்கள் புலாலுண்பதையே குறித்து நிற்கும்.

சைவம் ஒரு சமயம்

இனிச் **சைவம்** ஒரு சமயத்தின் பெயராகவும் வழங்கப்படுகிறது. "சைவமுதலா மளவில் சமயமும் வகுத்து" என்கிருர் தாயுமானுர். ஆம்; சைவம் ஒரு சமயம்தான். ஆனுல், அது எல்லாச் சமயங்களுக்கும் முதன்மைபெற்றது என்பார் **முதலாம்** என்றுங் குறித்தார். எழுத்துக்களுக்குள் **அகரம்** முதன்மை பெற்றது போலச் சமயங்களுள் எல்லாம் சைவம் முதன்மை பெற்றது. அகரம் எல்லா எழுத்துக்களுள்ளும் வியாபித்து நின்று தான் வேருேர் எழுத்தினும் அடங்காது நிற்றல் போலச் சைவமும் எல்லாச் சமயங்களும் தன்னுள் அடங்கத்தானென்றிலும் அடங்காது தனி நிற்பது. "சைவ சமயமே சமயம்" "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்பன முதலியவை காண்க. இவை வெறும் அபிமானத்தாற் சொன்னவையல்ல. உண்மை நெறிநில்

கண்டு சொல்லியவையே. ஒவ்வோர் செயலுக்கும் நான்கு பொருள்கள் இன்றியமையாது வேண்டப்படுவன. செயலைச்செய்பவன்-1; செயல்-2; செயலின் பயன்-3; அப்பயனைச் சேர்ப்பிப்பவன்-4 என்பன. இத்தன்மை சைவநெறியிலேதான் காணப்படுவது. ஏனைய சமயங்கள் இவற்றுள் ஒவ்வோராற்றாற் குறைபாடுடையன. **செய்பவன்,** செயல் செய்யும் ஆன்மா ஒருவன் உண்டு என்று ஒப்பாத சமயங்கள் உள்ளன. இதுபோலவே கருமம் (செயல்) என்பதையும், கருமத்தின் பயனையும், அதனைக் கொண்டு செய்தவனிடம் சேர்ப்பிக்கும் இறைவனையும் ஒப்பாத சமயங்களும் உண்டு. அவையெல்லாம் அவ்வவ்வாற்றாற் குறைபாடுடையன.

செய்வானு செய்வினையுஞ் மதன்பயனுஞ் சேர்ப்
பானும்
மெய்வகையா னுன்காகும் விதித்தபொருள்
எனக்கொண் டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே
யுணர்ந்தறிந்தார்.
(பெரியபுராணம்-- சாக்கியநாயனார் புராணம் (5))

பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களையும் நிச்சயம் செய்து, பசுவாகிய ஆன்மா பாசங்களினின்றும்சிவனடிசேர்ந்து சிவானந்தத்தில் வாழ்வது முத்தி என்று வகுத்து அதற்குரிய உபாயங்களையும் கூறுவது சைவம்.

சமய நிச்சயம்

சமயங்களின் உண்மைத் தத்துவ நிலையினை நிலையிட்டுக் காட்டவந்த அருணந்தி சிவாசாரியார் கூறுவதாவது: உலகத்திலே ஒதப்படும் சமயங்களும் பொருள் நிச்சயம் செய்யும் நூல்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபாடாகப் பலபலவும் உள்ளன. அவற்றுள் எது உண்மைச் சமயம்? யாது உண்மைப் பொருள் நூல்? என்று கேட்பாராகில், இது ஆகுவது; இது ஆகாதது என்னும் பிணக்கமில்லாமல் நீதி முறைப்படி இவை எல்லாம் ஓரிடத்தே காணும்படி நிற்பது யாதோ அதுவே உண்மைச் சமயமும் உண்மைப் பொருள் நிச்சயிக்கும் நூலுமாம்.

ஒதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு
[மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் சென்னி
னிதுவாகு மதூல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிலையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினு னிலையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மலையிரண்டு மரனடிக்கீ
[முடங்கும்
(சித்தி.—சூத். 8)

என்றிவ்வாறு உண்மைச் சமயத்தைக் காண்பதற்கு உரைகல் தந்திருக்கிறார். இந்த உரைகல்லில் மாற்றுரைத்துப் பார்த்தால் சைவ சமயமே உண்மைச் சமயமாவது என்பது விளங்கும். அது எவ்வாறு? எல்லாச் சமயங்களும் தன்னிடத்தே பிணக்கமின்றிக் காண நிற்பதெங்ஙனம்? என்னில் ஒரு சமயத்துடனும் மாறுபடாமல் அவ்வவற்றையும் தன்னுள் அவ்வவற்றுக்கேற்கும் சோபானத்தில் (படிமுறையில்) வைத்து அமைதி காட்டி நிற்பதாம். "சோபான பட்சங் காட்டி" "ராசாங்கத்தமர்ந்தது வைதிகச் சைவ மழகி தந்தோ"! என்பது தாயுமானார் திருவாக்கு.

எல்லாச் சமயங்களும் தம்முள்ளே பிணக்கமின்றிக் காண நிற்பதெவ்வாறென்னில் எல்லாவற்றையும் அவ்வவற்றுக்கேற்ற படிமுறையில் வைத்துக் காணுதல். இதுவே சைவ சமய உண்மைச் சமரசமாகும்.

சமய சமரசம்

மற்றப்படி இப்போது பரந்த கொள்கை என்ற பெயரால் "எல்லாம் ஒன்று" என்று வழங்கப்படும் சமரசங்கள் எல்லாம் குழறுபடையேயாம். சமயங்களை வைத்து ஆராயப் புகும்போது அவ்வவற்றின் கடவுட் கொள்கை, முத்தி யிலக்கணம், முதலாகிய தத்துவங்களைப் பற்றியே ஆராய்ந்து அவ்வவற்றின் தகுதிகளின் தாரதம்மியங்

களை நிச்சயித்தல் வேண்டும். அவ்வாறில்லாமல் கண்மூடித்தனமாய் எல்லாம் ஒன்று தான் என்று பேசுதல் பொருந்தாததாகும்; உலகியற்கை விரோதமும் அசம்பாவிதமுமாகும். உதாரணமாகப் பார்ப்போமானால் ஒரு வீட்டு எஜமானி அவ்வீட்டில் உள்ளவர்களையும் வருபவர்களையும் ஒன்று போலப் பார்த்து உபசரிக்க வேண்டியது முறை என்றால் எல்லாரையும் தனது நாயகன் போலவே பார்ப்பது என்பது பொருந்துமா? ஒரு வைத்தியர் தன்னிடம் வரும் நோயாளிகளையெல்லாம் வித்தியாசமில்லாமல் ஒன்று போலப் பார்க்க வேண்டும் என்பது முறையாகும். இது எல்லா நோயாளிகளுக்கும் ஒரே விதமான சிகிச்சையும் மருந்தும் தர வேண்டும் என்பதாகுமா? அவ்வவர் நோய்க்கும் பருவத்துக்கும் பக்குவத்துக்கும் தகுந்தபடி சிகிச்சை செய்ய வேண்டும் என்றுதானே அதற்குப் பொருள்!

இரசம் என்பது ஓர் உணவுப் பண்டம். அது புளி உப்பு பெருங்காயம் முதலியவற்றை நீரிற் கரைத்து ஆக்கப்படுவது. புளி முதலியவற்றை ஏற்றபடி உரிய அளவுபடக் கூட்டி அமைத்தல் வேண்டும். இப்படிக் கன்றி, புளி உப்பு முதலியவற்றைப் புளி 2 ரூபா எடை, உப்பு 2 ரூபா எடை, பெருங்காயம் 2 ரூபா எடை, தண்ணீர் 2 ரூபா எடை என்றிவ்வாறு சமரசமாக இருக்க வேண்டுமென்று சமனெடையாகக் கூட்டி அமைத்தால் அது உணவுக்கு உதவுமா? எல்லாச் சமயங்களும் சமம் என்று கூவுவோர் கூற்றும் இவ்வாறேதான். இக்கருத்துப் பற்றியே திருஞானசம்பந்தராதியோரையும், ஏசுநாதரையும், புத்தரையும், முகம்மது நபியையும் ஒருபடித்தரமாக வைத்துக் காண்போர் கூற்றும் ஆராயத்தக்கவை.


சைவம் சமயாதீதமானது

"சைவ முதலா மளவில் சமயமும் வகுத்து" என்றருளிய தாயுமானார் "மேற் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்று மருளினர். அதன்படி **சைவம்** என்பது எல்லாச் சமயங்களையும் தன்னுள்ளடக்கிப் படிமுறையில் வைத்துக் காணும் ஒரு சமயம் என்ற அளவில் மட்டும் நில்லாது சமயாதீதமாகவும் விளங்குவது. அதனைச் "சைவ சமயமே சமயம் சமயா தீதப் பழம்" பொருளைக், கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப், பொய் வந் தழலுஞ் சமயநெறி புகுத வேண்டாம்" என்றருளிச் செய்துள்ளார். இதனைச் சன் மார்க்கம் என்னும் ஞான மார்க்கத்துள் வைத்துப் பேசுவது சிவஞான சித்தியார். இதுபற்றி அதனுட் கூறப்படுவனவற்றைச் சிறிது கவனிப்போம்:—

சகல கலை புராண வேத சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவுமுணர்தல் வேண்டும்; அதன் மேல் அவற்றுட் கூறப்படும் பல பல மார்க்கப் பொருள்களையும் கீழாகக்காணுதல் வேண்டும்; அவற்றின் மேலான பதிபசுபாசங்களைத் தெரிவித்துப் பரமசிவனைக் காட்டும் நன்னெறியாகிய ஞானத்தை நாடுதல் வேண்டும்; அந்நாட்டத்திலே உறைந்து நின்று ஞானம் ஞேயம் ஞாதிரு — (அறிவு - அறியப்படு பொருள் - அறிகின்றவன்) என்ற மூன்றும் அறச்சிவனுடனாகும் தன்மையுடைய பெரியோர் சிவனைப் பெறுவர்.

"சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு
முணர்ந்து,
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக
மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக்
காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர்
காணே".
(சித்தி. 8—22)

இத்தகைய சைவசமரச சுத்தஞானத்தை அடையும் வழி யாது? என்னில், முதலில் புறச்சமய நெறியில் நின்று அகச் சமயம் புகுதல் வேண்டும். சுமிருதிகள் விதித்த விதி



பருத்தி நூல்கள்

ஸ்டேபிள் பைபர்

ஹோஸைரி நூல்கள்

எமது

விசேஷ தயாரிப்பு

கோயமுத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

ஏஜண்டுகள்: ஈ. பீமாநாயுடு & கம்பெனி

PSM

களின் வழி ஒழுகுதல் வேண்டும். அதன் பின் ஆச்சிரமதர்ம மார்க்கங்களில் ஒழுகுதல் வேண்டும். அரிய தவங்கள் செய்தல் வேண்டும்; கலைகள் பலவும், வேதமும், புராணங்களும் வேத சிரமாகிய வேதாந்தமும் உணர்ந்து தெளிதல் வேண்டும். இவ்வாறு சென்ருல் சைவத்திறத்து அடைகுவர். அதில் சரியை கிரியை யோகம் முற்றியபின் அடையும் சிவஞானத்தினுலே சிவனடியைச் சேர்குவர். இதுவே வழியாகும். இதினின்றும் சைவத்திறத்திலடைகுவதும், அ தி ல் சரியை கிரியை யோகங்களை முற்றிய நிலை அடைவதும், அதன்மேல் வரும் சிவ ஞானத்தாலே சிவத்தையடைகுவதும் எத்துணை அரிது என்பது தெரியலாகும். இதனைப்,

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிகுதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்ருற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.
(சித்தி. 8—11)

என்றருளினர் அருணந்தி சிவனர்.


இத்தனை அரிதிற்கிடைத்த சைவத்திறத்தை யடைந்தும் அதில் வகுத்த கிரியையாதிகளை முற்றிச் சிவஞானம் அடைந்து சிவத்தை அடைய முயலாமல் மக்கள் பேயாய்த் திரிந்து வாணாள வீணளாகக் கழிப்பது கொடிது! கொடிது!!


சமயவாதமும் பரசமய நிராகரிப்பும்

எல்லாச் சமயங்களையும் படிமுறையில் வைத்துப் பார்த்துச் சமரசம் காணுவது சைவம் என்ருல் அதிற் சமய வாதமும் பர சமய நிராகரிப்பும் காணப்படுவானேன்? என்ருல் சமய உண்மைகளை நிலையிட்டும் அறுதியிட்டும் காண்பதற்கும், அவ்வச் சமயங்கள் தத்தம் அளவில் நில்லாது ஆக்கிரமிப்பும் சைவத்திற்கு அழிவும் செய்யும் போது அதைத்தடுப்பதற்கும் இவை வேண்டப்படுவனவேயாம். சைவமானது எந்தச் சமயத்தையும் விரோதிக்காது; அழிவும் செய்யாது; இவ்வுண்மைகளைத் திருஞான சம்பந்த நாயனர் சரிதத்தினுள் வரும் சமண வாதம் புத்த வாதங்களுள் வைத்து விரித்துக் காட்டியுள்ளேன். அவற்றைப் பார்க்க. பௌத்த வாதத்தின் போது ஆளுடைய பிள்ளையார் உண்மை தெரிய வேண்டி வாது செய்ய வந்த புத்தர்களைக் கருணை நோக்கம் செய்து "நிற்பனவுஞ் அரிப்பனவும் சைவமேயாம் நிலைமையவர்க் கருண்புரிந்தார்." அவர்கள் சைவராளுர்கள் என்பது வரலாறு. இவ்வாறன்றிச் சைவ சமய சமயா சாரியர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகச் சமய வாதங்கள் செய்தார்கள் என்பதை நாம் சரிதங்களிற் கேட்டதில்லை.


சைவ சமய பிரமாண நூல்கள்

வேதமும் சிவாகமங்களும்தாம் சைவ சமயப் பிரமாண நூல்களாம். சைவத் தெய்வத் திருமுறைகளாகிய தமிழ் வேதங்களும் அவ்வாறே பிரமாண நூல்களாம். வேத சிவாகமங்கள் சிவபிரான் தாமேயருளிய முதனூல்கள். திருமுறைகள் சிவமேயாகிய பெரியோர்கள் மூலமாக இறைவன் வெளிப்படுத்தியன. புராண இதிகாசங்களும் இவற்றின் உட்பிரிவுகளாகக் கொள்ளப்படும். வேதம் பொதுநூல்-உலகிற்குச் சொல்லியது-சிவாகமங்கள் அருஞ்சிறப்பு நூலாம். இவை சத்திநி பாதர்க்குச் சொல்லியன. கல்லால மரத்தினிழலில் இறைவன் அமர்ந்து முனிவர்களுக்கு உணர்த்தியது வேதங்களின் ஆசங்கையை நீக்குதற்கு. அறம் முதலாகிய நான்கு உறுதிப் பொருள்களையும் விளக்கினர். "அறம் பொருளின்பம் வீடு மொழிந்த வாயான் முக்கண்மூர்த்தி மேயது முதுகுன்றே" என்பது தேவாரம். இது உலகி











ஐம்பெருங்காப்பியங்கள்
இயற்றினர்
பெருங்காப்பியப் புலவர்கள்







அவரெல்லாம் இன்றிருந்தால்
இன்னுமொரு காப்பியமும்
ஆக்கியிருக்கமாட்டாரோ
'ரத்தினம் பொடி'யினைப்பற்றி






தபால் பெட்டி 1151, மதராஸ்-2














யலே அவர்களுக்குஉணர்த்தியதாம். "நன்முக நால்வர்க்கும் நான்மறையி னுட்பொருளே, அன்முலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ" என்றும்,

"அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா
நான்கனையும்
இருந்தவருக் கருளுமது வெனக்கறிய
வியம்பேடீ
அருந்தவருக் கறமுதலுன் கன்றருளிச்
செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண்
சாழலோ"

என்றும் வரும் திருவாசகங்கள் காண்க. மேற்சொல்லியவாறு வேதம் பொது நூல், உலகர்க்குச் சொல்லியது என்றும் சிவாக மங்கள் சிறப்பு நூல், சத்திநிபாதர்க்குச் சொல்லியது என்றும் உண்மை பிறிதோ ராற்முலும் பெறப்படும். தமது உபநயனத் தின்போது வந்து ஐயங்கேட்டுத் தெளிந்த வேதியர்களுக்கு ஆளுடைய பிள்ளையார்பஞ் சாக்கரத்தினே அருளியபோது "ஐந்தெழுத் துமே" என்று மந்திரத்தைக் கூறுது அதன் பெயர் மாத்திரம் கூறி உபதேசித்ததும், நல் லூர்ப் பெருமணத்தில் அங்கு வந்த பக்கு வான்மார்களாகிய அத்தனே பேரையும் தீட்சைசெய்து முத்தியடைவிக்க உபதேசிக் கும்போது "நமச்சிவாயவே" என்று மந்தி ரத்தையே உபதேசித்ததும் காண்க.

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு
[நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே
[தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்
[பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த
மாகும்" (சித்தி. 8—15)


இவ்வாறு நூல்களின் தாரதம்மியங்களே வைத்துக் கண்டுகொள்க.

இவ்வாறு சைவ வுண்மைகளே யுணர்ந் தோர் தாம் முன்புகொண்டிருந்த சமயங் களின் குறைபாடுகளே உணர்ந்து சைவ மேன்மைகளைப் பிடித்து ஒழுகி உய்தி பெறு குவர். "முன்னெரு சமயந்தன்னைப் பொரு ளென முற்றி நின்றேர், பின்னர்வான் சைவ மெய்தப் பெறினவர் பேசுமாரேல்" என்று உவமானத்தில் வைத்து இதனே உணர்த் தினர் மாதவச் சிவஞான யோகிகள் (காஞ் சிப் புராணம், நகரப்படலம்).

இதுகாறுங் கூறிய வாற்முல் சைவம் என் பதொன்றுதான் சமய அடிப்படையில் புலா லுண்ணுமையைக் கொண்டு ஒழுகுவ தென் பதும் இவ்வுண்மை உலக வழக்கிலே ஒப் புக்கொள்ளப்பட்ட தென்பதும், சைவம் ஏனைச் சமயங்களே யெல்லாம் உள்ள டக்கி நின்று அவற்றுள் முதன்மை பெற்று விளங் குவதென்பதும், சமய நிச்சயம் செய்தல் இவ்வாறு என்பதும், சைவ சமரசம் இத் தன்மையுடைய தென்பதும், சமயங்களுள் ஒன்றென்பதனேடு சமயா தீதமாகவும் விள ங்குவதென்பதும், சமயா தீதநிலே அடைவ தற்கு வழி யின்னதென்பதும், பர சைவத்தில் சமய நிராகரிப்பு இத்தன்மையுடைய தென் பதும், சைவத்தின் பிரமாண நூல்களிவை என்பதும், ஒருவாறு பேசப்பட்டன. உலகி யல் வேத நூலொழுக்க மென்பதும், நிலவு மெய்ந்நெறி சிவநெறியே யென்பதும், விளக் கப்பட்டது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக
மெல்லாம்"

"எல்லாம் அரனுமமே சூழ்க"



தமிழ் இசைப் புலவர்கள் வரலாறு

அ. கி. பரந்தாமனார், எம். ஏ.

★

தமிழிசைத் தோற்றம்

உலகில் மொழி தோன்றுவதற்கு முன்னே இசைதான் உண்டாயிற்று. ஆட்டோ யெஸ்பர்சன் என்னும் மொழி நூலறிஞர் 'இசையிலிருந்தே மொழி எழுந்தது' என்று கூறியுள்ளார். இதைக்கண்டு வியப்படைய வேண்டுவதில்லை. இது மெய உண்மை. தங்கள் கருத்துகளைச் சொல்லால் வெளிப்படுத்துவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பு மக்கள் தங்கள் உணர்ச்சிகளைப் பாட்டால், இன்னிசையால், இல்லையெனில் ஏதோ ஒருவகை இசையால் வெளியிட்டார்கள். ஆதலாற்றான், மொழி தோன்றுவதற்கு முன்பு மொழிக்குத் தாயாய் இன்னிசை உண்டாயிற்று என்பதாகும். தமிழிசையும் அங்ஙனமே தோன்றியது என்பதில் ஐயமில்லை.

இசைச் சிறப்பு

சேக்கிழார் இசையை 'அமுத இசை' என்றும், 'என்பூடு கரைந்துருகும் இன்னிசை' என்றும் இசையைப் பாராட்டியிருக்கிறார். உண்மையில் இசை வயப்படாத உயிர்கள் உலகில் உண்டோ? இல்லை. அப்படியிருக்குமாயின் அது கொடியதாக இருக்க வேண்டும். எல்லா மக்களையும் எல்லாப் பிறவிகளையும் உள்ளியக்கவல்லது இசை ஒன்றே. துன்பங்களையும் தொல்லைகளையும் நம்மை மறக்கச் செய்வது இசை. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருள்வது இசை. நெஞ்சைத் தூய்மையாக்கிப் பக்தியுணர்ச்சியை ஊட்ட வல்லது இசை. உடன் உணர்ச்சியை (Sympathy) உண்டாக்கக் கூடியதும் இசையே.

முத்தமிழ்

இசையை நுண்கலை என்பர். ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பார், 'நுட்பக்கலையினும் நுட்பக் கலையாக இயங்குவது இசை' என்று கூறினர். நம் முன்னோர்கள் நுண் கலையினும் நுண் கலையாகிய இவ்விசைக் கலையைச் செவ்வையாகப் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். எல்லா மொழிகளிலும் இயல் இசை நாடகங்கள் இருக்கின்றன. எனினும், பிறமொழியினர் இம் மூன்றையும் இணைத்துத் தம் மொழியில் பெயரிட்டார்களில்லை. வட மொழியினர் மூவாரியம் என்றார்களில்லை; ஆங்கிலரும் மூவாங்கிலம் என்றுரைத்தார்களில்லை. தமிழர் மட்டும் பிறமொழியினரைப் போலல்லாது இயல் இசை நாடகம் ஆகிய மூன்றையும் பாதுகாத்து வளர்க்கும் பொருட்டு முற்காலத்திலேயே 'முத்தமிழ்' என்றும், 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்றும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்றும் வற்புறுத்திப் பாடல்களில் பாடி வந்ததைப் பரக்கக் காண்கிறோம். அது மட்டுமன்றி, நம்முன்னோர்கள் பொதுவாகத் தேனினும் இனிய நீஞ்சொல் பயின்று வரும் காப்பியம் பாட வேண்டுமெனில், முத்தமிழ்ப் பயிற்சி பெற வேண்டும் என்று கருதியதாகத் தெரிகிறது. ஆதலால், கம்பர் பெருமான் உத்தமக் கவிஞரை விளக்கு மிடத்தில்,

''முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவன்''

என்று குறிப்பிட்டுள்ளார். விருத்தப் பாடலும் சந்த விருத்தங்களும் பாட விரும்பும் கவிஞர்களுக்கு இசைப் பயிற்சி ஓரளவு இன்றியமையாதது என்று கூறவேண்டுவதில்லை. இயற்றமிழிலும் இசைத் தமிழ் கலந்திருக்கிறது. இயற்றமிழ்ப் பாக்கள் உண்மையில் இசையை வளர்க்கும் இனிய செவிலித்தாய்மார்களாக இருக்கின்றன என்றுல் மிகையாகாது.

தமிழ் மக்களின் இசை விருப்பம்

தமிழ் மக்கள் இசையை மிகமிக விரும்புகிறவர்கள். பாட்டுப் பாடுகிறார்கள் என்றுல், ஒப்பாரிப் பாட்டாயிருந்தாலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் அதைக் கேட்டின்புற நாட்டங் கொள்வார்கள். கல்லாத பெண்களும் சாவு வீடுகளில் புதிதுபுதிதாக ஒப்பாரிப் பாட்டைக் கட்டிப் பாடக் கேட்கிறோம். பாமர மக்களாயினும் தேமதுரத் தமிழிசை கேட்க மிகவும் விரும்புகிறார்கள். இசை விருப்பம் தமிழர்களுக்கு அமைந்துள்ள பண்பாடுகளுள் ஒன்று என்றே கூறலாம். இந்நிலை இன்று மட்டும் தமிழகத்தில் காண்பதன்று; அன்றும் கண்டதொன்று. இதனால், தமிழிசை உருமாறினாலும் கருமாறாது வந்திருக்கிறது. சங்க காலத்திலும் இசைப்பாடல்கள் இருந்தன; இசை வகுத்தோர் இருந்தனர்; இசையிலக்கண நூல்கள் இருந்தன. அக்காலத்தில் பெரு நாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம் முதலிய இசை இலக்கண நூல்கள் இருந்தன. அவையனைத்தும் நமக்குக் கிடைக்காமல் மறைந்தன. இடைக்காலத்திலும் தமிழ் நாடெங்கும், ஊரெங்கும் இசை முழக்கம் கேட்டது. 'காந்தாரம் இசை யமைத்துக் காரிகையார் பண்பாடும் கவினுர் வீதிகள்' நாடெங்கும் விளங்கின. இசை நூல்களை இயற்றிய புலவர்களும் சங்க காலத்திலும் இருந்தார்கள்; இடைக்காலத்திலும் இருந்தார்கள்; பிற்காலத்திலும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள்.

இவ்விசைப் புலவர்கள் வரலாற்றைப் பண்டைக்காலம் முதல் இக்காலம் வரையில் சுருங்கிய அளவிலே காண்போம்: இசைப்புலவர் என்று குறிப்பிடுவது ஈண்டு இசைபாடிய அல்லது பாடும் புலவர்களைக் குறிக்காமல், இசைநூல்கள் இயற்றியவர்களையே குறிப்பிடுவதாகும். இசைப்பயிற்சி பெறுவது அருமை; இசைப்பாடல் இயற்றுவது மிக அருமை. இசைப் பயிற்சியோடு இசைப்பாடல் இயற்றும் திறமை பெறுவது அருமையினும் அருமையாகும். இவ்வரிய திறனைப் பெற்றவர்களே இங்கே குறிப்பிடும் இசைப்புலவர்கள் ஆவார்கள்.

இசைப்புலவர்கள் வரலாற்றைக் கீழ் வரும் வகையில் பாகுபாடு செய்யலாம்:

1. சங்ககால இசைப்புலவர்கள். கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலமே சங்க காலம் என்பது. இது வரலாற்றுக் காலம்.

2. இருண்ட கால இசைப்புலவர்கள். இது கி. பி. 350 முதல் 550 வரையுள்ள காலமாகும். இதனைக் களப்பிரர் காலம் என்பர்.

3. சமய மறுமலர்ச்சிக்கால இசைப்புலவர்கள். இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலம்.

4. வேற்றரசுக் கால இசைப்புலவர்கள். இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் 1947 வரையிலாகும்.

5. மறுமலர்ச்சிக்கால இசைப்புலவர்கள். இது இக்கால இசைப்புலவர்களைக் குறிக்கும்.

சங்ககால இசைப் புலவர்கள்

வீரமும் ஈரமும் மிக்க பேரரசர்களும் சிற்றரசர்களும் இமிழ்கடல்சூழ் தமிழகத்தில்

இம் மாத
ஜூன் 15
வெளியீடு



வீனஸ் பிக்சர்ஸ்

அமரதீபம்

சிவாஜிகணேசன்
பத்மினி
சாவித்திரி
E.V.சரோஜா
K.A.தங்கவேலு
M.N.நம்பியார்
முதலியோர் நடிக்கத்து

டைரக்ஷன்
T.பிரகாஷ்ராவ்

கதை வசனம்
ஸ்ரீதர்

இணைப்பதிவு டைரக்ஷன்
கமால்கோஷ்

இணைப்பதிவு: வின்சென்ட்

சங்கீதம்: T.சலபதிராவ்

ஸ்டூடியோ: வாஹினி

தயாரிப்பு: S.கிருஷ்ணமூர்த்தி



மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை ஜில்லாக்களுக்கு :—
அஜந்தா பிக்சர்ஸ், திருச்சி — மதுரை

ஆங்காங்கு ஆட்சி புரிந்த காலம் சங்க காலம். பதியெழு அறியாப் பண்பு நிலைத் திருந்த காரணத்தால் நாடெங்கும் அமைதி நிலவிற்று; பொருளாதார நிலை பெருகிற்று. மக்கள் அதலை களித்தார்களன்றிக் கவன் ரூர்களில்லை. எனவே, செந்தமிழ் இலக்கி யங்கள் நாட்டிலே தோன்றின; எங்கும் பைந்தமிழ் இசை பொங்கியது.

பரிபாடல் என்னும் நூல் எட்டுத் தொகையுள் ஒன்று; 'ஓங்கு பரிபாடல்' என்று பாராட்டப்படுவது. இந்நூல் பரி பாடல் என்னும் பாவால் தொகுக்கப்பெற்ற மையின் இப்பெயர் பெற்றது. பண்ண மைந்த பாட்டு, பரிபாடல். ஒருவகை இசைப்பாட்டு இது. இப்பாட்டு ஒரு வெண்பாவாகி வருதலின்றிப் பல உறுப்புக் களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற் றுப் பெறுவது என்பர் இளம்பூரணர். 'அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பலவடியும் வருமாறு நிற்கும் என் றுணர்க' என்பர் நச்சினார்க்கினியர். இப் பாடலின் சிற்றெல்லை 25 அடிகள் என்றும், பேரெல்லை 400 அடிகள் என்றும் தொல் காப்பிய நூற்பா கூறுகிறது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளை யாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் வரும் என்பர் பேராசிரியர். தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றிவரும் என்பர் நச்சினார்க்கினியர். தெய்வமும் காமமும் பொருளாக வரும் என்று யாப்பருங்கல விருத்தி கூறும். இவ்விளக்கங்களால் பண் டைக்காலத்தில் இன்பமும் இறைவாழ்த்தும் பொருளாகக் கொண்ட இசைப்பாடல் இருந்து வந்தது என்பது நன்கு விளங்கும். சங்ககால இசைப்புலவர்கள் யாழிசைக்கும் தாளத்துக்கும் பொருந்துமாறு இவ்வகை இசைப்பாக்களை இயற்றித் தந்தார்கள்.

இப்பொழுது பரிபாடல் நூலில் 22 பாடல்களே வெளிவந்துள்ளன. நூலில் பாடல்களுக்குப் பண்வகுத்த இசைப்புலவர் களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவர் களே நமக்குக் கிடைத்துள்ள சங்ககால இசைப்புலவர்கள். பெயர்கள் கீழ்வரு மாறு:

1. கண்ணகனார்—21-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
2. கண்ணன் நாகனார்—5-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
3. கேசவனார்—14-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
4. நல்நாகனார்—12-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
5. நன்னாகனார்—2-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
6. நாகனார்—11-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
7. பித்தாமத்தர்—7-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.
8. நல்லச்சுதனார்—16, 17, 18, 20-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்.
9. பெட்டன் நாகனார்—3, 4-ஆம் பாடல் களுக்கு இசை வகுத்தவர்.
10. மருத்துவன் நல்லச்சுதனார்—6, 8, 9, 10, 15, 19-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்.

இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவர் மருத் துவராக விளங்கியதோடு இசைப் பெரும் புலவராகவும் இலங்கினர் என்பது கருதத் தக்கது.

சங்க கால இயற்றமிழ்ப் புலவர் ஒருவர் பல இசைக் கருவிகளை வாசிக்கத் தெரிந்த இசைக் கருவிப் பெரும் புலவராக இலங் கினர். வாத்தியங்களுக்கு இயம் என்பது பெயர். மிகப் பல வாத்தியங்களை ஒரே காலத்தில் வாசிக்கத் தெரிந்தமை பற்றியோ, மிகப் பல இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சி பெற்றிருந்தமை குறித்தோ இப்புல வர் நெடும்பல்லியத்தனார் எனப்பட்டார். இவர் பாடிய இயற்றமிழ்ப் பாடல் புற நானூற்றில் 64-ஆம் பாடலாக அமைந்துள்

ளது. இவர் சங்க கால இசைக் கருவிப் பெரும் புலவர்.

பாணர்கள்

இசை பொங்கியிருந்த சங்க காலத்தில் மிடற்றுப் பாடற் பயிற்சியிலும் யாழ் வாசிக்கும் திறமையிலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங்கிய இசைவாணர் குலமே ஒன்று இசையால் வாழ்ந்து வந்தது. இந்தக் குலந்தான் பாணர் குலம்; பழந் தமிழ்க் குலம்; இசையால் வாழ்ந்த குலம். ஔவையார் இக்குலத்தைச் சேர்ந்த இயற் றமிழ்ப் புலவர்; நல்லிசை மெல்லியலார்.

சங்க காலப் பாணர்கள் கலையுணர்ச்சி மிக்கவர்கள்; வழிவழியாக இசைபாடி வாழ்ந்தவர்கள். பாணர்களுள் சிறு பாணர் என்றும் பெரும் பாணர் என்றும் இரு பிரிவினர் இருந்தனர். சிறிய யாழை வாசிப் போர் சிறு பாணர் என்றும் பெரிய யாழை வாசிப்போர் பெரும் பாணர் என்றும் சிறு பாணாற்றுப் படை பெரும்பாணாற்றுப் படை நூல்களால் அறிகிறோம். இவர்களுள் இசைப் பாணர், யாழ்ப் பாணர், மண்டைப் பாணர் என்ற வகையினரும் இருந்தனர். மிடற்றுப் பாடற் பயிற்சி மிக்கோர் இசைப் பாணர் என்றும், யாழ் வாசித்தலில் வல்லோர் யாழ்ப் பாணர் என்றும், மண்டையோடு போன்ற பிச்சைப் பாத்திரம் ஏந்தியாசித்தவர்கள் மண்டைப் பாணர் என்றும் குறிப்பிடப்பட்டனர். இசைக் கலைஞர்களான இப்பாணர்கள் வறிஞர்களாயிருந்தால், பழுமரம் தேடிச் செல்லும் பறவைகள் போல, முடியுடை வேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் நாடிச் சென்று இசைத் திறமையைக் காட்டிப் பொற்பூவும் யானை, குதிரை முதலிய பரிசில்களும் வேறு பொருள்களும் பெற்று வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்; பெருங்குடி மக்களான தலைவன் தலைவியர் ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் செல்வாக்குபெற்று வாழ்ந்தார்கள். பாணன் மனைவி பாடினி அல்லது பாணத்தி எனப்படுவாள். பாணன் பாடப் பாடினி கூத்து நிகழ்த்துவது வழக்கம். வள்ளல்கள் இவர்களை நன்கு ஆதரித்து வந்தார்கள். இதனைப் புறநானூறு முதலிய சங்க நூல்களில் மிகுதியாகக் காணலாம். இவர்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்டனர். திருப்பாணாழ்வார் திருவரங்கக் கோயிலுக்குள் போகாமல் ஆற்றின் அக்கரையிலிருந்து பாடியது, பாணர் தீண்டப்படாதவராகக் கருதப்பட்டார் என்னும் உண்மையைப் புலப்படுத்துகிறது.

பாணர்கள் நிலை கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் மாறியது. இக்காலப் பாணர்கள் அரசவை நாடி இரத்தலை மேற்கொள்ளவில்லை. திருநீலகண்ட யாழ்ப் பாணர் ஞானசம்பந்தருடனிருந்து அவர் பாடிய திருப்பாடல்களுக்கு யாழ் வாசித்து வந்தார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

இளங்கோவடிகள்

கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் தலைசிறந்த இயற்றமிழ்ப் புலவராக விளங்கியதோடு இசைப் புலவராகவும் இருந்தார் என்பதை அவர் சிலப்பதிகாரத்தில் பாடிச் சென்றுள்ள கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலியவை நன்கு புலப்படுத்தும். இளங்கோவடிகள் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர் ஆவார்.

இருண்டகால இசைப் புலவர்கள்

தமிழக வரலாற்றில் இருண்ட காலம் களப்பிரர் காலம். களப்பிரர்கள் தமிழ் நாட்டில் புகுந்து தமிழ்ப்பெரு வேந்தர்களை வென்று அடிமைப் படுத்தித் தமிழக ஆட்சியை மூன்று நான்கு நூற்றாண்டுகள் மேற் கொண்டிருந்தார்கள். இவர்களால் நாட்டில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டன; இலக்கிய வளர்ச்சி குன்றியது; இசை வளர்ச்சி குறைந்தது; அமைதி மறைந்தது; சமய ஆர்வம் சிதைந்தது. இக்குழப்பம் மிகுந்த காலத்தில் **காரைக்காலம்மையார்**, கி. பி. 550-ல் தோன்றித் திருவாலங்காட்டு மூத்த

திருப்பதிகம், மூத்த திருப்பதிகம் ஆகிய இவற்றை இசைப்பாவுக்கு ஏற்றமுறையில் இயற்றித் தெய்வத் திருநெறியை மக்கள் உய்யும் பொருட்டுப் பரப்பினர்கள். இருண்ட வானில் சிற்றொளியாகத் தோன்றிய தெய்வத்திருவிசைப்பா விண்மீன் இக் காரைக்காலம்மையார் எனலாம்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும்

தமிழ் நாட்டில் கி. பி. 7-ம் நூற்றாண்டில் மண்டியிருந்த இருள் மறைந்தது; பகலோன் ஒளி வீசத் தொடங்கினன். பல்லவர்கள் ஆட்சி ஓங்கிற்று. பாண்டியர்கள் களப் பிரர்களை வென்று தம்மாட்சியை நிறுவி மாண்புற ஆண்டுவந்தார்கள். சமய மறு மலர்ச்சி தலையெடுத்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் சைவ வைணவ சமயம் எனும் நற்பயிரைப் பக்தியெனும் நீர்பாய்ச்சி வளர்க்கத் தொடங்கினர்கள். இவர்கள் இலக்கியப் பயிற்சி மிக்க திருவருட் கவிஞர் களாக இருந்ததோடல்லாது திருநெறிபரப் பிய அருள்ஞான இசைப் பெரும்புலவர் களாகவும் இலங்கினர்கள். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தர மூர்த்தி நாயனர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்தவர். திருஞானசம்பந்தப் பெருமானைச் சேக்கிழார்,

> "ஏழிசையும் தழைத்தோங்க
> இன்னிசைவண் தமிழ்ப்பதிகம்
> எய்தப் பாடினர்"

என்று புகழ்ந்துள்ளார். சுந்தரர்,

> "நாளும் இன்னிசை யால்தமிழ்
> பரப்பும் ஞானசம் பந்தனுக்கு
> உலகவர்முன் தாளம் ஈந்து"

என்று 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தன்' எனச் செந்தமிழால் பாராட்டினர்.

இந்த மூவர் முதலிகளும் பாடிய இசைப் பாக்களே தேவாரமாகும். தெய்வத்தைப் போற்றும் இசைப்பாடலை வாரம் என்ற பெயரால் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்கள். இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் பொதுவாகிய செய்யுள் இயக்கம் நான்காகும். அவை முதனடை, வாரம், கூடை, திரள் என்பன. மிகவும் தாழ்ந்த செலவினையுடையது முதனடை. மிகவும் முடுகிய நடையினை யுடையது திரள். இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாய சொல்லொழுக்கும் இசையொழுக்கும் உடையது வாரப் பாடல். சொற்செறிவும் இசைச்செறிவும் உள்ளது கூடைப்பாடல். இந்நான்கனுள் இழும் என ஒழுகும் இன்னோசையும் செம்பாகமாகப் பொருளுணர்த்தும் தெளிவும் அமைந்தது வாரப்பாடலேயாகும். இயல் இசைத் துறைகளில் நிறைந்த புலமை மிக்கவர்களே தேவாரப் பாடல்களை இயற்றத் தக்கவர்கள். இவ்வரிய தேவார இசைப் பாக்களை இயற்றிய மூவர் முதலிகளைச் சாதாரண இசைப் பெரும்புலவர்கள் என்று கூறுதல் ஒல்லாது; அருள்ஞான இசைப் பெரும்புலவர்கள் என்றே சொல்லவேண்டும். இவர்கள் இறைவனது திருவருளை இன்சொற்படுத்தியும் இன்னிசைப்படுத்தியும் பாடினர்கள். தேவாரம் என்னும் சொற்றொடருக்கும் இறைவன் மீது பாடப்பட்ட இசையொழுக்கும் சொல்லொழுக்கு முள்ள பாடல் என்பது பொருள்.

தேவார இசையின் சிறப்பினை அறிந்த வடநாட்டு இசை வாணர்கள் தேவாரப் பண்கள் சிலவற்றை வடமொழி இசைநூல் களில் புகுத்தியிருக்கிறார்கள். 13-வது நூற்றாண்டில் தெளலதாபாத் தேவகிரி இராச்சியத்தில் சிம்மணர் அரசவையில் சமஸ்தான இசைப்புலவராக விளங்கிய சாரங்கதேவர், தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு வழங்கிவந்த தேவாரப் பண்களை நன்கறிந்து, அப்பண்கள் சிலவற்றின் இலக்கணங்களைத் தாம் இயற்றிய 'சங்கீத இரத்நாகரம்' என்னும் வடமொழி இசைநூலில் பொன்னேபோல் போற்றியிருப்பதாக இசை நூலறிஞர்கள் கூறுகிறார்கள்.



பருத்தி & ஸ்டேபிள்
நூல்கள்

உயர் ரகம்
எமது குறிக்கோள்.

ராஜலக்ஷ்மி மில்ஸ் லிட்.,

மானேஜிங் ஏஜண்டுகள்
B.ரங்கசாமி நாயுடு & கம்பெனி
கோயமுத்தூர்

PSM

இன்று தமிழகத்தில் வழங்கிவரும் கர்நாடக இசை தமிழ்வழி வந்ததே என்று இசை நூற்பேரறிஞர்கள் நன்கு எடுத்துக் காட்டுகிறார்கள். காலஞ்சென்ற சங்கீத கீர்த்தனாசாரியார் C. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 1927-ல் சென்னையில் கூடிய அனைத்திந்திய இசைமாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவில், "தேவாரத்தில் 24 தமிழ்ப் பண்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவை இன்றும் ஓதுவார்களால் பாடப்பட்டு வருகின்றன. அவற்றிற்கும் இப்போதைய கர்நாடக இராகங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமைப்பாடு காணப்படுகிறது. இருவகை இராகங்களும் ஒருவகையே என்று சொல்லலாம்" என்று விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். திருவனந்தபுரம் இசைச் செல்வர் T. இலக்குமணப்பிள்ளை, B.A. அவர்கள், "தமிழிசை ஏற்பாடும் ஆரிய சங்கீத ஏற்பாடும் ஒரு காலத்தில் தம்முட் சந்தித்துக் கலந்து கர்நாடக சங்கீதம் என்னும் ஏற்பாடாய்த் திரிந்தன என்பதும், அதற்கு அடிப்படை தமிழிசை ஏற்பாடே என்பதும் நன்கு விளங்கும். தமிழிசை ஏற்பாட்டில் இசை நுணுக்கம், பேரிசை, சிற்றிசை, பெருநாரை, பெருங்குருகு முதலிய இசைகள் கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த ஆரிய சங்கீத ஆசிரியராகிய பரத முனிவருக்கு முந்தியே இருந்தன என்று அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டதிலிருந்து அறிகிறோம். ஆனால், 13வது நூற்றாண்டில் இருந்த சாரங்க தேவருக்குப் பின்பு தமிழில் இசையிலக்கணம் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம், இரண்டு ஏற்பாடுகளும் கலப்புண்டு தமிழ்ப்பண்கள் பல வடமொழிப் பெயர்கள் பூண்டு வடமொழியில் சங்கீத இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்தமையால், தமிழிசைக்குத் தனியான இசையிலக்கணம் எழுதுதல் அவசியமில்லை என்று கண்டு அவ்விலக்கணம் எழுதும் வேலை விடப்பட்டதாயிருக்கவேண்டும் என்று உய்த்துணரலாம்" எனக் கர்நாடக இசையைக் குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களும், திருவாசகமணி K. M. பால சுப்பிரமணியம், B.A., B.L. அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ள 'கீதத் தமிழ்' என்னும் நூலுக்கு அளித்துள்ள சிறப்புரையில், "நம் நாட்டின் பண்டைய இசைத்தமிழே தான் கருநாடக சங்கீதம் என்று வழங்கிவருகிறதெனப் பேரறிவாளர்கள் கருதுகின்றார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இக்காலத்தமிழிசைப் புலவர்களும் அறிஞர்களும் தமிழிசைச் சங்கச்சார்பில் சில ஆண்டுகளாக டிசம்பர் மாதங்களில் நடத்திவரும் பண் ஆராய்ச்சிகளிலிருந்தும் மேற்குறித்த அறிஞர்கள் முடிவு வலுவடைகிறது. நிற்க.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் மாணிக்க வாசகர். இவர் இரண்டாம் வரகுணபாண்டியன் (862-80) காலத்தவர். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி முதலியவை இசைத்தமிழுக்கு இலக்கியமாகத் திகழ்பவை. ஆதலால், 9-ஆம் நூற்றாண்டின் அருள்ஞான இசைப்பெரும் புலவர் மணிவாசகனார் எனலாம்.

இதே 9-ஆம் நூற்றாண்டில் விளங்கிய திருப்பாணாழ்வார் திருவரங்கப் பெருமானைக் கண்டு உள்ளம் உருகிப் பாடிய இசைப்பாடலே அமலனாதிபிரான் பிரபந்தமாகும். ஆழ்வார்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலங்களில் வாழ்ந்தவர்கள்; தங்களுடைய இசைப்பாக்களால் வைணவ பக்தி நெறியைத் தமிழகத்தில் வளர்த்தவர்கள்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டுக்குமேல் பல காலங்களில் வாழ்ந்த ஒன்பதின்மர், நாயன்மார்களைப் பின்பற்றி இசைப்பாக்களைப் பாடினர். இவர்கள் பாடியவை பதினோராந் திருமுறையில் திரு இசைப்பா என்னும்

தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்கள் பெயர்கள் வருமாறு :

1. **திருமாளிகைத்தேவர் :** இவர் பிற் காலச் சோழமன்னர்களுக்குக் குருவாக விளங்கியவர்.

2. **சேந்தனார் :** இவர் திருவீழிமிழலை யில் வாழ்ந்த சிவஞானியார்.

3. **கருவூர்த்தேவர்:** இவர் கருவூரிலே பிறந்ததால் கருவூர்த்தேவர் எனப்பட்டார்; முதலாம் இராசராசன் (985–1014) காலத் தவர். எனவே, இவரது காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

4. **பூந்துருத்தி நம்பிகாட நம்பி:** இவர் திருப்பூந்துருத்தியிலே பிறந்தவர். காட நம்பி என்பது இவரது இயற்பெயர். இவ ருடைய பாடல்கள் மிகுந்த இசைச் சிறப் புடையன. பிறர் பாடாத சாளரபாணி என்னும் பண்ணில் பாடியவர் இவர்.

5. **கண்டராதித்தர்:** இவர் பராந்தகச் சோழனுடைய இரண்டாம் புதல்வர்; கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திரு வாரூரிலிருந்து ஆட்சி புரிந்தவர்; பல சிவா லயங்களைக் கட்டுவித்தவர்; மிக்க பக்தி பூண்டவர்.

6. **வேணாட்டடிகள்:** இவர் வேணாட்டி னர். கேரள நாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் நடுவில் இருந்தது வேணாடு. இவ்வேணாட்டில் தோன்றியதால் வேணாட் டடிகள் எனப்பட்டார். இவரது இயற் பெயர் தெரியவில்லை.

7. **திருவாலி அமுதனார்:** இவர் சீகா ழிக்கு அருகிலிருந்த ஆலி நாட்டினர். ஆலி நாட்டின் தலைமையூர் திருவாலி. அவ்வூரில் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு அமுத னார் என்பது பெயர். இவ்வூர் வைணவக் குடியில் பிறந்த இவர் சிவபக்தராகித் திருப் பதிகள் தோறும் சென்று சிவபெருமான் எழில்களை இசைப்பாட்டில் பாடினார்.

8. **புருடோத்தம நம்பி:** இவரும் வைணவ மதத்திற் பிறந்து சைவராகிச் சிவ பெருமான்மீது இசைப்பாடல் பாடியவர்.

9. **சேதிராயர்:** இவர் சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர். திருக்கோவ லூரைச் சுற்றியிருந்த நாடே சேதி நாடா கும். இவர் பாடிய பாக்களும் இசைப் பாக்கள்.

இங்ஙனம் சைவ நாயன்மார்களும் பெரி யார்களும் வைணவ ஆழ்வார்களும் இசைப் பாக்களைப் பாடித் தமிழிசையையும் பக்தி நெறியையும் வளர்த்தார்கள்.

அரும்பாடுபட்டு அரிய நூலாகிய யாழ் நூலை இயற்றித் தமிழுலகுக்களித்த காலஞ் சென்ற பேராசிரியர் விபுலானந்த அடிக ளார், "சைவப் பெரியார்களின் தேவாரப் பண்களும் நம்மாழ்வாரின் திருவாய் மொழி யும் இசையபிவிருத்திச் சாதனங்களாக இருந் தன. தமிழ் மொழியிலே இன்று வரையிலே அவைகளைவிட மேலான பக்திரசம் வாய்ந்த பாடல்கள் இல்லை" என்று தமது சென்னைப் பல்கலைக் கழக இசை விரிவுரையில் கூறி யுள்ளார்கள். கருநாடக சங்கீதம் தமிழகத் தில் இடம் பெறும்வரையில் இப்பாடல்கள் இசையரங்குகளிலும் இசைப் பயிற்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன என்றறிக.

தென்னிந்தியாவில் 13, 14, 15, 16–ஆம் நூற்றாண்டுகள் படையெடுப்புகளும் உள் நாட்டுக் குழப்பங்களும் நிகழ்ந்த காலம். 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முஸ் லிம் படையெடுப்புகள் நடைபெற்றன. தென்னகத்தரசுகளுக்குள் போர்கள் நிகழ்ந் தன. இத்தகைய நிலையில் நாட்டில் இசை வளர்வதற்குவாய்ப்பு எங்ஙனம் இருந்திருக்க முடியும்? இசைப்புலவர்கள் எப்படித் தோன்றியிருக்கக் கூடும்? தங்கள் ஆதிக்க ஆட்சிப் பகுதிகளில் இருந்த இந்து சமய இசைவாணர்களை முஸ்லிம் கவர்னர்கள் வற் புறுத்தி டில்லிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள சூழ்நிலையில் அவர்கள் இஸ்லாம்

சமயத்தைத் தழுவ வேண்டியவர்களானார்கள். ஆதலால், இசைப் பயிற்சி அறவே நின்றுவிட்டது; இசைநூல்களும் கொளுத்தப்பட்டு விட்டன.

இங்ஙிலையிலும் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்த **அருணகிரிநாதர்** முருகப்பெருமான்மீது இனிய சந்தம் பொருந்திய மிக அழகிய 'திருப்புகழ்' என்னும் இசைப் பாக்களைப் பாடிக் களமார சமயத்தைப் பரப்பினர். இவர் 'வாக்கிற்கு அருணகிரி' என்று பாராட்டப் பட்டவர். 15-ஆம் நூற்றாண்டில் தோன்றித் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அருளிசைப் புலவர் அருணகிரி நாதராவார். இவருடைய திருப்புகழ் பாக்கள் இன்றும் இசை விருந்தாக இருந்து வருகின்றன.

17-வது நூற்றாண்டில் தஞ்சை நாயக்கர் ஆட்சியிலிருந்தது. 18-வது நூற்றாண்டில் அது மராட்டியர் வசமாயிற்று. தஞ்சையை ஆண்ட நாயக்கர்களும் மராட்டியர்களும் வேற்று மொழியினராயிருந்த காரணத்தால் பண்டைத் தமிழிசைப் பாக்கள் ஆதரவில்லாமல் மடியலாயின. புதுவகையான இசைப்பாக்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றலாயின. தமிழ்நாட்டு இசையுலகில் அமிழ்தினும் இனிய தமிழிசை மறைந்து கருநாடக இசை மலர்ந்தது. புது முறையைப் பின்பற்றி இசைப் புலவர்கள் கீர்த்தனங்களை இயற்றினர்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இசைப்பாக்கள் அதற்குமுன் இருந்ததில்லை. இப்புதிய இசைப்பாக்களைச் சாகித்தியங்கள் என்பர். சாகித்தியங்களை இயற்றுவோரைச் சாகித்திய கர்த்தாக்கள் என்று கூறுவர். இச் சாகித்தியங்கள் இருவகைப்படும்: (1) உரையியல் சாகித்தியங்கள் (Recitative Compositions), (2) இசையியல் சாகித்தியங்கள். உரைநடை அல்லது சொற்கள் மிகுந்தும் சங்கீத நடை சுருங்கியும் இருக்கும் சாகித்தியங்கள் உரையியல் சாகித்தியங்கள் எனப்படும். சங்கீத நடை மிகுந்தும் உரைநடை அல்லது சொற்கள் சுருங்கியும் இருக்கும் சாகித்தியங்கள் இசையியல் சாகித்தியங்கள் எனப்படும். இவற்றைக் கீர்த்தனைகள் என்றும் கிருதிகள் என்றும் கூறுவர். இவ்வேற்றுமையை M. S. இராமசாமி ஐயரவர்கள் மிகத் தெளிவாகத் தமது சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவில் விளக்கியுள்ளார்கள்.

18-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர்கள்

புதிய கருநாடக சங்கீதத்தைப் பயன்படுத்திப் பதினெட்டாம் நூற்றாண்டில் முத்துத் தாண்டவரும் அருணாசலக் கவிராயரும் கவிக்குஞ்சர பாரதியும் தமிழில் புதிய இசைப் பாக்களை (சாகித்தியங்களை) இயற்றி அழியாப் புகழை அடைந்தார்கள்.

1. **முத்துத் தாண்டவர்** கீர்த்தனைகள் அருமையானவை; பக்தி பாவமும் இனிய சொல்லலங்காரமும் அமைந்தவை; சங்கீத வித்வான்கள் திறமைகளைக் காட்டுவதற்கு ஏற்றவை.

2. **அருணாசலக் கவிராயர்** (1712-1779) தரங்கம்பாடியை யடுத்த தில்லையாடியில் பிறந்து, தமது 12-ஆம் வயதில் பெற்றோரை இழந்து தருமபுர ஆதீனத்தை அடைந்து அங்கே தமிழிலக்கிய இலக்கணங்களையும் சமய சாத்திரங்களையும் பயின்றவர்; வடமொழியையும் தெலுங்கையும் கற்றவர். இவருடைய தந்தை நல்லதம்பிப் பிள்ளை; தாயார் வள்ளியம்மை. தந்தை சைனசமயத்தில் பிறந்து பின்பு சைவ சமயத்தில் புகுந்தவர். இவரை நீறுபூசிய வேளாள குலத்தினர் என்பர். கவிராயர் முப்பதாவது வயதில் திருமணம் செய்துகொண்டு காசுக்கடை வைத்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். ஒருசமயம் சீகாழி சென்றபோது, அங்கிருந்த சிதம்பரத் தம்பிரான் இவருடைய பாடல் இயற்றும் திறமையைக் கண்டு வியந்து, அவ்வூரில் வீடுகட்டிக் கொடுத்து அங்கேயே வதியுமாறு செய்தார். சீகாழி

யிலே 25-ஆண்டுக் காலமாக வாழ்ந்துவந்த காரணத்தால் இவரைச் சீகாழி அருணாசலக் கவிராயர் என்பர். இவர் தம்மிடம் கற்று வந்த மாணாக்கர்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கித் தமது 60-வது வயதில் இராம நாடகக் கீர்த்தனை என்னும் அரிய இசை நூலை இயற்றித் தமிழ்மக்களிடம் நன் மதிப்பும் புகழும் பெற்றார். இராம நாட கக் கீர்த்தனைகள் இராமாயணக் காலட் சேபம் செய்வதற்கும் இராமாயண நாடகம் நடிப்பதற்கும் ஏற்ற முறையில் எளிய இனிய சொற்களாலாகிக் கம்பருடைய செஞ்சொற்களைப் பயிலப்பெற்று யாவரும் பாடுதற்குரிய இசையில் அமைந்தவை. இக் காரணத்தால் அக்கீர்த்தனைகள், மிக விரை வில் தமிழ்நாட்டில் பரவின. இவர் பல தனிப் பாடல்கள் பாடியிருப்பதுடன் அசோமுகி நாடகம், சீகாழித் தலபுராணம், சீகாழிக் கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களையும் இயற்றினர். இவர் 67 ஆண் டுகள் நிலவுலகில் வாழ்ந்தார். இவர் இறப்ப தற்கு முன்னமே இவருடைய மனைவியார் இறந்துவிட்டார்.

கவிராயர் தலையில் தாழ்வடம், இடையில் வெள்ளாடை, மேனியில் திருநீற்றுப் பூச்சு முதலிய சிவ சின்னங்கள் பூண்டு, சைவப் பண்டாரக் கோலத்தோடு வாழ்ந்தார் என்று காலஞ்சென்ற S. பவானந்தம் பிள்ளை அவர் கள் கவிராயர் வரலாற்றில் குறிப்பிட்டுள் ளார். இவரது உருவப்படம் கிடைக்க வில்லை.

3. **கவிக்குஞ்சர பாரதியார்** தமிழ் நாட்டுச் சங்கீதத்திற்குச் சிறந்த சாகித்தியம் (இசைப் பாக்கள்) செய்தவர்; இராமநாதபுர மாவட் டத்தில் பார்ப்பனர் குலத்திற் பிறந்தவர்; சிவ கங்கை, இராமநாதபுர சமஸ்தானங்களால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் அருணாசலக்கவி ராயருடைய இராமாயணக் கீர்த்தனைகளைப் பின்பற்றி ஸ்காந்த புராணக் கீர்த்தனை என் னும் நூலை இயற்றித் தமிழிசை உலகில் பெரும்புகழ் பெற்றார். இக்கீர்த்தனைகள் இசைப் பயிற்சிக்கு ஏற்றவை என்று பாராட்டப்படுகின்றன.

19-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சியால் நிலையான அமைதி நிலவி இந் திய நாடு முழுதும் பொருளாதாரம், கல்வி, இசை, அரசியல் முதலிய துறைகளில் பெரு முன்னேற்றமடைந்தது. தமிழ் நாட்டில் இந்நூற்றாண்டிலே செந்நாப் புலவர்களும் இசையறிஞர்களும் பலர் தோன்றி அரிய இலக்கியங்களையும் சிறந்த இசைப் பாடல் களையும் இயற்றினர்கள். இசைப்புலவர் களுள் ஆனை ஐயா, இராமசாமி சிவன், கனம் கிருஷ்ணையர், கோபால கிருஷ்ண பாரதியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், வேதநாயகம் சாஸ்திரியார் ஆகிய இவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

1. **ஆனை ஐயா** தமிழ், தெலுங்கு வட மொழி ஆகிய மும்மொழிகளிலும் செம்மை யாகக் கீர்த்தனைகள் இயற்றிப் புகழ்பெற்ற வர்; தஞ்சை அரண்மனையைச் சேர்ந்த சங் கீதக் குழுவில் ஒருவராக இருந்தவர்.

2. **இராமசாமி சிவன்** என்பது இராமசாமி ஐயரின் மறு பெயர். இவர் மகாவைத்தியநாத ஐயரின் தமையனார்; இசைப் பரம்பரையில் பிறந்த வர்; தமிழ்ச் செய்யுள் இயற்றும் திறமையும் இசை இலக்கண வன்மையும் மிக்கவர். இவர் நகரத்தார் வேண்டுகோளால் பெரிய புராணக் கீர்த்தனை நூலை இயற்றித் திருவா வடுதுறையில் அம்பலவாண தேசிகமூர்த்தி கள், மேலகரம் சுப்பிரமணிய தேசிகச் செல் வர், நவீன கம்பர் என்று பாராட்டப்பட்ட திரிசிரபுரம் மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய இவர்கள் முன்னிலையில் அரங்கேற்றி, அவர்களுடைய பாராட்டைப் பெற்றவர். கோபால கிருஷ்ண பாரதியார் இவர் காலத்தவர். சிவன் கந்தபுராணக் கீர்த்தனை நூலையும் இயற்றியுள்ளார்.

3. **கனம் கிருஷ்ணையர்** திரிசிரபுர வட்டத்திலிருக்கும் திருக்குன்றத்தில் ஸ்மார்த்தப் பார்ப்பனர் குலத்தில் பிறந்தவர்; இசைப் பரம்பரையில் தோன்றியவர்; போதுமான செல்வநிலையில் இருந்தவர். தந்தை இராம சாமி ஐயர். கிருஷ்ணையர் கனமார்க்கத்தைப் பொப்பிலி கேசவையாவிடம் கற்றுத் தஞ்சை அரசவையில் அரங்கேற்றிக் கனம் கிருஷ்ணையர் என்னும் மதிப்பைப் பெற்றவர். இவர் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.

கனம் என்பது ஒரு சங்கீத மார்க்கம். 'கனமார்க்கம்' என்பது மூலாதாரத்திலிருந்து கம்பீரமான ஒலியை உண்டாக்கிப் பாடுவது என்றும், தொடங்கும்பொழுது அந்த ஒலி ஹுங்கார சப்தத்தோடு எழும் என்றும், ஆரோகண அவரோகணத்தில் பலவகையான சங்கதிகள் வருமாறு பாடுவது என்றும் காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமி நாத ஐயர் அவர்கள் கனராக சங்கீத மார்க்கத்தைக் கனம் கிருஷ்ணையரைப்பற்றி எழுதிய வரலாற்றுநூலில் குறிப்பிட்டுள்ளார்.

4. **கோபால கிருஷ்ண பாரதியார்**

பல்லவி

"சிதம்பரம் போகாமல் இருப்பேனே?
சென்மத்தை வீணுக்கிக் கெடுப்பேனே?
—(சிதம்பரம்)

சரணங்கள்

பத்தியும் மனமும் பொருந்தினதங்கே;
சத்தியம் சொன்னேன்; சகலமுமிங்கே.
—(சிதம்பரம்)

ஆசையும்நேசமும் ஆனந்தம் அங்கே;
பேசலும் பாசமும் பிதற்றலும் இங்கே."
—(சிதம்பரம்)

என்னும் இப்பாடல் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனர் கீர்த்தனையிலுள்ளது. இப்பாட்டைக் கேளாத தமிழர் இத் தமிழகத்தில் இரார். யாசிப்போர் வாயிலும் இசையரங்கு மேடையிலும் இசைத் தட்டிலும் இப்பாடலும் நந்தனர் கீர்த்தனையிலுள்ள வேறு இசைப் பாடலும் கேட்டுக் கேட்டு உள்ளம் குளிர்கிறோம்; உடற் கூச் செறிகிறோம். இத்தகைய இசைப் பாடல்களை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியார் நாகப்பட்டினத்துக்கு அருகிலுள்ள நரிமணம் என்னும் ஊரில் வடமப்பார்ப்பனர் குலத்தில் இராமசாமி பாரதியின் தவப் புதல்வராகப் பிறந்து தம் பாட்டனரிடத்தும் தந்தையாரிடத்தும் இளமையில் இசைப் பயிற்சி பெற்றார்; சில காலம் ஆனைதாண்டாபுரத்திலும் சில ஆண்டுகள் முடிகொண்டானிலும் வதிந்து வந்தார். இவர் இளமையிலேயே வடமொழியை முறையாகப் பயின்று காவிய நாடகங்களைக் கற்றவர். அல்லாமலும் வேதாந்த நூல்களையும் படித்தவர்; பிரமசரிய நெறி தவறாமல் ஒழுகிப் பகற் காலத்தில் பிச்சையெடுத்து உண்டு வந்தவர். பின்னர் இவர் மாயூரத்தை அடைந்து கோவிந்தய்யர் அடிகளாரிடம் வேதாந்த சாத்திரங்களைப் பயின்று அவரைக் குருநாதராகக் கொண்டு அம்மாயூரத்திலே வதிந்து வரலானார்.

பாரதியாருக்கு இந்தி இசை பயில விருப்பமுண்டாயிற்று. அதனால், இவர் அக்காலத்தில் திருவிடைமருதூரில், தஞ்சை அமர சிம்ம அரசரால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்து வந்த இராமதாஸ் என்ற இசைப் பெரும் புலவரிடம் சென்று இந்தி இசையைக் கற்றார்; கனம் கிருஷ்ணையரிடமும் இசைப் பயிற்சி பெற்றார். இவருக்கும் தமிழ்ப் பயிற்சியும் இருந்தது. இவ்வளவு பயிற்சி பெற்றும் பாரதியார் இல்லற வாழ்வில் ஈடுபட்டுப் பொருள் தேடி வாழ விரும்பாது, நாள் தோறும் பிச்சை யெடுத்துண்பதும், சிவதரிசனம் செய்வதும், கீர்த்தனைகள் இயற்றிப் பாடுவதும், கதை விரிவுரை செய்வதுமாக மாயூரத்திலே காலம் கழித்து வந்தார். ஒரு முறை இவர் திருவாரூரில் வாழ்ந்துவந்த தெலுங்குக் கீர்த்தனைப் புகழ்பெற்ற இராம பக்தரான தியாகய்யரைக் கண்டு அவருடைய நல்வாழ்த்தைப் பெற்று வந்தார்.

பாரதியார், நாகப்பட்டினத்துக் கப்பல் வணிகரும் சிவபக்தருமான கந்தப்பச் செட்டியார் வேண்டுகோளுக்கு இணங்கி

தக்ஷிண ரயில்வே

மலை ஸ்டேஷன்களுக்கு மலிவான ரிட்டர்ன் டிக்கட்டுகள்

1956 ஏப்ரல் 1-ந்தேதி முதல் அக்டோபர் 31-ந்தேதி வரையுள்ள காலத்தில் தக்ஷிண ரயில்வேயிலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலிருந்தும் **பதன்கோட், ஸிம்லா, ஸொலோன், தரம்பூர்** (பஞ்சாப்) **டேராடூன், காத்தகோடம்** (நைனிடாலுக்கு), **டார்ஜிலிங், குர்ஸிலோங், ஷில்லாங் அவுட் ஏஜன்ஸி, ஆபு ரோடு** (ஆபு மலைக்குப் போக), **பைபேரியா, உதகமண்டலம், கூனூர், கொடைக்கானல் ரோடு** (அவுட் ஏஜன்ஸி உள்பட) & **கோட்டகிரி அவுட் ஏஜன்ஸி** (மேட்டுப்பாளையம் மார்க்கமாக) முதலான மலை ஸ்தலங்களுக்குப் போக 1, 2 & 3-ம் வகுப்பு ரிட்டர்ன் டிக்கட்டுகள் வழங்கப்படும். 2-ம் வகுப்பு 3-ம் வகுப்பு டிக்கட்டுகள் மெயில், எக்ஸ்பிரஸ் கட்டணப்படியோ, சாதாரணக் கட்டணப்படியோ அவரவர் உசிதப்படி டிக்கட் வாங்கலாம். ரயில் பிரயாணத்திற்கு 1½ மடங்கு ஒற்றைப் பிரயாண விகிதப்படியும், ரஸ்தாப் பிரயாணம் (இருந்தால்) அதற்கு இரண்டு ஒற்றைப் பிரயாண விகிதப் படியும் வசூலிக்கப்படும். மொத்தப் பிரயாண தூரம் 150 மைல்கள் அல்லது அதிகமாக இருந்தால்தான் இந்த ரிட்டர்ன் டிக்கட் வழங்கப் படும். 3 வயதிற்குமேல் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகட்கு ரயில் பிரயாணத்திற்குமட்டும் பாதிக்கட்டணம். இந்த ரிட்டர்ன் டிக்கட்டுகள் பிரயாணம் துவங்கிய தேதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்கு செல்லு படியாகும். போகும்போது வழியில் எங்கும் தங்கிச் செல்லமுடியாது.

முழு விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட ஸ்டேஷன்மாஸ்டர்களிடம் அல்லது சீப் கமர்ஷியல் சூபரின்டெண்டெண்ட், தக்ஷிண ரயில்வே, சென்னை-3 விலாசத்தில் விசாரிக்கவும்.

நந்தனார் கீர்த்தனை நூலை இயற்றி நாகப் பட்டினம் சென்று அங்குச் சில காலம் தங்கியிருந்து, நாள்தோறும் இரவில் நந்தனார் கதை விரிவுரையை நடத்தி வந்தார். அடுத்த ஊராகிய பிரெஞ்சுக்காரருக்கு அக் காலத்தில் உரியதாயிருந்த காரைக்காலிலிருந்தும் மக்கள் நாகைக்கு வந்து பாரதியார் காலட்சேபத்தைக் கேட்டு இன்புற்றுச் சென்றார்கள். காரைக்காலிலிருந்த பிரெஞ்சுத் தண்டல் நாயகம் (Collector) எலிஸே துரை அலுவலகத்தில் வேலை செய்து வந்த அலுவலர் பலர் பகலில் பல நாட்களாக உறங்கி விழுந்து வேலையை நன்முறையில் கவனியாதிருந்தனர். எலிஸே துரை அதற்குக்காரணம் கோபாலகிருஷ்ண பாரதியார் கதைச் சொற்பொழிவை நாடோறும் சென்று கேட்டதேயாகும் என்று சிலர் வாயிலாகக் கேட்டறிந்தார். தமிழறிந்த அத்துரைமகனார் பாரதியாரைக் காரைக்காலுக்கு வரவழைத்து நந்தனார் கீர்த்தனைக் கதைச் சொற்பொழிவாற்றச் செய்து அதனைக் கேட்டு வியப்படைந்து தாமே முன்வந்து நந்தனார் கீர்த்தனை நூலை முதல் முதலாகத் தம் பொருட்செலவில் 1861–ல் அச்சிட்டுத் தமிழுலகுக்கு அளித்தார். 1862–ல் அடுத்த பதிப்பு வெளியாயிற்று.

பாரதியாருடைய கீர்த்தனங்களிலுள்ள வர்ண மெட்டுகள் தனிச்சிறப்புடையன என்றும், சங்கீதத்துக்கு இயைந்த கமகங்களும் தாளக்கட்டும் ஒன்றுகப் பொருந்தியிருக்கும் என்றும், எளிய நடையில் அமைந்துள்ள நந்தனார் கீர்த்தனங்களில் இயலுக்குரிய இலக்கண அமைதியைக் காட்டிலும் இசையமைதியே தலைமை வகிக்கும் என்றும், அவற்றில் பக்தியும் ஞானமும் ததும்பிக்கொண்டிருக்கும் என்றும் இசை வல்லுநர்கள் பாராட்டுகிறார்கள்.

கோபாலகிருஷ்ண பாரதியார் 95 வயது வரை வாழ்ந்தார். இவர் கதை சொல்வதன் வாயிலாகக் கிடைத்த பொருளைக் கோயில்களில் குறிப்பிட்ட வழிபாடு செய்வதற்குக் கட்டளை நிதியாக வைத்தார்.

பாரதியார் வேறு கீர்த்தனை நூல்களையும் பாடியுள்ளார்; தனித்தனி இசைப்பாடல்களையும் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய திருநீலகண்ட நாயனார் சரிதம், இயற்பகை நாயனார் சரிதம், காரைக்காலம்மையார் சரிதம் ஆகியவை வெளிவரவில்லை. நந்தனார் கீர்த்தனை மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுடைய மதிப்புரையைப் பெற்றது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் மாயூரத்தில் பிள்ளையவர்களிடம் இயற்றமிழ் படித்து வந்த காலத்தில் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சிலகாலம் இசைப் பயிற்சி பெற்று வந்து, பிள்ளையவர்கள் சினத்துக்காளாகக் கூடாது என்று கருதி அப்பயிற்சியை விட்டு விட்டார்களாம்.

5. **மாயூரம் வேதநாயகம் பிள்ளை** (1824–89) திரிசிரபுரம் மஹா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களுள் ஒருவர்; கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசைப் பயிற்சி பெற்றவர்; மாயூரத்தில் வட்ட நடுவராகப் (Munsiff) பணியாற்றியவர்; தனிப் பாடல்களையும் உரை நடை நூல்களையும் இயற்றியதோடு கீர்த்தனை நூலை இயற்றிய இசைப் புலவராகவும் விளங்கியவர். இவர் இயற்றிய கீர்த்தனை நூல் 'சர்வசமய கீர்த்தனை' என்பது. இந்நூல் எளிய நடையில் இனிய இசைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. இவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவராயினும் சமயப் பெருநோக்குடையவராய்ச் சர்வ சமயக் கீர்த்தனை நூலை இயற்றினர். இவர் 65 வயது வரை வாழ்ந்தவர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் இவர் காலத்தவர்.

6. **இராமலிங்க அடிகள்:** சாதி சமயவெறியை நீக்கி எல்லா மக்களும் அன்பு நெறியில் வாழும் பொருட்டுச் சமரச சன்மார்க்க சமயத்தைத் தோற்றுவித்த திருவருட் பிரகாச வள்ளலார் 1823-ல்

தோன்றி 1874-ல் திருவுருக்கரந்தார். இவரது இயற்பெயர் இராமலிங்கம் என்பது. இவரை இராமலிங்க அடிகள் என்றும் கூறுவர். இவரும் இசைப் புலவர் வரிசையில் இடம் பெறக் கூடியவாறு நாமாவளிகளும் கீர்த்தனைகளும் இயற்றியுள்ளதைத் திருவருட்பாவில் காணலாம். எளிய இனிய இசையில் அமைந்தவை இவருடைய கீர்த்தனைகள்.

7. **அண்ணாமலை ரெட்டியார்:** காவடிச் சிந்து பாடிப் புகழடைந்த இசைப் புலவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சென்னிகுளம் என்னும் சிற்றூரில் சென்ன ரெட்டியார், ஒவு அம்மாள் என்ற இருவருக்கும் அருந்தவப் புதல்வராய் 1861-ல் தோன்றித் தக்க வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து அங்கு ஓராண்டுவரை இருந்து, முன்னமே கற்ற தமிழறிவை மேலும் பெருக்கிக் கொண்டார். சேற்றூர் நிலக்கிழார் முதலில் சில காலம் இவரை ஆதரித்தார். ரெட்டியார் பின்பு ஊற்றுமலை இருதயாலய மருதப்ப தேவரிடம் அரண்மனைப் புலவராக இருந்தார். இருபத்துநான்காவது வயதில் ரெட்டியார் குருவம்மாள் என்ற குலமங்கையை மணம் செய்து கொண்டு வீரகேரளம்பூதூரில் குடியேறி வாழ்ந்து வந்தார். இங்ஙனம் வாழ்ந்து வந்த காலத்தில் இருமல் நோய் இவரைக் கைக் கொண்டது. ஊற்றுமலை நிலக்கிழவர் இவரைச் சென்னிகுளத்துக்கு அனுப்பிவைத்தார். அங்கே ரெட்டியார் 29-வது வயதில் 1850-ஆம் ஆண்டு நிலவுலக வாழ்வை நீத்தார்.

முருகன் திருக்கோயில்களுக்குக் காவடி எடுத்துச் செல்லும் அன்பர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி ரெட்டியார் பல்வேறு சந்தங்களில் பாடியவைகளே காவடிச் சிந்து பாடல்களாகும். சொல் எளிமை, பொருள் இனிமை, ஓசை நயம் இவற்றால் இக்காவடிச் சிந்து பாடல்கள் கல்லார் கற்றோர் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு விளங்குகின்றன.

8. **வேதநாயக சாஸ்திரியார்** திருநெல்வேலிச் சைவர்; ஸ்வார்ட்ஸ் பாதிரியாரால் கிறிஸ்தவராகித் தஞ்சையில் வாழ்ந்தவர்; புரட்டெஸ்டண்டு கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்தவர்; மிகுந்த தமிழ்ப் பயிற்சியற்றவர். ஏசுநாதர்மீது இவர் பாடிய இசைப்பாக்கள் உண்டு. புரட்டெஸ்டண்டு திருச்சபைக் கிறிஸ்தவ அன்பர்கள் சாஸ்திரியார் இசைப்பாடல்களை வழிபாட்டுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

20-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர்கள்

இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாடெங்கும் காந்தியடிகளார் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை பூண்டதிலிருந்து விடுதலை இயக்கம் ஓங்கி வளர்ந்தது. தமிழ் நாட்டில் விடுதலைப் பயிரைத் தமது இசைப் பாக்களால் செழித்து வளரச் செய்த இசைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் என்பதைப் பலரும் நன்கறிவர். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களும் தம் இசைப்பாவால் விடுதலை இயக்கம் வளரத் தொண்டாற்றியவர். தேசிக விநாயகம் பிள்ளை இயற்றமிழ்க் கவிஞராக விளங்கியதோடு பல பக்திக் கீர்த்தனைகளைப்பாடி இசைப்புலவரான சிறப்பையும் பெற்றார். சுத்தானந்த பாரதியாரும் பலபல கீர்த்தனைகளைப்பாடியுள்ளார். K. M. பால சுப்பிரமணியம். B.A., B.L. அவர்கள் பக்தி வகையில் 'கீதத் தமிழ்' என்னும் நூல் இயற்றியுள்ளார்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் தொடங்கி வளர்த்துவந்த தமிழிசை இயக்கம் மறைந்த தமிழ்ச் சாகித்தியங்களுக்குப் புத்துயிர் அளித்தது; புதிய சாகித்திய கர்த்தாக்கள் தமிழகத்தில் தோன்ற ஆக்கம் அளித்தது.

மறுமலர்ச்சிக்கால இசைப்புலவர்

பாரதிதாசன்: மறுமலர்ச்சி வானில் விளங்கும் ஒளி விளக்காக இருப்பவர் புரட்சிக் கவிஞர் புதுவை பாரதிதாசன் ஆவர். இவர் சுப்பிரமணிய பாரதியார் வழிமுறையில் வந்தவராயினும், இசைப்பாக்களைப் பக்திநெறியில் பாடாமல் சங்ககால நெறிபற்றி இன்பநெறியில் பாடத் தொடங்கினர். இவரது இசையமுது முதலிய இசைப்பா நூல்கள் மறுமலர்ச்சி அன்பர்களால் பெரிதும் பயிலப்படுபவை. மறுமலர்ச்சிக்கால இசைப் புலவர்களுள் தலைசிறந்து விளங்குபவர் இவரே எனலாம்.

முடிவுரை

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தமிழ்ப் பேரறிஞராக விளங்கியதோடு இளமை தொட்டு இசைஞானத்திலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தவர்கள். அவர்கள் பெரும்பாலான தமிழிசைப் புலவர்களைப்பற்றி நடுநிலையோடு கூறியிருப்பதை இங்குப் பயன்படுத்தி இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். "தமிழ்க் கீர்த்தனங்களுள் பெரும்பாலன இயற்றமிழ் இலக்கண அமைதியில்லாதனவாக இருக்கின்றன. சங்கீதப் பயிற்சியில் தேர்ச்சியுள்ள பெரியோர்களுள் பலர் தம்முடைய முழுநோக்கத்தையும் சங்கீதத்திலேயே நிறுத்திவிடுவதால் அவர்களுடைய இயற்றமிழ் அறிவு சுருங்கியதாக அமைகின்றது. தாமே கீர்த்தனங்களை இயற்றும் பல சங்கீத வித்வான்கள் எதுகையும் மோனையும் பொருத்தமாக இருந்தால் போதும் என்ற அளவிலே தங்கள் கீர்த்தனங்களை அமைத்திருக்கின்றனர். சிலரே இயற்றமிழறிவும் நன்கு பெற்று நன்மணம் பெற்ற பொன்மலர் போன்ற கீர்த்தனங்களை இயற்றியுள்ளார்கள்." ஐயரவர்கள் கூறியது இது. இனி வரும் இசைப் புலவர்கள், இவ் வறிவுரையை நன்குணர்ந்து, தமிழ்மொழியிலும் போதிய அளவு தேர்ச்சிபெற்று, நல்ல தமிழில் இசைப்பாக்கள் இயற்றித் தமிழ்ப் புலவர்களின் நன்மதிப்பையும் அழியாப் புகழையும் அடைய முயல்வார்களாக!

— —

ராம்தீர்த் பிரம்மி ஆயில்
ஸ்பெஷல் நெ. 1
ஆயுர்வேத மருந்து.



கூந்தல் மற்றும் மூளை
அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3—8—0,
சிறிய பாட்டில் ரூ. 2—0—0.

எங்கும் கிடைக்கும்

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விவரிக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். தபால் சிலவு உள்பட ரூ. 1-14-0. மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களை சுலபமாகப் பழகலாம்.

பிரதி தினம் காலை 7-30 முதல் 9-30 வரையிலும் மாலை 6 முதல் 7-30 வரையிலும் வழக்கமாக யோகாசன வகுப்புகள் கீழ்க்கண்ட விலாசத்தில் நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் காலை 10 மணிக்கு யோகாசன சம்பந்தமான சொற்பொழிவு நடைபெறும்.

ராம்தீர்த் யோகாச்ரமம்
பம்பாய்-14 (C. Rly.)

தமிழ் நாட்டில் நாடக வளர்ச்சி

திரு. டி. கே. ஷண்முகம்

★

பாரத நாட்டின் தென் பகுதியில் கலை வளம் நிறைந்த திருநாடாகத் திகழும் தமிழ் நாட்டில், வேகமாக வளர்ந்துவரும் நாடகக் கலையைப் பற்றிச் சொல்வது இக்கட்டுரை.

முதன் முதலாக, தமிழ் நாடகக் கலையுல கின் நல் வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தாய் மொழியாகிய தமிழ் பல்லா யிரம் ஆண்டுகளாக இலக்கிய வளஞ்செறிந் திருக்கும் மொழி யென்பது உங்களுக்குத் தெரியும். உலகத்தில் வேறு எந்த மொழிக் கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு எங்கள் தமிழ் மொழிக்கிருக்கிறது.

தமிழ் மொழியை **இயல், இசை, நாடகம்** என மூன்று பிரிவாக எங்கள் முன்னோர் வகுத்திருக்கிறார்கள். ஒரு விஷயத்தைச் சொல்லால் விளக்குவதை 'இயல்' என் றும், பாட்டால் விளக்குவதை, 'இசை' யென்றும், நடிப்பால் விளக்குவதை 'நாட கம்' என்றும் பிரிவு செய்து இம்மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியே இலக்கண விதி முறைகளும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார் கள்.

ஆகவே, 'தமிழ்' என்று மொழியைக் குறிப்பிடும்பொழுதே நாடகமும் அதனோடு இணைந்து நிற்கிறது. இந்தத் தனிச் சிறப் பால் நாடகத்தை வாழ்வோடு ஒட்டிய கலை யாகத் தமிழர்கள் போற்றி வளர்த்துவந்திருக் கிறார்கள் என்பது தெரிகிறது. இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறப்படும் தமிழ் நூல்களில் 'முறுவல்' 'சயந்தம்', 'செயிற்றியம்', 'குணநூல்' முதலிய பல நாடக இலக்கண நூல்களைப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன.

சிறந்த வரலாற்று நூலாகக் கருதப்படும் 'சிலப்பதிகாரம்' என்ற தமிழ்க் காப்பியத் தில் நடிப்புக் கலையைப் பற்றியும், நாடக அரங்க அமைப்பைப் பற்றியும், காட்சித் திரைகளைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட் டிருக்கிறது. இந்தச் சிலப்பதிகார நூலுக்கு உரை யெழுதிய 'அடியார்க்கு நல்லார்' என்பவர் தமது குறிப்பில், நாடகத் தமி ழைப் பற்றிக் கூறும் 'பரதம்', 'அகத் தியம்' என்ற நூல்கள் இருந்தன வென்றும் அந்த நூல்கள் அழிந்துவிட்டன வென்றும் குறிப்பிடுகிறார்.

5000 ஆண்டுகளுக்கு முன் குமரி முனையை யடுத்து இலெமூரியாக் கண்டம் என ஒன்று இருந்ததாகவும் அங்கே பாண்டி யர் அரசாட்சியில் சங்கம் அமைத்து மொழி யாராய்ச்சி நடைபெற்றதாகவும் பெருங் கடல் கோளினால் அந்த நாடு நகரங்கள் அழி வுற்ற போது நாடக இலக்கண நூல்கள் பல அழிந்துபோயினவென்றும் தமிழ் இலக் கியங்களில் சொல்லப்படுகின்றன.

அடியார்க்கு நல்லார் தம்முடைய காலத் தில் 'பரத சேனாபதீயம்', 'மதிவாணர் நாடகத் தமிழ் நூல்' முதலிய நாடக நூல் கள் இருந்ததாகக் குறித்திருக்கிறார். இப் போது நான் குறிப்பிட்டவை யெல்லாம் நாடக இலக்கண நூல்களே தவிர ஒன்று கூட இலக்கியமன்று.

நாடக இலக்கியங்கள் படித்து மகிழும் இலக்கியங்களல்ல. மேடையில் பார்த்து

மகிழும் இலக்கியங்கள். எனவே, நூல் வடிவில் ஒன்றும் கிடைக்காவிட்டாலும் மேடைகளில் நாடகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறதென்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

இராஜ ராஜ சோழன், இராஜேந்திர சோழன் ஆகிய மன்னர்கள் நாடகம் நடிப் போருக்கு மான்யங்கள் கொடுத்திருக்கும் குறிப்புக்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இராஜ ராஜ சோழனின் வெற்றியைக் குறிப்பிடும் '**இராஜ ராஜ விஜயம்**' என்ற நாடகம் அந்த மன்னன் காலத்திலேயே தஞ்சாவூர்க் கோவிலில் நடிக்கப் பட்டதாகவும் கல்வெட்டுகளில் பொறிக்கப் பட்டுள்ளது.

நகரங்களிலும், கிராமங்களிலும், மன்னர் அரண்மனைகளிலும், கோவில்களிலும் அப்போதைக்கப்போது மேடைகள் அமைக்கப் பட்டுத் திறந்த வெளிகளில் நாடகங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன வென்று தெரிகிறது. இத்தகைய தெருக் கூத்து மேடைகள் இன்னும்கூடக் கிராமங்களில் நடைபெற்று வருகின்றன.

நூல் வடிவில் இதுவரை எங்களுக்குக் கிடைத்திருக்கும் நாடகங்கள் எல்லாம் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டவையென்றே சொல்லவேண்டும். அவைமுழுதும் பாட்டாக அமைந்திருக்கின்றனவே தவிர வசனநடை நாடகம் ஒன்று கூட இல்லை. பழங்காலத் தமிழ் நாடகங்கள் முழுதும் பாடல்களாகவே இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. **அரிச்சந்திரா, இராமாயணம், மகாபாரதம்,** முதலிய நாடகங்கள் அனைத்தும் பாடல்களாகவே இருக்கின்றன.


சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ் நாடக மேடையின் புதிய சகாப்தம் தொடங்கியது. இதுதான் உரை நடை நாடக மேடைக்கு வந்தகாலம். இந்தச் சமயத்தில் **ஷேக்ஸ்பியர், காளிதாசர், பவபூதி** முதலியோரின் ஆங்கில, சமஸ்கிருத நாடகங்களைத் தழுவியும், மொழி பெயர்த்தும் பல பெரியார்கள் நாடகங்கள் எழுதியிருக்கின்றனர். ஆனால், அவை பெரும்பாலும் மேடையில் நடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அக்காலத்தில் மேடையில் நாடகங்களை நடித்தவர்கள் பாடல்களைத் தவிர வசனங்களை யெல்லாம் தங்கள் திறமைக் கேற்றவாறு கற்பனையாகவே பேசி வந்ததாகத் தெரிகிறது.

1891-ம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாடக உலகில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. **தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள்** என்னும் பெரியார் நாடக உலகில் நுழைந்தார். அவர் பழைய நாடகங்களை ஒழுங்குபடுத்தி, புதிய நாடகங்கள் பலவற்றை எழுதித் தாமே நடித்தும், ஆசிரியராயிருந்தும், தமிழ் நாடகக் கலைக்கு மகத்தான சேவை புரிந்தார்.

சங்கரதாஸ் சுவாமிகள் சுமார் 40 நாடகங்கள் எழுதியிருக்கிறார். பெரும்பாலும் புராண இதிகாச நாடகங்கள். **ரோமியோ ஜூலியத், சிம்பலின், ஒதெல்லோ** ஆகிய ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் இவர் எழுதி நடித்திருக்கிறார். இப்பெரியார் 1922-ல் தமது 55-வது வயதில் பூதவுடல் நீத்தார்.

இவர் காலத்தையொட்டி '**அரிச்சந்திரா**' நாடகத்தை எழுதிய **அப்பாவு பிள்ளை**, '**இராமாயணம்**' நாடகத்தை எழுதிய **சிவஷண்முகம் பிள்ளை**, '**கிருஷ்ணலீலா**' நாடகத்தை எழுதிய **முத்துசாமிக் கவிராயர்**, '**மகாபாரதம்**' நாடகத்தை எழுதிய **வீராசாமி வாத்தியார்**, மற்றும் **சந்தான கிருஷ்ண நாயுடு, சங்கரலிங்கக் கவிராயர், பாஸ்கரதாஸ்** முதலிய நாடகாசிரியர்கள் பலர் நாடகமேடையை வளர்த்திருக்கிறார்கள்.

75-ஆண்டுகளுக்கு முந்திய இந்த இடைக் காலத்தில் தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்



"பவர்"

நீண்டகால, இடைவிடா சேவைக்கும், நம்பிக்கையான உழைப்பிற்கும் பெயர்பெற்றவை ஜெர்மன் **"பவர்"** சினிமா ப்ரொஜெக்டர்கள்.

குறைந்த செலவில் நிறைந்த சேவையை தருபவை இவைகளே! ஜெர்மன் **"க்ளாங் பிலிம்"** ஸவுண்டு ஸிஸ்டத்துடன் கூடிய பவர் ப்ரொஜக்டர்கள் உலகப் பிரசித்திபெற்றவை. இமயத்திலிருந்து குமரி முனை வரை அநேக தியேட்டர்களில் படாதிபதிகளையும், தியேட்டர் சொந்தக்காரர்களையும், முக்கியமாக பொது ஜனங்களையும் ஒருங்கே சந்தோஷத்தில் ஆழ்த்துவது பவர் ப்ரொஜெக்டர் ஒன்றே!

கண்ணுக்கிசைந்த காட்சிக்கும் காதுக்கினிய கீதத்துக்கும் நிகரற்றவை

"பவர்-கிளாங்பிலிம்"

"தாயிற்சிறந்த தொரு கோயிலுமில்லை
"பவரை" மிஞ்சவொரு ப்ரொஜெக்டருமில்லை"

விபரங்களுக்கு :

இண்டர்நேஷனல் டாக்கி எக்விப்மெண்ட் கம்பெனி (பிரைவேட்) லிட்.

18, மௌண்ட் ரோட், மதராஸ்-2

தந்தி : "ஸவுண்ட்ஷெட்" டெலிபோன் : 86282

தலைமை ஆபீஸ் :

17, நியூ க்வீன்ஸ் ரோட், பம்பாய்-4

இதர கிளைகள் :

742-A, சாந்தினி சௌக், டெல்லி 14, கவர்ன்மெண்ட் ப்ளேஸ் ஈஸ்ட், கல்கத்தா

கான நாடகசபைகள் தோன்றி மறைந்திருக் கின்றன. திறந்தவெளிகளில் தெருக்கூத்து மேடைகளில் இருந்து வந்த நாடகத்தை, திரை, காட்சி முதலிய அமைப்புகளோடு முதன் முதலாகக் கூரைபோட்ட கொட்டகைகளில் நடித்தவர் தஞ்சாவூரைச் சேர்ந்த **நவாப் கோவிந்தசாமி ராவ்** என்று சொல்லப்படுகிறது. இவரைப் பின்பற்றியே மற்றவர்களும் நாடகசபைகளை ஆரம்பித் திருக்கிறார்கள்.

பழமையான கம்பெனிகளில் கல்யாண ராமையர் கம்பெனி, ராமுடு ஐயர் கம்பெனி, இராவண கோவிந்தசாமி நாயுடு கம்பெனி, வள்ளி வைத்தியநாதய்யர் கம்பெனி, 'அல்லி' பரமேஸ்வரய்யர் கம்பெனி, கே. எஸ். அனந்த நாராயண ஐயரின் ஆரியகான சபா, கே. பி. சுந்தராம்பாளைத் தோற்றுவித்த பி. எஸ். வேல் நாயரின் ஷண்முகானந்த சபா, எஸ். ஜி. கிட்டப்பாவைத் தோற்று வித்த சி. கன்னய்யா கம்பெனி, மனமோகன அரங்கசாமி நாயுடு கம்பெனி, ஜி. எஸ். முனி சாமி நாயுடு கம்பெனி, சாமி நாயுடு கம்பெனி, வேலூர் நாராயண சாமி பிள்ளை கம்பெனி, மதார் சாயபு கம் பெனி, கோல்டன் கம்பெனி, இவையெல் லாம் சிறப்பாக நாடகக்கலை வளர்த்த கம் பெனிகள். இவற்றைத் தவிர, பெண்கள் தலைமை தாங்கி நடத்திய பாலாமணி கம் பெனி, பாலாம்பாள் கம்பெனி, ராஜாம்பாள் கம்பெனி, அரங்கநாயகி கம்பெனி முத லிய நாடக சபைகளும் இருந்து வந்திருக் கின்றன.

இப்போது நான் குறிப்பிட்ட நாடகசபை களுக்கெல்லாம் பெரும்பாலும் சங்கரதாஸ் சுவாமிகளே ஆசிரியராயிருந்திருக்கிறார் என் பது குறிப்பிடத்தக்கது.

1891–ல் தான் அமெச்சூர் சபைகளும் தோன்றின. நாடகப் பேராசிரியர் **பம்மல் சம்பந்த முதலியார்** சென்னையில் **சுகுண விலாச சபை**யை நிறுவினர். இதைத் தொடர்ந்து கும்பகோணம் **வாணி விலாச சபை,** எப். ஜி. நடேசய்யரின் **ரசிக ரஞ்சனி சபை,** தஞ்சை **சுதர்சன சபை, குமரகான சபை, செக்ரட்டேரியட் பார்ட்டி** முதலிய பல அமெச்சூர் சபைகள் நாடெங்கும் தோன்றின.

பம்மல் சம்பந்த முதலியாரவர்கள் நாட கத்தைத் தொழிலாகக் கொள்ளாமல் கலை வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு நாடகக் கலைக்கு ஓர் உயர்வான ஸ்தானத் தைத் தேடித்தந்தார்.

பம்மல் சம்பந்த முதலியார் ஷேக்ஸ்பியர், காளிதாசன் ஆகியோரின் நாடகங்களை மொழிபெயர்த்ததோடு கற்பனையாகவும் சுமார் எண்பது நாடகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். இவருடைய நாடகங்கள் யாவும் அமெச்சூர், தொழில்முறை சபை கள் இரு சாராராலும் மேடையில் நடிக்கப் பட்ட நாடகங்கள். **'மனோஹரா'** என்ற இவரது கற்பனை நாடகம் சென்ற 65 ஆண்டுகளாகத் தமிழ் நாடக மேடையில் அமரத்துவம் பெற்ற நாடகமாக விளங்கி வருகிறது.

இவரது சுகுணவிலாச சபையில் காலஞ் சென்ற ஆர். கே. சண்முகம் செட்டியார், எஸ். சத்தியமூர்த்தி, இன்று நம்மிடையே வாழும் காசி பல்கலைக்கழகத் துணைவேந்தர் சர். சி. பி. இராமசாமி ஐயர் முதலிய பெரி யோர்களெல்லாம் நடிகர்களாக மேடையில் தோன்றியிருக்கிறார்கள் என்பதை இங்குப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாடக உலகம் ''தமிழ் நாடகத் தலைமையாசிரியர்'' என்று சங்கரதாஸ் சுவாமிகளையும், ''தமிழ் நாடகத் தந்தை'' என்று பம்மல் சம்பந்த முதலியாரையும் இதயத்தில் வைத்துப் போற்றி வருகிறது.

1916-ம் ஆண்டில் மீண்டும் தமிழ் நாடக வுலகில் ஒரு புரட்சியேற்பட்டது. பெரிய வர்கள் நடித்து வந்த சில நாடக சபைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து மேடைகளிலேயே போட்டி போட்டுக்

கொண்டு பாடவும் பேசவும் தொடங்கி விட்டதால் ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள் முழுதும் சிறுவர்களையே நடிகர்களாகக் கொண்ட நாடக சபையை ஆரம்பித்தார்.

இப்படி ஆரம்பிக்கப்பட்ட நாடக சபைகளில் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா, பால மீனரஞ்சனி சங்கீத சபா, மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி, ஸ்ரீ பால ஷண்முகாநந்த சபா முதலியவை குறிப்பிடத் தக்கவை. இவர்கள் யாவரும் சங்கர தாஸ் சுவாமிகளின் நாடகங்களையும், சம்பந்த முதலியாரின் நாடகங்களையும் நடித்து வந்தனர்.

1918-ம் ஆண்டில் எனது 5 வயதுப் பருவத்தில் நான் சங்கரதாஸ் சுவாமிகளின் மாணவனாக நாடகத்துறையிலே ஈடுபட்டேன். இன்று எனக்கு வயது 43. ஏறக் குறைய 38 ஆண்டுகள் நாடக மேடையிலேயே என் காலம் கழிந்தது. இடையிடையே சந்தர்ப்பச் சூழ்நிலைகள் சினிமா உலகுக்கு என்னை இழுத்துக்கொண்டு போயிருக்கின்றன. என்றாலும் இன்னும் நாடக நடிகனாகவே நான் பணிபுரிந்து வருகிறேன். சென்ற 38 ஆண்டுகளாக நடிகனாகவும், நாடக ஆசிரியனாகவும், நாடகத் தயாரிப்பாளனாகவும், நாடகக் குழுவின் தலைவனாகவும் எனது நாடக வாழ்வு வளர்ந்து வந்திருக்கிறது.

மேடையின் இருபுறத்திலும் தீவட்டிகளை வைத்துக்கொண்டு நாடகம் நடத்திய அந்தக் காலத்தையும், அதன் பிறகு கியாஸ் லைட், பெட்ரோமாக்ஸ் லைட் எல்லாம் வந்து கடைசியாகக் கண்ணைப் பறிக்கும் மின்சார வெளிச்சத்திலே நாடகங்களை நடிக்கும் இந்தக் காலத்தையும் எண்ணிப் பார்த்தால் ...அடேயப்பா! எத்தனை பெரிய மாற்றங்கள்!...முன்பெல்லாம் நாடகங்களில் பாட்டுக்களே அதிகம். ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதானாலும் நாடகப் பாத்திரங்கள் பாடிக்கொண்டுதான்

தி வல்கன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: பம்பாய் ஸ்தாபிதம்: 1919

அலுவல் நடத்தி வந்துள்ள சென்ற 36 வருஷங்களில் உடனடியான சேவை, உரிமைகள் உடனுக்குடன் பைசல் செய்வதற்கு ஓர் நற்பெயர் ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

மொத்த ஐவேஜுகள்: ரூ. 89,00,000-க்கு அதிகம்

நெருப்பு, மோட்டார், கப்பல், தொழிலாளர் நஷ்ட ஈடு
மற்றும் இதர சில்லரை இன்ஷ்யூரன்ஸ் அலுவல்கள் கவனிக்கப்படுகின்றன.

ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கும், இதர விபரங்களுக்கும்
தயவு செய்து விண்ணப்பித்துக் கொள்ளவும்:
பிராஞ்சு மானேஜர்,

தி வல்கன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

போன்: 2027 இந்தியன் பாங்கி பில்டிங், முதல் லேன் பீச் — மதராஸ். தந்தி: "INFIRE"

சண்டை போடுவார்கள்! பாட்டுப் பாடாமல் எங்களுக்குக் காதலே வராது! அழும் போதும் பாட்டு; சிரிக்கும்போதும் பாட்டு! வசனம் அபூர்வமாக எப்போதாவது வரும்.

வேறு சில நாடகங்களில் பார்த்திருக்கிறேன். ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்து மறைந்து கொள்ளையடிக்கவரும் திருடன் கூடக் காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடிப்பாடி ஆர்ப்பாட்டத்தோடு வருவான். ஒரு நாடகத்தில் குறைந்த பட்சம் நூறு பாடல்கள் இருக்கும். நாடகம் இரவு 10 மணிக்குத் தொடங்கிச் சூரியன் உதிக்கும் வரை நடைபெறும்.

இப்போதெல்லாம் பாடல்களின் முக்கியத்வம் குறைந்து, மூன்று நான்கு பாடல்களே பாடப்படுகின்றன. அதிகமாகப் போனால் 3½ மணி நேரத்துக்குமேல் எந்த நாடகமும் நடைபெறுவதில்லை. இந்தக் கால அளவை 2½ மணி நேரமாகக் குறைக்கவும் முயன்று வருகிறோம்.

புராண இதிகாசக் கதைகளையும் நாடோடிக் கற்பனைக் கதைகளையுமே நாடகமாக்கி நடித்து வந்த தமிழ்நாடக உலகில் 1922-ம் ஆண்டிலிருந்து சமுதாய மறுமலர்ச்சி நாடகங்களும் நடைபெறத் தொடங்கின.

பால்ய விவாகம், பொருந்தாமணம், வரதட்சணைக் கொடுமை இவைபோன்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்ட ஜே. ஆர். ரங்கராஜுவின் இராஜாம்பாள், இராஜேந்திரன், சந்திரகாந்தா, மோகனசுந்தரம், வடுவூர் துரைசாமி ஐயங்காரின் மேனகா முதலிய நாவல்களை எம். கந்தசாமி முதலியார் என்னும் பெரியார் மேடை நாடகங்களாக்கி, பாய்ஸ் கம்பெனி பலவற்றில் ஆசிரியராயிருந்து நடிக்கச் செய்தார்.

பாரத நாட்டின் சுதந்தரப் போராட்டத்தில் தமிழ் நாடகமேடையும் பெரும் பங்கெடுத்துக்கொண்டது. கதரின் வெற்றி, தேச பக்தி, தேசீயக்கொடி முதலிய நாடகங்கள் ஆங்கிலேய சர்க்காரால் தடை செய்யப்பட்ட-விடுதலை ஆர்வம் ஊட்டிய-நாடகங்களாகும். நாகபுரிக் கொடி சத்யாக்கிரகம் நடந்தபோது, 'தேசீயக் கொடி' என்ற தமிழ் நாடகம் நாடுமுழுதும் மக்களிடையே சுதந்தர உணர்ச்சியைப் பரப்பியது. க்தரின் வெற்றி, தேசீயக்கொடி ஆகிய நாடகங்களை எழுதியவர் தேசபக்தர் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் ஆவார். பம்பாய் மெயில், பதிபக்தி முதலிய மற்றும் பல சமுதாய நாடகங்களையும் இவர் எழுதியிருக்கிறார். வெ. சாமிநாதசர்மா எழுதிய பாணபுரத்து வீரன், சி. எ. ஐயாமுத்து எழுதிய இன்ப சாகரன், எஸ். டி. சுந்தரம் எழுதிய கவியின் கனவு இவையெல்லாம் சிறந்த தேசீய நாடகங்களாகப் போற்றற்குரியவை.

பேசும்படம் வந்தகாலத்தில் எல்லா நாடுகளிலும் ஏற்பட்டதுபோலத் தமிழ்நாட்டிலும் நாடகமேடை இறந்துவிடுமென எண்ணினார்கள். ஆனால், எனக்குத் தெரிந்த வரையில் நாடக மேடையை நல்ல முறையில் கையாண்டவர்கள் எவரும் அழிந்து விடவில்லை. சினிமா வளர்ச்சியால் நாடக மேடையும் புதிய நுணுக்கங்கள் பலவற்றைக் கையாண்டு போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சி பெற்றது என்றே சொல்ல வேண்டும்.

இன்று தமிழ் சினிமாவுலகில் இருந்து வரும் நடிகர்கள் பெரும்பாலும் பாய்ஸ் கம்பெனிகளிலிருந்து பயிற்சிபெற்று வந்த நடிகர்களேயாவர். நாடகவுலகம் அழிந்திருந்தால் சினிமாவுக்கு நடிகர்களே கிடைத்திருக்கமாட்டார்கள். இன்றும் நடன நாடக மேடைகளே சினிமாவுக்கு நடிக நடிகையரை உற்பத்தி செய்யும் நிலையங்களாக இருந்து வருகின்றன.

1935-ம் ஆண்டுக்குப்பின் சமுதாய முற்போக்கு நாடகங்களில் மற்றுமொரு மறுமலர்ச்சியேற்பட்டது. பிறமொழிக் கதைகளைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட சில நாடகங்கள் நாடக மேடைகளில் நூற்றுக் கணக்கில் தொடர்ந்து நடைபெற்றன. இவற்றில் டி. கே. முத்துசாமி எழுதிய

குமாஸ்தாவின் பெண், பா. ஆதிமூலம்-சோமசுந்தரம் எழுதிய 'மனிதன்' முதலிய நாடகங்கள் மிகப் பிரசித்தி பெற்றவை.

தமிழ் நாட்டு மக்களைக் கவர்ந்த முற்போக்கு நாடகங்களில் கு. சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய அந்தமான் கைதி, ப. நீலகண்டன் எழுதிய முள்ளில் ரோஜா, நாம் இருவர், அறிஞர் சி. என். அண்ணாத்துரை எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, எஸ். வி. சகஸ்ரநாமம் எழுதிய பைத்தியக்காரன், ரா. வேங்கடாசலம் எழுதிய பெண், மனைவி, நாரண துரைக்கண்ணன் எழுதிய உயிரோவியம், நா. சோமசுந்தரம் எழுதிய இன்ஸ்பெக்டர், சின்னராஜு எழுதிய இரத்தக்கண்ணீர், எஸ். டி. சுந்தரம் எழுதிய மனிதனும் மிருகமும், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியின் கள்வனின் காதலி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நடித்து வரும் இழந்தகாதல், ஐம்பதும் அறுபதும், விலாங்கு மனிதன் முதலியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த நாடகங்களில் பெரும்பாலானவை சினிமாப் படங்களாகவும் வெளிவந்து விட்டன.

ஆங்கில மோகத்தால் தாய்மொழிப் பற்றி ழந்து புதிய நாகரிகத்தில் மயங்கியிருந்த மக்களுக்கு விழிப்பூட்டும் முறையில் சில நாடகங்கள் மேடையைக் கவர்ந்தன. இவற்றில் எதிராஜு எழுதிய **ஔவையார்**, சூலமங்கலம் பாகவதர் எழுதிய **சிவலீலா** ஆகியவை ஒரே தியேட்டரில் தொடர்ந்து நூற்றுக்கணக்கான நாட்கள் நடைபெற்றவை. இந்த வரிசையில் சில சரித்திர நாடகங்களும் தோன்றின. இந்தியாவில் முதன் முதலாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடித் தூக்குமேடையில் பலியான வீரபாண்டியக் கட்டபொம்மனின் வரலாற்றை '**முதல் முழக்கம்**' என்ற பெயரால் ரா. வேங்கடாசலம் மேடை நாடகமாக ஆக்கியுதவினர். இவர் '**இமயத்தில் நாம்**' என்று மற்றொரு பிரசித்திபெற்ற

பார்லோவா

சாக்லெட் வாசனையுள்ள (ரெஜிஸ்டெர்ட்)
சிறந்த பானீயம்

ருசிகரமானது



முழு ஆடையின் சத்து கொண்ட பால், சிறந்த மால்ட், முட்டை சத்து ஆகியவை 'பார்லோவா'வின் சிறந்த அம்சங்கள். முற்றும் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டது. அந்தந்த சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி சூடாகவோ, குளிர்ச்சியாகவோ அருந்துவதற்கு ஏற்ற நேர்த்தியான பானம். சுலபமான ஜீரணத்திற்கும், தேகத்துக்கு சத்து ஊட்டும் நன்மைக்கும் டாக்டர்களால் சிபார்சு செய்யப் பட்டது.

இந்த லேபிலை கவனியுங்கள்

எங்களுக்கு எழுதவும்:

ஓரியண்டல் மெர்கண்டைல் டிஸ்டிரிபியூடர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
99-A, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

சரித்திர நாடகத்தையும் எழுதியிருக்கிறார். கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய **'தமிழ்ச் செல்வம்'** என்ற நாடகம் மிகச் சிறந்த புதிய முறை நாடகமாகவும், கல்விப் பிரசார நாடகமாகவும் கருதப்படுகிறது. அரு. இராம நாதன் எழுதிய **'இராஜ ராஜ சோழன்'** என்ற சரித்திர நாடகம் இன்று தமிழ் நாடக ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது.

அமெச்சூர் நாடகவுலகிலும் வி. சி. கோபாலரத்னம் எழுதிய **இராஜபக்தி,** தேவன் எழுதிய **துப்பறியும் சாம்பு, கல்யாணி, மைதிலி, "நாரதர்"** சீனிவாச ராவ் எழுதிய **சரஸா** முதலிய நாடகங்கள் மேடைகளில் பலமுறை நடிக்கப் பெற்றவை. பிரசித்திபெற்ற தமிழ் எழுத்தாளரான 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியின் **சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, மோகினித் தீவு** ஆகிய நாவல்களும் நாடகமாக நடிக்கப் பட்டு வருகின்றன. புதிய புதிய கருத்துகளைக் கொண்ட சமுதாய முற்போக்கு நாடகங்கள் நாடெங்கும் நடிக்கப்பட்டு வருகின்றன.

சினிமா வளர்ச்சியால் கலையம்சத்தைப் பொறுத்த வரையில் நாடக வளர்ச்சி குன்றி விடவில்லை. ஆனால், மற்றொரு கஷ்டம் ஏற்பட்டது.

நிரந்தரமான வருவாயை முன்னிட்டு நாடகத் தியேட்டர்களை யெல்லாம் சினிமாத் தியேட்டர்களாக்கி விட்டதால் நாடகம் நடிப்போருக்குத் தியேட்டர் கிடைப்பது அரிதாகி விட்டது. இன்று வேகமாக வளர்ந்துவரும் தமிழ் நாடக மேடை வளர்ச்சிக்குத் தடையாயிருப்பது தியேட்டர்கள் இல்லாத குறைதான். இதன் விளைவாக நிரந்தரமாக நடைபெற்றுவந்த நாடக சபைகள் ஒன்றன்பின்னொன்றாக மடிந்து வருகின்றன.

இன்று மிகுந்த சிரமத்துக்கிடையிலும் நிரந்தரமாக நடந்துவரும் பெரிய நாடக சபை **நவாப் இராஜமாணிக்கம்** அவர்களின் பாய்ஸ் கம்பெனி ஒன்றுதான். பெரும் பாலும் மற்ற நாடகக் கம்பெனிகளெல்லாம் ஸ்பெஷல் நாடக சபைகளாகவே நடந்து வருகின்றன. நவாப் இராஜமாணிக்கம் நடத்தும் **இராமாயணம், தசாவதாரம், குமார விஜயம், சபரிமலை ஐயப்பன், சக்திலீலா, ஏசுநாதர், இராமதாஸ்** முதலிய நாடகங்கள் இன்றும் மிகவும் வெற்றிகரமாகத் தொடர்ந்து நூற்றுக்கு மேல் நடைபெற்று வரும் நாடகங்களாகும்.

நாடகக்கலை வளர்ச்சிக்காக 1944-ல் ஒரு மகாநாடு கூட்டி, சர்க்காருக்கு எங்கள் குறைகளை யெல்லாம் எடுத்துச் சொன்னோம். இதைத் தொடர்ந்து மூன்று நாடகக் கலை மகாநாடுகள் ஆண்டுதோறும் நடைபெற்றன.

இடையே சர்க்கார் விதித்த 'தமாஷாவரி' நாடக சபைகளுக்கு மிகுந்த பாதகம் விளைவித்தது. இதற்காக நாங்கள் தனியே விடுத்த வேண்டுகோளெல்லாம் பயனற்றுப் போய் விடவே, ஸ்தாபனரீதியாக எங்கள் குறைகளை அறிவிக்கவும், வளர்ச்சிக்கு வழிகாணவும், 1950-ல் **நாடகக்கழகம்** என்ற ஸ்தாபனத்தைச் சென்னையில் நிறுவினோம். தொழில்முறை நடிகர்கள், பயில் முறை நடிகர்கள் எல்லோரும் இதில் பங்கு கொண்டார்கள்.

நாடகத் தியேட்டர்கள் இல்லாத குறையைப் போக்கத் **'திறந்தவெளி அரங்குகள்'** ஏற்படுத்தி நாடகக் கழகத்தின் சார்பில் கூட்டாகப் பெருங்கலை விழாக்களை நடத்தி ஜனங்களுக்கு நாடகக்கலையில் இருக்கும் ஆர்வத்தைச் சர்க்காருக்கு எடுத்துக் காட்டினோம்.

கடைசியாக, 1951-ல் சென்னை சர்க்கார் நாடகத்திற்குத் தமாஷாவரியிலிருந்து விலக்களித்தார்கள். அதன் பிறகு நாடெங்கும் திறந்த வெளி அரங்குகள் தற்காலிகமாகக் கட்டி பெரிய அளவில் நாடகங்களை நடிக்கத் தொடங்கினர்கள். தியேட்டரில் 2000 பேர்களுக்குமேல் பார்க்க முடியாதிருந்த நிலைமை மாறி 5000, 10000-க்கணக்கான

மக்கள் பார்க்கும் முறையில் திறந்த வெளியில் நாடகங்கள் நடைபெற்றன. தமிழ் நாட்டில் நடைபெறும் சுதேசிப் பொருட்காட்சிகளில் எல்லாம் பெரிய கலை யரங்குகள் ஏற்படுத்தி நாடகங்களுக்கு முத லிடம் கொடுத்து நகர சபைகளும் நாடக வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன.

நடிகர்களிடையே போட்டியைத் தவிர்த்துக் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வும், நாடகமேடைக்குப் பாதகமில்லாமல் சினிமாவுக்கு நடிகர்களைப் பயன்படுத்தவும் நடிகர்களுக்குள்ள குறைகளைப் போக்கவும் **'தென்னிந்திய நடிகர் சங்கம்'** என்ற ஒரு ஸ்தாபனத்தை அமைத்து மூன்று ஆண்டு களாகச் செயலாற்றி வருகிறோம். இந்தச் சங்கத்தின் வெளியீடாக **'நடிகன் குரல்'** என்ற மாதப் பத்திரிகை ஒன்றும் நடை பெற்று வருகிறது.

இதுவரை தமிழ் நாடகம் ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்து வளர்ந்து வந்த பெரு மையையும், இடைக்கால நிலையையும், பின் னல் ஏற்பட்ட வளர்ச்சியையும் இன்றுள்ள நிலையையும் ஓரளவு உங்களுக்குச் சொல்லி விட்டேன்.

தமிழ் நாடக உலகின் புதிய சகாப்தம் என்று நான் குறிப்பிட்ட சென்ற 75 ஆண் டுகளாக மேடைகளில் நடிக்கப்பட்டுவந்த நாடகங்கள் பெரும்பாலும் நூல்வடிவில் இருக்கின்றன.

1891-ல் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பேரறிஞர் எழுதிய **'நாடக வியல்'** என்ற ஓர் அருமையான நாடக இலக்கண நூலும், அதே ஆண்டில் பேராசிரியர் சுந்த ரம் பிள்ளை எழுதிய **'மனோன்மணீயம்'** என்ற ஒரு மிகச் சிறந்த நாடக இலக்கிய நூலும் தமிழ் நாடகத்தின் கருவூலங்களாக இருந்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டியது எனது கடமையாகும்.

இதனுடன் தமிழ் நாடக வரலாற்றை நிறுத்திக்கொண்டு, இனி எங்கள் தமிழ் நாட கக் கலைஞர்களின் சார்பில் பாரத நாட்டின் பொதுவான நாடக வளர்ச்சியைக் கருதி மத்திய சங்கீத நாடகக் கழகத்தின் சார்பில் மத்திய சர்க்காருக்குச் சில யோசனைகள் கூற விரும்புகிறேன்.

நாம் சுதந்தரம் பெற்றபின் நமது கலைஞர் கள் சீனா, ரஷியா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பாரதத் தின் புகழைப் பரப்பி வருகிறார்கள். வெளி நாட்டுக் கலைஞர்கள் நம் பாரத நாட்டுக்கும் வந்து போகிறார்கள். பரஸ்பர நல்லுறவுக் காக இந்தக் கலைத் தூது சர்க்கார் ஆதரவில் நடந்து வருகிறது. இதை மகிழ்வுடன் வர வேற்கிறோம். ஆனால், அதே சமயத்தில் நமது உள் நாட்டில் ஒவ்வோர் இராச்சியத் திலுமுள்ள பல மொழிக் கலைஞர்களி டையே இவ்விதம் நல்லுறவு ஏற்படுத்தும் முயற்சிகள் இன்னும் தொடங்கப்படவில் லையே என்பதையும் வருத்தத்தோடு தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

ஒவ்வொரு மொழிப் பிரதேசமும் மற் றொரு மொழிப் பிரதேசத்திற்கு சர்க்கார் ஆதரவில் கலைக் குழுவினரை அனுப்பி ஏன் நல்லுறவை வளர்க்கக் கூடாது? வங்காளிக் கலைஞர்கள் தமிழ் நாட்டிற்கும், தமிழ்க் கலை ஞர்கள் வங்காளத்திற்கும், மகாராஷ்டிரக் கலைஞர்கள் கேரளாவுக்கும், கேரளக் கலை ஞர்கள் குஜராத்திற்கும் சென்று கலை விழாக் கள் நடத்தி உறவு கொண்டாடும் வசதி யும் வாய்ப்பும் ஏற்பட்டால் அரசியல் பிளவு களைக்கூட இந்தக் கலைஞர் கூட்டுறவு ஒன்று படுத்த உதவுமே. உள்நாட்டில் கலைத் தூதுகோஷ்டிகளை அனுப்பி ராஜ்யத்துக்கு ராஜ்யம் கலை உறவு ஏற்படுத்தும் நல்ல முயற்சியை இனியேனும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது எங் கள் ஆசை. உடனடியாகச் செய்யவேண் டிய அவசர வேலையாக இதனை மேற் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கலை சம்பந்தமாக நடை பெறும் நன்முயற்சிகள் யாவும் இனி அந்தப்

பிரதேச சங்கீத நாடகச் சங்கங்களின் ஆதரவில் நடைபெற வேண்டுமென்றும், பிரதேசச் சங்கங்களின் செயல்களை மேற் பார்வையிடும் ஒரு மத்திய சங்கமாகத்தான் அகில இந்திய சங்கீத நாடகச் சங்கம் இருக்க வேண்டுமென்றும் நாங்கள் கருது கிறோம். உபகாரச் சம்பளம், உதவி நிதி, பரிசுகள் வழங்கல் இவையெல்லாம் பார தத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் போவதில் பல கஷ்டங்கள் வி ளை கி ன் ற ன. தகுதியுள்ளவர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்காமல் போகவும் தகுதியற்றவர்கள் சிபார்சுகளின் மூலம் உதவிகள் பெறவும் வசதிகள் இருக்கின் றன.

கலைவளர்ச்சிக்கென மத்திய சர்க்கார் ஒதுக்கும் பணத்தை வீதாசாரப்படி பிர தேசங்களுக்கே பிரித்துக் கொடுத்துவிட் டால், அந்தப் பிரதேச சர்க்கார் இதை நிர்வகிப்பது எளிதாக இருக்கும். பிரதேச சர்க்கார் நிர்வாகத்தில் தவறுகள் ஏற்பட் டால் அதற்காக அவர்களை அணுகித் தவறு களைத் திருத்திக் கொள்ளச் செய்வதும் எங் களுக்குச் சுலபமாக இருக்கும் என்று நம்பு கிறோம்.

இதுபோன்ற நாடகக் கருத்து அரங்குகள் கூட்டுவதிலும் ஒரு யோசனை. ஒ ர் பிர தேசத்திலேயேகூட நாடகக்கலையை எப்படி வளர்க்க வேண்டுமென்பதில் பலவிதக் கருத்து வேற்றுமைகள் கலைஞர்களிடையே இருந்து வருகின்றன.

ஆண்டுதோறும் ஒவ்வொரு மொழிப் பிரதேசத்திலும் அந்தந்தப் பிரதேச அகாட மியின் ஆதரவில் நாடகக் கருத்து அரங்கு கள் கூட்டி அந்தந்தப் பிரதேசத்தின் முக் கியக் கலைஞர்களின் கருத்துக்களை அறிய வேண்டும். அவர்களில் ஒருவரை முறைப் படி தேர்வு செய்து இறுதியாக மத்திய சங்கம் நடத்தும் கருத்து அரங்கில் கலந்து கொள்ளச் செய்தால் அந்தப் பிரதேசத்தின் பொதுக் கருத்தை அவர் வெளியிடுவது சுலபமாக இருக்கும். தேசிய நாடக விழாக் களையும் அந்தந்தப் பிரதேசச் சங்கங்களே நடத்த வேண்டும். தனிப்பட்ட ஸ்தாபனங் களின் சார்பில் தேசிய நாடக விழாக்கள் நடைபெறுவது சரியான முறையாகாது.

மற்றொன்று; பாரதத்தின் தலைநகரான டில்லியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு 'தேசிய நாடக அரங்கம்' கட்டப்பட விருப்பதாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி படித்தேன். நமது இன்றைய நிலையில் ஒரே நகரில் 75 லட்சம் ரூபாய்களைச் செல விட்டுத் தியேட்டர் அமைப்பதைவிட ஒவ் வோர் இராஜ்யத்தின் தலைநகரிலும் ஐந்து லட்சம் ரூபாய்கள் செலவில் ஒவ்வொரு தேசிய நாடக அரங்கம் அமைப்பது மிக வும் பயனுள்ளதாக இருக்கும் அல்லவா? நமது இன்றைய அவசரத் தேவை தியேட் டர். இதைப் பூர்த்தி செய்ய ஐந்து லட் சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் நாடக அரங்கமே போதுமானது என்று கருதுகிறோம். முடிந்தபோது அதையே மேலும் அதிக வசதிகள் உள்ளதாக விரிவு படுத்திக் கொள்வது கஷ்டமன்று.

இறுதியாக ஒன்று சொல்லி என் கருத்தை நிறுத்திக் கொள்கிறேன். கலையும் மொழியும் ஒன்றோடொன்று பிணைந்து கிடப்பவை. நாடகக் கலையை மொழியி லிருந்து பிரிக்க முடியாது. கலைத் துறை யில் ஒவ்வொரு மொழியினருக்கும் ஒரு தனித் தன்மையும் வரலாற்றுச் சிறப்பும் இருப்பது இயற்கை. எனவே, கலைஞர்களா கிய எங்களுக்கு ஆழ்ந்த தாய் மொழிப் பற்று உண்டு. இந்த மொழிப் பற்றை மொழி வெறியாக யாரும் எண்ணவேண்டிய தில்லை. இதே சமயத்தில் பாரதத்தின் தேசிய ஒற்றுமையையும் நாங்கள் உயிராகப் போற்றுகிறோம்.

இந்த எங்கள் நல்லுணர்ச்சியில் நம் பிக்கை வைத்து எல்லாவகையிலும் எங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியுங்கள். உங்கள் உதவியால் உற்சாகம் பெறும் நாங்கள் எங் கள் கலாசக்தியால் முழுமூச்சுடன் பாரதத் தின் ஒற்றுமையையும் பண்பாட்டையும் வளர்ப்போம் என்று உறுதி கூறுகி றோம்.

தமிழர் மருத்துவக்கலை

பண்டித எஸ். எஸ். ஆனந்தம், தமிழ் மருத்துவச் சாலை, சென்னை

★

உலகில் மக்கள் இனம் என்று தோன்றி யதோ அன்றே மக்களுடன் பிணி, மூப்பு, சாக்காடுகளும் எதிர்பாரா இன்னல்களும் தோன்றிவிட்டன. அதற்குப் பரிகாரங்களை அனுபவத்தில் கண்ட நம் முன்னோர்கள் அவைகளைப் பரம்பரையாய்க் கையாண்டு வந்தனர். மக்கள் பேசிய ஒலிவடிவமாகிய மொழிக்கு வரிவடிவமாய எழுத்து ஏற்பட்ட பின்னர் அவர்கள் கண்ட உண்மைகளையும் அறிவு அனுபவங்களையும் அவர்களின் பின் சந்ததியாகிய நமக்கு நூல்களாக்கி வைத்த னர். அந்நூல்களில் மருத்துவக் கலையை முதன்மையானதெனக் கூறலாம்.

மக்கள் நோயின்றி உடல் உரத்துடன் நெடுநாள் நலமாய் வாழ்ந்து வீடுபேற்றை அடைவதற்கான வழிகளைக் கூறுவதே மருத்துவக் கலையாகும்.

மூவாசையில் மூழ்கி முக்குணவயப்பட்ட ஆறறிவுள்ள மக்களுக்கு நோய்கள் மிகுதி யாய் வருகின்றன. நோய்கள் உடம்பைப் பற்றியும், உள்ளத்தைப் பற்றியும் வருவ தென இருவகைப்படும். வயது, செய் தொழில், வாழும் நிலத்தியல்பு, பருவகாலங் களுக்கேற்ப, உணவு உடை தொழில் முத லியவற்றைச் சரிப்படுத்திக் கொள்ளாததால் வரும் உடற்பிணியையும், அவா மிகுதியால் வரும் கவலை, அச்சம், சினம் முதலியவை களால் ஏற்படும் உள்ளப்பிணிகளையும் வரா மல் தடுப்பதும் வந்த நோய்களைப் போக்கு வதும் மருந்தாகும்.

மருந்து பற்றித் திருமூலர்,

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே"

என்று குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர்,

"உற்றவன், தீர்ப்பான், மருந்துஉழைச்
செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து"

என்பதால் மருந்தென்பது ஒரு தனிப் பொருளன்று என்பது வெளியாகிறது.

பிணியாளி, பிணியைத் தீர்க்க முன்வந்த மருத்துவன், அவன் கையாளும் மருந்து, மருத்துவன் சொன்னபடி நோயாளிக்கு மருந்து உணவு முதலியவை கொடுத்து அருகிலிருந்து தூணைபுரியும் (நர்சு) தூணை யாள் இந்த நான்கில், பிணியாளிக்கு நான்கு குணம், மருத்துவனுக்கு நான்கு குணம், அவன் கொடுக்கும் மருந்துக்கு நான்கு குணம், தூணையாளுக்கு நான்கு குணம், ஆகப் பதினெறு குணங்களும் கண்டு மருத்து வம் செய்யப்பட்டால் ஒரு பிணியாளி பிணி நீங்கிப் பிழைக்கும் வாய்ப்பு உண்டாகும்.

மணி மந்திரம் மருந்து

தமிழ் மருத்துவக் கலையில் மணி, மந்திரம், மருந்தென மூவகை முறைகளிருக்கின்றன. இக்காலத்தில் முன் இரண்டு முறைகளும் மறைந்து கிடக்கின்றன. அதனால் இக்கால மக்கள் உடல் உரமின்றி நோய்வாய்ப்பட்டு விரைவில் மாளுகின்றார்கள். அப்பர் அடிகள்,

"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானே
பிரிவிலா அடியார்க்கென்றும்

வாராத செல்வம் வருவிப்பானே மந்திரமும்
தந்திரமும் மருந்துமாகித்
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னே ''

எனவும், தாயுமானர்,

''மணிமந்திர மாதியால் வேண்டுசித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்கவில்லையோ ''

எனவும், இராமலிங்க வள்ளலார்,

'' மருந்தறியேன், மணியறியேன்,
மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை
யறியேன் ''

எனவும், மருத்துவன் இலக்கணம் என்னும் நூல்,

'' குணங்கள் குறிகள் நாடியினால் குறித்து
மனத்தின் திடமதனால்
பிணங்கியேறும் பிணிபலவும் பின்முன்
கண்டுதானறிந்து
வணங்கு மருந்தால் மந்திரத்தால் ''

எனவும் கூறியுள்ளமை கொண்டு மணி மந்திரம் மருந்து என்னும் மும்முறைகளை அறியலாம்.

மக்கள் நலமாய் வாழ்வதற்கான தமிழ் மருத்துவக் கலைகளிலுள்ள மணி, மந்திர, மருந்தெனும் மூவகை முறைகளில் முன் இரண்டு முறைகளில் மறைந்து கிடக்கும் மணி, மந்திரமெனும் பொருளைப்பற்றி நமக் குத் தெரிந்த வரையில் விளக்கிக் கூற வேண் டியது கடமையாகும்.

மணி

மணி என்பது காலம். காலத்தை அளப் பது தினமணியாகிய கதிரவனேயாகும்; கதிர வனுகிய விண்மணி வெளிப்பட்டு நம் கண் மணியிற் கலந்தாலன்றிப் புற இருள் நீங்கிப் பொருள்களை நாம் காணவியலாது. '' கதிர வன் ஒளியே யன்றிக் கண்ணுக்கோர் ஒளியு மில்லை. '' ஞாயிற்றின் ஒளி காலை, மாலை சிறிது நேரமாவது நமது கண்ணிலும் உடம் பிலும் கலத்தல் வேண்டும். அதனால் நமது கண்ணொளி கெடாமலிருப்பதோடு, தலையி லுள்ள மூளையும் பலப்படுகிறது; நினைவு வன்மையுண்டாகிறது; இளமையில் நரைக் காது; மயிர் உதிராது; தலை வழுக்கை ஏற் படாது.

''ஆதித்தனுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து செய்வீர்
ஆதித்தனுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து கொள்வீர்
ஆதித்தன் சாட்சியாய்ப் பிணிதீரும்
அயனம் விருத்தமும் வாராதே ''

என ஆதித்தன் என்னும் ஞாயிற்றைப் பற்றி மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. வேதாந்த சைவ சித்தாந்த சமய தத்துவ நூல் களில் மணி மந்திரம் மருந்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

மணி என்றால் மனத்தை ஒன்றில் நிறுத்தி ஒரே நாமத்தைப் பலகால் நூற்றுக்கணக் கில் ஆயிரக்கணக்கில் செபம் செய்கிறவர் கள் கையில் பிடித்து எண்ணும் மணிக் கோவையை (செபமாலை) மணி என்றும், இரசத்தை மணியாகக் கட்டுவது இரசமணி என்றும் பலர் கூறுவர். அவை பொருந் தா. உடம்பில் ஆடையின்றிச் சிறிதுநேரம் சூரிய ஒளி உடம்பில் படும்படி காய்வதால் உடம்பிலுள்ள வியர்வைக்கால் மயிர்க்கால் கள் வழியே கதிரவன் ஒளி ஊடுருவிச் சென்று உடம்பிலுள்ள செந்நீர் தூய்மை யடைகிறது, நோயணுகாமல் காப்பாற்று கிறது, உள்ள நோய் ஒழிகிறது. இம்முறை களை அனுபவத்தில் கண்ட நம் முன்னோர் கள் காலை மாலை ஆறு, குளம், கிணறு முத லிய நீர் நிலைகளில் மூழ்கிக் குளித்தவுடன் கொஞ்ச நேரமாவது சூரியனைக் கண்ணால் பார்த்து உடம்பிலும் வெய்யில் படும்படி காய்ந்தார்கள். கண்ணும் கருத்தும் கெடா மல் உடல் வன்மை நினைவு வன்மையோடு நெடுநாள் நலமாயிருந்தார்கள்.

ஞாயிறு வழிபாடு

தமிழர் உடல்நல முறையும், சமயமும் ஒன்று கலந்துவிட்டது. நம் முன்னோர்கள் காலை, மாலை வழிபாடு செய்யாமல் உணவு உண்பதில்லை. ஆண், பெண் இருபாலாரும்

காலையில் கீழ்த்திசையில் ஞாயிறு கண்ணுக்குத் தெரிந்தாலும் கண்ணுக்குத் தெரியாமல் மேகத்தால் மறைக்கப்பட்டிருந்தாலும் ஞாயிற்றின் ஒளிவட்டத்தை அகக் கண்ணால் பார்த்து மண்டியிட்டு முழங்காலில் நின்று இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக் குனிந்து நிலத்தில் நெற்றி படும்படியாகத் தலையைக் கீழே வைத்தும், பின்னர்த் தலை நிமிர்ந்து முழங்காலில் நின்று கைகளைத் தலைக்குமேல் தூக்கி இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதும், பின்னர்த் தலை குனிந்து நெற்றி நிலத்தில் படும்படி தலை வணங்கியும் இப்படிப் பலதடவை செய்து வழிபடுவார்கள். அப்படி வணங்குங் காலத்தில் தலை குனியும்போது மூச்சை மெல்ல இழுத்து உள்ளே நிறுத்தியும், குனிந்து தலையைக் கீழே வைக்கும்போது உள்ளே நிறுத்திய மூச்சை மெல்ல வெளியே விட்டும் வழிபடுவார்கள். இதனால் அவர்கட்கு உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி இரண்டும் நடைபெறுவதோடு மந்திரத்துக்குரிய மனப் பயிற்சியும் நடைபெறுகிறது. மந்திரத்தைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

மணியாகிய ஞாயிறு வழிபாடு சுமார் எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்வரை நம் முன்னோர்கள் செய்து வந்தார்கள்.

இன்று நாம் மருத்துவக் கலையைச் சேர்ந்த நல்லொழுக்கமாகிய அப்பழக்கங்களை அநாகரிக மூடப்பழக்கமெனப் புறக்கணித்துக் கைவிட்டுவிட்டோம். நம் முன்னோர்கள் பலர் நோயின்றி நூருண்டுக்கு மேல் வாழ்ந்து சாகுங் காலத்திலும் நோய்வாய்ப்படாமல், "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவிழந்து ஐமேலுந்தி அலமந்து" உயிர் போகாமல் நல்லறிவோடு தூங்குவதுபோல் உடலையும் இம்மண்ணையும் விட்டு விண்ணிற் கலந்தார்கள்.

நமது நாட்டில் நம்முடன் பிறந்து நம்முடன் வாழும் முகம்மதியரெனும் 'இஸ்லாமான சகோதரர்'கள் இப்பழக்கங்களில் சிலவற்றை நாள்தோறும் காலந்தவறாது செய்கின்றார்கள். அவர்கள் வீட்டைவிட்டு இரயிலில் கப்பலில் பயணம் சென்றாலும், வீதிகளில் நடந்து சென்றாலும், வியாபாரம் செய்து கொண்டிருந்தாலும், வேறெங்கு அலுவல் பார்த்துக்கொண்டிருந்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் வழிபாடு செய்கின்றார்கள். நம்மவர்கள் அவர்களைப் பார்த்து, "நாகரிகம் தெரியாதவர்கள்" என எண்ணுகிறார்கள். இஸ்லாமானவர்கள் நம்மை விட வலிவானவர்களாகவும் நோய் குறைந்தவர்களாகவும் காணப்படுவதற்கு அவர்கள் கொண்டுள்ள இந் நற்பழக்கமே காரணமாகும்.

மந்திரம்

மனத்தை உரப்படுத்துவது, அலையு மனத்தை அகத்தடக்குவது, ஒரு நாமத்தையோ, ஓர் உருவத்தையோ, இடையறாது நினைப்பது மந்திரம். "சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளு மில்லை" என்பர் பெரியோர். காலை, நண்பகல், மாலை மூன்று வேளையும் மந்திரம் செபிக்கப்பெறும். தனித்திருந்து கண்ணை மூடிக்கொண்டு கருத்தை ஒன்றில் நிறுத்த உதவுவது மந்திரம். மந்திரத்துக்கும் மூச்சுக்கும் தொடர்புண்டு. மூச்சுப் பயிற்சி மந்திரத்தோடு செய்யப்பெறும்.

திருமந்திரம்

நாசிக்கு அதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லீரேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்திற் கென்றும் சிதைவில்லை காணே

வாசிவா வென்று வாசியில் ஊடாடி
வாசியை உள்ளே வைத்துஊ பூசித்தால்
வாசியும் ஈசனும் மருவி ஒன்றாகும்
வாசியைப்போல் சித்தி மற்றேது மில்லையே

மனமடங்க வாசி அடங்கும்
வாசி அடங்க மனமடங்கும்.

மந்திர சக்தியே மனோசக்தி, மனோசக்தியே ஜீவசக்தி, ஜீவசக்தியே தேக சக்தி.

மூவகைக் குற்றம்

திரிதோஷம் என்னும் வாத, பித்த, சிலேத்துமம் என்னும் (கவம்) இம் முப் பொருள்களின் ஏற்றக் குறைவால் வருவதே நோய் என்பது தமிழ் மருத்துவக் கலையின் அடிப்படை. இதைச் சிறிது விளக்குவோம்.

அண்டத்திலுள்ள பஞ்சபூதமெனும் ஐம் பெரும்பொருள்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்பவற்றுள், நமது உடம்பில் உயிரா யிருந்து உடம்பை இயக்கிச் செயற்படுத்து வது வளி, தீ, நீர் எனும் முப்பொருள்களே யாகும். ஐம்பெரும் பொருள்களில் தம்நிலை யில் மாறுபடாதன மண்ணும் விண்ணும். நடுவிலுள்ள முப்பொருள்கள் தம் நிலையில் அடிக்கடி மாறும். இவைகள் அண்டத்தில் வியாபித்துள்ளதே போல் பிண்டமாகிய நமது உடம்பிலும் வியாபித்துள்ளன.

வளி, தீ, நீர் இவையே வாத, பித்த சிலேத்துமமென மருத்துவ நூல்களில் கூறப்படுகின்றன. இம் முப்பொருள்கள் உயிருள்ள பிராணிகளை எல்லாம் செயற் படுத்துவதோடல்லாமல் உயிர் இல்லாத பொறிகளாகிய இரயில், கப்பல், மோட்டார் கார், ஏரோப்பிளேன் முதலியவைகளையும் இயக்குகின்றன. காற்று, தீ, நீர் மூன்றும் தன்னிலையில் மிகாமல் குறையாமல் இருக் கிற வரையில் மக்கள் உடல்நிலையும் சரியா யிருக்கிறது. மற்றப் பொறிகளும் சரியாய் இயங்குகின்றன. அண்டத்திலும் முப் பொருள்களில் ஏதாவது ஒன்று மிகுந்தா லும் குறைந்தாலும் ஆபத்தாயிருக்கிறது. ஐம்பெரும் பொருள்களில், நிலமும், வானும் மட்டும் தன் நிலையில் மாறுபாடில்லாமலிருப் பதால் அதையே ஐந்துக்கு இரண்டு பழு தில்லை எனப் பெரியோர் கூறுவர். மக்கள் நோயின்றி வாழ்வதற்கும் நோயால் துன்பப் படுவதற்கும் நம் உடம்பில் வளி, தீ, நீர் என் னும் முப்பொருள்கள் மிகுதல் குறைதலே காரணமாகிறது. இதனால் முப்பொருள் குறை நிறைகளுக்குத் "திரிதோஷ"மெனப் பெயரிட்டனர்.

> "மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று"

என வள்ளுவரும் கூறுகின்றார். உடம்பில் முப்பொருள்களை மிகுதல் குறைதலின்றி வைத்து நோயணுகாமல் வாழும் வகைகள் பற்றித் தமிழ் மருத்துவ நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ் மருத்துவம் இயற் கையோடு பெரிதும் ஒத்தியங்குவது. ஏற்ற படி அதன் சிறப்புகளை உணர்ந்து போற் றும் திறம்தான் தமிழ் மக்களிடையில் இல்லை.

மருந்து

நிற்க, மேற்கூறிய முப்பொருள்களுக்குள் முதற்பொருளும், பெரும்பொருளும், வலிய பொருளுமாவது வளியே யாகும். இவ்வளி யில் அடங்கியதே ஏனைய தீயும் நீரும். இந்த வளியாகிய பிராணவாயுவே நமது நாசியின் வழியே உட்புகுந்து வெளிப்போந்து உயி ராய் விளங்குகிறது. இந்த உயிரைக் கவ னித்து வளர்க்கும் பயிற்சிக்கே மூச்சுப் பயிற்சி (பிராணயாமம்) எனப் பெரியோர் கூறுகின்றார்கள்.

> "ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக்
> காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை;
> காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
> கூற்றை உதைக்கும் குறியது வாமே"

என்கிறார் திருமூலர்.

முற்காலத்தில் நமது பெரியோர்கள் மூச் சுப்பயிற்சியைக் காலை, நண்பகல், மாலை மூன்று வேளையும் தவறாது செய்து வந்தார் கள். ஆதலால் நோயின்றி உடல் உரத்துடன் நூறுண்டுக்கு மேல் வாழ்ந்தார்கள்.

பிராணயாமம் எனும் மூச்சுப் பயிற்சி செய்யும் முறையை எனது தந்தையிடத்தில் தெரிந்து கொண்டதையும், நூல்களில் கண்

டதையும் விரிவஞ்சி இதில் எழுதாமல் விடுகின்றேம். உயிர் நலத்திலும் உடல் நலத்திலும் அக்கறையுள்ளவர்கள் அதைத் தக்கவர்கள் வழி அறிந்து செய்து நலமடைவார்களாக! தமிழ் மருத்துவக்கலை மேற்கூறிய மணி மந்திரங்களோடு இம்மூச்சுப் பயிற்சி முறைகளையே இயற்கைப் பெருமருந்தாகக் கொண்டு போதிக்கின்றது. ஏனைய மருந்துகள் நான்காம் பகுதியே.

தமிழ் மருத்துவ நூல்களில், உடம்பில் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகள் உள்ளன வென்றும், அவற்றில் பத்து நாடி முதன்மை என்றும், பத்தில் மூன்று நாடி முதன்மை எனவும், நாழிகை ஒன்றுக்கு முந்நூற்றறுபது மூச்செனவும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்செனவும், 5 நாழிகைக்கு–இரண்டு மணி நேரத்துக்கு–ஒருமுறை வலப்புற மூக்கிலிருந்து இடப்புற மூக்குக்கும்இடப்புற மூக்கிலிருந்து வலப்புற மூக்குக்கும் சரம் மாறுகிறதெனவும் கூறப்பட்டுள்ளன. வலப்புற மூக்கில் நடப்பது இடகலை எனவும், வலத்திலிருந்து இடப் பக்கம் மாறுவதற்கு இடையில் இரண்டு மூக்கிலும் கொஞ்ச நேரம் மூச்சு நடப்பது சுழிமுனை எனவும் இடப் பக்கம் நடக்கும் போது பின் கலை எனவும், வலப் பக்கம் நடப்பது சூரிய கலை வெப்ப நாடி எனவும், இடப் பக்கம் நடப்பது சந்திர கலை தட்ப நாடி எனவும் கூறுவர்.

மூச்சு இயங்கும் வகையைக் கொண்டே இன்ன நோய் வரும் என்பதை முன்னரே அறிந்து ஆவன செய்து கொள்ளவும் நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்று தெரிகிறது. விஞ்ஞான வசதி மிக்க இந் நாளில் இன்னும் காணுத பல நுட்பமான உடம்பின் அமைப்புகளை எல்லாம் நம் முன்னோர் மிகப் பழைய நாளிலேயே கண்டிருக்கின்றனர். அவைகளை எல்லாம் புறக்கணிக்காது ஆராய்ந்து போற்ற வேண்டும். நம் புறக்கணிப்பால் எவ்வளவோ அரும் பெருங்கலை நூல்கள் அழிந்து விட்டன.

இருக்கின்ற தமிழ்க்கலை நூல்களையேனும் திரட்டித் தக்க தமிழ் அறிஞர்களைக்கொண்டு ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ளத் தமிழ் மக்களும் ஆட்சியும் முனைய வேண்டும்.

வார சரம்

"வெள்ளி வெண் திங்கள் விளங்கும் புதன் இடம்
ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறைஇடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே."

என்னும் திருமந்திரப் பாடலால் வெள்ளி, திங்கள், புதன் இக்கிழமைகளில் விடியற் காலம் ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள் இடப் பக்கம் மூக்கில் சரம் (மூச்சு) நடைபெறும் எனவும், சனி, ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வலப் பக்கம் மூக்கில் சுவாசம் நடைபெறுமெனவும், வியாழக் கிழமை மட்டும் சந்திரன் வளர்பிறை காலத்தில் இடப் பக்கத்திலும், தேய்பிறை காலத்தில் வலப் பக்கத்திலும் நடைபெறுமெனவும் அறிகின்றோம். பழைய நாளில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் மருத்துவர்கள் அதன்படி நடப்பதையும் கட்டாயம் கவனித்து வந்தார்கள்.

இப்போது நாமும் நம் மூச்சு இம்முறையில் இயங்குவதைக் காணலாம். மாற்றமிருந்தால் உடலில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அறிந்து, நுட்பமாக உடம்பைப் பரிசோதித்து நோய்வராமல் காத்துக் கொள்ளலாம். தமிழ் மருத்துவக்கலை நோய்க்கு மருந்து தேடுவதோடு நிற்காமல், நோய் வருமுன் அறிந்து காக்கும் முறை களையும் நன்முகக் கூறுகிறது. ஐந்து நாழிகைக்கு–இரண்டுமணி நேரத்துக்கு–ஒருமுறை நாசியில் வாசி மாறி மாறி நடைபெறுமென்று மேலே குறிப்பிட்டோம். வலப்புற மூக்குத் துளையில் சரம் நடைபெறுவதைச் 'சூரியநாடி' எனவும், இடப் பக்கம் நடைபெறுவதைச் 'சந்திர நாடி' எனவும் குறிப்பர். வலப் பக்கம்

மூச்சு நடைபெறும் போது இன்னின்ன வேலை செய்வது நலமெனவும், இடப் பக்கம் மூச்சு நடைபெறுங்கால் இன்ன வேலைகள் செய்ய வேண்டுமெனவும் கூறுவர்.

பழைய தமிழ் மருத்துவர்கள் திறம்

பழைய நாள் மருத்துவர்கள் பகல் இரவு சூரிய சந்திர நட்சத்திரங்களைப் பாராமலும், கடிகாரம் எனும் காலங்காட்டியைப் பாராமலும், இருக்கும் இடத்திலிருந்து மூக்கு மூனையில் நடைபெறும் மூச்சைப் பார்த்தே இரவு பகல் மணி சொல்லுவார்கள்; எனது பாட்டனாரிடத்திலும் தந்தையிடத்திலும் இவ்வரிய செயலை நேரில் பார்த்தேன்; இச் சரப் பயிற்சியால் தன்னிடம் வரும் நோயாளிக்கு நோய் தீரும் தீராதெனவும், பிழைப்பான் பிழைக்க மாட்டானெனவும் கூறினர்கள்; நோயாளியை வந்து பார்க்கும் படி மருத்துவனை அழைக்கவரும் ஆண் பெண்களையும், அவர்கள் வந்து நிற்கும் திசைகளையும், அவர்கள் வாயிலிருந்து வரும் முதற் சொல்லையும், அச்சமயம் மருத்துவனுக்கு மூக்கில் நடக்கும் சரத்தையும் கண்டு நோயாளியின் நிலையைத் தெரிந்துகொள்ளுவார்கள்; முற்காலத்தில் மருத்துவர்களும் பெரு மக்களில் பலரும் வீட்டைவிட்டு வெளியே புறப்படும்போது மூக்கில் விரல் வைத்துச் சரத்தைப் பாராமல் புறப்படமாட்டார்கள்; நீரில் தலைமுழுகு முன்னும் உணவு உட்கொள்ளு முன்னும் வலப் பக்கம் நாசியில் சுவாசம் (சூரியனில்) நடைபெறுகிறதா என்பதைக் கவனிப்பார்கள்; சோதிடமும் பார்ப்பார்கள்; வானத்திலுள்ள நவக்கிரகங்களின் உச்சநிலையைப் பற்றிக் கவனித்துச் சூரியனைக் காலை மாலை கண்ணால் பார்ப்பது போல் சந்திரனையும் முக்கியமான நட்சத்திரங்களையும் இரவில் பார்ப்பார்கள். நோயாளியின் ஜாதகத்தையும் பார்ப்பார்கள்; இவைகளை எல்லாம் பார்த்து மருத்துவம் செய்வதுதான் இயற்கை மருத்துவம். அதில்தான் பயன் மிகுதி. தமிழ் மருத்துவம் அப்படிப்பட்டது. கிரகமெனும் ஞாயிறு மறைவு மதிமறைவு நேரத்தில் உண்ணுமல் ஓர் அலுவலும் பண்ணுமல் தனித்திருந்து பேசாமல் தியானம் செய்யும்படி தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. அந் நேரத்து ஒளியில் பலவகைக்கெடுதல் இருப் பதே அதற்குக் காரணம். உலோகங்களைச் செந்தூர பஸ்மங்களாகச் செய்கிற பழக்கத் தால் செம்பை வெள்ளியாகவோ பொன்னாகவோ செய்யும் இரசவாத வித்தையும் பழைய தமிழ் மருத்துவர்களுக்குத் தெரிந் திருந்தது. அதனால் அவர்கள் இக்காலம் போல் பெரும்பாலும் பணத்துக்காக மருத்துவம் செய்யாமல், ஏழை எளியவர்களுக்கு இலவசமாகவே மருத்துவம் செய்வார்கள். மருத்துவர்கள் பிணியாளர்களைப் பார்க்கும்போது வெறுந் தரையிலிருந்து நோயாளரைத் தொட்டுப் பார்ப்பதால் நிலக் கவர்ச்சியால் மருத்துவனுடைய தேக காந்த சக்தி நோயாளிக்கும் நோயாளியின் தேக காந்த சக்தி மருத்துவனுக்கும் பரவுகிறதென்பதை அறிந்து, தற் காப்புக்காக நோயாளியைப் பார்க்கும் போது வேறென்றிலும் அமராமல் மரப் பலகை (மணை) மீது அமர்ந்துதான் பார்ப்பார்கள். நோயாளியை வெறுங்கையால் தொட்டுப் பார்க்காமல் தனது கைக்கும் நோயாளி உடம்புக்கும் நடுவில் மெல்லிய பட்டுத்துணியைப் பிரித்துப் போட்டுப் பார்ப்பார்கள். மரப் பலகைக்கும் பட்டுத் துணிக்கும் நிலக்கவர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் இருக்கிறதென்பதை நம்முன்னோர் கள் அக்காலத்திலேயே கண்டிருந்தார்கள். இன்றும் வயதானவர் பலருக்கும் கிராமங் களில் வாழ்பவர் சிலருக்கும் இது தெரியும். இன்று மின்சாரத்தில் வேலை செய்கிறவர் களிடம் இதைக் காண்கிறோம்.

இவை நிற்க, ஆங்கில ஆட்சிக்குமுன் தமிழ் நாட்டில் பரம்பரையாய்த் தமிழ் மருத்துவக் கலையைத் தந்தையிடத்திலும் குலகுரு

முறைப்படியும் அங்கங்கே பலர் கற்றுக் கையாண்டு வந்தார்கள்.

அக்காலத்தில் தமிழ் மருத்துவர்கள் தேக தத்துவ நூல், நோயைப் பற்றிய நூல், நோயணுகாவிதி, இரணமருத்துவம், உணவுப் பொருள் மருத்துவ நூல், விஷங்களை நீக்கும் நஞ்சு நூல், ஞானசர நூல், சோதிட நூல் முதலிய பல நூல்களைக் கற்றறிய வேண்டியதோடு ஆசிரியனிடம் 12-ஆண்டு பழக வேண்டும். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்தான் தனியே மருத்துவம் செய்ய வேண்டும் என விதியிருந்தது. இப்போது அப்படிச் செய்கிற தமிழ் மருத்துவரும் இல்லை; செய்விக்கிற திட்டங்களும் இல்லை. மருத்துவத்துறையிலும் வெளிநாட்டு மருத்துவ முறைகளுக்கே ஆக்கமும் விளம்பரமும் மிகுந்து விட்டன.

பிணி அறிதல்

பழைய தமிழ் மருத்துவர்கள் நோயாளரைச் சோதித்தறியும்போது நோய்வந்ததற்குக் காரணத்தை முதலில் காண்பார்கள். பலதரப்பட்ட மக்களுக்கு அவரவர் நிலத்தியல்பு, உணவு, கல்வி, அறிவு, செய்தொழில் ஆகியவற்றைக் கவனித்தும்,

> ''நாடியால் முன்னோர்சொன்ன நல்லொலி
> பரிசத்தாலும்
> நீடிய விழியினாலும் நின்ற நாக்குறிப்பினாலும்
> வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்
> சூடிய வியாதிதன்னைச் சுகமுடன்
> அறிந்துபாரே ''

என்றபடி கைநாடி, குரலொலி, உடற்சூடறியத் தொடுதல், கண், நாக்கு, உடம்பின் நிறம், நீர், மலம் இந்த எட்டுவிதச் சோதனையின்றி மருந்து கொடுக்கமாட்டார்கள்.

> ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்று திருவள்ளுவரும் இதையே கூறுகின்றார்.

கோயமுத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட்
மேட்டுப்பாளையம் ரோட், கோயமுத்தூர்

●

மூலதனம்

அங்கீகாரம் பெற்றது : ரூ. 15,00,000/- செலுத்தப்பட்டது ரூ. 12,81,300/-

கதிர்கள் : 22,820 லூம்கள் : 100

7180 கதிர்கள் விரைவில் வந்துசேரும்.

தயாரிப்பு

20s முதல் 80s வரை பருத்தி, சலவை செய்ததும் கலர்
ஸ்டேபிள் பைபர், பைபர் நூல்கள் உயர்ரக லாங்கிளாத் மல்லுகள்

டெக்ஸ் மார்க் நீர். 608

★

மெஸர்ஸ் T. A. ராமலிங்கம் செட்டியார் ஸன்ஸ் & கம்பெனி
மானேஜிங் ஏஜண்டுகள் & காரியதரிசிகள்

சில நோயாளிகளுக்கும், பல மருந்துண்டு அலுத்தவர்கட்கும் இயற்கை மருத்துவம் செய்வார்கள்; பத்தியம் எனக்கூறி உணவை மாற்றுவார்கள். உள்ளப் பிணியாளர்களை, மன நோயாளர்களை, இருக்கும் இடத்தை விட்டு 'ஸ்தல யாத்திரை' போகச் சொல்லுவார்கள்.

இரண வைத்தியம்-அறுவை மருத்துவம்

இக்காலத்தில் நடைபெறுவதைப் போல் அக்காலத்தில் இரண மருத்துவம் நடைபெற்றிருக்குமா எனச் சிலர் சந்தேகப்படுகின்றார்கள்.

"உடல்தனில் தோன்றிற் றொன்றை
அறுத்ததன் உதிரம் மாற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்திலல் துயரம் தீர்வர்"

எனக் கம்பராமாயணத்தில் கம்பர் கூறுவதாலும்,

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்"என

ஆழ்வார் நாலாயிரப் பாடலில் கூறுவதாலும் சில நோய்களுக்கு உடம்பில் சில இடங்களில் சுட்டும், அறுக்கவேண்டிய இடங்களை அறுத்தும், பழைய நாட்களில் மருத்துவம் செய்துள்ளார்கள் என்று தெரிகின்றது. ஆனால் இக்காலத்தைப்போல் இவ்வளவு அறுவை மருத்துவங்கள் அக்காலத்தில் இல்லை. இத்தகைய நோய்களும் அக்காலத்தில் இல்லை. இவ்வளவு பெரிய மருத்துவமனைகளும் அக்காலத்தில் இல்லை. எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டினாலும் இப்போது நோயாளிகளுக்கு இடம் போதவில்லை என்கிறார்கள். இதற்கு, நாள்தோறும் மக்களுக்கு நோய் அதிகப்படுவதே காரணமாகும். நோய்க்கு மருந்து தருவதைவிட, நோய் வராமல் தடுப்பதே அறிவுடைமை. நிலத்தியல்புக்குத் தக்க மருத்துவ முறைகளும் மருந்துகளும் சமயச் சார்பு கலந்த சுகாதார முறைகளும் இப்போது அழிந்துவிட்டன. மக்கள் தண்ணீர் குடிப்பதையே மறந்துவிட்டனர். நாவரண்டால் காபி, டீ, சோடா, கலர், கிரஷ்தான் குடிக்கிறார்கள். 'சிகரெட்டு,' பீடி, சிற்றுண்டிகள் அதிகப்பட்டுவிட்டன.

மேற்கே கதிரவன் மறையும்போது கதிரவனைப் பார்த்துப் பத்து நிமிஷமாவது மூச்சுப் பயிற்சி செய்து தொழவேண்டிய நேரத்தில், உணவு உட்கொள்ளக்கூடாத நேரத்தில் சிற்றுண்டிக் கடைகளுக்குச் சென்று கண்டதைத் தின்று, காபி குடித்துச் 'சிகரெட்டு' பீடியோடு வேடிக்கை விநோதங்களுக்குச் செல்லுகின்ற இக்கால மக்களுக்கு டி. பி. எனும் கூய இருமலும் புற்று நோயும் வயிற்று நோயும் வராமல் விடுமா? இதைக் கல்லூரி மாணவர்கட்கு ஆசிரியர்கள் எடுத்துக் கூறுவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் நமது தாய்மொழியின் வழியாக நீதி நூல்களையும், சமய நூல்களையும், நோயணுகா விதிகளையும் சிறிதும் கற்காமல் கை விட்டதே காரணமாகும்.

சங்க இலக்கியங்களில் பதினெண் கீழ்க் கணக்கில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம் போன்ற நீதிநூல்களுக்கும் மருந்துப் பெயர்களை வைத்திருக்கின்றார்கள். திருக்குறள் பொருட்பாலில் மருந்தென்னும் குறிப்புள்ளது. சங்கப் புலவர்களில் மருத்துவன் தாமோதரனார், மலையனார் முதலியோர் தமிழ் மருத்துவர்களென்றே தெரிகிறது. தமிழரசனுக்கு மருத்துவராயிருந்த பரஞ்சோதியார் அரசனுக்கு அணுக்கராகவும் படைத் தலைவராகவுமிருந்து வடநாட்டு வாதாபி மன்னன் இரண்டாம் புலிகேசி தமிழரசனுக்குக் கப்பம் கட்டாதிருந்த காலத்தில் படையோடு சென்று அவனைப் பணியச்செய்து வெற்றி கண்டு வந்தார் எனச் சரித்திரமிருக்கிறது. அக்காலத்தில் கல்வி அறிவில் சிறந்த பெரியோர்கள் மருத்துவராயிருந்தார்கள். இக்காலத்தில் கல்வி அறிவில்லாதவர்களும் பரம்பரையாய்க் குருகுல முறைப்படி தமிழ்

மருத்துவ நூல்களைக் கற்றுத் தக்க ஆசிரியனிடத்தில் பழகி அனுபவ மில்லாதவர்களும் தமிழ் மருத்துவம் செய்கிறபடியால் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். மேற்கூறிய குறைகள் தீர்ந்து மக்களுக்கு நோய் குறைந்து முற்காலம்போல் நோயின்றித் தேகபலத்தோடு நூறுண்டு நலமாய் வாழவேண்டுமாயின் செல்வர்களும் அரசினரும் தமிழ் மருத்துவக் கல்லூரி நடத்தவேண்டும். இக் காலத்தில் ஆங்கில மொழிக்கும் ஆங்கில அறுவை மருத்துவத்துக்கும் அதிக சலுகை காட்டப்படுகிறது. தமிழ் நாட்டில் சித்தர்கள் முறையாகிய தமிழ் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றுவது சரியாய் நடைபெறச் செய்யவேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிக்கு முதல் சலுகை காட்டவேண்டும். மக்கள் நோய் குறைந்து நலமாய் வாழ வேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மேலே கூறிய தமிழர்களின் ஆன்மஞான மருத்துவக் கலைகளைத் திரும்ப வளர்க்க வேண்டுமெனப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறேன்.




... மதுரையில் ...
பல ஆண்டுகளாக
மக்களால் நன்மதிப்புப்
பெற்ற ஸ்தாபனம்

செல்வ மாளிகை

S. S. அருணைசலம்
செட்டியார் & பிரதர்

தங்க நகைகள் & வெள்ளிப் பாத்திர
வியாபாரம்

137 to 143, தெற்காவணிமூல வீதி, மதுரை



இசைக் கருவிகள்

திரு. நா. பாலுசாமி, எம். ஏ., தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

★

தோற்றுவாய்

பண்டைத் தமிழகம் கலையகமாகக் காட்சி அளித்தது. பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கும் தாய்மொழியாகிய தமிழ் கருவியாக அமைந்திருந்தது. தமிழர், இயல், இசை, கூத்து ஆகிய முத்துறைகளிலும் தமிழை வளர்த்தனர். அதனால், தமிழ் முத்தமிழ் எனப்படுவதாயிற்று. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்ற ஔவையாரின் அருள் மொழி இதனை வலியுறுத்தும்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் வளத்தையும் காட்டுவன மேலே கூறப்பட்ட முத்துறைகளாகும். இயல் மக்களது நிட்பத்தையும், இசை அவர்தம் நுட்பத்தையும், கூத்து ஒட்பத்தையும் காட்ட வல்லன. இயல், இசை, கூத்து என்ற மூன்றனுள்ளும் நடுவணதாகிய இசை தனிச் சிறப்பு வாய்ந்தது. இயலிலும், கூத்திலும் இசை கலந்திருப்பது வெளிப்படை. உரையாலும், பாட்டாலும் இயன்ற இயலில் சொற்கள் முறையே பொருளொடு புணர்ந்தும், அசை, சீர், தளை, தொடை, அடி, எதுகை, மோனை ஆகியவற்றால் இயன்றும் இசை யின்பம் தருகின்றன. கூத்தின் சிறப்பை மிகுவிப்பதும், அதற்கு ஏற்ற பின்னணியும் இசையே யாகும். எனவே, இசையே ஏனைய இயல், கூத்துக்களினும் சிறப்புடைத்தாம்.

உலக வாழ்க்கையில் யாவராலும் விரும்பப்படும் தன்மை வாய்ந்தது புகழ். "ஒன்று உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றுது நிற்பதொன்றில்," என்றார் வள்ளுவனாரும். இத்தகைய புகழை இசை என்று வழங்கினர் தமிழர். "ஈதல் இசைபட வாழ்தல்" என்ற பொய்யாமொழித் தொடரே இதற்குப் போதிய சான்றாகும். இதிலிருந்து தமிழரது வாழ்க்கையில் இசைக் கலை எத்துணை இடம் பெற்றிருந்தது என்பது தெற்றெனப் புலப்படும்.

தமிழ் மொழியில் எண்ணற்ற இயற்றமிழ்க் கலை நூல்கள் எழுந்தமை போலவே, இசைக் கலை நூல்களும், கூத்துக் கலை நூல்களும் பல தோன்றியிருந்தமை புலனாகின்றது. இசை நுணுக்கம், இசை மரபு முதலிய இசை நூல்களும், செயிற்றியம் முதலிய கூத்திலக்கண நூல்களும் பண்டு வழக்கில் இருந்தமை உரையாசிரியர்களின் குறிப்புக்களிலிருந்து தெரிய வருகின்றது. இயற்கலை நூல்களுள் பல கடற்கோளுக்கு இரையாகி ஒழிந்தமை போலவே, இசை நூல்களும், கூத்து நூல்களும் எச்சமற்று இறந்தொழிந்தன. இது பெரிதும் வருந்துதற்குரியது.

பண்டைத் தமிழகத்தில், கவியரசரும், புலியரசரும் ஒருங்கு கூடிக் கழகம் நிறுவி, முத்தமிழ்க் கலைகளையும் நன்கு போற்றினர். இதுவே **தமிழ்ச்சங்கம்** என அழைக்கப் பெற்றது. இச்சங்கத்தில் இயற்புலவரும், இசைப்புலவரும் கூத்துநூற் புலவரும் தனித்தனி அமர்ந்து தத்தம் துறைகளில் சிறந்து விளங்கினர். இச்சங்கத்தின் நிலைக்களமாக விளங்கிய பெருமை பாண்டியர்

கோநகரமாகிய மதுரையைச் சாரும். சேர நாட்டுப் புலவரும், சோழ நாட்டுப் புலவரும், பாண்டியர் தலை நகரத்தில் வீற்றிருந்தனர். இங்ஙனம், முத்தமிழுக்கும் தமிழ்ச் சங்கத்தில் தனித் தனித் துறைகள் அமைந்திருந்தமை,

> "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
> பலத்து மென் சிந்தையுள்ளும்
> உறைவா னுயர்மதிற் கூடலிலுய்ந்த
> வொண்டீந் தமிழின்
> துறைவாய் நுழைந்தனையோ வன்றி
> யேழிசைச் சூழல்புக்கோ
> இறைவா தடவரைத் தோட்கென்
> கொலாம் புகுந் தெய்தியதே."

என்ற மணிவாசகனாரது திருக்கோவைச் செய்யுளால் தெளியலாம். இப்பாட்டில் "ஒண்தீந் தமிழின் துறை" என்ற தொடர் அகப்புறத் துறைகளால் இயன்ற இயற்றமிழ்ப் பகுதியையும், "ஏழிசைச்சூழல்" என்ற தொடர் இசைத்தமிழ்ப் பகுதியையும் குறிப்பனவாகும். மூன்றும் பகுதியாகிய கூத்து இப் பாட்டில் குறிக்கப்பட்டிலதேனும், அஃது இருந்தது எனக்கோடல் இழுக்கின்றும்.

இங்ஙனம், சங்கத்திலே வளர்ந்த முத்தமிழ்ப் பாவைகளுள் இசைத்தமிழ்ப் பாவையின் ஏற்றத்திற்கு உறுதுணைபுரிந்த இசைக் கருவிகளைப் பற்றி ஈண்டு ஆராய்வோம்:

இசைக்கருவிகள்

இசை பிறத்தற்குரிய நிலைக்களங்கள் இரண்டாம். ஒன்று கண்டம்; மற்றொன்று கருவி. இவ்விரண்டினின்றும் எழும் இசைப் பாடல்கள் முறையே கண்டப்பாடல் (வாய்ப் பாட்டு), கருவிப்பாடல் எனப்படும். கண்டத்தால் எழுப்பப்படும் இசைப் பாடலுக்கும் கருவிப்பாடல் உறுதுணை புரியவல்லது. இசைவாணர் ஒருவர் கண்டத்தால் பாடுகின்றுழி அப்பாடலின் போக்கிற்கும் நோக்கிற்கும் ஏற்பப் பல்வகைக் கருவிகளும் துணைநின்று இசைகூட்டுமேல் அது கேட்பாருக்கு எத்துணை இன்பம் பயக்கும்! இத்தகைய இசை நிகழ்ச்சி **பல்லியம்** (Orchestra) எனப்படும். இனி, இவ் விசைக் கருவிகளின் வகையும் தொகையும் காண்பாம்.

இசைக்கருவிகள் மூவகைப்படும்: அவை **தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி** என்பன. இவற்றோடு **கஞ்சக்கருவி** என்றொரு வகை உண்டு. தோலால் போர்ப் புண்டு கையாலும் கடிப்பாலும் தட்ட இசை தருவது தோற்கருவி. துளையிட்டு அதன் வழியாக இசையெழுப்பப் பயன்படுவது துளைக்கருவி. நரம்புகளுக்கு முறுக்கிட்டு விரலால் தடவ இசை தருவது நரம்புக்கருவி. ஒன்றோடு ஒன்று மோதுறுதலால் இசை பிறப்பிப்பது கஞ்சக்கருவி.

தோற்கருவிகள்

பண்டைக் காலத்தில் வழங்கிய தோற் கருவிகள் முப்பத்துஒன்று என்பது சிலப் பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோளிலிருந்து தெரிகின்றது. அவை, **பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, குடமுழா, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, முழவு, முரசு, தகுனிச்சம், துடி** முதலியன. இவை, அக முழவு, அகப்புற முழவு, புற முழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண்முழவு, காலைமுழவு என எழுவகைப் படும். மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை முதலியன அக முழாக்கள். தண்ணுமை, தகுனிச்சம் முதலியன அகப்புற முழாக்கள். கணப்பறை முதலியன புற முழா. இங்குக் கூறப்படாத நெய்தற்பறை முதலியன புறப்புறமுழா. முரசு முதலியன பண்ணமை முழா. நாழிகைப்பறை நாண் முழா. துடி காலைமுழா. இவ்வாறு பகுத்துக் காட்டுவர் அடியார்க்கு நல்லார். இவற்றுள் காலத்தால் மிக்க தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்துள் **பறை, துடி, முரசு** ஆகிய மூன்று தோற்கருவிகளே குறிக்கப் பட்டுள்ளன. இதனால் இவற்றின் பழை

மையும் சிறப்பும் நன்கு புலப்படுகின்றன. பறை என்பது கருப்பொருள்களுள் ஒன்று என்று குறிக்கப்பட்டிருத்தலும், அது **ஏறு கோட்பறை, தொண்டகப்பறை, நெல்லரி கிணை, மீன்கோட்பறை, சூறைகோட்பறை** என முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக் குரியதாகக் காட்டப்பட்டிருத்தலும் இப் பறையினது சிறப்பையும், இது மக்கள் வாழ்க்கையில் பெற்றிருந்த இடத்தையும் நன்கு காட்டுவனவாகும். பறை, சிறு பறை, பெரும் பறை, கிணைப்பறை, கணப் பறை எனப் பலவகைப்படும். **சிறுபறை** என்பது பிற்காலத்துப் பிரபந்தங்களுள் ஒன்றான பிள்ளைத்தமிழில் ஆண் பாலுக்குரிய விளையாட்டுக் கருவியாகக் குறிக்கப்பட்டதாகும். **பெரும் பறை** என் பது ஆடல் மகளிர் ஆடும் போது அடிக்கப் படும் பறை. இது முழவுடன் சேர்த்து ஒலிக்கப்படும். இதனை "உழவர் களிதூங்க, முழவு பிணை முரல ஆடலறியா அரிவை போலவும்" எனவரும் பரிபாடல் விளக்கும். ஈண்டுப் "பிணை" என்பது பெரும் பறை யைக் குறிக்கும். **கிணைப்பறை** என்பது வீரர்கள் போர்புரியுங்கால் போர்க்களத்தே முழக்கப்படுவதொன்றாகும். இதனை "வெம் போர் மள்ளர் தென்கிணை கறங்க" என்ற பதிற்றுப்பத்து அடி தெளிவுறுத்தும். அன் றியும், கூத்தரும் பொருநரும் ஆகிய பரிசில் வாழ்க்கையர் தமது இசைக் கருவியாகவும் இதனைப் பயன்படுத்தினர். இது "தென் கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி, இருங்கலை ஓர்ப்ப இசைஇ" என்ற புறநானூற்று அடி களால் விளங்கும். இப்பறை **தடாரி** என வும் வழங்கப்பெறும். கணப்பறை என்பது புற முழவு வகையைச் சார்ந்தது. இது அவ்வப்போது பொழுதினைப் புலப்படுத்த ஒலிக்கப்படும். இப்பறை அறைபவன் பறையன் எனப்படுவான்.

துடியென்பது வீர மறவர் தாம் உள்ளக் கிளர்ச்சி பெற வேண்டி முழக்கும் ஒரு பறையாகும். பகையரசரது நிரை கவர விரும்பும் வீரர் தமக்கு வெற்றி விளையுமாறு கொற்றவையைப் பரவுங்கால் துடி முழக்கி ஆர்ப்பரிப்பர். இதனை,

> "மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
> கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்,

> "நித்திலஞ்செய் பட்டமும் நெற்றித் திலதமும்
> ஒத்திலங்க மெய்பூசி யோர்ந்துடுத்-தத்தந்
> துடியரோ டுர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
> குடிநிரை பாராட்டக் கொண்டு."

என்ற மேற்கோள் வெண்பாவாலும் அறிய லாம்.

முரசு என்பது தோற் கருவிகளின் அர சனைத்தகும். இஃது அரசர்க்கே உரியது. இவ்வுண்மையை,

> "படையுங் கொடியுங் குடையு முரசு
> நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
> தாரு முடியு நேர்வன பிறவுந்
> தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய"

என்ற தொல்காப்பிய நூற்பா காட்டு கின்றது.

முரசு, படை முரசு, கொடை முரசு, மண முரசு எனப்படும். **படை முரசு** படை யெழுச்சியின் போது கொட்டப்படும். **கொடை முரசு** அரசனது கொடைவளத்தை அறிவிக்க அறையப்படும். **மண முரசு** அர சனது குடும்பத்தில் நிகழும் மண வினையின் போது அடிக்கப்படும். இவையன்றித் தெய்வ நிகழ்ச்சிகளுக்கும் முரசு அறையப் பட்டது. தமிழகத்தில் பல்வேறு தெய்வங் கட்கும் எழுப்பப்பட்ட கோயில்களில் முரசு இடம் பெற்றிருந்தது. தெய்வங்களுக்கு விழா நிகழ்த்துங்கால் அதனை மக்களுக்கு அறிவிக்க முதுகுடிப் பிறந்த வள்ளுவர் ஒருவர் யானைமீது இவர்ந்து முரசறைதல் வழக்கம். அன்றியும் மக்கள் தெய்வங் களுக்குப் பலியிடும் பொழுதும் முரசினை முழக்குதல் மரபு. இதனை **வீர முரசு** என் பர். இது "மயிற்கண் முரசொடு வான்பலி

யூட்டி'' என்ற சிலப்பதிகார அடிகளால் அறியப்படும்.

முழவு என்பது இக்காலத்தில் மத்தளம் எனப்படும். இது இடை பருத்து, இருதலை யும் சிறுத்து, உள்வாங்கி, வாரினால் இறுகக் கட்டப்பட்டிருக்கும். இதற்கு இரண்டு கண்கள் உண்டு; இனிய ஓசை தருவது. இஃது இக்காலத்தில் இசை, நாடக அரங்கு களில் பெரிதும் பயன்படுத்தப் பெறுகின் றது. பறை, துடி, முரசு முதலிய பேரொலி தரும் கருவிகளைச் சோதனை செய்த பின்னர், இன்னிசை தருகின்ற முழவு இறுதியில் கண்டுபிடித்திருக்கப்பட வேண்டும். இது பலா அல்லது தேக்கில் குடையப்படுவது.

தண்ணுமை என்பது முழவைக் காட்டி லும் குளிர்ந்த இனிய ஓசையைத் தருவது. இது தோற்கருவிகள் எல்லாவற்றிலும் முதன்மையானது; பண்ணமைதி கொண்ட கருவி. அதனால் இதனை இளங்கோவடிகள், அரங்கேற்று காதையில் தண்ணுமை ஆசிரி யர் அமைதி கூறுமுகத்தால் வியந்து கூறு கிறார்.

துளைக்கருவிகள்

துளைக்கருவிகளுள் தொன்மை வாய்ந்தது **குழல்**. இது வங்கியம் எனவும்படும். இது மூங்கில், வெண்கலம், கருங்காலி முதலிய வற்றில் செய்யப்படும். ஆயின் மூங்கிற் குழலே சிறந்தது. இது பொதுவாக இரு பது விரல் நீளமும் நான்கரை விரல் சுற்றள வும் உள்ளதாகச் செய்யப்படும். இதில் ஏழு துளைகள் இடப்படும்.

திருவள்ளுவர் இசை இனிமைக்கு எடுத் துக் காட்டாகக் குழலையே முதலில் அமைத் துள்ளார். ''குழலினிது யாழினிது'' என்ற தொடர் இதனை விளக்கும். குழலின் சிறப் பைப் பரிபாடல் ''ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன'' எனப் பாராட்டு கின்றது. இவ்வடியின்கண் ஏழு துளைகளை யும் ஐந்து துளைகளையும் உடைய குழல் முத லிடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. பண்டு போலவே இன்றும் இவ்விசைக் கருவி இசையரங்குகளில் பெருஞ்சிறப்புற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இக்காலத் தில் வழங்கும் **நாதசுரம்**, **மகிடி** (பாம்பாட்டி யின் இசைக்கருவி) முதலியனவும் துளைக் கருவிகளே.

நரம்புக் கருவிகள்

நரம்புக் கருவிகளுள் **யாழ்** தலைசிறந்தது. இது **பேரியாழ்**, **மகரயாழ்**, **செங்கோட்டி யாழ்**, **சகோடயாழ்** என நால்வகைப்படும். இனி யாழில் அமைந்துள்ள நரம்பு எண்ணிக் கையின் சிறுமை பெருமை நோக்கிச் **சீறி யாழ்**, **பேரியாழ்** என விருவகையாகப் பகுப் பாரும் உளர். இவை தவிர, **வில்யாழ்** என்பதும் பண்டைக் காலத்தில் இருந்த தாகத் தெரிகின்றது. பெரும்பாணாற்றுப் படையுள் இவ்யாழ் குறிக்கப்படுதலே இதற் குச் சான்று. சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் யாழைப் பற்றிய குறிப்புக்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. பண்டைக்கால மக் களின் வாழ்க்கையில் யாழ் பேரிடம் பெற்றி ருந்தது. இதன் பெருமையை விதந்து கூறும் விபுலானந்தர், ''முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலுமிருந்த யாழ்க் கருவியானது, இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும் நாடகமகள் கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது. ஆளுடைய பிள்ளையாருடைய காலத்திலே தெய்வமீந்த பொற்பலகை மீதேறி அன்பர் உள்ளத்தை உருக்கிய அருட்கருவியாயிற்று. கொங்கு வேளும் திருத்தக்க தேவரும் நூல் எழுதிய காலத் திலே, அரசிளங் குமரிகள் கையில் ஏறி அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று'' என்றனர்.

இனி, இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ் விசைக் கருவி இன்று இறந்து போயினமை பற்றி இரங்கியழுங்கும் அப்பெருமகனார், ''சரித்திரகால எல்லைக்கு எட்டாத காலத் திலே வில்யாழ் எனப் பெயரிய குழவியாய் உதித்து, மழலைச் சொற்பேசி, இடையர்,


இடைச்சியரை மகிழ்வித்துச் சிறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப் பாணனெடும், பாடினியோடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற்கூறி, பின்பு பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்பைப் பருவம் எய்திப் பெரும் பாணரோடு சென்று, குறுநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப் புலவரும், கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரைபகர்ந்து, அதன்பின் மங்கைப் பருவம் எய்தி அப்பருவத்திற்கேற்பப் புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி, மடந்தைப் பருவம் வந்து எய்துதலும் திருநீலகண்டப் பெரும் பாணரோடும் மதங்க சூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம்வந்து, தெய்வ இசையினூலே அன்பர் உள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் விரகரால் பாராட்டப்பட்டு, அரிவைப்பருவம் வந்து எய்துதலும் அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி அவர்க்கேற்ற தலைவரை அவர் பாற் சேர்த்திச் சீரும் சிறப்பும் எய்தி நின்ற யாழ் என்னும் மென்மொழி நங்கை இருந்த இடம் தெரியாது மறைந்து போயினள்'' எனக் கூறியுள்ளார்.

இனிச் சங்க நூல்களின் துணைகொண்டு யாழின் உறுப்புக்களைப் பற்றிச் சில கூறுவோம். பத்துப்பாட்டைச் சார்ந்த பொருநராற்றுப்படை ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் யாழின் பல்வேறு உறுப்புக்களைப் பற்றிப் பின்வரும் விளக்கம் தந்துள்ளார்: ''மான் குளம்பு அழுத்திய இடத்தை யொத்த இரண்டருகும் தாழ்ந்து நடு உயர்ந்த **பத்தலினையும்,** விளக்கினது எரிகின்ற நிறத்தை உடைய விசித்துப் போர்த்தலுற்ற தோல் இளஞ்சூலும் செந்நிறமும் உடையோளது அழகிய வயிற்றின் மயிர் ஒழுங்கு போல இரண்டு தலையும் கூடித்தைத்த மரத்தை மூடிய **போர்வையினையும்,** நண்டின் கண்ணைக் கண்டால் ஒத்த முடுக்குதல் அமைந்த **ஆணியினையும்,** எட்டாம் பிறை வடிவை உடைத்தாய் உள்நாக்கு இல்லாத வறிய **வாயினையும்,** பாம்பு தலையெடுத்தால் ஒத்த ஒங்கிய கரிய **தண்டினையும்,** கரிய நிறத்தை உடையோளுடைய முன்கைத் தொடியை ஒக்கும் **வார்க்கட்டினையும்,** தினையரிசியில் குத்தலரிசியை யொத்த விரலால் அசைக்கும் **நரம்பின் தொடர்ச்சியினையும்** மணமகளது கோலத்தை யொத்த **காட்சியினையும்** உடைய யாழ்''. இவ்வாறு யாழின் உறுப்புக்கள் பலவற்றையும் இயற்கைப் பொருட்களோடு பொருத்திக் காட்டி இருப்பது இன்பம் தருவதாகும். இங்ஙனமே பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, மலைபடுகடாம் ஆகிய பாட்டுக்களும் யாழின் உறுப்புக்களை விரித்துள்ளன.

யாழைப்பற்றித் தமிழ் நூல்களில் கூறப்படும் பல்வேறு செய்திகளையும் ஒருங்கு சேர்த்து ஆராய்ந்து இறந்துபோன யாழைச் சிறந்த முறையில் தமது மதிநுட்பத்தால் மீண்டும் செய்து காட்டி யாழ்நூல் எனப் பெயரிய ஆராய்ச்சி நூலினை எழுதியருளிய காலஞ்சென்ற விபுலானந்த அடிகளாரின் தமிழ்க்கலைத் தொண்டினை என்னென்பேன்! அப்பெரியாரை இதுகாலை நினைத்தலே அவர்க்குத் தமிழகம் காட்டும் கைம்மாறு கும்.

இறுதியாகக் கஞ்சக் கருவிகளைப் பற்றிச் சிறிது காண்பாம். கஞ்சக் கருவி என்பது ஒன்றோடொன்று மோதுறுதலால் இசை யெழுப்பும் கருவியாகும் என்பது கண்டோம். இக்காலத்தில் வழங்கும் தாளம், சாலரா, சப்பளாக் கட்டை முதலியன இவ் வகையைச் சார்ந்தவை. இதுகாறும் இசையின் தன்மையையும், இசைக்கருவிகளின் சிறப்புக்களையும் ஒருவாறு கண்டோம். இங்குக் கூறப்படாத இசைக் கருவிகள் பல உள. விரிப்பிற் பெருகு மென்றஞ்சி அவை விடுக்கப்பட்டன. வாழ்க தமிழிசை! வளர்க தமிழிசைக் கருவிகள்!

———



தமிழ் நாட்டில் ஓவியக்கலை

கலைப்புலவர் க. நவரத்தினம், யாழ்ப்பாணம்

★

தமிழ் மக்களின் நாகரிகப் பண்புகள் பழமையும் பெருமையும் வாய்ந்தன வென்பது இன்று ஆராய்ச்சியாளர்களால் அங்கீகரிக்கப்படும் முடிபுகளில் ஒன்றாகும். தமிழ் நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் இசை, நடனம், சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளை ஆர்வத்துடன் வளர்த்து வந்தனர். தமிழ் நாட்டு முடியுடை வேந்தர்களும் மக்களும் ஓவியக் கலையைப் பெருமையுடன் வளர்த்து வந்தார்கள் என்பதற்குப் போதிய சான்றுகளைத் தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் நாட்டுப் பழைய கோயில்களிலும் காணலாம்.

பல்லவர்களாலும் சோழர்களாலும் கட்டப்பட்ட கோயில்களில் அக்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. பல்லவர்களுக்கு முன் தமிழ் நாட்டில் விளங்கியிருந்த ஓவியங்கள் அழிந்தொழிந்து போயின. பல்லவர்களுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஓவியக்கலை மிகவும் சிறந்து விளங்கிய தென்பதை நாம் சங்க இலக்கியங்களின் மூலம் அறிகிறோம். ஆயின் சங்க இலக்கியங்களைக் கற்கும் வசதி கிடையாத மேனாட்டு ஆராய்ச்சியாளர்களிற் பலர் தமிழ் நாட்டு ஓவிய வளர்ச்சி பல்லவர் காலத்திலிருந்தே ஆரம்பமாகின்றதென முடிவு செய்கின்றார்கள். பழந்தமிழ் நாட்டு ஓவியச்சாலைகள் சுடுமண்ணால் அமைக்கப்பட்டு இருந்தமையால் அவை யாவும் இன்று அழிந்தொழிந்தன. மலைக்குகைகளிலும் கல்லால் அமைக்கப்பட்ட ஆலயங்களிலும் வரையப்பட்ட ஓவியங்களே தமிழ் நாட்டில் இன்றும் காணப்படுகின்றன. இவ்வோவியங்களைக் கொண்டும் தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் குறிப்புகளைக் கொண்டும் நாம் ஒருவாறு தமிழ் நாட்டு ஓவிய வளர்ச்சியினை அறிதல் சாலும்.

சங்க காலம்

இறைவனுக்கு ஆலயங்கள் அமைத்து வழிபடுதல் தமிழர்களது பழைய வழிபாட்டு முறைகளிலொன்று. பழந்தமிழ் நாட்டில் கோயில் வழிபாடு சமயசாதனங்களுள் ஒன்றாக விளங்கிய தென்பதற்குரிய சான்றுகள் புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிற் காணப்படுகின்றன. அக்காலக் கோயில்கள் யாவும் சுடுமண்ணால் அமைக்கப்பட்டமையால் அக்கோயில்களில் வைக்கப்பட்ட திருவடிவங்களும் சுதையினால் செய்யப்பெற்று வர்ணங்கள் தீட்டப்பட்டனவாக விளங்கின. கோயில் வாயில்களிலும் மனை வாயில்களிலும் அமைக்கப்பெற்ற கோபுரங்களில் வர்ணந் தீட்டப்பெற்ற உருவங்கள் காணப்பட்டனவென்பது,

> 'வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
> கண்கவர் ஓவியம்'
>
> (மணி : மலர்வனம் : 130-31)

என வரும் மணிமேகலை அடிகளால் அறியக் கிடக்கின்றது.

பண்டைத் தமிழர் சிறந்த ஓவியங்களை எழுதுவதில் திறமையடைந்திருந்தார்களென்பதற்கும், ஓவிய நூல்கள் நாட்டில் வழக்கிலிருந்தனவென்பதற்கும் மணிமேகலை

யிலும் சிலப்பதிகாரத்திலும் பல சான்றுகள் உண்டு.

'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்'
(மணி : ஊரலருரை : 30-31)

எனவும்,

'மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்
வரந்தர எழுதிய ஓவிய மாக்களும்'
(மணி : கச்சிமா : 37-38)

எனவும் மணிமேகலையில் வருவதிலிருந்து அக்காலத்திலும் தமிழ் நாட்டில் நாடகமகளிர் தமது நாட்டியப் பயிற்சிக்காக ஓவிய நூலையும் கற்று வந்தனர் என்பதும், சிறந்த சித்திரங்களை எழுதவல்ல ஓவியப் புலவர்கள் நாட்டில் இருந்தார்களென்பதும் அறியக் கிடக்கின்றன. நாட்டியத்திற்கு இன்றியமையாச் சாதனங்களாக விளங்கும் அபிநயங்களும் விரல் முத்திரைகளும் ஓவிய உருவங்களிலும் அமைக்கப்பட்டு வந்தமையால் அக்கால நாடக மகளிர் ஓவிய நூலையும் கற்று வந்தனர்.

கவர்ச்சியான நிறப்படங்களை அக்காலத்தில் கைதேர்ந்த ஓவியப்புலவர்கள் அமைத்து வந்தார்கள். சிலப்பதிகாரம், அழற்படு காதையில் பாண்டியன் நெடுஞ்செழியன் சிங்காசனத்தில் மடிந்ததை அறிந்த புரோகிதன், சோதிடன், அறக்களத் தந்தணர், மந்திரக் கணக்கர், ஏவலாளர் முதலியோர் திகைத்துப் பேச்சற்று நின்றனர். இதைக் கூறவந்த இளங்கோவடிகள், அவர்கள் நிலையைச் சித்திரத்திரளுக்கு ஒப்பிடுகின்றார். 'சித்திரப் படங்களில் எழுதப்பட்டுள்ள மக்கள் எவ்விதம் அசைவற்றுப் பேச்சற்றுக் காட்சியளிக்கின்றனரோ, அவ்விதமே அரசனைச் சேர்ந்தோர் திகைத்து நின்றார்கள்', என அவர் கூறுகின்றார். 'ஓவியச் சுற்றத்துரை யவிந்திருப்ப' என்கின்றார் ஆசிரியர். அதன் பொருள் ஓவியத்திற் காணப்படும் மக்கள் கூட்டத்தை யொப்ப என்பதாம். இதிலிருந்து இளங்கோவடிகள் காலத்தில் தமிழ் நாட்டில் மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் இருந்தனவென்பது பெறப்படும். அக்காலத்தில் நிறம் தீட்டப்பட்ட உருவப் படங்களும் நாட்டிலிருந்தன.

'தெய்வங் காட்டும் திப்பிய வோவியக்
கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்'

என்பது மணிமேகலை சிறை செய் காதையில் வரும் அடிகளாகும். இவ்வடிகள் தருமதத்தனதும் விசாகையினதும் வனப்பை வருணிப்பன. அவர்களது உடல் வனப்பு கைதேர்ந்த புலவர்களால் அமைக்கப்பட்ட ஓவியங்களை ஒத்ததாக விருந்ததென வருணிக்கப்படுவதிலிருந்து அக்காலத்தில் மக்களின் உருவங்களை அழகான ஓவியங்களில் அமைத்து வந்தனர் என்பது அறியக்கிடக்கின்றது.

மக்களின் பிரதிமைகளை மாத்திரமன்றிச் சிறந்த இயற்கைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களில் அமைத்தனர்.

'வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படம்போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய யுவவனம்'

என்பது மணிமேகலை மலர் வனம் புக்க காதையில் வரும் அடிகளாகும். கைச்சாதுரியமும், ஆற்றலும் வாய்ந்த ஓவியப் புலவர்கள் இயற்றிய சித்திரப் படம்போல மலர் வனம் காட்சியளித்ததெனக் கூறப்பட்டுள்ளது. எனவே, இயற்கையழகையும், அமைப்பையும் உள்ளவாறே வர்ணம் தீட்டி எழுத வல்ல ஓவியப் புலவர்கள் அக்காலத்தில் இருந்தார்களென்பது வெளிப்படை.


பண்டைத் தமிழ் நாட்டில் வர்ணங்களைக் கொண்டெழுதாது வரிகளால் எழுதும் ஓவியங்களும் காணப்பட்டன. இத்தகைய சித்திரங்களை இக்காலத்தில் வரிவடிவோவியங்கள் (Line Drawing) எனக் கூறுவார்கள்.

'புனையா வோவியங் கடுப்பப் புனைவில்'

என்று நெடுநல்வாடையிலும்,

'புனையா வோவியம் புறம்போந் தன்ன'

என்று மணிமேகலையிலும் வருவதிலிருந்து ஆசிரியர் சீத்தலைச்சாத்தனர் காலத்திலும்



எமது


வாழ்த்துகள்!

RISING SUN BRAND

சூரியன் மார்க்கு

உயர்ந்த ரக **மைதா** (கோதுமை மாவு)

சூஜி (ரவை) - **ஆட்டா** மாவு



தயாரிப்பவர்கள் :

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்,

இந்தியாவில் முதன்மையான நியூமாடிக் மில்

மானேஜிங் ஏஜண்டுகள்

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிடெட்

221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-1

போன்: 4165 தபால் பெட்டி 1558 தந்தி: MATHOORAN

உங்களது தொடர்ந்த அன்பும் ஆதரவும் எங்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் தந்து எங்கள் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப் பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தூண்டியிருக்கின்றன என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

EP

அதற்கு முன்பும் தமிழ் நாட்டில் வரிவடி வோவியங்களை எழுதும் வழக்கம் இருந்த தென்பது அறியக்கிடக்கின்றது.

சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதை யில், மாதவி நாட்டியமாடிய அரங்கின் மேனிலத்தே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்பட்ட நால் வகை வர்ணப் பூதங்களை எழுதி, யாவரும் புகழ்ந்து வணங்கவைக்கப்பட்டிருந்ததென் பதும், அவ்வரங்கு சித்திர விதானத்தை யுடையதாய் விளங்கிய தென்பதும்,

'தோற்றிய வரங்கின் றெழுதன ரேத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்து'

என்றும்,

'ஓவிய விதானத் துரைபெறு நித்திலத்து'

என்றும் வரும் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை அடிகளால் அறியக்கிடக்கின்றது.

கடலாடு காதையில் மாதவி புன்னை நிழ லில் அழுக்கற்ற மணல் பரந்த நிலத்தே, சித்திரத் திரையை வளைத்து மேற்கட்டுங் கட்டி இடப்பட்ட வெண்கால் அமளிமிசை, கோவலனுடன் சேரவிருந்து யாழை வாசித் தாள் என்பது,

'புன்னை நீழற் புதுமணற் பரப்பில்
ஓவிய வெழினி சூழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கா லமளிமிசை'

என வரும் சிலப்பதிகார அடிகளால் அறியப் படும். கோவலனும் மாதவியும் இருந்த கட் டிலில் விதானத்திலும் பக்கங்களிலுமுள்ள திரைகளில் ஓவியங்கள் எழுதப்பட்டிருந் தனவென்பது நாம் இங்குக் கவனிக்கவேண் டிய முடிபாகும்.

பண்டைத் தமிழ் நாட்டுக் கோவில்களி லும், தவச்சாலைகளிலும் ஓவியங்கள் எழு தப்பட்டிருந்தன. திருப்பரங்குன்றத்து மால் மருகனது மாடத்தின் பக்கத்து இந்திரன் கௌதம முனிவனின் கோபத்துக்காளாகிக் கல்லுருவமாகிய நிகழ்ச்சியும் வேறு பல வரலாறுகளும் சித்திரிக்கப்பட்ட மண்டபம் ஒன்று இருந்ததென்பது,

'இந்திரன் பூசையினன் அகலிகையிவன்
சென்ற கௌதமன் சினவுறுக் கல்லுரு
வொன்றிய படியிதன் றுரை
செய்வோருமின்ன
பலபலவெழுத்து நீலை மண்டபம்
துன்னுனர் சுட்டவும் சுட்டறிவுறுத்தவும்'

என வரும் பரிபாடல் அடிகளால் அறியக் கிடக்கின்றது.

'தேரோட்டத்துகள் கெழுமி
நீருடிய களிறுபோல
வேறுபட்ட வினையோ வந்து
வெண்கோயில் மாகூட்டும்'

எனப்" பட்டினப்பாலை "யில் கூறப்பட்டுள் ளது. இதன் பொருள் பல தேர்களும் ஓடு கையினால் துளியாய்ப் பொருத்தி வேறு பட்ட தொழில்களையுடைய சித்திரங்களை யுடைய வெள்ளிய கோயில்களின் சுவர்களை, புழுதியை மேலே பூசிக்கொண்ட யானை யைப்போல அழுக்கேறப் பண்ணியதென்ப தாம். இதிலிருந்து அக்காலக் கோயில்களின் சுவர்களில் வேறுபட்ட தொழில்களையுடைய ஓவியங்கள் எழுதப்பட்டனவென்பது அறி யற்பாலதாம்.

பண்டைத் தமிழ் நாட்டில் சித்திரச்சாலை களிருந்தனவென்பதற்கு,

'வித்தக வினைஞர் புத்தியிற் குயிற்றிய
சித்திரச் சாலை'

என வரும் பெருங்காதை மகத காண்டத்து அடிகள் சான்றாகும். வஞ்சிமா நகரத்தி லிருந்த பௌத்த தவச் சாலைகளில் ஓவியங் கள் எழுதப்பட்டிருந்தனவென்பதை,

'சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்'

எனவரும் மணிமேகலை காஞ்சிமா நகர் புக்க காதை அடிகளால் அறியலாம். வஞ்சிமா நகரில், கோவலன் தந்தையாகிய மாசாத்து வான் தவமியற்றிய தவச் சாலையில் சித்திரங் கள் எழுதப் பெற்றிருந்தனவென்று ஆசிரி யர் சாத்தனார் கூறுகின்றார். அஜந்தா மலை யின் கண்ணேயுள்ள குகைகள் அக்காலப் பௌத்த சந்நியாசிகளின் தவச் சாலைகளாக

விளங்கின. அக்குகைகளில் புத்த ஜாதகக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன. அஜந்தா ஓவியங்களைப் போன்ற பௌத்த சமய சம்பந்தமான ஓவியங்கள் வஞ்சிமா நகரிலிருந்த பௌத்த பள்ளிகளில் அக்காலத்தில் வரையப்பெற்றிருந்தன. எனவே கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வஞ்சி காஞ்சி போன்ற நகரங்களில் உள்ள பௌத்த தவச் சாலைகளில் சிறந்த ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தனவென்றும், அஜந்தா ஓவியங்களுக்கு முற்பட்ட ஓவியங்கள் தமிழ் நாட்டுத் தவச் சாலைகளிலிருந்தனவென்றும் நாம் ஐயமின்றிக் கூறலாம்.

இதுகாறும் நாம் கூறியவற்றிலிருந்து பல்லவர்களுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஓவியக் கலை மிகவும் திறமையுடனும் ஆர்வத்துடனும் வளர்க்கப்பட்டதென்பதும், சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் நாட்டில் ஓவியங்கள் வரையப்பெற்ற சித்திரச் சாலைகள் இருந்தனவென்பதும், கோவில் மண்டபங்களிலும், சுவர்களிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தனவென்பதும், நாட்டிய அரங்குகளில் சித்திரங்கள் எழுதப்பெற்ற திரைகள் அமைக்கப்பட்டனவென்பதும், அரசர்களும் செல்வர்களும் உபயோகித்த கட்டில்களில் சித்திரங்கள் எழுதப்பட்ட விதானங்களும் திரைகளும் கட்டப்பட்டிருந்தனவென்பதும் நன்கு அறியப்படும். நாட்டில் அழகு வாய்ந்த பிரதிமா ஓவியங்களும் இயற்கை ஓவியப் படங்களும் இருந்தனவென்பதற்கும் சங்க நூல்களிற் சான்றுகள் உள. எனவே, தமிழ் நாட்டிற் பிற்காலத்தில் தோற்றிய ஓவியங்கள் யாவும் பண்டை ஓவியங்களைப் பின்பற்றி எழுந்தனவாதல் வேண்டுமெனக் கூறுதல் மிகையாகாது. தமிழ்ப் புலவர்கள் தாங்கள் விளக்க விரும்பிய பொருள்களுக்கு உவமைகளை ஓவியங்களிலிருந்து எடுத்து ஆண்டிருப்பதை தமிழ்ச் சங்க இலக்கியங்களிற் பழகியவர்கள் நன்கு அறிவார்கள்.

பல்லவர் காலம்

சங்க காலத்திற்குப் பின் தமிழ்க் கலைகளைப் பெருமையுடன் வளர்த்தவர்கள் பல்லவ மன்னர்களேயாவர். இத்துறையில் தலை சிறந்து விளங்கியவர்கள் மகேந்திரன், மாமல்லன், இராஜசிம்மன் என்போராவர். மகேந்திரன் இசை, ஓவியம், காவியம் ஆகிய துறைகளில் நூல்கள் இயற்றினன் என அறியப்படுகின்றது. மகேந்திரனது விருதுப் பெயர்களில் ஒன்று 'சித்திரகார புலி' என்பதாம். அவன் 'தக்ஷண சித்திரம்' என்னும் விரிந்த நூலை எழுதினன் என்பது மாமண்டூர்க் கல்வெட்டில் 'வ்ருத்திம் தக்ஷண சித்திராக்யம்' என்று காணப்படும் பகுதியால் தெரிகிறது. மகேந்திரவர்மன் காலத்து ஓவியங்களின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக இன்று நாட்டில் காணப்படுவது சித்தன்னவாசல் குகை ஓவியங்களேயாகும். சித்தன்ன வாசல் குகைக் கோயில் முக மண்டபமானது ஒரு சிறு தாழ்வாரத்தையும் அதற்குப் பின்னுல் சிறு கருப்பக் கிருகத்தையும் கொண்டதாய் விளங்குகின்றது. கோயிலின்உட்புறம்முழுவதும்ஒரு காலத்தில் நிறம் தீட்டப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. முன்புறத் தூண்கள் இரண்டிலும் இரண்டு நடன மாதர்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றார்கள். வலப்புறத் தூணில் உட்புறத்தில் ஓர் அரசனதும், அவன் தேவியினதும் தலைகள் தெரிகின்றன. கழுத்தில் மணிமாலைகளும் காதில் குண்டலங்களும் தலையில் மகுடமும் அணிந்து நிற்கும் உருவம் அழகுடன் விளங்குகின்றது. இவ்வுருவம் மாமல்லபுரத்து வராகப் பெருமாள் கோயிலிலுள்ள சிற்ப வடிவத்தைப் பெரிதும் ஒத்திருப்பதால் இது மகேந்திரவர்மனின் வடிவமென அனுமானிக்கப்படுகின்றது.

தென் இந்தியாவில் புகழ்பெற்ற காஞ்சி கைலாயநாதர் ஆலயத்தைக் கட்டியவன் இராசசிம்மன் என்னும் பல்லவ அரசனுவான். கைலாசநாதகோவிற் சுவர்களில் அவன் காலத்து ஓவியங்கள் காணப்படுகின்

றன. இவ்வோவியங்களை முதலிற் கண்டவர் பிரான்சு தேசத்து அறிஞரும், தென் இந்திய சரித்திர ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவருமான பேராசிரியர் துபரேல் என்பவராவர். கைலாசநாதர் கோவிலில் காணப்படும் ஓவியங்கள் ஐந்து தலைகள் மாத்திரமே. அவை யாவும் சித்தன்ன வாசல் ஓவியங்களைப் போன்ற கலை வனப்பும் வேலைப்பாடும் உடையனவாகவே காணப் படுகின்றன. இவ்வோவியங்களின் வரி அமைப்பும் நிறங்களின் பிரகாசமும் மெச்சத் தக்கனவேயாகும். வடிவங்கள் ஆண் களின் தலைகளாயிருப்பினும் அழகும், மென்மையும், கௌரவமும் பொருந்தியன வாக அமைந்துள்ளன.

சோழ ஓவியங்கள்


பல்லவ காலத்து ஓவியங்களுக்குப் பின் தமிழ் நாட்டில் வரையப்பெற்ற ஓவியங்கள் சோழர் காலத்தனவே. தஞ்சை, பிருகதீஸ் வரர் கோயில் மூலத்தானத்தைச் சுற்றியுள்ள மண்டபத்தில் அரிய வர்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்தன. இவ்வோவியங் களின் ஒரு பகுதி சுந்தரமூர்த்தி நாயனாரது வாழ்க்கைச் சரித்திரத்தைக் குறிக்கின்றது. சுந்தரரது திருமணப் பந்தல், மணத்தைக் கண்டு களிக்கும் பலரின் கூட்டம் முதலியன காணப்படுகின்றன. சிவ பெருமான் கிழ வேதியர் உருவம் கொண்டு ஒரு கையில் குடையும், மற்றொரு கையில் ஓர் ஓலையும் தாங்கி நிற்கின்றார். சுந்தரர் வியப்புடன் அவரை நோக்குகின்றார். திரு மணச் சுற்றம் திகைக்கும் காட்சி அவர் களுக்கு எதிரே திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில் காட்சியளிக்கின்றது. ஒரு திரள் கூட்டம் அதனுள் செல்லுகின்றது.

கைலாயமலையில் சிவனார் புலித்தோலின் மீது உட்கார்ந்திருக்கும் தோற்றத்தை விளக் கும் ஓவியம் காணப்படுகின்றது. இதற்குச் சற்றுத் தூரத்தில் சுந்தரரும் சேரமானும் கைலைமலைக்குப் போகும் காட்சி வரையப் பெற்றிருக்கின்றது. சுந்தரர் வெள்ளை யானை யின் மீது கந்தர்வர்கள் புடைசூழவும் தேவ கானம் முழங்கவும் கைலாயம் செல்லுகின் றார். அவர்கள் ஓர் ஆற்றைக் கடப்பது போலிருக்கின்றது. கந்தர்வர்கள் இவ்விரு வர்கள் மீது பூமாரி சொரிகின்றார்கள். இது போன்ற வேறு சில ஓவியங்களும் காணப் படுகின்றன. விரிசடைக் கடவுள் திரிபுர மெரிக்கின்ற காட்சியும் எழுதப்பட்டுள்ளது. பிருகதீஸ்வரர் ஆலயத்திலுள்ள ஓவியங்கள் பல்லவ ஓவியங்களின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றன. சோழ ஓவியங்களைப் பற்றி திரு. சி. எஸ். ஸ்ரீனிவாசமூர்த்தி பின் வருமாறு கூறுகின்றார்: "சோழர்களின் ஓவியங்கள் பல்லவரின் ஓவியங்களின் தொடர்ச்சியாகும். இவற்றை வேறு வேறு கப் பிரித்துக் கூறக்கூடிய இயல்புகள் எவை யும் அவற்றினிடையே காணப்படவில்லை. நோக்கத்திலும் அமைப்பிலும் அவை வேறு பாடுகள் உடையவனல்ல." அதே ஆசிரி யர் தஞ்சைக் கோயில் ஓவியங்களின் சிறப் பைக் கூறுவதையும் இங்குக் காட்ட விரும்புகின்றோம்.

"அவ்வோவியங்களிற் காணப்படும் ஆபர ணங்களின் நுணுக்கமான வேலைப்பாட்டை நோக்குமிடத்து அவை ஒரு மந்திரவாதியின் செய்கையோவென நினைக்க வேண்டியிருக் கிறது. அங்கு அழிந்து கிடக்கும் வர்ணங்களை நோக்குமிடத்து அவ்வோவியங்கள் எழுதப் பட்ட காலத்தில் அவை எத்தகைய பிரகாசத் துடன் சோழ மன்னர்களுக்குக் காட்சியளித் திருக்குமென நாம் ஓரளவு அனுமானிக்கக் கூடியதாகவிருக்கின்றது." சோழர் காலத்து ஓவியங்கள் இலங்கையிலுள்ள பொலனறுவாவில் உள்ள திவங்க ஆலயத்திலும் காணப்படுகின்றன.

சேர ஓவியங்கள்


சோழ ஓவியங்களோடு ஒத்த காலத்து ஓவியங்கள், சேரநாட்டைச் சேர்ந்த திரு வஞ்சிக் களத்திற் காணப்படுகின்றன. வஞ்சி



சதரன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

கால அட்டவணைப்படி
இயங்கும்
பஸ்





இந்தியாவிலேயே
தலை சிறந்து
பணியாற்றி விளங்கும்
"கால அட்டவணை"
லாரி
எமது ஒன்றே

★

வருடந்தோறும்
1½ கோடி மைல்கள்
குறிப்பிட்ட நேரத்தில்
செல்வது எமது சிறப்பு

சதரன் ரோட்வேஸ்

பிரைவேட் லிமிடெட்

(ரஸ்தா போக்கு வரத்து எமது பணி)

மதுரை.

மாநகர் சேரர்களது தலை நகரென்பது சிலப் பதிகாரத்தால் அறியக்கிடக்கின்றது. வஞ்சி யில் சித்திரங்கள் வரையப்பெற்ற பௌத் தப் பள்ளிகள் இருந்தனவென்பதை மணி மேகலையால் அறிகின்றோம். திருவஞ்சிக் களத்திலுள்ள சிவாலய மண்டபத்தின் சுவர் களில் சிறந்த ஓவியங்கள் காணப்படுகின் றன. அவ்வோவியங்கள் பல்லவ சோழ ஓவியங்களின் வகுப்பில் வைத்து எண்ணத் தக்கவையாகக் காணப்படுகின்றன. அவ் வோவியங்களைப் பின்வருமாறு வருணிக் கின்றார் திரு. இராமச்சந்திரன்.

"அலங்காரமான முடியையும், உடை யையும் அணிந்திருந்தாலும் இரண்டாம் முறையாகவும் பிரியவேண்டுமே என்னும் துயரத்துடன் இருப்பதாகக் காட்சியளிக் கின்றார், இராமன். சீதை துக்கத்தோடு கூடிய புன்னகையுடன் இருக்கின்றாள். இலக்குமணன் எதிர்காலத்தில் நடக்கப் போவதென்னவோ என்று ஆழ்ந்த யோசனை யில் மூழ்கியபடி காட்சியளிக்கின்றார். இவை யாவும் ஒரு சிறிய 'இந்து சமய அஜந்தா 'வென மதிக்கப் போதுமான ஓவி யங்களென்பதைக் காண்பவர் எவரும் உணர்வார்கள்." இவ்வோவி ய ங் க ளி ன் காலம் பத்து அல்லது பதினொன்றும் நூற் றாண்டாதல் வேண்டுமென அனுமானிக்கப் படுகின்றது.

சேர, சோழ, பல்லவ மன்னர்களின் ஓவி யங்களைவிட இன்று தமிழ் நாட்டில் காணப் படும் ஓவியங்கள் நாயக்க மன்னர்களின் ஓவி யங்களேயாகும். மதுரை, ஸ்ரீரங்கம், இரா மேசுவரம் முதலிய இடங்களிற் காணப் படும் நாயக்கர் ஓவியங்கள் கலைச்சிறப்பு வாய்ந்தனவன்று. தமிழ் ஓவியக்கலை இம் மன்னர் காலத்திலும் அதற்குப் பின்னும் வளர்ச்சி குன்றி அழிந்தொழிந்து விட்ட தெனலாம்.

தமிழ் ஓவியக்கலை மறுபடியும் நாட்டில் வளர்ச்சியடையக்கூடிய விதத்தில் தமிழ் நிலையங்களும், தமிழ்த் தலைவர்களும் தொண் டாற்றுதல் வேண்டும். ஸ்ரீ அபேந்திரநாத தாகூர், ஸ்ரீ நந்திலால் போஸ் முதலிய ஓவி யப் புலவர்கள் வடநாட்டில் எவ்விதம் ஓவிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந் துள்ளார்களோ, அவ்விதமான தொண் டைத் தமிழ் ஓவியக்கலைக்கு ஆற்றுதற்குத் தமிழ் நாட்டிலுள்ள ஓவியப் புலவர்கள் முன்வருதல் வேண்டும். சங்க நூல்களி லும் பெரிய புராணம் முதலிய நூல்களி முள்ள நிகழ்ச்சிகளைத் தமிழ் ஓவிய இலக் கணங்களுக்கு அமைய வரையும் வழக்கம் நாட்டில் தோற்றுதல் வேண்டும். தமிழ் மக்களின் கலாசார வாழ்வில் ஓவியக்கலை தகுந்த இடத்தைப் பெறுதல் வேண்டும்.





சோழர் வரலாறு

டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L. Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை

★

முன்னுரை

இந்தியாவின் தென்கோடிப் பகுதி பண்டைக் காலத்தில் **தமிழகம்** எனப் பெயர் பெற்றது. தமிழகத்தில் சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று நாடுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஏற்பட்டிருந்தன. இன்றைய திருவாங்கூர்-கொச்சி நாடுகளும் மலையாள மாவட்டமும் **சேரநாடு** எனப் பெயர் பெற்றது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களைக் கொண்ட நிலப்பகுதி **சோழநாடு** எனப் பெயர் தாங்கியது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதி **பாண்டியநாடு** என வழங்கியது. சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் **கொங்குநாடு** எனப் பெயர் பெற்றது. திருக்கோவலூரும் அதனைச் சேர்ந்த நடு நாட்டுப் பகுதியும் **மலையமான்நாடு** எனவும், அதற்கு வடபால் அமைந்த பெருநிலப் பகுதி (நெல்லூர் வரையில்) **தொண்டை நாடு** எனவும் பெயர் பெற்றிருந்தன. தமிழகம் இங்ஙனம் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்த போதிலும் சேர, சோழ, பாண்டிய நாடுகளில்தான் முடிமன்னர் மூவர் இருந்து வந்தனர். பிற நாடுகளில் சிற்றரசர்களே இருந்து ஆட்சி புரிந்தனர். சிற்றரசர் ஆட்சி புரிந்த நாடுகள் சில காலங்களில் பேரரசர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தன; கொங்குநாடு சில காலங்களில் சேரர் கைப்பட்டிருந்தது; சில காலங்களில் சோழர் கைப்பட்டிருந்தது. அவ்வாறே மலையமான் நாடும் தொண்டை நாடும் சில காலங்களில் சோழர் கைப்பட்டிருந்தது; சில காலங்களில் பாண்டியர் கைப்பட்டிருந்தமையு முண்டு.

சோழர் வரலாற்றில் மூன்று காலங்கள்

சோழரைச் (1) சங்க காலச் சோழர் (கி. மு–கி. பி. 300), (2) இடைக்காலச் சோழர் (கி. பி. 300–900), (3) பிற்காலச் சோழர் (கி. பி. 900–1300) என மூன்று காலத்தவராகப் பிரிக்கலாம்.

சங்ககாலச் சோழர்

சங்க காலச் சோழர்க்குரிய பெயர்களுள் கிள்ளி, வளவன் என்பன சிறந்தவை. 'கிள்' என்பது தோண்டு, வெட்டு என்னும் பல பொருள்களைக் குறிக்கும். நிலத்தைத் தோண்டி வளம் செய்பவன் என்னும் பொருளில் 'கிள்ளி' என்பது வந்திருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. வள முடைய நாட்டவன் 'வளவன்' எனப் பெயர் பெறுதலும் உண்டு. சோழரது அரச இலச்சினை **புலி.** கீழ்வரும் மன்னர் சங்க காலச் சோழர் ஆவர்:—(1) சிபி, (2) முசுகுந்தன், (3) காந்தன் (4) தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், (5) செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, (6) மநுநீதிச் சோழன், (7) முதற்கரிகாலன் (8) இரண்டாம் கரிகாலன் (இமயம் வரை சென்றவன்), (9) நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், (10) கிள்ளி வளவன், (11) பெருநற்கிள்ளி, (12) கோப் பெருஞ் சோழன், (13) வேறு சோழமரபினர் சிலர், (14) நெடுமுடிக்கிள்ளி, இளங்கிள்ளி முதலியோர்.

இவருள் போரிலும் கொடைத்திறத்திலும் முத்தமிழ் வாணரைப் போற்றுவதிலும் தலை சிறந்தவன் **இரண்டாம் கரிகாலன்.** இவன் காலத்தில் வட பெண்ணையாறு வரை சோழப் பேரரசு பரவி இருந்தது. தெற்கே இலங்கை முடிய இவனது செல்வாக்குப் பெருகி இருந்தது. இவன் இமயம் வரை படையெடுத்து மீண்டான்; வட இந்தியாவில் இருந்த வச்சிர நாட்டு வேந்தன், அவந்தி நாட்டு அரசன், மகதநாட்டு மன்னன் இவர்களை முறியடித்தான்; இமயத்தில் புலிக் கொடி பொறித்தான். இவனது காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டுத் துறைமுக நகரமாக விளக்க முற்றிருந்தது. அத்துறை முகத்தில் அயல்நாட்டுக் கப்பல்கள் வந்து பண்டங்களை இறக்கியும், தமிழ்நாட்டுப் பண்டங்களை ஏற்றியும் சென்றன. துறை முகத்தில் சுங்கச்சாவடி இருந்தது. மலை நாட்டு மிளகும் பொன்னும் தென் கடலில் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் பிறந்த பவளமும், காழக (பர்மா) நாட்டுப் பொருள்களும், சீனம் முதலிய இடங்களிலிருந்து வந்த பனிநீர் முதலியனவும், இலங்கைப் பொருள்களும், மேலைட்டு இயந்திரப் பொறிகள், மது முதலியனவும் சோழநாட்டு இறக்கு மதிப் பொருள்களாக வந்து குவிந்தன. பல நாடுகளிலிருந்து வந்த பல்வேறு மொழிகளைப் பேசும் வணிகர் காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறி யிருந்தனர்.

சங்ககாலச் சோழருள் கரிகாலன் சிறந்திருந்த காரணத்தால் அவனைப் பின்வந்த சோழரும் புலவரும் பலபடப் பாராட்டினர்.


இடைக்காலச் சோழர் (கி. பி. 300—900)

ஏறத்தாழக் கி. பி. 300-க்குப் பிறகு தொண்டைநாடு பல்லவர் என்ற புதியவர் ஆட்சிக்கு உட்பட்டது. அவர்களாலும் அவர்க்கு முன்னேடிகளாக வந்த களப்பிரராலும் சோழர் ஆட்சி எல்லையில் சுருங்கியது. கி. பி. 300 முதல் கி. பி. 600 வரை கோச்செங்கணான், புகழ்ச் சோழர் போன்ற அரசர் இருந்து பகைவரை ஓரளவு வென்றனர். கோச் செங்கணான் கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சோழப் பேரரசனாவான். அவன் காலத்தில் சைவசமயம், சமண பௌத்த சமயங்களால் வலிகுன்றத் தொடங்கியது. அதனால் அப் பெருமகன் சைவத்தை வளர்க்கப் பல சிவன் கோவில்கள் கட்டினான்; வைணவரையும் ஆதரித்தான்; இவ் வறிவுடைய செயலால் சைவசமய குரவராலும், திருமங்கையாழ்வாராலும் பாராட்டப் பெற்றான். அவனுக்குப் பின் வந்த சோழர்கள் கும்பகோணத்தை அடுத்த பழையாறையைத் தலைநகராகக் கொண்டு மிகச்சிறிய நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். அவருள் மங்கையர்க்கரசியார் தந்தை, தமையன், சுந்தரர் காலத்தில் பாண்டியன் மருமகனான சோழன் என்பவர் குறிக்கத்தக்கவர்.

ஒரு சமயம் பல்லவர்க்கும் பிறிதொரு சமயம் பாண்டியர்க்கும் அடங்கி வாழ்ந்து வந்த இடைக்காலச் சோழர்கள், தங்கள் அரச செல்வாக்குச் சுருங்கிய போதிலும், சைவசமயப் பற்றுச் சுருங்காது வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் சைவத்திற்குச் சமணராலும் பௌத்தராலும் ஏற்பட்ட துன்பங்களை நீக்கிச் சைவத்தைப் பாதுகாத்த பெருமை சோழர்க்கே உரியது.

பிற்காலச் சோழர் (கி. பி. 900—1300)

கும்பகோணத்தை அடுத்த **திருப்புறம்பியம்** என்னுமிடத்தில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் கடும் போர் நடந்தது. அப் போரில் ஆதித்த சோழன் என்பவன் பல்லவர் சார்பில் நின்று பாண்டியனை முறியடித்தான். அந்த ஆதித்தனே பின்பு பல்லவனையும் வென்று, சங்ககாலக் கரிகாலனைப்போல, வட பெண்ணையாறு வரை சோழப் பேரரசை ஏற்படுத்தினான். இவன் மரபினரைக் பின்வரும் பட்டியலிற் காணலாம்:





என் அறை கோ-ஆப்டெக்ஸ்


அலங்கார துணிகளினால்
புது அழகை
பெற்றிருக்கிறது

கோ - ஆப்டெக்ஸ் அலங்கார துணிவகைகளினால் நீங்களும் உங்கள் இல்லத்தை வெகு அழகாக சோபிக்கும்படி செய்யலாம். பார்வையிலும், உபயோகத்திலும் "கோ - ஆப்டெக்ஸ்" சிறந்து விளங்கும். கோ - ஆப் டெக்ஸ் துணிகளின் கெட்டி சாயமும், பலவிதமான டிசைன்களும், நாணயமான லிலைகளும் அனைவரின் கவர்ச்சிக்குக் காரணம்.

சென்னை ராஜ்ய கைத்தறி
நெசவாளர் சங்கம் லிமிட்.,
சென்னை - 8

கோ-ஆப்டெக்ஸ்
அலங்கார
துணிகள்

MH.11


விசயாலயன் (கி. பி. 850—871)
ஆதித்த சோழன் I (,, 871—907)
பராந்தகன் I (,, 907—953)
இராசாதித்தன்
கண்டராதித்தன் (949—957)
அரிஞ்சயன் (956—957)
உத்தம சோழன் என்ற மதுராந்தகன் (973—985)
சுந்தர சோழன் என்ற பராந்தகன் II (956—973)
ஆதித்தன் II என்ற பார்த்திவேந்திர கரிகாலன் (956—969)
இராசராசன் I (985—1014)
இராசேந்திரன் I (1012—1044)
இராசாதிராசன் I (1018—1054)
இராசேந்திரன் II (1052—1064)
வீரராசேந்திரன் (1063—1069)
இராசமகேந்திரன் (1060—1063)
அதிராசேந்திரன் (1068—1070)
சாளுக்கிய சோழனை குலோத்துங்கன் I (1070—1120)
விக்கிரம சோழன் (1120—1135)
குலோத்துங்கன் II (1133—1150)
இராசராசன் II (1146—1173)
இராசாதிராசன் II (1163—1179)
குலோத்துங்கன் III (1178—1218)
இராசராசன் III (1216—1256)
இராசேந்திரன் III (1246—1280)

இச் சோழப் பேரரசருள் முதல் இராச ராசனே சிறந்த அரசியல் பேரறிஞன்; சோழப் பேரரசை நன்கு அமைத்து நிலை பெறச் செய்த பெருமை இவனையே சாரும். இவன் உண்டாக்கிய பேரரசு ஏறக்குறைய 2 நூற்றாண்டுகள் நிலையுற்று இருந்தது. இவனது ஆட்சிச் செல்வாக்கு வடக்கே துங்கபத்திரைவரை பரவி இருந்தது. இவன் சிறந்த கடற்படையைக் கொண்டு இலங்கையையும் மாலத்தீவுகளையும் அடிப் படுத்தினன். இவனது தரைப்படை தென்னிந்தியாவில் இணையற்றது. கீழைச் சாளுக்கியருடன் மண உறவு கொண்டு, மேலைச் சாளுக்கியரின் வலிமையை ஒடுக்கிய பெருவீரன் இராசராசன். இவனது ஆட்சியில் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம், இசை, இலக்கியம் இன்ன பிறவும் நன்கு வளர்க்கப்பட்டன. இவன் காலத்திற்றான் சைவத் திருமுறைகள் நாடெங்கும் பரவின; சைவ சமய வெள்ளம் நாடெங்கும் பரந்து மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. சோழப் பேரரசை உண்டாக்கப் பெரும் படை திரட்டியவன் இராசராசனே ஆவன்; அப் படை இவன் நினைத்தன யாவும் தடையின்றிச் செய்து வந்தது பாராட்டற் பாலது. அரசியல் அமைப்பைத் திறம்பெற அமைத்தவனும் இராசராசனே ஆவன். நாகரிகம் மிகுந்த இக்கால அரசியல் அமைப்பிற்கும் இராசராசன் அரசியல் அமைப்பிற்கும் எள்ளளவும் வேறுபாடு இல்லை. இராசராசனுக்கு முன்பு இராட்டிரகூடர் படையெடுப்பால் துன்புற்ற சோழ நாடு இராசராசன் காலத்தில் கிருஷ்ணையாறுவரை பரவியது–மேற்கே அரபிக்கடல் வரை பரவியது – தெற்கே இலங்கை வரை பரவியது எனின், இராசராசன் போர்த்திறனே என்னெனப் புகழ்வது!

மெய்க் கீர்த்தி

இச்சோழற்கு முற்பட்ட பல்லவர், பாண்டியர் பட்டயங்களும் கல்வெட்டுகளும் பல கிடைத்துள்ளன. அவற்றில் அரச மரபு கூறப்பட்டிருக்கும். அந்தந்த அரசன் சிறப்புச் சிறிதளவே கூறப்பட்டிருக்கும்; முற்றும் கூறப்பட்டிராது; விளக்கமாகவும் குறிக்கப்பட்டிராது. இம்முறையை விசயாலயன் வழி வந்தவரும் பின்பற்றி வந்தனர். ஆனால், இராசராசன் இந்த முறையை அடியோடு மாற்றி விட்டான்; தனது ஆட்சியாண்டுகளில் முறையே நடைபெற்ற போர்ச் செயல்களை முறையே வெளிவந்த கல்வெட்டுகளில் முறைப்படி குறித்து வரலானன். சான்றாக ஒன்று கூறுவோம். இராசராசன் முதலில் காந்தளூர்ச்சாலையில் கலம் அறுத்தான். இந்த வெற்றியே இவன் கல்வெட்டுகளில் முதல் இடம் பெற்றது. இப்படியே ஒன்றன்பின் ஒன்றாக முறைப்படி குறிக்கப்பட்டன. இங்ஙனம் இப்பெரியோன் ஒழுங்கு பெறக் குறித்தவையே பிற்கால அரசரானும் பின்பற்றப்பட்டன. அக் குறிப்புகளே இன்று சோழர் வரலாற்றுக்கு உறுதுணை செய்கின்றன. பட்டயம் அல்லது கல்வெட்டுக்குத் தொடக்கமாக ஒரு தொடரை அழகாக அமைத்தவனும் இராசராசனே ஆவன். 'இஃது இவனது பட்டயம் அல்லது கல்வெட்டு' என்று எளிதில் கூறிவிடத் தக்கவாறு அத்தொடக்கம் இருக்கிறது. அது 'திருமகள் போல.....' என்பதாகும். இவனது வீர மகனை இராசேந்திரன் கல்வெட்டும் பட்டயமும் வேறு தொடக்கம் உடையவை. இங்ஙனமே பின் வந்தார் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் வேறு வேறு தொடக்கம் கொண்டவை. இத்தகைய ஒழுங்குமுறையை அமைத்த இப்பேரரசன் அறிவாற்றல்களை என்னெனப் பாராட்டுவது!

போர்ச் செயல்கள்

இப்பிற்காலச் சோழர்கள் வடமேற்கே மேலைச் சாளுக்கியருடன் ஓயாது பல போர்கள் செய்து வெற்றி கண்டவர்; பாண்டியர்களுடனும் இலங்கை அரசர்களுடனும் பல போர்கள் செய்து தங்கள் பேரரசைக் காத்து வந்தனர். முதல் இராசராசன் மக

னை முதலாம் இராசேந்திரன் தன் கடற் படையை ஏவிக் கிழக்கிந்தியத் தீவுகளிலும், மலேயா, இந்தோசீனம் முதலிய இடங்களிலும் சோழர் செல்வாக்கை மிகுதிப் படுத்தினன்; வடக்கே பெருஞ்சேனையை அனுப்பி, வட வேங்தர்களை முறியடித்துக் கங்கையாறு வரையில் தன் போர்த்திறனைக் காட்டித் தான் புதிதாக அமைத்த பெரு நகரத்தைத் தாய்மைப்படுத்தக் கங்கை நீரைக் கொண்டு வந்தான். அவன் ஏற்படுத்திய புதிய தலை நகரம் கங்கை நீர் கொண்டு தூய்மைப் படுத்தப்பட்டதால் **கங்கை கொண்ட சோழபுரம்** எனப் பெயர் பெற்றது. அங்கு அவனால் கட்டப்பட்ட கோவில் 'கங்கை கொண்ட சோழேச்சரம்' எனப்பட்டது. அங்கு வெட்டுவிக்கப்பெற்ற மிகப் பெரிய ஏரி 'சோழ கங்கம்' எனப்பெயர் பெற்றது. இன்றும் பல இடங்களில் 'கங்கை கொண்டான்' என்னும் பெயரால் ஊர்களும் மண்டபங்களும் வழங்கி வருதலுக்கு இப் பேரரசனே காரணன் என்பது அறியத்தகும்.

சோழர் வீழ்ச்சி

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் என்ற சோழ வேந்தர் காலத்தில் பாண்டியர் படையெடுப்பாலும், மைசூர் நாட்டை ஆண்டுவந்த ஹொய்சலர் படையெடுப்பாலும், சோழப் பேரரசுக்கு உட்பட்ட சிற்றரசர் ஆங்காங்கு விளைத்துவந்த குழப்பங்களாலும், முதலாம் இராசராசன் வலிமையுற அமைத்த சோழப் பேரரசு சிறிது சிறிதாக நிலை குலைந்து சிதறத் தொடங்கியது. சோழர்கள் பாண்டிய நாட்டில் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பாண்டியர்கள் சோழ நாட்டில் பழி தீர்த்துக்கொண்டனர். ஆங்காங்கு இருந்த அரண்மனைகள் தவிடு பொடியாயின. இறுதியில் சோழ நாடு சீர் குலைந்து விட்டது.

சிற்றரசர்கள்

சோழப் பெருநாட்டில் மலையமான்கள், சாம்புராயர், காடவராயர், வாணகோவரையர், அதியமான்கள், கங்கர், தெலுங்குச் சோழர் முதலியோர் சிற்றரசர்களாக இருந்தனர். இவர்கள் தங்கள் தங்கள் குறுநாடுகளை ஆண்டு வந்ததுடன் பேரரசனுக்குக் கப்பங் கட்டியும் படை உதவி செய்தும் வந்தனர்.

அரசியல்

இராம ஆட்சி அரசியலின் முதுகெலும்பாய் இருந்தது. சோழப் பெருநாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழப் பேரரசனுடைய மக்களும் நெருங்கிய உறவினரும் மண்டலத் தலைவராகப் பணியாற்றினர். புதியனவாக வெல்லப்பட்ட நாடுகளில் அமைதி காக்க **நிலைப் படைகள்** நிறுவப்பட்டன. விற்படை, வாட்படை, ஈட்டிப்படை எனப்பட்ட காலாட்படையும், குதிரைப்படை, யானைப் படை, கப்பற்படை முதலியனவும் சோழப் பெருநாட்டைக் காத்து வந்தன. சோழ வேந்தர் பட்டத்திற்குரிய தம் புதல்வர்க்கு உரிய பருவத்தில் இளவரசுப் பட்டம் கட்டி அவர்களை அரசியலிலும் போரிலும் பழக்கி வந்தனர். அமைச்சர், தானைத்தலைவர், குறுநில மன்னர், நாட்டுப் பெருமக்கள், அரசாங்க உயர் அலுவலர் முதலியோர் கொண்ட குழு 'உடன் கூட்டம்' எனப் பட்டது. இவ்வதிகாரிகளைக் கலந்தே அரசன் எதனையும் செய்வது வழக்கம். நில அளவை அதிகாரிகள், வரிவாங்குவோர், வரியைப் பலவாறு பிரிப்பவர், பொருட் காப்பாளர், கோயில்களை மேற்பார்க்கும் அதிகாரி எனச் சோழர் அரசியலில் பல துறைகளையும் சேர்ந்த உயர் அலுவலர் பலர் இருந்தனர். அரசியல் அதிகாரிகளுக்குச் சோழப் பேரரசர் மூவேந்த வேளாண், காலிங்கராயன், கச்சிராயன், சேதிராயன் முதலிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தனர். நில வரியும் தொழில் வரியும் பிறவகை வரிகளும் அக்காலத்தில் இருந்தன. கடன், கூலி, இறை, பாட்டம், பூட்சி, உல்கு, காணம் முதலியன அக்கால வரிகளை உணர்த்தும் சொற்கள். சோழப் பெருநாடு முழுவதும்

FOR ALL
ACHES & PAINS!

AMRUTANJAN

PAIN BALM

AMRUTANJAN LIMITED
MADRAS BOMBAY CALCUTTA

சோழ அரசர்கள் காலத்தில் நன்கு அளக்கப்பட்டது. பலவகைக் கோவில்கள், மடங்கள் இவற்றைச் சேர்ந்த நிலங்களுக்கு வரி இல்லை. சோழப் பேரரசர் காலத்தில் பொன்னாலும் செம்பாலும் செய்யப்பட்ட காசுகள் வழங்கி வந்தன. அக்காலத்தில் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவைகள் வழக்கில் இருந்தன. குன்றி, மஞ்சாடி, கழஞ்சு, பலம், கலிசு என்பன நிறுத்தல் அளவைப் பெயர்கள். செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, கலம் என்பன முகத்தல் அளவைப் பெயர்கள். சாண், முழம், குழி, காணி, வேலி என்பன நில அளவைப் பெயர்கள்.

கிராம ஆட்சி

கிராம ஆட்சிக்கு, கிராமத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஓர் உறுப்பினர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எந்தச் சபையிலாவது உறுப்பினராகவிருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், ஐவகைப் பெரும் பாதகங்கள் புரிந்தோரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், பிறர் பொருளைக் கவர்ந்தோரும், கள்ளக் கையெழுத்திட்டவரும் குற்றங் காரணமாகக் கழுதைமீது ஏற்றப்பட்டவரும், எத்தகைய கையூட்டுக் கொண்டோரும், கிராமத் துரோகி என்று கருதப்பட்டவரும், இங்குக் குறிக்கப் பெற்றோர்க்கு உறவினரும் தம் வாழ்நாள் முழுமையும் கிராம சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர். இத்தேர்தல் குடவோலை வாயிலாக அரசாங்க அதிகாரி முன்னிலையில் நடைபெற்று வந்தது. இங்ஙனம் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர் பல வேலைகளைக் கவனிக்கக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். சம்வத்சரவாரியம், ஏரிவாரியம், பஞ்சவாரியம், தோட்டவாரியம், பொன்வாரியம் என்பன அக்குழுக்களின் பெயர்கள். இவர்கள் ஆளுங்கணத்தார் எனவும், கணப் பெருமக்கள் எனவும் பெயர் பெற்றனர்.

ஊர் தோறும் எழுதப்படும் ஆவணங்களை (பத்திரங்களை)க் காப்பிட **ஆவணக்களரி** இருந்தது.

கோவில்கள்

நாயன்மார் காலத்தில் (கி. பி. 600–900) பாடல் பெற்ற கோவில்கள் செங்கற் கோவில்களே. சைவ சமயத்தில் அழுத்தமான பற்றுடைய சோழப் பேரரசரும், சோழ மாதேவியரும், சிற்றரசரும் அக் கோவில்களைக் கற்றளிகளாக மாற்றினர். பல புதிய சிவன் கோவில்களும் கட்டப் பெற்றன. அவற்றுள் தஞ்சைப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழேசுவரம், கும்பகோணத்தை அடுத்துள்ள தாராசுரம் கோவில், திருபுவனம் சிவன்கோவில் என்பன சிறந்தவை. இப்பெருங் கோவில்களின் கோபுர அமைப்பும், விமான அமைப்பும், சிற்பங்கள் ஓவியங்கள் இவற்றின் அமைப்பும், படிவங்கள், திருமேனிகள் இவற்றின் அமைப்பும் சோழர் காலக் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலிய கலைகளின் வளர்ச்சியை நன்கு அறிவிக்கின்றன. இவற்றை நேரில் கண்டு உணர்தலே சாலச் சிறந்தது. வழிவழிச் சைவராகிய சோழர் சைவத்தைத் தம் உயிரென வளர்த்தனர். அவர்கள் செய்துள்ள கோவில் திருப்பணிகள் எண்ணில. ஒவ்வொரு பெருங்கோவிலிலும் திருமுறைகள் ஓதப்பட்டன. இசையையும் நடனத்தையும் வளர்க்க இசைவாணிகள் அமர்த்தப்பட்டனர். விழாக்கள்சிறப்புறநடைபெற்றன. நாடெங்கும் மடங்கள் தோன்றிச் சைவத்தை வளர்த்து வந்தன. கோவில்களில் இசையும் நாடகமும் வளர்ச்சி பெற்றன. வைணவமும் சமணமும் சோழர்களால் ஆதரிக்கப் பெற்றன. கோவில்களில் நூல் நிலையங்களும் மருத்துவ மனைகளும் இடம் பெற்றிருந்தன.

கல்வி

சோழப் பேரரசர் வட மொழியை ஆதரித்தனர்; தமிழ் நாட்டு மொழியான தமிழைத்

தம் உயிர்போலப் பாதுகாத்தனர்; சைவத் திருமுறைகள் செப்பேடுகளில் எழுதப்பட்டன. சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம் என்ற பெருங் காவியங்கள் சோழர் காலத்திற்றான் தோன்றின. கலிங்கத்துப் பரணி, மூவருலா, ஒட்டக்கூத்தர் நூல்கள், சிவஞான போதம் முதலிய சித்தாந்த சாத்திரங்கள், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்குரிய பேருரைகள் என்பன யாவும் சோழர் காலத்திற்றான் வெளிப்பட்டன. வீர சோழியம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி முதலிய இலக்கண நூல்களும் இக்காலத்தே தான் எழுந்தன. முதலாம் இராசேந்திரன் 'பண்டித சோழன்' எனப் பாராட்டுப் பெற்றவன். இரண்டாம் குலோத்துங்கன் பெரிய புராணம் செய்வித்தவன். முதற் குலோத்துங்கன்மீது கலிங்கத்துப் பரணி பாடப்பெற்றது. அவனுக்குப் பின்வந்த விக்ரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் இம்மூவரும் ஒட்டக்கூத்தர் மாணவர்கள். இம்மூவர்மீதும் அப்புலவர் பெருமான் 'உலா'ப் பிரபந்தம் பாடியுள்ளார். மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் கம்ப ராமாயணம் எழுந்தது. நள வெண்பாவும் இக்காலத்தேதான் பாடப் பெற்றது. இவையன்றிப் பல நாடக நூல்களும் அந்தாதி முதலிய சிறு பிரபந்தங்களும் செய்யப்பட்டன.

முடிவுரை

இப்பிற்காலச் சோழர்க்கு முற்பட்ட பல்லவர் தமிழரல்லர். ஆதலால் அவர்தம் ஆட்சியில் பேரிலக்கியங்கள் தோன்றவில்லை. சங்க காலச் சோழரும் பிற்காலச் சோழரும் தமிழ் மன்னராதலால் இவ்விரு காலங்களிலும் தமிழ் ஓங்கி வளர இடம் அளித்தனர். பிற்காலச் சோழருக்குப் பின்பு தமிழரசர் ஆட்சி தமிழகத்தில் மறைந்தொழிந்த காரணத்தால் வளமான இலக்கியங்கள் தோன்ற வழி இல்லாது போய்விட்டது. **தமிழகம் தமிழன் ஆட்சியில் இருந்தாற்றான் தமிழ் வளம் பெறமுடியும்** என்பதைச் சோழர் வரலாறு மெய்ப்பிக்கின்றது.



ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாடு

டாக்டர் எம். எஸ். வைரண பிள்ளை, M.A., Ph. D.
வரலாற்றுப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை

★

உலகின்கண் தோன்றிய மக்களுள் முதலில் தோன்றியவர்கள் என்றும், கல்தோன்றி மண் தோன்றுக் காலத்தே முதன்மையாக வாழ்ந்த குடியினர் என்றும் போற்றிப் பாராட்டப் பெற்றவர்கள் தமிழர்கள். அவர்கள் வாழ்ந்த நாடு பன்னெடு நாட்களாகத் தமிழ்நாடு என்றே அழைக்கப்பெற்றது. இந்நிலையில் வாழ்ந்த தமிழ்ப்பெருமக்கள் ஈடும் இணையுமின்றிச் சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய கீழைத் தீவுகளுடனும் உரோமர், கிரேக்கர் முதலிய ஐரோப்பிய நாட்டினருடனும் வணிகத் தொடர்புகொண்டு விளங்கினர் என்பதைத் தமிழ்நூல்களினின்றும்சில மேலைநாட்டு வழிப்போக்கரின் குறிப்புக்களினின்றும் அறிகின்றோம்.

வெளி நாட்டினர் பலரும் தமிழகத்தின்கண் வந்து மங்காப் புகழ்கொண்டு வாழ்ந்தார்கள்-வாழ்கின்றார்கள். இங்ஙிலையில் தண்டமிழ் நாட்டின்கண் வந்த ஐரோப்பியர்கள், செந்தமிழ் மொழியைக் கற்று ஆய்வுத் திறனுடையராய்த் திகழ்ந்து மொழிக்குச் செய்த தொண்டினையும், அதனடியாக மக்கள் கல்வி வளர்ச்சிக்குச் செய்த பணியினையுமே இக்கட்டுரையில் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

வெளிநாட்டார் நமது நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வந்து சில இடங்களில் தங்கித் தங்களது வாணிகத் தொழிலை மேற்கொண்டு வாழ முற்பட்டனர். அவர்களுள் பதினாறும் நூற்றாண்டில் நிரந்தரமான இடம் அமைத்து வாணிகத் தொடர்பு ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் எனக் குறிக்கலாம். வாணிகம் பேணி வந்த ஆங்கிலேயர்கள் தங்களது மதத்தைப் பரப்பவும், அதில் மக்களைச் சேர்க்கவும் முயன்றனர்.


மதக்கருத்துக்களை மக்களுக்குப் போதிக்க வந்த குருமார்கள் தங்கள் கருத்தை நமது தமிழ்மக்களுக்குக் கூற அவர்கள் தமிழறிந்தாரில்லை. அவர்கள் மொழியில் கூறப்படும் கருத்துக்களை ஏற்கவோ நம் மக்களால் முடியாது. இங்ஙிலையில், அவர்களுடைய கொள்கை நிறைவேற்றத்திற்கு மொழி தடையாக இருந்ததால் வந்த பாதிரிமார்கள் தமிழ்மொழியினைக் கற்கத் தொடங்கினர். அது காரணமாகத் தமிழ்மொழியிற் சில மாறுதல்-வளர்ச்சி ஏற்படலாயிற்று. சிறப்பாக ஆங்கிலேயர் காலத்தில் தான், தமிழ் மொழியில் அதிகமான உரைநடை நூல்கள் ஏற்படலாயின. அதற்குமுன் அங்ஙிலை ஏற்படாமைக்குக் காரணம் மக்கள் தாங்கள் எண்ணிய கருத்தினை ஓலைச்சுவடியிலோ கல்லிலோ பொறித்திடக்கூடியவர்களாக இருந்ததேயாம்.

முதன் முதலாக ஆங்கிலேயர்கள் அலுவலகப் பணிக்கும், ஏனைய செயல்களுக்கும் துணை ஏற்படுத்திக்கொள்ளுவான் வேண்டிச் "சென்னைக் கல்விச் சங்கம்" என்ற ஒன்றை ஏற்படுத்தினர்கள். இச் சங்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பெற்றபோதிலும் இச்சங்கத்தால் தமிழ் மொழி வளர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் அலுவலகங்களில் பணி புரிபவர்கள் தமிழ் கற்றுக்கொள்ளவே பயன்பட்டது. என்றாலும் பாதிரிமார்களே

டி.வி.எஸ்.

ஸ்தாபனங்கள்

ஆற்றலுடன் பணியாற்றுகின்றன



டி. வி சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிட்., மதுரை.

மோட்டார் பஸ் லாரி உற்பத்தியாளர்.

கிளைகள்: திருச்சி திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம் & கோயமுத்தூர்



சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,

நூதன முறையில் டயர் புதுப்பிப்பவர்,

புதுக்கோட்டை & மதுரை.

GM GENERAL MOTORS GENUINE PARTS

மதராஸ் ஆடோ சர்விஸ் பிரைவேட் லிட்.,

மோட்டார் உருப்பு—உபகரண விநியோகஸ்தர்,

மதராஸ் & பெங்களூர்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.,


தேசத்தின் தனிப்பெரும் ரஸ்தா போக்குவரத்து ஸ்தாபனம்,

மதுரை.



சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

பியட் & ப்ளிமத் கார், பார்கோ ட்ரக் வில்லீஸ் ஜீப் யுடிலிடி வான் பெர்குஸன் டராக்டர் விநியோகஸ்தர், சென்னை-6.



தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கோ. லிட்., மதுரை.

TVS

TVS-6868-25-TM

நம் தமிழைக் கற்று அதன் வளர்ச்சிக் கும்—மாறுபாட்டுக்கும் காரணமாக விளங் கினர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் அரசியல் குழப்பம் நீங்கி அமைதி யான ஆட்சியை உண்டாக்கிக்கொண்ட ஆங்கிலேயர்கள், நமது நாட்டு மக்களின் கல்வியில் கருத்தைச் செலுத்தி—"கண் ணுடைய ரென்போர் கற்றோர்" எனப் பொய்யா மொழியார் புகன்றுள்ளபடி மக்க ளைக் கண்ணுடையவர்களாக்க எண்ணி நாட்டின் பலபகுதிகளிலும் பள்ளிக் கூடங் கள் நிறுவினர். சில அரசாங்கத்தாரால், பல பாதிரிமார்களால், மற்றும் சில தனிப்பட்ட வர்களால் நிறுவப்பட்டன. இவற்றுள் பின் னுள்ள இரண்டும் அரசாங்க உதவிபெற்றே நாட்டில் கல்விப் பணி புரிந்து வந்தன.

இக்காலத்தில்தான் உரைநடை நூலின் இன்றியமையாமையை உணர்ந்து பல உரை நடை நூல்களை எழுதத் தொடங்கினர். அதோடு ஐரோப்பிய முறையில், இலக் கியம், நில நூல், சரித்திரம் முதலியவற்றை உரை நடையில் ஆக்கமுற்பட்டனர். படிப் போருக்குப் பண்டை வழக்கப்படி "உரை யிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்" இன்றித் தனித்த உரை நடை நூல்கள் தோன்றலாயின. எழுதப் பெற்ற நூல்கள் எழுதிய ஒரு சிலருக்கே யன்றிப் பிறருக்கும் பயன்படும் வ கை யில் ஆங்கிலேயர்கள் தங்களது நாட்டினின்றும் அச்சுப் பொறி யைக் கொண்டுவந்து அச்சிட்டு அனைவரும் அந்நூல்களின் பயனைப் பெறுமாறு துணை செய்தார்கள். ஆங்கிலேயர்களால் ஏற் படுத்தப்பெற்ற "சென்னைக் கல்விச் சங்கம்" ஏற்படுத்திய பரிசுகளின் காரணமாக வர லாறு நூல்களும் வெளிவந்தன. அதோடு உரைநடை இலக்கண நூல்களும் தோன் றின. இந்த நூற்றாண்டின் இறுதியில்தான் செய்தித்தாள்கள்—நாள் வெளியீடுகள் வார வெளியீடுகள் மாதவெளியீடுகள்—நாட்டில் நடமாடலாயின.

இவ்வாறு அச்சுப் புத்தகம் நாட்டில் நட மாடத் தொடங்குமுன்னர், மக்கள் ஓலையில் எழுதியும், செவிவழி கேட்டும் தங்களது கல்வியறிவை வளர்த்து வந்தனர். ஆனால் பின்னர் ஆங்கிலேயர்கள் நம் தமிழ் நாட் டிற்கு வந்து தமிழ் கற்று, எழுத்தறிந்து, தம்நாடு சென்று தமிழில் அச்செழுத்தை உண்டாக்கித் தமிழ் எழுத்தாலான புத்தகங் களை முதல் முதலில் நம் மக்கள் காணத் துணை செய்தார்கள். அதிலும், அலைபாடிக் கலை வளர்க்கும் அழகு நகராம் தரங்கம் பாடியில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டேனிஷ் மிஷன் தலைவர் ஸீகன் பால்கு ஐயர் அவர்கள் உள்ளத்தெழுந்த எண்ணமே நமக்கு அச்சுக் கலையைத் தந்தது. அன்னார் தமிழ்த்தொண்டு போற் றற்குரிய தொன்றே.

பழந்தமிழ் இலக்கியங்களில், விஞ்ஞானக் கருத்துக்களும், நில நூல் கருத்துக்களும், பிறவும் காணப்படினும், அவற்றை எளிய முறையில் அனைவருக்கும் ஏற்ப ஆக்கிய ருளிய பெருமையான காலம், ஆங்கிலேயர் வாழ்ந்த காலந்தான் என்றால் எவரும் மறுக்க மாட்டார்கள். கணித நூல், வான நூல் முதலியனவும் தமிழில், தமிழ் மக்களிடம் மிகுதியாக உண்டு. அவற்றை ஒரு சிலரே உணர முடிந்தது—உணர்ந்திருந்தார்கள். ஆனால் இன்று ஆங்கிலேயர்களால் எளிதாக எவரும் அறிந்து கொள்ளும் வகையில் அந்நூல்கள் ஆக்கப்பெற்றுள்ளன. இது ஆங்கிலேயர் காலத்தில் தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட பெரு நன்மைகளுள் ஒன்றேயாம்.

தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் பல் வேறு மூட நம்பிக்கைகளில் தங்களுடைய எண்ணத்தைச் செலவிட்டதோடு காரண மின்றிப் பிரிந்து வாழ்ந்தும், பகுத்தறிவற்ற நிலையில், ஒன்றுபட்டு வாழாது பிறருக்கு அடிமையாக வாழ்ந்தும் அது காரணமாகப் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலை அரசியலில் தாழ்ந்த நிலை அன்றுட வாழ்விலும்கூடத் தன்னம்பிக்கையின்றித் தம் மை த் தா மே

தாழ்த்திக் கொண்டு மக்கள் வாழ்ந்தார்கள். இந்தநிலைமை இன்று மாறி இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? சமுதாயம் என்றால் என்ன? அதன் அமைப்பில் நாம் யார்? அதில் உண்டாகும் மாறுபாடு எதனைச் செய்யும்? என்பனபோன்ற கருத்துக்களை உணர்ந்து வாழ்ந்த நாம் இடைக் காலத்து அவற்றை மறந்தோம்; வள்ளுவர் வாக்கைமறந்தோம். எனினும், ஆங்கிலேயர் காலத்தில் அவர்களுடைய சொல்-செயல்-கலந்து பழகும் முறை இவற்றைக்கண்ட பின்னரே நமது திருவள்ளுவரால் கூறப் பெற்ற சமுதாயம் எப்படி இருந்தது என்பதையும், அரசியல் எப்படி இருந்தது என்பதையும், பொருளாதாரத்தில் நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் உணர முற்பட்டிருக்கிறோம்.

திருவள்ளுவரின் வாக்குப்படி "நயத்தக்க நாகரிகமே" வேண்டுபவராக நாம் சமுதாயத்தில் பழக வேண்டும். அவ்வாறு பழகும் முறை நம்மிடம் இருப்பினும், அதனை மறந்தோம்; இன்று நினைவுக்குக் கொண்டுவர வேண்டும்.

பொருளாதார நிலையினை ஆராய முற்பட்டால் நம்மிடம் காணும் குறைபாட்டினை நாம் இன்னும் போக்கிக்கொள்ள முற்பட வேண்டும். வருவாய்க்குத் தக்கசெலவு செய்தல், மிகுதியும் செலவிட்டு வருந்துகின்ற நிலை இவற்றையெல்லாம் நமது பொது மறையிலிருந்து ஆங்கிலேயர் அறிந்து கடைப்பிடித்து வருகின்றனர். செந்நாப் போதார், "நமக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் கவலை இல்லை. ஆனால் செலவு அந்த வருவாய்க்கு மேல் போகலாகாது" என்ற கருத்தை மிக அழகாக ஆங்கிலேயர் காலத்துக்கு முன்னரே கூறிப்போந்தார்.

"ஆகா தளவிட்டி தாயினும் கேடில்லை
போகா தகலாக் கடை."

என்ற நிலையில் நாம் பொருளாதாரத்தில் செம்மையுடன் வாழ நமக்கு வழிகாட்டிய வர்கள் பலராவர்.

அரசியலில் மக்கள் நலங் கேட்டு அவர்களுக்காக வாழ்பவனே அரசன்—அரசாட்சி ஆகும். அந்நிலை உணர்ந்த அரசே சிறப்புடனிருக்கும் என்ற நிலைமையை உணர்ந்து நடக்க வழிகாட்டியவர் வள்ளுவரானாலும் அதனை நாம் கண்கூடாகக் கண்டு உணரச் செய்தவர்கள், ஜனநாயகத்திற்குத் தங்களுடைய பிற்கால ஆட்சியின் போதாவது மதிப்புக் கொடுத்து நடந்து காட்டியவர்கள் ஆங்கிலேயர்களே.

மொழி

மிகப் பெரிய ஒரு நாடும் தனது மொழியில், இலக்கியத்தில், கலையில், பண்பாட்டில் கவனம் கொள்ளாமல் இருக்குமேயானால் அந்நாடு மிக விரைவில் தாழ்ந்து தன் நிலையில் கெடும் என்பதை ஆங்கிலப் பெரு மக்கள் வாக்கிலிருந்தும், நமது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், "இமயமலைபோல் உயர்ந்த ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்" என்று கூறிய மொழியிலிருந்தும் அறிகிறோம். ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியில் நீங்காப் பற்றும் பிறமொழிகளை விரும்பிப் படிக்கும் பண்பும் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

அம்முறையிலேயே நம் தமிழ் நாட்டின் கண் மதத்தைப் பரப்பவந்த பாதிரிமார்கள் தமிழ் மொழியை விரும்பிப் படித்து அதிலுள்ள சுவையை உணர்ந்து அதனிடத்து நீங்காத பற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள்; அதோடு அம்மொழியின் சிறப்பையும் அதில் காணும் இலக்கியத்தின் உண்மைப் பொருளையும் இலக்கணத் திறனையும் உலகறியச் செய்தார்கள். அத்தகைய ஆங்கிலப் பெருமக்களுள் குறிப்பாகவும் சிறப்பாகவும் கொள்ளத்தக்கவர்களையும், அவர்கள் செய்த தமிழ்த் தொண்டினையும் அறிந்துகொள்ளுதல் நலம்.

வீரமா முனிவர் தேம்பாவணி என்ற சிறந்த இலக்கியத்தைத் தந்தவர். கால்டுவெல் என்ற பெரியார் மொழி பற்றிய இலக்கணத்தைத் தெளிவுபடக் கூறிப் பிற மொழி

யாளரும் தமிழின் சிறப்பை உணரச் செய்த வராவார்.

டாக்டர் போப் ஐயர் அவர்கள் திருக் குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பிற்காலத்தில் பாரதியார் கூறியவாக்குப்படி வள்ளுவனை உலகுக்குக்காட்டினர் என்பது மிகையாகாது. அண்மைக் காலத்து வாழ்ந்த ஹீராஸ் பாதிரியார் திராவிட நாகரிகத்தின் சிறப்பை உணர்ந்து தம் உள்ளத் தெளிவால் கூறிய வாக்கியமே அவர் தமிழ் மக்களிடமும், நாட்டிடமும் காட்டும் பெரும் பற்றைக்காட்டும். தம்மை ஸ்பெயின் நாட்டினின்றும் வந்த திராவிடன் எனக்கூறிப் பெருமை கொண்ட நிலையே அவரது அன்புடைமையை விளக்கும்.

இதுகாறும் கூறியவற்றால் ஆங்கிலேயர்கள் தங்கள் காலத்தில் அச்சுப் பொறி கொணர்ந்தும், கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டும் மொழிவளர்ச்சியில் கருத்துக்கொண்டும் ஆங்கிலநூல் சிலவற்றைத் தமிழில் ஆக்கியும், தமிழ் நூல் சிலவற்றை உலக மொழிகளில் பெயர்த்தும், தமிழர்களின் கலை நாகரிகம் பண்பாடு இலக்கண இலக்கியம் ஆகியவற்றின் உயர்வை உலக மக்கள் உணரச் செய்த செய்கைதான் அவர்கள் தமிழ் நாட்டுக்கும் மொழிக்கும் செய்த பெரும் செயலாகும்.

கூட்டுறவு மத்திய பாங்கி லிமிடெட்

கும்பகோணம்

★


8—2—1913ல் ரெஜிஸ்தர் செய்யப்பட்டது

★

30—6—54 உயன்று அங்கிகாரம் பெற்ற

மூலதனம்	...	ரூ. 3,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ. 2,43,800
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 2,36,197
ரிஸர்வ் நிதி	...	ரூ. 1,89,376
இதர ஐவேஜுகள்	...	ரூ. 1,57,603
டிபாஸிட்டுகள், கடன்கள்	...	ரூ. 42,39,010

N. S. ராமலிங்கம், பி.ஏ.,
Diploma in Politics & Pub. Admn.
பிரஸிடெண்ட்



சிறு பிரபந்தங்கள்

வித்துவான், மு. அருணாசலம் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

★

செந்தமிழ்ப் பாண்டி வள நாட்டின் தலை நகரமாகிய இம்மதுரை மாநகர்க்கண், பைந் தமிழ்ப் பாதுகாவலர் பாண்டித்துரை அவர் களால் நிறுவப்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கம் ஞாலமுழுதும் நற்றமிழ் மணங் கமழச் செய்து வருகின்றது. இத்தமிழ்ப் பெருஞ்சங்கம் தென்னாட்டின் திலகமாகிய சேதுபதியரசர் மரபினரால் தமது செல்வ மெனக் கருதி வளர்க்கப்பெற்ற சிறப்பு வாய்ந்ததுமாகும். இச்சங்கத்தின் பொன் விழாக் குழுவினர் இட்ட கட்டளையின் வண்ணம் 'சிறு பிரபந்தங்கள்' என்னும் பொருள்பற்றி யெழுதுகின்றேன்.

'பிரபந்தம்' என்னுஞ் சொல் நன்கு கட் டப்பெற்றது என்னும் பொருளுடைய தாகும். தமிழ்மொழியில் வழங்கிவரும் பிர பந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்பது ஒரு மரபு. "பிள்ளைக் கவிமுதற் புராணம் ஈறுத், தொண்ணூற் றாறெனுந் தொகைய தாம்முற், பகரியல் முன் னுறப் பாடும் பிரபந்தம்" எனப் பிர பந்த மரபியலும், "தொண்ணூற்றாறு கோலப்ர பந்தங்கள் கொண்ட பிரான்" எனச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவுங் கூறுதல் கொண்டு இதனை யறியலாம். பிர பந்த இலக்கணங் கூறும் நூல்கள் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் முதலாகப் பலவுள் ளன. இவற்றுள் ஒன்றிலேனும் பிரபந்தங் கள் தொண்ணூற்றாறு என்னும் வரையறை யும் அவற்றிற்கு இலக்கணமுங் கூறப்பட வில்லை. கூறப்பட்டவற்றின் இலக்கணங் களுள் ஒன்றற்கொன்று மாறுபட்ட கருத் துக்களுங் காணப்படுகின்றன. அன்றியும், தொண்ணூற் றாறென்னும் வரையறையில் அடங்காமல் மேலும் பல பிரபந்தங்கள் இருத்தலையும் பார்க்கின்றோம். இவற்றை நோக்கும்போது இவ்வரையறை எல்லோர்க் கும் ஒத்த முடிபன்று என்பது புலனு கின்றது.

இப்பிரபந்தங்களின் இலக்கணங்கள் மேற் காட்டிய பாட்டியல் நூல்களிற் கூறப்பெற் றிருத்தலால், அவற்றினையே மீண்டும் ஈண்டு எடுத்துக் கூறுதல் மிகையாமென விடுத்து, இப்பிரபந்தங்கள் தோன்றிய காலமும், கார ணமும், இவை இன்னின்ன அடிப்படையி லிருந்து எழுந்தனவென்பதும், இவை பற் றிய கருத்து வேறுபாடுகளும், இப்பிரபந்தங் களால் விளைந்த நலங்களும், பிறவுமே இங் குச் சுருக்கி யெழுதப்படுகின்றன.

பிரபந்தங்கள் தோன்றிய காலம்

கி. பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்க முதல் ஏறத்தாழ முந்நூற்றைம்பது ஆண்டு கள் இத்தமிழகம் வேற்று மொழியாளரான களப்பிரர் ஆட்சிக் குட்பட்டமையால் சங் கம் மருவிய தூங்கத் தமிழ்மொழி தனது தனித் தலைமை யிழந்து தளர்ச்சியுற்றது. சம ணம் பௌத்தம் ஆகிய புறச் சமயங்கள் புகுந்து சைவ வைணவக் கொள்கைகள் தலை யெடுக்க வொட்டாமல் தடைப்படுத்தின. பழந்தமிழ் நூற்பயிற்சி குன்றியது. புதிய நூல்கள் தோன்றுதற்கு வாய்ப்பில்லை. இந்

நிலையில், இருளிற்குப் பின் ஒளி தோன்று மாறு போல இவ்விருண்ட காலங்களுக்குப் பின், அஃதாவது ஆரும் நூற்றாண்டின் இடைக்கால முதல் தமிழன்னையின் தவப் புதல்வரான பாண்டியர்கள் தமக்கியல்பான வீறுகொண்டெழுந்து பகையிருளோட்டி நல்லாட்சி நடாத்தத் தொடங்கினர். நாயன் மார்களும் ஆழ்வார்களுந் தோன்றிச் சமயத் துறையிற் படர்ந்த மாசுபோக்கித் தமது அருட்பாடல்களாற் கடவுட் கொள்கையை யாண்டும் பரப்பினர். வளவர் செங்கோலாட் சியும் வன்மையுற் றோங்கியது. இக்காலங் களிலேதான் புலவர்கள் புத்துணர்ச்சி பெற் றுப் புதுப்புதுப் பிரபந்தங்கள் இயற்றத் தலைப்பட்டனர். பின்னர்ப் பெருங் காப்பியங் களும் புராணங்களும் தோன்றலாயின.

பிரபந்தங்கள் தோன்றக் காரணம்

கடைச்சங்க காலத்தில் நல்லிசைப் புலவர் களாற் பாடப்பெற்ற அகமும் புறமுந் தழு விய தனிச் செய்யுட்களிற் பல மறைந்து போயினமையால் எஞ்சியவற்றைப் பொருள் அளவு யாப்பு முதலிய இயைபு பற்றி அக் காலத்திலிருந்த புலவரும் புரவலரும் தொகுத்து வைத்தனர். இதனை யுணர்ந்த பிற் காலப் புலவர்கள் தனிச் செய்யுட்களாகப் பாடுதலைப் பார்க்கினும் சொற்றொடர் நிலை யாகவும் பொருட்டொடர் நிலையாகவும் நூல்கள் இயற்றுதலே சிறந்ததெனக் கருதி னர். மேலும், தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திலும் சங்க இலக்கியங்களிலும் பொதிந்து கிடக்கும் அரிய பல கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு தத்தம் அறிவாற்ற லுக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அளவாற் சிறியதும் பெரியதுமான பல பிரபந்தங்களை இயற்றி அவற்றின் வாயிலாகத் தமிழறிவை யும் சமயநம்பிக்கையையும்நாட்டுமக்களுக்கு ஊட்டுதல் தங்கள் கடமை யென்பதையும் உணர்ந்தனர். இக்காரணங்களால் எத் தனையோ பிரபந்தங்கள் எழுச்சியுற்றன.

பிரபந்தங்களுக்குப் பொது விதி

தொடர் நிலைச் செய்யுட்களின் இலக்கண மாகத் தொல்காப்பியங் கூறும் வனப்பு எட் டனுள் விருந்து என்பதும் ஒன்று. "விருந் தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பது அதன் விதி. பழங்கதை யின் மேலன்றிப் புதிதாகத் தாம் வேண்டிய வாற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்யலாம் என்பது அதன் கருத்து. இப் பொது விதி பல பிரபந்தங்களுக்கு இடனை யிற்று. இனி, எந்தெந்த மூலத்திலிருந்து என் னென்ன பிரபந்தங்கள் எவ்வெவ்வாறு எழுந்தன என்பதைக் காண்போம்.

நாண்மங்கலம்: அரசர்கள் பிறந்த நாளை ஆண்டு தோறும் விழாவாகக் கொண்டாடு தலும், அந்நாளில் சிறைவிடுதல் செருவொழி தல் கொலைதவிர்தல் வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கல் முதலான நற்செயல் களை அவர்கள் மேற்கொள்ளுதலும் நடை பெறும். இதனைச் "சிறந்த நாளணி செற் றம் நீக்கிப் பிறந்தநாள்வயிற் பெருமங்கலம்" என்றார் தொல்காப்பியர். இவ்வெள்ளணி நாட்குறித்து எழுந்த ஒரு சிறு பிரபந்தம் 'சாதகம்' என்னும் பெயர் பெற்றது.

பிள்ளைத் தமிழ்: இது பிள்ளைக் கவி யெனவும் பிள்ளைப் பாட்டெனவுங் கூறப் படும். 'குழவி மருங்கினுங் கிழவ தாகும்' என்னும் நூற்பாவை ஆதார மாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றது. சிறுவர்ப் பயந்த சேயிழையாரும் செம்முது செவிலியரும், தம் அருமை மகாரைக் கடவு ளர் காக்குமாறு வேண்டிக்கோடலும், சீராட்டிப் பாராட்டித் தாலாட்டுதலும், எழுத்தின் உருவமும் பொருளும் புலப் படாத இன்சொற்களைப் பேசுமாறு தூண்டு தலும், கைகொட்டச் செய்தலும், முத்தந் தருமாறு வேண்டலும், அவர்தம் தளர் நடைகாண்டலும், அவர்க்கு அம்புலி காட்டி யழைத்தலும், சிற்றில் சிதைத்தல் சிறுபறை முழக்கல் சிறுதேருருட்டல் முதலான அவர்

தம் விளையாட்டுச் செயல்களைக் கண்டு களித்தலும் உலகியலிற் காணப்படுவன. இப்பிள்ளைப் பருவச் செயல்கள் சங்க இலக்கியங்களிலும் ஆங்காங்குப் பேசப்பட்டுள்ளன. இவற்றை முறைப்படுத்து வரையறை செய்து பிள்ளைக் கவியென்று பெயரிட்டனர்.

'குழவி மருங்கினுங் கிழவதாகும்' (தொல்–பொருள்–84) என்னுஞ் சூத்திர வுரையில், 'மருங்கு' என்றதனால் மக்கட் குழவியாகிய ஒரு மருங்கே கொள்க; தெய்வக் குழவியின்மையின் எனவும்,—குழவிப் பருவங் கழிந்தோர் அது வேண்டியக் காலும் அக்குழவிப் பருவமே கருதிப் பாடுக என்றற்குக் 'கிழவதாகும்' என்றார் என வும் விளக்கந் தந்துள்ளார். ஆயினும், கடவுளரையும் கடவுட் பெண்டிரையும் குழவிப் பருவத்தினராகக் கொண்டு பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்கள் இன்று பலவுள்ளன. மேலும், அரசன் இளையனாயினும் முடி சூடியபின் பிள்ளைக் கவி கொள்ளலாகாதென்பதனை, "தொன்னிலை வேந்தர் சுடர் முடி சூடிய, பின்னர்ப் பெருஅர் பிள்ளைப் பாட்டே" எனப் பன்னிரு படலமேற் கோட் சூத்திரம் ஒன்று வலியுறுத்துகின்றது.

இனி, பெண்பாற் பிள்ளைத் தமிழ் பாடுங்கால் சிற்றில் சிதைத்தல் முதலான மூன்றினையும் பாடுதலாகாது என்று கூறி அவ்வளவில் நிறுத்தின வெண்பாப் பாட்டியல் நவநீதப் பாட்டியல் இரண்டும். அம்மூன்றற்கும் நிகராகக் கழங்கு அம்மானை ஊசல் என்ற மூன்றினையுங் கொள்க என்று சிதம்பரப் பாட்டியலும் இலக்கண விளக்கப் பாட்டியலுங் கூறுகின்றன. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், அழுதாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆகிய இரண்டிலும் காப்பு முதலிய ஏழு பருவங்களுடன், அம்மானை நீராடல் ஊசல் என்ற மூன்றுங் கூறப் பெற்றுள்ளன. பன்னிரு பாட்டியல் சிற்றிலிழைத்தல், சிறு சோறுக்கல், குழமகன், ஊசல், காமவேள் நோன்பு என்பவை பெண்பாற் பிள்ளைத் தமிழிற் பாடலாம் என்று கூறுகின்றது. பிங்கலந்தையில் குழமணம் நோன்பு நீராடல் பாவையாடல் அம்மானை கழங்கு பந்தடித்தல் சிறு சோறடுதல் சிற்றிலிழைத்தல் ஊசலாடல் என்ற பத்தும் காப்பு முதலாய ஆறுடன் கூட்டி யெண்ணப்படுகின்றன.

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்க் காப்புப் பருவத்திற்கும் பிற பிள்ளைத் தமிழ்க் காப்புப் பருவங்களுக்கும் வேறுபாடு உண்டு. காப்பு என்பது 3, 5, 7 ஆகிய பாடல்களைக் கொண்டு 'காப்பு மாலை' என்னும் பிரபந்தமாகக் கூறப்படுகிறது. தாலாட்டு அம்மானை ஊசல் என்பன தனித்தனிப் பிரபந்தங்களாகவும் வழங்குகின்றன. சிற்றிலிழைத்தல் சிறு சோறடுதல் போன்று மரப்பாவைகளை மணமக்களாக வைத்துச் சிறுமியர் விளையாடும் விளையாட்டுக் 'குழமகன்' எனவும் 'குழமணம்' எனவும் கூறப்பட்டுள்ளது.

தசாங்கம், தசாங்கத்தயல், சின்னப்பூ :

"படையுங் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய"
(தொல்-பொருள்-சூ. 626)

என்னும் இச்சூத்திரத்தின் கண் அரசர்க்குரிய உறுப்புக்களாக ஓதப்பட்ட பத்தனுள், படையும் குடையும் வேறு பிரபந்தங்களாக விதந்து கூறப்படுதலானும், தேருக்கு மற மின்மையானும், முடி எல்லா வுறுப்புக்களுள்ளும் சிறந்ததாகலானும் இந்நான்கினையும் விலக்கி, ஏனையவற்றுடன் மலையாறு நாடு நகர் என்னும் நான்கினையுங் கூட்டி இப்பத்தினையும் பத்து நேரிசை வெண்பாக்களாற் பாடுவது தசாங்கம் எனவும், பத்து அகவல் விருத்தத்தாற் பாடுவது தசாங்கத் தயல் எனவும், நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது நேரிசை வெண்பாக்களாற் பாடுவது 'சின்னப்பூ' எனவும் பெயரிட்டனர்.

விருத்த வகை : குடை செங்கோல் நாடு ஊர் வில் வேல் வாள் யானை குதிரை ஆகிய ஒன்பதும் தனித்தனியே பத்து ஆசிரிய விருத்தத்தாற் பாடப்பெறின், அவை குடை விருத்தம் செங்கோல் விருத்தம் என்றாற்போலப் பிறவும் தத்தம் பெயரால் வழங்கப் பெறும் என்றார்.

ஊர் நேரிசை முதலாயின :

"ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி யவையவை பெறுமே"
(தொல்-பொருள்-மர-74)

என்னும் சூத்திரத்தில் 'ஊரும் பெயரும்' என்றதனை அடிப்படையாகக் கொண்டு, ஊர் நேரிசை, பெயர் நேரிசை, ஊர் இன்னிசை, பெயரின்னிசை, ஊர் வெண்பா, எண் செய்யுள் எனப் பல பிரபந்தங்கள் இயற்றப் பெற்றன. இனி, இதன் கண் 'உடைத் தொழிற் கருவி' என்றதனை நினைவிற் கொண்டு, ஏரெழுபது, ஈட்டி யெழுபது, சிலை யெழுபது, பசும்பை யெழுபது என்னும் நூல்கள் பாடப்பெற்றன. இதற்குப் பாட்டியல்களில் இலக்கணம் கூறப் படவில்லை.

தானை மாலை செருக்கள வஞ்சி முதலியன : அரசனது தூசிப் படையைப் புகழ்ந்து பாடுவது தானை மாலை யென்றும், ஆனிரை கவர்தல் முதல் வாகை புனைதல் ஈறாயபுறத் திணை யொழுக்கங்களைத் தனித்தனி அகவற் பாவாற் பாடுவது வீரவெட்சி மாலை, வெற்றிக் கரந்தை மஞ்சரி, வஞ்சி மாலை, காஞ்சி மாலை, நொச்சி மாலை, உழிஞை மாலை, தும்பை மாலை, வாகை மாலை யென்றும் பெயர்பெறும் என்றனர்.

போர்க்களச் செய்தியை வஞ்சிப் பாவாற் பாடுவது செருக்கள வஞ்சி யென்றும், எதிர்சூன்றல் முதலான புறத்திணை யொழுக்கங்களைத் தனித்தனி வஞ்சிப் பாவாற் பாடுவது, காஞ்சி வஞ்சி, நொச்சி வஞ்சி, உழிஞை வஞ்சி, தும்பை வஞ்சி, வாகை வஞ்சி யென்றும் பெயர்பெறும் எனக் கூறியுள்ளனர்.

பரணி : மேற் கூறியவாறு புறத்திணைப் பொருள்களைத் தனித்தனியே கூறாமல் மேற்செலவு முதல் வென்றி புனைதல் ஈறாய செயல்களெல்லாம் அடங்கும் வண்ணம், பாட்டுடைத் தலைவனைப் பாராட்டிக் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு, காளிகோயில், காளிக்குக் கூளிகூறுதல் முதலியவற்றை முதலில் அமைத்து, கொச்சகக்கலிக்கு உறுப்பாகிய ஈரடிக்கலித்தாழிசையால் பொருட்டொடர் நிலையாகப் பாடி இப் பிரபந்தத்திற்குப் பரணியென்று பெயரிட்டனர். இதனைத் தேவ பாணியில் அடக்குவர் பேராசிரியர்.

"பரணியுள் புறத்திணை பலவும் விராய் வருதலின் அது தேவபாணியாம் என்றது என்னையெனின், அவையெல்லாம் காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றி, அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவன ஆதலால் அவை யெல்லாவற்றினும் தேவபாணியே யாம்" என்பது அவருரை.

உலா: "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" (தொல்-புறம்-சூ.-30) என்னும் சூத்திரம் கைக்கிளைப் பொருள் மேற்பாடப் பெறும் உலாப் பிரபந்தத்திற்கு அடிப்படையாயிற்று. பாட்டுடைத் தலைவன் உலா வருங்கால் பேதைமுதல் பேரிளம்பெண் ஈறாய ஏழுபருவத்து விலைமாதர்கள் அவனைக் கண்டு காமுற்றதாகக் கலிவெண்பாவாற் பாடப்படுவது உலா எனப் பாட்டியல்கள் விதி வகுத்தன. இவ்விதி நச்சினார்க்கினியர்க்கு உடன்பாடன்று.

"வேட்கை பிறவாப் பருவத்தாரும், பிறக்கின்ற பருவத்தாரும், பிறந்த பருவத்தாரும் என மூன்று கூறுக்கிக் கூறுகின்றார். 'பேதையல்லை மேதையங் குறுமகள், பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்தென (அகம்-7) என்றலின், பேதை வேட்கை பிறவாப் பருவத்தாதலும், பெதும்பை வேட்கை பிறக்கின்ற பருவத்


SRI AMBAL & CO
No1
POST BOX No 3 MADRAS
SRI AMBAL SNUFF
ஸ்ரீ அம்பாள் குருத்தூள்
ஸ்ரீ அம்பாள்
ஆபீஸர் பொடி
காரம், மணம், குணம், நிறைந்தது
1, தோலா டின்களிலும் எங்கும் கிடைக்கும்
ஸ்ரீ அம்பாள் & கோ
201, கங்கசாலை தெரு . . . மதராஸ் .1.

தாதலும் பெற்றும். இவையொழிந்த மங்கை மடந்தை அரிவை தெரிவையென் னும் பெயர்கள் வேட்கை பிறந்த பருவத் துப் பெயர்களாம். அன்றி அவையும் பரு வத்தை யுணர்த்தும் பெயர்களெனின், அது முதனூல்களிற் கூறுமையானும், சான்றோர் வேறுபாடு கூறுமல் மகளிர்க்குப் பொதுப் பெயராகச் செய்யுள் செய்தலானும் தேவர்க் கும் அது கருத்தென்றும். இனி, உலா விற்கு அங்கமாகப் புதிய நூல்களிற் கூறிய விதி இதற்காகாமையுணர்க.'' (சிந்தா-இலக்க-152) என்று அவர் எழுதியிருத்த லால் அதனையுணரலாம்.

மடல்: தனியிடத்தில் ஒரு தையலைக் கண்ட தலைமகன் வேட்கை மீதூரப் பெற்று அறம் பொருள் வீடு இவற்றை யிழித்தும், மகளிராற் பெறும் இன்பத்தினையே உயர்த் தியுங் கூறிப் பனைமடலாற் செய்யப் பெற்ற குதிரையில் ஏறுவன் எனவும், அப் பாட் டுடைத்தலைமகன் பெயரெதுகை அடிதோ றும் முதற்கண் அமையுமாறு இன்னிசைக் கலிவெண்பாவாற் பாடப்பெறுதல் வேண்டு மெனவும் பன்னிரு பாட்டியல் மடலுக்கு விதி கூறுகின்றது.

இது கந்தருவத்துட்பட்டு வழுவிய 'ஏறிய மடற்றிறம்' (தொல்.-அகத்.-51) என்னும் பெருந்திணைப் பகுதியைத் தழுவியெழுந்த தாகலின் கூட்டம் பெறுமுன் (கண்டு காத லித்த அளவில்) தலைமகன் மடலேறுவன் என்று பன்னிரு படலங் கூறுவது ஆராய் தற்குரியது.

காந்தருவ முறையிற் கலந்து பிரிந்த தலை வன் அக்காதலியை மீண்டுங் கூடப்பெரு மையால் மடலேறுவன் என்றலே பொருத்த மாகும்.

இனி, ஒரு தலைமகள் எத்துணைக்காமம் மிகப் பெற்றுளாயினும் மடலேறுதல் கூடாது என்பதுபற்றி, ''எத்திணைமருங்கி னும் மகடூஉ மடல்மேற், பொற்புடை நெறிமை யின்மையான'' எனத் தொல்காப் பியரும், ''கடலன்ன காமம் உழந்தும் மட லேறுப் பெண்ணிற் பெருந்தக்க தில்'' எனத் திருவள்ளுவருங் கூறியிருப்பவும், திரு மங்கையாழ்வார்,

''அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்மொழியிற் கேட்டறிவ துண்டதனை
யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்''
(பெரியதிருமடல்)

என்று கூறிப் பெண்பால் மடலூர்வதாக இரண்டு திருமடல்கள் இயற்றினர். இவ் விலக்கியங்களைக் கண்டபின்பே, ''மடன் மாப் பெண்டிர் ஏறார்; ஏறுவர், கடவுளர் தலைவ ராய்வருங் காலே'' ''கடவுளர் மேற்றே காரிகை மடலே'' என்னும் சூத்தி ரங்கள் எழுந்தன போலும். இது 'தேறு தல் ஒழிந்த காமத்து மிகுதிறம்' (தொல்-பொருள்-சூ.-51) என்றதன்பாற்படும்.

உலாமடல், அநுராகமாலை: கன வில் ஒருத்தியைக் கண்டு கலவியின் பம் நுகர்ந்தா ளொருவன் கண்திறந்தபின் அவளைக் காணுமையால் அவள்பொருட்டு மடலூர்வேன் எனக்கூறுவதாய உலாமட லும், அங்ஙனந் துய்த்த இன்பச் செய்தியைத் தன்பாங்கற்கு இயம்புவதாகக் கூறும் அநு ராகமாலையும் ''கனவும் உரித்தால் அவ் விடத்தான'' (தொல்-பொருள்-சூ.-197) என்பதனை அடியொற்றிப் பாடப்பெற்ற அகப்பொருட் சிதைவாகிய பெருந்திணை யாகும்.

'மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட, தூயநற் கனவைத் தோழிக் குரைத் தது' என்னும் நாச்சியார் திருமொழி' கன வொடு மயங்கல் என்னும் மெய்ப்பாட்டி னைச் சார்ந்தது.

தூது: இரு திணைப் பொருள்களில் யாதா னும் ஒன்றைத்தமக்கினியார்பால் தமது இன் னல் கூறிவரும்மாறு ஏவுதலாகிய தூது என் னும் பிரபந்தம் 'தூது முனிவின்மை' (மெய்ப்.

சூ. 23) உறுப்புடையது போல் உணர்வுடையது போல், மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும், சொல்லாமரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற் றொழிற் படுத்தடக்கியும்'' (தொல்-பொருளியல்-சூ-2) என்ற விதிகளைத் தழுவிச் செய்யப் பட்டது.

அகப் பொருட் கோவை: அகப் பொருளிலக்கணத்திற் கூறப்படும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவன் ஒருத்திபால் ஒருங்கு நிகழ்ந்தனவல்ல. தொடர்ந்தும் தொடர்பின்றியும் சிலவும் பலவுமாகப் பலர் பாற் பலகாலங்களில் நிகழ்ந்திருக்கலாம். தொல்காப்பியர் இலக்கணங் கூறவந்தவராதலின் அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் முறைப்படுத்து நூல்செய்வாராயினர். அவ் விலக்கண அமைதிகள் அனைத்தையும் ஒழுங்குபடக் கோத்து அவற்றிற்கு இலக்கியமாகச் செய்யப்பட்டதே அகப் பொருட் கோவையாகும்.

அவற்றுள் ஒரு கிளவியைக் குறித்தே பல பாடல்களியற்றி ஒரு துறைக் கோவை யெனப் பெயரிடப்பெற்ற பிரபந்தமும் இன்று உள்ளது.

அந்தாதித்து வருவன: மோனை யெதுகை முதலியன பொலத் தனிச் செய்யுளிற் கொள்ளத்தக்கதன்று எனக் கருதித் தொல்காப்பியராற் கூறுது விடுத்த அந்தாதித் தொடை, பதிற்றுப் பத்து நான்காம் பத்திலும் பிறநூல்களிலும் ஆளப் பட்டிருத்தல் கண்டு, அது தொடர்ந்த பல செய்யுட்களை நினைவுகூர்தற்கு உதவியாயிருத்தலையும் உட்கொண்டு, அவ்வந்தாதித் தொடையின் அடிப்படையில் பல பாக்களையும் இனங்களையும் சந்த இன்பத்தின் பொருட்டு மாறிமாறி இயைத்துப் பற்பல பிரபந்தங்களை இயற்றினர். அவை:— ஒருபா ஒருபது, இருபா இருபஃது, இரட்டைமணி மாலை, இணைமணி மாலை, மும்மணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை, அலங்கார பஞ்சகம், அட்டமங்கலம், நவமணி மாலை, அரிபிறப்புப்பத்து, ஐம்படைவிருத்தம், வெண்பா அந்தாதி, கலித்துறை யந்தாதி, பதிற்றந்தாதி, ஒலியந்தாதி, கலியந்தாதி, பல்சந்த மாலை எனப் பல பெயர் பெற்றன.

கலம்பகம், பன்மணி மாலை: இவ்வாறு சந்த இன்பத்தின் பொருட்டுப் பாவும் இனமும் விரவிவருதலோடு, பல திறப்பட்ட பொருட் சுவையுங் கலந்துவரின் படிப்பவர்க்கு ஊக்கம் உண்டாமென நினைந்து, அம்மானை ஊசல் மறம் குறம் காலம் தூது கார் ஊர் பாண் ஒருதலைக் காமமாகிய கைக்கிளை பெருந்திணைப் பகுதியான இரங்கல் தலைவி கூற்று தோழி கூற்று செவிலி கூற்று பாட்டுடைத் தலைவனைக் கிளவித் தலைமகளைக் கொண்ட அகப்புறக் கைக் கிளை முதலான பலவுங் கூட்டிக் கலம்பகம் எனப் பெயரிட்டனர்.

இவற்றுள், ஒரு போகு அம்மானை ஊசல் ஒழித்துச் செய்து அதற்குப் பன்மணி மாலை யென்று பெயர் வைத்தனர்.

தொல். புறத்திணை 35–36 ஆம் சூத்திரத்தைத் தழுவியவை: கண்படை நிலை, விளக்கு நிலை, புற நிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளைச் செய்யுள், துயிலெடை நிலை, கூத்தராற்றுப் படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப் படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப் படை, குடைமங்கலம், யாண்டு நிலை என்னும் பிரபந்தங்கள், தொல்காப்பியப் புறத் திணையியல் 35, 36-ஆம் சூத்திரங்களிற் கூறப்பட்ட புறத்துறைகளே யாகும். இவற்றுள், துயிலெடைநிலை பள்ளியெழுச்சி யென்றும், யாண்டுநிலை பல்லாண்டென்றும் வழங்குகின்றன.

மேலும், கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை, முதுகாஞ்சியாயிற்று. இயன்மொழி வாழ்த்து, வெற்றிவேந்தர் நற்றிறங்கூறும் மெய்க் கீர்த்தி யெனப்பட்டது.

இன்னனென்று இரங்கிய மன்னைக் காஞ்சி, கையறு நிலையாயிற்று. நிகர்த்து மேல்வந்த வேந்தனெடு முதுகுடி, மகட்பாடஞ்சிய மகட்பாற் காஞ்சி, மறம் என்று கூறப்பட்டது. (கண்ணப்பதேவர் திருமறம் இதனின் வேறு). விழா நாட்களில் முரசறையுஞ் செய்தி, பறைநிலை யென்றும், கொற்றவைக்குப் பலியிடும் எருமைக் கடாவைப் பற்றிக் கூறுவது, கடாநிலை யென்றும், மொழிக்கு முதலாம் எழுத்துக்களை முறையாக முதலில் அமைத்துப் பாடுவன, வருக்கமாலை யென்றும், வருக்கக்கோவை யென்றும், அறுசீரும் எண்சீரும் பெற்றுவரும் அகவல் விருத்தங்கள், தாண்டகம் என்றும், ஒரு பொருள் குறித்துப் பாடப்பெறும் பத்துச் செய்யுட்கள் பதிகம் என்றும், நூறு செய்யுட்கள் சதகம் என்றும் பாட்டியல்களிற் கூறப்பட்டுள்ளன.

"கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" என்றதன்கண், கட்டுவிச்சி கூறுவதனைக் குறத்திப் பாட்டென்றும், 'ஏரோர் களவழி' பற்றியதனை உழத்திப் பாட்டென்றும் கூறினர். இக் குறத்திப் பாட்டும், உழத்திப் பாட்டும், "சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து, தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற், புலன் என மொழிப" என்ற வனப்பினைத் தழுவிப் பல மாறுபாடுகளுடன் குறவஞ்சி யென்றும், பள்ளுப் பிரபந்தம் என்றும் பெயர் பெற்று நாடக நூல்களாய் விரிவடைந்தன.

பொருளாதியாறும் பற்றித் தோன்றியவை: பொருள் பற்றியவை: ஐந்திணை ஐம்பது, ஐந்திணை யெழுபது முதலியன அகப் பொருள் பற்றியவை. இன்ன நாற்பது, இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை, திரிகடுகம் முதலியன புறப்பொருள் பற்றியவை.

இடம் :—களவழி நாற்பது.

காலம் :—கார்நாற்பது, வேனில்மாலை, நாழிகை வெண்பா.

உறுப்பு : அங்கமாலை, பாதாதி கேசம், கேசாதி பாதம், நயனப்பத்து, பயோதரப் பத்து.

குணம் :—நாமமாலை, புகழ்ச்சிமாலை, மங்கலவெள்ளை, இல்லறவெள்ளை.

தொழில் :—யானைத்தொழில்

தாரகைமாலை : இருபொருள் தரும் இருபத்தேழுவகைப் பாடல்களையுடைய தென்றும், கற்புடை மகளிர் குணநலங்களைப் புகழ்வதென்றும், தூசிப் படையைப் புகழ்வதென்றும் தாரகைமாலை என்பது பற்றிப் பாட்டியல்கள் மாறுபட்டுக் கூறுகின்றன.

பாட்டியல்களிற் கூறப்படாத பிரபந்தங்கள் : கப்பற் பாட்டு, வில்லுப் பாட்டு, கும்மிப் பாட்டு, கோலாட்டப் பாட்டு, ஆனந்தக் களிப்பு, கிளிக்கண்ணி, நொண்டிநாடகம், விலாசம், புலம்பல், உந்திபறத்தல், சாழல், தெள்ளேணம், வள்ளைப்பாட்டு, கவசம், ஓடப் பாட்டு, காதல், ஏற்றப் பாட்டு முதலாக இன்னும் பல வுள்ளன.

பிரபந்தங்களால் விளைந்த நன்மைகள் : நாட்டின் பல பாகங்களிற் கோயில் கொண்டுள்ள கடவுளர், பெருநில வேந்தர், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலானோர் மேம்பாடு குறித்துப் பல பிரபந்தங்கள் இயற்றப்பெற்றமையாலும், இளையரும் முதியரும் ஆகிய ஆடவர் மகளிர் என்னும் இருபாலாரும் தத்தம் நிலைமைக்கு ஏற்ப விரும்பிக் கற்றற் குரியன பல பாடப்பெற்றமையாலும் ஆங்காங்கு உள்ள மக்கள் அவற்றை ஆர்வத்துடன் கற்றும் கேட்டும் அறிவு வளர்ச்சியும் சமய வுணர்ச்சியும் எய்தினர். எத்துணையோ வரலாற்றுக் குறிப்புக்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன. அன்றியும், இப்பிரபந்தங்களிற் பல வற்றைக் கற்று இலக்கியப்பயிற்சி யெய்திய

For the Latest Fashions in Clothes

Visit

Lalchand's

LALCHAND KEWALRAM

Fashion Leaders of Madras

★

FABRICS FRESH & OF CHARM IN SILK,
WOOLLEN & COTTON FOR GENTS,
LADIES AND CHILDREN

ALWAYS IN PLENTEOUS SUPPLY

★

MODERN GENTS & LADIES TAILORING

PAY A VISIT TO-DAY
AND
MAKE YOUR SELECTIONS

MOFUSSIL ORDERS PROMPTLY EXECUTED



Head Office :
101, Godown St., Madras-1
Branches :
Silk Museum, China Bazaar, Madras-1
Colombo Store, 101, Godown St., Madras--1
Lalchand Kewalram 20, Duplex St., Pondicherry

பின்பே பெருநூல்களைப் பாடங்கேட்பது என்ற வழக்கமும் இருந்து வருகின்றது.

இங்ஙனம் பலப்பல நூல்கள் தோன்று தற்கு நிலைக்களனாயிருந்தது தொல்காப்பியப் பொருளதிகாரம் என்பதனை நாம் மறத்தல் கூடாது. பழமைக்குப் பழமையாய்ப் புது மைக்கும் புதுமையாய் என்றும் நின்று நில வும் ஏற்றம் வாய்ந்தது இப்பொருளதிகாரம். இது கருதியே போலும், "எழுத்தும் சொல் லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறே மெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று கன்னித் தமிழ் வளர்க்கும் கருத் துடைய பாண்டியன் கவற்சியுற்றனென்று களவியலுரை கூறுகின்றது. இவ்வுரை பனைத்துரையன்று; பொருளுரையே யெனக் கொள்ளுதல் பொருந்தும்.

பண்டைநாளிலிருந்த முத்தமிழ்ச் சங் கத்தை நினைவூட்டி நிற்கும் இந் நான்காந் தமிழ்ச் சங்கமும், இதனை நன்முறையில் வளர்த்தற்கு முன்வந்துள்ள அறிவுந் திருவும் மருவிய பெருமக்களும், இப் பொன்விழாக் குழுவினரும் நீடுழிவாழும் வண்ணம் அங் கயற்கண் அம்மையுடனுறைகிய ஆலவாய்ப் பெருமான் அருள்புரிவாராக என வேண்டு கிறேன்.

மதுரை இராமநாதபுரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டகசாலை லிமிடெட் நிர். எ. 1437.

31, வெங்கலக் கடைத் தெரு, மதுரை.

மொத்த வியாபாரம் ! மொத்த வியாபாரம் !!

கூட்டுறவு முறையில் இயங்கும் ஸ்தாபனம்,
சர்க்கார் கண்காணிப்பு உள்ளது,
பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளுக்கும், இதர கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், பொது ஜனங்களுக்கும் சேவை செய்ய ஏற்பட்டுள்ளது.

உணவு தானியங்கள், பயர் பருப்பு வகையருக்கள், மளிகை சாமான்கள், ஜீனி, எண்ணெய், ரசாயன உரம், கடலைப்புண்ணுக்கு மற்றும் இதர உரங்கள் முதலிய சாமான்கள் எங்களிடம் நியாயமான விலைக்கு, உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

கூட்டுறவே நாட்டுயர்வு !!!

இ. எ. பொன்னுசாமி
காரியதரிசி

எ. எம். மதுரைப்புலி கவுண்டர்
தலைவர்.

ஓரங்க நாடகம்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

★

கலை பல வகை. அதில் தமிழ்க் கலை ஒரு தனி வகை. தமிழ் மூவகை. அதில் நாடகம் ஒரு வகை. நாடகம் பல வகை. அதில் ஓரங்கம் ஒரு வகை.

ஓரங்க நாடகம் என்பதை ஒரு கள நாடகம் எனக் கூறலாம். அது ஒரு சிறு கதையை ஒரே காட்சியில் வைத்து நடித்துக் காட்டுவதாகும். பல காட்சிகளைக்கொண்ட நாடகங்களின் கருத்தைவிட ஒரு காட்சியைக் கொண்ட நாடகத்தின் கருத்து மக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்துவிடும்.

உலகிலேயே மொழியை மூவகையாகப் பிரித்துக் கண்டவர் தமிழர் ஒருவரே. அது இயல், இசை, நாடகம் என்றாகும். அவை எண்ணம், துணிவு, செயல் என்பனவேயாம். இயற்றமிழ் எண்ணத்தை ஊட்டும். இசைத் தமிழ் மக்கள் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச் செய்யும். நாடகத் தமிழ் நடந்து காட்டி மக்களை நல் வழிப்படுத்தும். எண்ணம், துணிவு, செயல் என்பவற்றையே மொழியில் புகுத்தி முத்தமிழாக்கி யிருப்பது வியக்கத் தக்கது.

நாடகம்

நாடகம் என்பதை "நாடு—அகம்" எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். படித்தும் கேட்டும் அறிவதைவிடப் பார்த்தறிவது நல்லது என்பதும் அதை அகம் நன்கு நாடும் என்பதும் இச்சொல்லின் பொருளாம். நாடகம் என்பதைக் கூத்து என்பர். இது தானே கூறுவது, தம்முட் கூறுவது, வெளிப்படையாகக் கூறுவது, மறைந்திருந்து கூறுவது என நால் வகைப்படும்.

கதை

மெய்க் கதை, பொய்க் கதை, கலப்புக் கதை எனக் கதை மூவகைப்படும். இதை முறையே வரலாறு, கற்பனை, சமூகக் கதை எனக் கூறலாம். இவற்றுள் இன்ப முடிவுக் கதையும் துன்ப முடிவுக் கதையும் உண்டு. எதுவாக இருப்பினும் கதையில் ஒரு விறுவிறுப்பு இருத்தல் வேண்டும். விறுவிறுப்பு அற்ற கதை நாடகத்திற்குத் தகுதியற்றது.

கதாசிரியன்

கதை எழுதும் ஆசிரியன் கல்வி, கேள்வி, அறிவு, முதுமை, அனுபவம் ஆகிய ஐந்தும் உடையவனாய் இருத்தல் வேண்டும். ஒழுக்கமும் அவனிடம் அமைந்துவிட்டால் அவன் கதைகளில் ஓர் உயிரோட்டம் ஒடிக் கொண்டே இருந்து மக்களிடத்தே என்றும் மங்காத புகழைப் பெறும்.

கருத்து

நல்ல கருத்துக்களை நாடகக் கதைகளில் புகுத்தியிருக்க வேண்டும். சிறந்த கருத்துக்கள் இல்லையானால் நாடகம் மக்கள் உள்ளத்தைக் கவராது. கருத்துள்ள கதை நெல் போன்றது. கருத்தற்ற கதை பதர் போன்றது. கருத்துள்ள கதையைக் கண்டு செல்லும் மக்கள் உள்ளத்தே சிந்தனை அலை கிளம்பி வாய்மூடி அமைதியாகச் செல்லுவதைக் காணலாம். கருத்தற்ற கதையைக் கண்டு செல்லும் மக்கள் ஓர் ஏளனச் சிரிப்புடனேயே செல்வர். சிறந்த கருத்து என்பது நாட்டையோ, மொழியையோ, மக்களையோ உயர்த்துவதாக இருக்கும்.

நடிப்பு

நடிப்பு என்பது போலி என்றுகும்; போலி என்பது உண்மை அல்லாதது. நாடக மேடையில் காண்பதைவிடப் பல நிகழ்ச்சி களை நாட்டில் காணலாம். ஆனல் அதில் கலை இராது. கலையை நடிப்பில் மட்டுமே காண முடியும். நடிப்பு அபிநய வகை நான்கு. அது உடல் பற்றியும், குரல் பற்றி யும், உடை பற்றியும், நடை பற்றியும் வரும். இதனை வடமொழியாளர், உடலிகம், குரலிகம், உடையிகம், விறலிகம் என்பர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச் சம், பெருமிதம், உவகை, வெகுளி, அமைதி எனச் சுவை அபிநயம் ஒன்பதாகும். நீலி அபிநயம் வெகுண்டோனுக நடிப்பது முதல் நஞ்சுண்டோனுக நடிப்பது வரை 24 வகை யாகும். விறல் 10 வகைப்படும். அவை மெய் மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்த்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித் தல், விழித்தல், வெதும்பல், குரற்சிதைவு, சாக்காடு என்பன. நடிப்பு இலக்கண நூல்கள் குணநூல், சயந்தம், செயிற்றியம் முதலியன பல அழிந்துபோயின. எனினும் அந்நூற் பெயர்களையும், அவற்றின் சில பகுதிகளையும் இன்று சிலப்பதிகாரம் ஒன்றில் மட்டுமே காண முடிகிறது.

நடிகன்

நடிகன் ஒவ்வொருவனும் மொழிப் புலமை, இசைப் புலமை, நடிப்புப் புலமை ஆகிய முப்புலமையும் பெற்றிருக்க வேண் டும். இன்றேல் அவனது நடிப்பு குறிப்பா யிருக்குமே தவிர நடிப்பாயிராது. நடிப் பனைத்தும் நடிப்பாகாது. நடிப்பில் உயிர் பெறுவதே நடிப்பாகும்.

உயிர் நடிப்புக்கு வேண்டியது உணர்ச்சி ஒன்றேயாம். ஒவ்வொரு நடிகனும் தன்னை மறந்து தன் வேடத்திற்கு ஏற்ற ஆளாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அவ னிடமிருந்து உணர்ச்சியும் உயிர்த் துடிப்பும் உள்ள சிறந்த நடிப்புக் கிளம்பும்.

முன்பெல்லாம் நடிப்பை நாடகத்தில் மட் டுமே காண முடிந்தது. இப்போது வியா பாரிகள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், எல்லோரிடத்தும் நடிப் பைக் காண முடிகிறது. மக்களைவிட அமைச்சர்கள் நன்றுக நடிக்கின்றனர். எல்லாவற்றையும்விடச் சிறந்த நடிப்பைத் தேசபக்தர்கள் என்பவர்களிடத்தும், சீர் திருத்தத் தொண்டர்களிடத்தும் காண முடி கிறது. நாட்டின் வறுமை காரணமாகப் பிச்சைக்காரர்கள் பலர் நொண்டி, முடம் போன்று பல்வேறு வேடங்களைத் தாங்கித் திறம்பட நடிக்கின்றனர். இன்று நமது நாட்டில் சிறந்த நடிகர்கள் எனப் பெயர் வாங்கியவர்கள் எல்லாம் நடிப்புக் கலையைப் பிச்சைக்காரர்களிடம் போய்ப் பிச்சை வாங்க வேண்டியிருக்கிறது.

ஒரு பிச்சைக்காரி பங்கீட்டுக் காலத்தில் பகல் 12 மணி வெயிலில் பத்துமாதக் கர்ப் பிணி போல நடித்து மயக்கம் போட்டு விழுந்து பலரை ஏமாற்றிப் பெரும் பொருள் சேர்த்துவிட்டாள். அவள் உடலைத் தளர்த்தி இடது கையால் வயிற்றைத் தாங்கி வலது கையால் நெற்றி வியர்வையை வழித்து "உஸ்" கொட்டிய காட்சி இன்னும் என் உள்ளத்தைவிட்டு மறையவில்லை. அவள் நடிகை; அது நடிப்பு.

பரிசு

பாரதக் கதை. சூதாடும் கட்டம். சகுனி யின் வஞ்சகச் செயல்களைக் கண்டு மக்கள் உள்ளம் கொதிக்கத் தொடங்கியது. கூட் டத்தில் முன் வரிசையில் இருந்த ஒருவன் தன் மிதியடியைக் கழட்டி மேடை மீதுள்ள சகுனியை நோக்கி வீசினன். சகுனி வேடம் பூண்டவன் அம்மிதியடியை எடுத்துக் கண்களில் ஒற்றி, "இது, நடிப்பிற் காக நான் பெற்ற பரிசு" எனக் கூறி வெகு நாள் வரை அதை வெள்ளிப் பேழையில் வைத்துப் பாதுகாத்து வந்தான். அவன் நடிகன். அது நடிப்பு. அது பரிசு.

நடிகர் குழு

இன்று நம் நாட்டில் நடிகர் குழுக்கள் பல உள்ளன. சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னுள்ள நாராயணசாமி பிள்ளை குழு வோடும், சி. கன்னையா குழுவோடும் கட் டுப்பாடும் ஒழுங்கு முறையும் அழிந்தன. இராஜா கோவிந்தசாமி பிள்ளை, சீனிவாசம் பிள்ளை, பைரவ சுந்தரம் பிள்ளை, வேலு நாயர், ஜி. எஸ். முனிசாமி நாயுடு ஆகியவர் களோடு பழமையான நாடக இசையும் நடிப்பும் அழிந்து ஒழிந்தன. இன்றுள்ள குழுக்களில் நவாப் டி. எஸ். இராஜமாணிக் கம் குழுவும், டி.கே.எஸ். சகோதரர்களின் குழுவும் பழமையானவை. ஒ ழு ங் கு முறைக்கும், ஒழுக்க முறைக்கும் எடுத்துக் காட்டாக இருப்பவை. அதிலும் தமிழுக் குத் தொண்டு செய்து தமக்கென்று ஓர் உயர்ந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்ட வர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள். என். எஸ். கே. குழு, எம். ஆர். இராதா குழு, கே. ஆர். இராமசாமி குழு ஆகிய குழுக் களும் அண்மையில் தோன்றிய நிழற்பட நடிகர்களின் தனித்தனிக் குழுக்களும் தமிழ கத்தில் நடிப்புக் கலைக்குத் தொண்டு செய் கின்றன. இவை யாவும் கட்டுப் பாட்டோ டும், ஒழுங்கு முறையோடும் வளர்ந்து நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பது எனது ஆசை. 'அமெச்சூர் சபா' என்ற பொழுது போக்கு நாடகக்குழு நம் நாட்டில் போதிய அளவு தோன்றவில்லை. தோன்றியிருப்பன சிலவும் நன்கு நடைபெற முடிவதில்லை. உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இப்பொழுது நடிப்புக் குழுக்கள் பல தோன்றியிருக்கின்றன. இவை பெரிதும் வரவேற்கப் பெறும்.

ஓரங்கம்

நாடகம் ஓரங்கமாக இருந்தாலும், அதற் கும் கதை, கருத்து, ஆசிரியன், நடிகன், நடிப்பு முதலியன தேவை என்பது இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. நடிப்பதையே

கட்டிட தளவாடங்கள்

பண்டைக்காலச் சிற்பிகளின் கலைத்திறனும் ஆற்றலும்தான் என்னே! எல்லோராவில் பாறைகளைக் குடைந்து செதுக்கப்பட் டுள்ள குகைக் கோயில் களே பழமை சிற்பியரின் திறனுக்குத் தக்க சான்று கும்.

இன்று



இன்று....

திடத்திற்கும் தரத்திற்கும் தேர்ந்த

சங்கர் பிராண்ட்

SANKAR I C BRAND

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

அநேக தேசீய அபிவிருத்தி திட்டங்களில் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

தயாரிப்பவர்:

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

தொழிற்சாலை:

சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:

11/12, ஸெகெண்ட் லைன் பீச், மதராஸ்-1

தொழிலாகக் கொண்டவர்களுக்கு ஓரங்க நாடகம் பயன்படாது; பொழுது போக்கு நடிகர்களுக்குப் பெரிதும் பயன்படும். கல்லூரி விழாக்களிலும், உயர்நிலைப்பள்ளி விழாக்களிலும் நடிப்பதற்கு ஓரங்க நாடகங்கள் ஏற்றவை. இரண்டொரு நடிகர்கள் மட்டும் சேர்ந்து கொண்டு தங்களது நடிப்பைப் பொது மக்களிடத்தில் காட்டிப் புகழ் பெறுவதற்கு ஓரங்க நாடகத்தைத் தவிர வேறு வழியே இல்லை.

திரைகளும், காட்சிகளும், பாட்டும், பக்க வாத்தியமும், பொற்சரிகை உடையும், பொருட் செலவும் இல்லாமல் நடிப்பதற்கு ஏற்ற நாடகம் ஒரு கள நாடகமேயாம். இறுதியாகச் சொல்ல வேண்டுமானால் பெரும் நாடகத்தில் புக, பெரும் நடிப்பில் நுழைய, ஓரங்க நாடகம் பெருந்துணை செய்யும்.

கடமை

இன்று இம் மதுரை நகரில் தமிழ்ச் சங்கப் பொன் விழா நடைபெறுகிறது. முத் தமிழையும் வளர்க்க நாம் முனைந்திருக்கிறோம். தமிழ் தோன்றிய போதே இம் முத் தமிழ்க் கலைகளும் தோன்றின. சேர, சோழ பாண்டியர்களான தமிழ் மன்னர்கள் மூவரும் இக்கலையை வளர்த்தனர். அம் மன்னர்கள் அழிந்ததும் அக்கலைகளும் அழியத் தொடங்கின. அதனை அழிய விடாமல் இடைக்காலத்தில் பாதுகாத்து இக்காலத்தில் நம்மிடம் ஒப்புவித்திருக்கிற அக்கலைஞர்களின் நற்றொண்டு எவ்வளவு பெரியது? அதை எண்ணிப் பார்த்தோமா? அது நமது நீங்காக் கடமையாகும்.

வணக்கம்

ஆதரிப்பாரற்று இருந்த நிலையிலும் தமிழ் இலக்கியங்களை அழிய விடாமல் பனை ஓலைகளில் தம் கையில் எழுத்தாணி கொண்டு நூற்றுக் கணக்கான ஏடுகளில் எழுதி, கரையான்களிடத்தும், தமிழ்ப் பகைவர்களிடத்தும் ஒப்புவித்து விடாமல், பரண்களில் வைத்துப் பாதுகாத்து, வயிறு கூழைக் கண்டு வாரக் கணக்கில் ஆகும் வறுமை வந்தபோதும், பாடை ஏறினும் ஏடது கைவிடாமல் இருந்து வந்து இன்று நம்மிடம் ஒப்புவித்து அழிந்த இயற்றமிழ்ப் புலவர்களே! உங்களுக்கு ஒரு வணக்கம்.

தமிழ் மன்னர்கள் அழிந்ததும், அழியத் தொடங்கி விட்ட இசைக் கலையை அழிய விடாது தடுத்து, "தாசி" என்றும், "வேசி" என்றும் இழித்துரைக்கப் படுகின்ற சொற் களையெல்லாம் பொருட்படுத்தாது, வறுமையால் வாடியபோதும், வயிறு பிழைக்க மானத்தை இழந்தாலும், கலையை இழக்க மாட்டோம் என்ற உறுதி கொண்டு இசைக் கலையைத் தங்கள் உள்ளத்தில் வைத்துப் பாதுகாத்து வந்து இன்று நம்மிடம் ஒப்புவித்திருக்கின்ற இசை வேளாளப் பெண் மணிகளே! உங்களுக்கு ஒரு வணக்கம்.

அரசர்கள் அழிந்த போதே அழியத் தொடங்கிய நாடக் கலையை அழியவிடாது தடுத்து, வறுமையால் வாடியபோதும், காத்து, இராக்கண்ணும் பகற் கண்ணும் விழித்து தங்களைக் கூத்தாடிகள் என்று உலகம் ஏசுகின்ற ஏச்சையும் பொறுத்துத் தங்கள் உடலோடு வைத்துப் பாதுகாத்து வந்து இன்று நம்மிடம் ஒப்புவித்திருக்கின்ற கூத்தாடிக் குடி மக்களே! உங்களுக்கு ஒரு வணக்கம், என முப்பெருங் கலைஞர்களையும் இன்று எண்ணி நினைந்து வணக்கம் செய்து தீர வேண்டும். அவர்கள் தாம் தமிழ் மன்னர்களின் கலைவளர்ப்புச் செயலை இடைக் காலத்தில் செய்து பாதுகாத்தவர்கள். அவர்கள் பாதுகாத்து வந்து இன்று நம்மிடம் ஒப்படைக்காவிடில், நாம் வளர்ப்பதற்குக் கலைகளே இருந்திரா. அம்முப்பெருங் கலைஞர்களுக்கும் வணக்கங் கூறுவதோடு எனது நடிப்புக் கலைப் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

கல்வெட்டுக்கள்

ஆராய்ச்சிப்பேரறிஞர் T. V. சதாசிவப்பண்டாரத்தார், அண்ணாமலைநகர்

★

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப் பட்ட நம் தமிழகமானது பெரியனவும் சிறி யனவும் ஆகிய திருக்கோயில்கள் பலவற் றைத் தன்னகத்துக் கொண்டு விளங்கு வதை யாவரும் அறிவர். நம் நாட்டில் அத்துணைக் கோயில்கள் இருப்பதற்குக் காரணம், பண்டைத் தமிழ் வேந்தர்களும், குறுநில மன்னர்களும், அரசாங்கப் பணி புரிந்த அரசியல் தலைவர்களும், சமயப்பற் றுடையவர்களாய்த் திகழ்ந்த தமிழ் நாட்டிச் செல்வர்களும், பிற அன்பர்களும் தமக்குத் தொடர்புடைய நகரங்களிலும் ஊர்களிலும் தம் வழிபடு கடவுளர்க்குத் திருக்கோயில் கள் அமைத்து விழா நிகழ்த்தத் தொடங்கிய மையே யாகும். அக்கோயில்கள் எல்லாம் நம் முன்னோருடைய சமயப்பற்றையும் பெருமையையும் நம்மனோர்க்கு அறிவுறுத் தும் நினைவுச் சின்னங்களாகவும், வானளாவ உயர்ந்து காண்போர் கண்களைக் கவரும் பெருமிதமுடையனவாகவும் இக்காலத்தும் நின்று நிலவுதல் காணலாம். கோயில் களின் உள்ளே சென்று, கருப்ப இல்லில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அக்கருப்ப இல்லைச் சூழ்ந்துள்ள பிராகாரத் தைச் சுற்றிவரும் போது கருங்கற் சுவர் களின்மேல் வரிசை வரிசையாக எழுத்துக் கள் வரையப்பட்டிருத்தலைப் பார்க்கலாம். அவ்வெழுத்துக்கள் சிற்றுளிகொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும். அவைகளே கல்வெட்டுக்கள் எனவும் சிலா சாசனங்கள் எனவும் கூறப்படுகின்றன. அவற்றைப் பார்த்தவர்கள், எழுத்துக்கள் தமக்கு விளங்காமையால், அவைகளெல் லாம் தேவர்கள்தம் தெய்வ மொழியில் முற் காலத்தில் வரைந்து வைத்தவை யாதல் வேண்டும் என்று சொல்லி வந்தனர். அத் தகைய நிலையில் நாம் இருந்த காலத்தில் அக்கல்வெட்டுக்கள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்தியவர்கள் மேல் நாட்டுப் பேரறிஞர்களேயாவர். அவர்களுள், ராபர்ட் சிவெல், டாக்டர் கீல் ஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஹுல்ட்ஷ் முதலானோர் குறிப் பிடத்தக்கவர் ஆவர். அவர்களுடைய ஊக்கமும் உழைப்பும் இல்லையேல் அவை கள் காலப்போக்கில் அழிந்து பயன்படா மல் போயிருக்கும் என்பது திண்ணம். இந்திய அரசாங்கத்தினரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வெட்டிலா காவும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா கவும் நிறுவி, தக்க அறிஞர்களைக்கொண்டு கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களைப் படி எடுப்பித்தும் புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும் அவற்றால் அறியக்கிடக்கும் பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடு மாறு செய்தனர். அவற்றின் பயனை, பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்து கொள்ள முடியாத நிலையில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது. அன்னியர் ஆட்சியினால் நம் நாட்டில் பல தீமைகள் ஏற்பட்டமை உண்மையே யெனினும் அதனால் சில நன்மைகளும் கிடைத்துள்ளமையை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. அத் தகைய நன்மைகளுள் நமது பழைய வர லாற்றை நாம் அறிந்து கொள்ளுமாறு அர சாங்கத்தினர் கல்வெட்டிலாகா மூலம்

செய்து வந்த அருஞ்செயல்கள் நம்மனோரால் பெரிதும் பாராட்டற்குரியனவாகும்.

இனி, கல்வெட்டுக்கள் நம் நாட்டில் முதலில் எங்ஙனம் தோன்றின என்பதை ஆராய்ந்து காண்போம். பகைவர் முன்னின்று ஆற்றலொடு போர் புரிந்து உயிர் துறந்த வீரர்களை நினைவுகூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலாதல் புதைக்கப் பெற்ற இடங்களிலாதல் அல்லது வேறு தொடர்புடைய இடங்களிலாதல் நடுகல் ஒன்றமைத்து விழா நடத்திப் பாராட்டுதல், முற்காலத்தில் தமிழ் மக்கள் கைக்கொண்டிருந்த ஒரு பழைய வழக்கமாகும். இவ்வுண்மையைப் பழைய தமிழ் நூலாகிய தொல் காப்பியத்திலுள்ள,

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்த
லென்
றிருமூன்று வரையிற் கல்லொடு புணர'
(வெட்சித்திணை–5)

என்னும் சூத்திரப் பகுதியினால் நன்குணரலாம். அந்நடுகல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தது என்பது கடைச்சங்கப் புலவர்களின் பாடல்களால் புலப்படுகின்றது. அதனை,

'நல்லமர்க் கடந்த நானுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'
(அகம்–67)

என்ற அகநானூற்றுப் பாடலும்,

'அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்' (புறம்–264)

என்ற புறநானூற்றுப் பாடலும்,

'நல்வழிக் கொடுத்த நானுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
நல்லிசை கவலை யெண்ணுமிகப் பலவே'
(வரிகள் 387–389)

என்ற மலைபடுகடாம் அடிகளும் தெள்ளிதின் உணர்த்துதல் காணலாம். அந்நூல்களை நுணுகி ஆராயுமிடத்துப் பகைவர் முன்னின்று அஞ்சாமல் போர் புரிந்து புகழுடன் இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய 'பெயரும் பீடுமே' நம் நாட்டில் முதலில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள் என்பது ஐயமின்றித் துணியப்படும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவிய பேரரசரும் சைவ சமய குரவராகிய சுந்தரமூர்த்திகளின் அரிய நண்பரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் தாம் இயற்றியுள்ள திருவாரூர் மும்மணிக் கோவையில்,

"பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்"
(திருவாரூர் மும்மணி, 16)

என்று கூறியிருத்தலால் கடைச் சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளது என்பது நன்கு புலனாகின்றது. அக்காலப் பகுதியில் நம் தமிழ் நாட்டில் சமண முனிவர்கள் தங்கி ஆங்காங்குச் சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தை யாண்டும் பரப்பிவந்த செய்தி வரலாற்றறிஞர் பலரும் அறிந்த தொன்றும். அம்முனிவர்கள் உண்ண நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்கள் பால் அன்பு பூண்டொழுகிய அரசியல் தலைவர்களும் மாணவர்களும் அன்னோரின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்து வைத்திருக்கின்றனர். அத்தகைய கல்வெட்டுக்களை மலைப் பாறைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் பார்க்கலாம். செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையிலும் மதுரை மாவட்டத்திலுள்ள ஆனை மலையிலும் திருச்சிராப்பள்ளிக் குன்றிலும் அக்கல் வெட்டுக்கள் இக்காலத்தும் காணப்படுகின்றன. எனவே, நம் தமிழகத்தில் பண்டை நாகரிக அருஞ்

செயல் புரிந்து இறந்துபட்ட போர் வீரர் களின் பெயரையும் ஆற்றலையும் உணர்த் தும் முறையில் நடு கற்களின்மேல் முத லில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள், பிறகு சமண முனிவர்களின் சமாதிகளி லும் கருங்கற் படுக்கைகளிலும் பொறிக் கப்பட்டு, அதன் பின்னர் அரசர்களும் பிறரும் எடுப்பித்த கருங் கற்கோயில்கள் பலவற்றிலும் வரையப் பெற்றன என்பது தெள்ளியது. இனி, கோயில்களில் கல் வெட்டுக்களைப் பொறிக்கத் தொடங்கிய மைக்குக் காரணம் யாது என்பதை ஆராய் வோம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்ப தாம் நூற்றாண்டு முடிய நம் தமிழ் நாட் டில் ஆட்சிபுரிந்த பல்லவ அரசர்கள் முத லில் கருங்கற் கோயில்கள் அமைத்தனர். அவர்களுக்குப் பிறகு அரசாண்ட சோழ மன்னர்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் தமி ழகத்தில் யாண்டும் கருங்கற் கோயில்கள் எடுப்பித்துப் பெரும் புகழ் எய்தினர்கள். அங்ஙனமே பாண்டி வேந்தர்களும் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் கருங் கற்கோயில்கள் பலவற்றை அமைத்தார்கள். பேரரசர்களின் செயலைப் பின்பற்றிக் குறு நில மன்னர்களும் அரசியல் தலைவர்களும் தமக்குத் தொடர்புடைய ஊர்களில் பல கோயில்கள் கட்டினர்கள். அக்கோயில்கள் எல்லாவற்றிலும் நாள் வழிபாடும் திங்கள் விழாக்களும் ஆண்டு விழாக்களும் சிறப் பாக நடைபெற்றுவரும் பொருட்டு அவற் றை எடுப்பித்த பெரு வேந்தர்களும் சிற்ற ரசர்களும் பெரும் பொருளும் நிலங்களும் வழங்கினர். அவர்களைப் போல் சமயப் பற்றுடைய பிற அன்பர்களும் கோயில் களுக்கு நிவந்தங்கள் அளித்துப் பல் வகைப்பட்ட அறங்கள் புரிய முன்வந்த னர். அவர்கள் எல்லோரும் தாம் கோயில் களுக்கு நிவந்தமாக அளித்தவற்றை விளக்கமாக அவ்வக் கோயில்களின் கருங் கற் சுவர்களில் வரைந்து வைப்பாராயினர். சில சமயங்களில் அவற்றின் படியொன் றைச் செப்பேடுகளில் பொறித்து உரிய கோயிலுக்குக் கொடுப்பது உண்டு. அவர் கள் அவ்வாறு செய்து வந்தமைக்குக் காரணம் அவ்வறங்கள் இடையில் நின்று போகாமல் எக்காலத்திலும் நன்கு நடை பெற்று வருதல் வேண்டும் என்ற ஆர்வ மேயாம். அன்றியும், அவை கோவில் களுக்குரிய தக்க ஆதாரமாக அமைந்து என்றும் பயன்பட வேண்டும் என்பது மாம். கோயில்களுக்கு விடப்பட்டுள்ள நிவந்தங்களைப் பலரும் உணர்ந்து அங்கு நடைபெற வேண்டிய நாள் வழிபாடு, திங்கள் விழா, ஆண்டு விழா முதலான எல்லாம் முறைப்படி தவறாமல் நிறை வேறிவருகின்றனவா என்று ஆராய்வ தற்குப் பயன்படுமாறு பொது மக்கள் எல் லோரும் பார்க்கக்கூடிய புறச் சுவர்களின் மேல் கல்வெட்டுக்கள் வரையப்பட்டுள் ளமை அறியத் தக்கதாகும். அக்காலத் தில் கோயில்களுக்குத் திருப்பணிபுரிய விரும்பும் அன்பர்கள் முதலில் அரசாங் கத்தினரிடம் உத்தரவு பெற்று, அக் கோயில்களிலுள்ள கல்வெட்டுக்கள் எல் லாவற்றையும் படி எடுத்து வைத்துக் கொண்டு, திருப்பணி முடிவெய்திய பின் னர், அரசியல் அதிகாரிகள் பார்த்துக் குறிப்பிட்ட இடங்களில் அவற்றை மீண் டும் எழுதுவித்தல் வேண்டும். இது பண்டைத் தமிழ் வேந்தர்களது ஆணை யாகும். இதனால், கல்வெட்டுக்கள் கோயில்களுக்கு எத்துணை இன்றியமை யா ஆதாரங்களாக அரசர்களால் கருதப் பட்டு அந்நாளில் பாதுகாக்கப்பட்டு வந்தன என்பது தெள்ளிதிற் புலனுதல் காண்க.


இனி, கோயில்களில் நாள்தோறும் நிகழ் தற்குரிய வழிபாடுகளும், விழாக்காலங்களில் நடைபெற வேண்டிய சிறப்பு நிகழ்ச்சி களும், பகலும், இரவும் இடையீடின்றி எரிக்கப்படும் நுந்தாவிளக்குகளும், வழி பாட்டு நேரங்களில் ஏற்றப் பெறும் சந்தி

விளக்குகளும், அங்குப் பணிபுரியும் தேவ கன்மிகளின் கடமைகளும், அங்குள்ள அணி கலன்கள், வெள்ளிக் கலங்கள் செப்புக் கலங்கள் முதலியவற்றின் பெயர்களும், அவற்றின் எடைகளும், கோயில், கோபுரம், மண்டபம், திருச்சுற்று மாளிகை, படிமம் முதலியவற்றின் பெயர்களும், அவற்றை அமைத்தோர் பெயர்களும் கல்வெட்டுக் களில் விளக்கமாகக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். இங்ஙனம் கோயில்களுக்குத் தொடர்புடைய செய்திகள் பலவற்றை யுணர்த்தும் கல்வெட்டுக்களே யல்லாமல் வேறு செய்திகளைக் கூறும் கல்வெட்டுக் களும் கோயில்களில் பொறிக்கப்பட்டுள் ளன. அவற்றில் அரசர்கள் ஊர்ச் சபை களுக்கும் கோயில்களுக்கும் அனுப்பிய திரு முகங்களும், அரசாங்க அறிக்கைகளும், குறுநில மன்னர்கள் தமக்குள் செய்து கொண்ட உடன்படிக்கைகளும், அரசர்கள் பொது மக்களுள் சில வகுப்பினர்க்கு வழங் கிய உரிமைப் பத்திரங்களும், கிராம சபை கள் அமைத்தற்குரிய விதிகளும், அதில் உறுப்பினராதற்குரியவர்களின் தகுதியும் அன்னோரின் கடமையும், அச்சபையார் செய்த சில குறிப்பிடத் தக்க முடிபுகளும், அரசர்கள், அரசியல் அதிகாரிகள் முதலா னோரின் வீரச்செயல்களையுணர்த்தும் பாடல் களும், அரசியல் தலைவர்களுக்கும் புலவர் களுக்கும் மருத்துவர்கட்கும் கல்லூரிகட் கும் நூல் நிலையங்கட்கும் அரசர்களும் பிற ரும் வழங்கிய இறையிலி நிலங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றால் பண்டைத் தமிழ் வேந்தர்களின் அரசியல் முறைகளும், கிராம ஆட்சியும் சமுதாய வாழ்க்கையும், சமய நிலையும், நாகரிகமும், கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலியன வும் அந்நாளில் எவ்வாறு இருந்தன என் பதை நன்கறியலாம்.

பொதுவாகக் கல்வெட்டுக்களை நோக்கின் முதலில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கல வாசக மும், பிறகு அக்கல்வெட்டுத் தோன்றிய காலக் குறிப்பும், பின்னர்க் கல்வெட்டுச் செய்திகளும், அதன் பின்னர் அதற்குத் தொடர்புடையவர்களின் கையெழுத்துக் களும், இறுதியில் 'இது பன்மாகேஸ்வர ரக்ஷை' 'இது ஸ்ரீ வைஷ்ணவரக்ஷை' 'இவ் வறங்காத்தார் திருவடி என் தலைமேலன' 'அறமறவற்க – அறமல்லது துணையில்லை' என்ற ஓம்படைக்கிளவிகளுள் ஒன்றுயி னும் சிலவாயினும் காணப்படும். சில கல் வெட்டுக்களில் ஓம்படைக் கிளவியோடு 'அவ்வறத்தைச் சிதைத்தார் அச்செயலால் அடையும் பழிபாவங்களும் சேர்த்து வரையப்பட்டுள்ளன. அவை, 'இது இறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக்காதமும் செய்தார் செய்த பாவ மும் எய்துவான்' 'இதற்குத் தீங்கு வேண்டு வான் வழி அறுக' 'இது விலக்குவான் கங்கையிடை குமரியிடை குராற் பசுகொன் றான் செய்த பாவங் கொள்வான்' என்பன வும் பிறவுமாம்.

இனி, கல்வெட்டுக்களில் காணப்படும் காலக்குறிப்புக்கள் எல்லாம் அந்நாட்டு வேந்தனது ஆட்சியாண்டேயாகும். சில கல்வெட்டுக்களில் அரசனது ஆட்சி யாண்டோடு சகாப்தமும் கலியப்தமும் கொல்லம் ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளன. அரசனது ஆட்சியாண்டிற்கு முன் அவ னுடைய வீரச் செயலும் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் பொறிக்கப்படுவது பழைய வழக்கம். அதோடு நில்லாமல் மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரையும் முறை, முதல் இராசராச சோழ னுல் கி. பி. 993-ஆம் ஆண்டில் முதலில் தொடங்கப் பெற்றது. அவனைப் பின்பற்றி மற்ற அரசர்களும் மெய்க்கீர்த்தி அமைத்துக் கல்வெட்டுக்கள் வரையத் தொடங்கினர். அரசனுடைய ஆட்சியாண்டு ஏறஏற மெய்க்கீர்த்தியும் புதியபுதிய செய்திகளோடு வளர்ந்து கொண்டேபோகும். அதன் துணை கொண்டு ஒவ்வொரு வேந்தனுடைய ஆட் சியிலும் எவ்வெவ்வாண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந் தறிந்து கொள்ளலாம். ஆகவே, மெய்க் கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுக்கள் எல்லாம் வரலாற்றாராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரங்களாயிருத்தல் உணரற்பாலதாகும்.

நம் நாட்டு வரலாற்றாராய்ச்சிக்கு இன்றி யமையாதனவாகவுள்ள கல்வெட்டுக்கள் எல்லாம் படி எடுத்து அச்சிடப் பெற்று வெளிவரின், உண்மையான பல பல வர லாறுகளை நாம் அறிந்து மகிழலாம் என்பது திண்ணம்.



வைணவம்

திரு. B. R. புருஷோத்தம நாயடு, தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

★

வைணவம் என்பதற்கு, விஷ்ணு சம்பந்தத்தையுடையது என்பது பொருளாகும். விஷ்ணு என்ருல், எங்கும் நிறைந்துள்ளவன் என்பது பொருள். நிறைவு என்பது, சொரூபத்தாலும் ஏற்படலாம்; ஞானத்தாலும் ஏற்படலாம். இறைவனுடைய சொரூபம் '**விபு**' என்று கூறப்படுவதால், சொரூபத்தாலும் ஞானத்தாலும் நிறைந்துள்ளவன் என்பது பெறுதும். ஆகவே, விஷ்ணு என்பதற்கு,உயிர்ப்பொருள்கள் உயிரல் பொருள்கள் எல்லாவற்றிலும் நிறைந்து வசிக்கின்றவன் என்பது தெளிந்த பொருளாகும். 'அந்த நிறைவு, ஆகாயம் நிறைந்திருத்தல் போன்ற நிறைவு அன்று; உள்ளே நின்று நியமனம் செய்வது' என்று வேதாந்தங்கள் கூறுகின்றன. விஷ்ணு, வாசுதேவன், நாராயணன், இறைவன் என்பன ஒரு பொருட் சொற்கள்.

இத்தகைய விஷ்ணுவின் சம்பந்தத்தையுடையவர்கள் '**வைஷ்ணவர்கள்**' எனப்படுவர். ஆயின், உலகமே விஷ்ணு சம்பந்தத்தையுடையது ஆதலால், உலகில் உள்ளார் அனைவரும் வைஷ்ணவர்களாகத் திகழ வேண்டுமே? அங்ஙனம் இன்றே? எனின், அற்றன்று; ஈண்டு 'விஷ்ணு சம்பந்தம்' என்பதற்கு, விஷ்ணு[1] சம்பந்த ஞானம் என்பது பொருளாய், அத்தகைய விஷ்ணு சம்பந்த ஞானமுடையவர்களே வைஷ்ணவர்கள் என வழங்கப்படுகின்றனர் என்க.

"குறிகொள் ஆயிரத்துள் இவைபத்தும்
திருக்குறுங் குடியதன்மேல்
அறியக்கற்று வல்லார் வைட்ணவர் ஆழ்கடல்
ஞாலத்துள்ளே"

என்பது தமிழ் மறை. "ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காண்' என்று சீயர் பலகாலும் அருளிச் செய்வர். அதாவது, பிறர் அநர்த்தம் கண்டால் 'ஐயோ!' என்று இரங்குவானாகில் அவன் நமக்குப் பகவத் சம்பந்தம் உண்டு என்று இருக்க அடுக்கும்; இத்தனையும் வேண்டும் பட்டிடுவானுக்கு என்று இருந்தானாகில் அவன் நமக்குப் பகவத் சம்பந்தம் இல்லை என்று இருக்க அடுக்கும்" என்ற நம்பிள்ளை ஈட்டு வாக்கியமும் இப்பொருளே பற்றி எழுந்தது.

ஆசிரியர் தொல்காப்பியனர் காலத்துக்கு முன்னரே தமிழ் நாட்டில் வைணவ சமயக் கருத்துக்கள் பரவி வேரூன்றி இருந்தன என்

---

[1] விசேஷண விசேஷ்ய சம்பந்தம், ரக்ஷ்ய ரக்ஷக சம்பந்தம், சேஷ சேஷி சம்பந்தம், பர்த்ரு பார்யா சம்பந்தம், ஞாத்ரு ஜ்ஞேய சம்பந்தம், ஸ்வஸ்வாமி சம்பந்தம், சரீர சரீரி சம்பந்தம், தார்ய தாரக சம்பந்தம், போக்த்ரு போக்ய சம்பந்தம் எனச் சம்பந்தம் ஒன்பது வகைப்படும்.

பதும்,[1] திருமாலுக்குக்கோயில்கள் இருந்தன என்பதும், தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களையும், தொல்காப்பியங்களான சங்க இலக்கியங்களையும் முறையே கற்றுக் கேட்டுத் தெளிந்த அறிஞர்கள் அறுதியிட்டுக் கண்ட உண்மை. ஆதலால், இதனைப் **'பழந்தமிழர் சமயம்'** எனக்கூறின் மிகையாகாது. வேரூன்றி இருந்த இச்சமயம் பின்பு ஆழ்வார்கள் காலத்தில், முளைத்து எழுந்து தண்பணை போக்கிச்சாகம் தழைத்து அரும்பி மலர்ந்தது. பின் ஆசையுடையார் அனைவரும் நுகரலாம்படி போகம் கனி ஒன்று பழுத்தது இராமானுசர் காலத்தில்.

இச்சமயம் **'விசிஷ்டாத்வைதம்'** என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. விசிஷ்டாத்வைதம் என்பது, விசிஷ்டமாகிய அத்வைதம்; அல்லது விசிஷ்டத்தினுடைய அத்வைதம் என்று பிரிக்கப்படும். அத்வைதம் என்றால் இரண்டு அல்லாதது; அதாவது, ஒன்று என்பது பொருள். விசிஷ்டம் என்பதற்கு, விசேஷணத்தோடு கூடியது என்பது பொருள். விசேஷணம் என்பது, ஈண்டு, விட்டுப் பிரியாத தர்மம் என்பதனைக் குறிக்கும். எனவே, விசிஷ்டாத்வைதம் என்பதற்கு, உயிர்ப் பொருள் உயிரல் பொருள்கள் ஆகிற விசேஷணத்தோடு கூடிய பரம் பொருள் ஒன்று என்பது பொருளாகும்.

வைணவ சமயத்துக்கே அசாதாரணமாக உரியனவற்றுள் ஒரு சிலவற்றை மிகச் சுருக்கமாக ஈண்டு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

வைணவர்கட்கு, சேதன அசேதனங்கள் எல்லாவற்றையும் தனக்குச் சரீரமாகவுடைய ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே பரம் பொருள். அவன் திருவருள் ஒன்றே உபாயம். அவன் திருவருளால் அவனை அடைந்து அவனுக்குத் தொண்டு செய்தலே பரமபுருஷார்த்தம். இம்மூன்றனையும் **'தத்வ ஹிதபுருஷார்த்தங்கள்'** என்று கூறுவர்.

வைணவ சமயத்துக்கு, சித்தும் அசித்தும் ஈசுவரனும் எனத் தத்துவங்கள் மூன்று. ஆயின், "[2] எல்லாப் பொருள்களும் பிரமமாகவேஇருக்கின்றன" என்றும் "[3]பொருள் ஒன்றே, இரண்டாவது இல்லை" என்றும் வேதாந்தங்கள் கூறுகின்றனவே; மூன்று என்றல் முரணாகாதோ? எனின், பிரகார பிரகாரிகள் ஐக்கியத்தால் ஒன்று என்னலாய், சொரூபபேதத்தால் பல என்னலாய் இருத்தலின் முரணாகாது என்க.

இவற்றுள், அசித்தாவது, மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான மூலப்பகுதி. இது, முக்குணங்களோடு கூடினதாய், என்றும் உள்ளதாய், எங்கும் நிறைந்ததாய், எப்பொழுதும் வேறு பாட்டினை அடையக் கூடி

---

[1] தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத். "மாயோன்". 5. "மேவிய சிறப்பின்" 28. புறத். "மாயோன் மேய மன்" 60 முதலிய சூத்திரங்களையும், அகநானூறு, 59, 70, 220, 175, 137 முதலிய செய்யுட்களையும், புறநானூறு, 56, 57, 58, 174, 198, 378 முதலிய செய்யுட்களையும், பதிற்றுப்பத்து, 31, 7-ஆம் பத்தின் பதிகச் செய்யுள் முதலியவற்றையும், கலித்தொகை, 103, 104, 105, 126 முதலிய செய்யுட்களையும், பெரும்பாணாற்றுப்படை, 372, 373, 391, 392 முதலிய வரிகளையும், சிலப்பதிகாரம், நாடு காண்காதை, 9, 10 வரிகள், காடு காண்காதை 35-51, 91-136 வரிகளையும், பரிபாடல், 1, 2, 3, 4 13, 15-ஆம் செய்யுட்களையும், மற்றும் பிற இடங்களில் வந்துள்ளனவற்றையும் படித்து அறிதல் தகும்.

[2] "ஸர்வம் கல்பிதம்பிரஹ்ம" [3] "ஏகமேவாத்விதீயம்" [3] விசிஷ்டாத்வைதம் என்றதன் பொருளை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

"ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும், வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்" என்பது நன்னூல்.

சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான பாங்கி லிமிடெட்

தபால் பெட்டி நிர். 609,
லஸ், மைலாப்பூர், சென்னை - 4

பிரஸிடெண்ட்:
ஸ்ரீ N. S. ராமலிங்கம், B. A.,
(அரசியல் & பொது நிர்வாஹத்தில் பட்டம் பெற்றவர்)

அங்கீகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	30,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	15,75,000
ரிஸர்வ்கள் ...	ரூ.	19,78,116

விவசாயிகளுக்கு நீண்டகால கடன் வசதி அளிக்கும் மத்திய கூட்டுறவு பாங்கி. இந்த பாங்கார் பிரதம நில அடமான பாங்கிகளால் சாட்டுதல் செய்யப்பட்ட முதல் அடமானக் கடன் பத்திரங்களின் பேரிலும், பாங்கின் இதர சொத்துக்களின் ஆதாரத்தின் பேரிலும் 20 வருட டிபெஞ்சர் கடன் — வழங்குகின்றனர். —

டிபெஞ்சர்களுக்கான அசல், அதற்கான வட்டி முதலியவை சென்னை சர்க்காரால் உத்திரவாத மளிக்கப்பட்டுள்ளன. இவை டிரஸ்ட் செக்யூரடிகளாகும். 1938ஹூ இன்ஷ்யூரன்ஸ் சட்டப்படியும் அங்கீகரிக்கப்பட்ட செக்யூரடிகள். டிபெஞ்சர்கள் கால கெடுவடையும்பொழுது தொகை செலுத்த — மீட்சி நிதி (SINKING FUND) ஏற்படுத்தப்பட்டுள்ளது. —

30—6—1955 ல் ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்ட் சுருக்கம்

பொறுப்புகள்		ஆஸ்திகள்	
1. செலுத்தப்பட்ட மூலதனம் ...	15,75,000	1. கைவசமும், பாங்கியிலுமுள்ள ரொக்கம்	3,46,173
2. ரிஸர்வ் & இதர நிதிகள்	19,78,116	2. பிரதம பாங்கிகளுக்கு கடன்கள்	3,42,97,070
3. டிபெஞ்சர்கள்	4,29,49,300	3. மீட்சி நிதி (Sinking Fund) முதலீடுகள்	1,16,35,199
4. டிபாஸிட்டுகள் கடன்கள் & ஓவர் டிராப்ட்கள்	22,31,262	4. இதர முதலீடுகள்	25,94,162
5. சில்லரை பொறுப்புகள்	6,35,188	5. சில்லரை ஆஸ்திகள்	7,33,481
6. வசூலாகாத தவணைகடந்த வட்டி —	609		
7 நிகர லாபம் —	2,36,610		
	4,96,06,085		4,96 06,085

O. V. சின்னஸ்வாமி, பி.ஏ., பி.எல்.,
காரியதரிசி

தாய், [1]24 தத்துவங்களாக விரியக்கூடிய தாய், சுத்த சத்வம், மிஸ்ர சத்வம், சத்வ சூன்யம் என்று மூவகைப் பாகுபாட்டோடு கூடியதாய் இருக்கும். **சித்தாவது, உயிர்.** இது, என்றும் உள்ளதாய், அணு அளவினதாய், ஞான ஆனந்த லக்ஷணமாய், ஞானத்தைப் பண்பாகவுடையதாய், விகாரம் அற்றதாய், இறைவன் ஏவியபடி நடப்பதாய், இறைவனுல் தரிக்கப்படுவதாய், இறைவனுக்கு அடிமையாய், [2]25-வது தத்துவமாய், பத்தர், முத்தர், நித்தியர் என்னும் வேறு பாட்டால் மூவகைப்பட்டதாய், இருக்கும் **ஈசுவரன்,** மூலப் பகுதியின் விகாரமாய் விரிந்துள்ள [3]24 தத்துவங்களாலாய எல்லாப் பொருள்களையும், 25-வது தத்துவமாகிய எல்லா ஆத்மாக்களையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு அந்தர்யாமியாக நிறைந்து நின்று, அவற்றை எல்லாம் தரிக்கின்றவனுய், ஏவி நடத்துகின்றவனுய், சேஷியாய், பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்னும் ஐவகை நிலைகளையுடையவனுய் இருக்கும் இறைவனுவான்.

உயிர், மூலப் பகுதியின் விகாரமாகிய உடம்பைத் தனக்குச் சரீரமாகக் கொண்டு இருத்தல் போன்று, இறைவன் உடம்பு, உயிர் என்னும் இரண்டினையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு தான் சரீரியாய் இயங்குவிக்கிருன்.

"திடவிசும்பு எரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவதுமாய்
அவைஅவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து
எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே."

என்பது தமிழ் மறை. உயிர், உடலுக்குள் நின்று உடலைத் தாங்கி இயங்குவித்தல் போன்று, இறைவனைவன் உடல் உயிர் என்னும் இரு வேறு பொருள்கட்கும் உள் நின்று இவற்றைத் தாங்கி ஏவி நடத்துகிருன் என்பது இத்திருப்பாசுரத்தின் கருத்து. "இந்தச் சரீரத்துக்கு இவ்வாத்மா தாரகனுய், நியாமகனுய், சேஷியாய் இருக்குமாறு போன்று, தான் இரண்டற்கும் தாரகனுய், நியாமகனுய், சேஷியாய் நின்று நடத்திக்கொண்டு போகின்றன் என்று, மேலே சொன்ன சாமாநாதிகரண்யத்துக்குக் காரணம் சரீர ஆத்மபாவம் என்கிறார்" என்பது நம்பிள்ளை ஈடு. ஆக இம் மூன்று தத்துவங்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எக்காலத்தும் தத்தம் இயல்பை விடாமல் ஒன்று சேர்ந்து உள்ளன என்பது வைணவ சித்தாந்தமாகும்.

இந்தச் சித்தாந்தத்தை விளக்கவே வைணவ சமயத் துறவிகள் மூன்று கோல்களை ஒன்முகப் பிணைத்துக் கையில் ஏந்தி உள்ளனர். இதனை **'முக்கோல்'** என்று கூறுவர்.

---

[1] மண் முதலான பூதங்கள் 5, தன்மாத்திரைகள் 5, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, மான் அகங்காரம், மனம், மூலப் பகுதி 4, ஆக 24.

[2] "இவ்விருபத்தைந்து தத்துவமல்லது உலகெனப் பிறிது ஒன்று இல்லை என உலகினது உண்மை அறிதலின் அவன் அறிவின் கண்ணதாயிற்று" என்பது திருக்குறள் பரிமேலழகருரை. —குறள் 27.

"மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வ தறிவு." —என்பது வெண்பாமாலை.

[3] "பாலெனக் காலெனப் பாகென ஒன்றென, இரண்டென மூன்றென நான்கென ஐந்தென, ஆறென ஏழென எட்டெனத் தொண்டென, நால்வகை ஊழிஎண் ணவிற்றும் சிறப்பினை"

என்றது, பூதங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் ஞானேந்திரியங்களுக்கும் புலன்களுக்கும் மன முதலிய அந்தக்கரணங்கள் மூன்றும் மூலப் பகுதியும் புருடனும் எனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனுலும் எக்காலத்தும் ஆராயப்படும் பெருமையையுடையை என்றவாறு என்ற பரிபாடற் பகுதியையும், அதன் உரையையும் நோக்குக.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால், துறவி கள் இவ்வாறு முக்கோல் ஏந்தும் வழக்கம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிய வழக்கமாக உள்ளது என்பது அறியலாம்.

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற
முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேரோரா
நெஞ்சத்துக்குக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை
அந்தணீர்"

என்பது கலித்தொகைச் செய்யுட்பகுதி. மேற்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தா னும், இக்கலித்தொகைச் செய்யுட் பகுதியா னும் கூறப்பட்ட அந்தணர் ஒரு நிலையுடை யவராதல் தெளிதல் தகும். முக்கோல் ஏந் திய அந்தணர்கள் ஐம்பொறிகளையும் வென் றவர்; மனம் இறைவனை அல்லது வேறு ஒன்றனையும் விரும்பாத இயல்பினர் என்பது தெளிவாகின்றது.

"அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற திருக்குறளும் மேற்கூறிய அந்தண ரையே இலக்கியமாகக் கொண்டு எழுந்தது.

இவர்கள் '**முற்கோற்பகவர்**' என்ற பெய ரால் அகப்பொருட் கோவை முதலிய இலக் கியங்களில் பேசப்படுகின்றனர். சித்து அசித்து ஈசுவரன் எனத் தத்துவங்கள் மூன்று என்பதனை உலகினர்க்கு அறிவுறுத் தும் பொருட்டு முக்கோலைத் தரித்திருப்பவர் களாதலானும், பகவானுகிய ஸ்ரீமந் நாரா யணனுக்கு அடியவர்களாதலானும், முற் றத்துறந்த முனிவர்களாதலானும் '**முக் கோற்பகவர்**' எனப் பேசப்படுகின்றனர்.

"பூவில்புகையும் விளக்கும் சாந்தமும் நீரும்
மலிந்து
மேவித்தொழு மடியாரு பகவரும்
மிக்கதுலகே"

என்பது தமிழ்மறை.

உலகு ஆதிபகவன் முதற்று: ஒரு பொருள் உண்டாவதற்கு மூன்று வகை யான காரணங்கள் வேண்டும் என்பர். குட மாகிய ஒரு பொருள் உண்டாவதற்கு மண் ணுகிய முதற்காரணமும், அக்குடத்தைச் செய்கின்ற குலாலனுகிய நிமித்த காரண மும், செய்தற்குக் கருவியாக உள்ள தண்ட சக்கரங்களாகிய துணைக் காரணமும் வேண் டும். இங்ஙனமே உலகம் தோன்றுவதற்கும் இம்மூன்று காரணங்களும் ஒரு தலையாக வேண்டற்பாலனவாம். உலகத் தோற்றத் திற்கு இறைவன் ஒருவனே இம்மூன்று கார ணங்களுமாக உள்ளான் என்பது வைணவ சித்தாந்தமாகும். யாங்ஙனம் எனின், சித்தும் அசித்தும் சூக்ஷ்மமாக இருக்கும் நிலையில் — உலகத் தோற் றத்துக்குமுன்—அவற்றுக்குள் இறைவன் அந்தர்யாமியாக இருக்கும் நிலையையே இறைவன் உலகத்திற்கு முதற்காரணம் என்றும், சூக்ஷ்மமாக இருக்கும் சித்து அசித்துக்களை வெளிப்படுத்தி உலகத்தைப் படைப்போம் என்று இறைவன் எண்ணு கின்ற நிலையையே இறைவன் உலகத்திற்கு நிமித்தகாரணம் என்றும், இறைவனுடைய ஞானம் சக்தி முதலியவை துணைக்காரணம் என்றும் கூறுவர். சூக்குமசித்து அசித்துக் களோடு கூடி இருக்கின்ற தன்மையால் முதற்காரணமும் சங்கல்பத்தோடு கூடி யிருக்கின்ற தன்மையால் நிமித்தகாரணமும், ஞானம் சக்தி முதலிய குணங்களோடுகூடி இருக்கின்ற தன்மையால் துணைக் காரண மும் ஆக, மூன்று காரணங்களும் இறை வனே ஆவான் என்றபடி.

"தானேர் உருவே தனிவித்தாய்த் தன்னின்
மூவர் முதலாய
வானேர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும்
முற்றுமாய்"

என்பது தமிழ்மறை. "[1] ஸதேவ, ஏகமேவ, அத்விதீயம்" என்கிறபடியே, இங்கே, '[2]தான், ஒரு, தனி' என்கிற அத்விதீய பதங்கள் மூன்று உண்டாய் இருந்தன; இவற்றுல் கொள்ளுகிற விநியோகம் என் என்னில், சிருஷ்டியைப் பிரசங்கிக்கையாலே காரண விஷயமாய்க் கிடக்கின்றன. மூன்றுவிதகாரணங்களும் தானே என்கை. 'தான்' என்கிற இதனுல் முதற்காரணம் வேறு இல்லை என்கை. 'ஓர்' என்கிற இதனுல் துணைக்காரணம் வேறு இல்லை என்கை. 'தனி' என்கிற இதனுல் நிமித்த காரணம் வேறு இல்லை என்கை. ஆக, அழகிய மூன்று காரணமும் தானே என்கை என்றபடி" என்பது ஈப்பிள்ளை ஈடு.

நன்று; 'முதற்காரணமே காரியப்பொருளாக மாறும்' என்பது முதற்காரணத்துக்குக் கூறப்படும் சாதாரண விதியாதலின், இங்கு இறைவனே இவ்வுலகப் பொருள்களாக மாறிவிட்டானு எனின், அங்ஙனம் இன்று. இவ்வுலகப் பொருள்கட்கு (உயிர் உடல் எல்லாவற்றிற்கும்) அவற்றின் நுண்ணிய நிலை முதற்காரணம். பருப்பொருளாக உள்ள இந்நிலைமை காரியம். இறைவன் நுண்ணிய நிலையிலே உள்ள சித்து அசித்துக்கள் உள்ளேயும் அந்தர்யாமியாக உள்ளான். பருப்பொருளாக உள்ள இந்நிலையிலும் அந்தர்யாமியாக உள்ளான். நுண்மையான சித்து அசித்துக்களில் இறைவன் அத்தர்யாமியாக இருக்கும் நிலை முதற்காரணம். பருப்பொருளாக உள்ள சித்து அசித்துக்களில் இறைவன் அந்தர்யாமியாக உள்ள நிலையே காரிய நிலையாகும். அதனுல், இறைவன் முதற்காரணமாக உள்ள நிலையிலும், காரியமாக உள்ள நிலையிலும் சிறிதும் வேறுபடுவது இல்லை என்க.

"நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே மனம் செய் ஞானத்துள் பெருமை மாகூணதோ மாயோனே!" என்பது தமிழ் மறை. இத் திருப்பாசுரத்தில் 'முதலிற் சிதையாமே' என்ற தொடர் இக்கருத்தை மிக அழகாக விளக்குகிறது. தன்னுடைய நிலையில் சிறிதும் வேறுபாடின்றியே எல்லாப் பொருள்கட்கும் வித்தாக உள்ளான் என்பது கருத்து. "முதலில் சிதையாமே[3] அவற்றை உண்டாக்குமிடத்துத் தானை தன்மையில் குறைவாராதபடி இருப்பான். அதாவது, விசேடணங்களான சேதந அசேதநங்களினுடைய சொரூப சுபாவ விகாரங்கள் விசேடியான பரம்பொருள் உருவத்தில் இல்லை என்றபடி. ஆயின், அப்படி உளதாமோ எனின், மட்பிண்டமானது பானை அகல் முதலிய பொருள்களாக மாறியவுடனே அம்மண் உருண்டையான உருவம் அழிந்துவிடும்; இங்கு அது இல்லை; நாட்டில் காரியங்களை

---

[1] "ஸதேவ ஸோம்யே தமக்ர ஆஸீத் ஏக மேவாத்விதீயம்" என்பது சாந்தோக்ய உபநிடதம். 6. 2: 1. "ஸதேவ, ஏகமேவ, அத்விதீயம்" என்பன முறையே, துணைக்காரணம், முதற் காரணம், நிமித்த காரணம் வேறின்மையைக் காட்டுகின்றன.

[2] "ஒற்றெருரு தனியே தானே தன்கணே உலக மெல்லாம் பெற்றவன்" என்ற கம்பராமாயணச் செய்யுட் பகுதியும் இக்கருத்தேபற்றி எழுந்தது.

[3] சின்னூல் பலபலவாயால் இழைத்துச் சிலம்பி பின்னும், அந்நூல் அருந்திவிடுவதுபோல, அரங்கர் அண்டம், பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே, மன்னூழி தன்னில் விழுங்குவர் போத மன மகிழ்ந்தே என்றூர் திவ்வியகவி.

சொரூப விகாரம் இல்லாமல் இருந்து கொண்டே சிலவற்றை உண்டாக்குதலும், அங்ஙனம் உண்டாக்கினவற்றை உட்கொள்ளுதலும், அல்ப சக்தியையுடைய சிலந்திப் பூச்சிக்கு இயல்பாகும் போது, சொரூபத்திற்கு விகாரம் இல்லாமல் இருந்துகொண்டே அண்டங்களைப் படைத்தலும் விழுங்குதலுமாகிய இயல்பு சர்வ சக்திகனை இறைவனுக்குக் கூடுதல் அரிது அன்று என்க." ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் சர்வ சக்திக்குக் கூடா தொழியாதிறே" என்ற தத்வத்திரையமும் ஈண்டுக் கருதுதல் தகும்.

தக்ஷிண ரயில்வே

தென் இந்தியாவிற்கு விஜயம் செய்து

கீழ்க்கண்ட இடங்களைக் கண்டு களியுங்கள்

★

பாதாமி : கி. பி. 6-வது நூற்றாண்டில் இருந்த பிரசித்திப்பெற்ற ஜைனர் கள் கலாசாரம், குகைக் கோயில்.

பீஜப்பூர் : சாந்தம் நிலவிய அரங்கமும், உலகிலேயே இரண்டாவதான மிகப் பெரிய மண்டபமும் உடைய கோல் கும்பாஸைப் பார்க்க லாம்.

சிதம்பரம் : நடராஜர் கோயில் கொண்டுள்ள அற்புத ஸ்தலம். தெய்வீக நடனமாடுபவராக இங்கு காட்சியளிக்கிறார்.

குற்றாலம் : (தென்காசி மார்க்கம்) நீர் வீழ்ச்சிக்கு பிரசித்திபெற்றது: பிரபல ஸ்நான கட்டம். ஆரோக்கியத்திற்கு விஜயம் செய்யவேண்டிய இடம்.

ஹம்பி : (விஜயநகரம்) என்றும் மறக்க முடியாத ஹிந்து சாம்ராஜ்யமான — விஜயநகர ராஜ்யத்தின் பழைய தலை நகரின் அற்புத சின்னங்கள்.

கொடைக்கானல் : மதுரைக்கு அருகிலுள்ள ரமணீயமான மலை வாசஸ்தலம்.

மதுரை : பண்டைக்கால பாண்டிய மன்னர்களது தலை நகர் — பிரசித்தி பெற்ற மீனாக்ஷி கோயில்.

மைசூர் : ஜோதி மயமான நகரம் — எல்லோரையும் வசீகரிக்கும் பிருந் தாவன தோட்டங்கள், மைசூரிலிருந்து 10 மைல்கள்தான்.

உதகமண்டலம் : இந்தியாவிலுள்ள மலை வாசஸ்தலங்களில் தலை சிறந்தது.

ராமேச்வரம் : புண்ணிய ரோடி, கோயில் தரிசனம் செய்ய வேண்டிய புனித ஸ்தலம்

திருப்பதி : பாலாஜி என்ற வெங்கடேசப் பெருமாள் கோயில் கொண்டுள்ள ஸ்தலம். ஒவ்வொரு நாளும் உற்சவ தினமாகும்.

திருச்சினாப்பள்ளி : பிரசித்திபெற்ற ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் கோயில்கள்.

திருவனந்தபுரம் : புகழ் மிகுந்த சித்ரகூடம், மிருகக் காட்சி சாலை, மியூசியம்.

சென்னை

சீப் கமர்ஷியல் சூபரின்டெண்டெண்ட்.

உண்டாக்குகிற காரணத்தின்படி அன்று இவன்படி என்கிறார்'' என்பது நம்பிள்ளை ஈடு.

வீடு : இதனை, ஒரு தனி உலகம் என வைணவ சமயம் கூறுகின்றது.

''புலனைந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி,
நலமந்தம் இல்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலமுந்து சீரில் படிமின் ஓவாதே''

என்ற திருப்பாசுரத்தில், நம்மாழ்வார் 'நல மந்தம் இல்லதோர் நாடு' என்றது காண்க. நலம் 'அந்தம் இல்லதோர் நாடு' என்பதில் 'அந்தம் இல்லது' என்பதனை நலம், நாடு என்னும் இரண்டிற்கும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அந்தம் இல்லது ஓர் நாடு-அழிவில்லாத ஒப்பற்ற நாடு. நலம் அந்தம் இல்லது ஓர் நாடு-அழிவில்லாத இன்பத்தையுடைய நாடு. நலம்-இன்பம். நாடும் அழிவில்லாதது; அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது என்றபடி. ''அந்தம்இல் இன்பத்து அழிவில் வீடு'' என்பர் பரிமேலழகர். ''அந்தமில் பேரின்பம்'', ''வைகுந்தம்'' என்பன ஆழ்வாருடைய திருவாக்குக்கள்.

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

என்ற செய்யுளில் வீட்டை ''நிலம்'' என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். இக்கருத்தை அவர்,

''உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''
''யானெனது என்னும் செருக்கறுப்பான் வாளோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''
''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.''

என்ற செய்யுட்களிலும் வெளியிட்டுள்ளார். வரன் என்னும் வைப்பு-எல்லா உலகங்களிலும் மேம்பட்ட வீட்டுலகம். வாளோர்க்கு உயர்ந்த உலகம்-தேவர்களாலும் அடைய முடியாத வீட்டுலகம். தத்துவ ஞானம் பெற்றவர்கள் அடையும் இடமாகக் கூறப்பட்டமையால் இங்கு ''வானம்'' என்றது வீட்டுலகம்.

''நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்''

என்பது பரிபாடல்.

இதுகாறும் கூறியவற்றால், தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வருகின்ற சமயம் வைணவ சமயம் என்பதூஉம், அச்சமயத்தில் கூறப்பட்டுள்ள அசாதாரணமான தத்துவங்களுள் ஒரு சிலவும் ஒருவாறு தெளிதல் தகும்.

மாறன் மலரடி வாழ்க.





தமிழ்க் காவியங்கள்

வித்துவான் எஸ். ஆழ்வாரையங்கார், தலைமைத் தமிழாசிரியர்,
அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, மதுரை

★

எப்பொழுதும் இன்பத்தோடு இருக்க விரும்புபவர் எப்பொழுதும் காவியக்கடலில் திளைத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். காவியமாவது கவியினற் செய்யப்படுவ தாம். கவி-புலவன். கவிகள் ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரகவியென நான்கு வகையினராவர். கவி என்பதற் குத் தான் எடுத்துக்கொண்ட பொருளைச் சாதுரியத்தால் வருணித்துக் கூற வல்லவன் எனப் பொருள் கூறுவர். சாதுரியமாவது– சதுரப்பாடு. அது நால்வகை வன்மையு முடைமை. நால்வகை வன்மையாவன- மேற்கூறியவாறு நால்வகையாகப் பாடும் வன்மைகளே.

நால்வகைக் கவிகளின் இயல்பை யாப் பருங்கல விருத்தியுரைகாரர் கீழ்வருமாறு கூறுவது கொண்டு உணரலாம். அது வரு மாறு :—

1. "ஆசுகவி என்பான் எடுத்த பொரு ளும், அடுத்த சொல்லும் தொகுத்த தொடை யும் வழுவாமல் கடுத்துப் (விரைந்து) பாடு வான்.

2. மதுரகவி யென்பான் சொல்வளமும் பொருட் பெருமையுமுடைத்தாகத் தொடை யும் தொடைவிகற்பமும் தோந்து உருவக முதலாகிய அலங்காரங்களை உட்கொண்டு ஓசைப் பொலிவுடைத்தாய் உய்த்துணரும் புலவர்களுக்கு ஒலிகடல் அமுதம் போன்று இன்பம் பயக்கப் பாடுவார். இவனை இன் கவியென்றுங் கூறுவர்.

3. சித்திரகவி யென்பான் மாலை மாற்று முதலாகிய அருங்கவி பாடுந்தன்மையுடை யான். இவனை அருங்கவி யென்றுங் கூறு வர்.

4. வித்தாரகவி யென்பான் மும்மணிக் கோவையும் பன்மணி மாலையும், மறமும், கலி வெண்பாவும், மடலூர்ச்சி முதலாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்ட மும், கூத்தும், விருத்தமும், கதை முதலா கிய செய்யுளும், இயல் இசை நாடகங் களோடும் பொருந்தப்பாடும் பெருங்கவி யாம்" என்பதாம்.

இவற்றுல் இந்நால்வகை வன்மையும் ஒருசேர அமையப்பெற்ற புலவன் ஒரு வனுற் பாடப்படும் செய்யுட்டொகுதியே காவியம் எனப்படும் என்பதாயிற்று.

காவியச் செய்யுட்கள் முத்தகம், குளகம், தொகை நிலை, தொடர் நிலை என நான்கு வகைப்படும். முத்தகமாவது தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப் பெறு வது. பத்துப்பாட்டில் அடங்கிய பத்து நூல் களும், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திரு மடல், பெரிய திருமடல் என்ற பிரபந்தங் களும் இதற்கு உதாரணமாம்.

குளகமாவது பல பாட்டாய் ஒருவினை கொண்டு முடிவது. குளகச் செய்யுட்கள் தனியே ஒரு நூலாய் நின்றதற்குதாரணம் இப்பொழுதில்லை. பொருட்டொடர் நிலைச் செய்யுளாகிய காவியங்களின் இடையே வந்துள்ளவைகளையே வைத்துக்கொள்ள வேண்டும். கம்ப ராமாயணத் திருவவதாரப் படலத்தில்,

"திரைகெழு பயோததி துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினுற்

கரகம லங்குவித் திருந்த காலியில்
பரகதி யுணர்ந்தவர்க் குதவு பண்ணவன்
"கருமுகில் தாமரைக் காடு பூத்துஃ
டிருசுடர் இருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற்
குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து
தோன்றினன்"

என இரண்டு செய்யுட்கள் தொடர்ந்து ஒருவீனை கொண்டு முடிதல் போல்வன வாம்.

தொகை நிலைச் செய்யுள் ஆவன கதைத் தொடர்பின்றிக் கருதிய பொருள்பற்றி ஒரு வழுல் உரைக்கப் பெற்றுப் பலபாட்டாய் வருவனவும் புலரான் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும் பொருளாலும், இடத்தாலும், காலத்தாலும், தொழிலாலும், பாட்டாலும், அளவாலும் தொகுத்தனவு மாம்.

(உ–ம்) ஒருவனலுரைக்கப்பட்டது திருக் குறள். பலரான் உரைக்கப்பட்டது அக நானூறு; இது எல்லாத் தொகைக்கும் பொதுவிலக்கணம். பொருளாற்றொகுத்தது புறநானூறு; இடத்தாற்றொகுத்தது கள வழி நாற்பது. காலத்தால் தொகுத்தது கார் நாற்பது. தொழிலால் தொகுத்தது ஐந் திணை. பாட்டால் தொகுத்ததுகலித்தொகை. அளவால் தொகுத்தது குறுந்தொகை.

தொடர்நிலை, பொருட்டொடர்நிலை சொற் றொடர்நிலை என இருவகையினையுடையது. இவற்றுள் பொருள் தொடர்நிலையே நாம் எடுத்துக்கொண்ட காவியம் ஆம். அது பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகைத்து.

கவியாற் பாடப்படுவனவெல்லாம் காப் பியமன்றே? பொருட்டொடர் நிலையைக் காவியமென்ற தென்னை? எனின் சேற்றுள் தோன்றுவனவெல்லாம் பங்கயமென்ற பெயரைப் பெறுமெனினும் அப்பெயர் தாமரை யொன்றற்கேயுரியதானைற் போலக் காவியமென்பதும் பொருட்டொடர்நிலை யொன்றற்கே யுரியதாம்.

"காப்பியம் என்னும் வடமொழியால் தொடர் நிலைச் செய்யுட்கு முந்து நூல்களில் பெயரில்லை; பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியாதல் இல்லை" என மறுத்துரைப்பர் சிலர். அவர் சிலப்பதிகாரவுரையில் அடி யார்க்கு நல்லார் இது பற்றி "முந்து நூல் களில்.....சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை யென்னுந் தொடர் நிலைச் செய்யுட்குக் காப்பிய மெனப் பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத்தெனவுணர்க" என்று விளக்கமாக வரைந்துள்ளது கொண்டு தெளிந்து அவ்வாறு மறுத்துரைத் தல் தவறுடைத்தென வுணர்க.

இனி, "கவி–கவிதல் (பல பொருளும் ஒரு வழி) திரண்டிருத்தல் எனத் தொழிற் பெய ராய் அது பின் தொழிலாகு பெயராய் எல்லாப் பொருளுந்தன்னிடத்தே திரண்டி ருக்கப் பெற்ற புலவனைக்குறித்தது; அது செயப்படு பொருளுணர்த்தும் 'அம்' விகுதி பெற்றுக் கவியாற் செய்யப்பட்டது என் னும் பொருளுடைய 'காவியம்' என்று யிற்று" என இலக்கணம் கூறித் தமிழ்ப் பெயராகவே காவியம் என்பதனைக் கொள் ளல் சாலும் எனக் கருதுகின்றேன். அறி வுடையோர் ஆய்ந்து பொருந்துமேல் கொள்வாராக.

பெருங்காப்பியமாவது வாழ்த்து, வணக் கம், வருபொருளுரைத்தல் என்னும் மூன்று வகை மங்கலத்துள் ஒன்று ஏற்புடைத்தாகி முன் வரப்பெற்று; அறம், பொருள், இன் பம், வீடு என்னும் நான்கினையும் பயக்கும் ஒழுகலாறுடைத்தாய், தன்னேடு ஒப் பாரும் மிக்காரும் இல்லாதானைத் தலைவனு கவுடையதாய், 'மலை வருணனையும், கடல் வருணனையும், நாட்டு வருணனையும், நகர வருணனையும் இருது வருணனையும் ஞாயிற்றுத் தோற்ற வருணனையும், திங்கள் தோற்ற வருணனையும்' என்று இன்னோரன்ன வருணனைகளையுடைத்தாய்; நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு,

களியாட்டு, சிறுவரைப் பெறுதல், புலவி யிற்புலத்தல், கலவியிற் களித்தல் (கூடிக் களித்தல்) முதலிய இன்னோரன்னசெய்கைச் சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல் லொழுக்க முடைத்தாய்; மந்திர மிருத்தல் (மந்திராலோசனை), தூது விடுதல், மேற் செலவு, போர்புரிதல், வென்றி யெய்தல் ஆகிய இவை நாடகவுறுப்பாகிய சந்தி போலத் தொடர்பு பட்டு; சருக்கம், இலம் பகம், பரிச்சேதமென்ற பாகுபாட்டால் விளக்க முடைத்தாய்; எட்டுவகைப்பட்ட சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடை விடாது கேட்போர் விரும்பக் கற்றுவல்ல புலவரால் செய்யப்படுவதாம். இவற்றை,

"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை...பெற்றிய தென்ப"

என்னும் தண்டியலங்காரப் பொதுவியல் அ-ம் சூத்திரத்தானுணர்க.

இவற்றுள் சில குறைந்திருப்பினும் அற முதற் பொருள்களில் குறைபாடு இலதாயின் அதுவும் பெருங்காப்பியமே. உலகியல்பறித லும் ரஞ்சனையும் காவியத்திற்குப் பயனு தலால் இவ்வருணனைகளெல்லாம் வேண்டு வனவாயின. இவற்றுள் இது ஒரு கதையின் மேலதாய் வருவதென்றதாயிற்று.

குறிப்பு:– வணக்கம் வழிபடு கடவுள் வணக்கம், ஏற்புடைக் கடவுள் வணக்கம் என இருவகைத்தாம். இருது. காலம் அவை சித்திரை முதலாக இரண்டிரண்டு மாதங் கள் கொண்டுவரும் இளவேனில், முது வேனில், கார், கூதிர், முன்பனி பின்பனி யென்னும் பொழுது ஆறுமாம். நாடக வுறுப்பாகிய சந்தியாவது கதையமைப்பு வகை. அது ஐந்துவகைப்படும்; அவை, முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த் தல் என்பன. முகமாவது எழுவகைப்பட்ட உழவினுல் சமைக்கப்பட்ட பூழியுள் இட்ட வித்துப் பருவம் செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றுப் முடிவது போல்வது. கருப்பமாவது அந் நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன் னுள் பொதிந்து கருப்ப முற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த் தலாவதுவிளையப்பட்ட பொருளை அறுத்துப் போ ட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது.

எட்டு வகைப்பட்ட சுவைகளாவன:- உவகை, பெருமிதம், அழுகை, வியப்பு, நகை அச்சம், இளிவரல், வெகுளி என்பன. இவற் றோடு சமநிலை யென்னும் சாந்திரசம் ஒன்று கூட்டிச் சுவை ஒன்பது என்பாரும் உளர். மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அஃதா வது உலகத்தாருள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவ தோராற்றுன் வெளிப்படுவது என்பர். உவகை முதலிய சுவையுணர்வு பிறந்த பொழுது உண்டாகும் உள்ள நிகழ்ச்சி மெய்ப்பாட்டுக் குறிப்பெனவும் அதனல் உடலில் தோன்றும் மயிர்சிலிர்த்தல், வியர்த் தல், கண்ணீரரும்பல், அசைவின்றி நிற்றல், நடுங்குதல், நிறம் வேறுபடுதல், குரல் மாறு தல் முதலியன மெய்ப்பாடெனவும் சொல் லப்படும். பாவம் என்பதன் பொருள் மன நிலை என்பது. இவ்விலக்கணங்கட்கெல்லாம் கம்பராமாயணத்தில் உதாரணங்காணலாம்.

வாய்மை, ஈகை, இரக்கம், பொறை, நல் லொழுக்கம் தந்தை தாயர் சொற்பணி களைக் கடவாது தலைக் கொண்டொழு கல் பெரியோருக்குத் தொண்டு பூரி தல் முதலியன உடையனை இராமன் இடை இடையே காட்டப்படுதலால் அற நெறி வழுவாத நடையையுடைத்தாயிற்று. சுக்கிரீவனுடன் நட்புக்கோடல், வாலி யைக் கோறல், இராவணனைக் கொல்லு தல், சீதை சிறை மீட்சி முதலியவற்றுள் நட்புக்கோடல், கொடியோரை ஒறுத்தல்,

பகைவரைத் தெறுதல், தன் பொருள் கோடல் முதலிய பொருள் நெறியில் வழுவாத நடையையுடைத்தாயிற்று. நாடாள் இன்பம் ஒரே மனைவியையுடையனுதல் இவற்றுள் இன்பநெறி வழுவாத நடையையுடையதாதல் அறிக. தவம் விரத ஒழுக்கம் மெய்யறிவு உடலை வெறுத்தல் முதலிய கூறுதலால் வீட்டு நெறி வழுவாத நடையையுடையதாம்.

"மனிதர் வானவர் மற்றுளார் அறங்கள்
காத்தளிப்பார்
இனியிம் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ
ரில்லை."

என்றும்,

"சிவனே வல்லன் நான்முக னல்லன் திரு
மாலாம்
அவனே வென்னில் மெய்வர மெல்லாம்
அடுகின்றுன்
தவனே வென்னில் செய்து முடிக்குந்
தரமல்லன்
இவனே தானவ் வேதமுதற் காரண
னென்றுன்."

என்றும் சொல்லப்பெற்ற செம்மல் இராமனைத் தெய்வக் கதைத் தலைவனுகக் கொண்டிருத்தலால் தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாயிற்று.

வரைக் காட்சிப் படல முதலியவற்றுல் மலைவளமும் கடல் காண் படல முதலியவற்றுல் கடல் வளமும், நாட்டுப்படலத்தால் நாட்டு வளமும், நகரப்படல முதலியவற்றுல் நகர் வளமும், ஆற்றுப்படல முதலியவற்றுல் ஆறு முதலியவைகளின் வளங்களும், வேறு பல இடங்களில் வேறு பல வளங்களும் வருணித்துக் கூறப்பட்டுள்ளன. கார்காலப் படல முதலியவற்றுல் காலச் சிறப்புக்கள் புனைந்துரைக்கப் பெற்றன. "மீனீர் வேலை" "மாவியலுதயமாம்" என்பன முதலாகிய பல செய்யுட்களில் ஞாயிற்றுத் தோற்றமும், அந்திமாலை முதலிய சிறு பொழுதுகளும் இடத்திற்குப் பொருத்தமாக வருணிக்கப்பட்டுள்ளன. கடி மணப் படலத்தில் நன்மணம் புணர்தலும், திருமுடி சூட்டுப் படலத்தில் பொன்முடி கவித்தலும், பூக்கொய் படலத்தில் பொழில் விளையாட்டும், நீர் விளையாட்டுப் படலத்தில் புனல் விளையாட்டும், உண்டாட்டுப் படலத்தில் மதுவுண்டுகளித்தலும், திருவவதாரப் படலத்தில்புதல்வரைப்பெறுதலும், பம்பைப் படலத்தில் பிரிவுழி வருந்தலும் (புலவியிற் புலத்தல்) சித்திரகூடப் படலத்தில் கூடிக் களித்தலும் ஆகிய இன்பச் செய்திகள் அழகாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளன.

மந்திரப் படலத்தில் சூழ்ச்சியும் அங்கதன் தூதுப்படல முதலியவற்றில் தூது செலவும் முதற்போர்ப் படல முதலியவற்றில் வென்றியும் ஆகிய வீரச் செயல்கள் திறம்படக் கூறப் பெற்றுள்ளன. பாலகாண்ட முதலாகிய காண்டங்களும், ஆற்றுப் படல முதலிய படலங்களும், கிளைகளும் அதன்பாற்றேன்றிய கிளைகளும் போலக் கிளைத்துள்ளன.

சுவை, மெய்ப்பாடு முதலிய நயங்களெல்லாம் ஆங்காங்கு நிரம்பப் பொதிந்துள்ளன. அவை நுண்ணுணர்வால் ஆராய்ந்து அறிந்து கொள்ளத்தக்கன.

மேலும் பெரிய புராணம், திருவிளையாடல், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்த புராணம், பாரதம் முதலிய பலவும் பெருங்காப்பியத்தின் பாற்படுவன.

இனிச் சிறு காப்பியமாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் ஒன்றேனும் பலவேனும் குறைந்து வருவது. அது மேற்கூறியபடி பல வருணனைகளைப் பெருமல் வருவது. பரணி, ஆற்றுப்படை, பிள்ளைத் தமிழ், உலா, மடல் முதலியன சிறு காப்பியங்கள். அவை ஒருவகையான செய்யுட்களாலும், பலவகையான செய்யுட்களாலும் உரைவிரவியும் (வசனங்கலந்தும்) பிறமொழிகள் விரவியும் வருதலும் உடையன.

இத்தகைய காவியங்கட்குச் சொற் பொருட்டொகுதியையுடலாகவும், குறிப்புப் பொருளை (தொனிப் பொருளை) உயிராகவும், உவமை முதலிய அணிகளை மாலை முதலிய அணிகலன்களாகவும், இரட்டுற மொழிதல் முதலிய பண்புகளை வீரம் முதலிய பண்புகளாகவும், வைதருப்பம், கௌடம் என்ற செய்யுள் நெறிகளை மேலான ஒழுக்க நடைகளாகவும், கைசிகீ முதலிய விருத்திகளைத் திருந்திய செயல்களாகவும், கொண்டு கூட்ட வேண்டாத கிடைக்கை முறையைப் படுக்கையாகவும் குறிப்பிட்டு உலக வாழ்க்கையில் மக்கட்குத் துணையாய்ப் பயன்படும் கருவிகள் போலச் செய்யுட்கும் பல கருவிகள் உண்டு என்று அறிந்தோர் கூறுவர்.

காவியத்திற்கு உடலான சொற்களைச் செஞ்சொல், இலக்கணச் சொல், தாற் பரியச் சொல் என மூவகையாகப் பிரிக்கலாம். இவற்றை முறையே வட நூலார் வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் எனக் கூறுவர்.

அவற்றுள் செஞ் சொல்லாவது இச்சொல்லால் இப்பொருளுணர்த்துக என்னும் குறிப்புடையனவாய் உலக வழக்கிலும் நிகண்டு முதலிய நூல்களிலும் வழங்கப்பட்டுவரும் செஞ்சொற்களாம். உதாரணம் – "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை" என்பதில் உள்ள பால் முதலியன போன்றவைகளாம். இச்சொல்லால் உணர்த்தப்படும் பொருள் செம்பொருளெனப்படும். இதனை வடநூலார் வாச்சியம் என்பர்.

இலக்கணச் சொல்லாவது செம்பொருட்குப் பொருத்தமில்லாதவிடத்து அப்பொருளின் தொடர்புடைய பொருத்தமுள்ள பிறிதோர் பொருளையுணர்த்துஞ் சொல்லாம். உதாரணம்: "ஊரெல்லாந்துஞ்சி யுலகெல்லாம் நள்ளிருளாய்." இதில் ஊர் என்னும் சொல்லுடன் துஞ்சுதல் என்னுஞ்சொற்குப் பொருட் பொருத்தம் இல்லை. ஆதலால் பொருத்தமுடைய மக்கட்டொகுதியை யுணர்த்திற்று. இச்சொல்லால் உணர்த்தப்படும் பொருள் இலக்கியமெனப் பெறும். உபசார வழக்காக வருவனவும், ஒரு மொழி ஒழிந்ததன் இனங்களைக் குறிப்பனவும் (உபலக்ஷணமும்) ஆகுபெயர்களும் இவ்விலக்கணச் சொற்களே.

தாற்பரியச் சொல்லாவது செம்பொருளுக்குப் பொருத்தமுள்ள இடத்தும் கவி (புலவன்) கருதிய பிறிதொரு பொருளையுணர்த்துஞ் சொல்லாம். உதாரணம்—"செல்லாமையுண்டேல் எனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க்குரை". இதில், செல்லின் இறந்துபடும் என்பது தாற்பரியக் குறிப்புப் பொருளாதலால் அதனையுணர்த்தி நிற்கும் 'வாழ்வார்க்குரை' என்னுந் தொடர் மொழி தாற்பரியச் சொல்லாயிற்று. தாற்பரியக் குறிப்புப் பொருளை வடநூலார் வியங்கியம் என்பர். வேறு பல குறிப்பு மொழிகளும் இதன் பாலனவாம்.

இவ்வாறு தாற்பரியச் சொல்லால் உணர்த்தப்படும் தாற்பரியக் குறிப்புப் பொருளே காவியத்திற்கு உயிர் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லாமலும் செம்பொருளிற் சிறந்த தாற்பரியக் குறிப்புப் பொருளை (வியங்கியப் பொருளை) யுடையது மேலான காவியம் என்றும், அது தொனியென்று பெயர் பெறுமென்றும், செம்பொருளின் ஒத்த அல்லது தாழ்ந்த தாற்பரியக் குறிப்புப் பொருளை யுடையது நடுத்தரக் காவியமென்றும், தாற்பரியக் குறிப்புப் பொருளே தோன்றுதது தாழ்ந்த காவியம் என்றும் கூறப்படும்.

தொனியென்னும் மேலான காவியத்திற்குதாரணம்: "நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணரூரன்" என்பதாம். இதில் காஞ்சியாகிய பூவும் சிறு மீனுகிய புலாலும் ஒக்கவினையும் ஊரன் என்பது செம்மொழிப் பொருள். இதினின்றும் கவி கருதிய தாற்பரியக் குறிப்புப் பொருள் பொது மகளிரைப் போலக் குல மகளிரையுங் கொண்டொழுகுவான் என்பது. இப்பொருள் செம்பொருளி

லடங்காத தாற்பரியக் குறிப்புப் பொருளாய்த் தலைமைவாய்ந்ததாயிருத்தல் காண்க.

இதுவுமது: "பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற் கழனியூரன்" இதனுல் பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன் என்பது இதன் தாற்பரியம். இதினின்றும் தோன்றுங் குறிப்புப் பொருள் "குலமகளிரைப்போலப் பொது மகளிரையுங் கொண்டொழுகுவான்" என்பது. இப்பொருள் வாக்கியப் பொருளில் அடங்காத கவி கருதிய பிறிதொரு பொருளாய்த் தலைமை வாய்ந்ததாயிருத்தல் காண்க.

இத்தொனியாகிய தாற்பரியக் குறிப்பால் தோன்றும் பொருள்களெல்லாம் அகப்பாட்டும் புறப்பாட்டுமாகிய சங்க நூல்களிலும் மற்றைய சான்றோர் நூல்களிலும் வருவன. இவை பெரும்பாலும் அகப்பாட்டில் இறைச்சிப் பொருள் பற்றியும், திருப்பாவை, திருவிருத்தம், திருவாய் மொழி, திருவெம்பாவை, தேவார திருவாசகம் முதலிய தெய்வத் தன்மை பொருந்திய பக்தி நூல்களில் உள்ளுறை பொருள் (ஸ்வாப தேசப் பொருள்) பற்றியும் மேலுங் கவி கருதிய வேறு பல உள்ளுறைப் பொருள் பற்றியும் வருவனவாம்.

நடுத்தரக் காவியத்திற்கு உதாரணம்:— 'வானத்து அணங்கருங் கற்பின் அன்னேள் நின், மகன்ருயாதல் புரைவது." இது அகப்பாட்டில், தலைமகனது புறத்தொழுக்கங் கண்ட தலைமகள் தலைவனிடம் அவன் காமக்கிழத்தியைக் கண்டமை பற்றிக் கூறியது. அருந்ததி போலுங் கற்புடைய அவள் நின்மகனுக்குத் தாயாயிருத்தல் தகும் என்பது இதன் பொருள். இவ்வாறு கூறியமையால் நீ அவளோடு கலவியின்பம் துய்த்தனே என்பது குறிப்புப் பொருளாம். இது நின்மகனுக்குத் தாயாயிருத்தல் தகும் என்பதற் குறுப்பாகப் பொருந்தியமையால் நடுத்தரத் தாற்பரியக் குறிப்பாயிற்று.

இவ்விருவகைத் தாற்பரியக் குறிப்புப் பொருளுந் தோன்றுதது தாழ்ந்த காவியம் எனவும் அது சித்திரம் எனப் பெறும் என்றும் முன்பே கூறப்பெற்றது. தாற்பரியக் குறிப்புப் பொருள் காவியத்திற்கு உயிராகச் சொல்லப் பட்டமையால் உயிரில்லாத சித்திரம்போல் விளங்குவது பற்றி இது சித்திரமெனப் பெயர் பெற்றது. அது சொற்சித்திரமும், பொருட் சித்திரமும், சொற்பொருட் சித்திரமுமென மூவகைத்து. சொற்சித்திரமாவது சொல்வனப்புத் தோன்றக் கூறுவது. சொல்வனப்பாவது மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் தொடைகளும், தொடை விகற்பங்களும், வண்ண வகைகளும், மடக்கு வகைகளும், யமகமும், திரிபும், சொற்பின் வருநிலையு முதலிய பலவாம். மோனையும் எதுகையும் எல்லாச் செய்யுளிலும் வரப்பெறும். பிற கவி கருதிய சில விடத்து வருவன. அவற்றுள் முரண் சொன் முரணும் பொருள் முரணும் சொற்பொருள் முரணுமென மூன்று வகைப்படும். சொல் முரண் ஒன்றும் சொற்சித்திரமும், பொருள் முரணும், சொற்பொருள் முரணும் ஆகிய இரண்டும் பொருட்சித்திரமும் சொற்பொருட் சித்திரமும் ஆம்.

சொற்சித்திரத்துக்கு உதாரணம்:—"எய்யாது நின்றெருவன் எய்வதுவும் இலையாள் தன் இலைப்பும்" என்பது போன்று வருவன. தொடையும் தொடை விகற்பங்களும் யாப்பருங்கலக் காரிகையுரை உதாரணச் செய்யுட்களிலும், வண்ண வகைகள், சிந்து, திருப்புகழ் முதலியவற்றிலுங் கண்டு கொள்ளத் தக்கன.

பிறவெல்லாம் தண்டியலங்கார முதலிய அலங்கார நூல்களிலும் பிறவற்றிலும் கண்டுகொள்ளலாம்.

இவையெல்லாம் இனிது கல்வி கற்றற்குப் பற்றுக்கோடாவன; இன்பக் கடலில் ஆழ்த்துவன; துன்பம் தொலைப்பன; கேட்பவர் மனத்தை மிகமிக இன்புறச் செய்வன. அறிவைத் திறமையுறச் செய்து பெருக்குவன. தமிழைத் தழைத்தோங்கச் செய்வன. நல்லொழுக்கத்தில் நடக்கச் செய்வன. குணங்களில் நல்லன ஆக்கிப் பொல்லாதன போக்குவன. எல்லா நலன்களும் பெற்று இன்புறத் துணையாவன. புதுக்காவியம் இயற்றுவோர்க்கும் பொற்புறு துணையாவன.

பெண்பாற் புலவர்

திருமதி புஷ்பம் நடராசன், மதுரை

★

"விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றுரோடு ஏனை யவர்"

எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் திரு வாய் மலர்ந்தருளினார். பகுத்தறிவை விளக்க முறச் செய்வன நூல்கள். நூல்களைக் கற் றுணராதவர் அறிவு விளக்கம் பெறமாட் டார். எனவே, அவர்கள் விலங்கிற்கு ஒப்பா வார்கள். அறிவு விளக்கம் பெறுதற்கு உரிய வர் ஆண்பாலர் மட்டுமே என்பது திருவள் ளுவர் கருத்தன்று. ஆண்களோடு பெண் களும் கல்வி கற்று, நூலறிவு பெற்று, அறிவு விளக்கம் எய்திப் புலமையுடையவராய் விளங்கவேண்டு மென்பதே ஆன்றோர் துணிவு. புலமை எய்திய பெண்பாலர் பொன்மலர் மணம் எய்தினாற் போலச் சிறப் படைவர் என்பது திண்ணம்.

ஆடவரினும் பெண்டிர்க்கே கற்பனை வளனும், கனவு காணும் நிலையும், உள்ளத் தில் தோன்றிய உணர்ச்சிகளை எளிய பாக்க ளால் ஆக்கும் திறனும் அதிகம் என்பது அறிஞர்கள் கூற்று. இவ்வுண்மையை அனு பவ பூர்வமாகக் கண்ட ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் இதனை அடிக்கடி எடுத்தியம்புவதுண்டு.

தமிழ் நாட்டின் பழங்கால இலக்கியச் சோலையில் புகுந்தால் இலக்கியத்தின் வன் மைக்கும், அழகிற்கும், இனிமைக்கும், சிறப் பிற்கும் ஆடவர்களைப் போல் பெண்டிரும் அருந்தொண்டுகள் பல புரிந்துள்ளனர் என் பது தெள்ளிதில் விளங்கும்.

நுண்ணறிவுடையோர் நூலோடு பழகி னும் பெண்ணறி வென்பது பேதமைத்தே என்பது இடைக்காலக் கொள்கை. அக் கொள்கை பண்டைத் தமிழ் வரலாற்று விளக்கத்தாலும், தற்கால அறிவியல் ஆக்கத் தாலும் பொய்ப் படுவதாகின்றது.

பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு முதலி யவற்றை விளக்கும் சங்க நூல்களை ஆராய்ந் தால் பெண்கள் மனைத்தக்க மாண்புடைய ராகத் திகழ்ந்தது போல் அரசரோடு சரி ஆச னத்தில் அமர்ந்து அறன் ஆயும் திறமை பெற்றிருந்தமை புலனாகும். இல்லறத்தை நல்லறமாக்குவதில் கண்ணும் கருத்தும் உடையவராய் விளங்கிய பெண்கள், அரசும் ஆட்சியும் மக்களும் சிறப்புறுவதிலும் கவ னம் செலுத்தத் தவறியதில்லை.

சங்க நூல்களில் ஐம்பதின்மருக்குக் குறை யாத பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்களைக் காணலாம். அவற்றில் புறநா னூறு பாடிய 147-க்குக் குறையாத புலவர் களில் பெண் புலவர்கள் 15 பேர் ஆவர். புற நானூற்றில் மிகுதியான பாடல்களைப் பாடி யவர் பெண்பாற் புலவர்களில் தலைசிறந்து விளங்கும் ஔவையாரே யாவர். அவர் பாடி யனவாக 33 பாடல்கள் புறநானூற்றில் காணக் கிடக்கின்றன. இடைக்காலத்திலும் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முத லியவர்கள் பக்திச் சுவை ததும்பும் பாடல் கள் பாடித் தமிழ் அணங்கை அணிசெய் தார்கள்.

மற்றும் கவிபாடும் இயல்பு ஒரு பாலருக் கும், ஒரு குலத்தினருக்கும் என்று ஒதுக்கப் படாது யாவராலும் விரும்பிப் போற்றப்பட் டது. பெண்கள் கல்வியில் சிறந்தவராய் அறி வும் ஆற்றலும் மிகுந்தவராய்த் திகழ்ந்தார் கள். பெண் புலவர்களை அரசர்களும் பாராட்

தும், தமிழ் நாட்டில் என்றும் போற்றப்படுவதும்,

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னுயி னுண்டவென்
மூலியறுத் திடுவென் யானெனச் சினஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"
—புறம். 278

என்ற புறப்பாடலாகும்.

நரம்புகள் எழுந்து தசை உலர்ந்த மூதாட்டியிடம் உன் மகன் போரில் புற முதுகிட்டு மடிந்தனன் எனச் சிலர் கூறக் கேட்டுச் சினந்து எழுந்தாள். "அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்திடுவேன்" என வஞ்சினம் கூறிப் போர்க்களம் சென்றாள். மார்பில் புண்பட்டுச் சிதைந்து கிடந்த மகன் உடம்பைக் கண்டவுடன் அவனைப் பெற்ற பொழுதினும் பெருமகிழ்வடைந்தாள். இப்பாடல்,

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்
மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்ற திருக்குறளின் கருத்தை அழகாக எடுத்துக் காட்டுகிறது.

மாறோக்கத்து நப்பசலையார் கிள்ளிவளவனைப் பாராட்டுங்கால் "நின் ஈகை உன் முன்னோர் செய்கை; நின் வீரம் உன் மரபு; நின் அறம் இயற்கை; நின் வெற்றி அன்றுடம் அமைவது; எனவே உன் முயற்சி வாழ்க" என்று நயம்பட வாழ்த்துகிறார்.

தமிழ் நாட்டுக் குயத்தியும், உயர்த்தியான கவிபாடுவாள் என்பது வெண்ணிக் குயத்தியாரின் பாடலால் உணரப்படும்.

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட உரவோன் மருக"

என்பதால் கரிகாலன் முன்னோர், கடலின் கண்ணே கலம் செலுத்தி வெற்றி கண்ட சிறந்த குறிப்பு அறியப்படுகிறது.

தமக்குக் கருநெல்லிக் கனியை அளித்து நீண்ட நாள் வாழச் செய்த அதிகமான் நீடு வாழ வேண்டுமென்று விரும்பிய ஔவையார்,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே" —புறம். 91

என வாழ்த்துவதனால், அவருடைய பேரன்பு நன்கு விளங்கும். அதிகமான் போரில் இறந்ததைக் குறித்துத் துயரம் எய்திய ஔவையார், "அவனது அரிய மார்பில் தைத்தவேல், நுண்ணிய ஆராய்ச்சியுடைய புலவர் நாவில் விழுந்தது" என்னும் பொருள் அமைய,

"அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே"

என்று (புறம். 235) பாடி இரங்குகின்றார். புலவர்க்குத் தலையளி செய்து அவரை வாழ்வித்த அதிகமானது கொடைத் திறத்தை ஔவையார் அவலச் சுவையிற் சித்திரித்துக் காட்டுவது யாவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்வதன்றே? "இனிப், பாடுநரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை" என ஔவையார் இரங்கிக் கூறும்பொழுது நாமும் கண்ணீர் சொரிகிறோம்.

மக்களுக்கு அறிவுரை கூறி, அவர்களைச் சீர்திருத்துவதே கற்றறிவுடைய தமக்குக் கடமை என்று உணர்ந்தார் ஔவையார். அவரது பரந்த உள்ளம் அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறிவு புகட்டுவதிலேயே நாட்டங் கொண்டு நின்றது. எனவே, பெண் வழி சென்ற அதிகமான் மகனுக்கு அறவுரையாகக் "கழிகாமம், பழியும் இழிவும் பெருக்கும்" என இடித்துரைத்தார். மற்றும்,

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்ற பாட்டால் மக்களின் நல்லுணர்விற் கேற்பவே நாடு நலம் பெறும். பொருளாலோ, திறனாலோ அல்ல என்ற உண்மையை நிலை நாட்டுகிறார்.

இளைஞர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்படி ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய பாடல்களை ஔவையார் இயற்றியுள்ளார். ஆனால் இவற்றை அருளிய ஔவையார், பிற்காலத்தில் வாழ்ந்த வேறொருவர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

பாரி மகளிர் பாரியை நினைந்துருகிய பாடல்கள், பெண்மையின் துயரத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

கணவன் இறந்தபோது கையற்றுக் கலங்கி வடித்த கண்ணீரால் எழுதப்பட்ட கவிதை பெருங்கோப்பெண்டு என்ற புலவருடையதாகும். கணவனை இழந்த கற்புடைப் பெண்டிருக்கு "நள்ளிருளும் பொய்கையும் தீயுமோரற்றே!" என்று கூறிய அவரது அன்பின் திறம் மிகப் பெரிது.

பெருநற்கிள்ளியின் மற்போர் மாட்சியில் சிந்தையைப் பறி கொடுத்தவர் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார். "கண்ணிறைந்த கணவனைப் பெறுதலே பெரும் பேறு" என்ற பெண்டிர் உளக் கருத்தினை பாடலில் எடுத்தாள்கிறார் இவர்.

வெறி என்பது தெய்வம் ஏறப்பெற்று ஆடுதலாகும். அங்ஙனம் ஆடுவாள் பற்றிப் பாடிய புலவர் வெறிபாடிய காமக் கண்ணியார் எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

கழார்க்கீரன் எயிற்றியர், காமக்கணிப் பசலையார், நல் வெள்ளியார், வெள்ளி வீதியார், ஆதிமந்தியார் முதலிய பெண் பாற்

THE TRAVANCORE RAYONS LIMITED

RAYONPURAM

TRAVANCORE COCHIN STATE

Pioneer Manufacturers of

TRAYONS

RAYON YARN

&

TRAYOPHANE

Sales Office :
UNITED INDIA LIFE BUILDINGS
Madras-1

Managing Agents :
EMCETE & SONS (TRAVANCORE)
PRIVATE LIMITED

புலவரின் கவித்திறனெல்லாம் விரிப்பின் பெருகும்.

சங்க காலத்திற்கு இப்பால் செந்தமிழ் மொழியைத் தெய்வ மணம் கமழச் செய்தவருள் காரைக்காலம்மையார், ஆண்டாள் என்பார் பெண்பாற் புலவர்கள் ஆவர்.

தனக்கோர் அம்மையில்லாதவனுகிய சிவ பெருமான் திருவாக்கால் "அம்மையே!" என்று அழைக்கப்பட்ட சிறப்பு காரைக்காலம்மையார் ஒருவருக்கே உண்டு. தனித் தமிழ் மணமும், எளிய நடையும், அரிய பொருளும் அம்மையாரின் பாக்களில் நிரம்பியுள்ளன. "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே வந்தடைந்தேன்" என இளமை முதல் அவர் கடவுளிடத்துக் கொண்ட பக்தியை வெளிப்படுத்தினர்.

கண்ணன்பால் கொண்ட தலையாய காதலின் விளையே நாச்சியார் திருமொழியாகும். ஆண்டாள் அருளிய முப்பது திருப்பாவைப் பாடல்களும் இலக்கிய வளம் செறிந்த பக்திக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. இடையருது கண்ணனையே சிந்தித்து அவன் கைத்தலம் பற்றக் கனைக் கண்டதை அழகுபடச் சித்திரிக்கிருர் ஆண்டாள். தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய விளைந்த அவர் அருள்திறம் அளவிடற்கரிது.

பிற்காலத்தே வாழ்ந்த பெண் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் நாமகள், பாண்டியன் தேவி, சோழன் தேவி, தாதி, உத்திர நல்லூர் நங்கை, அம்மைச்சி முதலியோர் ஆவர்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் சந்திர வாணன் கோவையை அரங்கேற்றுகையில் ஒரு பிழையைக் கண்டுணர்ந்து கவிராயருக்குக் "கண் தான் கெட்டது, மதியும் கெட்டதோ" என்று கேட்டார் அம்மைச்சி. அவரது அஞ்சாமை புலவர் கூட்டத்தையே நடுங்க வைத்துவிட்டது. வரதுங்க பாண்டியருடைய மனைவியாராகிய அரசமா தேவியார் தம் கணவரின் தம்பியாராகிய அதிவீர ராமன் இயற்றிய நைடதப் பாடலைப் படித்துக் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டி நூலின் நடையைப்பற்றித் திறனுய்வு செய்கிருர்.

18-ம் நூற்றுண்டிறுதியில் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் பாடிய காந்திப் புராணம் இன்சுவை பயப்பதாகும்.

இவ்வண்ணம் வாழையடி வாழையாகப் பாக்கள் புனைந்தும், நூற்கள் யாத்தும் தமிழன்னையை அலங்கரித்த பெண் புலவர்கள் எண்ணிலடங்கார். எனினும், இடையிடையே இவ்வரிசை ஒளி மழுங்கிக் காணப்படுகிறது. தமிழ்ப் பெண்டிர் இந்நாட்களில் பல கலைத்துறைகளிலும் பட்டம் பெற்று அரசாங்கத்தை அணி செய்கின்றனர். ஆயினும் இவர்கள்பால் தமிழ்ப்பற்றும், தமிழ் மொழிப் புலமையும் அருகிக் காணப்படுகிறது. படித்த பெண் ஒருத்தி தான் பெற்ற குழந்தையைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கத் தெரியாமல் வேலைக்காரியைக் கூப்பிடுகிருள். எழுதப் படிக்கத் தெரியாத நாட்டுப்புறப் பெண்களோ கருத்துச் செறிந்த தாலாட்டுப் பாடல்களை இன்னிசையுடன் பாடி நொடிப் பொழுதில் குழந்தைகளைக் கண்வளர விடுகின்றனர். அவர்கள் பாடும் ஒப்பாரியைக் கூர்ந்து நோக்கின் அவற்றினும் எதுகை, மோனை, இடத்திற்கு ஏற்ற பொருள்கள் பொதிந்து கிடப்பது புலனுகும். தாய்மார்கள் செந்தமிழில் மனம் செலுத்தினுல் தான் அவர்கள் பிள்ளைகள் இளமையிலேயே அவ்வழியில் செல்வர்.

நம்மில் பழமை பேசுவதில் மாத்திரம் பயனில்லை. பழமையும், உயர்வும் வாய்ந்த தமிழ்மொழி மீண்டும் உலகமொழிகளில் சிறந்த மொழிகளுள் ஒன்றுக விளங்க வேண்டும். தமிழ் மறுமலர்ச்சி அடைந்து பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழில் வெளிவரவும், ஆடவருடன் பெண்டிரும் ஒன்று பட்டு உழைத்தல் இன்றியமையாதது. தமிழ் மக்கள் உலக அரங்கில் பாராட்டப்படும் வகையில் பல்கலைப் புலமை எய்தும் நாளே தமிழ் மொழிக்கு நன்னாள். தமிழ் நாட்டின் பொன்னாள்.

ஒரு காலத்தில் பாண்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்டது தமிழ்ச்சங்கம். இப் பொழுது அது ஒவ்வொரு தமிழரினுடையவும் தனிச் சங்கமாகும். சங்கம் பொன்விழாக் கொண்டாடும் இந்நன்னாளில், தமிழ்நாடு சங்க காலத்தில் போல் எல்லாத் துறைகளிலும் சிறப்படைய, சங்கம் தூண்டு கோலாக விளங்கவேண்டும் என வாழ்த்துக் கூறுகின்றேன்.



சிற்பக்கலை

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

★

தமிழன் ஒரு கலைஞன். அவன் அறிந்து பயின்ற கலைகள் அறுபத்து நான்கின. அவற்றை அவனுக்கு உணர்த்திய பெரு மாட்டி கலைச் செல்வி சகல கலாவல்லி யாவள். இதனைத் தவப்பெருஞ் செல்வர் குமர குருபர சுவாமிகள், "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை" யெனப் போற்றுகின்றார். அக்கலைகளுள் இசை, சிற்பம், சித்திரம் அச் செல்வியின் கண்களாவன. தமிழன் தான் வாழ்ந்த வாழ்க்கையில் இக்கலைகளைப் பொன்னே போல் போற்றினான். அன்பும், உண்மையும் தன்னம்பிக்கையும் ததும்பிய அவன் உள்ளத்தில் அவை பண்பு பெற்றன. இன்னும் அவனது வாழ்க்கை இறைவனின் திருவருட்டுணை கொண்டிருந்தமையின், இக் கலைகள் பூத்தன ; பரிமளித்தன.

இக்கலைச் சிறப்பு தனது தாய் நாட்டிலே யன்றித் தான் குடியேறியுள்ள மற்ற நாடுகளி லெல்லாம் பரவிச் சிறந்து விளங்கி ஓங்கின. உலகப் பெருமக்கள், இன்னும் அவைகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் வியந்து பெருமிதங் கொள்கின்றனர்.

கலையாவதென்ன ?

கலை, மக்கள் வாழ்க்கையில் தனிப்பட்ட ஒரு பண்பு. ஓர் அனுபவத்தின் திறன். ஒருவன் ஓர் இன்ப உணர்ச்சியில் ஈடுபடு கிறான். அதனில் அவனது ஆன்ம சக்தி தொடர்கிறது. அந்த இன்ப எண்ணத்திற்கு அவன் ஓர் உருக்கொடுக்கிறான். அது இசை யாகிறது; ஒரு சிற்பமாகிறது; ஒரு சித்திர மாகிறது. அதனில் அவன் தன்னையே மறந்து ஒன்றுகிறான். இவ்வான்மத் தொடர்பு, அதனை அனுபவிக்கும் பிறரையும் ஈர்க்கின்றது. இவ்வான்மத் தொடர்பு பெற்ற திறனே கலையாகும். இதற்குக் கால எல்லை, சமுதாயத்தின் வேறுபாடுகள் குறுக் கிடுவதில்லை. இக்கலை வன்மையும் உண்மை யும் எந்நாட்டாராலும் போற்றப் பெறுவது. அதனை நாடும் ஒவ்வொருவருக்கும் இன் பத்தை விளைவிக்கின்றது. அதனைப் பார்க் குந்தோறும் உன்னுந்தோறும் ஒரு புதிய உவகை பிறக்கின்றது. ஓர் இயற்கை எழில் அதில் ததும்புகிறது. கலைஞன் அத னில் தன்வசமிழக்கின்றான். அதனை நுகர் வோரும் அதனில் பிணிப்புறுகிறார்கள். கலை ஓர் இன்ப, ஆன்ம சக்தியாகும்.

கவி இரவீந்திரநாத் தாகூர் கூறியபடி கலை யானது, தன்னலமும் பழி பாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்லவல்லது. இவ்விலக் கணம் இந்தியக்கலைக்கும், சிறப்பாகத் தென் இந்தியக் கலைக்கும் முற்றிலும் பொருந்தும். ஏனெனில், இக்கலையின் அழகு வெறும் செயற்கை மாத்திரமன்று. அல்லது இயற்கை மாத்திரமன்று. ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்களை மேவியது. மற்றொரு சிறப் பும் உளது. அதுதான், இக்கலை, இந்திய சமயத் தத்துவக் கருத்துக்களை அடிப்படை யாக்கிக் கொண்டிருப்பதாகும். என்றும் உள இறைவன் கருணை போன்று இக்கலை நிலையாக நிற்பதற்கும் இது காரணமா கின்றது.

சிற்பக்கலை—சரித்திரத் தொடர்புகள்

சிற்பம் என்பது மண்ணினாலும், கல்லினாலும், உலோகங்களினாலும், தந்தம், என்பு முதலிய வேறு பொருள்களினாலும் சிற்பக் கலைஞன், தான் கண்ணினாற் கண்டவற்றையும், கருத்தாற் கொண்டவற்றையும் உருவகப்படுத்திக் காண்பிப்பதேயாகும். மிகப் பழைய நாட்களிலேயே அதாவது விலங்கி லிருந்து ஒரு சிறிது மக்கள் உயர்வுபெற்றுக் குளிருக்கும் வெயிலுக்கும் ஒதுங்கி நின்ற மர நிழலையும், புதர் மறைவையும் விட்டு இயற்கைக் குகைக்குள் புகுந்து வாழ எண்ணிய நாட்களிலேயே இச்சிற்பக் கலை தோன்றிய தென்னலாம். அப்பழங் குகை களிலே இதுபோது சில இடங்களில் காட்டு விலங்குகளின் உருவங்கள் கீறப்பெற்ற பாறைகளும், என்பு உருவங்களும் இதற்குச் சான்று பகர்வனவாம்.

இவ்வாறு தோன்றிய சிற்பக்கலையானது காலப் போக்கில் மக்களின் உள்ள வளர்ச் சிக்கும், அவர்களுக்குக் கிடைத்த கருவி களின் நுட்பத்திற்கும் ஏற்றவண்ணம் வளர் வதாயிற்று. அசீரியா, எகிப்து முதலிய பழைய நாகரிகம் பெற்ற நாடுகளில் இக்கலை யானது சிறந்த பெரியார்களை நினைவு கூர்தற் கும், புலன்களாற் காண முடியாத தெய்வத் தன்மைகளை ஒருவாறு உருவளவிற் காண் பிப்பதற்கும் பயன்பட்டு வந்தது. இவை களே கிரேக்க தேசத்தில் நாம் இப்போது பார்க்கக் கிடைக்கும் Zeus, Juno, Minerva போன்ற கடவுள்களின் திருவுரு வங்களாகும். இன்னும் அக்ரோபாலிஸ் (Acropolis) போன்ற பெரு மண்டபங் களைக் காணும்போது அக்கலை அக்காலத்தி லேயே ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருக் கக் காண்கிறோம். ஆனால், அவை யாவும் இயற்கையை யொட்டியே புலன்களுக்கு ஓர் இன்பம் தருவனவாகி நிற்பன.

நம் பரத கண்டத்திலோ, வட இந்தியா வில் கிரேக்கர்களது தொடர்பு நேர்ந்த பின் னர் எழுந்தவையாகக் கூறப்படுபவற்றுள், கனிஷ்க மன்னருடைய சிதைந்த சிலையை யும், புத்தர் பெருமானுடைய சிலைகளையுங் காணுமிடத்து அச்சிற்பங்களில் ஒரு தனித்த உயிர்த் துடிப்பு இருப்பதாகக் காண்கிறோம். இவை வெறும் அழகிற்கு மாத்திரமன்று தோன்றியவை. இன்னும், சமீபத்தில் எடுக்கப்பெற்றிருக்கும் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையான மொஹஞ்சதாரோ, ஹாரப்பா நகர்ச் சிற்ப உருவங்கள் இச் சிறப்பை வலியுறுத்தும். அக்கால முதற் கொண்டு இந்நாள் வரையும் இந்திய சிற்பக் கலைஞன் தோற்றுவித்த சிற்பங்கள் ஒவ் வொன்றிலும் இவ்விதயத் துடிப்பினை அவன் உருவாக்கிய சிற்பங்களிற் காண லாகும். இச்சிறப்பினை மேலைட்டுக் கலைஞர் களும், அறிஞர்களும் போற்றி வருகின் றனர்.

சிற்பக்கலையின் தோற்றம், வடநாட்டில் பொதுவாக இறந்துபட்ட பெரியார்களை நினைவுறும் பொருட்டு, அவர்களுடைய உரு வங்களைக் கல்லாற் செய்வித்து வைத்தல் என்ற மரபு பற்றியதாகும். இது கி. மு. நான்காம் நூற்றாண்டிலிருந்த பாச கவியின் [1](Bhasa) பிரதிமா நாடகத்தினின்று வெளி யாகின்றது. இதனைக் கவி, தசரதன் இறந்த செய்தியைப் பரதன் தன் அரண்மனைப் பிரதிமா கிருகத்தில் வைக்கப்பட்டிருந்த தன் தந்தையின் சிற்ப உருவத்தைக் கண்டே தெரிந்துகொண்டான் என்று விளக்கி யுள்ளார்.

தமிழகத்திலோ, பழங் காலங்களில், இறந்த வீரர்களுக்கு நினைவாக்கக் கருதி வீரக் கல்லும், கற்புடை மகளிருக்கு மகா சதிக் கல்லும் நடும் வழக்கம் இருந்து வந் தது. தமிழ் இலக்கணங்களும் இலக்கியங் களும் இதனை வலியுறுத்துவன.

[1] BHASA lived between 325 B.C. and Second Century A.D.—J.A.S.B. July 1913.

இதனைப் பொருளதிகாரம்–புறத்திணையியல் 60–ஆவது சூத்திரம்,

"காட்சி கால்கோ னீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர"

என்பதாலும்,

"..... பெயர் பொறித்து
இனி நட்டன ரே கல்லும்"—

எனும் புறப்பட்டாலும், "ஆடவர் பெயரும் பீடும் எழுதி அதர் தொறும் பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்" எனும் அகப்பட்டாலும் மற்றும் பல குறிப்புக்களாலும், போரில் மடிந்த வீரனைக் குறித்து, அவனுடைய உற்றூர், நண்பர் பலர் கூடிக் "கல்கெழு சுரத்திற் சென்று கற்கண்டு", அது கொணர்ந்தபின் அக்கல்லினை நீரிற் படுத்துத் தூய்மை செய்து, பின்னர்ப் பேரும் பீடும் எழுதி நாட்டிப் பிறகு அக்கல்லை வீரத் தெய்வமாகப் பாவித்துச் சிறப்புச் செய்து, கோயில் எடுப்பதும் வழக்கமாகியது. இன்னும் இவ்விடத்தில் 'வீரசாலை' என்ற ஒரு கட்டிடம் எடுப்பிப்பதும், பின் பாணர்களைக் கொண்டு மடிந்த வீரனது புகழைப் பாடுவிப்பதும் வழக்கமாக இருந்தது. தமிழ் நாடெங்கும் இவ்வீரக் கற்கள் இருப்பன காணலாகும். வடநாட்டில் இவ்வீரக் கற்கள் இருப்பனவாகக் காண்கிலோம். இது தமிழகத்துக்கு உரித்தான ஒரு மரபெனத் தெரிகிறது. மற்று மொன்று.

"கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" எனக் கொண்ட தமிழ் மங்கை தன் கணவன் இறந்த பின் தான் ஆற்றுதவளாகி, 'தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுது எழுவாள்' ஆகிய நன் மனைவி தானும் தன் கணவனுடன் சுவர்க்கம் புகுதல் கருதி அவனுக்காக வளர்த்த தீயின்கண்ணே தானும் புகுதல் முற்காலத்தில் சாதாரண வழக்கமாகும். இவ்வாறு மாய்த்துக்கொண்ட பத்தினிப் பெண்டிர் நிமித்தமாக நட்ட கல் மகா சதிக் கல் எனப் பெயர் பெற்றது. இதனை,

அரிய நூல்கட்கு உரிய இடம்!

இலக்கிய நூல்கட்கு ஏற்ற இடம்!

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

1/140, பிராட்வே, சென்னை1.

★

தலைமை : திருநெல்வேலி

★

கழகவழி இதுகாறும் 836 நூல்கள் வெளி வந்துள்ளன. இலக்கிய நூல்கள், மாணவர்க் கேற்ற கதைநூல்கள், பாடநூல்கள், பரிசுக் கேற்ற நூல்கள், பிற வெளியீட்டாரின் எல் லாத் தமிழ்நூல்களும் கழக நிலையங்களில் எப்போதும் தட்டாமற் கிடைக்கப்பெறும்.

இலக்கிய நூல்கள் :

		ரூ.	அ.
பதினெண்கீழ்க்கணக்கு முழுமையும் மூலம்		4	0
நாலடியார் விருத்தியுரை		3	8
நாலாயிரம்	உரையுடன்	2	8
கடுகங்கடிகை மாமூலம்	,,	2	8
காஞ்சி ஏலாதிகோவை	,,	2	4
நாலடிநானூறு	,,	3	8
பழமொழி நானூறு	,,	4	0
புறநானூறு (இருபகுதிகள்)	,,	15	0
பதிற்றுப்பத்து	,,	7	8
குறுந்தொகை	,,	8	12
நற்றிணை	,,	7	8
தஞ்சைவாணன் கோவை	,,	4	0
அம்பிகாபதி கோவை	,,	5	0
திருமுருகாற்றுப்படை	,,	2	0
சிறுபாணாற்றுப்படை	,,	1	12
பெரும்பாணாற்றுப்படை	,,	2	8
பொருநராற்றுப்படை	,,	1	8
முல்லைப்பாட்டு	,,	1	0
திருப்பூவண நாதர் உலா	,,	2	0
நந்திக்கலம்பகம்	,,	4	0
திருக்குற்றாலக் குறவஞ்சி	,,	2	8

கூடுதல் கழிவுள்ள நூல்கள் :

கீழ்க்கண்ட நான்கு நூல்கள் மட்டும் ஒரே வகையில் ஒரேமுறையில் 25 படி வாங்குபவர்க்கு 25 சத வீதமும், 50 படிகட்கு மேல் வாங்குபவர்க்கு 30 சத வீதமும் கழிவு தரப்படும்.

	ரூ.	அ.
திருக்குறள் பரிமேலழகர் உரை	5	0
திருக்குறள் தெளிவுரை :		
டாக்டர் மு. வரதராசனார்	1	4
கழகத் தமிழ்க் கையகராதி	1	8
கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி	3	4

முழு விலைப்பட்டி எழுதிப் பெறவும்.

"காதற் கணவனொடு கனியெரி மூழ்கு
மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று"

என்றும்,

"தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னும்"

என்னும் புறப்பொருள் அடிகள் கூறுவதும் காண்க.

இவ்வாறு வாழ்க்கையில் ஈடுபெற்றிருந்த சிற்பக்கலை மிளிர்ந்து, மனிதனுடைய ஞான நிலையை அடையவும், தானும் செல்வர் களும் மாட மாளிகைகள் அமைத்துக் கொள்ளுவதிலும் பயன்படலாயிற்று. நகர் களில் உயர்ந்த மாடங்களும், அடுக்கு வீடு களும், நிலா முற்றங்களுமுள்ள இல்லங் களும் தோன்றின. இதனை,

"வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றரு ஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து"
—பெரும். 346-8

"சுடுமண் ணேங்கிய நெடுநகர் வரைப்பின்"
—பெரும். 405

என்னும் இவை போன்ற பல சான்றுகள் விளக்கும். இதனை எவ்வாறு வகுத்தனர் என்பதை,

"ஒருதிறஞ் சாரா வரைநா ளமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்பமனை
வகுத்து"

என்ற நெடுநல் வாடை அடிகள் விளக்கு வன.

இவ்வாறு சிற்ப நூலறிந்த சிற்பிகள், நாள் குறித்து, நாழிகை பார்த்து, நேரறி கயி றிட்டுத் திசைகளையும் அத்திசைகளில் நிற் கும் தெய்வங்களையும் நோக்கி எழுந்தன அரசர் மாளிகைகளும், மண்டபங்களும்.

ஆனால், இவ்வாறு எழுந்த சிற்பச் சிறப் புக்களெல்லாம் ஒருங்கு கூடி எழுந்த தென்ன எழுந்தன கோயிற் சிற்பங்கள்.

கோயிற் சிற்பம்

தமிழன் கண்ட கோயில் ஒரு கலைப் பண் டாரம். கலை வளர்த்த ஒரு கற்பகப் பூந் தரு. இன்னும், இறை–தத்துவக் கருத்துக் களை உருவாக்கிய நிலைக்களம். தெய்வ உணர்வு பெற்ற நமது ஆன்றோர், மனத் திற் கெட்டாப் பரம்பொருளையும், அளவு கடந்த அழகினையும் தமது சிந்தனையால் உருவகப் படுத்தினர்கள். அன்பும், தந்நம் பிக்கையும், ததும்பிய அவர்கள் உள்ளத்தில் பக்தி என்ற கடவுளன்பு தானே உதித்தது. ஆண்டவனும் அடியார்க்கு எளியன் ஆத லால் தமது தத்துவப் பொருள்களை அவர் களுக்குத் தோற்றுவித்து அவர்கள் இதயத் தில் இடங்கொண்டான். பூசலார் நாயனார் ஈசற்குத் தம் மனத்தில் கோயில் கட்டினார். அதற்குக் குடமுழுக்குச் செய்யவும் ஒரு நாள் குறித்தார். அதேநாளில் கழற்சிங்கனும் தான் கட்டிய கோயிலைப் பிரதிட்டிக்க நாள் தெரிந்திருந்தான். ஈசனே வேண்டினான் அந் நாளில் அதனில் அமர்வதற்கு. ஆனால் ஆண் டவன் பூசலார் கட்டிய மனக்கோயிலில் அமர்ந்தார். மனத்திற்கெட்டா ஆண்டவன் உண்மைப் பக்தி கண்டவிடத்து, அன்பு, நம்பிக்கை கண்டவிடத்து எளிதாகினன்.

இவ்வுண்மையின் சான்றோரிடத்துத் தத் துவப் பொருள் புலப்பட்டது. அழகிய கருத்துக்கள் நிரம்பின. ஆகவே, அன்பில் தோய்ந்த அவர்கள் தாம் கண்ட இன்பக் கருத்துக்களை, கலை ஞானத்தை, தத்துவக் கருத்துக்களை உலகம் அனுபவிக்க வேண்டு மென நினைத்தனர். அவ்வெண்ணங்கள் இசையாயின–ஆகமங்களாயின[1] – சாத்திரங் களாயின–சிற்ப சாத்திரங்களுமாயின. இவை

[1]காமிகாகமம் - அக்னி புராணம், மத்ஸய புராணம், பிரமாண்ட புராணம், கருட புராணம், பவிஷ்ய புராணம், பிருகத் சங்கிதை, சுக்கிர நீதி - மற்றும் பல வட நூல்களும், தென்னாட்டுச் சிற்பி களால் போற்றப்பெறும் அகத்தியரது சகளாதிகாரம், காசிபரது காசியபம், மயனது மய மதம், மாநசரரது மாநசாரம், இன்னும் பலவுமாம்.

சிற்பிகளின் பரம்பரைகளிற் பயின்ற செயல்களாகவே யிருந்து, ஒரு காலத்தில் அவர்களுக்கே பயன்படும் படியான அளவுகள், நியதிகள், செய்முறைகளாக, நூல்களில் வகுக்கப்பட்டனவாகும்.

இவ்வாறு எழுந்த தென்னாட்டுக் கோயில்களின் அமைப்பு சமய தத்துவங்களைக் குறிக்கோளாகக் கொண்டன – ஆண்டவனை அடைய, சமய நூல்களான் முடிந்த சாதனங்களாயின. திருக்கோயிலின் ஒவ்வொரு பகுதியும் ஒரு சமய தத்துவத்தை உணர்த்தின. சுருங்கக் கூறுமிடத்து மானிட உயிர் தங்குதற்கு, அவனது உடம்பும் ஐம்புலன்களும் அமைந்துள்ளவாறு போல, எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு ஒரு கோயில் கட்டிய தமிழன் அதனையே உருவகப் படுத்தித் தத்துவங்களாலாகிய தேகமாகிய கோயிலை நிருமாணம் செய்தான். இதுதான்,

> "உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
> வள்ளற் பெருமானுக்கு வாய்கோபுர வாசல்
> தெள்ளத் தெரிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

எனப் பெரியார் திருமூலர்கண்ட முடிபாகும்.

சங்க காலக் கோயில்கள்

இவ்வாறு எழுந்த தமிழகக் கோயில்கள் எண்ணிறந்தன. இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டு இருந்த கோயில்களைப் பற்றி,

> "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீல மேனி நெடியோன் கோயிலும்,
> மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

எனும் சிலப்பதிகார அடிகள் விளக்கும். இதனை விரித்தால் பெருகும். இவை நாளடைவில் பல்கிப் பெருகிப் பல திறப்பட்ட கோயில்களாயின. அதனை 7-ஆவது நூற்றாண்டினரான அப்பர் பெருமானது திருத்தாண்டக அடிகள் தெளிவுறுத்தும்:

> "பெருங்கோயி லெழுபதினே டெட்டும்
> மற்றுங்,
> கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்
> கோயில்
> கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்
> கோயில்
> இருக்கோதி மறையவர்கள் வழிபட்
> டேத்தும்
> இளங்கோயில், மணிக்கோயில் ஆலக்
> கோயில்,
> திருக்கோயில் சிவனுறையுங் கோயில்
> சூழ்ந்து
> தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் நீரும் அன்றே"

அக்காலத்து எழுந்த கோயில்கள் சுடுமண்ணாலும் சாந்தாலும் மரத்தாலும் எழுந்தவை. கால அளவில் அவை பழுது போயும் புதுப்பிக்கப்பட்டும் வந்தன. ஆனால் 7 முதல் 9-ஆவது நூற்றாண்டில், பல்லவன் மகேந்திரவர்மனின் தீவிர பக்தி வலைப்பட்ட சிவன் தனக்கு என்றும் அழியாக் கோயில் களை அவன் மூலமாக ஆக்கிக் கொண்டான். கோயில்களாக அப்பல்லவன் பெரும் பாறைகளைக் குடைந்தான். அவை திரிசிராப் பள்ளி, மண்டகப்பட்டு, மாமண்டூர், மாமல்லபுரத்திலுள்ளன போன்றவை. அதற்கடுத்த இராஜசிம்ம பல்லவன் பெரும் பாறைகளைச் சதுரப்படுத்தி ஒன்றன் மேலொன்றாகப் படியவைத்த காஞ்சி கயிலாயநாதர் கோயில் போன்றவை. இவர் காலத்துக்குப்பின், சோழர்கள் வரவே, நார்த்தா மலை, கண்ணனூர், பனைமலைக் கோயில் போன்றவையும், முதலாம் இராசராசன் தஞ்சை இராசராசேச்சரம், முதல் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழேச்சரம், இரண்டாம் இராசராசன் தாராசுரம், குலோத்துங்கன் திரிபுவனம் போன்ற பெருமிதக்கோயில்களையும், அவை போன்ற, சிதம்பரம், சீர்காழி கோயில்களையும், பாண்டியர் காலத்து, தென்காசி, திருநெல்வேலிக் கோயில்கள், நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களுடனும், கோயில் உள்ளுறை திருக்குளங்களுடனும் விஜய நகர அரசர்களது, திருவண்ணாமலை, காஞ்சி ஏகாம்பரர்

கோயில்களும் போன்றவை எண்ணிறந்தன நாட்டில் எழுந்தன. இவை யாவும், உலகோர் மெச்சும் சிற்பக் களஞ்சியங்களாகும். இதன் பெருமிதம், திருவலஞ்சுழி பல்கணியிலும், திருவீழி மிழலை வெளவானத்தி மண்டபத்திலும், ஆவுடையார் கோயில் கொடுங்கை போன்றவைகளிலும், கொங்கு நாட்டில் கெட்டி முதலி என்ற பெருமகன் எடுத்த தாரமங்கலம், தாடிக் கோம்பு, திருச்செங்கோடு போன்ற பேரூர்களிலும் சிறப்பாகக் காண்கிறோம். இவை ஈடும் எடுப்பு மில்லாதவை. இன்னும் இச்சிற்பங்கள், நாட்டியக் கலையையும், சிருங்காரரசம், வீரச் சுவை, புராண தத்துவத் திருமேனிகள், புள்கள், விலங்குகள், செடிகொடிகள், அலங்காரப் புஷ்பங்கள் யாவும் அங்குக் கால தத்துவங்களை மீறி ஒளியுடன் பிரகாசிப்பன.

தெய்வத்திருமேனிகள்

இவைகளெல்லாவற்றையும் மீறியவை இக்கோயில் கொண்டு ஒழுகும் தெய்வத் திருமேனிகளாகும். இவை செம்பு முதலிய பஞ்ச லோகங்களாலாகியவை. வெறும் கருங்கல்லாலும் ஆகியவை. ஆனால், இவை ஒவ்வொன்றும் யோகியர்களும், தபோ வல்லவர்களும், தமது சாதனைகளால் மனத்தால் கண்ட கடவுளரின் திருத்தோற்றத்தை உருவாக்கியவை. இவர்களின் அரிய கருத்துக்கள், நாளாவட்டத்தில், தியான சுலோகங்களாக உ வாகின. அவற்றில் கடவுளரின் திருமேனிகள் அவரவர்களின் தத்துவப் பொருள்களுக்கிணங்க தோற்றத்தையும், அங்க அடையாளங்களையும், நிறத்தையும், மிக நுணுக்கமாக ஆராய்ந்த அவர்களின் அணிகளையும், ஊர்திகளையும் பெற்றன. இதனை மனத்திற் கொண்டு, உபவாசமிருந்து, இறைவன் திருவருட்டுணை கொண்டே சிற்பி இப்பெரும் பொருள்களை உருவாக்கினன். இவைதாம் உலகம் போற்றும் தில்லைச் சிற்றம்பலவனது நடராச சிற்பம், தென்முகப் பரமாசிரியனை தக்ஷிணமூர்த்தி, சண்டேசுவரானுக்கிரக மூர்த்தி, நாயக-நாயகி பாவனையான கலியாண சுந்தர மூர்த்தி, கால சம்ஹார மூர்த்தி, பிக்ஷாண்டவர், மற்றும் வீரச்சுவை ததும்பும் வீரபத்திரர், கஜமுகாசுர மூர்த்தி, மஹிஷாசுர மர்த்தனி இன்னும் பிறவுமாகும். இவை உலகம் நிற்குமளவும் தம் அழகாலும், சிற்பத்திறனாலும் நிற்பவையாகும்.

உருவச் சிற்பங்கள்

திருக்கோயில்களிற் காணும் மற்றுமொரு திறன், மானிட உருவச் சிற்பமாகும். சுக்கிர நீதி சாரம்[1] என்ற சிற்ப நூல், இதனை விலக்கி யிருந்தும், காலப்போக்கில் இவை பெருமிதமாகத் தோற்றம் அளிப்பன. 7-ஆம் நூற்றாண்டில் மாமல்லபுரம் வராகக் குகைக்குள் பல்லவ சிம்ஹ விஷ்ணுவும், அவன் தேவியரும் மகேந்திரவர்மனும் தோற்றமளிக்கின்றனர். இன்னும், அங்குப் பல்லவ பரமேசுவர வர்மனும் அவன் தேவியும், கோனேரி ராஜபுரத்தில் கண்டராதித்த சோழனும், திருவியலூரில் முதல் இராச ராசனும், தாராசுரத்தில் இரண்டாம் இராச ராசனும், திரிபுவனத்தில் மூன்றாம் குலோத்துங்கனும், சுசீந்தரத்தில் குலசேகர பாண்டியனும், மதுரையில் மதுரைத் திருமலை நாயக்க மன்னர்களும், அரியநாத முதலியாரும், திருமலையில் கிருஷ்ணதேவராயனும், அச்சுதராயனும் அவர் பத்தினிகளும், வேங்கடபதி ராயனும், தென்காசிக் கோயிலில் பராக்கிரம பாண்டியனும், இராமேச்சரத்தில் சேதுபதி மன்னர்களும், காளையார் கோயிலில் மருது பாண்டியர்களும் இன்னும் எண்ணற்ற அரசர் பெரு மக்களும் ஆங்காங்குத் தோற்றமளிக்கின்றனர். இவை யாவும், சரித்திர உணர்வுடனும், அக்காலச் சிற்பங்களாகவும் தோன்றுவதன் காரணமாக உண்மை உருவச் சிற்பங்களும் (Portrait Sculptures) ஆவன.

[1] சுக்கிர நீதிசாரம், IV. iv. 154-158.

வெளிநாட்டு இந்தியச் சிற்பம்

இவ்வாறு வளர்ந்த சிற்பங்கள், நம்நாட்டு மக்களின் வெளிநாட்டுக் குடியேற்ற முயற்சியால், மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தானம், திபெத்து, சீனு, கொரியா, ஜப்பான், தென் கடல் தீவுகள், பாலித் தீவு, சுமாத்ரா, போர்னியோ, இலங்கை முதலிய நாடுகளிலும் பரவின. தென்னிட்டினர், திரைகடலோடியும் திரவியம் தேடியது மாத்திரமின்றித் தமது சமயக் கருத்துக்களை அங்குப் புகுத்தினர். அச்சமயத்துடன், இந்தியக் கலையும் உடன்சென்று, செல்வாக்கைப் பெருக்கியது. ஜாவா, சீயம் இன்னும் பல தேசங்களில், கி. பி. 2 முதல் 10-12ஆம் நூற்றாண்டு வரை, கலையுள்ளம் படைத்த இந்து சமய மன்னர்கள் ஆண்டு வந்தனர். அதன் காரணமாக, போராபுதூரிலும், பிராம்பனத்திலும், இலங்கை போலனறுவையிலும், கம்போடியாவில் ஆங்கோர் வாட் என்ற உலகப் புகழ் பெற்ற வைணவக் கோயிலிலும் இந்தியச் சிற்பக்கலையின் பெருஞ்சிறப்பை இன்றும் காண்கிறோம்.

வேண்டுகோள்

இவ்வாறுக வளர்த்த சிற்பக் கலைஞன் தமிழன், தனது முற்காலத்தைப் பொற்காலமாக்கிக் கொண்டான். தற்காலமும் இனி வரப் போகும் காலமும் அவனுக்கு ஒரு புதிராகத் தோற்றுகின்றன. கலை உள்ளம் தணியா ஒரு தீவிர தாகம். அதனைத் தட்டி எழுப்பி இன்னும் அழியாச் சிற்பங்களை உருவாக்கும் பணி முற்கிடக்கின்றது. சிற்ப சாத்திரங்களைத் தமிழில் யாவரும் தெரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பெறல் வேண்டும். சிற்பக் கலைக்கூடங்களும் அதனில் பயிலுவோரும் வேண்டும். அதனைக் காக்கும் புரவலர்களும் வேண்டும். ஆயிரமாயிரம் ஆண்டுகளில் சிதைவுற்ற திருக்கோயில்கள் பழுதுபெற வேண்டும். நாட்டுப்பற்றும், சமயப்பற்றும், தன் தாய் மொழிப்பற்றும், நம்நாடு என்னும் அகப்பற்றும் இதற்கு உதவ இறைவன் துணைவேண்டும். நலம் பெருகுக.

குடும்பப் பத்திரிகைகள்



கலைமகள் – மணிக்கணக்காக உட்கார்ந்து, சுவாரஸ்யமாகவும் உபயோகமாகவும் படிக்கக்கூடிய கதைகளும் கட்டுரைகளும் புதிய தொடர் கதைகளும் நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மணத்தை அவர்களுக்கு வாரி வழங்கும் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 7/8



மஞ்சரி – நாட்டின் பல பாஷைகளில் வெளியாகும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளிலிருந்து சிறந்த விஷயங்களைப் படித்து ஆராய்ந்து, பற்பல ருசியும் பயனும் மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும் வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4/8



கண்ணன் – ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள உங்கள் செல்வக் குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதைகளும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும் அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்களும் நிறைந்தது.

வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 4/-

மூன்று பத்திரிகைகளின் சந்தா, தீபாவளி மலர்கள் உள்பட ரூ. 16 ஆகிறது.
மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தாவுக்கு ரூ. 14/4 தான்.

வெவ்வேறு விஷயங்களைப் பற்றி நிபுணர்கள் எழுதிய பல நூல்களை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். விரிவான விலைப் பட்டிக்கு எழுதுக.

கலைமகள் காரியாலயம்

தபால் பெட்டி 604 :: மயிலாப்பூர், சென்னை-4.

தமிழ் இலக்கண வளர்ச்சி

ஆசிரியர் திரு. நா. அப்பணையங்கார், தமிழ்ச் சங்கம், மதுரை

★

இத்தலைப்பில் சில கருத்துக்களை யான் எழுதுதல் இவ்விழாக் குழுவினரின் விருப்பம். தமிழ்மொழியை, தெய்வத்தமிழ், கன்னித்தமிழ், என்றுமுள தென்றமிழ் என்றெல்லாம் நாம் போற்றுகிறோம். இதனால் தேர்ந்தது என்ன ? தமிழின் பழமையும், பெருமையும் மக்கள் அறிவால் அளவிட அரியன என்பதே.

என்றுமுள்ளது, அழிவில்லாதது தமிழ் என்றால், அதன் சிறப்பியல்பான இலக்கணமும் என்றுமுள்ளது, அழிவில்லாதது ஆக வேண்டும். இயல்பு, பண்பு, அழகு, இலக்கணம் என்பன ஒரு பொருள் சொற்கள். தமிழுக்குரிய தனிச் சிறப்பான பண்புகளே தமிழிலக்கணம். ஆகையால் அதற்கு வளர்தலும் குன்றுதலும் இல்லை; என்றும் ஒரு தன்மையதாகவே நின்று நிலவும். ஒரு காலத்தில் வளரும் பொருள் எல்லாம் மற்றொரு காலத்தில் மறைந்து கெடுவது உலக இயற்கை. ஆகவே, இலக்கணம் பயில்வோரும், அதனை உணர்த்திய நூல்களும் எண்ணிக்கையால் குறையினும் குறைபடும்; அன்றி, கன்னித் தமிழ் தன் என்றும்மாறு இயலுடன் மன்னித் திகழுமென்பது ஒரு சார் கருத்து.

இவ்வாற்றால் இலக்கணக் கலையும், எண்ணுக் கலையும் ஒரு தன்மைய என்னலாம். எண்ணுக் கலையாவது கணித நூல். தமிழ்க் கணிதமும், அதனைப் பயிலும் தமிழ் முறையான வழிகளும் இக்காலத்தில் இறந்தன. ஆயினும் அக்கலைக்குக் கேடில்லை. அது போலவே தமிழிலக்கணமும் பயில்வோர் குறையால் வழக்கழியினும், தனக்குக் கேடிலதாம் என்பது வெளிப்படை.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற திருவள்ளுவர் வாக்கில் இவ்விரு கலைகளும் சேரப் பயின்றுள்ளன. இதில் எண் என்றது கணிதத்தை. எழுத்தென்றது எழுத்தும், அதனோடு ஒற்றுமையுடைய சொல்லுமாகிய இயற்றமிழ் இலக்கணத்தை. இந்த இரண்டும் அறம் முதலான உறுதிப் பொருளை அடைவார்க்கு இன்றியமையாத கருவிகளாம் என்று ஆன்றோரால் போற்றப் படுகின்றன. இதனுண்மையை,

"அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தால் செப்பு"

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்—
மொழித்திறதின்
முட்டறுத்த நல்லோன் முதுநூல்
பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என இவ்வாறு வரும் நூற் சான்றுகளால் நன்கு வலியுறும். இது நிற்க.

மற்றொரு சாரான கருத்தும் இங்கு மனங் கொள்ளற் குரியது. இயற்கையாய் அமைந்த இலக்கண வரம்பில்லாத ஏனைப் புதுமொழிகளெல்லாம் நாள்தோறும் வளர்வது போல, நமது தாய்மொழியும் "வளரும் தமிழ்" எனவே கொள்ளப்படுமெனின், அப்போது அதன் இலக்கணமும் வளர்ச்சியுடையதே என்று சொல்வதில் சிறிதும் தடையில்லை. ஆதலால், "தமிழ் இலக்கண வளர்ச்சி" என்ற இத்தலைப்புப் பெயரும் இவ்வாற்றால் இங்குப் பொருந்துவதே என்னலாம்.

அறிவின் எல்லையைக் கடந்து அப்பாற் பட்ட பன்னெடுங் காலத்திற்கு முன்னர், முதன்முதல் சொல் இலக்கணமே தோன்றியது; அதன் பின்னர் நெடுங்காலம் சென்று எழுத்திலக்கணம் தோன்றி வளர்ந்தது: என்று இவ்வாறு நிலவும் ஆன்றோர் வழக்கும் உண்டு. நேமிநாத உரை சொல்லதிகாரத் தொடக்கத்தில் இங்ஙனம் கூறும்: ''போக பூமியான காலத்து, எழுத்து இன்றிக் கன்ம பூமியான காலத்து எழுத்துத் தோன்றின; இத்துணையல்லது சொல்போல எக்காலத்தும் தொடர்ந்து வாராத எழுத்தினை முன் வைத்தல் பிழை; சொல்லையே முன்வைக்கற் பாலது எனின், அற்றன்று. எழுத்தாலே வந்தது சொல்லாதலால் ஆக்குவதனை முன் உணர்த்தி அதனால் ஆயதனைப் பின்னுணர்த்தினால் பிழையின்று; மரபு என்க; இஃது எழுத்ததிகாரத்தோடு அடைவு :'' என்ற இவ்வுரை ஆராய்ச்சிக்குரியது. இலக்கண வளர்ச்சிக்கு முதன்முதல் அடியிட்டபடி இது என்று சொன்னல் மிகவும் பொருந்தும். இஃது ஏதோவொரு பண்டை ஊழியின் நிகழ்ச்சி என்ன வேண்டும். இது நிற்க.

நமக்குத் தெரிய, தமிழ் வரலாற்றின் மிகவும் முற்பட்ட காலத்திலேயே ''முத்தமிழ்'' என்ற உருவத்தில் இலக்கண வளர்ச்சி முற்றி முதிர்ந்து நிரம்பி நின்றது. இயல், இசை, நாடகக் கலைநூல்கள் அக்காலம் செழித்தோங்கி வளர்ந்து சிறந்து விளங்கின. இதன் உண்மையை விளக்கத் தொல் காப்பியத்தில் பற்பல சான்றுகள் உள்ளன. நூலுக்கும், நூற்பா முதலிய நூலுறுப்புக்களுக்கும் தொல்காப்பியம் நன்முக இலக்கணம் வரைந்தது. இவ்விலக்கணத்திற்கு இலக்கியம் முன்னைய இலக்கண நூல்களேயன்றி வேறில்லை என்பது சொல்லவும் வேண்டுமோ? அன்றியும் புலவர், புலனுணர்ந்தோர், உணர்ந்திசினோர், நுண்ணிதினுணர்ந்தோர், நேரிதின் உணர்ந்தோர் எனப் பலவாறு போற்றி, முன்னூலாசிரியர் எத்துணையோ பலர் இருந்ததை அந்நூல் தெளிவாகக் குறித்துச் சென்றது.

இவை எல்லாம் ஒருபுறமிருக்கத் தொல் காப்பியத்திற்கு முதனூல் செய்தார் அகத்தியர்; அந்நூலில் அவர் முத்தமிழுக்கும் இலக்கணம் வழிப்படுத்தார் என்று சொல்லப்படுவது உண்டு. இங்கு வழிப்படுத்தார் என்றது நெறிமுறை கண்டு ஒழுங்கு செய்தார் என்பதையே குறிக்கும். அன்றி அவரே தமிழை முதலில் உண்டாக்கினர் என்பதாகாது. அவரும் ஒரு முந்துநூலினைச் சிவபிரானிடம் ஓதியுணர்ந்தார் என மேற்கோளொன்று நமக்கு விளக்கா நின்றது.

''ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்''

என்ற பழைய செய்யுள்பகுதியே அது. இதுவேயன்றி, ''பரதம்'' என்ற நாடகத் தமிழ் இலக்கணநூல் ஒன்று அகத்தியத்திற்கு முன்பே இருந்ததாக அடியார்க்கு நல்லார் உரையால் நாம் அறிகின்றோம். அந்த முன்னூல்களெல்லாம் இப்போது அழிந்துபோயின. அவற்றோடு அகத்திய நூலும் வழக்கில் இல்லாமல் மறைந்துவிட்டது. அதனால் அகத்தியரையும், அவர் நூலினையும்பற்றி இன்று சிலர்க்கு ஐயம் எழுகின்றது. அகத்தியர் என்ற ஆசிரியர் தமிழ்நாட்டில் இருந்தனரா? அகத்தியம் என்ற தமிழ் நூல் அவர் இயற்றியதுண்டா? என்றெல்லாம் நம்மவர் ஆராய்ச்சி நிகழ்த்துகின்றனர். சாதி மதக் கொள்கைகளால் ஒருவரோடொருவர் மாறுபட்ட சைன பௌத்த சைவ வைணவ சமய ஆசிரியரும் பிறருமாகிய பேரறிவாளர் அனைவரும் ஒன்றுபட்டு அகத்தியநூலின் உண்மையில் உடன்பாடு கொள்ளக் காண்கிறோம். ஆதலால் அருந்தமிழ்ச் சான்றோராகிய நம் முன்னோர்க்கு அறியாமை ஏற்றிக் குற்றங்கூறும் இக்கொடிய பழக்கம் நம்மிடை அறவே நீங்குதல் நன்று. இது நிற்க.

அகத்தியர் அருளிய முத்தமிழ் இலக்கணம் ஒன்றுய் நின்ற பெற்றி நீங்க, அவருடைய மாணாக்கர் அதனைப் பலவாய் விரியப் பாகுபடுத்தினர். ஒவ்வொரு துறையும்

ஒவ்வொரு புலவரால் அகன்று பரந்தது. அவர்க்குப் பின்வந்த ஆசிரியர்களாலும் நூல்கள் பெருகி வளர்ந்தமை மிகவும் வெளிப்படை. தொல்காப்பிய உரைகளும், யாப்பருங்கல விருத்தியும் இதனை நன்கு புலப்படுத்தும்.

இவ்வளர்ச்சி கடைச்சங்க காலம் வரை நீண்டு நிலைபெற்ற தென்னலாம். "முத்தமிழ்க் காப்பியம்" என்ற பாராட்டுக்குரிய சிலப்பதிகார மூலத்தாலும் உரையாலும் விளங்கிக்கிடந்த மெய்ம்மை இது.

இளங்கோ அடிகளுக்குப் பிறகு நெடுங் காலம் செல்ல, அடியார்க்குநல்லார் காலத்தில் இசை நாடகத் தமிழின் வீழ்ச்சியைக் காண்கிறோம். "பரதம், அகத்தியம் முதலியதொன்னூல்களும் இறந்தன ; பின்னும், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்றன அத்துணையல்லது முதல் நடு இறுதி காணுமையின் அவையும் இறந்தன போலும் !" என்ற அவருரை அவலம் நிரம்பியுள்ளது.

இசை நாடகப் பகுதியைச் சார்ந்தனவாய் அவர் பெயர்கூறிய நூல்கள் இன்னும் பல உள. அவை இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், பெருநாரை, பெருங்குருகு என்பனவும் பிறவுமாம். அவற்றுள் இறந்தனபோக அவர் நாளில் எஞ்சிநின்றன சிலவும்கூட இந்நாள் மறைந்தொழிந்தன என்றால் இதற்கு மனம் வருந்தாதார் யாவர் ?

இங்ஙனம் இசைநாடகத் தமிழ்க்கலை வளர்ச்சி நீங்கித் தளர்ச்சியுற்ற தென்றாலும், இயற்றமிழ் இலக்கண நிலை நமக்குச் சிறிது ஆறுதலளிக்க வல்லதாம். இப்பகுதியில் தன்னிகரில்லாத் தனிப்பெருநூல் தொல்காப்பியம். முன்னூல்கள் ஒழியவும் தான் அழியாமல் நின்றது ; பின்னூல்கள் பெருகவும்தான் அருகாமல் நிற்பது : இவ்விருவகை மேம்பாடும் இஃது ஒன்றற்கே உரியதாம் அன்றி வேறு எந்த நூலுக்கும் வாய்த்ததில்லை இவ்வாற்றால் இது முழுதும் பழுதற்றது என்று சொல்லின் மிகப் பொருந்தும்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பிரிவுகளுடையது இந்நூல். ஒவ்வொரு பிரிவிலும் உணர்த்தும் பொருள்கள் கடல்போற் பரந்து கரை காண அரியன. அதனால் "தொல்காப்பியக் கடல்" என்றே இதனை ஆன்றோர் வழங்கினர். இதன் பொருள்வளம் எல்லாம் புலங்கொளத் தெரிந்து உலகுக்களிக்க முன்வந்த உரையாசிரியர் பலராவர். அவர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் எனப் பெயர் வாய்ந்து விளங்குவர். தமிழில் வேறு எந்த நூலுக்கும் இத்தனை நல்லாசிரியர்கள் உரை எழுதினரல்லர். இவ்வுரையாளர் எல்லோரும் தமிழ் வழக்கிற்குத் தலையாய சான்று இந்நூல் ஒன்றே எனக் கொண்டனர். ஏனை நூல் உரையாசிரியர்களுக்கும்கூட இக் கொள்கை ஒப்பமுடிந்ததே. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் ஒன்றே முற்ற முடிந்த இலக்கணநூல் ; ஏனை நன்னூல், சின்னூல் என்பன நிரம்பிய இலக்கணத்தன அல்ல என்று வெளிப்படையாக விளம்பி விட்டார்.

இங்கே சின்னூல் என்றது சிறிய நூலான நேமிநாதத்தை. எழுத்தும் சொல்லுமாகிய இரண்டின் இலக்கணம் மட்டும் கூறும் இது எளிய இனிய வெண்பாக்களாலாகியது. இதில் நூற்பா முறையை விட்டு வெண்பா முறையைக் கொண்டதற்கு, இலக்கண வரலாற்றில் சிறியதொரு வளர்ச்சியே நோக்கம் எனின் இழுக்காகாது. இந்நூலுக்கு "வயிரமேக விருத்தி" எனச் சிறந்ததொரு உரையுமுண்டு.

"தொல்காப்பியக் கடலின் சொற்றிப் சுற்று
அளக்கப்
பல்காற்கொண் டோடும் படகென்ப"

என இதனைப் பாராட்டிய சான்றோர் தொல்

காப்பியச் சிறப்பையும் சேர்த்தே சொல்லியுள்ளார்.

இவ்வாறே நன்னூலின் சிறப்பைப் பாராட்டிய சான்றோரும்,

"முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்
நன்னூ லார்தமக் கென்னூ லாரும்
இணையோ என்னும் துணிவே மன்னுக"

எனத் தொல்காப்பியப் பெருமையும் சேரக் கூறினர். இதுபோல இன்னும் பல எடுத்துக்காட்ட இயலும். சுருங்கச் சொல்லின் பிற்காலத்தில் தோன்றின பிற நூல்கள் அத்தனையும் தொல்காப்பியத்துடன் தொடர்பு கொண்டே பெருமை பெறவேண்டி நின்றன. இது நிற்க.

நன்னூலில் "பதவியல்" என்ற ஒரு பகுதி உண்டு. அஃது ஒரு மொழி முடிபு கூறும் இலக்கணத்தது. தனிமொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றைப் பகுதி, விகுதி முதலான உறுப்புக்களாகப் பிரித்து ஆராயும் இடம் அது. இவ்விலக்கணம் தொல்காப்பியத்தில் விவரமாகக் காணப்பெறவில்லை. ஆனாலும் உரையாசிரியர்கள் சிறிது விவரித்தனர். அவரைப் பின்பற்றி நன்னூலாரும் இப்பதவியலை விரித்தமைத்தார். இஃது ஒரு தலையாக இலக்கண வளர்ச்சியை நோக்கமாக் கொண்டதே ஒழிய வேறில்லை. இது போலவே இன்னும் சில இடங்களிலும் நன்னூல் விரித்துரைத்ததுண்டு. இது நிற்க.

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரத்திலும் முன்னைய இரண்டை மட்டும் பிரித்துக் கூறிய நூல்களிலை. மூன்றுவதான பொருளதிகாரத்தில் அகப்பொருளை மட்டும் பிரித்து வேறாக விளக்கியது அகப்பொருள் விளக்கம் என்னும் அரிய நூல். இது நாற்கவிராச நம்பி என்பவரால் செய்யப் பெற்றது; "நம்பியகப் பொருள்" எனவும் மறு பெயர் வழங்குவது. இது நிற்க.

முன்னுளில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாய் அடங்கிய இயற்றமிழ் இலக்

THE INDIAN OVERSEAS BANK LIMITED.

Central Office: MADRAS.

★

Chairman: M. CT. MUTHIAH, Esq.,

General Manager: C. P. DORAIKANNU, Esq.

Assistant General Managers:

Rao Sahib S. R. V. ARASU, P. R. BRIERS, Esq., G. LAKSHMINARAYANAN, Esq.

Branches: INDIA

Alleppey, Bangalore City, Bombay - Fort, Bombay - Mandvi, Calcutta, Cannanore, Cochin, Coimbatore, Devakottah, Guntur, Karaikal, Karaikudi, Kilasavalpatti, Kozhikode, Kumbakonam, Madras, Mount Road (Madras), Theagarayanagar (Madras), Mangalore, Madurai, Mayuram, Mysore, Nagapattinam, Perumbavoor, Pondicherry, Pudukottai, Pudupatti, Quilon, Salem, Shiyali, Sivaganga, Sivakasi, Tanjore, Tirunelveli Town, Tiruvarur, Tiruchirapalli, Tuticorin, Trivandrum.

★

PAY OFFICES & OUTSTATIONS
Koothanallur, Kuttalam

★

Branches: OVERSEAS

BURMA — Rangoon; CEYLON — Colombo;
MALAYA — Ipoh, Kuala Lumpur, Malacca, Penang, Singapore;
THAILAND — Bangkok;
HONG KONG

FOREIGN CORRESPONDENTS AT IMPORTANT CENTRES:

The Service of the Bank's Foreign Department are available to all constituents. Direct contact with the Correspondents in all important world centres enables the speedy handling of all types of Foreign business and provide constituents with introductions to Foreign Exporters and Importers all over the world.

கணம், பின்னளில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாய்ப் பெருகி அகன்று பரந்தது. இவ்வளர்ச்சி இலக்கண வரலாற்றிலேயே மிகவும் முதன்மை வாய்ந்ததென மொழியும் தரத்தது.

இந்த ஐந்திலக்கணங்களையும் தனியே தொகுத்து ஒன்றுய் உணர்த்திய முழு நூல்களுள் பழமையானது வீரசோழியம். இதனை இயற்றினர் புத்தமித்திரனர் என்னும் புலவர் பெருந்தகை. இந்நூல் நூற்பாவாலன்றி, கட்டளைக் கலிப்பாவாலியன்றது. வடமொழிக்கும், தென்மொழிக்கும் ஒத்த இலக்கணமாக உணரத் தகும் பகுதிகள் இதில் பல உள. இவையெல்லாம் புதிய வழியில் புகுந்த இலக்கண வளர்ச்சி என்னலாம்.

இனி இதே முறையில் ஐந்திலக்கணமும் அமைந்த இரண்டாவது நூல் இலக்கண விளக்கம் என்பது. இது திருவாரூர் வைத்திய நாத தேசிகர் செய்தது; ''குட்டித் தொல்காப்பியம்'' எனவும் வழங்கும். இந்நூலேயன்றி, வேற்று நாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர் என்பவரால் செய்யப்பட்ட 'தொன்னூல்' என்பதும், முத்துவீர ஆச்சாரி என்பவரால் செய்யப்பட்ட 'முத்துவீரியம்' என்பதும் ஐந்திலக்கணமும் அமைந்தவைகளே. இவை மிகவும் பிற்காலத்தில் பிறந்தன.

இனி, நம்பியகப் பொருளுக்கும் முன்பே அகப்பொருளை மட்டும் உரைத்த பழைய பெருமை வாய்ந்த நூல் 'இறையனூர் அகப்பொருள்' எனப்படும். இதற்குத் தெய்வப் பெருமை சாற்றிப் புகழும் புராண வரலாறும் உண்டு. களவியலைச் சிறப்பாக விரிப்பதாகையால் 'இறையனூர் களவியல்' என இதற்குப் பெயர் கூறுவர். களவியல் என்ற பெயருக்கு வேறு வகையாகவும் காரணம் விரித்தது இதன் உரை. இந்நல்லுரை கண்டார் நக்கீரனர் என்பர். தமிழ் உரைநடை புதிய வழியில் வளர்ந்து வளம் பெறுவதற்கு அடிப்படை உதவியளித்தது இவ்வுரையே என்னில் மிகையாகாது.

இன்னும் பிற்காலத்தில் எழுந்த ''மாறனகப் பொருள்'' என்னும் நூலும் இவ்வகையைச் சார்ந்ததே. நம்மாழ்வாரிடம் அன்பும் அடிமையும் பூண்ட திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றது இது.

இவை ஒருபுறம் நிற்க; புறப்பொருள் பகுதியில் பன்னிருபடலம் என்னும் பழைய நூல் தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவராலும் இயற்றப்பெற்ற தென்பர். அஃது இக்காலத்து வழங்கவில்லை. தொல்காப்பியர் ஏழுதிணையாக வகுத்த புறப்பொருளைப் பன்னிருதிணை எனப் பாகுபடுத்திய இலக்கண வளர்ச்சி இதன்பாலுள்ளது. 'புறப்பொருள் வெண்பா மாலை'' இதன் வழி நூலாகும். தொல்காப்பியத்தினின்று இவற்றிற் காணும் வேறுபாடுகள், சொல் முடிபும் பொருள் முடிபும் மாறுபடாதன வாகையால் மரபுநிலை திரியாதன என்று ஆன்றோர் அமைதி கூறியுள்ளனர்.

இனி, யாப்பிலக்கணத்தை மட்டும் தெளிவாக விரிப்பன யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையுமாகும். இவை இரண்டையும் இயற்றியவர் 'அமுத சாகரர்' என்னும் ஆசிரியர் ஒருவரே. இவற்றுள் முன்னது நூற்பாவால் இயன்றது; பின்னது கட்டளைக் கலியால் அமைந்தது. இக்கலிப் பாக்களில் மகடூஉ முன்னிலை பயின்றன. இம்முறை 'குணகாங்கிகம்' என்னும் கன்னட யாப்பிலக்கண நூல்வழியைத் தழுவிய தென்று காரிகையுரை காட்டாநின்றது. இதுவும் ஒரு புதிய சிறிய இலக்கண வளர்ச்சியே யன்றே?

இவற்றுள் முதலாவதான யாப்பருங்கல நூலுக்கு அரிய பெரிய விருத்தி உரை உளது. அஃது ஆரிய நூல் வழியே தமிழ் நூல் வழியும் பல்கிப் பெருக அடிகோலுகின்றது. இந்த இரண்டு நூல்களும் தமிழ் வளர்ச்சி

யோடு சைன சமய வளர்ச்சியும் நோக்க மாகக் கொண்டவை.

இனி அணி இலக்கணத்தை மட்டும் வளர்த்து விரித்த நூல்கள் 'அணி இயல்,' தண்டியலங்காரம், மாறனலங்காரம் என் பவை. இவற்றுள் அணி இயல் இப்போது வழக்கிலில்லை. தண்டியலங்காரம், அப் பெயர் வாய்ந்த வட மொழிநூலை அடிப் படையாகக் கொண்டு தோன்றியது. இதன் பின்னூலாகிப் பெருகி விரிந்த 'மாறனலங் காரம்,' திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியது. இதற்கு உரை செய்தார் காரி இரத்தின கவிராயர் என்பவர். தமிழ் வளர்ச் சியோடு வைணவ சமய வளர்ச்சியிலும் நோக்குடையது இது.

இந்த ஐந்திலக்கணத் துறையே யன்றி, தமிழ்மொழி வேறு துறையிலும் விரிவடைந் துளது. அது பாட்டிலக்கணமும், பொருத்த இலக்கணமும் கூறும் பகுதியாம். பாட் டென்பது பிரபந்தம். அவை தொண்ணூற் ருறு என்னும் அளவாகப் பிற்காலத்தில் தொகைபெற்றன. பொருத்தமாவது மங் கலம் முதலாக, பாட்டுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் உரிய பொருத்தங்களாம். இவ் விலக்கணங்களைத் தொகுத்தும் விரித் தும் கூறும் நூல்கள் பழையனவும், புதிய னவுமாகப் பலவுள.

இவை ஒருபுறமிருக்க; 'பிரயோக விவே கம்,' 'இலக்கணக் கொத்து' என்ற சிறுநூல் இரண்டு பிற்காலத்துத் தோன்றின. இவை அளவால் சிறியன வாயினும், பயனால் பெரி யன. இலக்கண நுண்கலை உணர்விற்கு இன்றியமையாத இருகண் போல் உதவுவன இவை.

இனி மேல்புல அறிஞர் "கால்டுவெல்" பாதிரியார் ஆங்கிலத்தில் வரைந்த 'திராவிட மொழி ஒப்பிலக்கணம்' போல்வனவும், புது வழிகளில் புகுந்து ஓரளவு இலக்கண வளர்ச் சிக்கு உதவி செய்வனவாம். இங்ஙனம் நமக்குக் கிடைத்த அறிவுக்கருவூலங்களால் அரும்பயன் ஆய்ந்து நம் தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறுவாராக.

PIPES

For all your requirements of G. I. BLACK & STEAM Pipes of S. & L. U K. make

and / or

Indian Tube Co. (1953) Ltd. Pipes Manufactured at Jamshedpur

(Under the management of Tata / S. & L. Group)

↓

Contact

The Madras Circle Pipe Dealers' Association Limited

Sole Agents for S. & L. Pipes in South India


No. 2, ARMENIAN STREET, MADRAS-1

★

COMPETITIVE RATES FOR DEALERS.

Branches & Depots:

BANGALORE, SECUNDERABAD, VIJAYAWADA & COCHIN



தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி

திரு. P. R. ஸ்ரீநிவாசன், M.A.,
Curator for Archaeology and Art, Government Museum, Madras.

★

உலகின்கண் மனிதன் தோன்றி இன்றைக்குச் சுமார் ஐந்து லட்சம் வருடங்களுக்கு மேலாகின்றன. நெடுங்காலம் வரை அம்மனிதன் பிராணிகளைப் போன்றே காலம் கழித்து வந்ததாகத் தெரிகிறது. சுமார் முப்பது, நாற்பதாயிர வருடங்களுக்கு முன்னரே அவன் முழு மனிதத் தன்மையைப் பெற்றவனானான். இதற்குப் பிறகும், நெடுங்காலம்வரை பண்பாடற்ற பாமரனாகவே அவன் காலத்தைக் கழித்தான். அப்பொழுது அவன் மலைக் குகைகளிலும், மரத்தின்மீதும் வசித்தான்; உணவுக்காகத் தாவரங்களையும், சமைக்காத மாமிசத்தையும் உபயோகித்து வந்தான் எனத் தெரிகிறது. அவ்வமயம் தற்காப்புக்காகவும், உணவு சேகரிப்பது போன்ற ஏனைய வேலைகளுக்காகவும், மரத்தாலும் கற்களாலுமான கருவிகளை உபயோகித்து வந்தான். மரக்கருவிகள் அழிந்தனபோலும்; கற்கருவிகள் கிடைத்திருக்கின்றன. இவ்விதமாகவே இன்றைக்குச் சுமார் பதினையாயிரம் வருடங்களுக்கு முன்வரை அவன் காலம் நடத்தி வந்தான். இக்கால வரம்பிற்குள், அவனால் உபயோகிக்கப்பட்ட கற்கருவிகள் மனிதவர்க்கத்தால் ஆக்கப்பட்ட கருவிகளில் மிகப் பழையவையாகும். அவைகள் கரடுமுரடான ஒழுங்கற்றதொரு முறையில் ஆக்கப்பட்டுள்ளன. இக்காரணத்தால் அவற்றைப் **பழையகற்காலக்** (Palaeolithic Age) **கருவிகள்** என வழங்குகிறார்கள். இதற்குப் பிறகு அப் பண்டை மனிதன் சிலகாலம் வரை மிகவும் சிறிய கற்கருவிகளை உபயோகித்து வந்தான். இவைகளை **இடைக்கற்காலக்** (Mesolithic Age) **கருவிகள்** என வழங்குகிறார்கள். இன்றைக்குச் சுமார் எட்டு முதல் பத்தாயிர வருடங்களுக்கு முன்பே மனிதன் பண்பாட்டு நிலைமையின் ஆரம்பத்தை எட்டிப் பார்த்தான். அப்பொழுது முதல் மனிதன் கற்கருவிகளை உபயோகித்தாலும், அவைகளை அழகுள்ளவைகளாகவும் வழவழப்பானவைகளாகவும் ஆக்கலானான். இவற்றைத் தவிர பல்வேறு நுண்ணிய வேலைகளுக்கான சிறிய கற்கருவிகளையும் செய்தான். இவ்வகைக் கருவிகள் **புதிய கற்காலக்** (Neolithic Age) **கருவிகள்** என வழங்கப்படுகின்றன. இக்காலத்திலிருந்துதான் மனிதன், மாமிசத்தை வேகவைத்து உண்ணவும், பானை சட்டிகள் செய்யவும் வண்டிகள் செய்து கொள்ளவும் கற்றான். இதற்குப் பிறகு சிறிது காலம் வரை மிகவும் **சிறிய கற்** (Microlith) **கருவிகளை** உபயோகித்தான். இன்றைக்குச் சுமார் ஆறுயிரம் ஏழாயிரம் வருடங்களுக்கு முன்னிலிருந்து மனிதன் கூட்டமாக ஊர்களில் வசித்து வரலானான் என்பதற்குச் சான்றுகள் உலகத்தில் சில இடங்களிலிருந்து கிடைத்து இருக்கின்றன. இதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே பெரிய பட்டணங்களும் அரசாங்கங்களும் உண்டாயின. இவைகளின் சின்னங்கள் எகிப்து, மெசபொடேமியா, கிரீட் முதலிய இடங்களில் கிடைத்திருக்கின்றன. இக்காலம் முதல் கற்கருவிகள் குறைந்து வெண்கலம் செம்பு இவற்றாலான கருவிகளை மனிதன்

அதிகமாக உபயோகிக்கலானான். இதனால் இக்காலத்தை **வெண்கலக் காலம்** (Bronze Age) என்கிறார்கள். இந்த வெண்கலக் காலத்தைச் சேர்ந்ததாகவே சிந்துநதிக்கரை நாகரிகத்தைக் கூறுகிறார்கள். சீனா, எகிப்து முதலிய பல இடங்களில் இக்காலம் முதல் அரசாங்க, சமூக வரலாறுகளைத் தொடர்ந்து அறியக்கூடிய சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கி. மு. ஆயிரம் அல்லது தொள்ளாயிரமாவது வருடத்திலிருந்து வெண்கலக் கருவிகள் வழக்கொழிந்து, இரும்பாலான கருவிகள் வழங்கலாயின. இப்பொழுதிலிருந்து தான் **இரும்புக்காலம்** (Iron Age) ஆரம்பமாயிற்று. இக்காலம் முதல் உலகத்திலுள்ள பல தேசங்களின் சரித்திரங்களையும் தொடர்ந்து அறிய முடிகிறது. நம் பாரத நாட்டின் சரித்திரத்தைக் கி. மு. ஆறுவது நூற்றாண்டிலிருந்துதான் சிறிது சிறிதாகத் தெரிய முடிகிறது. அதிலும் தென்னிந்தியாவின் வரலாறு சற்றுப் பிற்காலத்திலிருந்தே தெரியவருகிறது. இதற்குப் பிற்காலத்தில் பெர்ஸியா, கிரீஸ், ரோம் போன்ற பல அரிய நாகரிகங்கள் தோன்றி மறைந்தன. அவை ஓங்கி இருந்த காலங்களில் ஆக்கப்பட்ட கட்டடங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் எல்லாம் இயற்கை செயற்கை மாறுதல்களால் பாழடைந்தன. இச்சின்னங்கள் எல்லாம் எந்தெந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்று அநேகமாகத் திட்டமாகச் சொல்ல முடியுமானதால் இவை சரித்திரகால (வரலாற்றுக்கால)ப் பொருள்கள் என்று பெயர் பெற்றன. ஆரம்பத்தில் கூறிய கற்காலக் கருவிகள் முதலியவற்றைப்பற்றி உறுதியாக ஒரு கால வரம்பு சொல்லமுடியாததால் அவற்றைச் சரித்திர முற்காலத்தைச் சேர்ந்தவை என்று வழங்குகிறார்கள். சிற்சில தேசங்களில் சரித்திர காலத்திலேயே வசித்து வந்த மக்களால் ஆக்கப்பட்ட பல பொருள்கள் கிடைத்திருக்கின்றன, ஆனால் இவர்களைப் பற்றி வேறு ஒருவித வரலாறும் தெரியாதால் இச்சின்னங்களை அவற்றின் பெயரைக் கொண்டே வழங்கி வருகிறார்கள்.

தொல் (புதை) பொருள் ஆராய்ச்சி (Archaeological Research): இவ்விதம் ஒரு தேசத்தில் மனிதன் தோன்றிய காலம் முதல் இன்றுவரையுள்ள சரித்திரத்தை மட்டுமின்றிப் பண்பாட்டைப் பற்றியும் அறிய வேண்டுமாயின், மேல்கூறிய பண்டைப் பொருள்களை ஆராய்ந்து பார்ப்பதால் மட்டும் தெரியவரும். இவ்விதம் பலதேசங்களின் பண்டைப் பொருள்களையும் ஆராய்கின்றபொழுது ஆங்காங்கே பற்பல காலங்களில் ஏற்பட்ட அரசாங்க, மத வேறுபாடுகள், வெளி நாட்டினரின் வருகையால் ஏற்பட்ட பண்பு வேறுபாடுகள் போன்ற பல அரிய விஷயங்கள் தெரிய வருகின்றன.

மேற்கூறிய சரித்திர முற்கால, சரித்திர காலச் சின்னங்கள் எல்லாம் பூமியின் மேற்பரப்பில் இருக்கவில்லை. சரித்திர முற்காலத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான சின்னங்கள், ஆயிரக் கணக்கான வருடங்களுக்கிடையில் பூமியினுட் புதைந்தன. சரித்திர காலத்தைச் சேர்ந்த சின்னங்களில் ஒரு பகுதியும், கண்காணிப்புக் குறைவினாலும், அரசாங்கங்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டைகளின் காரணத்தாலும், வேறு மதத்தினர் ஆதிக்கம் பெற்று அவர்களால் அழிக்கப்பட்டதாலும், நாளடைவில் பாழடைந்தும், மண் மேடிட்டும் போயின. அவற்றைப் பற்றிய வரலாறுகள் இதனால் தெரியாமல் போய்விட்டன. இப்படிப்பட்ட புதைந்து கிடக்கும் பண்டைக்காலச் சின்னங்களைத் தோண்டி எடுத்து அவற்றை ஆராய வேண்டிவருகிறது. இவ்விதம் ஆராய்ச்சி செய்வதற்கென உலகில் பல தேசங்களில் அரசாங்க புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காக்கள் அல்லது இதற்கெனத் தனிப்பட்ட கழகங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் இருக்கும் இவ்விதக் கழகங்களின் இடையறாத, சலிக்காத முயற்சியா

லும், நுட்பமாக ஆராய்ச்சி செய்யும் திறனு லும், எகிப்து, மெசபொடேமியா, கிரீட், கிரீஸ் முதலிய தேசங்களின் பண்டை வர லாறுகளைத் தெளிவாக அறிய முடிந்திருக் கிறது.

இந்தியாவில் புதை பொருள் ஆராய்ச்சி

நம் பாரத நாட்டிலும் சென்ற நூற்றைம் பது வருடங்களுக்கு மேலாகப் புதை பொருள் ஆராய்ச்சியில் ஒரு சிலர் ஈடு பட்டு அதன் விளைவாக நம் நாட்டின் பழைய சரித்திரத்தின் சிக்கலான பல கட் டங்கள் தெளிவுற்றன. இதற்குச் சான்றுக மூன்று முக்கிய நிகழ்ச்சிகளை இங்கே குறிப் பிடலாம்: (1) கி. பி. 1833-ம் வருடத் தில் அசோகரின் கல் வெட்டுக்களைப் படித் தது; (2) மிகப் பழைய முறையில் உள்ள பழைய கற்காலக் கருவி ஒன்றை முதன் முதலாக 1863-ம் வருடத்தில் கண்டு பிடித் தது; (3) இந்திய நாகரிகம் கி. மு. மூன்று வது ஆயிர மாண்டில் அல்லது அதற்கு முன்னரேயே மிகவும் உயர்ந்த நிலைமையில் இருந்ததை நிரூபிக்குமாறு உள்ள சிந்து நதிக் கரையில் சில இடங்களில் சின்னங்கள் கண்டுபிடித்தது.

இவை போன்று இன்னும் பல அரிய பண்டைப் பொருள்களும் புதை பொருள் இயல் வல்லார் ஒரு சிலரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

தென்னிந்தியாவில் புதை பொருள் ஆராய்ச்சி

தென்னிந்தியாவில் சரித்திர முற்காலத் தைச் சேர்ந்த சின்னங்களும், சரித்திர காலத் தைச் சேர்ந்த சின்னங்களும், கால வரை யறை செய்ய இயலாத சில பொருள்களும் கடந்த நூறு வருஷங்களுக்குள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

சரித்திர முற்காலப் புதை பொருள்கள் (Prehistoric Antiquities): இவை பழைய கற்கால, இடைக் கற்கால, புதிய கற்காலக் கருவிகளாகும். பல்வேறு இடங்களிலிருந்து இவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கண்டு பிடித்ததில் ஒரு முக்கிய மான நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட வேண் டியதாகிறது. அதாவது, இந்தியாவிலேயே முதன் முதலாக நிச்சயமான பழைய கற் காலக் கருவி ஒன்று எங்கே கண்டுபிடிக்கப் பட்டதென்றால், அது சென்னைப்பட்டினத் தருகேயுள்ள அத்திரம்பாக்கத்தில் 1863-ம் வருடத்தில் **ராபர்ட் ப்ரூஸ் புட்** (Robert Bruce Foote) என்ற ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இது இப் பொழுது சென்னை அரசாங்க மியூசியத்தில் இருக்கிறது. தென்னிந்தியாவில், அதிலும் முக்கியமாகச் சென்னைக்கருகே உள்ள சில கிராமங்களில் கண்டு பிடிக்கப்பட்ட பழைய கற்காலக் கருவிகள், உலகில் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்திருக்கும் ஏறக் குறைய ஒரே காலத்தைச் சேர்ந்த பழைய கற்காலக் கருவிகளின் வேலைப்பாட்டை விட்டுச் சற்று மாறுபட்டு இருக்கின்றன. இக்காரணத்தினால் இவை "மெட்ராஸ் வேலைப்பாடு" (Madrasian Type) உடை யவை என வழங்கப்பட்டன. சில நாட் களுக்கு முன் மைசூர் இராச்சியத்திலும் பழைய கற்காலக் கருவிகள் கண்டுபிடித்த தாகச் செய்தி அறிவிக்கப்பட்டது.

சாயேர்புரம் கிராம இடைக் கற்காலக் கருவிகள்: திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள இந்த ஊரில் பல சிறிய கற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை பழைய கற்காலத்துக்கும், புதிய கற்காலத்துக்கும் இடைப்பட்ட (Mesolithic) காலத்தைச் சேர்ந்தனவென்று கூறலாம்.

சங்கனக்கல்லு கிராமச் சிறிய கற் கருவிகள்: பெல்லாரி ஜில்லாவிலுள்ள இந் தக் கிராமத்தில் ஏழெட்டு வருடங்களுக்கு முன் பல அரிய சிறிய கற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை புதிய கற் காலத்தை அல்லது அதன் இறுதிக் காலத் தைச் சேர்ந்தவையாகும். புதிய கற்காலக்

கருவிகள் பல இடங்களிலிருந்து கிடைத் திருக்கின்றன. இவைகள் எல்லாம் கற் காலப் பொருள்களாகும். முன்னரே கூறிய படி, உலகில் பல தேசங்களிலும், நம் பாரத நாட்டிலும் கற்காலத்துக்கு அடுத்தபடியாக வெண்கலக் காலம் இருந்ததற்குச் சான்றாக வெண்கலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன. தென்னிந்தியாவில் பிரம்மகிரி (மைசூர்), ஹைதராபாத் போன்ற இடங்களி லிருந்து இவ்வகைக் கருவிகள் கிடைத்திருக் கின்றன.

இரும்புக் காலப் பொருள்கள்: (Iron Age) அடுத்தபடியாக இரும்புக் காலத்தைச் சேர்ந்த சின்னங்கள் ஏராளமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை இரண்டு மூன்றுவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் பெரும்பாலும் பண்டை மக்கள் மயானங்களாக உபயோகித்த இடங் களிலிருந்து கிடைத்தவைகளாகும்.

நீலகிரி மண் பாண்டங்கள்: இவற்றில் நீலகிரியில், **பிரீக்ஸ்** (J. W. Breeks) என்ற ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்ட மண் பாண்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை கள் அழகற்ற முறையில் செய்யப்பட்டுள் ளன. இவற்றின் ஒரு முக்கிய குணமானது, இவற்றின் மூடியின்மேல் செய்யப்பட்டிருக் கும் பிராணிகள் பறவைகள் இவற்றின் பொம்மைகளாகும். இவற்றைத் தவிர ஓரி ரண்டு வெண்கலப் பாத்திரங்களும் இங்கே அகப்பட்டன.

ஆதித்த நல்லூர் புதை பொருள்கள்: திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இந்த ஊரில் ஒரு பெரிய பழைய காலத்திய மயான வெளி யிலிருந்து முது மக்கள் தாழிக (Urns) ளும் அவற்றுடன் தங்கம், வெண்கலம், இரும்பு முதலியவற்றுலான சாமான்களும், அழகிய பாணை சட்டிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வளவு பெரிய பரப்பில் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில் பல புதிய விஷயங்களைத் தெரிவிக்கும் புதை பொருள் கள் கிடைத்திருப்பது இங்கேதான்.

சங்கவரம் கிராம நீண்டதாழி (Sarcophagus): கடப்பை ஜில்லாவிலுள்ள இக்கிரா மத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செம்மறியாடு போன்று செய்யப்பட்டுள்ள ஆறு கால்கள் கொண்ட நீண்ட தாழி ஓர் அதிசயப் பண் டைப் பொருளாகும். இதில் இறந்தவர் களின் எலும்பையோ எலும்புக் கூட்டை யோ அடக்கம் செய்திருக்கலாம்.

கோயம்புத்தூர் மண் பாண்டங்கள் (Pottery): இவ்வூருக்கருகே சில இடங் களில் உள்ள மயானங்களிலிருந்து ஒரு புதிய வகை மண்பாண்டங்கள் கிடைத் தன. இவை மெல்லியவையாகவும் மேற் புறம் அலை போன்ற கோடுகளுடன் வழ வழப் புடையவையாகவும் இருக்கின்றன.

பெருங்கல் வளைவுப் புதைகுழிகள் (Megalithic Monuments) (செங்கல்பட்டு ஜில்லா): இந்த ஜில்லாவில் பல இடங்களில் பெரும்கற்களைக்கொண்டு வட்டமாக வளைக் கப்பட்ட இடங்களில், முது மக்கள் தாழி களிலே அல்லது கல்லறைகளிலோ மனித எலும்புத் துண்டுகளும் அத்துடன் பாணை சட்டிகளும், இரும்பாலான ஆயுதங்களும் கிடைத்திருக்கின்றன. உதாரணமாகப் பெரும்பேர், சாணூர், அமிருத மங்கலம் போன்ற இடங்களில் அகப்பட்ட புதை பொருள்களைக் கூறலாம்.

முன்னரே கூறியபடி இவ்வகைப் புதை பொருள்களின் உட்பொருள் யாது? இவை உண்டானதற்குக் காரணம் என்ன? உண் டாக்கியவர் யார்? இவற்றின் கால வரம்பு என்ன? என்பவைகளை இன்னும் நிச்சயமாக முடிவு கட்டிச் சொல்ல முடியவில்லை. ஆனால் சங்க நூல்களில் இவ்வகை இடுதாழி, கல்லறைகளைப் பற்றிய சில விவரங்கள் கிடைப்பதிலிருந்து அந்தநூல்கள் தோன்றிய காலத்திற்குச் சற்று முன்பும் பின்பும் இப் பழக்கங்கள் இந்த நாட்டில் நிலவி இருந்தன என்பது தெரியவரும்.

சரித்திர காலப் புதை பொருள்கள் (Antiquities of Historical times):

தென்னிந்தியாவைப் பொருத்தமட்டில் இக் காலத்திய புதை பொருள் ஆராய்ச்சியால் பல அரிய விஷயங்கள் தெரிய வந்திருக்கின் றன. இக்காலப் பண்டைப் பொருள்களை, கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கட்டடங்கள், நாணயங்கள் என்ற பகுதி களாகப் பிரிக்கலாம். நாணயங்களைப் பற்றி மற்றொரு பாகத்தில் காணலாம். மற்றப் பகுதிகளைப்பற்றி இங்கே சுருக்கமாகக் கூறுவோம்:

கல்வெட்டுக்கள்: நம் நாட்டுச் சரித்திரத் துக்கும், பண்பாட்டின் முக்கிய அம்சமான சமுதாய வாழ்விற்கும் வேண்டிய அரிய பல விஷயங்களை இவற்றிலிருந்தே அறிய முடி கிறது. இரண்டாவதாகக் காலக்கிரமத்தில் நம் நாட்டின் எழுத்துக்கள் எவ்விதம் மாறு பாடடைந்தன? எந்தெந்த மொழிகள் எந் தெந்தக் காலத்தில் கல்வெட்டுக்களில், அதா வது எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்டன? என்பதும் தெரிய வருகிறது.

ஒரு நாட்டின் பண்பின் சிறப்பு அந்நாட் டில் எண்ணும் எழுத்தும் வளர்ச்சியடைந் திருப்பதிலிருந்து அறியலாம். தென்னிந்தி யா தொன்று தொட்டே பண்புமிக்க நாடு என்பதை உணர்த்துவதற்கு அரிய சங்கத் தமிழ் நூல்கள் இருக்கின்றன. ஆயினும் இவற்றின் காலம் இன்னும் நிச்சயமாக வரை யறுக்கப்படவில்லை. ஆனால், உள்ளதை உள்ளபடியும் ஓரளவுக்கு நிச்சயமான கால வரம்புகளைக் கொடுக்கக் கூடியதுமான தொல் பொருள் ஆராய்ச்சியின் மூலம், கி. மு. மூன்றாவது நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவில், முக்கியமாகத் தமிழ் நாட்டில், எழுதுவதற்குத் தமிழ் மொழியை உபயோகித்திருப்பது தெரியவரும். இதற்குச் சான்று மதுரை, திருநெல் வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களி லுள்ள சில மலைக் குகைகளில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்களாகும். இவை கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் **வழக்கிலிருந்த பிராமி** என்ற எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் உபயோகித்த மொழியோ **என்றும் உள தென்தமிழாகும்.** இக்கல்வெட்டுக்கள் பௌத்த சமயத்தவரால் எழுதப்பட்டவை எனச் சில புலவர்கள் கருதுகிறார்கள். அடுத்தபடியாகச் சித்தன்ன வாச (புதுக்கோட்டை) லிலிருக்கும் மலைக் குகையில் சமண சமயத்தினரால் எழுதப் பட்ட கி. மு. முதலாவது நூற் றாண்டைச் சேர்ந்த கல் வெட்டுக்களாகும். அவற்றிலுள்ள எழுத்தும் பிராமி மொழியில் எழுதப்பட்ட தமிழாகும்.

அரிக்கமேடு பானைத்துண்டு எழுத்துக் கள் மேற் கூறியவற்றை உறுதிப்படுத்துவது போன்ற ஒரு நிகழ்ச்சி 1945-ம் வருஷத்தில் பாண்டிச்சேரிக் கருகேயுள்ள அரிக்கமேடு என்ற கிராமத்தில் புதை பொருள்களைத் தோண்டி எடுத்தபோது அகப்பட்ட பானைத் துண்டுகளின் மேல் எழுதப்பட்டிருக்கும் எழுத்து வரிகளாகும். இவற்றிலும் எழுத்து பிராமியே. இவற்றுடன் அகப்பட்ட உறுதியாகக் காலம் சொல்லக்கூடிய வேறு சில பொருள் களின் ஆதாரத்தைக் கொண்டு, இந்த எழுத்து வரிகள் கி. பி. முதலாவது நூற் றாண்டைச் சேர்ந்தவை என்பது நிச்சயிக்கப் பட்டுள்ளது. இதிலும் தமிழ் மொழியே உபயோகிக்கப்பட்டிருப்பது நன்கு கவ னிக்க வேண்டிய விஷயமாகும். ஏனெனில் இந்தியாவின் வேறு பாகங்களிலிருந்து கிடைத்திருக்கும் இதே காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் எல்லாம் பிராமி எழுத்தி லேயே இருந்தாலும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கி. பி. முதலாவது நூற்றாண்டிலேயும் தமிழ் மொழியே, தமிழ் நாட்டில் எழுதும் மொழி யாக இருந்ததென்பது தமிழின் சிறப்பைக் காண்பிக்கிறது. இக்காலத்தைச் சேர்ந்தவை எனச் சங்க நூல்களில் பலவற்றைக் கூறு வது இங்கே குறிப்பிடத் தக்கது.

கி. பி. மூன்றாவது நான்காவது நூற் றாண்டுகளிலிருந்தே மறுபடியும் கல்வெட்

டுக்கள் கிடைக்கின்றன. இவைகளில் பெரும்பான்மையானவை முந்திய பல்லவ அரசர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட தாமிரப்பட்டயங்களாகும். இவற்றில் பிராமியின் வளர்ச்சியடைந்த ஒருவகை எழுத்து காணப்படுகிறது. முதல் இருநூறு வருடங்கள்வரை பிராகிருத மொழி, பிறகு வடமொழி. ஆனல், கி. பி. 5-வது நூற்றுண்டைச் சேர்ந்த செஞ்சிக் கடுத்த திருநாதர் குன்று என்ற ஊரிலுள்ள கல்வெட்டு குறிப்பிடத் தக்கதாகும். இதிலுள்ள எழுத்து ஒரு கலப்பெழுத்தாகும். பிராமியும், கி. பி. 8-வது நூற்றுண்டு முதல் தென்பாண்டிய நாடு சேர நாடு ஆகிய பிரதேசங்களில் வழக்கிலிருந்த வட்டெழுத்தின் சில எழுத்துக்களும் கலந்ததாக இருக்கிறது. மொழியோ வெனில் தமிழாகத்தான் தெரிகிறது.

கி. பி. 7-வது நூற்றுண்டிலிருந்து தொடர்ந்து பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சாளுக்கியர்கள், விஜயநகர அரசர்கள் முதலியவர்கள் காலத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. தாமிரசாசனங்களும் எண்ணற்றவைகிடைத்திருக்கின்றன. இவற்றின் மூலம் அந்தந்தக் காலத்துச் சமுதாய கலாசார விஷயங்களைப் பற்றி விவரங்கள் தெரிய வருகின்றன. ஆனல் இதுவரை ஒரு சில ஆயிரக் கல்வெட்டுக்களின் உள்ளடக்கத்தை மட்டும் பிரசுரித்திருக்கிறார்கள். ஏனைய கல்வெட்டுக்களையும் பிரசுரிக்காமல் இருப்பது ஆராய்ச்சிக்கு இடையூருக இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்ததன் வினைவாகச்சுமார் 40 வருடங்களுக்கு முன் அநேகமாக ஒன்றுமே தெரியாமலிருந்தபல்லவ அரசவம்சத்தினரின் வரலாறு மட்டுமின்றி அவர்கள் இந்நாட்டிற்குச் செய்த கலைத் தொண்டைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் தெரிய வந்தன. இவ்வரசர்கள் கி. பி.

With best compliments

To

THE MADURAI TAMIL SANGAM

on the occasion of

THEIR GOLDEN JUBILEE

By

KISHINCHAND CHELLARAM,

MADRAS & OOTACAMUND

600 முதல் 850 வரை காஞ்சீபுரத்திலிருந்து தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தார் கள்.

இக்கல்வெட்டுக்களிலிருந்துபல்லவர்காலத் தில் பல்லவ கிரந்தம், தமிழ், நாகரி என்ற எழுத்து வகைகளிலும் வடமொழியிலும் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் எழுதப்பட் டன எனத் தெரிகிறது. இதே காலத்தைச் சேர்ந்த வெங்கி, பாதாமிச் சாளுக்கியர் இராச்சியங்களில் பழைய தெலுங்கு, கன் னட எழுத்துக்களிலும் வடமொழியிலும், கல்வெட்டுக்கள் பெரும்பாலும் எழுதப்பட் டன என்று தெரிகிறது. இங்கு ஒரு முக்கிய மான விஷயம் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அதாவது கடலுக்கப்பாலுள்ள ஜாவா, சுமாத்ரா, இந்தோசீனு போன்ற தேசங்களில் ஒரு சில இடங்களில் இதே காலத்தைச் சேர்ந்த சில கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றின் மொழி வடமொழி. எழுத்தோ அநேகமாகப்பல்லவ கிரந்தம் அல்லது வெங்கி எழுத்துப் போன் றிருக்கிறது. இதிலிருந்து தென்னிந்தியர் கடல்கடந்து கலாசாரத்தை மிகப் பழைய காலத்திலேயே வெளிநாடுகளில் பரப்பினர் கள் என்பது வெளியாகிறது.

சோழஅரசர்கள் காலத்தில்சோழக் கிரந்தம் தமிழ் ஆகிய இவ்வெழுத்துக்களிலும் பெரும் பாலும் தமிழ்மொழியிலும் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. நாகரி எழுத்து ஒரு சில நாணயங்களில் மட்டும் உபயோகிக்கப்பட் டுள்ளது. தென் பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும், வட்டெழுத்து என்ற ஒருவித வளர்ந்த எழுத்திலும் தமிழ் மொழியிலும் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. பிறகு விஜயநகர அரசர்கள் காலத்தில் அவ்வரசர் களால் எழுதுவிக்கப்பட்ட வடமொழிக் கல் வெட்டுக்கள் நந்தி நாகரி எழுத்திலும் தெலுங்கு கல்வெட்டுக்கள் தெலுங்கு எழுத் திலும் பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆனால் இவர்களின் பிரதிநிதிகளான நாயக் கர்கள் இருந்த ஊர்களில் பெரும்பாலும் அந்த ஊரின் எழுத்திலும் மொழியிலுமே கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. கி. பி. 16-17-வது நூற்றாண்டுகளில்தான் இப் பொழுது பழக்கத்திலிருக்கும் தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள எழுத்துக் கள் இறுதி வளர்ச்சியடைந்தன.

கட்டடக்கலை: புதை பொருள் ஆராய்ச் சியின் மூலம் தென்னிந்தியாவின் பழங்காலக் கட்டடக் கலையைப் பற்றிய பல அரிய விஷயங்கள் தெரியவந்திருக்கின்றன. கி. மு. 2-வது நூற்றாண்டிலிருந்து கி. பி. 300 வரை பௌத்த ஸ்தூபங்கள் கட்டி வந்தார்கள். இவற்றின் சின்னங்கள் எல்லாம் கிருஷ்ணை நதிக்கரையில் கிடைக்கின்றன. கி. பி. 7-வது நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச்சேர்ந்த ஏனைய கட்டடங்களின் உதாரணங்கள் கிடைக்கவில்லை. இவைகள் மரத்தாலோ செங்கல் சண்ணும்பாலோ கட்டப்பட் டிருக்கவேண்டும். அவை அழியும் பொருள் கள் ஆனதால் நெடுநாட்கள் நிலைத்திருக்க வில்லை போலும்! ஆனால் சங்க நூல்களில் கோயில்கள் மாளிகைகள் முதலியவற்றைப் பற்றிய அநேக விவரங்கள் கிடைப்பது அக் காலத்தில் கட்டடக் கலை விரிவாக இருந்தது என்பதற்குச் சான்றாகும்.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த கட்டடங் களில் முக்காலே அரைக்கால் வீதத்துக்கு மேல்கோயில்களாகஇருக்கின்றன.கி.பி. 700 வரை மலையைக் குடைந்து குகைக் கோயில் கள் செய்யப்பட்டன. சிறு பாறைகளை அப் படியே சிறிய கோயில்களாகவும் செய்தார் கள். உதாரணம் மாமல்லபுரத்து இரதங்க ளாகும். பிறகு தனிக் கற்களைக் கொண்டு கோயில்கள் கட்டினார்கள். இதற்கு உதார ணம் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும், காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலும் ஆகும். இக்கோயில்களில் கர்ப்பகிருஹத் துக்கு மேலுள்ள விமானமே பெரிதாக இருக்கிறது. மதில் ஒன்றுமட்டும் இவற்றில் காணலாம். இவ்விதமே கி. பி. 12-வது நூற் றாண்டு வரை கோயில்கள் கட்டப்பட்டன.

இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் இவ்வகைக் கோயில்களில் எல்லாம் தலைசிறந்ததாகும்.

பிற்காலச் சோழர் காலத்திலும் விஜயநகர ஆட்சியின் முற்பகுதியிலும், மதில்கள் அதிக மாகவும் அவற்றின் இடையே மண்டபங் கள் கட்டவும் ஆரம்பித்தார்கள். கி. பி. 14–15-வது நூற்றாண்டுகளிலிருந்தே கர்ப் பக்கிருஹத்தின் மேலுள்ள விமானம் சிறிய தாகவும், பெரியனவாகவும் கட்டப்பட்டன. கி. பி. 16–17-வது நூற்றாண்டுகளில் விஜய நகர அரசர்களாலும் அவர்களின் பிரதிநிதி களாலும் கோபுரங்கள் வானளாவியன வாகக் கட்டப்பட்டன. உதாரணமாகச் சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சீபுரம், மதுரைக் கோபுரங்களைச் சொல்லாம். இதற் குப் பிற்காலத்தில் முக்கியமான புது வளர்ச்சி இராமேசுவரத்துக் கோயிலிலிருக் கும் மூடிய தூண்கள் நிரம்பிய பிராகாரங் களாகும்.

சிற்பக்கலை

இக்கலையின் உதாரணங்களும் கி. மு. 200-வது நூற்றாண்டிலிருந்து கிடைக்கின் றன. இவற்றில் பெரும்பான்மையானவை கி.மு.200முதல் கி.பி. 300வரையுள்ள காலத் தைச் சேர்ந்தவை. இவை கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள அமராவதி நாகார்ச்சுன கொண்டா போன்ற இடங்களில் இருந்த பௌத்த கோயில்களைச் சேர்ந்தவை. தமிழ் நாட்டில் குடுமல்லம் என்ற ஊரில், கி. மு. முதலாவது நூற்றாண்டைச் சேர்ந்த, ஆள் உயரமுள்ள சிவபெருமானின் உருவம் செதுக்கப்பட்டுள்ள சிவலிங்கமே மிகப் பழமையான சிற்பமாகும். வேறு சிற்பங் கள் கிடைக்காவிடினும், சங்ககால நூல் களிலுள்ள பல வர்ணனைச் சித்திரிப்புப் போன்றே ஆந்திர நாட்டு மேற்கூறிய சிற் பங்களில் பல இருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து அடிப்படையான விஷ யங்களில் அகில பாரதமும் ஒரே விதமாகச் சிந்தித்தும் காரியங்கள் செய்தும் வந்திருப் பது தெரியவரும். கி.பி. 7-வது நூற்றாண்டி லிருந்து சிற்பக்கலையின் உதாரணங்கள் பல கிடைத்திருக்கின்றன. இவற்றில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை ஆடையாபரணங் கள் குறைந்தவைகளாகவும், வீர்யமும் சாந்தி யும் உள்ளவைகளாகவும் இருக்கின்றன. சோழர் காலத்தைச் சேர்ந்தவை எழில் நிரம்பியவைகளாகவும் கலையின் கனி முழு வதும் பொருந்தினவைகளாவும் இருக்கின்றன. பிற்காலத்தில் அதாவது கி. பி. 14-வது 15-வது நூற்றாண்டிலிருந்து இக்கலை கீழ்நோக் கிச் செல்ல ஆரம்பமாயிற்று.

ஓவியக்கலை

சுவரில் வண்ணச் சித்திரம் எழுதுவது என்பது தொன்றுதொட்ட ஒரு பழக்கம் என்பதைச் சங்க நூல்கள் தெள்ளெனத் தெரிவிக்கின்றன. ஆனால் கி. பி 7-வது நூற்றாண்டுவரையுள்ள காலத்தைச் சேர்ந்த உதாரணங்கள் கிடைக்கவில்லை. கி. பி. 600-வது ஆண்டில் புதுக்கோட்டைக் கருகேயுள்ள சித்தன்னவாசல் என்ற இடத் திலுள்ள ஒரு சமண சமயக் குகைக் கோயி லில் இருக்கும் சுவரோவியங்களே தென்னிந் தியாவில் எஞ்சியுள்ள மிகப் பழைய ஓவியங் களாகும். இவற்றின் வேலைப்பாடு மனத்தை யும் கண்ணையும் கொள்ளை கொள்ளுமாறு இருக்கிறது. இவற்றில் முக்கியமாகக் குறிப் பிடத்தக்கவை, ஒரு தாமரைக் குளமும், இரண்டுநடனப்பெண்மணிகளுமாம். இவை களைத் தீட்டியிருக்கும் நயமும், பாணியும் தென்னிந்தியாவிற்கே தனிப்பெருமையைக் கொடுக்குமாறு இருக்கின்றன. அக்காலத் திலேயே இக்கலை இவ்வளவு சிறந்து வியப் புறுமாறு இருந்தால் இது எவ்வளவு கால மாகத் தென்னாட்டில் பயிலப்பட்டு வந் திருக்க வேண்டும் என்பதைச் சுலபமாக ஊகித்துக் கொள்ளலாம். இந்த ஓவியங் களுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை காஞ்சீபுரம், பனைமலை முதலிய இடங்களில் இருக்கின்றன. பாண்டிய நாட்டைச் சேர்ந்த திருமலைபுரம் என்கிற கிராமத்

திலுள்ள ஒரு குகைக் கோயிலிலும் இவ் வகை ஓவியங்கள் இருக்கின்றன. இதி லிருந்து பாண்டிய நாட்டிலும் இக்கலை சிறப்படைந்திருந்தது தெரியவரும்.

இக்கலை அதன் வளர்ச்சியின் சிகரத்தை அடைந்தது புகழ்பெற்ற இராஜராஜ சோழன் காலத்தில்தான். சிவபாத சேகரன் என்ற பட்டம் பெற்ற, இந்தச் சக்கரவர்த் திப் பெருமகன் கட்டிய சிவன் கோவிலான தஞ்சைப் பெருங்கோயிலின் கர்ப்பக் கிரு ஹத்தைச் சுற்றிலுமுள்ள ஆலோடியின் இருபுறச் சுவர்களிலும் சொல்லொணாக் கவர்ச்சியும் எழிலும் நிறைந்த சுவரோவி யங்களைக் காணலாம், இவை சிவபெருமா னின் பல லீலைகளையும் சிவனடியார்கள் சிலரின் கதைகளையும் சித்திரிக்கின்றன. புதைபொருள் ஆராய்ச்சியின் உதவியால் இராஜராஜன் காலத்திய இந்த ஓவியங்க ளில் ததும்பும் எழில் வீர்யம் உயிர் இவ் வகைக் குணங்களுள் பொருந்திய ஓவியங்கள் உலகிலேயே வேறு ஒரு சில இடங்களில் மட்டுமே காணமுடிகிறது என் பது தெரியவருகிறது. இருந்தாலும் இவற் றின் பெரிய பரப்புக்கும் அதிகம்பீரமான தீட்டும் திறனுக்கும் நிகராகச் சுவரோவியங் கள் உலகில் வேறு ஓரிடத்திலும் இருக்க வில்லை என்று கூறலாம். பிற்காலத்தில் லேபாக்ஷி, சோமபள்ளி, சிதம்பரம், ஸ்ரீரங் கம், திருவாரூர், ஹம்பி முதலிய இடங்களி லும் திருவாங்கூரில் பல இடங்களிலும் ஓவி யங்கள் தீட்டப்பட்டன. இவைகள் காலக் கிரமத்திற்குத் தக்கபடி கீழ்ப்பட்ட தரமாக இருக்கின்றன.

இவ்விதமாகத் தென்னிந்தியாவின் சரித்தி ரத்தைப் பற்றிய பல விஷயங்களை நிச்சய மாகத் தெரிந்துகொள்ளப் புதைபொருள் ஆராய்ச்சி மிகவும் உதவியாக இருந்து வரு கிறது. ஆனால், இன்னும் பல தெரியவேண் டிய விஷயங்கள் தெரியாமலேயே இருந்து வருகின்றன. முக்கியமாகச் சங்க நூல்களி லும், தேவாரம், திவ்யப்பிரபந்தங்களிலும் புக ழப் பெற்ற காவிரிப்பூம்பட்டினம், சீர்காழி, ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பல இடங் களைப் பற்றிய விஷயங்கள் ஒன்றுமே தெரிய வில்லை. சென்ற 1955-ம் வருடம் டிசம்பர் மாதம் அண்ணாமலை நகரில் நடைபெற்ற **அகில இந்தியக் கீழ்க்கலை மகாநாட்டில்** இக்குறைபாட்டைப் பகிரங்கமாகச் சர்க் கார், கலாசாலை, மற்றும் புலவர்களின் முன்பு கொண்டு வந்து, இக்குறையைத் தவிர்க்கு மாறு புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட் டிருக்கும் மத்திய சர்க்கார், இந்நாட்டுக் கலாசாலைகள் முதலியவர்களை, அம் மகா நாடு கேட்டுக்கொண்டது ஒரு குறிப்பிடத் தக்க விஷயம். இதன் விளைவாக மத்திய சர்க்கார் புதை பொருள் இலாக்காவால் காவிரிப்பூம் பட்டினத்தைச் சுற்றியுள்ள இடம் நன்முகச் சோதனை செய்யப்பட்ட தாகத் தெரிகிறது. அதே இலாக்காவால் சேக்கிழார் பெருமான் பிறந்த இடமான குன்றத்தூரில் பழங்காலக் குடியிருப்புகள் இருந்த இடங்கள் தோண்டப்பட்டு வரு கின்றன. இவ்விதப் புதிய ஏற்பாடுகளால் தென்னிந்தியாவின் பண்டைச் சிறப்பின் சின்னங்கள் அதிகமாகக் கிடைத்து இந்தப் பிரதேசத்தின் சரித்திரத்தையும் முக்கிய குணங்களையும் ஆதார பூர்வமாக நிலை நாட்ட முடியும் எனத் தோன்றுகிறது. இவ்வித முயற்சிகளுக்குப் பொருளும், போதிய பயிற்சி பெற்ற வேலையாட்களும் வேண்டும். பணம் சர்க்காரிடமிருந்து பெற லாம். வேலை தெரிந்தவர்கள் வேண்டிய தற்கு இந்நாட்டுக் கலாசாலைகள் புதை பொருள் இலாக்காக்களை ஆரம்பித்துப் புத்தி சாலித்தனமும், ஊக்கமும், பட்சபாத மின்றி ஆராய்ச்சி செய்யும் புலமையும் வாய்ந்தவர்களாக இளைஞர்களைப் பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். முன்னரே வெளிப்படுத்தப்பட்ட பண்டைப் பொருள் கள், கட்டடங்கள் போன்ற சின்னங்களைப் பாதுகாக்கவும், இனிக் கண்டுபிடிக்கும் சின் னங்களைப் பராமரிக்கவும் ஒரு பொறுப்பு வாய்ந்த இலாக்காவை அரசாங்கம் ஏற் படுத்துவது அவசியமானதாகும்.



பௌத்த சமயம்

மயிலை திரு. சீனி. வேங்கடசாமி

★

பகவன் புத்தர் பரி நிர்வாணம் அடைந்த சில காலத்திற்குப் பிறகு பௌத்த மதத்தில் சில பிரிவுகள் தோன்றின. அந்தப் பிரிவுகளை ஹீனயான பௌத்தம், மஹாயான பௌத்தம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஹீனயான பௌத்தத்திற்குத் தேரவாத பௌத்தம் என்றும் அனுத்தமவாத பௌத்தம் என்றும் பெயர்கள் உண்டு. இதுவே பழமையான பௌத்த மதம். மஹாயான பௌத்தம் பிற்காலத்தில் தோன்றியது.

இவ்விரண்டு வகையான பௌத்த மதங்களும் அவற்றின் பிரிவுகளும் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலே இருந்தன. இப்போது தமிழ் நாட்டிலே பௌத்த மதம் முழுவதும் மறைந்துவிட்டது. இலங்கை, பர்மா, சீனம், திபெத்து முதலிய தேசங்களிலே இன்றும் பௌத்த மதம் நிலைபெற்றிருக்கிறது.

தமிழ் மொழியிலே பௌத்த சமய நூல்கள் பல இருந்தன. அவையெல்லாம் சமயப் பகை காரணமாகப் பிற்காலத்திலே அழிக்கப்பட்டன. இப்போது தமிழில் எஞ்சியுள்ள பௌத்த காவியம் **மணிமேகலை** ஒன்றுதான். மணிமேகலையிலே தேரவாத பௌத்தம் (அனுத்தமவாத பௌத்தம்) கூறப்படுகிறது. ஆகவே, தேரவாத பௌத்தக் கொள்கை (தேரவாத தத்துவம்) என்ன என்பதை இங்கு விளக்குவோம்.

பௌத்த மதத்தில் இல்லறம் துறவறம் என்னும் இரண்டு அறங்களே உள்ளன. இல்லறத்தாராகிய சாவக நோன்பிகள் மும்மணிகளை வணங்கிப் பஞ்சசீலங்களைக் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். ஆனால், இல்லறத்தார் பிறவா நிலையாகிய நிர்வாண மோக்ஷம் அடைய முடியாது. துறவறத்தில் நின்றவர் மும்மணிகளை வணங்கிப் பத்து வகைச் சீலங்களை மேற்கொண்டு, நான்கு வாய்மைகளைக் கடைப்பிடித்து, அஷ்டாங்க மார்க்கத்தில் ஒழுகி, ஞானம் யோகம் ஆனபான ஸ்மிருதி முதலியவைகளைச் செய்வார்களானால், பிறவா நிலையாகிய பேரின்பமாகிய நிர்வாண மோக்ஷத்தைப் பெறக்கூடும்.

பௌத்தர்களில் இல்லறத்தாரும் துறவறத்தாரும் புத்தர் தர்மம் சங்கம் என்னும் மும்மணிகளைச் சரணம் (அடைக்கலம்) அடைய வேண்டும். இதற்குத் திரிசரணம் என்பது பெயர். திரிசரணத்தின் பாலி மொழி வாசகம் இது.

புத்தம் சரணங் கச்சாமீ
(புத்தனிடம் அடைக்கலம் புகுகிறேன்.)
தம்மம் சரணங் கச்சாமீ
(தர்மத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)
சங்கஞ் சரணங் கச்சாமீ
(சங்கத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)

இதை மூன்று முறை சொல்ல வேண்டும். அதாவது மும்மணியை மூன்று முறை வணங்க வேண்டும். "முத்திற மணியை மும்மையின் வணங்கி" என்பது மணிமேகலை வாக்கு.

பௌத்த பிக்ஷுக்கள் தச சீலத்தை (பத்து வகையான ஒழுக்கத்தை) மேற்கொள்ள வேண்டும். தச சீலங்களாவன : 1. கொல்லாமை. 2. கள்ளாமை. 3. பிறனில் விழை

யாமை. 4. பொய் சொல்லாமை. 5. கள் ளுண்ணாமை. (இவை பஞ்ச சீலம் எனப் படும். இவை இல்லறத்தாருக்கும் துறவறத் தாருக்கும் பொது. இவற்றுடன் வேறு ஐந்து சீலங்களைத் துறவிகள் மேற்கொள்ள வேண் டும். அவை :) 6. உண்ணத் தகாத நேரத் தில் உணவு கொள்ளாமை. 7. இசை, ஆடல், பாடல், நாடகம் முதலியவற்றைக் கேட்டலும் பார்த்தலும் செய்யாமை. 8. சந் னம், மலர் முதலிய நறுமணப் பொருள் களை நீக்குதல். 9. உயரமானதும் விசால மானதுமான ஆசனங்களை நீக்குதல். 10. நாணயங்களையும் வெள்ளி பொன் முத லிய விலையுயர்ந்த பொருள்களையும் நீக்குதல் என்பன.

திரிசரணம் தச சீலம் இவற்றை மேற் கொண்டால் மட்டும் போதாது நிர்வாண மோக்ஷம் அடைவதற்கு. இவற்றுடன் நான்கு வாய்மைகளையும் எண் வகையான நெறிகளையும் கைக்கொண்டு ஒழுக வேண் டும். நான்கு வாய்மைகளை ஆரியசத்தியம் என்றும், எட்டு வகையான நெறிகளை ஆரிய அஷ்டாங்க மார்க்கம் என்றும் கூறுவார் கள். (ஆரிய என்றால் உயர்ந்த என்பது பொருள்.)

நான்கு வாய்மைகளாவன : 1. துன்பம். 2. துன்ப காரணம். 3. துன்ப நீக்கம். 4. துன்பம் நீக்கும் வழி என்பன. இவற் றைத் துக்கம், துக்க காரணம், துக்க நிவா ரணம், துக்க நிவாரண மார்க்கம் என்றும் கூறுவார்கள். இவற்றை விளக்கிக் கூறு வோம் :

1. துக்கம் (துன்பம்) : பிறப்பு துன்ப மானது. நோய்கள் துன்பத்தைத் தரு கின்றன. நரை, திரை, மூப்பு, மரணம் முத லியனவும் துன்பத்தைத் தருகின்றன. நாம் விரும்பாத பொருள்கள் நமக்குத் துன்பந் தருகின்றன. நாம் விரும்பும் பொருள்கள் கிடைக்காமற் போனால் துன்பம் உண்டா கிறது. சுருங்கக் கூறினால் ஐம்புலன்களினா லும் துக்கம் ஏற்படுகிறது.

2. துக்க காரணம் :—பிறவிக்குக் காரண மாகிய ஆசை, ஐம்புலன்களைத் துய்க்கும் விருப்பம், தெய்வலோகத்தில் பிறந்து பெரிய இன்ப சுகங்களை அனுபவிக்கவேண்டும் என் னும் நினைப்பு, இந்த வாழ்க்கையில் வெறுப் புக்கொண்டு தற்கொலை செய்துகொள்வது முதலியன துன்பத்திற்குக் காரணங்க ளாகும்.

3. துக்க நிவாரணம் :—அ றி யா மை யாகிய அஞ்ஞானத்தை ஒழிப்பதும், ஆசை, அவா முதலிய பற்றுக்களை நீக்குவதும் துன்பநீக்கம் ஆகும்.

4. துக்க நிவாரண மார்க்கம் :—எட்டு வித உயர்ந்த வழிகளாகிய அஷ்டாங்க மார்க் கத்தைமேற்கொண்டு நடப்பதே துன்பத்தை நீக்கும் வழியாகும். (அஷ்டாங்க மார்க்கம் பின்னர் விளக்கப்படும்).

(வாய்மை விளக்கம்)

I. **துக்கம் :**

அ. பிறப்பு, மூப்பு, நோய், மரணம் முத லிய எட்டு வகையான துக்கம்.

ஆ. துக்கம், அநித்தியம், அனத்மம்.

II. **துக்க காரணம் :**

அ. இறந்தகால காரணம்.

1. பேதைமை (அவிஜ்ஜை), 2. செய்கை (சம்ஸ்காரம்).

ஆ. நிகழ்கால காரியம்.

3. உணர்வு (விஞ்ஞானம்), 4. அருவுரு (நாமரூபம்), 5. வாயில் (ஷடாயதனு), 6. ஊறு (ஸ்பர்சம்), 7. நுகர்வு (வேதனை).

இ. நிகழ்கால காரணம்.

8. வேட்கை (திருஷ்ணை), 9. பற்று (உபாதானம்), 10. கருமத் தொகுதி (பவம்).

ஈ. எதிர்கால காரியம்.

11. தோற்றம் (ஜாதி), 12. மூப்பு, சாக் காடு (ஜரா, மரணம்).

III. துக்க நிவாரணம் :

அ. அர்ஹந்த நிலையை அடைவது.

ஆ. நிர்வாண மோக்ஷம் பெறுவது.

IV. துக்க நிவாரண மார்க்கம் :

அ. எட்டுவித நெறி, (அஷ்டாங்க மார்க்கம்).

எட்டுவித உயர்ந்த வழியாகிய அஷ்டாங்க மார்க்கத்தைக் கூறுவோம். அவை யாவன : 1. நற்காட்சி. 2. நல்லொழுக்கம். 3. நல் வாய்மை. 4. நற்செய்கை. 5. நல்வாழ்க்கை. 6. நன்முயற்சி. 7. நற்கடைப்பிடி. 8. நற்றி யானம் என்பன. இவற்றை முறையே பாலி மொழியில் ஸம்மா திட்டி, ஸம்மா ஸங் கப்போ, ஸம்மா வாசா, ஸம்மா கம்மதோ, ஸம்மா ஆஜீவோ, ஸம்மா வியாயாமோ, ஸம்மா ஸதி, ஸம்மா ஸமாதி என்று கூறப் படும். இவற்றை விளக்குவோம்.

1. நற்காட்சி (ஸம்மா திட்டி):—மேலே கூறப்பட்ட நான்கு வாய்மைகளை (சத்தியங் களை) நன்றாக ஆழ்ந்து சிந்தித்து அறிந்து கொள்வது. அன்றியும்,

> ‘‘பேதைமை செய்கை யுணர்வே யருவுரு
> வாயில் ஊறே நுகர்வே வேட்கை
> பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
> இற்றென வகுத்த இயல்பீ ராறும்
> பிறந்தோர் அறியில் பெரும்பே றறிகுவர்
> அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்’’
> (மணிமேகலை, 14-ஆம் காதை)

என்பதை ஐயந்திரிபறத் தெரிந்துகொள்வதே நற்காட்சி எனப்படும்.

2. நல்லொழுக்கம் (ஸம்மா ஸங் கப்போ):—தன்னலத்தை மறந்து எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருத்தல். வாழ்க்கையின் நோக்கம் பிறவித் துன்பத்தி லிருந்து (துக்கத்திலிருந்து) விடுதலையடை வது தான் என்னும் எண்ணத்தோடு எப் போதும் எல்லா உயிர்களிடத்திலும் அன் பையும் நல்லெண்ணத்தையும் வளர்த்தல். சிற்றின்ப எண்ணங்களை ஒழித்தல்.

3. நல்வாய்மை (ஸம்மா வாசா):— பொய் சொல்லுதல், புறங்கூறுதல், கடு மொழி பேசல், அவதூறு கூறல், பயனில் லாப் பேச்சுக்களைப் பேசுதல் முதலிய வற்றை நீக்கி உண்மையையே பேசுவது. பேசும்போது அன்பாகவும் இனிமையாகவும் பேசுதல்.

4. நற்செய்கை (ஸம்மா கம்மதோ):— கொலை செய்தல், களவு செய்தல், காமம் விழைதல் முதலிய பாவமும் தீமையும் ஆன செயல்களைச் செய்யாமல் நல்ல செயல்களைச் செய்துகொண்டு ஒழுக்கமாகவும் அமைதி யாகவும் இருத்தல்.

5. நல்வாழ்க்கை (ஸம்மா ஆஜீவோ):— அடிமைகளை விற்பது, மாமிசத்துக்காகப் பிராணிகளை விற்பது, மயக்கந் தருகிற கள், மதுபானம், அபினி முதலிய பொருள்களை விற்பது, நோய் உண்டாக்குவதும் உயிர் போக்குவதும் ஆன நஞ்சுப் பொருள்களை விற்பது, கொலைக்குக் காரணமான கத்தி, ஈட்டி, வாள், அம்பு முதலிய ஆயுதங்களை விற்பது, சூதுவாது செய்வது ஆகிய செயல் களைச் செய்யாமல் நல்ல செயல்களை மட்டும் செய்வது. அதாவது உயிர்களுக்குத் துன்பஞ் செய்யும் செயல்களைச் செய்யாமல் அகிம் சையை மேற்கொண்டு வாழ்தல்.

6. நன் முயற்சி (ஸம்மா வியாயாமோ): தீய எண்ணங்களும் தீய செயல்களும் தன்னிடம் உண்டாகாமல் தடுத்து நல்ல எண்ணங்களையும் நல்ல செயல்களையும் வளர்ப்பது நன் முயற்சி எனப்படும். தீய எண்ணங்கள் மனத்தில் தோன்றினால் அவற்றை முயற்சியோடு தடுத்து நல்ல எண்ணங்களையும் நல்ல செயல்களையும் வளர்க்க வேண்டும்.

7. நற்கடைப்பிடி (ஸம்மா ஸதி):— உடம்பின் நிலையாமையை ஆழ்ந்து சிந் தித்து ஐம்பொறி ஐம்புலன் இவைகளின் உண்மைத் தன்மையை உணர்தல். இவ் விதம் சிந்திப்பது மெய்ஞ்ஞானம் பெறுவ தற்கு உதவியாகும்.

8. நற்றியானம் (ஸம்மா ஸமாதி):— மனத்தை ஒரு நிலையில் நிறுத்தப் பழகுதல். மனதைச் சிதறவிடாமல் அடக்கிக் குசல (நல்ல) எண்ணங்களை நினைத்து மனத்தை ஒரு நிலையில் நிறுத்தப் பழகுதல். இந்தச் சமாதிப் (மன அடக்கம்) பழக்கம், புலன் களையும் மனத்தையும் அடக்கியாள உதவு கிறது. அஞ்ஞானம், ஆசை, பகை முதலிய தீய எண்ணங்கள் நீங்கி ஞானம் வளர உதவுகிறது.

இந்த அஷ்டாங்க மார்க்கத்தில் நற்காட்சி நல்லொழுக்கம் ஆகிய இரண்டினாலே ஞானம் (பஞ்ஞா) உண்டாகிறது. நல் வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை ஆகிய இம்மூன்றினாலே நல்லொழுக்கம் (சீலம்) ஏற்படுகிறது. நன்முயற்சி, நற்கடைப்பிடி, நற்றியானம் ஆகிய மூன்றினாலே மன அடக் கம் (சமாதி) ஏற்படுகிறது.

நான்கு வாய்மைகளை அறிந்து அஷ்டாங்க மார்க்கத்தில் ஒழுகும் பிக்ஷுவானவர் நிர் வாண மோக்ஷம் பெறுவதற்கு ஞானம், தியானம் ஆகிய இரண்டையும் அடைய வேண்டும்.

"ஞானம் (மெய்யறிவு) இல்லாதவருக் குத் தியானம் இல்லை. தியானம் இல்லாத வருக்கு ஞானம் இல்லை. யார் ஒருவர் ஞானமும் தியானமும் உள்ளவரோ அவரே நிர்வாண மோக்ஷத்தின் அருகில் இருக் கிறார்" என்றும், (பிக்குவர்க்கம் 13.)

"மனத்தை ஒருநிலைப் படுத்துவதனாலே (யோகத்தினாலே) ஞானத்தைப் பெறலாம். யோகம் செய்யாவிட்டால் ஞானம் வள ராது. வளர்வதும் தேய்வதும் ஆன இந்த இரண்டு வழிகளையும் அறிந்து ஞானம் வளர் வதற்குரிய வழியில் நடப்பாயாக" என்றும் (மார்க்க வர்க்கம் 10) தம்மபதம் கூறு கிறது.

யோகம் (மனத்தை ஒருநிலைப் படுத்து வது) நான்கு வகைப்படும். அவை மேத்தை, கருணை, முதிதை, உபேக்ஷை என்பன. இந்நான்கையும் பிரமவிகாரம் என்று கூறுவர். இந்நான்கையும் விளக்கிக் கூறுவோம் :

மேத்தை : இது மைத்திரி என்றும் கூறப் படும். அதாவது அன்புடைமை. இந்த மைத்திரி (அன்பு) தியானத்தினாலே பகைமை உணர்ச்சி அழிந்து அன்பும் அரு ளும் வளர்கிறது. சூத்திர நிபாதத்தில் மேத்தை சூத்திரத்தில் இவ்வாறு கூறப்படு கிறது : "எல்லா உயிர்களும் மகிழ்ச்சி யோடு இருப்பதாக. அவையெல்லாம் மகிழ்ச்சியோடு சுகமாக வாழ்வதாக. எல்லா உயிர்களும், வலிவுள்ளவையும் வலிவற்ற வையும் மேலுலகத்தில் இருப்பவையும் கீழுலகில் இருப்பவையும் சிறியவையும் பெரியவையும் காணப்படுவனவும் காணப் படாதனவும் அண்மையில் இருப்பவையும் சேய்மையில் இருப்பவையும் பிறந்திருப்ப வையும் பிறக்கப் போகிறவையும் ஆகிய எல்லா உயிர்களும் மகிழ்ச்சியுடனும் சுகத் துடனும் இருக்கட்டும்." இவ்வாறு மேத் தையைப்பற்றித் தியானம் செய்யவேண்டும்.

கருணை : கருணை என்பது மன இரக்கம் உடைமை. எல்லா உயிர்களும் நன்றாக இருக்கவேண்டும் என்று தியானித்தல். எல்லா உயிர்களும் பிறப்பு இறப்பு முதலிய துன்பங்களை அடைகின்றன ; அத்துன்பங் களிலிருந்து அவை விடுபடவேண்டும் என்று கருணைகொள்ள வேண்டும். பகை வர் நண்பர் என்கிற வேறுபாடு இல்லாமல் எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் அடையவேண்டும் என்று எண்ணித் தியா னம் செய்வதே கருணைத் தியானம் ஆகும்.

முதிதை : முதிதை என்பது மகிழ்ச்சி என்று பொருள்படும். இந்தத் தியானத்தைச் செய்பவர், தாமும் தம்மைச் சேர்ந்தவர் களும் உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்று கருதித் தியானம் செய்யவேண்டும்.

உபேக்ஷை : அதாவது மன அமைதி யுடைமை. மேற்சொன்ன மூன்று தியானங்

களையும் செய்து முடித்தவர் பிறகு இந்தத் தியானத்தைச் செய்யவேண்டும். சுகம் பெற்றபோது இன்பம் அடையாமலும் துக்கம் அடைந்தபோது துன்பம் அடையாமலும் மனத்தை ஒரே நிலையில் நிறுத்தல். அதாவது விருப்பு வெறுப்பு அற்ற மனத்தோடு இருத்தல்.

இந்த நான்கு தியானத்துடன் அசுப பாவனையையும் செய்தல் வேண்டும். அசுப பாவனை என்பது உடம்பின் இழிதன்மையைச் சிந்தித்துப் பார்த்தல். உயிர் பிரிந்து போன உடம்பானது வீங்கிப் போதல், கறுத்துப் போதல், அழுகிப் போதல், புழுத்துப் போதல் முதலிய பத்துவகையான அழிவுத்தன்மையடைவதைச் சிந்தித்துப் பார்த்துப் பற்றறுத்தல்.

இவ்வாறு யோக தியானங்களினுலே ஞானம் அடைந்த பிக்ஷுவானவர் பிராணயாமம் (மூச்சு நிறுத்தல்) செய்ய வேண்டும். மூச்சை நிறுத்தப் பழகும் பிராணயாமத்திற்குப் பௌத்தர் ஆனபானஸ்மிருதி என்று கூறுவார்கள். இந்த ஆனபானஸ்மிருதி செய்வதினுலே பிக்ஷுவானவர் சமாதி நிலையை யடைகிறார். இந்தச் சமாதி நிலை நான்கு வகைப்படும். அவை ஸோதாபத்தி நிலை, ஸகதாகாமி நிலை, அநாகாமி நிலை, அர்ஹத நிலை என்பன.

ஸோதாபத்தி நிலையை யடைந்தவர் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களை நீக்கியவர் ஆவார்.

ஸகதாகாமி நிலையை யடைந்தவர் ஒரே ஒரு பிறப்பை உடையவர் ஆவார்.


அநாகாமி நிலையை யடைந்தவர் இனிப் பிறவாத நிலையை அடைந்தவர் ஆவார்.

அர்ஹத நிலையை யடைந்தவர் இந்தப் பிறப்பிலேயே நிர்வாண மோக்ஷத்தைப் பெற்றவர் ஆவார்.

இதுவே தேரவாத பௌத்த சமயத்தின் தத்துவம் ஆகும். சுருக்கமாகக் கூறப்பட்ட இந்தத் தத்துவத்தை விரிவாக அறிய விரும்புவோர், மணிமேகலை 30–ஆவது காதையில் விரிவாகக் காணலாம்.

———

இந்தியன் பாங்க் லிமிடெட்



ஸ்தாபிதம் : 1907

தலைமை ஆபீஸ் : மதராஸ்-1

பிராஞ்சுகள், சப் ஆபீஸ்கள் :
தென்னிந்தியா பூராவிலும்
மற்றும்
பம்பாய், கல்கத்தா & புது டில்லி

மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ. 1,00,00,000	செலுத்தப்பட்டது	ரூ. 60,20,000
வாக்களிக்கப்பட்டது	ரூ. 72,00,000	ரிஸர்வ் மற்றும் இதர நிதிகள்	ரூ. 77,50,000

டிபாஸிட்டுகள் : (31-12-55-ல் உள்ளபடி) ரூ. 29·44 கோடிகள்

டைரக்டர்கள்

O. M. SP. L. M. மெய்யப்ப செட்டியார்
A. M. A. MR முருகப்ப செட்டியார்
ராவ் பஹதூர் Dr. M. R. குருசாமி முதலியார்
C. கிருஷ்ணமூர்த்தி முதலியார்
L. அழகு சுந்தரம் செட்டியார்
P. V. RM. குழந்தையன் செட்டியார்
K. பாலசுப்ரமணிய அய்யர்
ராவ் சாஹிப் E. M. முத்தப்ப செட்டியார்
குமார ராஜா M. A. M. முத்தய்ய செட்டியார்
R. K. வெங்கடாசலம்
R. சுந்தரம் அய்யர்
ராவ் பஹதூர் T. S, கச்சபகேச முதலியார்

லண்டன் ஏஜண்டுகள் :
வெஸ்ட் மின்ஸ்டர் பாங்க் லிமிடெட்

நியூயார்க் ஏஜண்டுகள் :
பர்ஸ்ட் நாஷனல் லிடி பாங்க் ஆப் நியூயார்க்

வெளி நாட்டு பரிவர்த்தனை உள்பட எல்லா பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர், காரியதரிசி

பழந் தமிழர் சமயம்

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை

★

பழந் தமிழர் என்ற சொற்றொடர் நம் கண்ணிலும் காதிலும் பட்டவுடனே நமது நினைவு தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகிய நூல்கள் எழுந்த காலத்துக்கு நம் மைக் கொண்டு செல்லுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கைக் கூறுகள் நம் மனக் கண்ணில் தோன்றுகின்றன. அவர்களின் சமய உணர்வு ஒழுக்கங்களை உணர்தற் கெனச் சில சொற்களும் சொற்றொடர்களும் சிறந்த சான்றுகளாக அக்கால நூல்களில் நின்று நம் அறிவைப் பணி கொள்கின்றன. அந்நாளைய கல்வெட்டுக்களோ ஓவச் செய்தி களோ பிறவோ கிடைக்கவில்லை. நல்லிசைப் புலமைச் சான்றோர் சிலர் அவ்வக்காலத்தில் பாடிய பாட்டுக்கள் சிலவற்றைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை எனப் பண்டை யோர் தொகுத்துள்ளனர். அவை பலவும் தேர்ந்து கொள்ளப்பட்ட ஒரு சில சான் றோர்களின் சிலவும் பலவுமாகிய பாட்டுக் களாதலால் அவற்றைக் கொண்டு வரலாற்று முறையில் வைத்துச் சமய வுண்மைகளைக் காண்பது அரிதாகவுளது.

தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும் சங்க இலக்கியங்களும் அக்காலத்தே நிலவிய உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய இரு வகை வழக்குகளையும் முதலாகக் கொண்டு எழுந்தவை. "தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்" என்றே தொல்காப்பியத்துக்குப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் குறிக்கின்றார். இவ் விருவகை வழக்குகளில் நிலவிய சமயக் கொள்கைகளைக் காண்பதே நமது முன்னிற் கும் பணியாகிறது.

சமய வாழ்வுக்கு இன்றியமையாத அடிப் படைக் கடவுட் கொள்கையாகும். கடவுள் ஒருவர் உண்டு என்ற உணர்வும், அவரை வாழ்த்தி வழிபட்டு இயலுவது சமய வாழ்வு என்ற கருத்தும் சமயத்தின் உட்கிடை. இவற்றை மேற்கொண்டு ஒழுகுவது சமய வாழ்வாகும் என்பது நாடறிந்த கொள்கை. சமயத்தின் தோற்றம் மிகமிகத் தொன்மை யான மக்கள் இயற்கையில் கண்ட பெரு நிகழ்ச்சிகளால் உள்ளத்தே கொண்ட அச்ச மும் அவலமும் காரணமாகக் கொண்டது என்பர் வரலாற்றறிஞர். அச்சத்திற் கருவுற் றெழுந்த சமயம், இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐந்துக் கும் அப்பாலாய் அவற்றை ஆக்கிப் படைத்து ஆட்டிவைக்கும் **முதற் பொருள்** ஒன்று உண்டு என வுணர்ந்து அதற்கும் உலக வாழ்க்கைக்கும் தொடர்பு அமைத்து, அதனை உணர்ந்து இனிது ஒழுகச் செய்யும் முறையில் நல்ல தொண்டாற்றியிருக்கிறது. அந்த **முதற்** பொருளைப் பழந்தமிழர் கடவுள் என்றும் இயவுள் என்றும் வரும் இரண்டு சொற்களால் குறித்துள்ளனர். "கடவுள் வாழ்த்து" "பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்" என்ற தொடர் மொழி கள் யாவரும் நன்கு அறிந்தன. கடவுள், இயவுள் என்ற சொற்கள் கடத்தல், இயக்கு தல் என்ற பொருட்குரியன. அக்குள் விக் குள் என்றாற் போல இவையும் கடவுள் இய வுள் என்று இயலுவதால், உள்ளும் புறமும் கடந்து நிற்பது, இயக்கி நிற்பது என்று பொருள்பட்டுக் கடவுள் எனப்படும் முதற் பொருள் என்பது எல்லாப் பொருட்கும் உள்ளும் புறமும் கலந்து நின்று இயக்குவ

உயர் ரக பருத்தி நூற்பவர்கள்

*

20^{s}, 40^{s}, 60^{s}, 80^{s} மடிகளாகவும்

மற்றும் 2/80^{s} நம்பர் நூல் மடிகளும் கிடைக்கும்

●

ஸ்டேபிள் பைபர்கள்

40^{s} & 2/40^{s} தயாரிப்பு பிரத்யேக அம்சமாகும்

*

கதிர்கள்	...	23460
இணைக்கப்படவிருப்பவை	...	6000

*

கதிர் மில்ஸ் (கோவை) லிமிடெட்

ஒட்டர்பாளையம்

சிங்காநல்லூர் :: **கோயமுத்தூர்**

போன்: 766 தந்தி: "கதிரிமில்ஸ்", கோவை

●

மானேஜிங் பார்ட்னர்:

V. ராமஸ்வாமி நாயுடு

*

மானேஜிங் ஏஜண்டுகள் & செக்ரடரிகள்:

G. கிருஷ்ணா & கம்பெனி

தும் அவற்றைக் கடந்து நின்று அவற்றின் செயல் முறைகட்கு ஆணை செலுத்துவதும் செய்தொழுகுவது என்ற கருத்தை உணர்த்துகின்றன.

இக்கடவுட் கொள்கைக்கு நிலைக்களம் உயிரும் உலகமும் ஆகும். உலகமாவது "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம்" என்பது தொல்காப்பியம். சமயச் சூழ்நிலையில், "காலம் உலகம் உயிரே உடம்பே, பால்வரை தெய்வம் வினையே பூதம், ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம் ஆயீரைந்தும்" சிறந்த பொருள்களாக நிற்கின்றன. உயிர்கள் புல் பூடுகளாகிய ஓரறிவுயிர் முதல் மக்கள் ஈருக ஆறு வகையாகப் பிரிகின்றன. இவ்வுயிர்கள் யாவும் "மன்னுயிர்" என்றும் "தொல்லுயிர்" என்றும் சிறப்பிக்கப்படுவதால் அவை கடவுளாகிய முதற் பொருளால் படைக்கப்படாமல் அப்பொருளே போல என்றும் நிலை பேறுடைய உள்பொருளாகும். ஏனை உலகமும் உலகிலுள்ள பொருள்களும் அம்முதற் பொருளால் படைக்கப்படுவனவாம். கடவுளை முதற்பொருள் என்று குறிப்பதோடு "உலகு இயற்றியான்" எனவும், "உலகு படைத்தோன்" (நற். 240) எனவும் குறித்திருப்பது இக்கருத்துப்பற்றியேயாம்.

உயிர்கள் இன்ன உரு இன்ன நிறம் என்று சொல்ல வொண்ணாத உருவுடையன; ஆயினும் அவை உலகியற் பொருள்களான உடம்பையும் ஏனைப் பொருள்களையும் இயக்குவதும் அவற்றோடு கூடி இயங்குவதும் செய்வன; அவ்வியக்கத்தால் அவற்றிடையே வினைகள் தோன்றி நிலவுகின்றன. "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என்று நூலோர் கூறுகின்றனர். செய்யும் தொழிலுக்கேற்ப ஊதியமும் உறைபுளும் அமைவது போலச் செய்யும் வினைக் கேற்ப உயிர்கட்கு நுகர்ச்சியும் உடம்பும் அமைகின்றன. உடம்பையும் நுகர் பொருளையும் படைத்து அளிக்கும் வகையில் முதற் பொருளாகிய கடவுள் மேன்மையுற்று விளங்குகிறார். இதனால் கடவுட்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு படைப்போனுக்கும் படைக்கப்படுபொருட்கும் உள்ள தொடர்பாய்க்கடவுளை உலகைத் தனக் குரியதாகக் கொண்ட உடைய வனுகவும், உலகம் அவனது உடைமையாகவும் நிறுத்துகிறது. உயிர்கள் உலகிடைத் தோன்றும் உடம்பை இடமாகக் கொண்டு வினை (தொழில்) செய்து பயன் பெறுவதால் இவ்வுலகம் உயிர்களின் பொருட்டே படைக்கப்பட்டு அவற்றிற்கு உதவப் பட்டிருப்பது என்பது பழந்தமிழர் சமயக் கொள்கை. இதனால் கடவுட் பொருட்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பு உதவி செய்வோனுக்கும் உதவி செய்யப்பட்டோர்க்கும் உள்ள தொடர்பாய், உதவி பெற்றோன் உதவி செய்தோனுக்குக் கடமைப்பட்டு அவன் நன்றியினை நினைந்தொழுகுவது போல உயிர்கள் கடவுளது அருளை நினைந்து வழி பட்டொழுகுவது கடனுகும் என்பதை வற்புறுத்துகிறது. இதனால்தான் தொல்காப்பியனர் கடவுள் வாழ்த்துப்பகுதிக்குச் சிறப்பாக இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளார்.

உயிர் வகையுள் மக்களைத் தனிப்பட நிறுத்தி உயர்திணை உயிர் என்றும், ஏனை உயிர் வகையை அஃறிணையுயிர் எனவும் பழந்தமிழர் கொண்டனர். "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே" என்பது தொல்காப்பியம். மக்களினத்துள் அடங்காமல், கடவுளாகிய முதற் பொருளுமாகாமல் இரண்டற்கும் இடைப்பட்ட நிலையில் தெய்வங்கள் காணப்படுகின்றன. இவை மக்களுயிர் போல மனவுணர்வும் வினை செய்தலும் இன்ப துன்ப நுகர்ச்சியும் உடையவாய்ப் பிறத்தலும் இறத்தலும் செய்வன. இவற்றின் செயல் முறையும் வாழ்க்கையும் மக்களுயிரின் மேனிலையில் உள்ளன. "தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி" மக்கள் இனத்தன அல்ல வாகலின் "இவ்வென அறியும் அந்தம்

நமக்கு இல'' என்றும், சொல்லுலகில் ''உயர்திணை மருங்கின்பால் பிரிந்து இசைக்கும்'' என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் வகுத்துரைக்கின்றார்.

பழந்தமிழர் சொல்லுலகை உயர்திணை அஃறிணை எனக் கொண்டாற் போலப் பொருளுலகைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்தாக வகுத்துக் கொண்டனர். இப்பகுதியுள் வாழ்ந்த மக்கள் முறையே குன்றவர், ஆயர், வேளாளர், பரதவர், எயினர் எனக் குறிக்கப் பெற்றனர். அவர்களைத் திணை நிலை மக்கள் என்பது வழக்கம். அவரவர் வாழ்க்கைக்குரிய உணவு தொழில் முதலியன தனித்தனியே உள்ளன. அவற்றோடு சமயவொழுக்கத்தைக் கூட்டி மேலே குறித்த தெய்வங்களையும் ஒவ்வொரு பகுதிக்கும் உரிமை செய்துள்ளனர். குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்கு மாயவனும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் தெய்வமாவர். இவர்கட்கு நாட்பூசனையும் விழாவும் வழிபாடும் செய்வது சமய வொழுக்கமாகிறது. கடவுள் என்பது இத்தெய்வ வகைகட்கு மேற்பட்டு நின்று எல்லாம் வல்ல முழு முதற் பொருளாக நிலவுகிறது. எல்லா நிலப்பகுதிகட்கும் நீர் தீ வளி விசும்பு ஆகிய அனைத்திற்கும் மேலாய் எல்லாம் தன் ஆணை வழி நிற்கப்பண்ணுவது பற்றிக் கடவுட் பொருட்கெனத் தனியே நிலம் கிடையாது; எல்லா நிலங்களிலும் இக்கடவுட் குறிப்புப் பொதுவாகக் காணப்படுவ தொன்றே இதற்குப் போதிய சான்று.

குறிஞ்சி நிலத்து முருகன் முதலாய தெய்வ வகை எல்லாவற்றிற்கும் தோற்றம் நிலை வேறு கூறப்படுவது போலக் கடவுளாகிய முதற் பொருளுக்குத் தோற்றமும் ஈறும் கூறப்படுவதில்லை. இப்பொருளைக் குறிக்கும் போதெல்லாம் சங்க இலக்கியங்கள் பிறை முடியும், முக்கண்ணும், கறை மிடறும் உடையனைக் குறிக்கின்றன. இதனால் இன்று சிவம் என்ற சொல்லால் குறிக்கப் படும் பொருள் இவ்வடையாளங்களைத் தன் பால் கொண்டிருப்பது கொண்டு, சிவ பரம் பொருளே பழந்தமிழர் சமயத்துறையில் நிலவிய கடவுள் என்பது தெளிவாகத் தோன்றுகிறது. தெய்வங்கட்குத் தோற்ற மும் கடவுட்கு அது கூறப்படாமையும் நோக்கின், பிறவா வாழ்க்கைப் பெருமை யுடையது கடவுள் என்றும், பிறந்து நிலை வேறு கொண்டு இயலுவன தெய்வங்கள் என்றும் பழந்தமிழர் கருதிய கொள்கைகளாகின்றன.

மக்கள் வாழ்வில் வினையுணர்வும் மறு பிறப்பும் வீடுபேற்றின்பமும் நிரயத் துன்பமும் சொல்வழக்கில் நிலவுகின்றன. மக்களுடைய மனம் மொழி உடம்பு மூன்றின் அசைவு அசைவின்மைகளால் வினைகள் தோன்றுகின்றன. வினையில்லாத உயிரே உலகில் இல்லை. ஒவ்வொரு வினைக்கும் பயன் உண்டு. இன்பம் பயப்பது நல்வினை; துன்பம் தருவது தீவினை. நல்வினை செய்தோர் இன்பத்துக்கும் தீவினை செய்தோர் துன்பத்துக்கும் உரியராவர். வினை உயிரோ உணர்வோ இல்லாததாகலின், அது தானே சென்று வினை செய்தவனுக்கு உரிய பயனை நல்குவதில்லை. வினை செய்தோனுக்கு வினைப் பயன் அவனையே அடைதற்குரிய தொழிலைச் செய்யும் வகையில் தெய்வங்கள் பணிபுரிகின்றன. அதுபற்றியே அவற்றைப் ''பால்வரை தெய்வம்'' என்று சான்றோர் குறிக்கின்றனர். செய்யப்படும் வினைப் பயன்களுக்கேற்ப உயிர்கட்கு இம்மை மறுமை வீடுபேறு என மூவகையுலகுகள் காட்டப்படுகின்றன. வினை செய்தற்குரிய உலகம் நாம் வாழும் மண்ணுலகம். நல் வினைப் பயனை நுகர்தற்குரிய மறுமையுலகம் நிரயம் என்றும் வினைத்தொடர்பினின்றும் அறவே நீங்கி விளங்கும் அறிவுடைச் சான்றோர்க்குரியது வீடுபேறு என்றும் பழந் தமிழர் கருதினர்.

வினை தோன்றும் போதே அதன் பயனும் உடன் தோன்றுகிறது. வினை முடிவில்

அதன் முழுத்த பயன் உருவாகி வினைசெய்த ஒருவினை அடையும் நிலையை எய்துகிறது. அவன் அப்பயனை நுகரும் வரை அவனுக்கு அஃது ஊழ்கனிபோல் நின்று நுகர்ச்சிக் குரிய காலம் வந்ததும் தெய்வத்தின் ஆணையால் அவனை எவ்வகையாலேனும் அடைந்து விடுகிறது. அதனால் அதனை ஊழ்வினை என்று அறிஞர் அறிவிக்கின்றனர். ஊழ் வினையை ஊட்டுவிக்கும் பணி கடவுட் பொருளின் ஆணைவழி இயங்கும் தெய்வங்களின் செயலாதலால், தெய்வ வழிபாட்டால் வினைப்பயனது நுகர்ச்சி காலவகையில் வேறுபடும் என்ற கருத்துப் பண்டையோர் கொண்டிருந்தனர். குன்றவர் முருகனுக்கு வழிபாடாற்றி வேட்டம் செல்வதும், ஆயர் மாயோனுக்குக் குரவையாடி வழிபாடியற்றுவதும், வேளாளர் இந்திர விழா எடுத்தலும், பரதவர் சுறவுக்கோடு நட்டு வருணனுக்கு வழிபாடு செய்து மீன் வேட்டம் புரிவதும், கொற்றவையை வழிபட்டு எயினர் மறத்தொழில் செய்வதும் சங்க இலக்கியங்களில் காணப்படுவது இது பற்றியே யாகும்.

உலக வாழ்வில் காணப்படும் உயிர்கள் அனைத்துக்கும் இன்பம் பெறுவது ஒன்றே குறிக்கோளாகும். "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பதுதான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்" என்பது தொல்காப்பியம். இந்த இன்பப் பயன் பெறுவது குறித்தே உலக வாழ்வு நடைபெறுகிறது; உயிர்களால் செய்யப்படும் வினைகள் யாவும் இக் குறிக்கோளையே நாடி நிற்கின்றன. இந்த இன்பப் பயன் பெறுவது பற்றித் தோன்றும் வினை இடையீடு படுமிடத்தும் இடையூறு எய்துமிடத்தும் அவற்றை நீக்கும் செயல்வகைகளில் மக்களின் அறிவும் முயற்சியும் பெரிதும் ஈடுபடுகின்றன. இடையீடும் இடையூறும் அவ்விரண்டின் எல்லையைக் கடந்து போகிறபோது சமயவுணர்வும் வழிபாடும் தோன்றுகின்றன. பெருமழை, மழையின்மை, கடுங்காற்று, கொடு விலங்கு, பெரும்பகை முதலியவற்றால் இடையூறு உண்டாகுமாயின் மக்கள் தெய்வ வழிபாட்டில் சிறந்து நிற்கின்றனர். பெருமழைக்கு வருந்திய மலையுறை குறவர்,

"மலிவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர்" (புறம். 143)

எனச் சான்றோர் குறிப்பது காண்க. செய்யும் வினை காரணமாகத் தோன்றும் சமய வழிபாடு, வினையின் தொடக்கத்தில் இடையூறு வாராமை கருதியும், இடையில் வந்த இடையூறு நீங்குவது கருதியும், முடிவில் வினைப்பயன் நல்கும் இன்பம் குறித்தும் நடைபெறுகிறது.

மக்களுடைய வாழ்வை அகம் புறம் என இரண்டாக வகுத்து முறை செய்து கொண்டவர் பழந்தமிழர். அகம் என்பது தனியே இருந்து வாழ்க்கை நடத்தும் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் ஒருங்கு பெற்ற ஒருவனும் ஒருத்தியும் ஒருவரையொருவர் தனித்துக்கொண்டு காதலுறவு கொண்டு உள்ளத்தால் ஒன்றுபட்டு மணம் செய்து கொண்டு மனையறம் புரியும் ஒழுகலாறாகும். அக்காலத்தே தோன்றும் காதலுறவு இடையீடும் இடையூறும் எய்துமிடத்து, காதலர் மேனிக்கண் தோன்றும் வாட்டமும் மெலிவும் குறித்துத் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. குன்றவரிடையே நடக்கும் வெறியாட்டு இதற்குச் சீர்த்த சான்றாகும். புற வாழ்வு என்பது மனையறம் புரிந்தொழுகும் மக்களிடையே பொருளும் புகழும் போர் வென்றியும் பிறவும் பற்றி நிகழும் ஒழுகலாறாகும்.

புறவாழ்வின் கண், அகத்துறை இன்பம் நுகர்ந்தும் புறத்துறைப் புகழும் வென்றியும் எய்தியும் உவர்ப்புற்ற சான்றோர் "சிறந்தது பயிற்றல்" என்னும் துறவு வாழ்க்கை மேற்கொள்வது பண்டைத் தமிழர் சமயக் கொள்கையாகும். "காமம் சான்ற கடைக் கோட்காலை, ஏமம் சான்ற

மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' என்பது தொல்காப்பியம். இங்கு இறத்தல் என்றது வயது முதிர்தல். பொருள் இன்பங்களின் சுவை காணுத ஒருவன் துறவு மேற்கோடல் என்பது தமிழர் சமயக் கொள்கைக்குப் புறம்பானது. இச்சான்றோர் இன்பமும் துன்பமுமாகிய இரண்டினையும் ஒரு சேரவுவர்த்து வினையின் நீங்கி விளங்குபவராதலின், இவர் கட்குத் தெய்வ வழிபாடு கிடையாது. இவர்களால் வழிபடப்படுவது கடவுள் எனப்படும் முழுமுதற் பெரும் பொருளேயாகும். அதனால் இத்துறவிகளையும் கடவுளர் என்பது பழந்தமிழ் மரபாயிற்று. சடை முடித்துப் பலகாலும் நீராடித் தோலுடுத்துக் காய்கனி கிழங்கு இலைகளை உண்டு காடும் குன்றுமாகிய இடங்களில் வாழ்வது துறவோர் நிலைமையாகும். இவர்கள் ஏனையோர் போல நல்வினை செய்து துறக்க வின்பம் பெறவிழையாது, உற்ற நோய் பொறுத்தலும் உயிர்கட்கு ஊறு செய்யாமையுமாகிய தவம் மேற்கொண்டு மெய்யுணர்ந்து அவாவறுத்து ஒழுகுவர். இப் பெருமக்களது வாழ்வு முழுதுமே சமய நெறியில் இயங்குதலால், இவர்கட்கெனத் தனி நிலையில் சமய வாழ்வும் வழிபாடும் இல்லை. இவர்கள் சொல்லுவனவும் நினைப்பனவும் யாவுமே கடவுட் பெரும் பொருளோடு கலந்து பிரிப்பின்றிப் பிறங்கும். இவர்கள் நெஞ்சின்கண் நின்று நிலவும் கடவுள், ''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி, நீலமணிமிடற்றுப்'' பெரும் பெயர்க் கடவுள். முற்றுந் துறந்த முனிவரரும் முடியுடைய மூவேந்தரும் தலைசாய்த்து வணங்கியது இக்கடவுளையே யாகும். ''பணிஇயர் அத்தை நின்குடையே முனிவர் முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே'' என்று சான்றோர் தெருட்டுதல் காண்க.

முழுமுதல் கடவுட்கும் மண்ணுலகவுயிர் கட்கும் இடையே நிலவும் தெய்வங்கள், மக்களுடைய வழிபாட்டையேற்று அவர்கள் நலம்பெறத் துணைபுரியும் என்ற கருத்தால் பகைப்பொருளை வெல்வதற்கும் துன்பத்தினின்றும் உயிர்களைக் காத்தற்கும் அத் தெய்வங்களின் தொடர்பு சமய வாழ்வில் சிறந்து நின்றது. மக்களுயிர்களுள்ளும் அல்லன கடிந்து நல்லனவே புரிந்தவை மறுமையில் தெய்வங்களாயினவும் உண்டு. இவ்வாற்றுல் தெய்வங்களைப்பற்றிப் பல வேறு வரலாறுகள் சமயத்துறையில் காணப்பட்டன. அவற்றை இந்நாளில் புராண வரலாறுகள் என்பது வழக்கம். மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டெழுந்த பழந்தமிழ் இலக்கியங்களில் தெய்வங்கள் சார்பான புராண வரலாறுகள் பல உளவாயின.

குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனைப் பற்றிய வரலாறுகளில், அம்முருகன் தாமரைப்பூவில் பிறந்தான் என்பதை ''நிவந் தோங்கு இமயத்து நீலப்பைஞ்சுனைப், பயந் தோர் என்ப பதுமத்துப்பாயல்'' என்று பரிபாடல் முதலிய நூல்கள் குறிக்கின்றன. கடலிடத்தே இருந்து குறும்பு செய்து உயிர்களை வருத்திக்கிருந்த சூரவன்மாவின் காவல் மரமான மாமரத்தைத் தடிந்து அவனையும் கொன்று முருகன் மேன்மையுற்றான் என்பதை,

> ''நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
> அணங்குடை யவுணர் ஏமம் புணர்க்கும்
> சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
> கடுஞ்சின விறல்வேள்''

என்று பதிற்றுப்பத்தும்,

> ''அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
> மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
> எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்''

என்று முருகாற்றுப் படையும் பிறவும் குறிக்கின்றன. ''குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்த'' முருகனைச் சிறப்பிக்கும் சான்றோர், வள்ளியை, ''முருகுவுணர்ந்தியன்ற வள்ளி'' என்றும், அவளுடைய பெற்

ரூரை, "குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளி தமர்" என்றும் எடுத்துரைக்கின்றனர்.

முல்லை நிலத் தெய்வமான மாயோன், கண்ணனுல் முல்லை நிலத்து ஆயரிடையே யமுனைக் கரையில் விளையாடிய வரலாறு,

"வடாஅது,
வண்புனல் தொழுஉ வார்மண லகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்"

என்றும், கஞ்சன் விடுப்பக் குதிரை வடிவில் வந்த அசுரனை வென்ற செய்தியை,

"காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகை
கண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத்திட்டுப் புடைத்த ஞான்று
இன்னன்கொல்
மாயோன் என்றுஉட் கிற்றுஎன் நெஞ்சு"

என்றும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இவ்வாறே மருதத்துக்குரிய தெய்வமான இந்திரன், முருகன் முதலிய தெய்வங்கட்குப் படையுதவிய பண்பும், அகலிகை பொருட்டு மேனி முழுதும் கண் பெற்ற கதையும் பழந் தமிழரிடையே நிலவின. பாலைக்குரிய தெய்வமான கொற்றவையை முருகனுக்குத் தாய் என்றும், அவளே எல்லாத் தெய்வங்கட்கும் பழையவள் என்றும் கூறுகின்றனர். தாருகன் உரம் கிழித்த தறுகண்மையும், எருமை வடிவில்வந்த அவுணனை வென்று சிறந்த வீறுடைமையும் அவள் செய்தியில் விளக்கம் பெறுகின்றன. வருணனுகிய நெய்தல் நிலத் தெய்வத்தைப் பற்றி ஒரு செய்தியும் பழந் தமிழ் நூல்களில் எவராலும் எவ்விடத்தும் கூறப்படவில்லை. இச்செய்திகளை விழாக் காலங்களில் மக்கட்குக் காவியங் கூறியும் ஓவியம் காட்டியும் உரைப்போர் இருந்திருக்கின்றனர். இதனை,

"இந்திரன் பூசை இவள் அக லிகை இவன்,
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றியபடி இதுஎன்று உரைசெய் வோரும்"

உளர் எனப் பரிபாடல் பகர்வது காண்க.

இத்தெய்வங்கட்கெல்லாம் மேலாய் உலகு உயிர்களின் வேரும் ஒன்றும் உடனும் நிலவும் கடவுள் நிலையில் சிவ பரம்பொருளை வைத்து அவன் வடிவத்தை,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நிலமணி மிடற்று ஒருவன்"

என்றும்,

"பேரிசை ஈவிரம் மேஎய் உறையும்
காரியுண்டிக் கடவுள்"

என்றும் கூறுவர். அவன் முப்புரம் எரித்த வரலாற்றை,

"ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்"

என்றும்,

தொடங்கற்கண் தோன்றிய முதியவன்
முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந்
திரத்தலின்
மடங்கல்போற் சினனீஇ மாயம்செய்
அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணுல்
மூவெயிலும்
உடன்ருன்"

என்றும்,

"உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்,
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"

என்றும் பழந்தமிழர் தம்முட் பாராட்டிப் பரவி வந்துள்ளனர்.

பழந்தமிழர் சமய வாழ்வில் கார்த்திகை விளக்கீடும், மார்கழித்தைந் நீராட்டும் பங்குனி உள்ளிவிழாவும், சித்திரை இந்திரவிழாவும், வேனில் விழாவும் பிறவும் சிறந்து விளங்கின. கார்த்திகை விளக்கீட்டு விழா இன்றைய தீபாவளியும் பொங்கற் புதுநாள் விழாவும் ஆகிய இரண்டின் சிறப்புக்களை ஒருங்கே தன் கண் கொண்டிருந்தது. இதனை,

"மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம"

என்றும், இக்காலத்தே புதுமணமகளிர் புது நெல் கொண்டு அவலிடித்துப் பாற் பொங்கல் இட்டு மகிழும் திறத்தை, இதே பாட்டில்,

"புதுமண மகடூஉ வயினிய கடிநகர்ப்
பல்கோட் டடுப்பிற் பால்உலை இரீஇக்
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை"

என்று நக்கீரனார் நவில்வதனால் நன்கு அறியலாம். மார்கழித் திருவாதிரை நாளில் தொடங்கித் தைப் பூசம் வரையில் நடைபெறும் தைந் நீராட்டு பரிபாடலில் பாரித்துக் கூறப்படுகின்றது. விசய நகர வேந்தர் காலத்துத் தோன்றிய மொழி நிலை உணர்வு வேறுபாட்டால் கார்த்திகை சிரழிந்தது; தீபாவளி புதிது தோன்றிற்று; தைந் நீராடல் தலை தடுமாறிற்று. வேனில் விழா காமன் பண்டிகையாயிற்று. இக் காலத்தில்தான் தெய்வ நிலையங்களில் வழிபாட்டில் வட மொழி இடம் பெற்றது. ஊர்ப் பெயர்களும் தெய்வங்களின் பெயர்களும் வடமொழியில் மாறின; பின்னர் மக்கட் பெயரும் வட மொழிப் பெயர்களாயின.

பழந்தமிழரிடையே சமய வழிபாட்டில் அவரது தமிழ் மொழியே நிலைபெற்றிருந்தது. தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன. அவற்றை நகர் என்றும் தேவகுலம் என்றும் வழங்கினர். மலை முடியும் கடற்கரையும் தெய்வங்களுறையும் கோயில் எடுக்கும் சிறப்புடைய இடங்களாயின. நவிர மலையின் முடியில் முக்கட் செல்வனுக்கு இருந்த கோயிலை மலைபடுகடாம் என்ற சங்க இலக்கியம் குறிக்கின்றது. இக்கோயில்கள் பலவும் மரத்தாலும் மண்ணாலும் பண்டை நாளில் கட்டப் பெற்றன. பல்லவர் காலத்தில்தான் கோயில்களைக் கருங்கற்களால் அமைக்கும் முறை உருக்கொண்டு சிறப்பதாயிற்று. சிவபரம் பொருள் எல்லாத் தெய்வங்கட்கும் மேலாம் நிலையில் எல்லா நிலங்கட்கும் பொதுவாய் இலங்குவது பற்றிச் சிவத்துக்கு எடுக்கும் கோயில்களில் சிவனை நடுவில் வைத்துக் குறிஞ்சிக் குரிய முருகனையும் முல்லைக்குரிய மாயோனையும் பாலைக் குரிய கொற்றவையையும் பிறவற்றையும் "பரிவார தேவதைகள்" என்ற பெயரால் சூழவைத்துச் சமய ஒருமை கண்டவர் பழந்தமிழர்.

இவையேயன்றி, ஊர்தோறும் அன்பர்கள் கூடிப் பரவுமிடந்தோறும் தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன. இவற்றின் வேறாக,

காடும் காவும் கலின்பெறு தருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

தெய்வ வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. கந்துடைநிலை என்றது பிற்காலத்தே சிவலிங்கம் என மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. சிவவடிவம் கந்தும், அதன் பீடம் நிலையுமாகும். இவ்வுண்மையறியாத மடவோர் கந்தினை ஆண்குறி என்றும், நிலையினைப் பெண்குறி என்றும் பிதற்றினர். சிலர் இப்பேதைமையை அறிவுடைமையாக எண்ணிப் பொய்க்கதை புனைந்து மனத்தே மான வுணர்வின்றி எழுத்தால் வரைந்து விட்டனர். தெய்வ வழிபாட்டில் உயிர்ப் பலியும் குருதி கலந்த சோறும் படைக்கப் படுவதுண்டு. எங்கும் விளக்குகளை ஏற்றித் தெய்வங்கட்கு நீராட்டிப் பூச் சூடி மணி இயக்கி நறும் புகை எடுப்பர்; அக்காலை பல வேறு வாச்சியங்களும் முழங்கும். பின்னர்ப் பலவேறு நிறமுடைய பூக்களைத் தூவி வழி பாட்டுக் குரிய தெய்வங்களைப் பரவுவர். முருகனை வழிபடுவோர், கையால் தொழுது காலுற வணங்கி,

நெடும் பொருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்தே ஆறமர் செல்வ,
ஆல்கெழு கடவுட் புதல்வ, மால்வரை
மலிகள் மகனே, மாற்றேர் கூற்றே,
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ,
இழையணி சிறப்பின் பழையோள் குழவி,
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர்
சொன்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றம் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேய்
மண்டமர் கடந்தநின் வென்ற டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்,

எனச் சொல்லி முடிவில்,

"நின்அளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் நின்னெடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்"

என்று கூறி வணங்குவர். வேறு சிலர்,

"யாஅம் இரப்பவை,
பொருளும் பொன்னும் போக முமல்ல
நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரேயே"

என்றும், வேறு சிலர்,

யாமும் எம்சுற்றமும் பரவுதும்
ஏம வைகல் பெறுக யாம்எனவே

என்றும் வழிபடுகின்றனர். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுக என்பது தமிழர் வழிபாட்டு முறை. இன்றைய தமிழர், தெய்வ வழிபாட்டில் தாம் அறியாத மொழியில் "முறம் போன்ற காதுகளையுடையவனே," "குடம் போன்ற வயிற்றை யுடையவனே," பெண்ணின்பத்தைப் பெரிதும் விரும்புபவனே," என்று ஆண் தெய்வங்களையும், "மலைபோன்ற கொங்கைகளை யுடையுவளே" "கடல்போன்ற நிதம்பத்தை யுடையவளே" "இடையருத போகத்தை விரும்புபவளே" என்று பெண் தெய்வங்களையும் வழிபாடு என்ற பெயரால் வசை பாடுகின்றனர். இன்றைய வழிபாட்டு அருச்சனைகளில் தெய்வ தூஷணமும் வஞ்சனையும் பெருகியிருக்கிறதேயன்றிப் பூசனையும்வணக்கமும் இல்லை என்றால் அது மிகையாகாது. வடமொழித் தொடர்களைக் கேட்கும் வடமொழி அறிஞர் மனத்தே வெறுப்பும், முகத்தே சுளிப்பும் கொண்டு வருந்துகின்றனர். அரசியல், கல்வி, வாணிபம் முதலிய எல்லாத் துறைகளும் மக்கள் வழங்குகின்ற மொழியிலேயே இயங்கவேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்திருக்கும் இந்நாளில் தமிழருள் சிலர் மொழிவெறி கொண்டு தாம் சமய வழிபாட்டில் செய்துவரும் பெரும் பிழையைத் திருத்திக்கொள்ளாமல் விடாப்பிடியாக இருப்பது சமய வளர்ச்சிக்கு ஆதரவு தருவதாகத் தோன்றவில்லை. வடமொழியறிஞர்க்கும் வெறுப்பைத் தந்து, நாட்டு மக்களுக்கு இருளை விளைவித்துச் சமய உணர் வொழுக்கங்களில் மக்கள் உள்ளத்தில் புறக்கணிப்பை நல்கும் இப்பிழைபட்ட வழிபாட்டு முறையைச் சமய நிலையங்கள் இனியும் நீடிக்க விடுவது அறமாகாது. மேலும் வடமொழி ஆகமங்களோ தமிழ்ச் சமய இலக்கியங்களோ யாதும் எக்காலத்தும் எவ்விடத்தும் வடமொழியில் தான் வழிபாடு நடைபெற வேண்டுமென்ற விதியை வகுத்ததே கிடையாது. வாழ்க்கைத் துறையில் தான் போலிச் செயல் பெருகிற்றென்றால் வழிபாட்டிலும் போலியுரை வளருமானால் தெய்வங்களின் அருள்தான் கைவருமோ என்று உள்ளம் அஞ்சுகின்றது. தெய்வந் தான் துணை செய்ய வேண்டும்.



பாண்டியர் வரலாறு

திருமதி தே. தியாகராஜன், எம். ஏ.

★

"மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும்
அழகான தென்மதுரை"

என்று கூறப்பட்ட வளமிகு தென் மதுரையைத் தலைநகராகக் கொண்டது பாண்டிய நாடு.

இதன் எல்லை,

"வெள்ளாறு வடக்கா மேற்குப் பெருவெளியாந்
தெள்ளாம் புனற்கன்னி தெற்காம்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"

என்பர் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்பதே போல், புகழுடைய சேர, சோழ, பாண்டியரென்ற மூவர் தமிழகத்தை யாண்டனர். இம்மூவரும் ஒரு தாய்ப் பிள்ளைகளெனவும் இவர்கள் நாகரிகத்தின் பிறப்பிடமான தாம்பிரவருணி ஆற்றங் கரையில் கொற்கையைத் தலைநகராக்கி வாழ்ந்தனரென்வும், பின் ஏதோ காரணத்தால் பாண்டியர் அங்குத்தங்க மூத்த இருவரும் கிழக்கும் மேற்கும் சென்று தங்கள் தங்கள் பெயரால் நாடுகளமைத்துக்கொண்டன ரெனவும் வரலாறுகள் சொல்வதாய் ஒப்பிலக்கணத் தந்தை கால்டுவெல் கூறுவர்.*

தமிழக வரலாற்றிலே பாண்டியர் வரலாறு முக்கியம். கலைகள் பல அவர்கள் வளர்த்தனர். இலக்கியம் வளர்ந்தது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர். பண்பாடும் நாகரிகமும் ஓங்கி மதமும் அறிவும் வளர இடந் தந்தது மதுரை.

பாண்டிய நாட்டின் வரலாறறிய வழி யென்ன?

ஒரு நாட்டின் வரலாறறிய உள்நாட்டிலக்கியம், பிறநாட்டிலக்கியம், புதை பொருளாராய்ச்சி, நாணயங்கள் என்ற சான்றுகள் தேவை. வரலாறறிய வெறுங் கர்ண பரம்பரைக் கதைகள் மட்டும் போதா. ஆகவே எழுத்திலே, ஏடுகளிலே, இலக்கியத்திலே, நூல்களிலே, கல்வெட்டுக்களிலே, ஓலைகளிலே, செப்பேடுகளிலே, நாணயங்களிலே உள்ள அகச்சான்றுகள், புறச்சான்றுகள் வேண்டும். பாண்டியர் வரலாற்றைக் காட்டக்கூடிய இத்தகைய சான்றுகள் உளவா?

முதலாவதாக, மதுரை பற்றிய இலக்கியம் எடுத்தால், 'திருவிளையாடற் புராணம்,' 'பெரியபுராணம்' போன்றவையுண்டு. இவற்றுல் வரலாறறிய அதிகப்பயனில்லை.† சங்க நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருத்தொண்டத் தொகை முதலியனவும் உள்நாட்டிலக்கியச் சான்றுகளே.

வெளிநாட்டிலக்கியச் சான்றுகள் பல. அவை விவிலிய நூலின் பழைய ஏற்பாடு, மெகஸ்தனீஸ் போன்றவர்கள் குறிப்பு, பிளினி, பெரிப்ளூசின் ஆசிரியர், இலங்கை

* கால்டுவெல் ஒப்பிலக்கணம், பக். 14.

† 'The Pandyan Kingdom'—திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி. பக். 3.

மகாவம்சம், பிந்தியகாலப் பாண்டியர் பற்றி முஸ்லிம் ஆசிரியர்கள், மார்க்கோபோலோ முதலியவர்களின் குறிப்புகள் முதலியன.

மூன்றுவதாகப் புதைபொருளாராய்ச்சி மூலம் எவை கிடைத்துள்ளன பாண்டியர் வரலாறறிய? ஆனைமலை, ஐவர்மலை கல் வெட்டுக்கள், வேள்விக்குடிச் சாசனம், சென்னைப் பொருட்காட்சிச் செப்பேடுகள் (Madras Museum Plates), சிறிய சின்னமனூர்ச் செப்பேடுகள், பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகள் முதலியன.

நாணயங்களை எடுத்தால், பாண்டியர்கள் காலத்தில் வழங்கும் நாணயங்கள் முந்திய காலப் பாண்டியர்கள் பற்றி அதிகம் தெரிவிக்கவில்லை. கி. பி. 5-ம் நூற்றாண்டிலுள்ள நாணயங்கள் அதிகங் கிடைக்கின்றன. எனவே அவை வெளிநாட்டு வணிகர்க்குப் பயன்படும்படி மதுரையிலேயே செய்யப் பட்டன வெனலாம்.*

பாண்டியர் வரலாற்றைச் சங்க காலம், முதற் பேரரசு இரண்டாம் பேரரசு என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலத்திலும் அரசாண்ட பாண்டியர்கள், அரசாளப்பட்ட நாட்டின் பரப்பு, மக்கள், மன்னர்கள் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி யிவையும் முக்கியம். இவற்றைக் காண ஒவ்வொரு காலத்தையும் அதற்குரிய சான்றுகள், வரலாறு, மக்கள் வாழ்க்கை, வீழ்ச்சி என்ற நான்கு தலைப்புகளிலே அடக்கிப் பார்க்க வேண்டும்.

சங்க காலப் பாண்டியர்களென்றால் எந்தக் காலம்? சங்கம் இருந்ததா? எப்போ தென்றெல்லாம் வினாக்களெழும். இவற்றிற்கு விடை இலக்கிய ஆராய்ச்சியாளர் கூற வேண்டியது. பாண்டியர்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் சங்க நூல்களிலிருந்து தானே காண வேண்டும்? சங்கநூல்களான பத்துப் பாட்டு எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பாண்டியர் பலரைப் பற்றிக் கூறுகின்றன. சிலப்பதிகாரமும் மணிமேகலையுங்கூடக் கூறுகின்றன. எனவே, இப்பாண்டியர்கள் காலம் பழமைதொட்டுக் கி. பி. 300 வரை எனலாம்.

சங்க காலப் பாண்டியர்களிலே வடிம் பலம்ப நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி முதலியோர் குறிப்பிடத்தக்க வர். இன்னும் சில மன்னர்களும் உளர்.

இவர்களிலே ஆரியப்படைகடந்த நெடுஞ் செழியன் ஆரியர்களை வென்று னென்பர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் வயதில் சிறுவனதலால் அவனைச் சேரன், சோழன், இன்னும் ஐந்துவேளிர் இவர்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். இவை யவ னென்றுலென்ன? வீரமும் திறமையும் வயதையா பொறுத்தது? அவனவன் தன் னம்பிக்கையை யல்லவா பொறுத்தது! எனவே அவன் வென்று புகழ் நாட்டினன்.

அக்கால மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர். மன்னரும், மக்களும் வீரர்; வீரப் பெண்டிர் பலர். பாண்டியர் வாணிகச் சிறப்பறிய மதுரைக் காஞ்சி போதுமே. பாணரும் பாடினியரும் இசை வளர்த்தனர். அக வாழ்க்கையைக் களவு கற்பு எனப் பிரித்தனர். தமிழரது பொருளிலக்கணம் நுணுக்கமாயிருந்தது அவரது வாழ்க்கையைப் பின் பற்றி யெழுதியதால்தானே?

அக்காலத்தில் ஆரிய மதம் புகுந்துவிட்டது. இந்திரன், நெடியோன், பலராமன், போன்றதெய்வங்களை மக்கள் வழிபட்டனர். மன்னர்களிலே பாண்டியன் அறிவுடைநம்பி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் முதலி

* Sewell in Journal of Royal Asiatic Society of Great Britain and Ireland (London).

யோரும், அரசி பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப் பெண்டு முதலியோரும் சங்க நூல்களில் கவி பாடியிருக்கிறார்கள்.

சங்க காலப் பாண்டியர்கள் வீழ்ந்ததேன்? பாண்டியன் கானப் பேர் கடந்த உக்கிரப் பெருவழுதிக்குப் பின் ஆண்ட மன்னர் யாவ ரென்று தெரியவில்லை.* கி. பி. 3-ம் நூற் றாண்டில் களப்பிரர் என்பார் கைஓங்கி அது சுமார் மூன்று நூற்றாண்டுக் காலம் நீடித் திருக்க வேண்டும். வேள்விக்குடிச் சாசனம் களப்பிரன் என்ற கலியரசன் வந்தா னென்கி றது.

களப்பிரர் என்பது தனி ஒருவனைக்குறிக்க வில்லை. அது ஒரு போர்ச் சாதியைக் குறிக்கி றது. எப்படி இவர்கள் பாண்டியர்களானார்கள் என்று கேட்கிறீர்கள்? எத்தனை காலம் ஆண்டார்கள்? போன்ற செய்திகள் விபரமாகத் தெரிய வில்லை என்கிறார் வெங்கையா. எவ்வாறு சிம்ஹவிஷ்ணு திடீரெனத் தோன்றிப் பல்லவ குலத்தை நிலைநாட்டினானோ[1] அதே போல் கடுங்கோன் கி. பி. 590-ல் தோன்றி முதலாம் பாண்டியப் பேரரசை நிலைநாட்டினான் என்கிறார் வெங்கையா.

முதலாம் பேரரசிற்குச் சான்று களுண்டா? வேள்விக்குடிச் சாசனம், சென்னைப் பொருட்காட்சிச் செப்பேடுகள், ஆனைமலைக்கல்வெட்டுக்கள், ஐவர்மலைக் கல்வெட்டுக்கள் முதலாம் பேரரசிலுள்ள அரசர்களைப் பற்றி அறிவிக்கின்றன. முதற் பேரரசின் காலம் கி. பி. 590 முதல் 920 வரை. சீன யாத்திரிகர் யுவான் சுவாங் தமது குறிப்பிலே, தாம் காஞ்சியிலிருந்து மதுரை புறப்படும்போது ஒரு பாண்டியன் இறந்ததாகக் கூறுகிறார். இறந்தவன் சேந்தன் என்ற பாண்டியனென நம்ப வழியிருக்கிறது. இப் படிச் சில சான்றுகள்.

கடுங்கோன் களப்பிரரை முதுகு கண்டா னென வேள்விக்குடிச் சாசனம் கூறுகிறது. இவனையும் இவன் மகன் மாறவர்மன் அவனி சூளாமணி பற்றியுமதிகம் தெரியவில்லை. அரி கேசரி மாறவர்மன் மிகவும் திறமையாளன், நெல்வேலியில் வெற்றிபெற்றான்;[2] குறு நாட்டை வென்றான்; நாட்டை விரிவாக்கினான்; பரவர்களை வென்றான்; கேரள மன்னனைத் தோற்கடித்தான்.

இவன் கூன்பாண்டியன் எனக் கொள்ளலாம்.[3] இவன் சிறுத்தொண்ட நாயனார்க்கு இளையவன்; திருஞானசம்பந்தர்க்கு மூத்தவன்.[4] இவனுக்குப் பராங்குசன், நெடுமாறன் போன்ற பட்டங்களுண்டு.

இவனைப் போலவே கோச்சடையன் இரணதீரன் என்பானும் வெற்றி பல கண்டான். பிறகு ஜடிலா, பராந்தகன் என்றழைக்கப்பட்ட வரகுண மகாராஜன் அரசாண்டான். இவன்தான் வேள்விக்குடிச் சாசனம், சென்னைப் பொருட்காட்சி செப்பேடுகள் இவற்றை ஏற்படுத்தியவன். இன்னும் பாண்டியர்கள் பலர் ஆண்டனர். இந்தப் பேரரசின் கடைசி மன்னன் இரண்டாம் இராஜசிம்ஹன். அவனை முதலாம் பராந்தகன் என்ற சோழன் வென்றான்.

முதலாம் பேரரசு நாட்களிலே அரசியலிலே முதன் மந்திரி 'உத்தர மந்திரி' என்றழைக்கப்பட்டான். அரசாங்கத்திலோ படாளத்திலோ இருந்தவர்கள் 'பராந்தக வீரர்', 'திருமலை வீரர்' என்றழைக்கப்பட்டனர். 'ஏனாதி' முதலிய பட்டங்களைப் படைத் தலைவர்கள் பெற்றார்கள். வணிகருள் சிறந்தோர் 'எட்டி' என்ற பட்டம் வழங்கப் பெற்றனர். மன்னர்கள் கல்வி, கலைகளை யாதரித்தனர். அவைத் தலைமைக் கவிஞருண்டு. அவருக்கு மானிய முண்டு.

---

*சதாசிவ பண்டாரத்தார் அவர்கள், பாண்டியர் வரலாறு, பக் 19.

[1] டுப்ரில் கருத்து. [2] வேள்விக்குடிச் சாசனம். பெரியமன்னூர்ச் செப்பேடுகள். [3] திருத்தொண்டத் தொகை, பெரிய புராணம். [4] Epigraphia Indica, Vol III, pp. 277-8. Dubreuil 'The Pallavas' pp. 67-8.

அறநிலையங்கள் வரியின்றிப் பெற்ற நிலங்கள் தானமெனவும், அந்தணர் பெற்றவை பிரமதேயமெனவும் அழைக்கப்பட்டன. கிராமத்தில் சபையுண்டு. பௌத்தம், சமணம் இருந்தன இக்காலத்தில். பிறகு திருஞானசம்பந்தரே ஆயிரக்கணக்கான சமணர் கழுவிலேற்றப்படக் காரணமென்பர். சைவமும், வைணவமும் வாழ்ந்தன. 10-ம் நூற்றாண்டில், வட்டெழுத்துத் தற்காலத் தமிழெழுத்தாக மாறியது.

இரண்டாம் இராஜசிம்மனுக்குப் பிறகு பாண்டிய நாடு பாழடைந்தது. அவனை முதலாம் பராந்தக சோழன் தோற்கடித்தான். முதலாம் பேரரசு கி. பி. 920-ல் முடிவடைகிறது.[1] பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றும் நூற்றாண்டு வரை பாண்டியர் அரசாட்சி யொன்றுந் தெரியவில்லை. இரண்டாம் இராஜசிம்மன் தோல்வி பற்றித் திருவிதாங்கூரிலுள்ள சுசீந்திரத்திலிருக்கும் முதலாம் பராந்தக சோழன் கல்வெட்டு விளக்குகிறது.

ஆனைமலை, குற்றாலம் இங்குள்ள கல்வெட்டுகளும் இவ்வாறே அறிவிக்கின்றன. முதலாம் இராஜராஜ சோழன் பாண்டி நாட்டை வென்றபோது அது தன் பெயரையே இழந்து பெருமை குன்றி இராஜராஜ மண்டலம் அல்லது இராஜராஜப் பாண்டி நாடு எனப் பெயர் பெற்றது.[2] மேலும் பாண்டிநாடு பாண்டிய குலாசனி வளநாடு என்ற பெயரும் அடைகிறது.[3]

சோழர்களிலே இராஜேந்திரனுக்குப் பிறகு சிறந்த மன்னர்களில்லை. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பாண்டியர் தலையெடுத்தனர். வீரபாண்டியன் விக்ரம பாண்டியனென இருவர் சண்டையிட மூன்றாம் குலோத்துங்கன் விக்ரம பாண்டியனுக்கு உதவி செய்யப் பாண்டியர் முன்னேறினர். விக்ரமனுக்குப் பிறகு ஜடாவர்மன் குலசேகரன் காலத்தில் பாண்டியர் இரண்டாம் பேரரசு ஆரம்பமாயிற்று.

பாண்டியர் இரண்டாம் பேரரசுக்காலம் கி. பி. 1190—1313[4]. இரண்டாம் பேரரசிற்குச் சான்றுகள் வெவ்வேறிடங்களில் கிடைக்கின்ற அந்தந்தக் காலத்து அரசர்களின் கல்வெட்டுகள். ஆனால் அவை பாண்டியரின் மரபு விளக்கத்திற்கு உதவவில்லை. கல்வெட்டுக்களில் வரும் ஜாதகக் குறிப்புகள் மரபு விளக்கத்திற்கு உதவி செய்வதற்குப் பதிலாகக் குழப்பத்தை யுண்டாக்குகின்றன.

மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பான் கி. பி. 1216-ல் அரசுக் கட்டிலேறினான்.[5] இவன் சோழரை வென்றான்; கி. பி. 1223-ல் இவன் முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகம் செய்து கொண்டான். பிறகு மற்றுமோர் வீரன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் பல வெற்றிகளடைந்து 'மகாராஜாதி ராஜ பரமேஸ்வரா என்ற பட்டம் சூடினான். பலமுறை வீராபிஷேகம் செய்து கொண்டான். சிதம்பரத்தில் பொற்சபை கட்டினான். சிதம்பரத்திலும், ஸ்ரீரங்கத்திலும் உள்ள கோயில்களுக்குப் பொன் வேய்ந்து 'கோயில் பொன் வேய்ந்த பெருமாள்' என்ற பெயர் பெற்றான்.[6] இடையே பலர் ஆண்டனர். பிறகு மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆண்டான். இவன் காலத்திலேயே மாறவர்மன் விக்ரம பாண்டியன், இரு ஜடாவர்மன் சுந்தர பாண்டியர், ஜடாவர்மன் வீரபாண்டியன் என்றவர்கள் ஆண்டனர்.[7]

---

[1] The Pandyan Kingdom by K. A. Nilakanta Sastri, p. 82.

[2] Annual Reports on Epigraphy (Madras). [3] அரங்காச்சாரியின் 'சென்னை மாகாணத்தின் கல்வெட்டுகள்'—திருச்சி மாவட்டக் கல்வெட்டுக்களில் 691, 538 (பக்கம் 106). [4] The Pandyan kingdom by K. A. N. Sastri, page 212. [5] Kielhorn, Epigraphia Indica, Vol. III., App. II., p. 24.

[6] Annual Reports on Epigraphy—1927, part II, para 4. [7] The Pandyan Kingdom by K. N. Nilakanta Sastri, p. 180.

மாறவர்மன் குலசேகரன் என்பானுக்குத் தன் மனைவிமூலம் பிறந்தவன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன். வேறொரு பெண் மூலம் பிறந்தவன் ஜடாவர்மன் வீரபாண்டியன். குலசேகரன் தனக்குப் பின் அரசாள வீரபாண்டியனைத் தேர்ந்தெடுத்தான். உடனே சுந்தர பாண்டியன் கோபப்பட்டுத் தன் தந்தையைக் கொன்றுவிட்டான். இதனால் வீரபாண்டியன் சுந்தரபாண்டியனைப் பழிவாங்க எண்ணவே உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. சுந்தரபாண்டியன் தோற்றான். இவர்கள் ஒற்றுமையின்மை வடக்கிருந்து வந்த முஸ்லிம் படையெடுப்பிற்கு வசதியாயிற்று. அலாவுத்தீன் கில்ஜியின் தளபதி மாலிக் காபூர் தென்னாட்டு நகரங்களை யெல்லாங் கொள்ளையடித்தான். மதுரைக்குக் கி.பி. 1311-ல் வந்தான். இதன் பின் பாண்டிநாடு பெருமை யிழந்து திருநெல்வேலி மாவட்ட அளவிற்குக் குறுகிப் பின் 16-ம் நூற்றாண்டில் அறவே மறைந்தது.

இரண்டாம் பேரரசுக் காலத்தில் மக்கள் சமூக வாழ்க்கை கவனிக்கத் தக்கது. முதலில் அரசர்கள் வெற்றிமேல் வெற்றி கண்டனர். அந்நாட்களைப்பற்றி வெனிஸ் நகரைச் சேர்ந்த சுற்றுப் பிரயாணியான மார்க்கோபோலோ நன்கு விரிவாகக் கூறுகிறார்.

காயல் துறைமுகப் பட்டினம் பற்றியும் அங்கு நடந்த கடல் வாணிகம் பற்றியும் மார்கோபோலோ பின்வருமாறு கூறுகிறார்: "அரபு வணிகர் தங்கள் குதிரைகளைக் கூட்டங் கூட்டமாய்க் கொண்டு வந்து அதற்குப் பதிலாய்ப் பாண்டியர் பொன்னைத் திரள் திரளாய்ப் பெற்றுச் சென்றனர்.

"நவமணிகளும், பொன்னும்பாண்டிநாட்டில் ஏராளம். முத்துச் செல்வ மிகவுமதிகம். பாண்டிய மன்னர்களிடமிருந்த முத்துக்களின் மதிப்பையும், அளவையும் எந்த மொழியிலும் அளவிட முடியாது. கொற்கையில் முத்துக் குளித்தனர். இந்நாடு 'மாபார்' என்று வெளிநாட்டாரால் அழைக்கப்பட்டது.

"அரசனுக்குப் பல மனைவியர். குழந்தைகளும் பல. அரசனைக் காக்கத் 'தென்னவன் ஆபத்துதவிகள்' என்போர் தம்முயிரையுந் தந்தனர். சதியென்னும் உடன்கட்டையேறும் வழக்கம் பாண்டி நாட்டிலுமுண்டு. மக்களுக்குத் தையற்காரருமில்லை. அவர்கள் தேவையுமில்லை. ஏனெனில் அவர்களுடை அப்படிப்பட்டது. மக்கள் பசுவை வணங்குவர். அதனைக் கொலை செய்யவோ உண்ணவோ மாட்டார்."

மேலேயுள்ள மார்க்கோபோலோ குறிப்புப் போலவே, 'வாசப்' என்ற ஆசிரியரும் பாண்டி நாட்டில் குதிரை வாணிகம் இருந்ததைக் குறிப்பிடுகிறார். பிற்காலத்தில் வந்த முஸ்லிம் ஆசிரியர்களான அமீர் குஸ்ரு, ஜியாவுத்தீன் பார்னி என்பவர்களும் பாண்டியர் வரலாறறியத் தங்கள் குறிப்புகள் மூலம் உதவுகின்றனர்.

பாண்டியர்கள் அரசியல் முறையும் முக்கியமே. அவர்களிற் பலர் பல நாடுகளை வென்று பரந்த நிலத்திற்குரியரானர்கள். அதனை ஆளுதற் பொருட்டுப் பல பிரிவுகளாகப் பிரித்தனர். எடுத்துக் காட்டாகத் திருமல்லி நாடு, செம்பி நாடு, புறமலை நாடு போல்வன. சில நாடுகளையும் கூற்றங்களையுங் கொண்டது வளநாடு. இப்படிப்பட்ட வளநாடுகள் கி. பி. 9-ம் 10-ம் நூற்றாண்டுகளில் இருந்தன. * இப்படிப்பட்ட வளநாடுகள் சேர்ந்தது மண்டலம்.

அரசன் தன்னாட்சிக் காலத்திலேயே பட்டத்திற்குரிய மகனையோ, தம்

* Epigraphia Indica, Vol XXI, Ins. No. 17.

பியையோ இளவரசனுக்குவான்.[1] மன்னருக்கடியில் அமைச்சர், படைத்தலைவர், அரையர் வரியிலார் முதலிய அதிகாரிகள் பணியாற்றுவர். 'காவிதி' 'தென்னவதரையன்' 'பாண்டிப் பல்லவ தரையன்' போன்றன அதிகாரிகட்கு அரசன் வழங்கிப் பாராட்டியுள்ள பட்டங்கள்.[2]

மக்கள் நிலவரி செலுத்தினர். அதனைப் பணமாகவோ, பொருளாகவோ தரலாம். இறை, பாட்டம் என்பன வரியை யுணர்த்துஞ் சொற்கள். 'உல்கு' என்பது சுங்க வரியாகும். நிலத்தை யளந்து வைத்தனர். அவை நன்செய், புன்செய், தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.

கோயில் நிலங்கள் வரி நீக்கப் பெற்று இறையிலி தேவதானம் எனப்பட்டது. மடங்களது வரியிலா நிலத்தை மடப்புறம் என்றழைத்தனர். முற்றூட்டு என்பது புலவர் தானமாய்ப் பெற்ற வரியிலா நிலம். அந்தணர் பெற்ற வரியிலா நிலம் பிரம்மதேயம்.

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைகளுண்டு. நாணயங்கள் பொன், செம்பு இவற்றால் ஆயது. மன்னர்களின் பட்டப் பெயர்களைக் கொண்டு அவை வெளிவந்தன.[3] கிராமத்திலே சபையுண்டு. அதன் உறுப்பினருக்கு வேண்டுந் தகுதியைக் கல்வெட்டுக்கள் கூறும்.[4] கிராம சபையின் உட்கழகங்கள் பஞ்சவார வாரியம், தோட்டவாரியம் முதலியன. பத்திரங்கள் பதிவு செய்ய ஆவணக்களரிகள் உண்டு. மன்னர்கள் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய மதங்களைக் காத்தனர்; ஆனால் முக்கியமாக முன்னவை இரண்டையும் வளர்த்தனர்.

மன்னனிடம் யானை, குதிரை, தேர், காலாள் முதலிய படைகளுண்டு. வாணிகமும் கைத்தொழிலும் நன்கு நடைபெற்றன. அவைபற்றி மார்க்கோபோலோவும் நன்கு குறிப்பிடுகிறார். மன்னர்கள் கல்வி கலைகளை நன்கு வளர்த்தனர்.

இவ்வாறு பாண்டியர்களின் நாகரிகம், கலை, பண்பாடு முதலியன மிகவுயர்ந்த நிலையிலிருந்தன. பாண்டியர் வரலாறு தொடர்ச்சியற்று இடையீடுகள் பலவுள. அவை நீங்கிப் 'பாண்டியர் வரலாறு' முழுவதும் ஒழுங்காக உலகோர் அறியச் செய்ய வேண்டியது வரலாற்றுராய்ச்சியாளர்கட்கு மட்டுமோ, தமிழரனைவர்க்குந் தலையாய கடனன்றோ?

பாண்டியர் புகழ் ஓங்குக! பாண்டிய நன்னாடு வாழ்க!

---

[1], [2] சதாசிவ பண்டாரத்தாரது "பாண்டியர் வரலாறு", பக் 72.

[3] Mysore Gazetteer, Vol II, pp. 1260, 1272.

[4] Epigraphia Indica, Vol. XXII, p. 5.





தமிழர் திருமண முறைகள்

பேராசிரியர் சரவண. ஆறுமுக முதலியார், M A., B.O.L., L.T.,
(Madras Educational Service)
முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, திருப்பராய்த்துறை

★

(உரிமை ஆசிரியர்க்கே)

பிறநாடுகளெல்லாம் அறியாமை இருளில் கிடந்து உழன்று கொண்டிருந்தபொழுது, இருநில உலகின் பெருநிலப் பரப்பில் "கல் தோன்றி மண் தோன்றுத, வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகமிக முற்பட்ட பழங்காலந் தொட்டே கல்வி, கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் தமிழ்மக்கள் மிக மேம்பாடெய்தியிருந்தனர் என்பது வரலாற்றறிஞர் கண்டறிந்த உண்மையாகும். அகம், புறம் என இருகூருக இயங்கும் தம் வாழ்க்கை முறைகளில் மிகவுயர்ந்த கொள்கைகளையும், குறிக்கோள்களையும் கொண்டு விளங்கினர் தமிழ்மக்கள். அவ்விரு கூறுகளுள், முதன் முதல் வாழ்க்கைத் துணைவர்கள் ஒருவரை ஒருவர் களவிற்கண்டு ஒன்றுபட்ட களவியல், அதன் வழித்தாகிய கற்பியல், அதில் ஆற்றுப் படுத்தும் மணவியல், மணவாழ்க்கையின் நிலைக்களமாகிய இல்லறத்தின் நல்லறம் ஆகிய இன்னோரன்ன வாழ்க்கை முறைகளைச் சங்கத்துச் சான்றோரிலக்கியங்களிலும், அவற்றிற்கு முற்பட்டு ஒரோவழிக் காணலுறும் பாடல்களிலும், அவற்றின் வழி வந்த ஒல்காப் புலமைத் தொல்காப்பியனரின் பொருளதிகாரப் பகுதிகளிலும் நாம் விளக்கமாக அறியலாம். திருமண முறைகள் இலை மறைகாய் போல் இவற்றுள் அமைந்திருக்குமாற்றைத் தொல்காப்பியர் காலமுதல், இடைக்காலம் (12-ஆம் நூற்றாண்டு) முடிய ஒருவாறு காண்போம்.

கணவனும் மனைவியுமாய் வாழத் தொடங்கும் நிலைக்குத் திருமணம் என்ற பெயர் வைத்தமை எண்ணி மகிழ்தற்குரியதாகும். திருவென்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள்பொதிந்த சொல்லாகும். சுருங்கக் கூறின், "கண்டோரால் விரும்பப் பெறும் தன்மை விளங்குமிடமெல்லாம்" திருவும் பொலிகின்ற தென்று சொல்லலாம். மணமென்னுஞ் சொல் நறுநாற்றத்தைக் குறிக்கும். பெரும்பாலும் இயற்கையில் மணங்கமழ்வது மலர்களேயாகும். அம்மலரும், வைகுனையாய் - சிற்றரும்பாய், வீயாய் இருக்குங்கால் மணஞ் சிறப்பதில்லை; மலரும் நிலையில் - பெரும் போதாய் நிற்கும்போதுதான் மண மிகுந்து விளங்குகின்றது. காய்த்துக் கனிந்து விளங்க மணமிகும் போதுப் பருவமே சிறந்ததாகும். அங்ஙனமே மக்கள் வாழ்விலும் குழவியாய், இளைஞனாய், நரைமூதாளனாய் இருக்கும் நிலை பெருஞ் சிறப்புடையதன்று. மணந்து மகப்பெற்று நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லன புரியச் சிறந்து நிற்பது மணப் பருவமேயாகும். இப்பருவத்தில், மலரின்கண் மணம் வெளிப்படுவதுபோல் மணமக்களின் மனத்தகத்து அன்பு மலரும். இச்சிறப்புணர்ந்தே தமிழ்மக்கள், இந்நிகழ்ச்சி (மணவினை)யை மணமென மனமுவப்பக் கூறினர். மணமென்பது மணமக்களின் மனமொத்ததாகும். வாழ்வு முழுவதும் மணம் பெற்றுத் திகழ்வதற்கு ஏதுவான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டமை ஏற்புடைத்தாகும்.

தமிழ்மக்கள் தம் வாழ்க்கையை, அகம் புறம் எனப் பகுத்துள்ளனர். இது 'தமிழின்

துறைவாய் நுழைந்தனையோ' என்ற திருக் கோவையா ரடிக்குப் பேராசிரியர், "தமிழின் துறைகளாவன ஈண்டு அகமும் புறமும்" என உரைத்தமையாலும் அறியலாம். அப் பண்பட்ட நிலையில், அப்பகுதிகளுக்குரிய இலக்கணத்தையும் வரையறுத்து வாழ்ந்து வந்த பெருமை தமிழ்மக்கட்கே உரிய தனிச் சிறப்பாகும். ஏனைய மொழியினர் அறம் பொருள் இன்பம் வீடெனப் பகுத்த வெல் லாம் இவ்விரண்டனுள் அடங்கி நிற்கின் றன. உலக நிகழ்ச்சிகளையெல்லாம் உன்னிப் பார்க்கும்போது அவை காதலும், போரு மாக-ஈரச்சுவையும் வீரச்சுவையுமாக-நிற்கக் காண்கின்றோம். இதனையே நம்மவரின் அகம் புறம் என்ற பாகுபாடு உணர்த்தி நிற் றல் ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகும். வீரத்திற்கும் அன்பே அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே, அகம் புறமென அமைந்து கிடக்கும் தமிழினத்தின் வாழ்வு அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமை அறிந் தின்புறத் தக்க தாகும்.

இனி, தமிழர் தம் வாழ்க்கைப் பிரிவிற்கு அகம் புறம் எனப் பெயரிட்டதன் காரணத் தைக் காண்போம். அன்பு நெறியில் முதிர்ந்த ஒரு தலைவனும் தலைவியும் கூடி இன்புற்று வாழும் வாழ்வெல்லாம் அகம் எனப்பட் டது. இதனை, "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக் குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப் படாததாய்," "உள்ளறிந்ததன்றி மற் றிவ் வூரறிந்ததில்லையே" என்றபடி யாண் டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொரு"ளாதலானும், முத்திப் பயனுய பேரின்பத்தையும் தன்னகத்தே கு றி ப் பா ய்க் கொண்டுள்ளதாகலானும் தொல்லாணைத் துறைபோகிய நல்லாசிரியர் இதனை அகம் என்றனர். அன்றியும் இஃது,

"சொற்பால் அமிழ்திவள் யான்சுவை
யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று
நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்"

என்ற கோவையார்ப் பகுதியானும் இதற்கு, "நல்வினைத் தெய்வம் களவின்கட் கூட்ட, அமுதமும் அதன்கட்கரந்து நின்ற சுவையு மென்ன, என்னெஞ்சம் இவள் கண்ணே கரந்து ஒடுங்க, யானென்பதோர் தன்மை காணுதொழிய, இருவருள்ளமும் ஒருவேமா மாறுகரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல் லது) யாவரான் அறியப்படுமென்று மகிழ்ந் துரைத்தான்" எனப் பேராசிரியர் உரைத்த உரைப் பகுதியானும் உணரப்படும். இவ் வக வொழுக்கம் ஒழிந்த ஏனைய வாழ்க்கை யின் முடிந்த பேருகிய வீடு பேறும், அதற் குக் கருவியாய அறஞ்செயலும், அதற்கான பொருளும் அவற்றிற்கிடையூறு நேருங் கால் ஆற்றும் போரும் பிறவுமெல்லாம் புறம் எனப்படுகின்றது.

அகத்தினைத் தொல்காப்பியம் களவு கற்பு எனப் பகுத்துரைக்கின்றது. அவற்றுள் களவு, "இன்பமும் அறனும் பொருளு மென்றுங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற், காமக் கூட்டமெனவும், அன் பினைந்திணைக் களவெனப்படுவது" என வும், "களவு கற்பெனக் கண்ணிய ஈண்டை யோர், உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன" எனவும் அன்பின் அடிப்படையாக அகத் துட் பிறப்பதொன்றும். இவ்வன்பு ஒழுக்கத் தில் ஈடுபடும் தலைமக்கள் அதற்குயிர் நிலை யாய அன்பால் ஒத்திருப்பர். அன்றியும்,

"பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென"ப்

பத்து வகை ஒப்புமைகளைக் கொண்டு விளங்கும் தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும், அடுப்பவுமின்றி ஊழ்வகை யால் தாமே எதிர்ப்பட்டுக் கலக்கும் முறையே தலையாயதெனப் புலனெறி வழக் கத்தில் பயிலும். "பிறர்க்குரித்தென்று

இரு முதுகுரவரால் கொடை எதிர்ந்த தலை வியை அவர் கொடுப்பக் கொள்ளாது, இரு வரும் கரந்த உள்ளத்தொடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த''தால் களவாயிற்றென்பர் நச்சி னர்க்கினியர். மேலும், ''ஒத்த அன்பின ராய் இன்பத்துறையில் நின்று இல்லறம் புரிந்தாரைப் பின்னர் வீடு பேற்றின்பம் உறு மாறு வஞ்சித்துக் கொண்டு சென்று நன் னெறிக்கண் நிறீஇனமையால் களவியல்'' ஆயிற்றெனக் காரணங் காட்டுவர் இறைய னூர் அகப் பொருளுரையாசிரியர். அன்றி யும், இருவர் உள்ளமும் தத்தமது ஒழித்து, மற்றவர் இடத்தை அவர் அறியாது கொள்ளை கொண்டு தங்குதலான் இவ் வொழுக்கம் களவெனும் பெயர் பெற்றது பொருத்தமாகின்றது. எனவே, தமிழ் நாட் டில் குலம் தொழில், உயர்வு தாழ்வு முத லிய வேறுபாடுகளைக் கொள்ளாது, உள்ளத் தெழுந்த அன்பினால், எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் கலந்து, களவு நெறி நின்று பின் கற்பு நெறி நிற்பர் என்பது விளங்குகின்றது. இதனை, ''யாயும்யாயும் யாரா கியரோ'' எனத் தொடங்கும் குறுந் தொகைச் செய்யுளால் அறியலாம்.

கற்பென்பது கணவனும் மனைவியுமாய் மணம் புணர்ந்த மக்கள் தாம் மேற்கொண்ட இல்லறத்தை நல்லறமாக நடாத்தும் ஒழுக்க மாகும். கற்பென்பது கல்லென்னும் பகுதி யில் தோன்றிக் கற்பித்தவாறு நடத்தல், கற்ற படி நடத்தல் என்னும் பொருள் தந்து நிற் கின்றது. பட்டறிவும் தெளிவுங்கொண்ட இரு முதுகுரவரும் சான்றோரும், ''வையத்து வாழ்வாங்கு வாழ்க'', ''பெற் றோன்வெட்கும் பிணையை ஆகுக'', ''தற் காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்வில''ளாய் வாழ்கவெனக் கற்பித்தவாறு வாழ்க்கையை நடத்தல் கற்பாகும். இதனையே, ''கற் பெனப்படுவது சொற்றிறம்பாமை'' என்ற தொடரும் விளக்குகின்றது. இக்கற்பொழுக் கம், ''கற்பெனப்படுவது கரணமொடு புண ரக் கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தி யைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'' எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது.

ஒருவனும் ஒருத்தியுமாய்க் களவில் ஒழு கிய தலைமக்கள் பலரறிய மணந்துகொண்டு ஒழுகும் ஒழுக்கம் கொள்ள வேண்டிய தென்னை? செம்புலப் பெயல்நீர் போல் அன் பிற் கூடி இன்பந்துய்த்து வாழ்வது இயல்பு; –அங்ஙனமே வாழ்ந்தும் வந்தார்கள். மனம் குரங்கெனப் படுதலின், கரிபொய்த்தலும், சூள் பேணாது துறத்தலும் ஒரோ வழி நடத்தலும் கூடும். அந்நிலையில் ஊர்மக களால் எட்டியும் சுட்டியும் இழிக்கப்படும். சிலரும் பலரும் கடைக்கண்ணேக்கி மூக் கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி மறுகில் அம் பல் தூற்றவுமாகும். எனவே பலருமறிய, கொடுத்தற்குரியோர் கொடுக்கக் கொள்ளற் குரியோர் கொள்ளும் நிலை ஏற்பட்டதென்க. அன்றியும் ''பிரிவின்றியைந்த துவரா நட் பொடு, இருதலைப் புள்ளின் ஒருயிராய்'' ஒழுகிய தலை மக்கள் தங்கள் நலனையே யன்றிச் சமூக நலனையும் நோக்கி வாழ வேண்டிய இல்லறத்தை ஏற்குங்கால் அச் சமுதாயத்து மக்கள் அனைவரும் அறியும் வகையில், அவ்வாழ்வைத் தொடங்குதலும் ஏற்புடைத்தாகும். இருமுதுகுரவரும், சுற்ற மும் நட்பும், உற்றோரும் மற்றோரும் வாயார உண்டு, மனமார வாழ்த்தித் தொடங்கும் நல்வாழ்வே சிறக்கும் என்ப தாலும், களவு கடந்து கற்பொழுக்க வாழ் வும், அதன் தொடக்கமாய திருமணமும் வேண்டப்படுவதாயிற்று. களவு கற் பெனும் கைகோள் இரண்டனுள் களவின் வழி வந்த கற்பொழுக்கம் சிறப்புடையது. இதனை, ''உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர் தீர்காட்சிக் கற்புச் சிறந் தன்று'' என்ற தொல்காப்பிய நூற்பா நுவல்கின்றது.

கற்பாவது கற்பித்தபடி நடத்தலென்ற கவே, கற்றற்குரியன யாவை என நோக்கு

தல் வேண்டும். இதனைத் திருவள்ளுவர் "வாழ்க்கைத் துணை நல"த்தில் இனிதியம்பு கின்றார். இல்லறத்தின் கடமையாக, இளங் கோவடிகளும், "அறவோர்க் களித்தலும், அந்தண ரோம்பலும், துறவோர்க்கெதிர் தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்" என எடுத்துக் காட்டுகின்றார். அத்தகு வாழ்வை, "விருந்து புறந்தரூஉம் பெருந்தண்வாழ்"வெனப் போற்றுகின்றார். இல்லறக் கடமைகளை, "அருந்தும் மெல்ல டகு ஆரிட அருந்து மென்று அழுங்கும், விருந்து கண்டபோது என்னுறுமோ என வெதும்பும்" என்னுமடிகளில் கற்புக்கரசி யாய சீதையின்வாயிலாய்க் கம்பநாடர் சுருங் கச் சொல்லி விளங்கவைத்தமை காண்க.

கற்பு என்றவுடனே அது பெண்டிர்க்கே உரியதென நினைத்து விடுகின்றனர். அஃது ஆடவர்க்கும் ஒப்ப உரியதும், இன்றியமை யாததும் என்பதை நம் அறநூல் உறுதியாக அறுதியிட்டுரைக்கின்றது. பிறர்மனை நோக் காத பேராண்மையையும், இல்லிகவா நல் லியல்பையும் வற்புறுத்துவதுடன், வரை வின் மகளிர், பெண் வழிச் சேறல் முதலிய வைகளைத் தவிர்த்தலும் ஆடவர்க்குக் கற்பு வேண்டுமென்பதை வலியுறுத்தா நிற்கும். தொடக்கத்தில் தலைவன் தலைவியர் தாமே கடிமணம் புரிந்து வாழ்ந்து வந்தவராதல் வேண்டும். அத்தகுவாழ்வில், இணக்கம் நீங்கிப் பிணக்கமும், நல்லறம் நீங்கி அல்ல றஞ் சேர்தலும் நிகழ ஏதுவாக, அன்பு மறந்து, அறக் கழிவு ஒரோவழி நேர்ந்திருக் கவும் கூடுமாதலால், ஆன்றோர்கள் களவில் ஒழுகிய மக்கட்குத் திருமணம் என்ற சடங்கு நிகழ்ச்சியை ஏற்படுத்திப் பலரும் அறிய இணைந்து வாழும் முறையை ஏற் படுத்தினர். இக்கால நம்பிகளும் நங்கை மார்களும், பெற்றோர்களும், சிறப்பாகக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியரும் இதைக் கருத வேண்டும். தனித்துப் பேசிப் பழக வாய்ப்புக்களுள்ள இவர்கள், 'கண் டதே காதல்' என்னும் போலிப் புறக் காதல் அல்லது விலங்குணர்ச்சியாகிய காம உணர்ச்சி வயப்பட்டுத் தடுமாறிக் கூடிப் பின் பிரிந்து சென்று பாவப் படுகுழியில் வீழத்தக்க நிலையில் உள்ள இவர்கள் பலரு மறியத் திருமணம் செய்து கொள்ளும் முறையைக் கருதிச் செய்துகொள்ள வேண் டும். அப்படித் தமிழர் அனைவரும், ஒரே முகமாக வேறுபாடு மாறுபாடு இன்றி, தோட்டி முதல் தொண்டைமான் வரை யில், தமிழ் மரபு வழுவாமல் மேற்கொண்டு ஒழுகத்தக்க ஒரே ஒரு திருமண முறை வகுக்கப்பட்டு வழங்கி வரும் நாளே தமிழ கத்தின் நன்னாளும் பொன்னாளும் ஆகும். களவு வாழ்வியலில் நாளடைவில் ஊழல்கள் புகுந்த காரணத்தினாலேயே கற்புத் திருமண முறை சான்றோரால் வகுக்கப்பட்டதைப் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்னும் தொல்காப்பிய நூற்பாவால் நன்குணரலாம். இதனை அடுத்து வரும், நூற்பாக்களிற் பயி லும், 'மேலோர்' 'கீழோர்' போன்ற தொடர்கட்குச் சிலர் தமிழ்ப் பண்பாட் டுக்கு மாறுபட்ட பொருந்தாவுரை கூறி வந்துள்ளனர். அவருரைத்த மாறுபட்ட வேறுபட்ட உரையெல்லாம் நாவலர் நாட் டார், டாக்டர் பாரதியார், அறிஞர் மாணிக்க நாயக்கர், தமிழ் மலையாம் மறை மலையடிகளார் முதலிய பைந்தமிழ்ப் பாவ லர்கள் பகர்ந்த உரையாகிய கதிரவன்முன் பனியெனச் சிதறுண்டன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே, சங்கத்துச் சான்றோர்களின் செய்யுட் களுக்கு முன்னரே, திருமண முறைகள் இருந்திருக்க வேண்டும். அது பற்றியன்றே தொல்காப்பிய இலக்கண நூலும், பொருளிலக்கண வரையறை செய்யும் போது, மணமுறை பற்றிய குறிப்புக் களும் காணப்படுகின்றன. கடைச் சங்க காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டு – அதன் இறுதிக் காலம்) திரு

மண முறை இருந்ததெனக் குறிப்பா யுணர்ந்த போதிலும், அது எவ்வாறு நிகழ்ந் தது எனத் தெளிவாயுணர்வதற்கேற்ற வெளிப்படை விவரங்கள் கிடைத்தில. எனி னும் ஒரு சில பாடல்கள் குறிப்பாகப் புகலு வதைத் துணை கொண்டு அறிவனவற்றைக் காண்பாம்.

அக்காலத்து, இக்காலம் போன்று திரு மணத்தை நடத்திவைப்பதற்கெனத் தனிப் பட்ட ஒரு நடத்துபவன் (புரோகிதன்) இருந்ததாகத் தெரியவில்லை. பெற்றோரும் உற்றோரும், உடனிருந்து நடத்தி மகிழ்வ தாகவே காண்கின்றோம்.

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெரு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தகர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி ஆகெனத் தமர்தர"

என்னும் 86-ஆம் நெடுந் தொகைப் பாட லில், திருமண முறைக் குறிப்புக்கள் சில உள. உழுந்து முதலியன இட்டுப் படைத்த உணவுத்திரள் நிறைந்திருக்க, நல்ல காவ ணம் அமைத்து, புது மணல் பரப்பியிருக்கத் திருவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டுப் பூமாலை கள் பொலிவுறத் தொங்கவிடப்பட்டுள்ளன. தீக்கோள்கள் நீங்கி விளங்கும் நன்னாள். காரிருள் அகன்ற காலை நேரம். நன்னீர்க் குடங்களேந்திய முதிய பெண்டிர் கலகல வெனப் பேசிக்கொண்டு, அவற்றை முன் னும் பின்னுமாக முறையே கொண்டு வந்து தர, மகப்பேறெய்திய மங்கல மகளிர் நால் வர் அவற்றை வாங்கி, நெல்லும் மலரும் தூவி, மணமகளை நன்னீராட்டிப் பின்னர், கற்பினில் வழாது பொற்புடன் விளங்கி, பெற்றோர் விரும்பும் பெற்றியை யாகென வாழ்த்துகின்றனர். பின்னர்ப் பெற்றோர், 'நீ பேரிற் கிழத்தியாகுக' என வாழ்த்தி மண மகன்பால் கொடுக்கின்றனர். இம்முறையே குறிப்பாக இப்பாவிற் பயிலுகின்றது. அன்றி யும்,

"மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்
சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப்
பேணிப்
புள்ளுப் புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் புணர்ந்து, கடவுட் பேணிப்
படுமென முழவொடு பருஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று
.....
மழைப் பட்டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பில் பெயர் வியர்ப்பாற்றி
தமக்கிந்த தலைநாள்" (அகம். 136)

என்ற அகநானூற்று அடிகளாலும் இது ஒருவாறு வலியுறுகின்றது. இவற்றுள் திருமணத்தின் போது மணமக்களை நன்னீ ராட்டி, நலம்பெற அணிவித்து மகிழ்வர் என்பதும், மணவினை மனை நன்குக ஒப்பனை செய்யப்பட்டு நிற்கும் செய்தியும் தெளிவா கின்றன. மங்கல வாழ்த்தில், மணமனையில்,

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்"

விளங்குவதை இளங்கோவும் எடுத்தியம்பு வது காண்க. மணமனையில் மல்கும் மங்கல நறுமணச் சூழலை,

"சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
.....இடித்த சுண்ணத்தர்,
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குடை நிரையினர்....."

என்ற சிலப்பதிகார அடிகள் விளக்குகின் றன. 'மணவில் கமழும் மாமலைச்சாரல்'

என மலைபடுகடாமும் (151), மணமனை கமழும் கானம் என அகநானூறும் (107) உவமை முகத்தானும் எடுத்து ஓதுகின்றன. மணவினையிற் பங்குகொள்ளும் பெண்டிரில் மங்கலப் பெண்டிரே சிறப்பாக வருவர் என் பதை முன்னர்க் கண்டோம். புறநானூற்றி லும், 'ஈகை அரிய இழை அணி மகளிர்' என வரும் பகுதியாலும் மணவினையில் மங்கலப் பெண்டிரே ஈடுபடற்குரியர் என்பது புலனாகின்றது. "இழையணி" என்ப தற்கு மங்கலப் பெண்டிற்குச் சிறந்த அணியாய 'தாலி' என உரை வகுக்கின்ற னர். ஈகை அரிய என்பதனைக் கொடுத்தற் கரிய எனக்கொண்டு, தாலியின் தனிப் பெருஞ் சிறப்பைக் கூறியதாகவும் கொள்ள லாம். ஈகை என்பதனைப் பொன்னுக்கிப் பொன்னாலாகிய தாலி என்றும் புகலலாம். "ஈகைவான் கொடியன்னாள்" என்பதில் ஈகை பொன்னைப் பொருளில் பொருந்தியது காண்க. எப்பொழுது தாலி கட்டப்படும் என்ற விவரங்களுக்குச்சான்றுகள் காணப் படுவதில்லை. இது இன்னும் ஆராய்தற் குரியது.

இனி, திருமணம் மணமகள் இல்லத்தி லேயே நிகழும். ஒரோவழி மணமகன் மனை யிலும் நிகழுவதுண்டு. உடன்போக்கிற் குப் பின்னிகழும் திருமணம் தலைவன் இல் லில் நிகழும். அவ்வாறு நிகழினும் பின் னர்த் தலைவியின் பெற்றோர் மீண்டும் தம தில்லில் தமர் அறிய மணம் புணர்ப்பர் என்றும் அறியலாம்.

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
சொல்லின், எவனே மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே."
(குறுந்தொகை, 399)

என்னும் செய்யுளில் இது குறிக்கப்படு கிறது என்பர் அறிஞர்.

எனவே, கடைச் சங்ககாலத்தில், புரோ கிதன் புகுதலின்றியே, மணமக்கள் தம் பெற்றோரும் மற்றோரும், உற்றோரும் உற வினரும் புடைசூழ மணவினையை மகிழ்ந் தாற்றி வாழ்ந்தனர் என அறிகிறோம். ஆனால், காலப்போக்கில் தமிழகத்தில் பிற பண்பாடுகள் வந்து மலிந்து கலப்புற, மண முறையிலும் இடைப்பிறவரல்கள் வந்துற் றன. வரலாற்று முறையில் காய்தல் உவத்தல் களைந்து ஆராய்வார், காலத்திற் குக் காலம், படிப்படியாகத் திருமண முறை மாறுபாடுற்று வந்துள்ளதை நன்கு அறிவர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி யில் எழுந்த இளங்கோவடிகளின் விளங்கு காவியத்தில், தமிழ்த் திருமண முறையில் பெருமாற்றம் தலைகாட்டத் தொடங்கியுள் ளது. இருந்திபடைத்த பெருங்குடி வணிகர் மரபில், யானையின்மீது மகளிரை ஏற்றித் திருமண நிகழ்ச்சியை ஊருக்கு அறிவிக்கும் வழக்கம் வருகின்றது.

"யானை எருத்தத்து அணியிழையார் மேலீஇ
மாநகர்க் கீந்தார் மணம்"

எனச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. மேலும் நடத்துவிப்போன் ஒருவன் மண வினையில் முதன் முதல் தலைகாட்டுகின்றான். எரிஓம்பி அதனை வலம் வரும் சடங்கு போன்றவையும் தோன்றியுள்ளன. இதனை,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்
பென்னை"

என்ற அடிகளால் அறியலாம். இனி, இடைக்காலத்து 9–10 நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு இறுதிவரை, தமிழ் நாட்டில் பல தமிழ்க் குடிகளிலும் நிலவி வந்த தமிழ்த் திருமண முறைகளை அக் காலத்தெழுந்த காவியங்களாகிய சிந்தா மணி, பெரிய புராணம், கம்பராமாயணம் ஆகிய காவியங்களிற் கவினுறக் காணலாம். இவை சங்ககால முறைக்கு முற்றிலும் மாறு பட்டவையாகப் போகின்றன. "யாயும் யாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், நீயும் யானும் எவ்வழி அறிதும்" என முன்பின்னறியாது, பிறர்

கொடுப்பவும் அடுப்பவும் இல்லாது, களவியலில் மக்கள் நின்றது போக, பெற்றோரே முன்பின்னறியாத மணமக்களை ஒன்று கூட்டுவிக்கும் செய்திகளை இவ்விடைக் காலக் காவியங்களிற் காணலாம். திலகவதியாரின் பெற்றோர்களும், கலிப்பகையாரின் பெற்றோர்களும் இருவரையும் ஒன்றுவிக்கக் குலம் பேசிக் குணம் பேசிப் பார்க்கவில்லையா? இவ்வாறு களவியலருகித் திருமணமெல்லாம் கற்பிலேயே தொடங்கி மாறுபாடுற்ற இடைக்காலத்தில், 'தமிழ்நாட்டு மணமுறை களவியல் வழிக்கற்பியலாகும் என்பதே' என்பதை வற்புறுத்தக் கம்பர் முதனூலினின்றும் முரணி, இராமனும் சீதா பிராட்டியும் ஒருவரை ஒருவர் திருமணத்துக்கு முன்னரே கண்டு காதலுள்ளங்களாற் கலந்தனர்;

"உண்ணவும் நிலைபெரு துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும்
நோக்கினள்",

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்,
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்"

என்றெல்லாம் புனைந்து கூறியிருப்பது தமிழ் நாட்டு மரபுக்கு ஏற்றதேயாகும். எனினும், திருமணமுறை நிகழ்ச்சிகளில் புதிய சடங்குகளாகிய தாரை வார்த்தல், எரிஓம்பல், எரி வலம்வரல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலியன கம்பரில் காணப்படுகின்றன. இடைக்காலத்து நிலவிய மணமுறை நிகழ்ச்சிகளைப் பெருங்கதை, மணநூலாகிய சீவக சிந்தாமணித் திருமணங்கள், பெரிய புராணத் திருமணங்கள், கம்பராமாயணத் திருமணக் காட்சிகள் முதலியவற்றில் நுணுகி யாராய்ந்துணரலாம். விவரங்களை ஆண்டுக் கண்டு கொள்க.





மன்னர் பொறுப்பு மக்களிடம்

திரு. எம். பக்தவத்சலம், பி. எ., பி. எல்.

★

மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன் விழா கொண்டாடும் இந்நன்னாள் தமிழ்மொழியின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கும் புனித நாள். அறுபது ஆண்டுகளுக்கு முன், கடமை ஆர்வமுள்ள தமிழ்ப் புலவர்களாலும், கலை வள்ளல்களாலும் துவக்கப்பட்ட இச்சங்கம், பயனுள்ள தொண்டு செய்திருப்பதைத் தமிழகம் நன்கறியும்.

தமிழ் மொழி, கலை, பண்பாடு, வரலாறு, மொழி இயல் முதலிய பல்வேறு துறைகளில் விரிந்த ஆராய்ச்சி நடத்தப் பல வருஷங்களாக இச்சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், விருதுகள் முதலியன இச்சங்கத்தின் ஆதரவில் வெளியாகியுள்ளன. தமிழ் ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்த பெருமை இச் சங்கத்தைச் சாரும். அது தவிர, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறந்த தமிழ் அறிஞர்களை எல்லாம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தி, அவர்களின் தமிழ்ப் பணிக்கு ஊக்கம் அளிக்க முதன் முதலாக முயன்றதும் இச்சங்கமே. சிறப்பாக, மாணக்கர்களிடையே தமிழ்ப் பயிற்சியைப் பரப்பும் நோக்கத்தோடு, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் விசேஷப் பரீட்சைகள், சிறந்த பலன் அளித்து வருகின்றன. உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றில் படிக்கும் நூற்றுக்கணக்கான மாணக்கர்கள் தாமாகவே முன்வந்து இப்பரீட்சைகளை எழுதுகின்றனர். இதற்குக் கட்டாயமோ, விசேஷ சலுகையோ ஒன்றும் இல்லை. அப்படி இருந்தும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மகிழ்ச்சியோடு இந்தப் பரீட்சைகளை எதிர்நோக்கி யிருக்கின்றனர்.

தவிர, பல்கலைக் கழகத்தில் தமிழுக்கென விசேஷப் பட்டமோ, விருதோ இல்லாத காலத்தில், தமிழ்ப் புலவர்களுக்கு ஒருவிதப் பரீட்சை வைத்து, "பண்டிதர்" என்ற விருதை அளிக்க, மதுரைத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்தது. பொன் விழா கொண்டாடும் இந்நேரத்தில், இந்தச் சாதனைகளை மிகவும் மகிழ்ச்சியோடு நினைவூட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் தமிழ் முழக்கம் கேட்கப்படுகின்றது. தமிழின் பெருமை, தமிழின் பழமை, தமிழ் நாட்டின் இலக்கிய வளம் முதலியன விளக்கமாகவும் அழகாகவும் அடுக்கடுக்காகவும் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆனால், சுமார் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னே, தமிழ் மொழியைப் பற்றிக் கவலை கொண்டவர்களோ, அதன் வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர்களோ, மிகச் சிலரேயாவர். அந்நியர் ஆட்சியின் காரணமாகவும், ஆங்கில மொழியின் மீதிருந்த மோகத்தின் விளைவாகவும், தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வந்தது. "தமி

ழில் பேசுவதும், கடிதம் எழுதுவதும்கூட நாகரிகக் குறைவு'' என்ற நிலை, அப் பொழுது இருந்தது. அத்தகைய காலத்தில், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கென ஒரு சங் கத்தை அமைத்து, அதற்கான ஆக்கப் பணி களில் ஈடுபட்டவர்களுக்கு எத்தகைய மனத் துணிவும் இலட்சிய வேட்கையும் இருக்க வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. வெள்ளம் புரண்டோடும் ஆற்றில் எதிர் நீச்சு அடிப்பது போன்ற மிகக் கஷ்டமான இந்த வேலையை, அக்காலத் தமிழ்த் தொண்டர்கள் மேற்கொண்டனர். அவர்கள் செய்த சேவையின் விளைவாகத் தான், தமிழ் நாட்டில் தமிழ் மொழி மறு மலர்ச்சி பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இத் துறையில் பணியாற்றிய எல்லாப் பெருமக் களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நம்முடைய வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரி வித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக் கிறோம்.

தமிழ் மொழியின் பழம் பெருமை பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. ஏனெனில், அதைத் தெரியாதவர்கள் இங்கே ஒருவரும் இல்லை. தவிர, அந்தப் பழம் பெருமை யையே பேசிக்கொண்டிருப்பதில் பய னில்லை. ''மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை'' என்பது பாரதியார் வாக்கு. எனவே, நாம் இன்று செய்ய வேண்டிய கடமை என்ன என்பதைப்பற்றி ஒரு சில கருத்துக் களை உங்களிடையே சமர்ப்பிக்க விரும்பு கிறேன். நம் பழம் காலப் பெருமை, நம் எதிர்கால நல் வாழ்வுக்குப் பலம் பொருந்திய அஸ்திவாரமாக அமைய வேண்டும்.

''இலக்கியம்'' என்பதற்குப் பலவிதமான இலக்கணங்கள் கூறுவார்கள். ஆனால் அவற்றுள், ''வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே இலக்கியம்'' என்பது, பெரு வாரியான அறிஞர்களின் முடிவு. இக்கண் ணோட்டத்தோடு பார்த்தால் தமிழ் இலக்கி யத்தின் தனிப் பெருமை நன்கு விளங்கும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் னிருந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை யையும், எண்ணக் குவியல்களையும் எடுத் துக் காட்டும் கண்ணாடிகளாக பண்டைத் தமிழ் இலக்கியங்கள் விளங்குகின்றன. சங் கத் தமிழ் எனப்படும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு ஆகியனவும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய முப்பெரும் காப்பியங் களும், மக்கள் வாழ்வை, இலட்சியக் கண் ணோட்டத்தோடு நம் கண்ணெதிரே எடுத் துக் காட்டும் அமர சிருஷ்டிகளாக விளங்கி வருகின்றன.

''மொழி'' என்பது மக்களின் வாழ்க்கை யோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண் டது. மக்கள் வாழ்வில் ஏற்படும் வளர்ச் சியோ, வீழ்ச்சியோ அவர்கள் பேசும் மொழியை அதிகமாகப் பாதிப்பது இயற்கை. எனவே, நம்முடைய நாட்டின் வரலாற்றை யொட்டியே, மொழியின் வரலாறு அமைந் துள்ளதென்று கூறலாம். அரசியல், பொருளாதார சமூக மாறுதல்கள், இலக்கி யத்தில் இரண்டறக் கலப்பது, தவிர்க்க முடி யாத நிகழ்ச்சியாகும். ஆங்கியர் ஆதிக்கத்தில் நம் நாடு சிக்குண்டிருந்த காலத்தில், சுதந் தரப் போராட்டம் மிகத் தீவிரமாக நடை பெற்றது. மக்கள் உணர்ச்சியைப் பிரதிபலிக் கும் வகையில் இலக்கிய கர்த்தாக்கள் மக் களின் அபிலாஷைகளுக்கு அழியா உருவம் தீட்டினர். சுதந்தரப் போராட்டத்திற்கு உயிர் ஊட்டும் கவிதைகள், கட்டுரைகள் முதலியன தமிழ் இலக்கியத்தில் புத்துயிர் பெற்றன. தமிழ்ப் பத்திரிகைகள் தொடங் கப் பெற்று, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளை அலசி ஆராயத் தொடங்கின. இவற்றின் விளைவாகத் தமிழ் மொழி மக் களின் வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு ஜீவ சக்தியோடு இயங் கத் தொடங்கியது.

நம் நாடு சுதந்தரம் அடைந்ததும் நம் கடமையும், பொறுப்பும் அதிகமாயின.

"குறைகளுக்கெல்லாம் காரணமானது அந்நியர் அரசாட்சியே" என்று கூறுவது, அர்த்தமற்ற பேச்சாகிவிட்டது. ஏனெனில் அவர்களின் பொறுப்பை நம் நாட்டு ஜனப் பிரதிநிதிகள் மேற்கொள்ளத் தொடங்கினர். எனவே நம் நாட்டில் பொதுப் பிரச்னைகளையும் மக்களின் அபிலாஷைகளையும் தக்க வாறு அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளை நாம் கண்டுபிடித்தாக வேண்டிய அவசியமேற்பட்டு விட்டது. இதன் விளைவாகத்தான் "நிர்வாக இலக்கியம்" தோன்றி வளரத் தொடங்கியுள்ளது.

இன்றைய தினம் மக்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அரசாங்கம் தலையிட வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. அதேபோல் பொதுமக்கள் எல்லாத் துறைகளிலும் அரசாங்கத்தின் உதவியையும் ஆலோசனையையும் எதிர்பார்ப்பது இயற்கையாகிவிட்டது. இந்தப்புதிய சூழ் நிலைக் கேற்றபடி நம்முடைய மொழி எவ்வளவு தூரம் வளம்பெற்றுத் தக்க வகையில் பயன் பட்டு வருகின்றது என்பதைப் பொது மக்கள், அரசாங்கம் ஆகிய இருசாராரும் ஆராயக் கடமைப்பட்டுள்ளனர்.

"அரசாங்கம் தமிழிலேயே நடைபெற வேண்டும்" என்று இன்றைய தினம் பேசப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில், அரசாங்கம் இத்துறையில் என்னென்ன ஆக்கப் பணிகள் செய்ய முன்வந்திருக்கிறது என்பதை, ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். நிர்வாக அமைப்பைத் திடீர் என்று மாற்றுவதற்குப் பதிலாக, படிப்படியே திருத்திச் செல்வதற்கான சூழ் நிலையை உருவாக்க, அரசாங்கம் முயன்று வந்துள்ளது. தமிழ்க் கலைக் களஞ்சியம் ஒன்று தயாரிக்க நம் நாட்டிலுள்ள எல்லா அறிஞர்களும் ஒன்று கூடி உழைத்து வருகின்றனர். அரசாங்கம் அதற்கான உதவி தந்துள்ளது. மேலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்கக் கடிதப் போக்கு வரத்துக்கள் தமிழிலேயே நடைபெறப் பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஆரம்ப முயற்சிகளில் எத்தனையோ கஷ்டங்கள் உண்டு. ஆனால் காலப்போக்கில் அறிஞர்கள் ஒத்துழைப்பினாலும் மக்கள் சக்திக்குள்ள இலட்சிய வேட்கையினாலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும், படிப்படியே சிறந்த பலன் ஏற்பட்டு இறுதியில் வெற்றி உறுதியாகக் கிடைக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

சென்ற இரண்டு ஆண்டுகளில், நம் இராச்சிய வரவு—செலவுத் திட்ட அறிக்கை, சென்னைச்சட்ட சபையில்சமர்ப்பிக்கப்பட்ட போது, தமிழில் வெளியிடப்பட்டதை இச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். இது தவிர, ஒரு சில ஜில்லாக்களின் நிர்வாக அறிக்கைகள் தமிழிலேயே வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் பலர் கவனித்துப் படிப்பதே இல்லை. இந்த வெளியீடுகளைப் பார்க்காமலே, அரசாங்கத்தைக் குறை கூறிவருவது, ஒரு சிலரின் வழக்கமாகிவிட்டது. தமிழ் மொழி வளர்ச்சிக்கான இத்தகைய முயற்சிகளில், அரசாங்கம் மட்டுமின்றி, தமிழ் அறிஞர்களும், பொது நலத் தொண்டர்களும் தம்மாலான அளவுக்கு ஒத்துழைத்து, தக்க ஆலோசனைகூறித் தமிழ் மொழியை வளம் படுத்த வேண்டும். மக்களின் அன்றாட வேலைகளுக்கும் நிர்வாக அலுவல்களுக்கும் தமிழை நல்ல முறையில், எளிய நடையில் பயன்படுத்த எல்லோரும் முன்வர வேண்டும். எளிமையும், நுட்பமும் கலந்த சொல்லாட்சி தமிழில் பெருகப் பெருக, அதன் பெருமையும் பயனும் அதிகரிக்கும்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்றார் பாரதியார். நம் நாட்டின் சிறந்த இலக்கியங்களை, மற்ற நாட்டார் உணர்ந்து போற்றுவதற்கான வேலைகளில் நம் நாட்டு அறிஞர்கள் ஈடுபடவேண்டும். நம்முடைய

கலை, இலக்கியங்களுள் சிறந்தவற்றைப் பல் வேறு உலக மொழிகளில் மொழி பெயர்ப் பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இதற்காக, மத்திய அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். தமிழ் அறி ஞர்கள் அதை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டின் இன்றைய சிறந்த இலக்கிய கர்த்தாக்களின் நூல்களையும், மற்ற மொழி யினருக்கு அறிமுகப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமான பணியாகும்.

நம்முடைய நாட்டில் பெரும்பாலோர் கிராமவாசிகள். எனவே, நம் இலக் கியங்கள் கிராமவாசிகளின் வாழ்க் கைக்கு உரமூட்டுவதாகவும் வளமாக்கு வதாகவும் அமைய வேண்டும். இத் துறையில் இன்றைய தினம், பல பத்திரிகைகள் சிறந்த தொண்டாற்றி வரு வதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள் முதலிய கிராம அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் வட்டாரங்களில், அநேக நூல் நிலையங்கள், வாசக சாலைகள், மாதர் சங்கங்கள், முதி யோர் கல்வி நிலையங்கள் முதலியன ஏற் பட்டுக் கிராம மக்களின் கல்வி அறிவைப் பெருக்கி வருகின்றன. எத்தனையோ ஆண்டு களாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த கிராம நல விஷயங்கள் இப்போது முதலிடம் பெற்று வருகின்றன. மக்களிடையே புதிய உற்சாக மும் தன்னம்பிக்கையும் உருவாகி வருவதை, அபிவிருத்தி வட்டாரங்களை நேரில் சென்று பார்த்தால், நன்கு விளங்கும்.

மக்களின் புதிய உற்சாகத்தைக் கிராம அபி விருத்திக்குப் பயன்படுத்தும் போது, சிறந்த புது இலக்கியங்கள் உருவாவது இயற்கை. புது வகையான பாடல்கள், நாடகங்கள், கதைகள் முதலியன இப்போது தோன்றி வளர்ந்து வருகின்றன. கிராமத் தலைவர்கள், சாரணர்கள், தேசிய இளைஞர் படையினர் முதலியவர்கள் நாட்டின் பல்வேறு கிராமங் களில் முகாம் செய்து, கிராம வாசிகளின் தேவைகளை அறிந்து தொண்டாற்றும் வகையைக் கற்றறிந்து தேர்ச்சி பெறுகின்ற னர். அயல் நாடுகளிலிருந்து விஜயம் செய் யும் பல பிரமுகர்கள் இப்போது நகரங்களை விட, கிராமங்களுக்குத்தான் அதிகமாகச் சென்று, நம் நாட்டின் முன்னேற்றத்தை அளந்து பார்க்கின்றனர்.

நாட்டில் இன்று நடைபெறும் இந்தப் புது நிகழ்ச்சிகளெல்லாம் தமிழ்மொழி வளத் துக்கு சிறந்த வகையில் வழிகோலுமென்ப தில் ஐயமில்லை. நம் தமிழ் அறிஞர்கள், நாட்டின் நடைமுறைகளைப் புறக்கணிப்பது நல்லதன்று. சிறப்பாக, கிராமங்களில் மக் கள் வளர்ச்சிக்கான இலக்கியங்களை இன் றைய தேவைக்கேற்ப உருவாக்குவதும், அவற்றை எல்லோரும் அறிந்து பயன்படுத் துவதற்கான வழி முறைகளைக் கண்டுபிடிப் பதும், உடனடியாகச் செய்யவேண்டிய ஆராய்ச்சியாகும். இந்த முக்கியமான ஆராய்ச்சியில், தமிழ் அறிஞர்கள் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்று நம்புகிறோம்.

"ரேடியோ" நம் மக்கள் வாழ்வில் இன்று மிகச் சிறந்த இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு மேலும் சிறந்த முறையில் ஊக்கம் கொடுக்க, வானொலி நிலை யத்தார் கடமைப் பட்டிருக்கிறார்கள். கிராம வாழ்வின் மேம்பாட்டுக்கான செய்தி களையும் இலக்கிய நிகழ்ச்சிகளையும் அதிகரிக்க வும், தமிழ் அறிஞர்களின் கூட்டுறவு மூலம், அவற்றின் தரத்தை உயர்த்தவும், அவர்கள் முயல வேண்டும்.

தமிழ் ஆராய்ச்சித் துறை இன்னும் விரி வான முறையில் நடைபெறுவதற்கான ஆலோசனைகளைத், தமிழ் அறிஞர்கள் எடுத் துக் கூற வேண்டும். அதிகமான மாணக்கர் களைத் தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடு படுத்தி, முக்கியமான விஷயங்களை நாட் டுக்கு எடுத்துக் கூறுவதற்கான சந்தர்ப்பங் களை அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண் டும். சிறப்பாகக் கல்வெட்டு ஆராய்ச்சி,

மொழி இயல் ஆராய்ச்சி முதலியவற்றில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்.

முதல் மூன்று சங்கங்கள் வளர்த்த தமிழ்ச் செல்வத்தை, அறுபது ஆண்டுகளுக்குமுன் தோன்றிய மதுரைத் தமிழ்ச் சங்கமும் சிறந்த முறையில் வளம்படுத்தியுள்ளது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்த கடைச் சங்கத்தில் இறையனர் உட்பட 49 புலவர்கள் ஒன்று கூடித் தமிழ்ச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து, நமக்கு வழங்கியுள்ளனர். நாம் பெற்றுள்ள செல்வத்தைத் தக்கவாறு கற்றறிந்து, இன்றைய மக்கள் வாழ்வுக்கு ஏற்றபடி, அதை மேலும் வளம்படுத்திப் பயனடைய வேண்டியது நம்முடைய கடமை.

கடைச் சங்கம் திகழ்ந்த பொற்றாமரைக் குளமும் மதுரைக் கோயிலும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நமக்கு நினைவூட்டி வருகின்றன. ஆனால், தமிழ்ச் செல்வியை வளர்த்த பாண்டிய மன்னர் இல்லை. அதற்குப் பதிலாகத் தமிழ் மக்கள் அனைவரும் பாண்டிய மன்னரின் பொறுப்பேற்றுக் கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது. எனவே, நம்முடைய கூட்டு முயற்சியின் விளைவாக, காலத்துக்கேற்ற சிறந்த இலக்கியங்களை உருவாக்கித் தமிழ்த் தாய்க்குச் சூட்டி மகிழ்வோமாக.

KERSONS

KERSONS

THE HALL MARK IN ELECTRICAL ACCESSORIES

Manufactured to British Standard Specifications in

BRASS AND BAKELITE

STOCKS AVAILABLE WITH ALL DEALERS

★

Area Distributors :

FOMRA BROTHERS

PREMIER DEALERS IN EVERYTHING ELECTRICAL

"FOMRA HOUSE"

392, MINT STREET, MADRAS-1

TEL. 3485 & 3078

Grams : "PHUMBHRA"

தமிழ் இலக்கியத்தில் கருத்துப் புரட்சி



திரு. ப. ஜீவானந்தம்

★

இலக்கியம் சமுதாயச் சூழ்நிலையில் உருவாகும் மரம் மட்டுமன்று; சமுதாயச் சூழ்நிலையை உருவாக்கும் வித்துமாகும். சரித்திர வளர்ச்சி உருவற்ற சக்திகளால் உருவாவதில்லை. சரித்திரம் மனிதனாலும் கருத்துக்களாலும் உருவாகிறது. இலக்கியமும், தத்துவ ஞானமும், அரசியல் கோட்பாடுகளும், நீதிநெறிகளும் சரித்திர வளர்ச்சியின் சக்திமிக்க கருவிகளாய்த் திகழ்கின்றன.

இலக்கியத்தின் புரட்சிக் கடமை என்ன? மகத்தான மரபு யாது? எழுத்தாளனை, தன்னுணர்வு, குறுகிய தனி முயற்சி என்ற தளைகளிலிருந்து விடுவிப்பதும், படைப்பாற்றல் மிக்க எழுத்தாளனை, அவன்றன் ஒரு தனிப் பெருங் கடமையோடு, அதாவது உண்மையை, ஒட்டுமொத்த யதார்த்தத்தை ஒட்டிய அறிவைப் பெறும் கடமையோடு அவனை நேருக்கு நேர் கொணர்ந்து நிறுத்துவதும் தான்.

தனது உள் உணர்ச்சியின் தூண்டுதலால் எழுத்தாளன், யதார்த்தம் (Reality) என்ற பழுக்கக் காய்ச்சிய உலோகத்தை எடுத்து, சம்மட்டியடி கொடுத்து, தனது நோக்கத் திற்கேற்ப அதற்கு மாற்றுருக் கொடுக்கிறான். நோவாமிச்சிலன் என்ற பேராசிரியனின் சொற்றொடரில் சொல்லுவதானால், சிந்தனையின் பலாத்காரங்களால் வெறிகொண்டு யதார்த்தத்தை உதைஉதை யென்று உதைத்து மாற்றுருக் கொடுக்கிறான். படையலின் முழு நடைமுறையும், கலைஞனின் முழு 'பிரம்மப் பிரயத்தனமும்', யதார்த்தத்தோடு நடைபெறும் இந்தப் பலாத்கார மோதலில்தான் பொதிந்துகிடக்கிறது; உலகத்தைப் பற்றிய ஓர் உண்மையான ஓவியத்தை உருவாக்கும் இந்த நன்முயற்சியில் தான் அடங்கிக் கிடக்கிறது.

இந்த வெளிச்சத்தில் தமிழ் இலக்கியத்தில் கருத்துப் புரட்சியைப் பார்க்க விரும்புகிறேன்.

இவ்வாறு தமிழ் இலக்கியத்தில் கண் வீசியதும் தொல்காப்பியன், சங்க காலச் சான்றோர்கள், வள்ளுவன், காவியப் புலவர்கள், கம்பன், பாரதி ஆகியோர் என் முன் காட்சி அளிக்கிறார்கள்.

"பல்புகழ் நிறுத்த படிமையோனை" இலக்கண மாமேதை தொல்காப்பியன், பல்லாயிரம் ஆண்டைய தமிழர் வாழ்க்கையை வடித்து வரையறுத்த வள்ளல். அவர் ஒரு சூத்திரம் சொல்லுகிறார் :

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

தமிழ் மக்களின் வாழ்க்கைச் சித்திரமாகிய 'பொருளதிகாரத்தில்' 'கற்பியலில்' வரும் இந்தச் சூத்திரம் (51) 'சிறந்தது பயிற்றலை'க் குடும்ப வாழ்வின் 'பயனாக' எடுத்தோதுகிறது. குடும்ப வாழ்வின் முதனிலையைத் தாண்டி, முதிர்ந்த நிலை அதாவது அருள்நிலை எய்திய தலைவன் தலைவியர் 'எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன்றறியாது"

பணி புரிய வேண்டிய கடமையை எத்துணை அற்புதமாகத் தொல்காப்பியர் வற்புறுத்து கிறார் பாருங்கள்! எத்தகைய பண்பட்ட சமுதாய வாழ்விலிருந்து இத்தகைய கருத்து முளைத்திருக்க வேண்டும், சிந்தியுங்கள்!

சங்க கால ஏனைய புலவர்கள் காட்டிய இரண்டொரு கருத்துக்களைக் கவனிப் போம்:

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஒரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"
(புறம். 189.)

நல்லிசைப் புலவர் பெருமானை நக்கீரர் அன்பும் ஒற்றுமை உணர்ச்சியும் தழைக்க வழி காட்டுகிறார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" (192) என்ற கணியன் பூங்குன் றனாரின் பொருள் செறிந்த சொல்லும் கருத் தூன்றத் தக்கது.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஒம்பு மின்"
(புறம்-195.)

இந்த அழுதுவாக்கு, இன்றும், நாளையும், என்றும், எங்கும் மனித வாழ்வுக்குச் சுடர் மிகும் பொதுவழி காட்டி என்பதில் யாருக் கும் ஐயம் இருக்க முடியாது. எதிர்மறை யாக உலகை நல்வழிப்படுத்தும் இந்தப் புல வரின் கூற்று, 'சுவைக்கும் தொறும் சுவைக் கும் தொறும்' இன்பம் பயக்க வல்லது.

மனித தத்துவக் (Humanism) கொடியை உயர்த்திப் பிடித்த சங்க காலச் சான்றோர் கள், 'ஈகை'யை அதன் சிறந்த அம்சமாகப் போற்றினர்; பற்பல கோணங்களினின்றும் அதைப் பாராட்டினர். கருத்துக்களை அன் னார் கைதேர்ந்து கையாட, அந்தப் பொற் கால வாழ்வு அத்துணை அனுபவம் செறிந்து செழித்து நின்றது.

"ஈயென இரத்தல் இழிந்தது; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தது;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும்
உயர்ந்தது"

இந்த அடிகளில் புலவர் இரவாமை, ஈகை என்ற சிறந்த மனிதப் பண்புகளை எவ்வாறு வியத்தகு விதத்தில் தூக்கி வைத்துப் புகழ் கிறார் பாருங்கள்.

". . . ஆங்குச்
செய்பவெல்லாம் செய்தனன்"

என்று முடியும் ஒரு பாட்டில் (புறம். 239) புலவர், அன்றைய எளிய, இனிய, அழகிய தெள்ளிய தன்மான வாழ்வைச் சித்திரித்துக் காட்டும் பொழுது,

"வலியர்என வழிமொழியலன்
மெலியர்என மீக்கூறலன்
பிறரைத்தான் இரப்புஅறியலன்
இரந்தோர்க்கு மறுப்புஅறியலன்"

என்ற அடிகளைப் படிக்கையில் அந்தச் செம்மை வாழ்வை நினைந்துநினைந்து செம் மாந்து, தமிழ்ப் பெரியார் திரு வி.க. வோடு அணிவகுத்து நின்று, "இயற்கையோ டியைந்த இன்பம், இன்பத்தோடியைந்த வாழ்வு" என்று கூவத் தோன்றுகிறது.

கவியரசனும் புவியரசனுமான இளம் பெரு வழுதி 'உலகம் உண்டு' என்று ஒரு பாடல் பாடுகிறான். அதில், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' வாழ்வதால் 'உல கம் உண்டு' என்கிறான். சரித்திரம் காணக் காலத்திலிருந்து இன்று வரை—ஏன் நாளை யும் உச்சிமேல் வைத்து மெச்சும் 'சான் றாண்மை'க்குத்—தமிழரின் இலட்சிய வாழ் வுக்கு—இளம்பெரும்வழுதி, இந்தப்பாட லில், நெஞ்சையள்ளும் நிகரற்ற விளக்கம் தருகிறான். பாட்டைத் தருகிறேன், படியுங் கள்! நாவினிக்க, நெஞ்சினிக்கப் பயின்று பயின்று, பாராப்பாடம் ஆகும்வரை படியுங் கள்!

"உண்டால் அம்ம இவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிரும் கொடுக்குவர்;
பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்;
அயர்விலர்;

அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"
(புறம். 182)

"அமிழ்தம் இயைவதாயினும் தமியர் உண்டலும் இலர்", "புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்", "பழி யெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"—இவற்றினும் உலக வாழ்வில் தமிழனுடைய இலட்சிய வாழ்வுக்கு வேறென்ன குறிக்கோள் தேவை?

இங்கிருந்து 'வான்மறை' தந்த வள்ளுவனிடம் செல்வோம். மூவெழு வள்ளல்களினும் வள்ளலாகிய வள்ளுவப் பெருந்தகை, கரைகாணக் கருத்துச் செல்வக் களஞ்சியத்தோடு நிற்கிறான். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டாள் தமிழ்த்தாய்" என்றான் பாரதி. இன்னும் எத்தனை உலகங்கள் தோன்றினும், அவ் வுலகங்களில் மக்கள் தோன்றினும், வரையாது வழங்கக் கருத்துக் கருவூலம் தந்த வள்ளுவனைப் பெற்று வான் புகழ் கொண்டாள் தமிழன்னை. வள்ளுவன், சங்ககாலச் சான்றோர்களின் எவரஸ்டுக் கொடுமுடியாக நின்று புரட்சிக் கருத்துக்களை—புதுமைக் கருத்துக்களை அள்ளி வீசுகிறான்.

"..... அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"
"..... மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"
"யான்எனது என்னும் செருக்கறுப்பான்
[வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"
"எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு"
"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"
"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை"

நான் மேலே தந்துள்ள குறளடிகளில் ஏழேழுலகத்திற்கும் வழிகாட்டவல்ல வள்



உங்கள் ஆரோக்யத்திற்கு
இன்றே உட்கொள்ள ஆரம்பியுங்கள்
காட் லீவர் ஆயில்
சேர்ந்த
டி. ஸி. எல்.
மால்ட் எக்ஸ்டிராக்ட்
★
காட் லீவர் ஆயிலுடன் கூடிய டி. ஸி. எல். மால்ட் எக்ஸ்டிராக்ட் சுலபமாக ஜீரணிக்கக்கூடியது. ஆரோக்யமூட்டும் உணவு. மருந்து சத்துக்கள் சேர்ந்தது. சர்க்கரை, கொழுப்பு சத்துக்கள் அதிகம் இருப்பதால் ஆரோக்யமளிக்கக் கூடியது. சுத்திகரிக்கப்பட்ட காட் லீவர் ஆயிலிலுள்ள வைடமின்கள் A & D-யும், தொத்து வியாதி வராமல் தடுத்து வளர்ச்சிக்கு உதவி, எலும்புகள், பற்கள் ஆரோக்யமாக வளர உதவுகிறது. டி. ஸி. எல். மால்ட் வெண்ணை வாடையுள்ளதாகையால், ஆகாரத்துடன் சேர்த்து உட்கொள்ள சிறந்ததாகும்.
ஸ்காட்லண்டில் தயாரிக்கப்பட்டு பாட்டில் செய்யப்படுவது
வியாபார விவரங்களுக்கு எழுதவும்:
ஓரியண்டல் மர்க்கன்டைல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
தலைமை ஆபீஸ். 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1
பிராஞ்சுகள்:
தபால் பெட்டி நிர். 400, பெஜவாடா :: தபால் பெட்டி நிர். 27, பாலக்காடு

ளுவன் ஆனந்தக்காட்சியளிக்கிறான் என்பது எனது அழுத்தமான கருத்து.

வள்ளுவனின் கருத்துப் புரட்சியை, இன்றைய உலகத்தில் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் ஒருவராகப் பெருமதிப்புப் பெற்றுள்ள ஆல்பர்ட் ஷ்வைஸ்டர் என்ற சிந்தனையாளர் தமது "இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்" (Indian thought & its development) என்ற ஆராய்ச்சி வல்ல நூலில் பிரமாதமாகப் பாராட்டுகிறான். வேதகால ரிஷிகளோடும், உபநிடத முனிவர்களோடும், கீதை ஆசிரியன் கண்ணனோடும் வள்ளுவனை ஒப்பு நோக்கி, வள்ளுவன் போல், மற்ற யாரும் மனித வாழ்வை அத்துணை உறுதிப்படுத்திக் கூற வில்லை என்று முடிவு கட்டிச் சொல்கிறான்.

வள்ளுவனுக்கு நிகரான "கூட்டு மேதை" (Synthetic Genius) எக்காலத்தினும் பூவுல கெங்கணும் தேடி நோக்கினும், விரல் விட்டு எண்ணுமளவு கூடக் கிடையார் என்பதே எனது முடிந்த கருத்து.

வள்ளுவன் காலத்திற்குப்பின், இளங்கோவடிகள்–கூல வாணிகன் சாத்தனார் காலத்தில், தமிழகத்தின் சமுதாய வாழ்வில் திட்டவட்டமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துப் புரட்சியின் எதிரொலிதான் 'சிலப்பதிகாரமும்' 'மணிமேகலையு'மாகிய தமிழ் இலக்கியச் செல்வங்கள். இவ்விரு ஒப்பற்ற காவியங்களிலும் சமண, பௌத்தக் கருத்துக்கள் நல்லிடம் பெற்றுள்ளன.

இனி மத்திய காலத்திற்கு வருகிறேன். தமிழின் கதி'யான இரட்டையர்களில் ஒருவனை கம்பனுக்கு வருகிறேன்.

தமிழ்ச்சமுதாயத்தில், கம்பன் காலம் வரையில், அரசனே சமுதாய வாழ்வின் உயிர். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்." (புறநானூறு). 'மாநில மன்னன் அடிதலீஇ நிற்கும் உலகு' (வள்ளுவர்). 'கல்வியில் பெரிய' கம்பன் 'உயிரெலாம் உறையும் ஓர் உடம்பும் ஆயினன்' என்று தசரத மன்னனை வருணித்து, மக்களை உயிராகவும், மன்னனை உடம்பாகவும் ஆக்கித் தெள்ளத் தெளிவான கருத்துப்புரட்சி செய்கிறான்.

வசிட்டன் இராமனுக்கு அரச நீதி கற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பத்திலும்,

"வய்யம் மன்னு யிராக, அம்மன னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
அய்ய மின்றி அறங்கடவாது அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும்
வேண்டுமோ?"

என்று பாடி, கம்பன் இன்றைய ஜனநாயகக் கருத்தை அன்றே வெளியிடுகிறான்.

"உழுங்குலத்தில் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தாரே" (ஏரெழுபது)

என்று பாடி, கம்பன் அன்று உழுவர் தோழகை விளங்கினன்.

தசரதன் ஆணையாகக் கைகேயி சொல்ல, இராமன் காட்டுக்குப் புறப்பட்டான் என்று அறிந்ததும் வெகுண்டெழுந்த அயோத்தி மக்கள்,

"புற்றுடைய காடெல்லாம்
நாடாகிப்போம்"

என்று வீரம் பேசினர் என்று கம்பன் பாடி, 'ஜன சக்தியால் உலகை ஆக்கவும் அழிக்கவும் முடியுமென்பதில் தனக்குள்ள அழுத்தமான நம்பிக்கையை உலகறியச் செய்கிறான்.

"எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும்
எய்தலாலே
இல்லாரு மில்லை உடையாரு மில்லை
மாதோ"

என்று கவிச்சக்ரவர்த்தியான கம்பன் அயோத்தியைப் பற்றிப் பாடிய கருத்து–புரட்சிக் கருத்து—புதுமைக் கருத்து என்பதை யாரும் மறுக்கார் என்பது மட்டுமன்று, அவனது தொலை நோக்கும் பேராற்றலை உணர்ந்து மூக்கில் விரல் வைத்து வியப்பர்.

"யாரொடும் பகை கொள்ளிலன் என்றபின்
போரொடுங்கும் புகழ் ஒடுங்காது"

இவ்வாறு கம்பனின் வசிட்டன், கம்பனின் இராமனுக்கு வழங்கிய அறிவுரையில் கருத்

துப் புரட்சி கொழுந்தோடியிருப்பதை, யாரும் எளிதில் காணமுடியும்.

அவன் காலத்திய சமுதாயச் சூழ்நிலை கம்பனுடைய கருத்துப் புரட்சிக்குப் பெருந் துணை போயிற்று என்று சுருங்கச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நூற்றாண்டில் பாரதிக்கு வருகிறேன். அந்நிய ஆட்சி, காலனி நாட்டு முறை நமது சமுதாயத்தில் ஏற்படுத்திய பெரும் மாறுதல்கள், உலக ஜனநாயக, சமதர்ம இயக்கம் – இவை தமிழ் இலக்கியத்தில் கருத்துப் புரட்சிக்குப் 'பாட்டுக்கொரு புலவனை' பாரதியைத்தனிப்பெரும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தன. பாரதி, தேசிய கவியாக, விடுதலைக் கவியாக, ஜனநாயகக் கவியாக, மக்கள் கவியாக, இலக்கியம் சமைத்தான்.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் உலகில் எந்தப் பகுதியில் எழுந்ததாயினும் புத்தம் புதிய கருத்துக்களை–புரட்சிக் கருத்துக்களை பாரதியின் இலக்கியம் இழுக்காதிருந்ததில்லை.

"புரட்சி" "பொது உடைமை" என்ற உலக நவீனக் கருத்துக்கள் நிறைந்த, உயிர் துள்ளியாடுகிற செஞ்சொற்களை, தொன்மையும் பெருமையும் வண்மையும் சான்ற தமிழ்ப் பேரிலக்கியத்திற்கு வழங்கிய வள்ளல் பாரதி.

பாரதியின் இறுதிப் பாட்டு "பாரத சமுதாயம் வாழ்கவே" என்பது.
அதில்,

"மூப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"

என்று பாடுகிறான். அதில்,

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்நாட்டு மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

என்று பாடுகிறான். தமிழ் இலக்கியத்தில் கருத்துப் புரட்சியில் பாரதி இலக்கியத்தின் சிகரம் இது.

———

'PERMACEL" ADHESIVE CELLULOSE TAPES • ROLLER COMPOSITION
"PERSPEX" SHEETS • "VYNIDE" LEATHERCLOTH • "ALKATHENE
FILM • "LISSAPOL" CLEANSING AGENT • "GAMMEXANE"
INSECTICIDE

AT

GVKC & CO

128 NYNEAPPA NAICK STREET, MADRAS-3

★

Distributors to:

Messrs IMPERIAL CHEMICAL INDUSTRIES (INDIA) LTD

சங்ககால இசை

திரு. க. வெள்ளை வாரணன்

★

செந்தமிழ் வளர்ச்சியிற் பேரார்வமுடைய பாண்டிய மன்னர்கள் புலவர் பேரவை யாகிய தமிழ்ச் சங்கத்தை நிறுவிக் கல்விப் பணி புரிந்த காலம் சங்க காலம் எனப்படும். இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறுண்டு களுக்கு முற்பட்ட அக்காலப் பகுதியில் நம் தமிழ் மொழி சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்த செய்தி, இறையனார் களவியலுரை யிலும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லா ருரையிலும் முச்சங்கங்களின் வரலாறு கூறு மிடத்து நன்கு விளக்கப் பெற்றுள்ளது.

தமிழ் மொழிக்கே யுரியனவாகப் பண் டைத் தமிழ் மக்கள் வகுத்துணர்த்தியவை இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் துறைகளாகும். நமது கண்ணிற்கும் கருத் திற்கும் புலனுகும் பொருள்களின் இயல் பினை உள்ளவாறு விளக்குதற்கேற்ற சொல் லமைப்பினை யுடையது இயற்றமிழ். சொல் லைக் கருதியவற்றைக் கேட்போர் ஆர்வ முடன் ஏற்றுக்கொள்ளும்படி இன்னிசை யுடன் புலப்படுத்தும் மொழி நடை இசைத் தமிழாகும். மனத்திலெண்ணிய எண்ணங் கள் மெய்ப்பாடுகளால் உடம்பின் புறத்தே விளங்கித் தோன்றும் வண்ணம் நடித்துக் காட்டுதற்கு அமைந்த மொழி நடை நாட கத் தமிழெனப்படும். இவை மூன்றும் மக்க ளது மனவளர்ச்சியையும் மொழியின் இனி மையையும் செயலின் ஆற்றலையும் இனிது வளர்க்கும் நிலையில் அமைந்துள்ளமை அறிந்து மகிழத்தக்கதாகும்.

மனமொழி மெய்களின் தொடர்பு பெற்று வளர்ந்த முத்தமிழுள் நடுவணதாய் விளங் கும் இசைத் தமிழ், மனவளர்ச்சியின் பய னுய் மொழியின் இனிமையைப் புலப்படுத் திச் செயலாற்றலை மிகுதிப் படுத்தும் தனிச் சிறப்புடையதாகும். மிடற்றுப் பாடலும், குழல்யாழ் முதலிய இசைக்கருவிகளின் ஒலி யும் அவற்றின் கால அளவினைப் புலப்படுத் தும் தாளமும் ஆகிய இவை மூன்றும் ஒத்தி சைந்து இயங்குவதே இசையாகும். இயற் றமிழ்ப் பாவினைக்கு இன்னிசையாகிய நிறத்தை இசைத்துப் பாடுதலால் இசை யென்று பெயராயிற்று. பாவினைக்கு இயைத் துரைக்கப்பட்ட இசையினை நெஞ்சு, கண் டம், நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டிடங்களிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகை இசைத்தொழில்களால் உருவாகப் பண்ணிச் சீர்ப்படுத்திப் பாடப்பெறுவது பண்ணுகும். இசையும் பண்ணும் ஆகிய இவற்றின் இயல் பினை,

> "பாவோ டிணைதல் இசையென்மூர்
> பண்ணென்மூர்
> மேவார் பெருந்தானம் எட்டானும்—
> பாவாய்
> எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
> படுத்தமையாற் பண்ணென்று பார்.

எனவரும் பழம்பாடலால் இனிதுணரலாம். இயற்றமிழ்ப் பாவினைக்கு இசையினையினைத் துப் பாடுதல் என்பது ஓவியத்திற்கு நிறந் தீட்டுதல் போல்வதோர் செய்கையாகும். 'நிறந்தோன்ற' எனச் சிலப்பதிகார வுரை யாசிரியர் வழங்கியிருத்தலைக் கூர்ந்து நோக் குங்கால் நிறம் என்ற தமிழ்ச்சொல் இராகம் என்ற பொருளில் பண்டை நாளில் வழங் கியதென்பது நன்கு புலனுகும்.

நானிலத்தவராகிய மக்கள் அனைவரும் தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமையுடைய

யாழ், பண், பறை முதலிய இசைக் கூறு பாடுகளைச் சிறப்பு முறையில் வளர்த்து மகிழ்ந்த செய்தி சங்க நூல்களால் இனிது விளங்கும். வண்டு, ஞெரி, குயில் முதலியவற்றின் இன் குரலினைக் கேட்டுணர்ந்த நம்முன்னோர், இயற்கையில் தோன்றும் அவ்வினிய ஓசைகளையொத்த ஒலிகளைத் தம்மிடற்றிலிருந்து எழுப்பக் கற்றுக்கொண்டனர். தம் செவிக்கு இன்பந்தரும் ஓசைப் பரப்பினைக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைகளாகப் பகுத்து ஆராய்ந்து அவற்றின் சுருதிநிரல் களைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான இன்னிசை யுருவங்களைத் தம் நுண்ணுணர் வினுற்படைத்து இவ்வுலக வாழ்க்கையை இசை நலத்தாற் சுவையுடையதாக உயர்த்தினர்கள். ''இசையாவது நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினேராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றுகிய ஆதியிசைகள்'' எனச் சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர் கூறுவதனை நோக்குங்கால் நம் தமிழ்முன்னோர் இசைத்துறையில் வளர்ச்சிபெற்று விளங்கிய செய்தி இனிது விளங்கும்.

''இசைத்தமிழ் நூலாகிய பெருநாரையும் பெருங்குருகும் பிறவும் தேவ இருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயமும் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன'' என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். சிகண்டியென்னும் செந்தமிழ் முனிவர் இயற்றிய இசை நுணுக்கமும், அறிவனர் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதியமும், பாண்டியன் மதிவாணனர் செய்த மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் ஆகிய இசை நாடகத்தமிழ்நூல்கள் அடியார்க்கு நல்லார் காலம் வரை தமிழ் நாட்டில் பயிலப்பெற்று வந்தன என்பதும் இவற்றை ஒருபுடை யொப்புமையாகக் கொண்டே அடியார்க்கு நல்லார் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு விரிவுரை செய்தாரென்பதும் சிலப்பதிகார உரைப்பாயிரத்தால் நன்கு புலனுகும். அடியார்க்கு நல்லார் காலத்தே வழங்கிய இந்நூல்களும் பிற்காலத்தே மறைந்தன. இவற்றிலிருந்து மேற்கோளாகக் காட்டப் பெற்ற ஒருசில நூற்பாக்களே இந்நாளில் எஞ்சியுள்ளன. அடியார்க்கு நல்லார் உரையிலும் இசைத்தமிழ்த்திறம் விளக்கும் கானல் வரியுரை இந்நாளிற் கிடைக்க வில்லை.

இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்களிலே பண்டை யிசைத்தமிழ் மரபினையும் குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளையும் இசைபாடும் முறையினையும், பண்ணும் திறங்களுமாகிய இசை நலங்களையும் குறிப்பிடும் பகுதிகள் மிகப் பலவுள்ளன. குமரியாறு கடல்கோளால் அழிவதற்குமுன் இடைச் சங்கத் தொடக்கத்திலே இயற்றப்பெற்ற தொல்காப்பியம் என்னும் இயற்றமிழ் நூலானது இன்றளவும் சிதைவின்றி வழங்கிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். செய்யுளாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் இசைநூல் முடிபுகள் சிலவும் கூத்துநூல் முடிபுகள் சிலவும் இந்நூலிற் கூறப்பெற்றுள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் ஆகிய பழந்தமிழ்நூல்களிலும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் விளங்கிய இளங்கோவடிகள் இயற்றிய இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலையாகிய சிலப்பதிகாரத்திலும் இசைத்தமிழ் பற்றிய சிறந்த நூன் முடிபுகள் பல இடம் பெற்றுள்ளன.

பண்டைநாளிலே இசைவளர்த்த குடும்பத்தார் பாணர் என்னும் பெயரினராவர். இப்பாணர் பழந்தமிழ்க் குடிகளென்பது, ''துடியன் பாணன் பறையன் கடம்பனென்—றிந் நான்கல்லது குடியுமில்லை'' என வரும் 335-ம் புறப்பாட்டால் இனிது புலனும். இன்னோர் வாசித்த யாழ்க்கருவியின் அமைப்பும் அக்கருவியிலே இசைக்கப் பெற்ற இசை நலங்களும் இப்பாணர்களது வாழ்க்கை முறையும் பாட்டுந் தொகையு

மாகிய பழந்தமிழ் நூல்களிலே விரிவாகப் பேசப்பெற்றுள்ளன.

இற்றைக்கு ஆயிரத்தெண்ணூருண்டு களுக்கு முன்பு சோழ நாட்டின் பெரிய துறைமுகமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திலே மருவூர்ப் பாக்கத்திலே இசை வளர்க்கும் பெரும் பாணர்களுக்கு இருக்கையமைந்திருந்ததென்பதும் அக்காலத்து வாழ்ந்த இசையறிஞர்கள் துளைக்கருவி வாசிப்போர், தோற்கருவி வசிப்போர், நரம்புக்கருவி யிசைப்போர், கண்டத்தாற் பாடுவோர் என நால்வகைப் பிரிவினராக அமைந்து இசை வளர்த்தார்கள் என்பதும்,

> ''குழலினும் யாழினும் குரல்முத லேழும்
> வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
> அரும்பெறல் மரபின் பெரும்பாண்
> இருக்கையும்''

எனவரும் சிலப்பதிகாரத் தொடரால் இனிது விளங்கும். ஆடல் மகள் நாடக அரங்கிற் புகுந்து ஆடும்போது ஆடலாசிரியன், இசையாசிரியன், இயற்றமிழ்வல்ல கவிஞன், தண்ணுமையாசிரியன், வேய்ங்குழலூதுவோன், யாழாசிரியன் என்னும் இவர்கள் அவளது ஆடலுக்குத் துணைபுரிந்த முறையினைச் சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இளங்கோ வடிகள் விரித்துக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழிசைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இவை முறையே ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என இக்காலத்தில் வழங்கும் இசைச் சுரங்களைக் குறிப்பன எனப் பின்னுள்ளோர் பலரும் கருதி வந்தார்கள். பண்டைத் தமிழ் நூல்களில் குரல் முதல் ஏழிசைகளுக்கும் உரியவாகக் கூறப்பட்ட இலக்கணங்களையும் இடைக்கால இசை நூல்களில் ஷட்ஜம் முதலிய ஏழிசைகளுக்கும் கூறப்படும் இலக்கணங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் இவ்வேழும் முறையே மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இக்காலத்தில் வழங்கப்படும் இவ்வேழிசைகளையுங் குறித்து வழங்கிய பழைய தமிழ்ப் பெயர்களாகும் என யாழ் நூலாசிரியர் அருண்மிகு விபுலானந்த அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

ஆண் மக்களது கண்டத்தின் ஓசை காந்தார சுரத்தையொத்த தென்பர். 'தாரம்' என்னும் அச்சுரத்தின் வழியோசையாக 'உழை' என்ற ஓசையும், உழையின் வழியோசையாகக் 'குரல்' என்ற ஓசையும், குரலின் வழியோசையாக 'இளி' என்ற ஓசையும், இளியின் வழியோசையாகத் 'துத்தம்' என்ற ஓசையும், துத்தத்தின் வழியோசையாக 'விளரி'யும், விளரியின் வழியோசையாகக் 'கைக்கி'ளையும் பிறக்கும் என்பது,

> ''தாரத்துட் டோன்றும்உழை, உழையுட்
> டோன்றும்
> ஒருங்குரல் குரலினுட் டோன்றிச்—சேருமிளி
> யுட்டோன்றும் துத்தத்துட் டோன்றும்
> விளரியுட்
> கைக்கிளை தோன்றும் பிறப்பு.''

எனவரும் பழைய பாடலால் நன்கு புலனுகும். இவ்வாறு கிளை முறையாக (ஐந்தாம் சுர முறையாக) ஏழிசைகளும் பிறக்கும் என முதற் கண்டுணர்ந்த பெருமை தமிழ் மக்களுக்கேயுரியதென அறிஞர் கூறுவர்.

இவ்வேழிசைகளையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழ் மக்களால் வளர்க்கப் பெற்றதே இசைத் தமிழாகும். இசைக் கலையைப் பிறழாத நிலையில் வளர்ப்பன குழல் யாழ் முதலிய இசைக் கருவிகளேயாகும். மூங்கிலில் வண்டுகள் துளைத்த துளைகளின் வழியே காற்றுப் புகுந்து இயங்க, அத்துளைகளிலிருந்து உண்டாகிய இன்னிசையினை மிகப்பழைய காலத்திலே கண்டு கேட்

டுணர்ந்த பண்டைத் தமிழ் மக்கள், தம் நுண்ணறிவின் திறத்தால் முதன் முதல் அமைத்துக்கொண்ட இசைக்கருவி வேய்ங்குழலாகும். வில்லின் கண்ணே விசைத்துக் கட்டப்பட்ட நாணிலிருந்து ஓசையின் இனிமையை யுணர்ந்து குமிழங்கொம்பில் மரல் நாரால் தொடுத்துக் கட்டப்பெற்ற பல விற்களை ஒன்றுகச் சேர்த்து அமைத்துக் கொண்ட பழைய இசைக்கருவி வில்யாழ் என்பதாகும். இதன் இயல்பினைப் பத்துப் பாட்டுள் ஒன்றுகிய பெரும்பாணாற்றுப் படையிலே ஆசிரியர் உருத்திரங் கண்ணனர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். வரையறுக்க முடியாத மிகப்பழங்காலத்திலே அமைக்கப்பெற்ற இவ் வில்யாழினை அடிப்படையாகக்கொண்டே சீறியாழ், செம்முறைக் கேள்வி யென்னும் சகோடயாழ் முதலாக ஆயிர நரம்புடைய பெருங்கலம் என்னும் பேரியாழ் ஈருகச் சிறந்த நரம்புக் கருவிகள் பலவும் உய்த்துணர்ந்து அமைக்கப்பெற்றன.

ஒவ்வொரு சுரத்திற்கும் தனித்தனி நரம்பு கட்டப்பெற்றது பழந் தமிழர் கண்ட யாழ் என்னும் இசைக்கருவியாகும். ஒரு நரம்பிலே பல சுரங்களையும் வாசித்தற்கமைந்தது பிற்காலத்து வீணைக் கருவியாம். இவ்வீணைக்கருவி ஒரே முறையில் தொடர்ந்து செல்லும் தொடரிசையினை மட்டுமே வாசித்தற் குரியது. பழந்தமிழர் பயன்படுத்திய யாழ்க் கருவியோ, தொடரிசையுடன் பலரும் சேர்ந்து பாடும் பண்ணுகிய ஒத்திசையினையும் வாசித்தற்கேற்ற அமைப்புடையதாகும். தொடரிசையினை மட்டும் வாசித்தற்குரிய வீணைக் கருவியைக் காட்டிலும் தொடரிசையினையும் ஒத்திசையினையும் ஒருசேர வாசித்தற்கு அமைந்த யாழ்க்கருவி பெரிதும் சிறப்புடையதென்பது சொல்லாமலேயே விளங்கும். அக்காலத்தில் யாழிற் கட்டப்பட்ட இசை நரம்பு மாட்டு நரம்பேயாகும். அந்நரம்பு வெயில் மழை முதலியவற்றுல் ஏற்படும் நெகிழ்ச்சி இறுக்கம் காரணமாக இசை வேறுபடுமாதலால் பண்டைத் தமிழ் மக்கள் குழலோசையின் துணைகொண்டே யாழ் நரம்புக்கு இசை கூட்டினர்கள்.

தமிழ் மக்கள் குழலும் யாழும் ஆகிய இசைக் கருவிகளின் துணைகொண்டு பல் வேறு இசை நுட்பங்களை வெளியிட்டுள்ளார்கள் என்பது முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினலும் அதன் உரைகளாலும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமாகிய சங்க இலக்கியங்களிற் காணப்படும் இசை நூற்குறிப்புக்களாலும் நன்கு துணியப்படும். பழந் தமிழ் மக்கள் வாசித்து மகிழ்ந்த யாழ் என்னும் இசைக் கருவி தமிழ் மக்களது விழிப்பின்மையால் பிற் காலத்தில் வழக்கற்று மறைந்தது. வழக்கற்று மறைந்த யாழ்க்கருவியின் இயல்பும், அதன்கண் இசைக்கப்பெற்ற பன்னிரு பாலைகளின் பயனும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் என்னும் நாற்பெரும் பண்களின் இயல்பும், அவற்றின் வழியமைந்த நூற்று மூன்று பண்களின் திறனும் ஆகியவற்றை இக்காலத்திலும் நன்கறிந்து பயன்படுத்தி மகிழும் வண்ணம் சேர முனிவராகிய இளங்கோ வடிகள் அறிவுறுத்திய இசைத் தமிழ் நுட்பங்களை அருள்மிகு வீபுலாநந்த அடிகளார் தாம் இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய யாழ்நூலில் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்கள். அடிகளாரது ஆராய்ச்சியால் உருப்பெற்ற பழந் தமிழ் இசைக் கருவிகளாகிய முளரியாழ், செம்முறைக் கேள்வியாகிய சகோடயாழ், பெருங்கலமென வழங்கும் ஆயிர நரம்புடைய பேரியாழ் முதலிய பழந்தமிழ் இசைக் கருவிகளை முறையாக அமைத்து அக்கருவிகளின் வழியாகப் பண்டைத் தமிழர் கையாண்ட சங்க கால இசை நலங்களை உலகமெலாம் பரவச் செய்தல் தமிழ் மக்களாகிய நமது கடமையாகும்.



மறுமலர்ச்சி - உரைநடை

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ.

★

உரைநடையின் மறுமலர்ச்சியினை ஆராய்வதன் முன்னர் அதன் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் அறிதல் இன்றியமையாததாகும். தமிழ் இலக்கியத்திலுள்ள உரைநடை வளர்ச்சியினை முக்கூறுபடுத்திக் கூறலாம்: 1. பண்டைக்காலம் (கி. பி. 200-க்கு முன்), 2. இடைக்காலம் (கி. பி. 200-கி.பி. 1500 வரை), 3. இக்காலம் (16-ம் நூற்றாண்டு முதல்). தமிழ் இலக்கியத்தில் பண்டைக் காலத்தில் செய்யுள் நூல்களே இடம் பெற்று வந்தன. கி. பி. 16-ம் நூற்றாண்டு முதல் தனிப்பட்ட உரைநடை நூல்கள் தோன்றின. மக்கள் பேச்சு மொழியைக் கற்றுக்கொள்வதற்கு முன் தம் உணர்ச்சிகளைப் பாட்டுக்களின் மூலம் தெரிவித்தனர் என்பர் ஜெஸ்பர்சன் (Jesperson) என்ற மேலைட்டு ஆசிரியர்.[1] இலக்கிய வரலாற்றில் உரைநடை நூல்களுக்கு முன்னர்ச் செய்யுள் நூல்களே இடம் பெற்றன என்பர் எமர்சன் (Emerson) என்ற ஆசிரியர்.[2] இக்கருத்துத் தமிழ் மொழிக்கும் பொருந்துவதாகும். தமிழர், இலக்கணம் இலக்கியம் சோதிடம் மருத்துவம் முதலிய எல்லா நூல்களையும் செய்யுள்களிலேயே இயற்றி வந்தனர். இவைகளுக்கு உரையாசிரியர்கள் இயற்றிய உரைகளைத் தவிர தனிப்பட்ட உரைநடை நூல்கள் முற்காலத்தில் இயற்றப்படவில்லை. ஆனால், உரைநடையும் செய்யுளுமாகக் கலந்த சில நூல்கள் பண்டைக் காலத்தில் இயற்றப்பட்டன. இதனை,

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"[3]

என்றதொல்காப்பியச் சூத்திரத்தால்அறியலாகும். இச்சூத்திரத்திற்கு உரைஎழுதப்போந்த பேராசிரியர் "தொன்மை என்பது உரை விராஅப்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது; அவை, பெருந்தேவனாற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன" என எழுதியுள்ளார். இத்தகைய நூல்களை உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் கூறுவர். இந்த இரண்டு நூல்களும் இறந்து ஒழிந்தன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு இப்போது உதாரணமாக உள்ளது சிலப்பதிகாரம்ஒன்றேயாகும். சிலப்பதிகாரத்துள் உரைபெறு கட்டுரையில் வந்துள்ள உரைநடையின் நடையினைக் காண்க.

"அதுகேட்டுக் கொங்கிளங்கோசர்
தங்கணுட்டகத்து நங்கைக்கு
விழவொடு சாந்திசெய்ய மழைதொழி
லென்றும் மாறுதாயிற்று"[4]

உரைநடை என்பது நடப்பது போன்று மெதுவாகச் சொல்லுதல் எனப் பொருள் படும். லத்தீன் மொழியிலும் வசனத்தைக் குறிக்கும் உரைநடை என்ற சொல்லுக்கு

[1] "Men sang out their feelings long before they were able to speak their thoughts" (Jesperson-Language, its Origin, Theory and Development", p. 436).

[2] "In the History of Literature poetry precedes prose" (R. W. Emerson's "Poetry and Imagination" p. 439).

[3] தொல்காப்பியம்-செய்யுளியல்-சூ. 237. [4] சிலப்பதிகாரம்-உரைபெறு கட்டுரை.

இதே பொருளாகும் உரைநடையில் சொற் கள் வேகமின்றி மெதுவாகச் செல்லும்.[5]

தொல்காப்பியம் செய்யுளியலில் உரை நடையைப் பற்றிய குறிப்பு காணக்கிடக் கின்றது. செய்யப்படுவது செய்யுளாகும். இவற்றுள் அடி வரையறை யுடையன பாட்டு எனப்படும். வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா இதன்கண் அடங்கப்பெறும். அடி வரையறையின்றி வருவனவற்றை ஆசிரியர் தொல்காப்பியர் 1. நூல், 2. உரை (Prose), 3. பிசி, 4. முது மொழி, 5. மந்திரம், 6. கூற்றிடை வைத்த குறிப்பு என அறுவகைப்படுத்திக் கூறியுள் ளார். இவற்றுள் உரை என்பது உரைநடை யைக் (வசனம்) குறிப்பதாகும். இந்த உரை நடையினை நான்கு வகைப்படுத்திக் கூறுவர் ஆசிரியர் தொல்காப்பியனர்.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி
யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப"[6]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதனால் உரைநடையும் செய்யுளும் கலந்துள்ள நூல் களும், பாட்டிற்கு உரையாகக் கூறப்படும் உரை நூல்களும், ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லும் நவினங் களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும் சிறுகதைகளும் உரைநடை நூல்களாம் என்பது பெறப்படுகின்றது.

இதனோடு பல உரை விசேடங்களை ஆசிரி யர் தொல்காப்பியர் மரபியலில் பகுத்துக் கூறியுள்ளார். பண்டை நூலாசிரியர் உரை நடை எழுதுவதில் திறமை பெற்றவர் என் பதை விளக்க இறையனர் அகப்பொருள் உரைப்பாயிரம் ஒன்றே போதிய சான்றாக விளங்குகின்றது. ஆனால் அதன் நடை மிகக் கடுமையாக உள்ளது. அவற்றுள் சில வரிகளைக் காண்போம்:

"அக்காலத்துப் பாண்டியநாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி, 'வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக் கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னை யுள்ளி வம்மின்,' என்றான்."[7]

இடைக்காலம்
(கி. பி. 200–1500 வரை)

சமணர்கள் தமிழில் பல இலக்கண இலக் கிய நூல்களை இயற்றித் தமிழ்த் தொண் டாற்றினர்.[8] சமணர்களாலும் பௌத்தர் களாலும் தமிழ் மொழியில் வடமொழிக் கலப்பு அதிகமாக ஏற்பட்டது சமண சம யத்தவரால் இயற்றப்பட்ட ஸ்ரீபுராணம் என்ற வசன நூல் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள நடையில் இயற்றப் பட்டது. ஸ்ரீபுராணத்தில் 24 தீர்த்தங் காரரின் வாழ்க்கை வரலாறு விளக்கப்பட் டுள்ளது. இந்நூலில் வந்துள்ள மணிப்பிர வாள நடையினைக் காண்க:

"மற்றொருநாள், சிரேணிக மகாராஜன், ஸமவ சரணமடைந்து அசோக வனத்துள் அசோக விருக்ஷ மூலத்து ரூபயௌவந சுபலக்ஷணஸகித ராகித் தியாநா ரூடராகியிருந்த ஜீவந்தரமுனி களைக் கண்டு அத்தியந்தம் (க) விஸ்மிதனகி ஸ்ரீதர்மகணதரரை அடைந்து, "பகவானே! (உ) ஈதிருசலக்ஷணசகிதராகிய இந்தத் தபோத தனர் யார்?" என்று வினவ அவரும் அருளிச் செய்வார்."[9]

---

[5] The Tamil word for prose is Urai-Nadai (உரைநடை) which means 'the speech on foot" and it will be interesting to observe that the Latin Expression 'Oratio Pedestris' for prose means also 'Speech on foot' (i.e) the language that walks and does not profess to fly'. (History of the Tamil Prose Literature by V S. Chengalvaraya Pillai, p. 14).

[6] தொல்காப்பியம்-செய்யுளியல்-173. [7] இறையனர் அகப்பொருள் உரை

[8] "It was through the fostering care of the Jainas, that the South first seems to have been inspired with new ideals and its literature with new forms of expression."
(A Literary History of India by R. W. Frazer, p. 310.)

[9] சீவக சிந்தாமணி—Dr. சாமிநாத ஐயர்—3-ம் பதிப்பு, பக்கம்-45.

பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரப் பிரபந்தத்திற்கு 14-வது 15-வது நூற்றாண்டுகளில் விளங்கிய வைணவ ஆசிரியன்மார் மணிப்பிரவாள நடையில் விளக்கவுரை இயற்றினர். பேராசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலியோர் தாம் இயற்றிய உரைகளால் உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினர்.

இக்காலம் (16-ம் நூற்றாண்டு முதல்)

ஐரோப்பியரின் தொடர்பால் தமிழர் வசன நடையில் நூல் எழுதும் வழக்கத்தினைப் பெற்றனர் என மர்டாக் (Dr. Murdoch) என்பவர் எழுதியுள்ளார். கிறித்தவப் பாதிரிமார்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகப் பல உரைநடை நூல்கள் எழுதிப் போந்தனர். "கி. பி. 1577-ம் ஆண்டில் தான் தமிழில் முதன் முதல் வசன நூல் உண்டானதாகத் தெரிகின்றது. இந்நூலுக்குக் "கிறிஸ்தவ வேதோபதேசம்" (Flos sanctorum) என்பது பெயர்."[10] 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராபர்ட்-டி நொபிலி (Robert-De Nobili) என்னும் தத்துவபோதக சுவாமி ஞானோபதேச காண்டம், சேசுநாதர் சரித்திரம் முதலிய 18 வசன நூல்கள் இயற்றினர். 17-ம் நூற்றாண்டில் விளங்கியவரும் இலக்கண விளக்கம் என்ற நூலினை எழுதி அதற்கு உரையும் வகுத்த வருமாகிய வைத்தியநாத தேசிகர் உரைநடை பண்டைக்கால உரைநடையின் சாயலைப்போன்று விளங்குகின்றது என்பதைக் கீழ்க்காணும் வரிகள் விளக்குதல் காண்க:

"மனமொழி மெய்களின் வணங்குதுமகிழ்ந்தே" என்ப வாகலின் மனத்தாற் றுணிவு தோன்ற நினைத்தலும், மொழியாற் பணிவு தோன்ற வாழ்த்தலும், தலையாற்றணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்பட 'வணங்கி' யென்றும்," [11]

18-ம் நூற்றாண்டில் பெஸ்கி (Father Beschi) என்ற வீரமா முனிவர் "தேம்பாவணி" "திருக்காவலூர்க் கலம்பகம்" முதலிய செய்யுள் நூல்களும் "வேதியர் ஒழுக்கம்" "பரமார்த்த குரு கதை" "வேத விளக்கம்" முதலிய வசன நூல்களும், "தொன்னூல் விளக்கம்" என்ற ஐந்திலக்கண நூலும் இயற்றினர். சதுரகராதி என்ற அகராதி இவரால் இயற்றப்பட்டது. இதுவே தமிழில் இயற்றப்பட்ட முதல் அகராதியாகும். கீழ்க்காணும் வரிகளால் வீரமா முனிவரின் உரைநடையின் அழகினைக் காண்க.

"எப்பொருளினும் அதனுண்மை யுணர்தலே ஞானம். உணர்ந்த பொருளினிவையே நல்லவை யெனவும் இவையே யல்லவை யெனவுந் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே யல்லவை யொருவி நல்லவை மருவி யொழுகலே யொழுக்கம். இந்நல்லொழுக்கமே யனைத்தற னுகைய்விலை யெலா மன முயற்சியாலாக வேண்டுமி, மனமொவ்வா வறனெல்லாம் பொய்யென விகழப்படுவது முறையே யென்பது." [12]

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிவஞான முனிவர் காஞ்சிப்புராணம், சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய செய்யுள் நூல்களே யன்றிப் பலவகை உரைநடை நூல்களும் இயற்றியுள்ளனர். சித்தாந்த மரபு கண்டனம், சிவசம்வாதவுரை மறுப்பு முதலியன இவரது கண்டனத் திறமையினையும், தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலியன இவரது ஆராய்ச்சித் திறமையினையும் விளக்குவனவாம். இவர் இயற்றிய சிவஞான போதப் பேருரையாகிய திராவிட மாபாடியம் ஒன்றே இவரது சாத்திரப் புலமையை விளக்கப் போதிய சான்றாக விளங்குகின்றது. ஆறுமுக நாவலர் (1823–1879) அவர்களை இக்கால வசன நடையின் தந்தை என்றே கூறுவதுண்டு. இவர் பெரிய புராண வசனம், திருவிளை

---

[10] கிறிஸ்தவமும் தமிழும்—மயிலை. சீனி. வேங்கடசாமி, பக்கம்-24.

[11] இலக்கண விளக்கம்—எழுத்து, பக்கம்-10.

[12] தொன்னூல் விளக்கம்—பொருளதிகாரம்-அறம்.

யாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பால பாடம், சைவ விளக்கம் என்ற உரை நடை நூல்கள் இயற்றியுள்ளனர். திருவருட்பா பாடியருளிய இராமலிங்க அடிகள் (1823–1874) ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலிய உரை நடை நூல்கள் நமக்கு அளித்துள்ளார். தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் (1882–1921) தமது கதைகளாலும் கட்டுரைகளாலும் தமிழ் உரை நடைக்கு ஆக்கம் அளித்தார். தனித்தமிழ் நடையினைத் தமிழ் நாட்டிற்கு அளித்த பெருமை மறைமலை யடிகளாரைச் சாரும். அவர் தூய தனித்தமிழ் நடையில், அறிவுரைக் கொத்து, முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, மாணிக்க வாசகர் கால ஆராய்ச்சி முதலிய நூல்களை இயற்றிப் பொன்றுப் புகழ் பெற்றனர். திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் வசனநடை உணர்ச்சி ததும்பும் நடையாகும். சிறு சிறு வாக்கியங்களில் பல நுண்பொருள்களை விளக்கும் தனிப்புலமை திரு. வி. க. அவர்களிடமே விளங்கியது. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் அவர்களின் இனிய எளிய நடையினை, அவர் எழுதிய "நான் கண்டதும் கேட்டதும்" "நல்லுரைக் கோவை" "நினைவு மஞ்சரி" முதலிய நூல்களிற் காண்க. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் "உரைநடைக்கோவை" என்ற நூலில் அவரது வசன நடையின் திட்ப நுட்பத்தினைக் காணலாம். கா. சுப்ரமணியப் பிள்ளை அவர்கள் "இலக்கிய வரலாறு," "சைவசமயாசாரியர் சரித்திரம்" முதலிய உரை நடை நூல்கள் இயற்றியுள்ளார். நாவலர் வேங்கடசாமிநாட்டார் அவர்களின் நடையினை அவர் இயற்றிய கட்டுரைத் திரட்டில் காண்க. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் "தமிழர் பண்பாடு", "இலக்கியச் சிந்தனை" முதலிய உரைநடை நூல்கள் இயற்றிப் போந்தார். சொல்லின் செல்வர் R. P.

"தி மதுரை என்வலப் பாக்டரி"
"ரிவர்" வரிசை என்வலப் தயாரிப்பாளர்கள்,
81, தெற்காவணி மூல வீதி, மதுரை.



★

எமது ஒப்பற்ற தயாரிப்புகள் :—

ஹாக்லி, இண்டஸ், வைகை, காவேரி, கோதாவரி, தாம்பரபரணி, கங்கா, ஜீலம், ஜீனப், நர்மதா. ஐம்ஞ பிராண்டுகள்.

★

உரிமையாளர் :— A. M. ஆறுமுகம், பேப்பர், அட்டை வியாபாரம்
15, மீனாட்சி கோவில் தெரு, மதுரை (தென்னிந்தியா)
கிளைகள் :— சிவகாசி, சென்னை, கோயமுத்தூர் & திருநெல்வேலி

சேதுப்பிள்ளை, நாவலர் S. சோமசுந்தர பாரதியார், டாக்டர் மு. வரதராசனர், டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, கி. வா. ஜகந்நாதன், M. இராகவையங்கார், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகிய இவர்கள் எழுதிய நூல்கள் உரைநடையின் மறுமலர்ச்சியினை விளக்கப் போதிய சான்றாக விளங்குகின்றன.

ஐரோப்பியரின் தொடர்பால் தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியினைக் காண்கின்றோம். அறிஞர் பலர் மேலைட்டு மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் உள்ள சிறுகதைகளையும் நாவினங்களையும் நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்த் தாய்க்குப் புதிய அணிகலன் சூட்டினர். முன்பு தமிழ் மக்கள் பஞ்சதந்திரம், விநோத ரச மஞ்சரி, விக்ரமாதித்தியன் கதை முதலிய கதைகளைப் படித்து இன்புற்றனர். ஆனால் இப்போது நாம் மிகச் சிறந்த சிறுகதைகளையும் நாவினங்களையும் பெற்றுள்ளோம். கல்கி (R. கிருஷ்ணமூர்த்தி) அவர்களைச் சிறுகதையின் தந்தை எனக் கூறுவோமாகில் அது பொருந்துரையாகாது. சிறந்த சிறு கதைகளை எழுதிய புதுமைப்பித்தன் (S. விருத்தாசலம்) கு. பா. இராஜகோபாலன் இவர்களை நாம் மறக்க முடியாது. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிதம்பரம் என்ற சிறுகதை, C. இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி), அவர்கள் எழுதிய ''கூனி சுந்தரி'', கு. பா. இராசகோபாலன் இயற்றிய ''தமிழ்மங்கை'', ஜீவா (நாரண. துரைக்கண்ணன்) எழுதிய வேதாந்த கேசரி என்பவை நமது உணர்ச்சியை எழுப்பக்கூடிய சிறு கதைகளாக அமைந்துள்ளன. டாக்டர். மு. வரதராசனர், கி. வா. ஜகந்நாதன் ஆகிய இவர்கள் எழுதிய சிறுகதைகளில் தமிழ் இலக்கிய நறுமணம் இலங்கக் காணலாம். C. இராஜகோபாலாச்சாரியார், A. S. P. ஐயர், யோகி சுத்தானந்த பாரதியார், C. N. அண்ணாத்துரை ஆகிய இவர்கள் தாம் எழுதும் சிறுகதைகளின் வாயிலாகத் தமது கருத்துக்களைப் பரப்பி வருகின்றார்கள்,

தமிழ் நாட்டில் பல நவீனங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முதன் முதலாகத் தோன்றி வெளிவந்த நவீனம் மாயூரம் வேத நாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமாகும். இரண்டாவது B. A. இராஜம் ஐயர் அவர்கள் எழுதிய கமலாம்பாள் சரித்திரம். ஆரணி குப்புசாமி முதலியார், பொன்னுசாமிபிள்ளை, வடுவூர் துரைசாமிஐயங்கார், வை.மு. கோதைநாயகி அம்மாள், நாடோடி, வா. ரா. எஸ். வி. வி., மு. கருணாநிதி ஆகிய பல அறிஞர் சிறந்த நவீனங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள் பல நவீனங்கள் ஆங்கிலத்திலும் பிற மேலைட்டு மொழிகளிலும் எழுதியுள்ள நவீனங்களைப் பின்பற்றி எழுதப்பட்டன என்பதை அவைகளைக் கூர்ந்து படிப்போர் அறிந்து கொள்வர்.

சிலப்பதிகாரம் ஒன்றே நமக்குக் கிடைத்துள்ள பண்டை நாடக நூலாகும். 17-ம் நூற்றாண்டில் சில கூத்து நூல்கள் வெளிவந்தன. சீர்காழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகமும், குமரகுருபரர் செய்த மீனாக்ஷியம்மை குறமும், திரிகூட ராசப்ப கவிராயர் செய்த குற்றாலக் குறவஞ்சியும் கூத்து நூல் வகையைச் சேர்ந்தவை. 19-ம் நூற்றாண்டில் கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் சரபேந்திர பூபாலக் குறவஞ்சியை இயற்றினர். பின்னர் 1878-ல் சித்திராங்கி விலாசம், பவளக்கொடி, நல்ல தங்கை, அரிச்சந்திரன், மதுரைவீரன், சகுந்தலை விலாசம முதலிய நாடகங்கள் தோன்றின. ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்ற நாடகத்தினை 1876-ல் வேணுகோபாலாச்சாரியார் மொழி பெயர்த்தார். 1897-ல் சலசலோசன செட்டியார் ஷேக்ஸ்பியரின் சிம்பலின் நாடகத்தினை மொழி பெயர்த்து அதற்குச் ''சரசாங்கி' என்றதலைப்பினை அளித்தனர். பிரஞ்சு நாடகப் பேராசிரியர் மோலியேர் எழுதிய ''லோபி'' என்ற நாடகத்தினை 1898-ல் ஐயாசாமி முதலியார் தமிழ்ப்படுத்தினர். வி. கோ. சூரியநாராயண

சாஸ்திரியார் "ரூபாவதி" "கலாவதி" "மானவிசயம்" என்ற நாடக நூல்களை இயற்றினர்; அதுவன்றி நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலினையும் செய்தார். P. சம்பந்த முதலியார் அவர்கள் தமிழ் நாடகத்திற்கே புத்துயிர் அளித்து 50–க்கு மேற்பட்ட நாடக நூல்களை எழுதினர். முன்பெல்லாம் மத விடயமாகத் தோன்றிய நாடகம் பிற்காலத்தில் சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற கருத்தோடு அமைக்கப்பட்டது. எனவே நாடகத் தமிழிலும் ஒரு மறுமலர்ச்சியினைக் காண்கின்றோம்.

விஞ்ஞான வளர்ச்சியால் பல புதிய கருவிகளும் உண்மைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வுண்மைகள் அனைத்தும் தமிழில் உரைநடையில் விளக்கமாக எழுதப்பட்டன. "சூரியன்" "வானக் கப்பல்" "வானக் குமிழி" முதலிய நூல்கள் E. T. இராஜேஸ்வரி அம்மையார் அவர்களால் இயற்றப்பட்டன. "சக்தி", "ஒளியும் ஒலியும்" முதலிய நூல்களை R. K. விசுவநாதன் என்பவர் எழுதினர். J. P. மாணிக்கம், பெ. நா. அப்புசாமி ஆகிய இருவரும் சேர்ந்து "அணுவின் கதை" என்ற நூலினை நமக்கு அளித்துள்ளனர். எனவே விஞ்ஞான வளர்ச்சியால் பெற்ற உண்மைகளை விளக்கும் வகையில் பல உரைநடை நூல்கள் தோன்றின என்பது பெறப்படுகின்றது. இதுவும் தமிழ் உரைநடையில் காணக் கிடக்கும் மறுமலர்ச்சியேயாகும்.

இதுகாறும் உரைநடையின் தோற்றம் வளர்ச்சி வரலாறு முதலியன கண்டோம். இனி, உரைநடையின் போக்கினையும் இலக்கணத்தையும் ஆராய்வோம். சங்க நூல்களில் காணக் கிடக்கும் உரைகளின் நடையும், இடைக்காலத்தில் தோன்றிய வசன நூல்களின் நடையும் இக்காலத்திலுள்ள

காவேரி ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்


மானேஜிங் ஏஜெண்டுகள்:
மெஸர்ஸ் யுனைடெட் இண்டஸ்ட்ரீஸ் (புதுக்கோட்டை) பிரைவேட் லிமிடெட்

மில்ஸ்:
வெள்ளனூர், காவேரிநகர் P. O.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
மூன்றாவது மாடி, இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ், மதுரை-1

போன்: 55006 — மதுரை
7 — புதுக்கோட்டை

தந்தி: "CAUVERIS" மதுரை—புதுக்கோட்டை



கதிர்கள்: ரிங் ... 24,800
டப்ளிங் ... 5,112

CAUVERY SPINNING & WEAVING MILLS LTD.

உத்தேசித்துள்ள விஸ்தரிப்பு 6,400 கதிர்கள்

நூற்கப்படும் பருத்தி நூலின் நம்பர் 32ம், 60ம்

விசேஷ தயாரிப்புகள்:
40s, 2/40s, 2/60s ஸ்டேப்பிள் பைபர் நூல்—2/60s அமெரிக்கன் பருத்திநூல்

உரைநடை நூல்களின் போக்கும் வேறு பட்டு விளங்குவதை நாம் பார்க்கின்றோம். "ஆகவே பேச்சு வழக்குள்ள பாஷைகள் அழியாது நீடித்த காலம் இயங்க வேண்டு மாயின், அவற்றிற்கு வேறுபாடு இன்றி யமையாதது[13]" என்பது பெறப்படுகின்றது. இவ்வாறு நடையின் வேறுபாட்டிற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் நாட்டில் ஏற் பட்ட அரசாங்க மாறுபாட்டாலும், தமிழர் பிற நாட்டு மக்களிடம் கொண்ட வாணிகம் காரணமாகவும், பிறநாட்டுச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்துவிட்டன. சமயத் துறையிலும் பல சமயநூற் சொற்கள் தமிழ் மொழியில் இடம் பெற்றன. தமிழ் மக் களின் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்றவண்ணம் தமிழ் மொழியும் முதிர்ச்சி அடைந்தது. விஞ் ஞான வளர்ச்சியால் பல அறிவியற் சொற் கள் தமிழில் இடம் பெற்றன. முஸ்லிம்கள் ஆட்சிக் காலத்தில் சபாசு சலாம் முதலிய இந்துஸ்தானி சொற்கள் தமிழ் இலக்கியத் திலும் புகுந்துவிட்டன. முருகன் வள்ளி அம்மையாருக்குச் சலாம் இட்டான் என்ற கருத்தில் குமரகுருபர சுவாமிகள் மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழில்,

"குறவர் மகட்குச் சலாம்இடற்கு ஏக்கறு
குமரனே முத்துக் குமாரனைப் போற்றுதும்"[14]

எனப் பாடியுள்ளார். சபாசு என்ற சொல்லை அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழில் கையாண்டுள்ளார்.

தமிழில் பேச்சு வழக்கில் பல பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. உதாரணமாக ஆசாமி, கஜானா, வசூல் முதலிய அரேபியச் சொற்களும், கடதாசி, சிப்பாய், பக்கிரி முதலிய பாரசீகச் சொற்களும், உஷார், குல்லா, ஜல்தி, தொப்பி முதலிய இந்துஸ் தானி சொற்களும், அலமாரி, கிராம்பு, ஜன் னல் முதலிய ஆங்கிலச் சொற்களும் தமிழ் மொழியில் புகுந்துவிட்டன. பிற மொழியி லுள்ள பரியாயச் சொற்களை (Technical Terms) தமிழ் மொழியில் அவ்வாறே புகுத்தி விடுவதோ அன்றி, அவைகளை மொழி பெயர்த்துத் தமிழில் எழுத வேண்டுமோ என்பது குறித்துப் பலர் பலவாறு கூறுகின் றனர். இத்துறையில் ஆசிரியர் தொல்காப் பியனார் நமக்கு வழிகாட்டியுள்ளார்.

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே"[15]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். புதிய சொற்கள் அவ்வக் காலத்தில் தோன்றி நன் மக்கள் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின் அவை, தொன்று தொட்டு வந்தன அல்ல என்ற காரணம் கொண்டு அவைகளைத் தள்ளிவிடுதல் கூடாது என்பதே இச்சூத்திரத்தின் பொரு ளாகும். எனவே, துவிச்சக்கர வண்டி என்பதற்குப் பதில் சைகிள் என்றே கூற லாம். பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளும்போது அவைகளைத் தமிழ் மொழி யின் இனிமைக்கும் பண்புக்கும் ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, விஞ்ஞாபனம் என்ற வடமொழிச் சொல் விண்ணப்பம் எனத் தமி ழில் வழங்குகின்றது. Christ என்பது கிறித்து எனவும், David என்பது தாவீது எனவும், Bible என்பது விவிலிய நூல் என வும் தமிழில் வருவது காண்க. பாண்டிய நாட்டில் 300 ஆண்டுகளுக்கு முன் வள்ள லாக விளங்கிய ஷெய்கு அப்துல்காதர் மரைக்காயர் என்பவரின் பெயரைத் தமிழர் தமிழ்ப் பண்புக்கும் ஓசைக்கும் ஏற்பச் சீதக் காதி என்று மரூஉ மொழியாக்கினர்.

இக்காலத்தில் சிலர் நாம் பேசுவது போலவே எழுத வேண்டும் எனக் கூறு கின்றார்கள். இது எம்முறையில் பொருந் தும் என்பதை ஆராய வேண்டும். பேச்சு வழக்கில் பல கொச்சைப் பதங்களை (Slang)

---

[13] தமிழ் மொழியின் வரலாறு–வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பக்கம்–79.
[14] மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்—காப்புப் பருவம்–4.
[15] தொல்காப்பியம்—எச்சவியல்–56.

நாம் உபயோகிக்கின்றோம். மேலும் ஏட்டு வழக்கு மொழிக்கும், பேச்சு வழக்கு மொழிக்கும் உள்ள வேறுபாடு மிகவும் அதிகமானது. வசனமானது ஒரே நடையில் விளக்கமாக எழுதப்படல் வேண்டும் என்பர் மாத்யூ அர்னல்டு (Mathew Arnold) என்ற மேனாட்டு ஆசிரியர்.[16] "சொற்கள் திரியும் திரிபுகளை ஆராயும்போது சொற்களின் வடிவம் வர வரக் குறுகி வருவதைக் காண்கின்றோம் என்பர் ஜெஸ்பர்சன் (Jesperson).[17] இருக்கிறது என்ற சொல் இருக்குது, இருக்கு எனப் பல விதமாக வழங்கப்படுவதைக் காண்க. "மக்கள் பேச்சு வழக்கில் சொற்களைச் சுருக்கியே வழங்குகின்றனர். ஆனால் ஏட்டு வழக்கில் சொற்கள் சிதையா வண்ணம் காக்கப்படுகின்றன என்பர் சாயஸ் (Sayce) என்ற ஆசிரியர்.[18]" ஆய் விட்டது என்ற சொல் ஆச்சு எனப் பேச்சு வழக்கில் திரிந்துள்ளது. அவ்வாறே போயிற்று என்பதனை மக்கள் பேச்சு வழக்கில் போச்சு என வழங்குகிறார்கள். எனவே நாம் பேசுவது போன்று எழுதுவது முறையன்று எனப் பெறப்படுகின்றது. சிலர் கொச்சைத் தமிழில் எழுதுவதுதான் நல்ல தமிழ் என்று கூறுகின்றனர். எளிய நடையில் எழுத வேண்டும் எனக் கூறுவதில் எவர்க்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் இக்காலத்தில் பலர் புத்தகங்களிலும், வார வெளியீடு, பருவ வெளியீடு, திங்கள் வெளியீடு முதலியவைகளிலும் கொச்சைச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் கலந்த நடையில் எழுதி வருகின்றனர். உரை நடையில் கொச்சைச் சொல் கலத்தல் முறையன்று என்பதைத் திரு. வ. சு. செ. பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.[19] எனவே தமிழ் மக்கள் அனைவரும் கொச்சைச் சொற்களைத் தவிர்த்து, இனிய எளிய பயின்ற நடையில் எழுதித் தமிழ் உரைநடையினை வளர்ப்பாராக.

---

[16] The needful qualities for a fit prose are regularity, uniformity, precision, balance. (Matthew Arnold—Essays in Criticism, p. 39)

[17] "The general tendency of all languages is towards shorter and shorter forms." (Jesperson—Language, its Origin Theory and Devalopment, p. 330)

[18] "A literary dialect is naturally less subject to the inroads of decay than an unwritten one." (A. H. Sayce, Introduction to the Science of Language, p. 199)

[19] Prose diction should be distinct from colloqual diction, and it requires a moderate elevation." The History of Tamil Prose Literature—V. S. Chengalvaraya Pillai, p. 50)

இப் பொன் விழா மலரைத் தயாரித்தவர்கள் :

பி. எஸ். மணி & கம்பெனி

விளம்பர ஆலோசகர்கள்

2/4, மவுண்ட் ரோடு, மதுரை-2

போன் : 86333 : : தந்தி : பப்ளிஸிடி

தந்தி: "சுதேசி" கோயமுத்தூர் போன்: 149

விஜயலக்ஷ்மி மில்ஸ் லிமிடெட்


குனியமுத்தூர் P.O. - கோயமுத்தூர்

★

மானேஜிங் டைரக்டர்:

ஸ்ரீ V. L. B. நாயுடு





தயாரிக்கும் நூல் ரகங்கள்:

உயர்தர நெ. 10 லிருந்து 60 வரை ஒற்றை, இரட்டை முறுக்கு நூல்களும், கோன் நூல்களும், ஸ்டேபிள் பைபர் நூல்களும் தயாரிக்கிறோம்.

விபரத்திற்கு:

மானேஜிங் ஏஜெண்டுகளுக்கு எழுதவும்

COOLS !! *VENTILATES !!* *CIRCULATES !!!*

NATCO AIR CIRCULATOR

PROVIDES PLEASANT BREEZE AND A HEALTHY ATMOSPHERE. IN DAILY USE BY THE RAILWAYS, FACTORIES, OFFICES, HOTELS, ETC.

★

For free demonstration and details



CONTACT:

P. NATESAN (Industries) PRIVATE LTD.

(Phone : 85388)

●

Manufacturers of :

High Tension Air Break Switches, Line Materials, Circulators

★

Factory & Office :

191, Triplicane High Road, Madras-5

என்றென்றும் எவரெஸ்ட் சிகரம்போல் விளங்கி பொய்ப் போலிகளை முறியடிக்கும் ஷண்முகமாய் பரிமளித்து திகழ்ந்துவரும் மதராஸ் N.V.S. பட்டணம் பொடி ஒன்றே.

தினசரி நாலுகோடி மக்களுக்கு நல்ல முறையில் வினியோகிக்கப்பெற்று வருகின்றது.

★

மதுரை ஏஜன்ட்:

N. ராம் பிரதர்ஸ்

உரிமையாளர்:

N. R. மாரியப்பக் கோன்

நகரா மண்டபம், — மதுரை.



உரிமையாளர்

★

தங்கள் ஆதரவை என்றும் விரும்பும்


மதராஸ்

N. V. ஷண்முகம் & கம்பெனியார்

பட்டணம் பொடித் தொழிற்சாலை,

P. B. No. 555 — மதராஸ்-21

Split Personality?



No, it is just an artist's conception of a man who tried to decide what is better—the beautifully designed cabinet or the clear reception of Murphy Radio. Murphy Radio is owned with pride and with admiration for its continued dependable performance. It is truly a symbol of gracious living in the modern world.



Sole Distributors in S. India :—

MAHOMED EBRAHIM & CO., PRIVATE LTD.,

7/8, MOUNT ROAD, MADRAS-2 113-H, Brigade Road, BANGALORE-1

Authorised Murphy Dealers in Madura Dist.—The Mercantile Agency, MADURAI.

For your requirements of



WATERPROOF OCEAN KRAFT PAPER
WATERPROOF THREAD-LINED PAPER
ALUMINIUM FOILED KRAFT PAPER

Agatthoid
For Roofing

FELT HESSIAN LINED PAPER
BITUMENIZED HESSIAN
WAXED PAPER
ETC.

★

Contact the Pioneer Manufacturers:

East India Industries (Madras) (Private) Ltd.

498, MINT STREET :: MADRAS-3

ஜலதோஷம், தலைவலி, உடல் வலி, கைகால் குடைச்சல்,
தசைகளில் வலி முதலியவைகளுக்கு

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

ஒரு கை கண்ட சஞ்சீவி

மேலும் சோர்வுற்று களைத்திருக்கும்போது ஒரு துளி நெற்றியிலோ கழுத்துப் பிடியிலோ அழுத்தமாக தடவிக்கொள்வதினல், உங்கள் நரம்புகளுக்கு உடனே புத்துணர்ச்சி அளித்து நொடியில் சுறுசுறுப்படையச் செய்வது

— லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் —

இன்றே ஒரு டின் **லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்** வாங்குங்கள்

எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸூடிகல்ஸ் லிட்.

மதுரை - 1

Telephone : 3094

REGISTERED TRADE MARK

Telegrams : SUITCASE



Insist on

SHUNMUGAM BRAND

STEEL TRUNKS & SUIT CASES

for Quality, Durability & Workmanship

Famous throughout India

Suppliers to Government Railways and Municipalities.
Special Trunks, Suit Cases, Cash Boxes,
Tapal Boxes etc.
Made to order in modern designs.

Manufacturers :

Shunmugam Brand Steel Trunk Works

(*Proprietor* : C. Gnanasundara Nayagar)

341, ESPLANADE, MADRAS-1

Branch:
22, Porthamarai North, Kumbakonam

Office :
1/14, Baker Street

சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்கி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட்

சென்னை

*

உள்ளூர் பிராஞ்சுகள்:

மைலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & காந்திநகர்

*

தலைவர்:

ஸ்ரீ மேடை தளவாய் குமாரஸ்வாமி முதலியார்

*

அங்கிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	16,14,300
ரிஸர்வ்கள்	ரூ.	36,07,500

பிக்சட் டிபாஸிட் கட்டண விவரம்

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு கட்டண விகிதம் வருஷத்திற்கு 100-க்கு	காலம்	இதரர்களுக்கு கட்டண விகிதம் வருஷத்திற்கு 100-க்கு
	ரூ 10,000/- அதற்கு மேற்கொண்ட தொகை	
1¾%	ஒரு மாதம்	...
2%	இரண்டு மாதங்கள்	...
2½%	மூன்று மாதங்களுக்குமேல் ஆறுமாதங்களுக்குட்பட்ட காலத்திற்கு	2½%
	ரூ. 100/- அதற்குமேல்	
...	ஆறுமாதங்களுக்குமேல் 12 மாதங்களுக்குள்	2¾%
3%	ஆறுமாதங்களுக்குமேல் 24 மாதங்களுக்குள்	...
...	12 மாதங்களுக்குமேல் 24 மாதங்களுக்குள்	3%
3¼%	24 மாதங்களுக்குமேல் 36 மாதங்களுக்குள்	3¼%
...	36 மாதங்களுக்கு	3½%

ராஜ்யத்திலுள்ள விவசாயிகளுக்கு கடன் வசதி செய்ய இந்த பாங்கிதான் முக்கிய ஸ்தாபனமாகும்

சென்னை கார்ப்பொரேஷன், சென்னை சர்வ கலாசாலை, அண்ணமலை சர்வ கலாசாலை, மற்றும் பல்வேறு நகராட்சி மன்றங்களுக்கும் பாங்கர்களாக இந்த பாங்கி இருந்து வருகிறது

C. R. K. செட்டி,
காரியதரிசி

V. M. Periyaswamy Chetty & Co.

METAL HARDWARE MERCHANTS

★

TATA & I. C. C. DEALERS

★

BUYERS OF ALL KINDS OF
NON-FERROUS METAL SCRAPS
SUCH AS
OLD COPPER, OLD BRASS,
BELL METAL, GUN METAL,
ETC., ETC.

★

399, MINT STREET, SOWCARPET, MADRAS

GRAMS: "COPMETAL" PHONE: 41141 2

★

Head Office:

TIRUPUR

Dealings in

COTTON, METAL & HARDWARE

★

Sister Concerns:

ERODE:
Dealings in BANKING

SALEM:
Dealings in METAL & HARDWARE

DHARAPURAM:
Dealings in COTTON


உற்சாகம், குளுமை, ஆரோக்கியம் மற்றும் அழகுடன் விளங்குவதற்கு

சிறந்த சாதனம் !

ரிஜிஸ்டர் நீர். 3010.

மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள்

சர்வரோக சஞ்சீவித் தைலம்.



இந்தத் தைலத்தை வாரமிருமுறை ஸ்நானம் செய்து வந்தால், மூளையைக் குளிர்ப்பித்து, கண் குளிர்ச்சியைக் கொடுத்து, சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியத்தையும், அழகையும் கொடுப்பதுடன் சர்ம வியாதிகள் வரவிடாமல் பாதுகாக்கும்.

மேலும் சர்மவியாதிகளான மண்டை வரட்சி, மேகநீர்பத்து, படர்தாமரை, சொரி, சிரங்கு, வங்கு, தழுவண, செவ்வட்டைக்கடி, குஷ்டம், வெடி சூலை, மூலச்சூடு, மேல்கால் காந்தல், கைகால் ஊரல், தேமல், கிரந்தி, செங்குஷ்டம், பித்தமயக்கம் கொடியபத்து மற்றும் கண்ணேய்களான கண்ணெரிவு, கண்ணீர் வடிதல், மேகநீர்க்கம்மல் முதலிய வியாதிகளை குணப்படுத்துகிறது.

யாவரும் இந்தத் தைலத்தை சாதாரண எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக ஸ்நானம் செய்வது மேலானது.

தலிவலி, ஜலதோஷம், இருமல் இதுபோன்றவைகளுக்குச் சிறந்த நிவாரணி

மணிகட்டி சுவாமிகள்

"அமிர்த ரசம்"

தயாரிப்பவர்கள் :—

ச. பெ. வடிவேல் நாடார் அன் சன்ஸ்

மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள் சித்த வைத்தியசாலை

டவுன் ஹால் ரோடு, மதுரை

தந்தி விலாசம் : THAILAM த. பெ. எண் 106 போன் : 745

Printed by R. Surianarayanan, at Gnanodaya Press, 11, Anderson Street, Madras-1

R.S.PATHY & CO, MADURA.



TAMIL CHEMICAL WORKS.

ஆறுமுகம் முத்திரை உள்ள டாக்டர் ஆர். எஸ். பதி அவர்களின்
சிறந்த மருந்துகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டவை

ஆர். எஸ். பதி மருந்து

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி முதலிய அநேக வியாதிகளுக்கு கைகண்டது.


மேரி ராம் பற்பொடி

பல்வலி, பல் அரணை, வாய் நாற்றம், இரத்தம் வடிதல் முதலியவைகளை
குணப்படுத்துவதற்கு வைத்திய முறைப்படி தயாரிக்கப்படுகிறது.

எமது இதர தயாரிப்புகளுக்கு விரிவான கேட்லாக் வேண்டுவோர்
எழுதினால் இலவசமாக அனுப்பப்படும்.

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

தபாற் பெட்டி நெ. 99 (ஸ்தாபிதம்: 1909) மதுரை



கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான
சகலவிதமான பருத்தி நூல்கள் உற்பத்தி ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

போன் :
250 (5 லைன்)

மதுரை

தந்தி :
" ஹார்வி "

மில்கள் :

மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

5,00,000
கதிர்கள்

நெ. 80 வரை
நூல்கள்

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள் - தையல் நூல் - முறுக்கேற்றிய திரித்த சாடுகள் முதலியன.



மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்
மதுரை

போன் : 420 (4 லைன்) தந்தி : " ஹார்வி "

Graphic 56 MM 64

Gnanodaya Press, 11, Anderson Street, Madras-1